உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

—o—

விஸ்வப்பிர்மபுராணம்.

பூர்வகாண்டம். மூலமும் உரையும்.

No. 8.] எட்டாவது சஞ்சிகை. [எண் அ.

இவை

திருவையாறு

அ. முத்துச்சாமி பாரதியவர்களால்

இயற்றப்பட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS' MADRAS.
2 OCT. 93

சென்னை

எழுமூர் 1, ரிதர்டன் ரோட்டிலிருக்கும்

காஸ்மாபொலிட் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டுவருகின்றன.

௧௮௯௩

உ

கணபதிது

விஸ்வப்பிர்ம புராணம்.

பூர்வகாண்டம்.

மூலமும்-உரையும்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ன்னடியு ளெண்ணுவரெண் ணியமுற்றிப் பொருவி லின்பும்,
மேன்மையுமெண் ணாதவர்கீழ் மையுமடைத றெரிப்ப நாளுந்,
முடியின்மதி யமுமடியின் மூடிகமுந் துலங்க வைத்த,
கருணைமதப் பிரணவகுஞ் சரமலர்த்தாள் வணக்கஞ்செய்வாம்,

இதன் பொழிப்புரை.

உகு பொருந்திய தனது திருவடியை மனதின்கண்ணே தியானிப்பவர்கள்,
, காரியங்களெல்லா நிறைவேறப்பெற்று, ஒப்பில்லாத வின்பமும், தேவர்க
விரும்பத்தக்க மேன்மையும், அங்ஙனம் தியானியாதவர்கள் நினைத்த காரியங்க
ன்றும் நிறைவேறாமல் துன்பமும், கீழ்மையும் அடைவார்களென்பதைத் தெரி
ம்பொருட்டு எக்காலத்தும் பரிசுத்தமாகிய தனது திருமுடியின்மேல் பாலசந்தி
ம், திருவடியின்கீழ் பெருச்சாளியையும் விளங்க வைத்தருளியவரும், பெருமை
ய கருணையாகிய மதஜலத்தைப் பொழிகின்ற யானைமுகத்தையுடைய பிரணவ
நபரும் ஆகிய விநாயகக்கடவுளது தாமரை மலர்போன்ற திருவடிகளை யாம்
கரிப்பாம். எ—று.

யாம் தோன்றா எழுவாய், வணக்கஞ்செய்வாம்; பயனிலை, தாள் செயப்படுபொ

பூ வென்னு மங்கலமொழி முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது. என்னை வழி
தெய்வ வணக்கஞ்செய்து மங்கல மொழிமுதல் வழுவாதுரைக்கில் எடுத்துக்
ண்ட விலக்கண விலக்கியம் இடுக்கணின்றி யினிது முடியுமே என்றாராகலின்
வு என்னு முதற்சீர் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வரு
, நாள், கதி, கணம் என்கின்ற பத்துப் பொருத்தங்களையுமுடையது.

சந்திரனானவன், ஓர் காலத்துத் தானடைந்த சாப விமோசன நிமித்தம் விநா
கடவுளைத் தியானிக்க அவர் அவனது சாபத்தை நிவர்த்திசெய்து பூரண வின்ப
த்து, தமது திருமுடியில் வைத்துக்கொண்டாரென்பதும்; பெருச்சாளி வடிவங்
ண்ட கயமுகாசுரன் அக்கடவுளைத் தியானிக்காமையினால் அவன் நினைத்த காரி
ள் நிறைவேறாமல் துன்பமடையும்படி செய்து தமது திருவடிக் கீழ்ப்படுத்திக் (க)
ண்டாரென்பதும் புராண கதை.

...பாயிரம்.

விஸ்வப்பிர்மம்.

அருமறைய... ப்பொருளா யுயிர்க்குயிராய் மனவாக்குக் கரிய தாகி,
நிருமலமாய்ப் பேரொளியாய்ச் சமயமெலாந் தொடர்வரிய நிலைமைத் தாகி
பெருககில புவனசரா சரங்களுதித் தொடுங்குபரப் பிரம மாகி...
திருவருளோ டென்றுமொளிர் சுகபரிபூ ரணப்பொரு...ச் சிந்தை செய்...

இ—ரை. அரிய வேதங்களின் இரகசியார்த்தமாகியும் சருவான்மாக்களுக்கு... ராகியும், மனதினால் நினைத்தற்கும், வாக்கினாற் சொல்லுதற்கும், அதீதம... வம், மாயை, காமியம், என்னு மும்மலரகிதமாகியும், அகண்டித தே... யும், பல சமயத்தர்களாலும் சென்றடைதற்கரிய நிலைமையை யுடையதாகி... கிய எல்லா வுலகங்களிலு நிறைந்த சராசரங்கள் தோன்றி யொடுங்குதற்... பரப்பிர்ம சொரூபமாகியும், தமது திருவருட் சத்தியோடென்றும் பிரகாசிக்... ரின்ப நிறைவாயுள்ள ஸ்ரீ விஸ்வப் பிர்மத்தைத் தியானிப்பாம், எ—று.

வி:ஸ்வசத்தி.

பன்னுபுனற் றண்மையனல் வெம்மைதிலத் தெண்ணெய்நறும் பாலி...
துன்னுமலர் மணமுமெனப் பரம்பொருளைப் பிரியாதைந்தொழிற்கும்வித்...
மன்னுபல வகிலாண்ட கோடியெலாந் தழைத்தோங்க மறைகள் வாழ்த்த...
உன்னுபெருங் கருணைபுரிந் திலகுபரி பூரணியை யுளத்துள் வைப்பாம்,

இ—ரை.—யாவரும் புகழ்கின்ற நீரின்கட்குளிர்ச்சிபோலவும், அக்கினியிற் சூ... லவும், எள்ளின்கண் எண்ணெய்போலவும், மதுரமாகிய பாலின்கண் நெய்போ... நெருங்கிய மலரின்கண் மணம்போலவும், விஸ்வப்பிர்மத்தோடு அபின்னமாகியும், ... ட்டி, திதி, சங்காரம், *திரோதானம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களு... மூலகாரணியாகியும் நிலைபெற்ற பலவாகிய புவனங்களையுடைய அண்டகோடிக... லாஞ் செழித்தோங்கவும், வேதங்கள் தோத்திரஞ் செய்யவும் சங்கற்பிக்கின்ற ... மை தங்கிய கருணையைச்செய்து விளங்காநின்ற சர்வ பரிபூரணியாகிய விஸ்... தியை மனத்துள் வைப்பாம். எ—று.

* திரோதானம்—மறைப்பு.

விஸ்வேஸ்வரர்.

மதியோங்கு பிரமாதி யைவரவர் சத்தியொடு மகிழ்விற் றோன்றிப்,
பதியோங்கு தன்றிருமுன் படைப்பாதி யைந்தொழிலும் பணியி னாற்ற
விதியோங்கு தூயவருட் சத்தியொடைந் தானனமும் விளங்க நாளுந்,
துதியோங்கு கருணைபுரி விச்சுவநா யகன்சரணந் தொழுது வாழ்வாம்,

இ-ரை.—எப்பொருளு மிறையாகிய தமது சிரேஷ்டமுள்ள சந்நிதியில் தம்முடைய ஆக்கினையினலே யாவராலு மதிக்கப்பெற்ற உயர்வாகிய பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் பஞ்ச கர்த்தாக்களும் முறையே சரஸ்வதி, இலக்குமி, உமை, மகேசை, மனோன்மணி யென்னும் பஞ்ச சத்திகளுடனே ...தாடிமா யவதரித்து சிருட்டி, திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும்படியாக ஆக்ஞாபித்தருளிய பரிசுத்தமாகிய திருவருட்சத்தியோடு சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசான மென்னும் ஐந்து முகங்களும் பிரகாசிக்க எழுந்தருளியிருந்து எந்நாளும் புகழ் பொருந்த தமது திருவருளைச் செய்கின்ற விஸ்வேஸ்வரருடைய திருவடிகளை வணங்கி வாழக்கடவோம், எ—று. (ச)

விஸ்வேஸ்வரி.

...பூத்த *நிறமாய னிலமிடந்து மறிவருதாட் புனித மூர்த்தி,
மன்பூத்த திருமேனி மேவியுய வைந்தொழிலு மகிழ்வி னுற்றி,
மின்பூத்த வடியர்வினை யொழித்தொழியா வின்பநல மேவி வாழத்,
தென்பூத்த வருள்சுரக்கும் விச்சுவநா யகிமலர்த்தாள் சென்னி சேர்ப்பாம்.

இ-ரை.—இலக்குமி விளங்காநின்ற மார்பையுடைய விஷ்ணுவானவர் வராக ... தமெடுத்துப் பூமியைப் பிளந்து சென்றும், காண்பதற்கரிய திருவடியையுடைய சுத்தமாகிய விஸ்வேஸ்வரரது நிலைபெற்ற திருமேனியின் இடது பாகத்தில் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் வருதற்பொருட்டுச் சந்தோஷமாய்ப் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து பத்தி நெறி விளங்குகின்ற அடியார்களுடைய இருவினையொழித்து நீங்காத பேரின்ப நலத்தைப்பெற்று வாழும்படியாகத் தனது திருவருளைப் பொழியாநின்ற விஸ்வேஸ்வரியினுடைய மலர்போலுந் திருவடிகளைச் சிரசின் மேல் அணிந்துகொள்வாம். எ—று. (ரு)

* நிறம்—மார்பு.

சபாநாயகர்.

சீர்கொண்ட மறைபரவ முகுந்தனயன் முனிவரொடு தேவர் போற்றத்,
தார்கொண்ட குழலுமைகண் களிப்பவிரு முனிவர்சுக சலதி மூழ்க,
ஏர்கொண்ட சிருட்டிமுத லைந்தொழிலுந் துடிமுதலைந் திடத்து மோங்கக்,
கார்கொண்ட பொழிற்றில்லை மன்றினடம் புரிவாழ்வைக் கருத்துள்வைப்பாம்.

இ-ரை.—சிறப்புப்பொருந்திய வேதங்கள் துதிக்கவும், விஷ்ணுவும், பிர்மாவும், முனிவர்களும், தேவர்களும் தோத்திரஞ்செய்யவும், மலர்மாலையை யணிந்த கூந்தலையுடைய உமாதேவியார் கண்கள் களிப்படையவும், பதஞ்சலி வியாக்கிரபாதரென்கின்ற இரண்டு மகாரிஷிகளும் ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கவும், தமருகமுதலாகிய ஐந் திடங்

களிலும் சிருட்டிமுதலாகிய பஞ்ச கிருத்தியங்கள் வி ங்கவும், மேகங்கள் தங்கிய சோலைசூழ்ந்த சிதம்பரமென்கிற மகாஸ்தலத்திற் கன சபையின்கண்ணே நடனஞ் செய்தருளிய பேரின்ப வாழ்வாகிய சபாநாயகரைத்தியா ிக்கின்றோம், எ—று.

தமருக முதலாகிய ஐந்திடங்களிலும் சிரு டிமு லந்தொழிலும் விளங்குதலாவது—தமருகத்திற் சிருட்டியும், அபய அஸ்தத் திதியும், அக்கினியிற் சங்காரமும், ஊன்றிய பாதத்தில் திரோதானமும், தூக்கியபாதத்தில் அ நுக்கிரகமுந் தோன்றும்.—

உண்மைவிளக்கம் (வெண்பா—தோற்றந்துடியத ் ி பமைப்பிற், சாற் றியிடு மங்கியிலே சங்காரம், ஊற்றமா-யூன்று மலர்ப்ப த் திரோதமுத்தி நான் றமலர்ப்பதத்தே நாடு.) (௬)

சிவகாமியம்மை.

மணியேறு மறுமார்பன் முன்னாய வெண்ணில்பசு வருக்க பெ
பிணியேறு பாசமிரிந் துயர்பதியைத் தெரிந்தின்பம் பெறுவான் ப ர்
பணியேறு பொற்பொதுவி லானந்தத் திருநடனம் பரிந்து காணும்,
அணியேறு பெருங்கருணைச் சிவகாமசுந்தரிதா ளகத்துள் வைப்பாம்.

இ—ரை.— கௌஸ்துவமணியோடு ஸ்ரீவத்ஸமென்னும் மறுவும் பொருந்திய மார் பயுடைய திருமால்முதலிய அளவிறந்த ஆன்மவர்க்கங்களெல்லாம் பிறவித்துன்பத் மேன்மேலும் விளைவிக்கின்ற பாசமொழிந்து மேலான விஸ்வேஸ்வரராகிய பதியை யுணர்ந்து பேரின்ப மடையும்பொருட்டு யாவராலும் வணங்கப்பெற்ற கன சபையின்கண்ணே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ சபாநாயகரது ஆனந்தத்திருநடனத்தை அன்போடு தரிசிக்கின்ற அழகுபொருந்திய பேரருளையுடைய சிவகாமசுந்தரியம்மை திருவடிகளை தியானிக்கின்றோம், எ—று.

அன்போடு தரிசித்தலாவது பாசத்தான்மயக்குண்டு பதியையறியாது பிறவித்துன்பத்துழல்கின்ற ஆன்மகோடிகட்கு இவனே பதியெனக் கண்ணாற்குறித்துக் காட்டுதல் எ—று. (எ)

தக்ஷிணாமூர்த்தி.

ஆரணமுன் னூல்களுணர்ந் தரியதவம் புரிந்தருள்பெற் றாக மத்தின்,
காரணங்க ளொருமூன்றுங் கேட்டுமுணர் வொழிவில்சன காதி நால்வர்,
பூரணமெய்ஞ் ஞானமுணர்ந் தழிவில்பர மானந்தப் புணரி மூழ்க,
ஏரணவு கல்லாலி னிழலமர்ந்த மாமணியை யிறைஞ்சி வாழ்வாம்.

இ—ரை.—வேதமுதலாகிய நூல்களெல்லாங் கற்றுணர்ந்தும், செய்தற்கரிய த களைச்செய்தும், திருவருளால் ஆகமங்களிற் கூறிய பதி, பசு, பாசமென்னும் மூ காரணப் பொருள்களின் உண்மையைப் பரமாசிரியரிடத்தில் வரன்முறையாகக்கே ஜீவபோத நீங்காத சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்கின்ற நான்கு மு

வர்களும் உண்மையாகிய பரிபூரண ஞானமுணர்ந்து அழிவில்லாத பேரின்பசாகரத்தில் மூழ்கும்படி அழகுபொருந்திய கல்லால விருக்ஷ நிழலில் எழுந்தருளியிருந்த மாணிக்கமணிபோன்ற தக்ஷிணாமூர்த்தியை நமஸ்கரித்து வாழ்குவாம், எ—று. (அ)

பஞ்சப்பிரமர்.

ஏராரும் பராவாதி யிச்சைஞா னங்கிரியை யெனும்பேர் பெற்று,
நேராருஞ் சத்திகளை நிரனிறைசேர்ந் துலகமெலா நிலைபெற் றோங்கப்,
பேராருஞ் சிருட்டிபுரி மனுவினொடு மயன்றுவட்டா பிறங்கு சிற்பி,
சீராரும் புகழ்விசுவக் கியனெனுமைம் பிரமர்களைச் சிந்தை செய்வாம்

இ—ரை.—அழகுபொருந்திய பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்கின்றபெயர்களைப் பெற்ற நேர்மைபொருந்திய பஞ்ச சத்திகளையும் முறையே சேர்ந்து எல்லா வுலகங்களும் நிலைபெற்று விருத்தியடையும்படி பெருமை தங்கிய அயசிருஷ்டி, தாருசிருஷ்டி, தாமிரசிருஷ்டி, சிலாசிருஷ்டி, சுவர்ணசிருஷ்டி யென்னும் பஞ்ச சிருஷ்டிகளைச் செய்து விளங்காநின்ற சிறப்புப் பொருந்திய கீர்த்தியையுடைய மனுப்பிர்மா, மயப்பிர்மா, துவஷ்டப்பிர்மா, சிற்பிப்பிர்மா, விஸ்வக்ஞப்பிர்மா என்று சொல்லப்படுகின்ற ஐந்து பிர்மாக்களையுந்தியானிக்கின்றோம், எ—று. (௯)

ஆட்கொண்டேஸ்வரர்.

தென்னிலவு பொழியமுத மதிதவழு மாடமலி திருவையாற்றில்,
அண்ணியபல் லுயிர்கடமைப் பிறைமெயிற்றுக் கருமறலி யணுகாவண்ணம்,
பண்ணியலுந் தளித்தென்வாய்த் தென்முகமாய் வீற்றிருந்து பரசுமன்பர்,
எண்ணியவா றருள்புரியெம் மாட்கொண்டமூர்த்திகழ லேத்தி வாழ்வாம்,

இ—ரை.—தெளிவாகிய சந்திரிகையை வீசுகின்ற அமிர்த கிரணத்தையுடைய சந்திரன் றவழ்கின்ற உப்பரிகைகள் மிகுந்த திருவையாறென்னுந் தலத்தின்கண்ணே பொருந்திய பல ஆன்மாக்களைப் பிறைபோன்ற வக்கிரதந்தங்களையும், கரிய வடிவத்தையுமுடைய இயமன் நெருங்காமலிருக்கும்படி * நால்வர்களுடைய பாடல் பெற்ற அச்சிவாலயத்தின் தெற்குவாய்தலில் தெற்கு முகமா யெழுந்தருளியிருந்து தன்னைத் துதிக்கின்ற அன்பர்கள் நினைத்தபடியே சித்திக்கச் செய்தருளுகின்ற எம்முடைய ஆட்கொண்டேஸ்வரமூர்த்தி திருவடிகளைத் துதித்து வாழ்வோம் எ—று. (௰)

* நால்வர்கள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்.

வயிரவர்.

அங்கணுல கோரகந்தை யொழிந்தமலன் றனைப்பரவி யருள்பெற் றுய்வான்,
சங்கரனை மறையுணர்ந்து மதியாத விதியினொரு தலையைக் கொய்து,
செங்கணெடு மால்குருதி யேற்றருள்செய் திகழ்ந்தாரைச் சிதைத்து நாளும்,
புங்கவருக் கினியவரந் தருவடுகக் கடவுளடி புகழ்ந்து வாழ்வாம்,

இ-ரை.—அழகிய இடத்தையுடைய பூமியிலுள்ளோர் அகங்கார மொழிந்து நிருமல சொரூபராகிய விஸ்வேஸ்வரரைத் துதித்து அவரருள்பெற்று பிறவித் துன்பநீங்கி நற்கதி பெறும்பொருட்டு வேதங்களெல்லா மறிந்தும் விஸ்வேஸ்வரரை மதியாத பிரமாவின் ஒரு சிரசை யரிந்து சிவந்த கண்களையுடைய விஷ்ணுவின் இரத்தத்தை அப்பிரம கபாலத்திலேற்றருளி இகழ்ந்தவர்களைப் பெலப்படுத்தி அடியார்களுக்கு எந்நாளு மனோபீஷ்டமான வரங்களைக் கொடுத்தருள்கின்ற வயிரவக் கடவுளுடைய திருவடிகளைத் துதித்து வாழ்வோம் எ—று. (யக)

விநாயகர்.

பூமலிமண் ணிருட்கிரவி பணிக்குவணன் வரைக்கசனி புயற்கு வங்கூழ்,
காமலிவெங் கவைக்கனலங் கரிக்கரிநோய்க் கருமருந்து கணை கடற்குத்,
தேமலிமுத் தமிழ்முனியு மெனவடியார் விக்கினங்க டீர்த்துக் காக்கு,
மாமலிவு நாயகன்றா ளெம்மையனு தினம்புரக்க வழுத்தல் செய்வாம்,

இ-ரை.— அழகுபொருந்திய உலகத்தை மறைக்கின்ற இருளுக்குச் சூரியனும், சர்ப்பத்திற்குக் கருடனும், மலைக்கு வச்சிராயுதமும், மேகத்திற்குக் காற்றும், மரச்செறிவையுடைய வெவ்விய காட்டிற்கு அக்கினியும், யானைக்குச் சிங்கமும், வியாதிக்கு நல்ல ஔஷதமும், சப்திக்கின்ற சமுத்திரத்திற்கு மதுர மிகுந்த இயலிசை நாடகமென்னு முத்தமிழாசிரியராகிய அகஸ்திய முனிவரும்போல அடியார்கட்கு நேரிடும் விக்கினங்களை நிவர்த்திசெய்து இரட்சித்தருள்கின்ற பெருமை மிகுந்த விநாயகக் கடவுளுடைய திருவடிகளை எக்காலமும் எம்மைக் காக்கும்பொருட்டு நமஸ்கரிக்கின்றோம்.— எ-று. (யஉ)

முருகக்கடவுள்.

துன்றிப்ளிக் குலமுரலத் தேன்பிலுற்று மலர்நீபத் தொடையல் சூடிப்,
பொன்றிகழுங் கடுக்கைமுடிப் பெருமானுக் குயர்குடிலைப் பொருளை யோதி,
ஒன்றியவன் பினர்க்கிரங்கி வேண்டிய வெலாந்ததியி [illegible]விக் காக்கும்,
வென்றிநெடுஞ் சுடரிலைவேற் குமாகுரு பாதிருதாள் விரும்பி வாழ்வாம்,

இ-ரை.—வண்டுக் கூட்டங்கள் நெருங்கிச் சத்திக்கும்படி தேனைப் பொழிகின்ற கடப்ப மலராற் றொடுத்த மாலையைத் தரித்தவரும், பொன் மயமாய்ப் பிரகாசிக்கின்ற கொன்றை மாலையை யணிந்த ஜடாபாரத்தையுடைய சிவபெருமானுக்கு மேன்மையாகிய பிரணவப்பொருளை உபதேசித்தவரும், தன்னை யடைந்த அடியார்களுக் கிரங்கி, அவர்கள் வேண்டிய வரங்களை யெல்லாம் சமயத்திற் கொடுத்து இரக்ஷித்தருள்கின்றவருமாகிய ஜயம் பொருந்திய நெடிய பிரகாசத்தையுடைய தகட்டு வடிவமைந்த வேலாயுதத்தைத் தரித்த சுப்பிரமணியக் கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் தியானஞ்செய்து வாழ்வோம், எ—று. (யங)

வீரபத்திரர்.

பாசிவநிந் தனைபுரிவோ ரவர்களொடு சார்ந்துமகிழ் பதித ராவோர்,
விரவுகடற் புவியிகழ வு. பழிதல் சாதமென விளங்கத் தக்கன்,
சிரமுமவற் சார்ந்தவர்க சிரநாசி பல்லுடலஞ் செவிகண் கொங்கை,
கரமொடுகால்.களுமிழப்பச் சிதைத்தருள்பி ரான்சரணங் கருதி வாழ்வாம்.

இ-ரை.—மேன்மையாகிய விஸ்வேஸ்வரரை நிந்திப்பவர்களும் அவர்களோடு சேர்ந்து சந்தோஷிப்பவர்களுமாகிய பாதகர்கள் கடல்சூழ்ந்த உலகத்தாரால் இகழும்படி தங்கள் அவயவங்களை யிழப்பார்களென்பது சத்தியமென்று யாவரும் அறியும்படி அந்த விஸ்வேஸ்வரரை இகழ்ந்த தக்ஷப்பிரமாவின் சிரசும், அவனோடு சேர்ந்தவர்கள் சிரசும், மூக்கும், பல்லும், சரீரமும், காதும், கண்ணும், ஸ்தனமும், கையும், காலுமாகிய ஒவ்வொரு அவயவங்களையும் கெடுத்தருளிய தலைவராகிய வீரபத்திரக்கடவுளது திருவடிகளை நினைந்து வாழ்வாம், எ—று.

தக்ஷப்பிரமாவைச் சார்ந்தவர்களில் எச்சன் சிரசும், சரஸ்வதிமூக்கும், பூடாவென்னுஞ் சூரியன் பல்லும், சந்திரனுடலும்; அந்தத் தக்ஷப்பிரமாவின் மனைவியாகிய வேதவல்லி செவியும், பகனென்னுஞ் சூரியன் கண்ணும், இந்திராணி ஸ்தனமும், அக்கினி கையும், வருணன் காலும், வீரபத்திரராலே யிழக்கப்பட்டார்கள். என்பது புராணகதை. (௰௪)

காளியம்மை.

ஆரணியம் பிகையமலை யாமளைமா லினிகவுரி யாளி யூர்தி,
பூரணிசங் கரிகுமரி பயிரவிமா லயன்முதலோர் போற்று மூல,
காரணிமுக் கண்ணிதிரி புரையரவ கங்கணிகங் காளி சூலி,
தாரணியி லன்பர்களுக் கின்பருண்மா தரிமலர்த்தா டலைமேற் கொள்வாம்,

இ-ரை.—ஆரணி, அம்பிகை, அமலை, யாமளை, மாலினி, கௌரி, சிங்கவாகினி, பூரணி, சங்கரி, குமரி, பைரவி என்னு நாமங்களையுடையவளும், விஷ்ணு பிரமா முதலானவர்களாலே துதிக்கப் பெற்ற மூலகாரணியாயுள்ளவளும், மூன்று நேத்திரங்களையுடையவளும், திரிபுரசங்காரியும், சர்ப்பகங்கணத்தையுடையவளும், முழுவெலும்பைப் பரித்தவளும், சூலாயுதத்தைத் தரித்தவளும், உலகத்திலுள்ள தன்னடியார்களுக்குச் சுகத்தைக் கொடுத்தருள்கின்றவளுமாகிய காளிகாம்பாளுடைய பாத தாமரையைச் சிரசின்மே லணிந்து கொள்வாம் எ—று. (௰௫)

சரஸ்வதி.

குலவுபுகழ் நிறையாயுள் செல்வமக வாற்றன்முதுக் குறைவு நீதி,
நலமலியன் பொழுக்கமுயர் கேண்மைகுணம் பெருமைதிட ஞான நோன்மை,
இலகருண்முத் தியுமுதவு மழியாத கலைமுதல்வி யின்ப மெல்லாம்,
நிலவடியர் நாவகதின் றருள்காயத் திரியணங்கை நினைதல் செய்வாம்,

இ—ரை.—எல்லா வின்பமும் பெற்று விளங்கத்தக்க அடியார்களது நாவினிடமாக நிலைபெற்றிருந்து யாவராலுங் கொண்டாடத்தக்க கீர்த்தியும், தீர்க்காயுளும், ஐஸ்வரியமும், புத்திர வுற்பத்தியும், பராக்கிரமமும், பேரறிவும், நீதியும், நன்மை மிகுந்த அன்பும், நல்லொழுக்கமும், மேன்மையாகிய நட்பும், ந[illegible]ணமும், பெருமையும், திடஞானமும், தவமும், விளங்காநின்ற திருவருளும், மோ[illegible]மும் ஆகிய இவைகளையெல்லாங் கொடுத்தருள்கின்ற சகலகலை முதல்வியாகிய ச[illegible]வதி தேவியைத் தியானிப்பாம் எ—று. (௰௬)

தமிழாசிரியர்.

புனற்கரசன் றனைக்காணத் தருப்பையிலேழ் வைகறவம் புரிந் தழுங்கி,
அனற்பகழி தனைவிடுத்த தாசரதி யுளநாண வமரர் வேந்தன்,
கனற்கண்விருத் திரற்காண விரிகடனீர் முழுவதுமோர் கரத் தடக்கி,
உனற்கரிய புகழ்மலயத் திருந்தருள்வோன் சரணசரோ ருகத்தை யுள்வாம்,

இ—ரை.—சமுத்திரத்தைக் கடந்து செல்ல அணைகட்டுவதற்காக தருப்பைப் புல்லை விரித்து அதன்மேல் ஏழுநாள்வரையும் சமுத்திரராஜனாகிய வருணனை நோக்கித்தவஞ் செய்தும் அவன்வாராமையினாலே வருத்தமடைந்தும் அவன்மீதில் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணிய தசரத குமாரனாகிய இராமனுடைய மனம் வெட்கத்தையடையும்படி தேவேந்திரனுக்காக சமுத்திரத்தில் ஒளித்துக்கொண்டிருந்த நெருப்புப்போன்ற கண்களையுடைய விருத்திராசுரனை வெளிப்படுத்தும்பொருட்டு விசாலமான சமுத்திரத்தி னீர் முழுமையும் தம்முடைய ஓருள்ளங் கையில் அடக்கி நினைத்தற்கரிய கீர்த்தி பொருந்திய பொதியமலையி லெழுந்தருளியிருப்பவராகிய அகஸ்திய மகாமுனிவரது தாமரை மலர்போலுந் திருவடிகளைத் தியானிப்பாம் எ—று. (௰௭)

திருநந்திதேவர்.

வாங்குகடற் புவிபரவை யாற்றுயர்சி லாதமுனி மகவாத் தோன்றி,
ஓங்குமறை யாகமபு ராணமெலாம் பரம்பரன்பா லுணர்ந்து நாளுந்,
தேங்குபுகழ் மலிகயிலைக் காவல்பூண் டரிபிரமா தியர்கள் போற்றப்,
பாங்குடன்வாழ் வேத்திரக்கை நந்தியடி சந்ததமும் பாவி வாழ்வாம்,

இ—ரை.—கடல் சூழ்ந்த வுலகமெல்லாந் துதிக்கப்பெற்ற திருவையாறென்னுந் தலத்தின்கண்ணே எழுந்தருளியிருந்த மேன்மையாகிய சிலாதமுனிவருக்குப் புத்திரனாக அவதரித்து சிவபெருமானிடத்தில் உயர்வாகிய வேதாகமபுராணங்களையெல்லாங் கற்றுணர்ந்து எந்நாளும் நீங்காத கீர்த்தி மிகுந்த கயிலாசபருவதத்திற்குக் காவற்றொழில் பூண்டு விஷ்ணு பிர்மா முதலாகிய தேவர்களுந் தோத்திரஞ்செய்யும்படியாகப் பிரம்பைக் கையிலே தரித்து அழகுடனே வாழ்கின்ற நந்திதேவருடைய திருவடிகளைச் சதாகாலமுந் துதித்துவாழ்வோம் எ—று. (௰௮)

திருஞானசம்பந்தர்.

துதிபுகலி யுதித்துமைபாற் கடல்பருகிச் சுரநெய்தற் றுறையதாகப்,
பதிவழுதி வெப்பறவாண் பனைகாய்க்க வுயர்சைவப் பயிர்தழைக்க,
இதமடவார்க் கரசிமயில் களிக்கவென்பு பெண்ணாக வெண்டோள்வெற்பிற்,
பதிகமழை பொழிஞான சம்பந்தவருண்முகிலைப் பணிதல்செய்வாம்.

இ-ரை.—யாவருந் துதிக்கின்ற சீகாழியென்னுந் தலத்தில் அவதரித்து உமாதேவியாராகிய பாற்கடலிற் பாலைக்குடித் தெழுந்து, பாலை நிலம் நெய்தல் நிலமாகவும் பாண்டிய ராஜனது சரீரத்திலுண்டாகிய சுரவெப்பம் நிவர்த்தியாகவும், ஆண்பனைகள் பெண்பனைகளாகிக் காய்க்கவும், மேலான சைவசமயமாகிய பயிர் செழிப்படையவும், அன்புள்ள மங்கையர்க் கரசியாகிய மயில் சந்தோஷிக்கவும், எலும்பு பெண்ணாகவும், சிவபெருமானுடைய அஷ்ட புஜங்களாகிய பருவதங்களில் தமிழ் வேதமென்னும் தேவாரப்பதிகமாகிய மழையை வருஷித்த திருஞான சம்பந்த மூர்த்தியாகிய கிருபாமேகத்தை வணங்குவாம். எ-று. (௰௯)

திருநாவுக்கரசர்.

பகாரிய திருவாமூர் வந்தன்பி னுழவாரப் பணி புரிந்து,
புகாறுநீற் றறைகுளிர விடமமுதா கிடமதமா போற்றக் கற்றூண்,
நிகாறுவா ரியின்மிதப்பக் கதவமறை சையிற்றிறப்ப நிமலன் றுளில்,
துகளறுசொன் மாலைபுனை வாகீசப் பெருந்தகையைத் துதித்தல் செய்வாம்.

இ-ரை.—சொல்லுதற்கரிய புகழ்பெற்ற திருவாமூர் என்னுந் தலத்தில் அவதரித்து, சிவபெருமானிடத்தில் வைத்த பேரன்பினால், சிவாலயங்கடோறும் உழவாரப்பணி செய்து, சமண வரசனுலிட்ட நீற்றறை குற்றமற்ற தாமரைத் தடாகம்போல குளிர்ச்சியடையவும், அவ்வரசனு லூட்டிய விஷம் அமிர்தம்போலாகவும், அவ்வரசனு லேவப்பட்ட மதயானை தன்னை வணங்கிச்செல்லவும், அவ்வரசன் கட்டிவிட்ட கற்றூண் ஒப்பற்ற கடலிலே மிதக்கவும், வேதாரணியமென்னும் தலத்திலுள்ள சிவாலயத்தில் வேதங்களாற் சாத்தப்பட்டிருந்த கதவுதிறக்கவும், நிருமல சொரூபியாகிய சிவபெருமானுடைய திருவடிகளில் குற்றமற்ற சொற்களா லமைந்த தேவாரமாகிய தமிழ்ப்பாமாலையை அலங்கரித்துத் துதிக்கப்பெற்ற பெருந்தன்மையையுடைய திருநாவுக்கரசரைத் தோத்திரஞ் செய்வாம் எ-று. (௨௰)

சு ந் த ர ர்.

சிவமறையோர் குலக்கடலி னெழுந்துபர சமயவிருள் சிதைபட் டோடத்,
தவவடிய ரிதயசரோ ருகமலரச் செங்கல்செழுந் தனம தாகக்,
கவர்மகவை முதலைதர வாறுவழி விடவுயர்சங் கான்றா தாக,
அவனிபுகழ் கவிக்கதிர்கள் விரித்தருள்சுந் தரச்சுடரை யகத்துள் வைப்பாம்.

இ-ரை.—ஆதிசைவ மறையவர் குலமாகிய சமுத்திரத்தில் உதயமாகி, அன்னிய சமயக் கோட்பாடாகிய அஞ்ஞான விருள் அழிந்து நீங்கும்படியாகவும், தவத்தையுடைய சிவனடியார்கள் மனமாகிய தாமரை மலரும்படியாகவும், செங்கல் பசும்பொன்னாகவும், முதலையுண்ட பார்ப்பனக் குழந்தையைத் திரும்ப வுமிழவும், பிரவாகம் பொருந்திய காவேரி நதி விலகி நடுவில் வழி விடவும், மேலான சிவபெருமானைப் பரவை நாச்சியாரிடத்திற்குச் செல்லுந் தூதாகவும், உலகமெல்லாம் புகழத்தக்க தேவாரப் பாசுரங்களாகிய கிரணங்களை வீசி யருளிய சுந்தரமூர்த்தியாகிய ஞான சூரியனை மனதில் தியானிப்பாம். எ-று. (உக)

மாணிக்கவாசகர்.

நாதனுர் நரிகடமைப் பரியாக்கப் பரிகடமை நரிக ளாக்க,
ஓதநீர் வையையின்மண் சுமக்கவடி படவெழுத வூமை பேசத்,
தீதருச் சாக்கியர்க ளூமரா கவுமன்பிற் சிறந்து பாடும்,
வாதவூ ரடிகளடிக் கடியவர்க ளடிமுடியால் வணக்கஞ் செய்வாம்.

இ-ரை. — சிவபெருமான் அரிமர்த்தன பாண்டிய ராஜனுக்காக நரிகளைப் பரிகளாக்கவும், பின்பு அந்தப் பரிகளை நரிகளாக்கவும், நீர்ப் பெருக்கையுடைய வையை நதிக்கரையில் மண் சுமக்கவும், அவ்வரிமர்த்தன பாண்டிய ராஜன் கைப்பிரம்பினாலே அடிபடவும், திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையாரை எழுதவும், தமதன்பினுற் செய்வித்து, சிதம்பர மென்னுந் தலத்தில், ஊமைப் பெண் பேசவும், நீங்காத வஞ்சகர்களாகிய சமணர்கள், ஊமையாகவும், பத்தியினுற் சிறப்படைந்து சிவபெருமானைத் துதித்த வாதவூரடிகளென்னும் மாணிக்கவாசக சுவாமிகளுடைய திருவடிக் கடிமை பூண்டார்களின் பாதங்களைச் சிரசினுல் வணங்குவோம். எ-று. (உஉ)

சண்டேஸ்வரர்.

தந்தைகுரு மறையவனு மெச்சதத்த னிருபதமுந் தடிந்து தொண்டர்,
சிந்தையுவந் தியற்றுபா சிவபூசைப் பயனடையத் திங்கள் வேணி,
எந்தைகொளு மாடைமல ரமுதமா தியபிறவு மேற்று நாளும்,
நிந்தைதவிர் சிவபதம்வாழ் தலைவனிரு செஞ்சரண நெஞ்சுள் வைப்பாம்.

இ-ரை.—தமது சிவபூசைக் கிடையூறுசெய்த பிதாவும், ஆசாரியனும், பிராமணோத்தமனுமாகிய எச்சதத்த னென்பவருடைய இரண்டு கால்களையும் வெட்டி, சிவனடியார்கள் மன மகிழ்ந்து செய்கின்ற மேன்மையாகிய சிவபூசைப் பலனை யடையும்படியாக இளம்பிறை யணிந்த ஜடாபாரத்தையுடைய எமது பிதாவாகிய சிவபெருமான் ஏற்றுக்கொண்ட வஸ்திரம், புஷ்பம், நிவேதனம் முதலானவற்றைத் தாமும் ஏற்றுக்கொண்டு, எந்நாளும் குற்றமற்ற சிவபதத்தில் வாழ்கின்ற தலைவராகிய சண்டேஸ்வரருடைய இரண்டு சிவந்த திருவடிகளை, மனதில் தியானிப்போம். எ-று. (உ௩)

திருத்தொண்டர்கள்.

குருவருளா னிலிங்கத்தா னடியவரான் முத்தியுறு கோதி லாப்பன்,
னிருவர்திகழ் முப்பதின்மர் பத்தொன்ப தின்மர்தனி யிருவர் சீர்த்தி,
மருவுதிருக் கூட்டத்தா ரொன்பதின்ம ரெனுநாயன் மார்கள் செய்ய,
திருவடிகட் கன்புசெயு மன்பர்கடம் பதமலர்கள் சிரமேற் கொள்வாம்.

மூ—ரை.—குருவருளால் முத்திபெற்ற குற்றமற்ற அடியார்கள் பன்னிருவர், சிவலிங்கத்தால் முத்தி பெற்ற விளங்காநின்ற அடியார்கள் முப்பதின்மர், சிவனடியாரை வழிபட்டு முத்திபெற்ற அடியார்கள் பத்தொன்பதின்மர், தனியடியார் இருவர் ஆகிய அறுபத்து மூவர்; முப்பொழுதுந் திருமேனி தீண்டுவாரும், தில்லைவாழந்தணரும், பொய்யடிமை யில்லாத புலவரும், பத்தராய்ப் பணிவாரும், பரமனையே பாடுவாரும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாரும், திருவாரூர்ப் பிறந்தாரும், முழுநீறு பூசிய முனிவரும், அப்பாலுமடிச் சார்ந்தாருமாகிய கீர்த்தி பொருந்திய திருக்கூட்டத்தார் ஒன்பதின்மர் என்று இவ்வகையாகச் சொல்லப்பட்ட சிவனடியார்களுடைய சிவந்த திருவடிகளுக்கு பத்தி செய்யும் அன்பர்கள் பாத மலர்களை எமது சிரசின்மே லணிந்து கொள்வாம். எ—று. (உச)

குருமூர்த்தி.

அற்புறுவிச் சுவப்பிரம குலகுருவாய் நெல்லையெழுந் தருளி நாளுங்,
கற்பனைதீர் கன்மநெறி பத்திநெறி ஞானநெறி களும்போ திததென்,
உற்பவமுன் னுயதுய ரொழிததளவி லானந்த முதவி யாண்ட,
பொற்புமிகு பரசமய கோளரிதா ணினைந்தேத்திப் போற்றி வாழ்வாம்.

இ—ரை.—அன்புபொருந்திய விஸ்வப்பிர்ம குலத்துக்கெல்லாம் பரமாசாரியனாகி, திருநெல்வேலி யென்னுந் தலத்தில் எழுந்தருளி யிருந்து, எந்நாளும் பொய்மையில்லாத கன்ம மார்க்கமும், பத்தி மார்க்கமும், ஞான மார்க்கமுமாகிய சன்மார்க்கங்களை எனக்குபதேசித்து, என்னுடைய ஜனன முதலாகிய துன்பங்களை நிவர்த்தி செய்து, அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்தருளி யாண்டுகொண்ட அழகு மிகுந்த பரசமய கோளரியாகிய சற்குருவினுடைய திருவடிகளை மனதினால் தியானித்தும், வாக்கினால் துதித்தும், காயத்தினால் நமஸ்கரித்தும் வாழ்வாம். எ—று. (உரு)

வித்தியாகுரு.

புகழ்பெருகு புனனாட்டுப் புனவாசற் பூம்பதியிற் புலவர் போற்றத்,
தகவினுயர் வீரசைவ சோயசிகா மணியாகித் தமியே னுக்குந்,
திகழ்தருபல் லிலக்கியத்தோ டிலக்கணமா கமங்கணிதஞ் சிற்ப நூலும்,
மகிழ்விெனாடுதெரித்தவருட் குழந்தைவேன்முனிவனடி மனத்துள்வைப்பாம்

இ-ரை.—கீர்த்தி மிகுந்த காவிரிநதி சூழ்ந்த சோழ நாட்டில் விளங்காநின்ற புனவாசல் என்கின்ற அழகிய நகரத்தில் அறிவுடையோராற் புகழப்பெற்ற ஒழுக்கத்தி லுயர்ந்த வீரசைவ குலத்திற் பிறந்து கிரகஸ்தாச்சிரம தருமத்தையுடைய சிரோரத்தினமா யெழுந்தருளி யிருந்து தனியனுகிய வெனக்கும் விளங்குகின்ற பலவாகிய இலக்கியங் களும், இலக்கணங்களும், ஆகமங்களும் கணித நூல்களும் சிற்ப சாஸ்திரங்களுமாகிய பல நூல்களையும் அன்போடு போதித்த கிருபை பொருந்திய குழந்தைவேல் முனிவ னென்னும் பெயரையுடைய ஆசிரியன் பாதங்களைச் சிந்திப்போம். எ—று. (உசு)

முதனூல்வழி.

பிஞ்சுமதிச்சடைப்பெருமான்பாலுணர்ந்தகதிர்வேற்கைப்பெரியோன்தன்பால்
அஞ்சனிகர் காசிபன்றேர்ந் தன்புறுகா ளத்திமுனிக் கறைய வந்த,
விஞ்சுதவ முனிவரனற் சுவிரதனுக் குளந்தெளிய விரித் துரைத்த,
மஞ்சுறுவிச் சுவப்பிரம புராணமெனப் புகழ்பெருகு வடநூ றன்னே.

இ-ரை.—பால சந்திரனைத்தரித்த சடா பாரத்தையுடைய சிவபெருமானிடத்தில் தெரிந்துகொண்ட ஒளி பொருந்திய வேலாயுதத்தைக் கையிலே தரித்த பெருமை தங்கிய சுப்பிரமணியக்கடவுள் பிரமாவுக்குச் சமானமாகிய காசிபமுனிவருக்குச் சொல்ல, அக்காசிப முனிவர் தெரிந்துகொண்டு தம்மிடத்தி லன்பு மிகுந்த காளத்தி முனிவருக்குச் சொல்ல, தவத்தி லுயர்ந்த அந்தக் காளத்தி மகா முனிவர் கேட்டு, நாகர நகரத்துக் கதிபனுகிய நல்ல சுவிரத மகா ராஜாவுக்கு மனதில் விளங்கும்படி விஸ்தாரமாகச் சொல்லிய அழகு பொருந்திய விஸ்வப்ரம்ஹ புராணமென்னுங் கீர்த்தி மிகுந்த கிரந்தத்தை எ—று. இது முதல் இரண்டுங் குளகம். (உஎ)

நூல் செய்தற்குக் காரணம்.

எண்டருபல் வளங்குலவு தெண்டிரைசூழ் நிலவலயத் தெவருந் தேறத்,
தண்டமிழாற் புகறியெனப் பெரியோர்கள் பணித்தமொழி தடுத்தற் கஞ்சி,
மண்டுபுகழ் வடமொழியி னுரைத்தவரன் முறைப்படியே மகிழ்வி னுய்ந்து,
பண்டுறுசீர் பொலிதருபல் விருத்தப்பா வினமாகப் பாடலுற்றேன்.

இ-ரை.—மதிக்கப்பெற்ற பலவாகிய வளப்பம் பொருந்திய கடல் சூழ்ந்த வுல கத்தில் மேற்சொல்லிய விஸ்வப்பிர்ம புராணத்தைக் கற்றோரு மற்றோருந் தெளிந்து கொள்ளும்படி இனிய தமிழாற் செய்யக் கடவாயென்று பெரியோர்கள் கட்டளையிட்ட வார்த்தையைத் தடுத்துச் சொல்வதற்கு அச்சமுற்று புகழ் மிகுந்த சமஸ்கிருத பாஷை யிற் சொல்லிய கிரமப்படியே மகிழ்ச்சியுட னாராய்ந்து பழமையாகப் பொருந்திய செய் யுளுறுப்பு விளங்காநின்ற பற்பல விருத்தப்பாவினங்களாகப் பாடத் தொடங்கினேன். எ—று. (உஅ)

நூற்பயன்.

மண்குறித்தும் பெண்குறித்தும் பொன்குறித்து மலேந்ததுவு மருவு பாரிற்,
பண்குறித்துப் புகல்வதுவும் வீண்டருக்கம் பகர்வதுவும் பரிந்து மாந்தர்,
கண்குறித்து மயலுறச்செய் விப்பதுவும் பயனறுபொய்க் கதையு மன்றால்,
எண்குறித்த வறமாதி நான்குபய னேயுமுதவு மிந்நூன் மன்னே.

இ-ரை.—பூமியைக் குறித்தும், மாதரைக் குறித்தும், செல்வத்தைக் குறித்தும், போர்செய்த சரித்திரங்களும் பொருந்திய வுலகத்தில் சங்கீத விஷயங்களைக் குறித்துச் சொல்லுகின்ற சரித்திரங்களும், வீணாகிய தருக்க வாதங்களைப் பேசுகின்ற சரித்திரங்களும், பிரியமுடனே மனிதர்கள் கண்ணாலே பார்த்த மாத்திரத்தில், மயக்க மடையும்படி செய்விக்கின்ற காமவிஷயங்களைச் சொல்லிய சரித்திரங்களும், பிரயோசனமில்லாத பொய்யாகிய சரித்திரங்களும் போன்ற தல்ல; இந்நூலானது பெரியோர்கள் கருதுகின்ற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பிரயோசனத்தையும் விரும்பினவருக் குத்தரத் தகுந்த தாகும். எ—று. (உகூ)

அவையடக்கம்.

அவையடக்கம் புகன்றதனாற் பிழையுளதேற் பிழையிலதென் றறைவாரில்லை,
அவையடக்கம்புகலாக்காற் பிழையிலதேற்பிழையுளதென் றறைவா ருண்டோ,
அவையடக்கம் புகல்வதுசான் றோர்வழக்கே யொன்றுமறி யாத யானும்,
அவையடக்கம்புகல்வதுவும்வழக்கோவென்றறிவுடையோர்க்கஞ்சாநின்றேன்.

இ-ரை.—எந்த நூலாயினும், சொற்குற்றம், பொருட்குற்ற முள்ளதாயின், அவையடக்கஞ் சொன்னதனால் குற்றமில்லையென்று அங்கீகரிக்கமாட்டார்கள். அக்குற்ற மொன்றுமில்லையாயின், அவையடக்கஞ் சொல்லாமையினால் குற்றமுள்ளதெனத் தள்ளவுமாட்டார்கள்; ஆனால், அவையடக்கஞ் சொல்வானேனெனில், அஃது கற்றுணர்ந்த பெரியோர் வழக்கமேயாகும்; இங்கு ஒன்று மறியாத யானும் அவர்களோடொப்ப அவையடக்கங் கூறுவது முறையன்று ஆகலின், அறிவுடையோர்க்குப் பயந்து, அவையடக்கங் கூறுதற் கஞ்சுகின்றேன். எ-று. (ஙய)

இதுவுமது.

மன்புவியோர் தம்புதல்வர் குறிப்பரிதாய்க் குளறுமிள மழலைச் சொற்கேட்,
டின்புறுவ ரதுபோலப் பன்னூலுங் கரிசறக்கற் றினிது தேர்ந்த,
நன்புலவர் கல்வியறி வொழுக்கநல மிறையுமிலே னகைநா ணமற்,
புன்புலனாற் பிதற்றியவிந் நூலினுறு பிழையனைத்தும் பொறுத்தாள் வாரே.

இ-ரை.—நிலைபெற்ற வுலகத்திலுள்ளோர் தங் குழந்தைகள் இன்னதென்று பொருட்குறிப்பு அறியப்படாததாய் உளறுகின்ற குதலைச் சொற்களைக் கேட்டுச் சந்தோஷ மடைவார்கள்; அதுபோல, பல நூற்களையும் ஐயந்திரிபற நன்றாகக் கற்றுணர்ந்து தெளிந்த நல்ல வித்துவான்கள் (கல்வி, அறிவு, ஒழுக்கம், நன்மை இவற்றிற் சிறிது மில்லாத நான் கற்றோர் சிரிப்பார்களே யென்று நாணத்தை யடையாமல், எனது சிற்றறிவினால் உளறிய) இந்த நூலிலுள்ள குற்றங்க ளனைத்தையும் பொறுத்து அங்கீகரிப்பார்கள். எ-று. ஆதலால் சொல்லத் துணிந்தேனென்பதுஎஞ்சி நின்றது. (ஙக)

சிறப்புப்பாயிரம்.

கடலுலக நனிசெழிக்க வறந்தழைக்கப் புலவருளங் களிக்கத் தொல்சீர்,
வடமொழியின் படிவிசுவப் பிரமபுரா ணந்தமிழால் வனைதல் செய்தான்,
கடிமதிலை யாற்றினில்வாழ் விசுவகுல திலகனருங் கலைக ளோர்ந்தோன்,
நெடியபுக ழுறுமுத்துச் சாமிபா ரதியெனும்பேர் நிபுணன் றானே.

இ—ரை.—சிறப்புப் பொருந்திய மதிலாற் சூழப் பெற்ற திருவையாறு என்னுந் தலத்தில் கிரகஸ்தாச்சிரம நெறி வழாதிருந்து வாழ்பவனும், விஸ்வப்பிர்ம குலத்திற்குத் திலகம்போன்றவனும், அரிதாகிய கலைஞானங்களை யெல்லாங் கற்றுணர்ந்தவனும், விசாலமாகிய கீர்த்தி பொருந்தியவனுமாகிய முத்துச்சாமி பாரதி யென்னும் இயற்பெயரையுடைய விவேகியானவன் கடல்சூழ்ந்த உலகமெல்லாம் மிகுந்த வளம் பெருகவும், தருமங்களெல்லாம் தழைத்தோங்கவும், வித்துவான்கள் சந்தோஷிக்கவும், பழமையாகிய சிறப்பினையுடைய சமஸ்கிருத பாஷையிற் கூறியபடியே விஸ்வப் பிர்ம புராணத்தைத் தமிழ்ப் பாஷையினால் அலங்கரித்துப் பாடினான். எ—று. (௩௨)

அரங்கேற்றிய காலமு மிடமும்.

எண்சீர்க் கழிநெடிலடிலாசிரிய விருத்தம்.

மன்னுபுகழ் மலிவிசுவப் பிரமபுரா ணத்தை வண்டமிழ்ப்பா வாலியற்றி மருவியசு காத்தம், பன்னியவா யிரத்தெண்ணூற் றெட்டதனி னிகழும் பார்த்திபவற் சரமகர மாமதிநா ளத்தம், மின்னிடப லக்கினத்தி னெல்லைவளம் பதியில் விளங்குபர சமயகோ ளரிநாத சுவாமி, சந்நிதியிற் புலவர்கள்சூழ் தரவரங்கேற் றினனாற் சதுரன்முத்துச் சாமிபா ரதியெனுநா வலனே.

இ—ரை.—கல்வியில் வல்லவனாகிய முத்துச்சாமி பாரதியென்னும் வித்துவான் நிலைபெற்ற கீர்த்தி மிகுந்த வடமொழியிலுள்ள விஸ்வப் பிர்ம புராணத்தை வண்மையாகிய தமிழ்ச் செய்யுட்களாக இயற்றி, பொருந்திய சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தெண்ணூற் றெட்டில் நிகழ்கின்ற பார்த்திப வருஷம் தைம்மாதம் அஸ்த நக்ஷத்திரங் கூடிய சுப தினத்தில் விருஷபலக்கினத்தில் திருநெல்வேலி யென்னும் வளம் பொருந்திய ஸ்தலத்தில் எழுந்தருளி விளங்காநின்ற ஸ்ரீமத் பரசமய கோளரிநாத சுவாமிகள் சந்நிதானத்தில் அனேக வித்துவான்கள் சூழ விருந்து அரங்கேற்றினான். எ—று. (௩௩)

முதலாவது

புராணவரலாற்றத்தியாயம்.

நாடு கலிநிலைத்துறை.

உலகெ லாந்தரு விதியிவ னத்தின மொருங்கு,
குலவி வான்படர்ந் தெனப்பெயர்ந் தார்கலி குறுகி,
யிலகு நீர்முகந் தறுமுக னிவர்மயி லினம் வான்,
புலமெ ழுந்தன மீண்டவிந் திரனிவர் புயல்கள்,

இ-ரை.—தேவேந்திரன் வாகனமாகிய மேகங்களானவை உலகங்களைச் சிருஷ்டிக்கின்ற பிர்மாவின் வாகனமாகிய அன்னத்தின் இனங்கள் ஒன்றாகக்கூடி ஆகாயத்திற் சென்றாற்போல வெண்மையாக விளங்கிச் சென்று சமுத்திரத்தை யடைந்து விளங்காநின்ற வதன் நீரை யுண்டு சண்முகக்கடவுளின் வாகனமாகிய மயிலினங்கள் எழுந்து ஆகாயமார்க்கத்தில் வந்தாற்போலத் திரும்பின எ-று.—[படர்ந்து, எழுந்து, என்பன அகரந்தொகுத்தல்.—]

இதுமுதல் நான்கு பாட்டுங் குளகம்.—[சூ-குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்.] (க)

மன்னு முத்தழற் றூபதர் வரவிடு மதமா,
மின்னு கண்ணுதற் கடவுளை மறைத்தல்போல் விளங்கு,
பொன்னெ டும்பனி மால்வரை முழுவதும் பொதிந்து,
பன்னு சூன்முதிர்ந் தெழுந்துவிண் மறைதரப் படர்ந்து,

இ-ரை.—நிலைபெற்ற காருக பத்தியம், தக்ஷணாக்கினியம் ஆகவனீயம் என்னு மூன்றக்கினியையும் வளர்க்கின்ற தாருகாவன ரிஷிகளால் அனுப்பப்பட்ட மதயானையானது:—விளங்காநின்ற நெற்றிக் கண்ணையுடைய பரமசிவனைத் தன்னுள் மறைத்துக்கொண்டதுபோலப் பிரகாசியாநின்ற அழகு பொருந்திய நெடிய இமய மலை முழுமையு மறையப்படிந்து சொல்லப்பட்ட கருப்ப முதிர்ச்சி யடைந்து எழுந்து ஆகாய முழுது மறையும்படி பரவி எ-று. (௨)

வெங்கண் மால்கரி யுரித்தருள் கருங்கள விமலன்,
அங்கை யேந்திய தமருக முழக்கென வதிர்ந்து,
கங்கை வாண்மதி கூவிளம் பொலந்துணர்க் கடுக்கை,
தங்கு நீள்செழுஞ் சடையெனத் திசைதொறுந் தடித்து.

இ-ரை.—தாருகாவன ரிஷிகளால் அனுப்பப்பட்ட அஞ்சாமையையுடைய பெரிய யானையை உரித்துப் போர்வையாகப் போர்த்தருளிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானது அழகிய கையிற் றரித்த தமருகத்தின் முழக்கம்போலக் கர்ச்சித்து, சங்கா நதியும், ஒளி பொருந்திய பால சந்திரனும், வில்வமும், பொன்மயமாகிய பூங்கொத்துகளாற் றொடுக்கப்பட்ட கொன்றை மாலையும், தங்கப்பெற்று நீண்ட செழுமையாகிய அந்தச் சிவபெருமானுடைய சடைகளைப்போல எவ்விடங்களிலும் மின்னலைச்செய்து எ-று. (ௗ)

தொண்டர் வெம்பவத் துயர்கெட மறையெலாந் துதிக்கும்,
அண்டர் நாயகன் பொழிதிரு வருளென வகிலங்,
கொண்ட வேனில்வெப் பறவிம கிரிக்கணுங் குலவு,
மண்டு பற்பல வயின்றொறும் பொழிந்தநீர் மழையே.

இ-ரை.—அடியார்களுடைய கொடிய பிறவித் துன்பம் ஒழியும்படி, வேதங்களெல்லாந் துதிக்கின்ற தேவ நாயகனாகிய சிவபெருமான் பொழிகின்ற திருவருட் பிரவாகத்தைப்போல, கோடையினால் பூமி முழுது மடைந்த உஷ்ணமானது நீங்கும்படி, இமய மலையினிடத்திலும், அதைச் சூழ்ந்து மிகுந்த பல பல விடங்களிலும், அம்மேகங்கள் நீர்மழையை வருஷித்தன. எ-று

[இந்த நான்கு பாட்டும் மேகங்கள் எழுவாயாகவும், பொழிந்த பயனிலையாகவுங் கொண்டு முடிந்தன.] (சு)

பெருகு வள்ளநீ ரருவிக டனித்தனி பிரிந்து,
பொருவில் கங்கையை யொருங்குசென் றணைந்தன புவியின்,
மருவு தத்தம திடர்தபப் பற்பன்மா நதிகள்,
ஒருவி லாப்புகழ்ப் பொன்னியின் மூழ்குத லொத்து.

இ-ரை.—பூமியிலுள்ள பல பல மகா நதிகளெல்லாம், தம்மிடத்து மூழ்குவோரிடத்தி லிருந்து வந்து பொருந்திய, தம்முடைய பாவங்கள் ஒழியும்பொருட்டு, நீங்காத கீர்த்தியையுடைய காவேரி நதியை அடைந்து, ஒரே காலத்தில் தனித்தனி முழுகுதலைப்போலே, அம்மழையினாற் பெருகிய மிகுந்த நீரையுடைய மலையருவிகளெல்லாம் தனித்தனி பிரிந்து வந்து ஒப்பில்லாத கங்கா நதியை அடைந்தன. எ—று. (ரு)

மகிழும் பொன்னவ மணிமயிற் றழைகரி மருப்போ,
டகில்கொங் காரம்வெண் சங்குசந் தாதிய வனைத்து,
மிகவ ரன்றிவெண் டிரைக்கரத் திருகரை வீசிப்,
புகழ்மந் தாகினி சென்றது வள்ளலைப் போன்று.

இ-ரை.—யாவரும் புகழ்கின்ற அந்தக் கங்கா நதியானது, மகிழ்ச்சியைத் தருகின்ற பொன்னையும், நவரத்தினங்களையும், மயிலினது தோகைகளையும், யானைத் தந்தங்களையும், அகில் மரங்களையும், குங்கும மரங்களையும், வெண்மையான சங்கங்களையும், சந்தன மரங்களையும்; இன்னும் பல பொருள்களையும் மிகவும் வாரிக்கொண்டு வெண்மையான அலைகளாகிய கைகளினால், இரண்டு கரைகளிலு மெறிந்து வரையாது கொடுக்கின்ற வள்ளலை யொத்துச் சென்றது. எ—று. (எ)

செங்கண் மாலருள் விரித்துல களித்திடுஞ் செயல்பேற்,
றங்கு மைந்திணைப் பல்லுயிர் களுந்தழைத் தோங்கக்,
கங்கை யாறுகால் குளங்கிண றோடைபல் கழனி,
எங்கணுஞ் செறிந் தலைகடல் கிண்டியங் கியதே.

இ—ரை.—சிவந்த கண்களையுடைய விஷ்ணுவானவர் தமது கிருபையைச் செலுத்தி உலகங்களை இரக்ஷிக்குஞ் செய்கையைப்போல, அந்தக் கங்காநதியானது, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திடங்களிலு முள்ள பலவாகிய உயிர்கள் செழித்து விருத்தி யடையும்படி, பல ஆறுகள், வாய்க்கால்கள், தடாகங்கள், கிணறுகள், ஓடைகள், வயல்கள் முதலாகிய எவ்விடங்களிலும் நீர் நிரம்பப் பரவிப் பின்பு சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு அங்கிருக்கின்ற நீர்வாழ் செந்துக்களையும் இரக்ஷிக்கச் செல்வதுபோலச் சென்றது. எ—று. (எ)

புகழ் பகீரதித் தீம்புனல் படர்தரப் பொலிந்து,
திகழ்பன் னாட்டினும் விழுமிதாய்ப் பல்வளஞ் செறிந்த,
மகத நாட்டுறு பயிர்வினைக் கருங்கழன் மள்ளர்,
அகனி லத்தர வேறுபா டுகளைநன் கறிந்து.

இ—ரை.—புகழப்பட்ட கங்கா நதியின் மதுரமாகிய நீரானது பாய்தலினாலே செழிப்படைந்து விளங்காநின்ற, பல நாடுகளிலும் சிறப்பையுடையதாகிய பல வளங்கள் மிகுந்த மகத நாட்டிலுள்ள, பயிர்த்தொழில் செய்கின்ற கரிய கால்களையுடைய உழவர்கள் விசாலமான நன்செய் நிலங்களின் தகுதி வேறு பாடுகளை நன்றாக அறிந்து, எ—று.—[இதுமுதல் நான்கு பாட்டுங் குளகம்.] (அ)

வரம்பி லாதசை யொடுபயிர்த் தொழில்செய மகிழ்வோ,
டிரம்பெ றக்கடை வாய்வழி தாமது வுண்டு,
குரம்பி றக்கம ரொன்றிடப் பணையெலாங் குளிர,
நிரம்பு தீம்புனல் சிறைசெய்து நெடுவரம் புயர்த்தி.

இ—ரை.—அளவில்லாத ஆசையுடன் பயிர்த்தொழில் செய்யும்பொருட்டு, சந்தோஷமும் தைரியமுங் உண்டாகும்படி கடைவாய் பெருகக் கள்ளருந்தி வரம்புகளுடையவும், கமர்கள் மூடவும், வயல்களெல்லாங் குளிரவும், சென்று நிரம்பிய மதுரமாகிய நீரை ஆங்காங்கு தடுத்து நீண்ட கரைகளை யுயர்த்திக் கட்டி, எ—று. (கூ)

பகரி லக்கினத் தலப்படை யெடுத்துவன் பகட்டி,
னிகழ்பி டர்த்தலை நுகத்தினை நிலவுற வமைத்துத்,
திகழு மற்றத னடுவணேர்க் காலினைச் சேர்த்திப்,
புகல்வ டத்தினைப் பூட்டிமற் றுளவெலாம் பொருத்தி.

இ—ரை.—சோதிட நூல் வல்லோரால் சொல்லிய சுப லக்கினத்தில் கலப்பையெடுத்து வலிய கடாக்களினது அசைகின்ற பிடரினிடத்து நுகத்தடியைச் செவ்வையாக அமைய வைத்து, அத னடுவே ஏர்க்காலைச் சேர்த்து வடக் கயிற்றினாற் கட்டி, இன்னுஞ் சொல்லப்பட்ட கருவிக ளெல்லாவற்றோடு மிணக்கி, எ—று. (யி)

பரவு மேழியை யிடக்காத் தினிலுறப் பற்றிப்,
பிரிவின் முட்சிறு கோல்வலக் கரத்தினிற் பிடித்து,
வரவு சேர்நெரி மருப்பிளம் பகடுக ளூரப்பி,
விரவு பல்விளாக் கோலிநன் குழுதனர் விரைந்து.

இ-ரை.—புகழ்கின்ற மேழியை இடக்காத்தினுற் பொருந்தப் பிடித்து, நீங்காத முள்ளையுடைய தாற்றுக் கோலை வலக் கரத்திற் பிடித்து, நெரித்தல் பொருந்திய வலிய கொம்புகளையும், இளமையையுமுடைய கடாக்களை அதட்டி, பலமுறை படைச் சால் கோலிக் கலந்து செவ்வையாக விரைந்து உழுதனர் அவ்வுழவர்கள். எ-று (யக)

துன்று புற்புதன் முதலற வுழுதிடு தொள்ளி,
ஒன்றி டப்பரம் பூர்ந்துசெய் வளம்பொலிந் தோங்க,
வன்றி றற்கருங் களமரிந் திரன்றனை வாழ்த்தி,
வென்றி நல்குநல் லோரையி னென்முளை விதைத்தார்.

இ-ரை.—வலிய திறமையுடைய கரிய வுழவர் நெருங்கிய புல் பூண்டு முதலிய வை மடியும்படி யுழுத சேறு சமமாகப் பரம்படித்து, வயல்கள் வளம்பெற்றுச் செழிக்கும்படி மருத நிலத் தலைவனாகிய தேவேந்திரனைத் துதித்துப் பயனைத் தருகின்ற நல்ல இலக்கினத்தில் நெல் முளையை விதைத்தார்கள். எ-று. (யஉ)

பழுது றாதினி தோம்பிடத் தோற்றுபு பசந்த,
செழிய நாறுகள் பறித்தனர் பக்குவந் தேர்ந்து,
குழுமி யின்புறு முழத்தியர் குரவைகள் பாடிக்,
கழனி யெங்கணு நட்டன ருலகெலாங் களிக்க.

இ-ரை.—சேதப்படாமல் நன்றாகப் பாது காப்பதனால் முளைத்துப் பசுமை யடைந்த செழிப்பாகிய நாறுகளைப் பக்குவ மறிந்து உழவர்கள் பறித்தார்கள்; அந்த நாறுகளை உழத்தியர் கூடி மகிழ்ந்து குரவைப் பாட்டுகள் பாடி உலகமெல்லா மகிழும்படி வயல்களெல்லாம் நட்டார்கள். எ-று. (யங)

களையொ ருங்கற வுழத்தியர் களைதரக் கதித்து,
வளர்பைங் கூழ்தழைத் தோங்கிநெல் விளைந்திட மள்ளர்,
புளக முற்றறுத் தொருத்தலாற் றுவைத்துவை போக்கி,
அளவு செய்துபண் டியிற்கொணர்ந் தகத்தினி லமைப்பார்.

இ-ரை.—உழத்தியர்கள் அவ்வயல்களிலுள்ள களைகளெல்லாம் அறும்படி பறித்தெறியக் கதித்து வளர்கின்ற பயிர்கள் செழித் துயர்ந்து நெல் விளைந்தவுடன் உழவர்கள் மனமகிழ்ச்சியால் மயிர்ச்சிலிர்ப்படைந்து கதிர்களை யறுத்துக் கடாக்களாற் றுவைப்பித்து வைக்கோலை யுதறி நீக்கி, நெற்களைச் சுத்தமாக்கி, அளவிட்டு, வண்டிகளிலே ஏற்றிக்கொண்டு வந்து அவரவர்கள் வீடுகள் தோறுஞ் சேர்ப்பார்கள். எ-று. (யச)

துவரை சாமையெள் கோதுமை தினையவஞ் சோளங்,
கவினு ழூந்துகேழ் வரகுகொள் மொச்சைநற் கடலை,
அவரை பல்பய றுடுகிழங் கிவைமுத லனைத்துங்,
குவல யந்தனிற் பயிர்புரிந் துறுபயன் கொள்வார்.

இ—ரை.—துவரையும், சாமையும், எள்ளும், கோதுமையும், தினையும், யவநெல்லும், சோளமும், அழகிய உழுந்தும், கேழ்வரகும், கொள்ளும், மொச்சையும், நல்ல கடலையும், அவரையும், பல பயறுகளுமாகிய தானியங்களும், கிழங்குகளும் இவை முதலாகிய புன்செய் நிலத்திற் பயிர் செய்து, விளைபொரு ளனைத்தையுங் கொண்டு வந்து சேர்ப்பார்கள். எ—று. (யரு)

கரும்பி லாங்கலி யரிசன மிஞ்சிவான் கமுகு,
விரும்பு தீம்பலா நறுஞ்சுவை மாவடை மிடைந்த,
அரம்பை முந்திரி யிலிகுச நரந்தமே யாதி,
வரம்பி லாதபல் பழங்களும் பெற்றக மகிழ்வார்.

இ—ரை.—கரும்புகளும், தேங்காய்களும், மஞ்சளும், இஞ்சியும், உயர்வாகிய பாக்குகளும், விரும்பத்தக்க மதுரமாகிய பலாக்கனிகளும், நல்ல தித்திப்பாகிய மாங்கனிகளும், இலைகள் நெருங்கிய வாழையின் கனிகளும், முந்திரிப் பழங்களும், எலுமிச்சம் பழங்களும், நாரத்தம் பழங்களும் இவை முதலாகிய அளவில்லாத பழ வருக்கங்களையும் கொண்டுவந்து சேர்த்து மகிழ்ச்சி யடைவார்கள். எ—று. (யசு)

கோட்டு மாமலர் முதலநால் வகைமலர்க் கொழுந்தேன்,
பாட்ட ளிக்குல மெடுத்திரு விடைப்படுத் துதல்போல்,
ஈட்டு காலையி னுனிலப் பொருள்களு மீட்டிக்,
கூட்டி வீட்டினிற் குதுகலித் தின்புற வமைப்பார்.

இ—ரை.—(இவ்விதமாக) அழகிய கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ வென்னு நால்வகை மலர்களிலு முண்டாகிய செழுமையுள்ள தேனை இசை பாடுகின்ற வண்டுக் கூட்டங்கள் எடுத்துக் கொண்டு வந்து கூட்டிற் சேர்த்தல்போல குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லை யென்னும் நால்வகை நிலங்களிலு முண்டாகிய பொருள்களை, மகிழ்ச்சி பொருந்த விருப்பத்துடனே சம்பாதிக்க வேண்டிய காலத்தில் சம்பாதித்து வீட்டிற் சேர்த்துக்கொள்வார்கள். எ—று. (யஎ)

அரசற் காறிலொன் றீந்துதென் புலத்தவ ரதிதி,
விரவு சுற்றநற் றெய்வமும் போற்றுபு மிளிர்தம்,
மரபிற் கொத்தநல் லொழுக்கமுந் திருவமும் வாய்ந்து,
புரையில் வாழ்வொடு பல்குடி களுநனி பொருந்தும்.

இ—ரை.—இவ்விதமாகப் பெறப்பட்ட பலன்களில், ஆறி லொருபாகம் அரசனுக்குக் கொடுத்து, மீதி ஐந்து பாகத்தில் பிதிர்த் தேவதைகளுக்கும், அதிதிகளுக்கும், பொருந்திய சுற்றத்தார்களுக்கும், நல்ல இஷ்ட தெய்வங்களுக்கும் நான்கு பாகத்தை

யுபசரித் திதவி, மற்றொரு பாகத்தைத் தங்களுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு, குலத்திற் கேற்ற நல்லொழுக்கமும், குறைவில்லாத செல்வமும் பெற்று, குற்ற மில்லாத வாழ்வுடனே பலகுடிகளும், அந்நாட்டிற் பொருந்தி யிருப்பார்கள். எ-று. (௰அ)

நகர்.

ஒன்று வன்பிணி வறுமைமுற் றுயர்களூ ருது,
துன்று பல்பெரும் போகங்கள் யாவருந் துய்த்தே,
என்று மேம்படத் திகழ்தரு மகதநாட் டிடையில்,
நன்று றும்புல வோர்புகழ் நாகர நகரம்.

இ-ரை.—பொருந்துகின்ற கொடிய வியாதி, வறுமை முதலாகிய யாதொரு துன்பங்களு மில்லாமல், மிகுந்த பெருமை பொருந்திய பல போகங்களையும் யாவரும் அனுபவித்து, எந்நாளு மேன்மை பொருந்தி விளங்காநின்ற மகத நாட்டின் நடுவிலே, தேவர்கள் புகழப்பட்ட நன்மை பொருந்திய நாகர மென்கின்ற ஒரு நகர முள்ளது. எ-று. (௰௯)

அளிக னின்னிசை பாடமா மஞ்ஞைக ளாடக்,
கிளிகள் பூவைக ளாரண மிருதிகள் கிளக்கக்,
களிகொள் மாங்குயில் கூவவாழ் புட்குழாங் களிக்கத்,
துளிந றுப்பொழி பொழில்செழித் தோங்கின சூழ்ந்து.

இ-ரை.—வண்டுகள் செவிக் கின்பமான கீதங்கள் பாடவும், மயில்க ளாடவும், கிளிகளும், நாகணவாய்ப் புட்களும், வேதங்களையும், ஸ்மிருதிகளையும் சொல்லவும், மாமரங்களிலுள்ள சந்தோஷத்தையுடைய குயில்கள் கூவவும், பலவிதமான பக்ஷி ஜாதிகளெல்லாங் களிப்படையவும், துளித்தலையுடைய தேனைப் பொழிகின்ற பூஞ் சோலைகள் அந்த நாகர நகரத்தைச் சூழ்ந்து செழிப்படைந்து வளர்ந்தன. எ-று. (உ௰)

தளங்கொ ளாம்பல்வெண் டாமரை காவிகல் லாரந்,
துளங்கு மோடைகள் சேட்டனம் பேட்டொடு துயிலுங்,
குளங்கள் பற்பல தீம்புனல் பெருகுகூ பங்கள்,
வளம் பொருந்திய நந்தன வனங்களும் வயங்கும்.

இ-ரை.—அகவிதழ்களையுடைய குமுத மலர்களும், வெண்டாமரை மலர்களும், நீலோற்பல மலர்களும், செங்கழுநீர் மலர்களும், பிரகாசிக்கின்ற பல நீரோடைகளும், அழகு பொருந்திய அன்னப் பக்ஷிகள் பெட்டை யன்னங்களைத் தழுவிக்கொண்டு நித்திரை செய்யத்தக்க செந்தாமரை மலர்களையுடைய பல தடாகங்களும், மதுரமாகிய நீர்ப் பெருக்கையுடைய பல கிணறுகளும், செழுமை பொருந்திய பல பூந்தோட்டங்களும், அந்நகரத்தில் விளங்கிக் கொண்டிருக்கும். எ-று. (உக)

ஒன்ன லார்மணி மகுடகோ டிகண்முனிந் துரிஞ்சுங்,
கொன்னு லாங்கறை யடிமத கரிபல குலவுந்,
துன்னு தண்டைமுற் பணிதிகழ் வுறவலி துவன்றி,
மன்னு கொய்யுளைக் கலினவாம் புரவிகள் வயங்கும்.

இ—ரை.—சத்துருக்களுடைய மணிக ளிழைத்த கிரீட கோடிகளைக் கோபித்துக் காலினாலே தேய்த்து விடத்தக்க பலம் பொருந்தி யுலாவுகின்ற உரல்போலுங் கால்களை யுடைய பல மதயானைகள் அந் நகர்ப்புறத்திற் சஞ்சரிப்பன; நெருங்கிய பாத சிலம்பு முதலாகிய ஆபரணங்களால் அலங்கரித்து, விளங்குகின்ற மிகுந்த வலிமையையும், கொய்யப்பட்ட நெருங்கிய புற மயிரினையும், கடிவாளத்தையுமுடைய தாவுகின்ற பல பல குதிரைகளும், அவ்விடத்திற் சஞ்சரிப்பன. எ—று. (உஉ)

வில்லு மிழ்ந்திடு பன்மணி விண்டொடு கொடிஞ்சிச்,
சில்லி யந்தடந் தேரள விலாதன திகழும்,
புல்லு ரார்நடுக் குறக்களம் புகுந்து போர் புரிந்து,
வெல்லும் வெந்திறற் பல்படை வீரர்கண் மிளிர்வார்.

இ—ரை.—அந்த நகரத்தில் ஒளியைக் கக்குகின்ற பலவாகிய இரத்தினங்கள் பதிக்கப் பெற்று, ஆகாயத்தை யளாவுகின்ற மேன் மொட்டையும், அழகிய உருளைகளையுமுடைய அளவில்லாத தேர்களானவை விளங்கிக்கொண்டிருக்கும் சத்துருக்கள் நடுங்கும்படி யுத்த களத்திற் புகுந்து போர்செய்து, ஜயிக்கத்தக்க பராக்கிரமம் பொருந்திய பல படை வீரர்களும் விளங்குவார்கள். எ—று. (உங)

கருது நல்லொழுக் கிலரடை வுறுமதோ கதியிற்,
பெரிது தாழ்ந்தது பிறங்கெழிற் புரிசைசூ ழகழி,
ஒருவி னல்லொழுக் குடையவ ரறத்தினு மோங்கிப்,
பொருவில் பற்பல பொறியொடு விளங்குறும் புரிசை.

இ—ரை.—அந் நகரத்தில் விளங்குகின்ற அழகு பொருந்திய மதிலைச் சூழ்ந்த அகழியானது மேலோர் கருதுகின்ற நல்லொழுக்க மில்லாதவர் அடைகின்ற * பாதாளத்தைப் பார்க்கினு மிகவும் ஆழமுள்ளதா யிருக்கும்; அம்மதிலானது நீங்காத நல்லொழுக்க முடையவர்களாற் செய்யப்பட்ட தருமப் பயனைப் பார்க்கினும் உயர்ச்சி யடைந்து, ஒப்பற்ற பல பல எந்திரங்களோடு விளங்கும். எ—று. (உச)

* நல்லொழுக்க மில்லாதாரைக் குறிக்குமிடத்தில், பாதாள மென்பது நரகம்.

நல்லொழுக்க முள்ளவர்களுடைய தருமத்தைக் குறிக்கு மிடத்தில், ஓங்கிப் பொறியொடும் விளங்கும் என்பதற்கு, சிரேஷ்ட மடைந்து செல்வத்தோடு விளங்குமெனக் கொள்க.

விலை மடந்தையர் வாழ்வுறு வீதியு மிகுசீர்,
இலகு சூத்திரர் மறுகும்வை சியரெழிற் றெருவும்,
வலிய மன்னவர் நியமமு மறையவர் மறுகுஞ்,
சலசை நாமகள் பிரிவுறு நலத்தொடு தயங்கும்.

இ—ரை.—அந்நகரத்தில், பொருளைக் கருதிச் சுகத்தைக் கொடுக்கின்ற பொது மகளிர் வாழ்கின்ற வீதிகளும், மிகுந்த சிறப்புடன் விளங்குகின்ற சூத்திரர்கள் வாழ்கின்ற வீதிகளும், அழகு பொருந்திய வைசியர்கள் வாழ்கின்ற வீதிகளும், பராக்கிரம

சாலிகளான க்ஷத்திரியர்கள் வாழ்கின்ற வீதிகளும், வேத மோதுகின்ற பிராமணர்கள் வாழ்கின்ற வீதிகளும், எப்போழ்தும் இலக்குமியும், சரஸ்வதியும் பிரியா திருப்பதால், செல்வப் பொருளும், கல்விப் பொருளும் பொருந்தி விளங்கும். எ–று. (உரு)

மாத வத்தர்வாழ் மடமுமெய்க் குரவர்வாழ் மடமும்,
ஓது வித்திடு குரவர்வாழ் கழகமு முற்றோர்க்,
காத ரத்துட னளித்திடு மன்னசத் திரமுஞ்,
சீத முற்றநீர்ச் சாலையு மளப்பில திகழும்.

இ–ரை.—அந்நகரத்தில், மகா தவ வலிமையை யுடைய பெரியோர்கள் வசிக்கின்ற திரு மடாலயங்களும், உண்மையாகிய சமயங்களை விளங்கச் செய்கின்ற சமயாசாரிகள் வசிக்கின்ற திரு மடாலயங்களும், மாணுக்கர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கின்ற உபாத்தியாயர்கள் வசிக்கின்ற கல்விச் சாலைகளும், பசியினாலே வந்தவர்களுக்குப் பிரியத்துடனே மாருது அன்ன மிடுகின்ற தரும சத்திரங்களும், குளிர்ச்சி பொருந்திய தண்ணீர்ப் பந்தல்களும், அளவில்லாதனவாக விளங்கிக் கொண்டிருக்கும். எ–று. (உசு)

கதிர்செய் மாளிகை யுபரிகை கருதுபல் பொருளும்,
நிதியு மல்கிய வாவணம் விழவரு நியமம்,
அதுல மந்திரஞ் சபைகந்த வாரமா டரங்கந்,
துதிகொள் கோபுரஞ் சினகரங் களுநனி துலங்கும்.

இ–ரை.—அந்நகரத்தில், இரத்தினங்கள் பிரகாசிக்கின்ற வீடுகளும், மேன் மாடங்களும், விரும்பினவர்கள் பெறும்படியான பல பொருள்களும், திரவியங்களும், பெருகியிருக்கின்ற கடை வீதிகளும், உற்சவம் நீங்காத வீதிகளும், ஒப்பில்லாமல் விளங்குகின்ற இராஜ கிரகங்களும், சபா மண்டபங்களும், இராஜஸ்திரிகள் வசிக்கின்ற அந்தப்புரங்களும், நாடக சாலைகளும், யாவருந் துதிக்கத்தக்க கோபுரங்களை யுடைய தேவாலயங்களும், விசேஷமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எ–று. (உஎ)

மறை முழக்கமும் பலகலை முழக்கமு மகங்கள்,
நிறை முழக்கமு மிசைநட முழக்கமு நெடுந்தேர்,
அறை கழற்படை வீரர்பா யரிகரி முழக்கும்,
முறைகொள் பல்லிய முழக்கமுங் கடலினு முழங்கும்.

இ–ரை.—அந்நகரத்தில், பிராமணர்கள் வேத பாராயணஞ் செய்கின்ற ஓசையும், பலவாகிய சாஸ்திரப் பிரசங்கஞ் செய்பவர்களுடைய ஓசையும், யாகங்கள் செய்யுமிடத்தி லுண்டாகிய ஓசையும், சங்கீதத்தோடு நிருத்தனஞ் செய்கின்ற ஓசையும், உயர்ந்த தேர்களை நடத்தும் ஓசையும், சப்திக்கின்ற வீரகண்டாமணி தரித்த சுத்த வீரர்களுடைய ஆரவாரமும், பாய்கின்ற குதிரைகளின் கனைப்பும், யானைகளின் சத்தமும், முறையாக ஒலிக்கின்ற பல வாத்திய கோஷ்டங்களுமாகிய எல்லா முழக்கங்களுஞ் சேர்ந்து சமுத்திரத்தின் முழக்கத்திலும் அதிகமாக முழங்கிக் கொண்டிருக்கும். எ–று. (உஅ)

பூசுராதிநான் மரபினர் மிருதிகள் புகலும்,
ஆசி லாநெறி யொழுகிவாழ்ந் திருப்பர்க ளன்னோர்,
தேசு லாமட வார்களு மந்நெறி திறம்பார்,
மாசி லாதபல் புண்ணியங் களுநனி வளரும்.

இ-ரை.—அந்நகரத்தில், பிராமணர் முதலாகிய நான்கு வருணத்தார்களும், ஸ்மிருதிகளிற் சொல்லிய விதிப்படி குற்றமில்லாத நன் மார்க்கத்தில் நடந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்; அவர்களுடைய அழகு பொருந்திய மனைவியர்களும் ஸ்மிருதி விதிப்படி பதிவிரதா தருமத்தில் தவறா திருப்பார்கள், குற்ற மற்ற பல புண்ணியங்களும், மேன் மேலும் வளர்ந்து கொண்டிருக்கும், எ-று. (உகூ)

இனைய வாகிய பற்பல வளங்களு மியைந்து,
பனிவி சும்பிடை வாழ்வுறு சுரர்களும் பரவ,
நனிசி றந்திடும் பேரெழி னாகர நகரிற்,
புனித மேவரி யணையின்வீற் றிருந்தருள் புரிவோன்.

இ-ரை.—இப்படிப்பட்ட பற்பல வளப்பங்களும் பொருந்திக் குளிர்ச்சி பொருந்திய தேவலோகத்தில் வாழ்கின்ற தேவர்களும், துதிக்கும்படி மிகவுஞ் சிறப்பு வாய்ந்த பேரழகுள்ள அந்த நாகர நகரத்தில் பரிசுத்தமாகிய சிங்காதனத்தில் கொலுவிருந்து, உலகிலுள்ள சர்வான்மாக்களுக்குங் கிருபை செய்வோன். எ-று. (௩௰)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவொடு கடலிற் றோன்றுஞ் செழுமதி மரபிற் றோன்றி,
மருவக னுலக மெல்லா மாண்புறு செங்கோ லோச்சிப்,
பெருகுபல் லுயிரு மின்பம் பெறத்தனி புரக்கு நீரான்,
பொருவறு சுவிர தப்பேர் பொருந்திய மன்னர் மன்னன்.

இ-ரை.—திருப்பாற்கடலில், அமிர்தங் கடைந்த காலத்தில், இலக்குமியோடு தோன்றிய செழுமையுள்ள சந்திர குலத்தில் அவதரித்து, பெருகிய பல ஆன்மாக்களும் களிப்பை யடையும்படி விசாலமாகிய உலகமெல்லாம் செங்கோல் செலுத்திப் பொதுவறக் காக்குந் தன்மையை யுடையவன்; ஒப்பில்லாத சுவிரத னென்னும் பெயரை யுடையவன்; மற்றை யரசர்களுக் கெல்லாம் அரசனா யுள்ளவன். எ-று. (௩க)

[இது முதல் ஐந்து பாடல் சுவிரத ராஜன் சிறப்பு.]

மருவல ரொளிகால் செய்ய மணிமுடி தடவுந் தாளான்,
முருகவி ழலங்கல் வேய்ந்த முழவுறழ் திணவுத் தோளான்,
கருமுகில் சமழ்ப்ப நல்குங் காமர்வண் கமலக் கையான்,
பருமணி யார மின்னும் பதுமைவா ழகன்ற மார்பான்,

இ-ரை.—சத்துருக்கள் தன்னை வணங்குந்தோறும் அவர்களுடைய ஒளி வீசுகின்ற சிவந்த இரத்தினங்க ளிழைத்த கிரீடங்கள் உரிஞ்சுகின்ற கால்களையும், வாசனை

விரிந்த மலர் மாலை யணிந்த மத்தளம்போன்ற யுத்த விருப்பத்தினால் இனவு பொருந்திய புஜத்தையும், கரிய மேகங்களும் வெட்கும்படி கொடுக்கின்ற கொடையை யுடைய அழகிய வளம்பொருந்திய தாமரை மலர்போன்ற கையையும், பெரிய ரத்தினங்கள் பதித்த பதக்கங்களும், இலக்குமியும் பிரகாசித்து வாழ்கின்ற விசாலமாகிய மார்பையு முடையவன். எ-று. (௩௨)

தண்ணருள் பெருகுங் கண்ணான் றழைகதிர் மதி முகத்தான்,
நண்ணலர்க் கடந்த வேலா னருசுட ரெறிக்கும் பூணான்,
கண்ணழல் கதுவுஞ் சீற்றக் கடாம்பொழி மழக ளிற்றான்,
எண்ணருங் கலைக ளெல்லா மினிதுண ரறிவின் மிக்கான்.

இ-ரை.—குளிர்ந்த கருணை பொழிகின்ற கண்களையும் செழுமையாகிய சீதளகிரணங்களை யுடைய சந்திரனைப்போலு முகத்தையும், சத்துருக்களை யுத்தத்தில் ஜயித்த வேலாயுதத்தையும், பிரகாசமான கிரணங்களை வீசுகின்ற நவரத்தின கசிதமாயுள்ள ஆபரணங்களையும், அக்கினி பொருந்திய கண்களையும், கோபத்தையு முடைய மதம் பொழிகின்ற இளமையாகிய யானைகளையுமுடையவன்; அளவிடுதற்கரிய கலைஞானங்களெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த அறிவான் மிகுந்தவன். எ-று. (௩௩)

பன்னுபே ரெழிலா னெப்பில் பாழியா னுயிர்கள் யாவுந்,
தன்னுயி ரெனவே காக்குந் தகைமையா னிழற்று கொற்ற,
மின்னுவெண் குடையா னெண்ணில் விறல்கெழு படையா னெங்கு,
மன்னுமெய்ப் புகழான்றீமை மறிதரச் சினக்குந் தூயோன்.

இ-ரை.—சாமுத்திரிகா லக்ஷண முழுமையும் அமைந்திருக்கிறதென்று யாவரும் விசேஷித்துச் சொல்லத்தக்க பேரழகையும், நிகரில்லாத பராக்கிரமத்தையும், மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் கருதி இரக்ஷிக்கின்ற ஜீவகாருண்ணியத்தையும், நிழலைச் செய்கின்ற ஜயம்பொருந்திய பிரகாசமான சுவேதச் சத்திரத்தையும், பலம் பொருந்திய அளவற்ற ஆயுதங்களையும், எவ்விடங்களிலும் நிலைபெற்ற உண்மையான கீர்த்தியையும், குற்ற நீங்கக் கோபிக்கின்ற பரிசுத்தத்தையு முடையவன். எ-று. (௩௪)

நற்பரி மேதமாதி நவில்பல மகங்கள் செய்தோன்,
பற்பல விரத மெல்லாம் பரிந்தியற் றியமெய்ச் சீலன்,
கற்பமை மனைவி யோடுங் கவின்மகப் பேற்றினோடுஞ்,
சொற்படு பல போகங்க டுய்த்துவாழ்ந் திருக்கு நாளில்.

இ-ரை.—அசுவமேத முதலாகச் சொல்லப்பட்ட பல யாகங்களைச் செய்து முடித்தவனும், அனேக விரதங்களை யெல்லாம் அன்போடு செய்து நிறைவேற்றிய சத்திய குணத்தை யுடையவனும், இப்படிப்பட்ட குண விசேஷங்களையுடையவனும் ஆகிய சுவிரத மகாராஜா வானவன் பதிவிரதா தருமத்தை யுடைய மனைவியோடும், அழகிய புத்திரர்களோடும், சொல்லப்பட்ட பல போக போக்கியங்களை யனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்குங் காலத்தில், எ-று. (௩௫)

வலந்தரு பூதி யக்க மாலிகை வயங்கு மெய்யன்,
இலங்குசெஞ் சடையன் றெய்வ வெழின்மறை பழுத்த நாவன்,
அலங்குமைம் புலனேச் செற்றே னேந்தெழுத் தெணுமு ளத்தன்,
துலங்குமெய் யருந்த வத்துச் சுமந்துமா முனிவன் வந்தான்.

இ—ரை.—உண்மை ஞானமாகிய வெற்றியைத் தரத்தக்க விபூதியும், உருத்திராக்ஷ மாலிகையும், விளங்குகின்ற திருமேனியை யுடையவரும், பிரகாசிக்கின்ற சிவந்த ஜடைகளை யுடையவரும், தெய்வத் தன்மை பொருந்திய அழகிய வேதங்களை இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டிருக்கிற நாவை யுடையவரும், சஞ்சல குணத்தை யுடைய பஞ்சேந்திரியங்களையும் ஜெயித்தவரும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சதா தியானிக்கின்ற உள்ளத்தை யுடையவருமாகி விளங்கா நின்ற உண்மையான அரிய தவத்தை யுடைய சுமந்து என்னும் பெயரை யுடைய ஒரு மகா ரிஷி யானவர் அந்தச் சுவிரத மகாராஜாவினிடத்தில் வந்தார். எ—று. (௩௬)

வந்தமா முனிவன் றன்னை மன்னர்கோ னெதிர்சென் றேத்தி,
அந்தமின் முகமன் கூறி யருக்கிய முதல நல்கிச்,
சுந்தர மணிப்பீ டத்திற் றுலங்குற விருத்தி யன்பின்,
வந்தனை முறையிற் செய்து மகிழ்ந்திருந் தினைய சொல்வான்.

இ—ரை.—இவ்விதமாக வந்த சுமந்து மகா முனிவரரைச், சுவிரத மகாராஜா வானவன் எதிர்கொண்டு சென்று ஸ்தோத்திரஞ் செய்து, அனேக உபசார வார்த்தைகளுஞ் சொல்லி யழைத்து வந்து, அழகிய இரத்தின தனத்தி லிருக்கச்செய்து அர்க்கியம், பாத்தியம், ஆசமனியம் முதலானவைகளுங் கொடுத்துப் பின்பு அன்போடு சாஷ்டாங்க பூர்வமாக நமஸ்காரஞ் செய்து, அம்முனிவர் இருக்கச் சொன்ன பின் சந்தோஷமாக விருந்து அம்முனிவரைப் பார்த்து இவைகளைச் சொல்லத்தொடங்கினன். எ—று. (௩௭)

புனிதநின் னருளாற் றொல்லைப் பொருகடற் புவனமெல்லாம்,
இனிதினென் குடைநி ழற்றி யிகல்கடந் தளியி னேம்பி,
நனியரு மகங்க ளாதி நல்லறம் பலவுஞ் செய்து,
தனிவிர தங்க ளாற்றித் தவலரும் போகந் துய்த்தேன்.

இ—ரை.—ஓ பரிசுத்தமாகிய முனி சிரேஷ்டரே! தங்களுடைய கிருபையினல் நான், கரையோடு பொருதுகின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற பழமையாகிய உலகமெல்லாம் யாதொரு துன்ப மில்லாமல் வாழும்படி, என்னுடைய அழகிய ஒரு குடை நிழலிலே யிருந்து, அன்போடு பாதுகாத்து, சத்துருக்களை யெல்லாம் ஜெயித்து, மிகவுஞ் செய்தற்கரிய யாக முதலாகிய நல்ல பலதருமங்களையும் செய்து, ஒப்பற்ற விரதங்களையு நிறைவேற்றி, நீங்காத போகங்களையும், இதுவரையில் அனுபவித்தேன். எ—று. (௩௮)

துய்த்திடு மின்பே மீட்டுந் துய்ப்பதை யல்லா லொன்றும்,
வித்தக முனிவ காணேன் வெம்பவக் கடலை நீந்தி,
நித்திய நிமல ஞான நிகரறு பரமா னந்த,
முத்தியாம் பெரும்பே றெய்து முறையருள் புரிவா யென்றான்.

இ-ரை.—அப்படி யனுபவிப்பதில், முதனுள் அனுபவித்த வின்பத்தையே மறு நாளும் அனுபவிப்பதல்லாமல், புதிதாக ஓரின்பமும் அனுபவிக்கக் காண்கிலேன்; ஆதலால், இன்னமும் ஜனனத்துக் கேதுவாகிய அநித்திய போகத்தை யனுபவிக்க இஷ்டமில்லே, ஓ ஞான சொரூபராகிய முனிவரே! இந்த வெவ்விய ஜனனமாகிய சமுத்திரத்தைக் கடந்து பரிசுத்த மெய்ஞ்ஞானத்திறை கிடைக்கத்தக்க நித்தியமாயுள்ள ஒப்பற்ற பேரின்ப வாழ்வாகிய பெரிய மோக்ஷலாபத்தை யடையும்படி, அனுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான் சுவிரத மகாராஜன். எ-று. (ஙகூ)

என்றசொன் முனிவன் கேளா வினிதக மகிழ்ந்து வேந்தே,
நன்றுனா செய்தாய் பாந்த ணகுமணி முடிக் கிடந்த,
பொன்றிக ழுலகி னீமற் றதுபெறப் புகல்வாங் கேட்டி,
துன்றுபல் வளங்க ளோங்கித் துலங்குநை மிசவ னத்தில்.

இ-ரை.—இந்தப் பிரகாரம் பிரார்த்தித்த சுவிரத மகாராஜாவின் வார்த்தைகளைச் சமத்து மகா முனிவர் கேட்டு, மிக மன மகிழ்ச்சி யடைந்து சொல்லுகிறூர்; ஓ சுவிரத மகாராஜாவே, நல்ல காரியத்தைக் கேட்டுக் கொண்டீர், ஆதிசேஷனுடைய பிரகாசிக்கின்ற ரத்தினங்கள் பொருந்திய பணமுடியிற் கிடந்த அழகு விளங்குகின்ற இவ்வுலகத்தில் நீர் கருதிய மோக்ஷ லாபத்தைப் பெறுதற்கு ஒருபாயஞ் சொல்லுகிறேங் கேளும்; அஃதென்னையெனில், நெருங்கிய பல வளங்கள் மிகுந்து விளங்காநின்ற நைமிச வனமென் றொரு வனமுண்டு அவ்வனத்தில், எ-று. (சய)

[இதுமுதல் மூன்று பாட்டுங் குளகம்.]

இலங்கொரு பொருளை யுன்னி யிருவினை வேரறுத்து,
மலங்களோர் மூன்று மாய்த்து மனமுறைற் கரண மொன்றிக்,
கலங்குமைம் புலனை வென்று காமமுன் னறுந் தீர்ந்திட்,
டலங்கெழு பவமு ருக்கி யட்டயோ கமுநன் காற்றி.

இ-ரை.—விளங்காநின்ற ஒப்பற்ற மோக்ஷப் பொருளைக் கருதி, நல்வினை, தீவினை யென்னும் இரு வினையையும் வேரறக் களைந்தும்; ஆணவம், மாயை, காமிய மென்னு மூவகை மலங்களையும் ஒழித்தும்; மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்கின்ற அந்தக் கரண நான்கையும், ஒரு வழிப்படுத்தியும்; மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கியும்; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைக் குற்றங்களையும் போக்கியும் வருத்துகின்ற தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழு பிறப்பையும் ஒழித்தும்; இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு விதமான அங்கங்களையுடைய யோகங்களையும் நன்றாகச் செய்தும், எ-று. (சக)

எழுதரு மறைக ளோது மிணையின்மெய்ஞ் ஞான மெய்தி,
அழிவரும் பரமா னந்த வாழ்வடைந் தவிருந் தூயோன்,
பழுதுறு வறமுன் னன்கும் பக்குவர்க் கருளு மேலோன்,
மொழிதரும் புகழ்க்கா ளத்தி முனிவர னெனும்பேர் வாய்ந்தோன்.

இ-ரை.—எழுதுவதற் கரிதாகிய வேதங்களின் முடிவிற் சொல்லுகின்ற ஒப்பில்லாத மெய்ஞ் ஞானத்தை யடைந்து, அழிவில்லாத பேரானந்த வாழ்வு பெற்று விளங்காநின்ற பரிசுத்த முள்ளவரும், குற்ற மில்லாத தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்னு நான்கு புருஷார்த்தத்தையும், தன்னை யடைந்தவர்களுக்குப் பக்குவ நோக்கிக் கொடுத் தருளுகின்ற மேன்மை பொருந்தியவருமாகிய யாவரும் புகழ்கின்ற கீர்த்திபெற்ற காளத்தி முனிவரென்னும் பெயரையுடைய ஓர் மகாரிஷி யிருக்கின்றார். எ-று. (சுஉ)

அத்தவப் பெரியோன் றன்பா லடைந்துப தேசம் பெற்றால்.
நித்தியா னந்த வாழ்வை நீபெற லாகு மென்னச்,
சித்தமா சகன்ற ளுசி செய்துமன் விடைபெற் றேகத்,
தத்துவ ஞானப் பேற்றைத் தான்பெற விரும்பும் வேந்தன்.

இ-ரை·— அப்படிப்பட்ட தவத்தையுடைய காளத்தி மகாரிஷியிடத்தில் நீர் போய் ஞானுப தேசம் பெறுவீராகில், நித்தியானந்த வாழ்வாகிய மோக்ஷ லாபத்தை யடையக் கடவீரென்று சொல்லி, களங்க மில்லாத மனதை யுடைய சுமந்து முனிவர் சுவிரத மகா ராஜாவினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு, தன்னுடைய ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்; அப்பால், தத்துவ ஞானத்தால் கிடைக்கத்தக்க மோக்ஷ லாபத்தை யடைய விரும்பிய சுவிரத மகா ராஜாவானவன். எ-று. (சுஙு)

[இதுமுத லைந்துபாட்டுங் குளகம்·]

உத்தரா யணநன் மாதத் தோங்குபூ ருவபக் கஞ்சேர்,
சித்திவா சரம்பொ ருந்து தினத்திலெட் டாகுந் தானஞ்,
சுத்தமா மிலக்கி னத்திற் றூயநற் றரும னென்னும்,
புத்திரற் குரிய தன்பொற் புனைமுடி சூட்டற் கெண்ணி.

இ-ரை·—உத்தராயணத்தில் நல்ல மாசத்தில் சிரேஷ்டமாகிய பூருவ பக்ஷமும், காரிய சித்தியைத் தரத்தக்க வாரமும், பொருத்த முள்ள நக்ஷத்திரமுங் கூடிய தினத்தில், எட்டா மிடஞ் சுத்தமாகிய சுப லக்கினத்தில் பரிசுத்தமாகிய நற்குணம் பொருந்திய தரும ராஜனென்னும் பெயரையுடைய தனது குமாரனுக்குப் புனைதற்குரிய அழகிய முடிசூட்டி இராச்சிய பட்டாபிஷேகஞ் செய்விக்க நினைத்து, எ-று· (சுச)

பொற்றசும் பினிற்கொ ணர்ந்த புண்ணிய நதிநீ ராட்டி,
யுற்றபொற் றூனை சூட்டி யொளிகிளர் மணிச்செம் பொற்பூண்,
சொற்றபற் பலவும் வேய்ந்து சுடர்மணி மண்ட பத்தில்,
வெற்றிசே ரரிய ணைக்கீழ் விளங்குற வினி திருத்தி.

இ-ரை.—பொன்னுலாகிய குடங்களிலே கொண்டு வந்த புண்ணிய நதிகளின் தீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்வித்து,பொருந்திய பீதாம்பரங்களை யுடுத்தி,ஒளி விளங்காநின்ற இரத்தினங்கள் பதித்துப் பசும் பொன்னிற் செய்த பல வகையாகச் சொல்லப்பட்ட ஆபரணங்களினால் அலங்கரித்து, பிரகாசஞ் செய்கின்ற ரத்தின மண்டபத்தில் இடப்பட்ட வெற்றி பொருந்திய சிங்காதனத்தின் மீது விளங்கும்படி நன்றாக விருக்கச் செய்து, எ-று. (சுரு)

அருமறை முழக்க மோங்க வாசிகள் முனிவர் கூற,
மருவுபல் லிய முழங்க மங்கல விசைகள் பாடப்,
பெருகுமன் னவர்கள் போற்றப் பிறங்குசா மரையி ரட்டத்,
தருமதே வதை களிக்கத் தரிசித்தோர் மகிழ்ந்து வாழ்த்த.

இ—ரை.—அரிய வேதகோஷ்டங்க ளதிகரித்து முழங்கவும், மகாரிஷிக ளாசீர்வதிக்கவும், பொருந்திய பல வாத்தியங்கள் சப்திக்கவும், மாதர்க ளிசையோடு மங்களம் பாடவும், மிகுந்த அரசர்கள் துதிக்கவும், இரண்டு பக்கங்களிலும் விளங்கா நின்ற சாமரைகள் வீசவும், தரும தேவதை களிப்படையவும், பார்த்தவர்க ளெல்லாங் குதுகலித்து வாழ்த்தவும், எ—று. (சசா)

கலைபயில் மறையோ ராதி கவிஞர்கள் பலருங் கொள்ள,
நிலவுபன் னிதிவ ழங்கி நெளிதிரைக் கடலந் தானை,
மலர்தலை யுலக மெல்லா மனுமுறை வழாது காக்க,
இலகொளி மகுடஞ் சூட்டி யின்புறச் செய்தான் மன்னோ.

இ—ரை.—வேத பாராயணஞ் செய்கின்ற பிராமணர் முதலிய பல வித்துவான்களும் பெறும்படி விளங்காநின்ற பலவாகிய சுவர்ணங்களையுங் கொடுத்து, வளைந்த அலைகளை யுடைய கடல்போன்ற சேனைகளையும், விசாலமான இடத்தை யுடைய உலகத்தையும், மனுநீதி தவறாமல் பரிபாலனஞ் செய்யும்படி விளங்காநின்ற ஒளியை யுடைய கிரீடத்தை அணிந்து யாவரு மகிழும்படி சுவிரத மகாராஜன் செய்தான், எ—று. [மன்னோ. அசை.] (சஎ)

மைந்தனை யவணி ருத்தி மகிழ்ந்தில்வாழ்க் கையைத் துறந்து,
நந்திலைம் பொறிய டக்கி நான்குசா தனமு மோர்ந்து,
வந்துறுந் தாப மூன்றால் வருந்துவெம் பவங்க டீர்ப்பான்,
கந்துறு வன்பி னோடு காதலு மோங்கச் சென்றான்.

இ—ரை.—பின்பு அந்தச் சுவிரத மகாராஜா வானவன் தனது குமாரனாகிய தரும ராஜனை அவ்விடத்திலிருந்து அரசாட்சி செய்யும்படி வைத்துவிட்டு, சந்தோஷத்துடனே யில்வாழ்க்கையை விட்டு நீங்கிக் கெடாத பஞ்சேந்திரியங்களை யடக்கி, சாதன சதுட்டயமும், நன்றாக அறிந்து பெற்றுத் தாபத்திரையங்களால் வந்து பொருந்துகின்ற கொடிய ஜனனத் துன்பத்தை ஒழிக்கும்படியாக முற்பட்ட அன்பும், ஆசையும், மேன்மேலும் அதிகரிக்க நகரத்தை விட்டுப் புறப்பட்டான், எ—று. (சஅ)

சாதனசதுட்டயமாவன: இது நித்தியம், இது அநித்திய மென்றறிதல்; (க) இகத்திலும், பரத்திலும் அனுபவிக்கத்தக்க இன்பத்தில் ஆசையொழித்தல், (உ) சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை யென்னும் அறுவகைச் சம்பத்தை யடைதல், (ங) மோக்ஷத்தில் இச்சை வைத்தல், (ச) தாபத்திரயமாவன தன்னால் வருவனவும், பஞ்சபூதங்களால் வருவனவும், தெய்வத்தால் வருவனவு மாகிய துன்பங்கள். இவற்றை முறையே ஆதியான் மிகம், ஆதிபௌதிகம், ஆதி தெய்விக மென்பர்.

அருமறை பயில்வோ ரார்ப்பு மாகமம் புகல்வோ ரார்ப்பும்,
பெருமகம் புரிவோ ரார்ப்பும் பெட்புட னவியூ ணேற்றுப்,
பருகுவிண் ணவர்க ளார்ப்பும் பளகில்பல் லியத்தி ஞர்ப்பும்,
மருவிய காசி நண்ணி வளர்விசு வேசற் போற்றி.

இ-ரை.—அருமையாகிய வேத பாராயணஞ் செய்கின்ற பிராமணர்களுடைய முழக்கமும், ஆகமங்களை வாசிப்பவர்களுடைய முழக்கமும், பெருமை தங்கிய அசுவமேத முதலாகிய யாகஞ் செய்கின்றவர்கள் முழக்கமும், அந்த யாகத்தில் கொடுக்கப் படுகிற அவிர்பாகத்தை விருப்பத்துடனே வாங்கி யுண்கின்ற தேவர்களுடைய முழக்கமும், குற்றமில்லாத பல வாத்தியங்களின் முழக்கமும், பொருந்திய காசி யென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வந்து, அங்குள்ள கிருபை வளர்கின்ற ஸ்ரீ விஸ்வேஸ்வரரை விதிமுறையாக வந்தனை வழிபாடுகள் செய்து, எ-று. (சகூ)

[இது முதலிரண்டு பாட்டுங் குளகம்.]

நலிவுறு பதகம் போக்கி நதிகளுக் கரசாய் நாளும்,
பொலிதரு மறைக ளேத்தும் புண்ணிய நதியாய் மன்னிப்,
பலமணித் திரள்கள் வீசிப் பாய்திரை சுருட்டுந் தெண்ணீர்,
நலமலி கங்கா தீர நைமிசா ரணிய முற்ருன்.

இ-ரை.—தன்னிடத்து வந்து ஸ்நானஞ் செய்பவர்களுக்கு வருத்துகின்ற பாதகங்களை நிவர்த்தி செய்து, நதிகளுக் கெல்லாந் தலைமையாயும், எந்நாளும் விளங்குகின்ற வேதங்களால் துதிக்கத்தக்க புண்ணிய நதியாயும், நிலை பெற்றிருக்கின்ற பலவித மணிக் குவியலை யெடுத் தெறிந்து பாய்கின்ற அலைகளைச் சுருட்டுந் தெளிந்த நீரை யுடைய நன்மை மிகுந்த கங்காநதியின் கரையிலுள்ள நைமிசாரணியத்தை யடைந்தான் சுவிரத ராஜன், எ-று. (ருய)

அருந்தவம் வடிவு பூண்ட தாமெனத் திகழு மெய்யர்,
பொருந்துநீர்க் கரகந் தண்டு பொலிசெழுங் கமலக் கையர்,
வரந்திகழ் புரிமுந் நூலர் வற்கலை யினர்மான் ருேலர்,
திருந்துவார் சடையர் மும்மைச் செந்தழ லோம்பு சீலர்,

இ-ரை.—அந்த நைமிசாரணியத்தில், செய்தற்கரிய தவமே ஒரு வடிவ மெடுத்ததென்று சொல்லும்படி விளங்காநின்ற சரீரத்தை யுடையவர்களும், நீர் நிறைந்த கமண்டலமும், தண்டமும் விளங்கிய செங்கமலம் போன்ற கைகளை யுடையவர்களும் சிரேஷ்டமாகிய மூன்று புரியாலமைந்த எக்ஞோப வீதத்தை யுடையவர்களும், மரவுரியை யுடையவர்களும், கிருஷ்ணசனத்தை யுடையவர்களும், திருத்தமாகிய நீண்ட சடா பாரத்தை யுடையவர்களும், ஆகவனீயம், தக்ஷணக்கினியம், காருகபத்தியம் என்னு மூன்றக்கினிகளையும், வளர்க்கின்ற சீலத்தை யுடையவர்களும், எ-று. (ருக)

ஒலிகட லுலகம் போற்று முவணகே தனன் முன்ஞய,
புலவரைக் காத்த பெம்மான் பொன்னடிக் கன்பு பூண்டோர்,
இலையுதிர் சருகு பைங்கா யின்கனி கந்த மூலம்,
அலைபுனல் வாயு வாதி யுயின்றிடும் வாய்மை யாளர்.

இ-ரை.—சத்திக்கின்ற கடல் சூழ்ந்த உலகமெல்லாந் துதிக்கும் கருடக்கொடியை யுடைய விஷ்ணு முதலாகிய சமஸ்த தேவர்களையும், பாது காத்தருளிய ஸ்ரீ விஸ்வேஸ்வரனுடைய அழகிய திருவடிக்கு அன்புடையவர்களும், பச்சிலை உதிர்ந்த சருகு, பசிய காய்கள், இனிய கனிகள், கிழங்குகள், வேர்கள், அசைகின்ற நீர், காற்று இவை முதலானவற்றை ஆகாரமாகப் புசித்துக்கொண்டு தவஞ் செய்கின்ற உண்மை யுடையவர்களும், எ-று. (௫௨)

மறைமுதற் கலைக ளோர்ந்தோர் மந்திர மனைத்துந் தேர்ந்தோர்,
பொறிகளைத் தடுத்து யர்ந்தோர் பூதிகண் டிகைவ ணைந்தோர்,
அறையுமும் மலத்து ஈற்றே ஈழிவரு ஞானம் பெற்றோர்,
உறுமய லொழிந்தோர் பற்ப லுயிர்மாட்டு மன்பு வாய்ந்தோர்.

இ-ரை.—வேத முதலாகிய கலை ஞானங்களைக் கற்றுணர்ந்தோர்களும், மந்திர சாஸ்திரங்க ளெல்லாந் தெரிந்தவர்களும், பஞ்சேந்திரியங்களை வென்று மேன்மை பெற்றவர்களும், விபூதி ருத்திராக்ஷ மாலிகை தரித்தவர்களும் சொல்லப்பட்ட மூன்று மலங்களை வேரறக் களைந்து நீக்கினவர்களும், அழிவில்லாத பிரம ஞானம் பெற்றவர்களும், ஒன்றை மற்றொன்றாகப் பார்க்கின்ற மயக்க மொழிந்து எல்லாவற்றையும் வஸ்து மயமாகப் பார்க்கின்றவர்களும், சர்வ ஜீவகாருண்ணிய முடையவர்களும், எ-று. (௫௩)

கவலிரு வினைது றந்தோர் காலமூன் றையு முணர்ந்தோர்,
பவவினை வேர றுத்தோர் பவஞ்சவாழ் வினைவெ றுத்தோர்,
தவலறும் புகழ்பெற் றுள்ளோர் தண்பெருங் கருணை யாளர்,
நவிலரும் பேரின் பெய்தி நற்றவம் புரியு நீரார்.

இ-ரை.—வருத்துகின்ற நல்வினை தீவினை யென்னும் இருவினைகளை நீங்கினவர்களும், சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலமென்னு மூன்று காலங்களையும் அறிந்தவர்களும், ஜனனத்துக் கேதுவான சஞ்சித வினையை வேரறக் கெடுத்தவர்களும், உலக வாழ்க்கையை அனித்தியமென்று தள்ளினவர்களும், தவத்தினால் கெடாத கீர்த்தி பெற்றவர்களும், குளிர்ந்த பெருங்கருணையே குணமாகக் கொண்டவர்களும், சொல்லுதற்கரிய பேரானந்தத்தை யடைந்து மேலான தவமே செய்து கொண்டிருக்குந் தன்மை யுடையவர்களுமாகிய, எ-று. (௫௪)

காசிபன் பரத்து வாசன் கவுதமன் மார்க்கண் டேயன்,
கோசிகன் வசிட்டன் கண்டு குச்சகன் சுகனே ரண்டன்,
மாசிலத் திரிபி ருகி மகாக்கிரீ பன்ற தீசி,
தேசுறு சனற் குமாரன் றிகழ்பரா சரன் வியாதன்.

இ-ரை.—காசிப முனிவர், பரத்துவாச முனிவர், கவுதம முனிவர், மார்க்கண்டேய முனிவர், விசுவாமித்திர முனிவர், வசிஷ்ட முனிவர், கண்டு முனிவர், குச்சக முனிவர், சுகப்பிரமரிஷி, ஏரண்ட முனிவர், குற்றமில்லாத அத்திரி முனிவர், பிருகி முனிவர், மகாக்கிரீப முனிவர், ததீசி முனிவர், கீர்த்தி பெற்ற சனற்குமார முனிவர், விளங்குகின்ற பராசர முனிவர், வியாச முனிவர், எ-று. (௫௫)

புலத்தியன் கலைச்சி ருங்கன் புலகன்முற் கலன்சி லாதன்,
சலத்துரு வாசன் சத்தி சவுனகன் றிரண விந்து,
வலத்தகண் ணுவன்சு னன்ச மதக்கினி பிருங்கி கற்கி,
நலத்தவங் கிரசன் சம்பு நாரதன் பிருகு பற்பன்,

இ—ரை.—புலஸ்திய முனிவர், கலைக்கோட்டு முனிவர், புலக முனிவர், முற்கல முனிவர், சிலாத முனிவர், கோபம் பொருந்திய துருவாச முனிவர், சத்தி முனிவர், சவுனக முனிவர், திரணவிந்து முனிவர், தபோபல முள்ள கண்ணுவ முனிவர், சுன முனிவர், சமதக்கினி முனிவர், பிருங்கி முனிவர், கற்கி முனிவர் நன்மை பொருந்திய ஆங்கிரச முனிவர், நாரத முனிவர், பிருகு முனிவர், பத்ம முனிவர், எ—று. (ருசு)

உரையுரோ மசன்ச னுத னுபமனி யன்ச னந்தன்,
தரைபுகழ் சனகன் சங்கன் சரபங்க னசிதன் விந்து,
புரையறு பருப்ப தன்பப் புருவசு கூசு மாண்டன்,
கரைதரு சுதீக்க ணன்பார்க் கவன்சவு பரிமா தேசன்.

இ—ரை.—சொல்லுகின்ற ரோமச முனிவர், சனுத முனிவர், உபமன்னிய முனிவர், சனந்த முனிவர், உலகம் புகழப் பெற்ற சனக முனிவர், சங்க முனிவர், சரபங்க முனிவர், அசித முனிவர், விந்து முனிவர், குற்ற மற்ற பருவத முனிவர், பப்புரு முனிவர், வசுமுனிவர், கூஷ்மாண்ட முனிவர், யாவரும் புகழப்பட்ட சுதீக்கண முனிவர், பார்க்கவ முனிவர், சவுபரி முனிவர், மாதேச முனிவர், எ—று. (ருஎ)

சங்கமன் சுவேத வாகு சடாரு ருணிவி ருத்தன்,
பங்கமில் கருணன் பக்கன் பாரகன் பதும நாபன்,
கங்கணன் செயனுத் தால கன்விசா லாக்கன் காலன்,
துங்கவிட் டுணுகல் லாரன் றுவிபாத னேக பாதன்.

இ—ரை.—சங்கம முனிவர், சுவேதவாகு முனிவர், சடர முனிவர், ஆருணி முனிவர், விருத்த முனிவர், குற்ற மில்லாத கருண முனிவர், பக்ஷ முனிவர், பாரக முனிவர், பத்மநாப முனிவர், கங்கண முனிவர், ஜய முனிவர், உத்தாலக முனிவர், விசாலாக்ஷ முனிவர், கால முனிவர், உயர்வாகிய விஷ்ணு முனிவர், கல்லார முனிவர், துவிபாத முனிவர், ஏகபாத முனிவர், எ—று. (ருஅ)

அரிதகன் வாம தேவ னட்டவக் கிரன்மா தேவன்,
கிரிசரன் றூம பானன் கிருதன்மாண் டவியன் வச்சன்,
விரிபுக ழரபத் தன்சீர் விபண்டகன் சுனகன் சாதன்,
பரிவுறு சுதன்மன் காணன் பகவன்பா ணினிபு சுண்டன்.

இ—ரை.—அரிதக முனிவர், வாமதேவ முனிவர், அஷ்டகோண மகாரிஷி, மாதேவ முனிவர், கிரசர முனிவர், தூமபான முனிவர், கிருத முனிவர், மாண்டவிய முனிவர், வச்ச முனிவர், மிகுந்த கீர்த்தி யுடைய அரபத்த முனிவர், சிறப்புள்ள விபண்டக முனிவர், சுனக முனிவர், சாத முனிவர், அன்புள்ள சுதர்ம முனிவர், காண முனிவர், பகவ முனிவர், பாணினி முனிவர், புசுண்ட முனிவர், எ—று. (ருகூ)

துதிசதா னந்த ஞேகைச் சுனப்புச்சன் குசுரு மாணி,
அதிபுக முறுசாண் டில்லி யன்சருச் சரன்சா பாலி,
இதமுறு திரண தூமாக் கினியிரைப் பியன்ம தங்கன்,
சிதனக மருட ணன்சந் திரசூட ஞபத் தம்பன்.

இ–ரை.—துதிக்கப் பெற்ற சதானந்த முனிவர், சந்தோஷத்தை யுடைய சுனப்புச்ச முனிவர், குசுரு முனிவர், மாணி முனிவர், மிக்க கீர்த்தியுள்ள சாண்டில்லிய முனிவர், சர்ச்சர முனிவர், ஜாபால முனிவர், நன்மையுள்ள திரண தூமாக்கினி முனிவர், இரைப்பிய முனிவர், மதங்க முனிவர், சிதமுனிவர், அகமருஷண முனிவர் சந்திர சூட முனிவர், ஆபஸ்தம்ப முனிவர், எ–று. (௬௰)

காலவன் றிருத ஞசு விலாயனன் கார்த்தி யாயன்,
ஞாலமேத் துறுபோ தாய னன்சுனச் சேபன் மிக்க,
கோலவி லகிதன் சாந்தன் கோதிறே வலன்முன் ஞய,
சீலமா முனிவ ரோடு சீடர்கள் பலருஞ் சூழ.

இ–ரை.—காலவ மகா முனிவர், திருத முனிவர், ஆஸ்விலாயன முனிவர், கார்த்தியாயன முனிவர், உலகந் துதிக்கின்ற போதாயன முனிவர், சுனச்சேப முனிவர், மிகுந்த அழகிய லகித முனிவர், சாந்த முனிவர், குற்ற மற்ற தேவல முனிவர், முதலாகிய ஒழுக்க மிகுந்த மஹா ரிஷி கணங்களுடனே தன்னுடைய பல சீஷர்களுஞ் சூழ்ந்திருக்க, எ–று. (௬௧)

விரிந்தபே ரழகு வாய்ந்து விளங்குமண் டபத்தில் வேங்கை,
யிருந்தகை யதனின் மீதி லிருந்தருள் புரிகா ளத்தி,
அருந்தவ முனியைக் கண்டா னகமகிழ் கூர்ந்தட் டாங்கம்,
பொருந்தவீழ்ந் தெழுந்து நின்று போற்றுபு புகல லுற்றுன்.

இ–ரை.—மேற் சொல்லிய நைமிசாரணியத்தில், விசாலமாகிய பேரழகு பொருந்தி விளங்காநின்ற ஓர் மண்டபத்தில், பெருந்தன்மையுள்ள வியாக்கிராசனத்தில் எழுந்தருளியிருந்து, அனுக்கிரகஞ் செய்கின்ற அருமையான தவத்தை யுடைய காளஸ்தி மகா முனிவரை அந்தச் சுவிரத மகாராஜா வானவன் வந்து, தரிசித்து, மன மகிழ்ச்சி யடைந்து, சிரசு, மார்பு, இரண்டு கை, இரண்டு புஜம், இரண்டு செவி ஆகிய இவ்வெட்டுறுப்பும் பூமியிற் பொருந்த விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று துதி செய்து, சொல்லத் தொடங்கினன். எ–று. (௬௨)

கொச்சகக் கலிப்பா

ஆற்றன்மிகு தேசிகனே யகிலசரா சரமனைத்தும்,
தோற்றிநிதல் சுபாவிகமோ சொற்கருமந் தன்னலோ,
மாற்றருகா லத்தாலோ மருவுறுமா யையினலோ,
போற்றுகருத் தாவாலோ புகறியென முனிபுகல்வான்.

இ-ரை.—மிகுந்த தவ வலிமையை யுடைய ஞானசாரியரே! உலகத்தில் விளங்காநின்ற சராசர வுயிர்க ளெல்லாம் உண்டாகின்றது இயற்கையோ, உண்மை நூல்களிற் சொல்லா நின்ற கருமசேஷச் செயற்கையோ, நீக்குதற்கரிய கால பரிபாகத்தினலோ, பொருந்திய மாயையின் வல்லபத்தினலோ, யாவருந் துதிக்கின்ற கடவுளாலோ, திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று சுவிரத மகாராஜன் கேட்க, காளஸ்தி மகா முனிவர் சொல்லுகின்றார், எ-று. (௬௩)

சுவிரதனே சகத்துயிர்க டோன்றலியற் கையுமன்று,
நவில்கருமந் தன்னலு நற்கால மதனலும்,
தவிர்வறுமா யையினலுந் தனித்தனியா வதுமின்றால்,
புவிபுகழ னாதிமறை புகல்வதுமைப் பாங்கேண்மின்.

இ-ரை.— சுவிரத மகாராஜனே, அகில சராசரங்க ளெல்லாம் உண்டாவது சுபாவிகமும் அல்ல, சொல்லப்பட்ட கருமத்தினலும், நல்ல காலத்தினலும், தவறுதவில்லாத மாயையினலும், தனித்தனியே உண்டாவது மில்லை; உலக மெல்லாம் புகழ்கின்ற அனாதியாயுள்ள வேதத்திற் கூறியபடியே உனக்குச் சொல்லுகின்றேன்' கேட்பாயாகவென்றார் காளஸ்தி மகா முனிவர், எ-று. (௬௪)

மருவியவன் றேயுலகின் மன்னியபல் லுயிர்க்குமுள,
கருமமதின் பரிபாக காலமுணர்ந் துறுமாயை,
துரிசின்முத றனதுசத்தி துணையாகக் கொண்டுபிரான்,
ஒருநிமித்த காரணமா யாக்கிடுவ னுயிர்களெல்லாம்.

இ-ரை.—உலகத்தில் நெருங்கிய பலவாகிய ஆன்மாக்களுக்கும், அனாதியாகப் பொருந்திய கருமத்தின் பரிபாக காலத்தை அறிந்து பொருந்திய மாயையானது, குற்றமில்லாத முதற் காரணமாகவும், தன்னுடைய திருவருட் சத்தி, துணைக்காரணமாகவுங் கொண்டு, விஸ்வேஸ்வரன் ஒப்பற்ற நிமித்த காரணனாகி, உயிர்களை யெல்லா முற்பத்தி செய்வான். எ-று. (௬௫)

என்னமுனி வரனுரைப்ப விதயமகிழ்ந் தாரியனே,
இன்னுயிர்கண் முத்திபுகற் கேதுவையு மடியேற்குந்,
பன்னரிய சுருதிநெறி பகர்ந்தருள்வா யென்றிறைஞ்சும்,
மன்னவன்றன் முகநோக்கி மாமுனிவர் கோனுரைக்கும்.

இ-ரை.—இப்படியென்று காளஸ்தி மகா முனிவர் சொல்லக் கேட்டுச் சுவிரத மகா ராஜன் மன மகிழ்ச்சி யடைந்து, சற்குருவே! இனிதாகிய ஆன்ம கோடிகளெல்லாம், மோக்ஷ மடைதற்குக் காரணத்தையும், சொல்லுதற்கரிய வேதங்களிற் கூறிய படியே அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று வணங்கிய சுவிரத மகா ராஜன் முகத்தைப் பார்த்து, பெருமை பொருந்திய முனிவர்களுக்குத் தலைவராகிய காளஸ்தி முனிவர் சொல்லத் தொடங்கினர். எ-று. (௬௬)

அண்ணியபல் லுயிர்களெலா மரிதியற்று மளவாத,
புண்ணியமே லீட்டதனாற் பொருவறுமா னிடப்பிறப்பை,
நண்ணுபுதத் தம்வருணச் சிரமமெனு நன்னெறிநின்,
றெண்ணுமறை விதிதிறம்பா தினிதொழுகு முறையானே.

இ-ரை.—சுவிரத மகாராஜனே, பொருந்திய பலவாகிய ஆன்ம கோடிகளெல்லாம் அருமையாகச் செய்கின்ற அளவில்லாத புண்ணிய மேலீட்டினாலே, ஒப்பில்லாத மானிடப் பிறவியை யடைந்து, தங்கள் தங்கள் வருணசிரம மென்று சொல்லப்பட்ட நன்மார்க்கத்தி னின்று கருதுகின்ற வேதவிதி வழுவாது நடக்கின்ற முறைமையினாலே, எ-று. (௬எ)

ஒருவருதத் துவஞான முண்டாகு முண்டாமேன்,
மருள்செயஞ்ஞா னஞ்சிதையு மற்றதன்மேற் செறிபாசம்,
இரிதரும்பின் னுயர்முத்தி யெய்துமெனச் சுவிரதனும்,
பரிவின்மகிழ்ந் தாரியனைப் பணிந்தேத்தி யிவைபகர்வான்.

இ-ரை.—நீங்குதற்கரிய உண்மை ஞானந் தோன்றும், அது தோன்றவே மயக்கத்தை விளைவிக்கின்ற அஞ்ஞானமானது கெடும்; அது கெடவே, மேல் அடர்ந் திருக்கின்ற பாசபந்தங்கள் நீங்கும்; அவைகள் நீங்கவே, மேலாகிய மோக்ஷத்தை அடைவார்கள் என்று, காளஸ்தி மகாமுனிவர் திருவாய் மலர்ந்தருளச் சுவிரத மகா ராஜன் விசுவாசத்துடனே கேட்டு மகிழ்ச்சி யடைந்து, தனதாசிரியராகிய அந்தக் காளஸ்தி மகா முனிவரை வணங்கித் துதித்து, மேலுரைப்பவைகளைச் சொல்லத் தொடங்கினான். எ-று. (௬அ)

ஓங்குறுபற் பலவாய வுலகினுக்கு முதல்வனையும்,
பாங்குபெறு மகத்தாதி சிருட்டியையும் பனிவிசும்பில்,
நீங்கரிய தேவராதி தியநிலவு சிருட்டியையும்,
தேங்குபுகழ்ப் பிரபஞ்ச சிருட்டிபுரி பான்மையையும்.

இ-ரை.—உயர்வாகிய பல பலவாய் நிறைந்த எல்லா வுலகங்களுக்குந் தலைவனாயுள்ள முதற்கடவுளுடைய தன்மையையும், ஒழுங்கு பெற்ற மகதத்துவமுதலாகிய தத்துவோற்பத்தியையும், குளிர்ச்சி பொருந்திய சுவர்க்க லோகத்தில் நீங்குத லில்லாத தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவர முதலானவைகளுமாகிய சராசரங்களின் சிருஷ்டிக் கிரமத்தையும், கீர்த்தி பொருந்திய பிரபஞ்சங்களை உற்பத்திசெய்யும் கிரமத்தையும், எ-று. (௬௯)

முன்னுமதி காரமருண் முறைமையையும் காலமதின்,
உன்னுபிர மாணமும்பல் லுயிராயு ணிண்ணயமும்,
மன்னுமறை யவராதி வருணதரு மங்களையும்,
பின்னமறத் திகழுண்மைப் பிரமவமி சத்தினையும்.

இ-ரை.—பலரும் கருதுகின்ற பஞ்ச கர்த்தாக்கள்முதலாகிய யாவருக்கும் முதற்கடவுளாலே கொடுத்தருளிய அதிகாரக் கிரமங்களையும், நினைக்கின்ற காலத்தின் அளவு

களையும், பல ஆன்மகோடிகளின் ஆயுசு நிர்ணயத்தையும், நிலைபெற்ற பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, சங்கர ஜாதிகளின் தருமங்களையும், குற்றமில்லாமல் விளங்காநின்ற உண்மையாகிய பிராமண வமிசத்தையும், எ-று. (எ௰)

கோத்திரா திகளுநலஞ் சூர்பஞ்ச கிருத்தியமும்,
சீர்த்திமிகப் பெருகுறுநித் தியகரும விதியினையும்,
சாத்துபுக ழுறுகருப்பா தானத்தின் முறையினையும்,
பூர்த்திபெற நன்குபுரி புஞ்சுவனக் கிரியையையும்.

இ-ரை.—பிராமணர்களின் கோத்திர சூத்திர பிரவரா சாகைகளின் கிரமங்களையும், உலக விருத்தியின்பொருட்டு அயம் தாரு தாம்பிரம் சிலை சுவர்ணமாதிகளாற் செய்யப்படுகின்ற நன்மை பொருந்திய பஞ்ச கிர்த்திய முறைமையையும் மிகுந்த கீர்த்தி பெருகாநின்ற நித்தியகரும விதி நிஷேதங்களையும் சொல்லுகின்ற புகழ்பெற்ற * கருப்பாதான விதியையும், கருப்பந் தரித்தபின்பு நிறைவு பெறும்பொருட்டு அழகுடனே செய்யத்தக்க † பும்ஸவனக் கிரமத்தையும். எ-று. (எக)

உலகுபுகழ் சீமந்த முயர்சாத கன்மமொடு,
நலமலியு நாமகர ணம்புரியு நியதியையும்,
பொலியுபநிட் கிரமணமும் புகலனப்பி ராசனமும்,
இலகுறச்செய் முறைமையையு மெழிற்சவுள விதியினையும்.

இ-ரை.—உலகில் யாவரும் புகழத்தக்க ‡ சீமந்த விதியையும், மேலாகிய § ஜாதகருமஞ் செய்யும் விதியையும், நன்மை மிகுந்த ‖ நாமகரணஞ் செய்யு முறைமையையும், விளங்காநின்ற ¶ உபநிஷ்கிரமண விதியையும் சொல்லுகின்ற ** அன்னப்பிராசன விதியை விளங்கும்படி செய்கின்ற கிரமத்தையும், அழகிய †† சவுள விதியையும், எ-று. (எஉ)

உரியவுப நயனமுமு வாகரும விதியுமெழு,
தரியபெரும் புகழ்வேத வாரம்ப நெறியினையும்,
விரிபிரம சரியமுநல் விரதசமா வருத்தனமும்,
பெரிதுறுவி வாகத்தின் பேதங்க ளனைத்தினையும்,

---

* கருப்பர்தானம்-கருப்போற்பத்தி யாகும்படி செய்யுங் கிரியை.

† பும்ஸவனம்-ஆண்மகவு பிறக்கு மருந்து பிழியுங்கிரியை.

‡ சீமந்தம், மூன்றிடத்து விளர்ப்புள்ள பன்றி முள்ளினால் தலை மயிரை வகிர்ந்து செய்யுங் கிரியை.

§ ஜாதகருமம், குழந்தை பிறந்த வுடன் செய்யுங் கிரியை.

‖ நாமகரணம், பெயரிடுதற்குச் செய்யுங் கிரியை.

¶ உபநிஷ்கிரமணம், குழந்தையை எடுத்துக்கொண் டாலயத்திற்குச் செல்லுங் கிரியை.

** அன்னப்பிராசனம், அன்ன மூட்டுதற்குச் செய்யுங் கிரியை.

†† சவுளம், மயிர்வினைக்குச் செய்யுங் கிரியை.

இ-ரை.—உரித்தாகிய * உபநயனக் கிரமங்களையும், † உபாகர்ம விதியையும், எழுதற்கரிய பெருமையுங் கீர்த்தியுமுள்ள ‡ வேதாரம்பம் செய்யுங் கிரமத்தையும், விரிவாய்ச் சொல்லுகின்ற § பிரமசரிய ஆச்சிரம விதியையும், பிராஜாபத்தியம், சவுமியம், ஆக்கினேயம், வைஸ்வதேவிகம் என்று சொல்லப்பட்ட வேத விரத || சமாவர்த்தன விதியையும், விரிவு பொருந்திய பிரமம், தெய்வம், ஆரிஷம், பிரஜாபத்தியம் ஆசுரம், காந்தருவம், இராக்ஷசம், பைசாசம் என்று சொல்லப்பட்ட விவாக பேதங்களையும், எ-று. (எ௩)

புகழ்பெறு விவாகத்தின் பொருத்தமும் விவாகமுஞ்சீர்,
திகழுமட வாரொழுக்குஞ் செறிகிரகாச் சிரமமும்பார்,
பகர்தருநல் லொழுக்கமுநற் பஞ்சமகா வெக்கியமும்,
அகமகிழமாவாதி யாயசிராத்தங் களையும்.

இ-ரை.—புகழ்பெற்ற விவாகத்திற்குரிய வதுவரர்களைக் குறித்துப் பார்க்கின்ற தினம், கணம், மாகேந்திரம், ஸ்ரீதீர்க்கம், யோனி, இராசி, இராசியாதிபதி, வசியம், இரச்சு, வேதை என்று சொல்லப்பட்ட பொருத்த விதிகளையும், விவாகஞ் செய்யுங் கிரமங்களையும், சிறந்து விளங்காநின்ற மாத ரொழுக்கங்களையும், நெருங்கிய கிரகஸ்தாச்சிரம விதிகளையும், உலகம் புகழாநின்ற நல்லொழுக்கங்களையும், நல்ல பிரமயக்ஞும், பிதுர்யக்ஞும், தெய்வயக்ஞும், பூதயக்ஞும், மானுஷயக்ஞும் என்னும் பஞ்ச மஹா யக்ஞங்களின் விதியையும், மனமகிழ்ச்சியைத் தருகின்ற அமாவாசை முதலாகச் சொல்லப்பட்ட ¶ ஷண்ணவதி சிராத்தக் கிரமங்களையும், எ-று. (எ௪)

பெற்றிகொள் சிராத்தத்தின் பேதங்க ளையும்வினையை,
வெற்றிசெய் சிராத்ததிர வியங்கள்பல வற்றினையும்,
அற்றமுறு துயர்சிராத் தத்தில்வரிப் போர்தமையும்,
செற்றமறு பார்வணசி ராத்தவிதி யனைத்தினையும்,

இ-ரை.—புயனைக்கொண்டிருக்கிற சுப கன்மங்களிற் செய்யத்தக்க நாந்திமுக சிராத்தங்களையும், அசுப கன்மங்களிற் செய்யத்தக்க சிராத்தங்களையும், பாவத்தைப் போக்காநின்ற சிராத்தத்திற்குரிய பலவாகிய திரவியங்களையும், குற்ற மடையா துயர்ந்த சிராத்தத்தில் நியமிக்கத் தகுந்தவர்களையும், கெடுதியில்லாத வைதீகாக்கினியில் ஓமஞ் செய்து செய்கின்ற பார்வண சிராத்த விதிகளையும், எ-று. (எ௫)

---

* உபநயனம், சகல கருமங்களும் சமிதா தான முதலிய விரதானுஷ்டானங்களுஞ் செய்வதற்கு அதிகாரியாகச் செய்யுங் கிரியை.

† உபாகர்மம், வேதாரம்பஞ் செய்யுங் கிரியை.

‡ வேதாரம்பம், அத்தியயனஞ் செய்ய வாரம்பிக்குங் கிரியை.

§ பிரமசரியம், பிரமசரிய ஆச்சிரம விரதம்.

|| சமாவர்த்தனம், பிரம சரிய விரதத்தை ஒழித்தற்குச் செய்யுங்கிரியை.

¶ ஷண்ணவதி, (அமாவாசை ௰௨, மன்வாதி ௰௪, யுகாதி ௪, சங்கிராந்தி ௰௨, வைதிருதி ௰௩, விதீபாதம் ௰௩, மஹாளயம் ௰௬, அஷ்டகை ௰௨, ஆக) ௯௬.

நயங்கொண்மகா ளயவிதியு நன்குணத்த காதவையும்,
இயங்குபல வாயதிர வியசுத்தி யையுமுலகில்,
வயங்குறுமா சூசமுநல் வானப்பி ரத்தமுஞ்சீர்,
முயங்குசந்நி யாசமுமேன் மொழிகரும பலங்களையும்.

இ-ரை.—பிதுர் வருக்க முதல் ஏழ் வருக்கங்களையுந் தழுவிச் செய்யத்தக்க நன்மை பொருந்திய மஹாளய சிராத்த விதியையும், அழகுடனே சாப்பிடத் தகாத பதார்த்தங்களையும், பலவாகிய திரவியங்களைச் சுத்தி செய்யுங் கிரமங்களையும், உலகத்தில் விளங்குகின்ற ஜனன மரண ஆசுசங்களையும், நல்ல வானப்பிரஸ்த ஆச்சிரம விதியையும், சிறப்புப் பொருந்திய சந்நியாச ஆச்சிரம விதியையும், அதற்கு மேற்சொல்லாநின்ற கரும பலங்களையும், எ-று. (எசு)

விரிந்தகதிர் மணித்துத்தி வெம்பணிச்சூட் டிடைக்கிடந்து,
பரந்தவுல கிடைப்பலவாப் பகருதலா லுண்மைதனை,
நிரந்தரமும் பொலிசுருதி நெறிமுறையே தேறவருள்,
புரிந்துரைக்க வேண்டுமெனப் புகழ்ந்துபினும் புகன்றிடுவான்.

இ-ரை.—கிரணங்களை விரிக்கின்ற இரத்தினங்களையும், படப் பொறிகளையுமுடைய வெவ்விய ஆதிசேடன் முடியிற் கிடந்து விசாலமாய் விளங்காநின்ற உலகத்திலுள்ள நூல்களில் மேற் சொல்லி வந்த விதிகளை யெல்லாம் பலவாறாகச் சொல்லப்படுதலால், அவைகளின் உண்மையை எப்போதும் விளங்காநின்ற சுருதி ஸ்மிருதிகளிற் சொல்லிய கிரமப்படி அடியேன் வரன்முறையாகத் தெரிந்துகொள்ளக் கருணைகூர்ந்து சொல்லவேண்டுமென்று துதிசெய்து, பின்னுஞ் சொல்வான் சுவிரத மகாராஜன் எ-று, (எஎ)

பரமகுரு வேமாறாப் பவப்பெருஞ்சா கரமூழ்கி,
இருவினைக்கல் லோலமதா லெற்றுண்டோர் பற்றுமின்றித்,
தெருமாலுற் றேன்றனக்குன் றிருவருளாம் புணைநல்கி,
ஒருவில்பர முத்தியெனு மொண்கரைசேர்த் தருளென்றான்.

இ-ரை.—என்னுடைய பரமாசாரியரா யெழுந்தருளி யிருக்கின்றவரோ! விடாமல் தொடர்ந்து வருகின்ற ஜனனமாகிய பெரிய சமுத்திரத்தி லழுந்தி, இருவினையாகிய அலைகளால் மோதப்பட்டுக் களைத்து யாதொரு தெப்பமும் அகப்படாமல் மனச் சுழற்சி யடைந்த அடியேனுக்கு உன்னுடைய திருவருளாகிய தெப்பத்தைப் பற்றுக்கோடாகக் கொடுத்தருளி நீங்குதற்கரிய மேலான முத்தியென்னும் அழகிய கரையில் என்னைச் சேரச் செய்தருள வேண்டுமென்றான் சுவிரதமகாராஜன். எ-று. (எஅ)

என்றிருகை முடிக்கூப்பி யிருவிழிநீர் பெருகமுன்னே,
நின்றுடல்கு ழையவென்பு நெகிழவுரு கிடும்வேந்தன்,
ஒன்றுபரு வமுமன்பு மொழுக்கமுநன் கினிதோர்ந்து,
வன்றிறன்மா முனிவர்பிரான் மகிழ்வினொடு கூறலுற்றான்.

இ-ள்.—இந்தப்பிரகாரம் பிரார்த்தித்து, இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு இரண்டு கண்களி லிருந்தும் தாரையாக நீர் பெருகத் தன் சந்நிதானத்தில் நின்று சரீரந் தளர்ந்து எலும்புகளும் கரையும்படி உருகுகின்ற சுவிரத மகாராஜாவினுடைய பொருத்தமாகிய பக்குவத்தையும், உள்ளன்பையும், நல்லொழுக்கத்தையும் நன்றாக அறிந்து, தபோ பலத்தையுடைய பெருமை பொருந்திய முனி சிரேஷ்டராகிய காளஸ்தி முனிவரானவர் சந்தோஷமாகச் சொல்லத் தொடங்கினர். எ-று (எகூ)

புராணவரலாறுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது

காப்புள்படப் பாயிரம் ௩௯.

ஆகத் திருவிருத்தம். ௱௰உ.

இரண்டாவது

உலகிற்கு முதல்வனை யுரைத்தவத்தியாயம்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

புரிசடா டவியும் புண்ணிய நீறும் பொருவில்கண் மணிகளும் பொலிய,
அரியமா மறையின் பொருளுரு வெடுத்தா லனையகா ளத்திமா முனிவன்,
துரிசறு கடவுட் சுருதிசாட்சியமாச் சுவிரத னுளங்களி கூரப்,
பெரிதுல கினுக்கு முதல்வனை யுரைத்த பெற்றியிற் சிறி துரைத்திடுவாம்,

இ-ரை.—கட்டப்படுகின்ற ஜடைக்காடும் புண்ணியத்தைத் தருகின்ற விபூதியும், ஒப்பில்லாத ருத்திராக்ஷ மணிகளும், விளங்கும்படியான திருமேனியோடு அருமையும் பெருமையுமுடைய வேதத்தின் பொருளே ஒரு திருவுருவங் கொண் டெழுந்தருளி யிருந்ததை யொத்த காளஸ்தி மகா முனிவரானவர் குற்ற மற்ற தெய்வத் தன்மை பொருந்திய சுருதி சாக்ஷியமாகச் சுவிரத மகாராஜவின் மனம் மிகவுங் களிப்படையும்படி திருவாய் மலர்ந்தருளிய உலகத்திற்கு முதற் கடவுளின் தன்மையில் சிறிது நம்மா லியன்றமட்டுஞ் சொல்வாம் எ-று. (க)

அன்பினிற் சிறந்த சுவிரத வேந்தே யடைவினீ வினவிய வனைத்தும்,
முன்பயில் பெறுவான் பானிடையுணர்ந்த முருகவேள் சிருட்டியை விரும்பும்,
கொன்பெறு தவக்கா சிபமுனி வாற்குக் கூறினன் கருமஞா னத்தால்,
இன்புறு முறையம் முனிவரன் விழையு மென்றனக் குரைத்தவவ் வாறே.

இ-ரை.—இந்தப்பிரகாரம் பிரார்த்தித்த சுவிரதமாகாராஜவைப் பார்த்துக் கேளும் பேரன்பு பொருந்திய சுவிரத மகாராஜாவே, நீர் இப்போது நம்மிடத்தில் கிரமமாகக் கேட்டுக்கொண்ட எல்லா விஷயங்களையும் இதற்கு முன் வேலாயுதத்தைப் பெறும் பொருட்டுச் சிவபெருமானிடத்தில் கேட்டுணர்ந்த சுப்பிரமணியக் கடவுளானவர் உப சிருஷ்டித் தொழிலை விரும்பிய பெருமை பெற்ற தவத்தினையுடைய காசிப முனிவரனுக்குச் சொல்லக் கேட்டுணர்ந்த அக் காசிப முனிவரானவர் கருமத்தினால் அடையு மின்பத்தைம், ஞானத்தினால் அடையு மின்பத்தையு முறைமையாகத் தெரிந்துகொள்ள விரும்பின எனக் குபதேசித்தபடியே எ-று. (உ)

முறைமையினினிது நீயுணர்ந்திடுவான் மொழிகுவன் சிரத்தையிற் கேளென்,
றறைதிரைக் கடல்சூ ழுலகெலா மகிழ்ந்தின் படைந்திட நன்கருள்புரியும்,
நிறைபெருந் தவக்கா சிபமுனி வான்று ணெறியொடு நனிதியா னித்து,
மறையெலா நன்கு தேர்ந்தகா ளத்தி மாமுனி வரன்வகுத் திடுவான்.

இ-ரை.—நீரும் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி கிரமமாகச் சொல்லிக்கொண்டு வருகின்றோம் பிரியத்துடனே கேட்பாயாகவென்று அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த உலக மெல்லாம் சந்தோஷித்துச் சுகத்தை யனுபவிக்கும்படி நன்றாகக் கிருபை

செய்கின்ற மிகுந்த பெருந் தவத்தையுடைய தன் குருவாகிய காசிப முனிசிரேஷ்டருடைய திருவடிகளை மிகவும் பத்தியோடு மனதில் தியானித்து வேதசாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந் தறிந்த பெருமையுஞ் சிரேஷ்டமும் பொருந்திய காளஸ்தி முனிவரானவர் சுவிரத மகாராஜனுக்குச் சொல்லத் தொடங்கினர் எ-று. (௩)

ஆதியு நடுவு மந்தமு மளவு மருவுரு வங்குணங் குறியும்,
ஓதுமுன் பின்கீழ் மேலொடு பக்க மொப்புயர் வொன்றுமில் லாதாய்க்,
கோதறு மறையா கமங்களுஞ் சமய கோடிக ளுந்தெரி வரிய,
நீதியாய் வாக்கு மனத்தினுக் கரிதாய் நின்றது விச்சுவப் பிரமம்.

இ-ரை.— விச்சுவப் பிரமமானது, முதலும், நடுவும், ஈறும், எல்லையும், சகளமும், நிஷ்களமும், சகள நிஷ்களமும், முக்குணங்களும், அடையாளமும், பழமையும், புதுமையும், கீழும், மேலும், பக்கங்களும், சமானமும், மேன்மையும் ஆகிய இவைகளுளொன்றிலு மடங்குதலில்லாததாய்க் குற்றமற்ற வேதாகமங்களும், எண்ணிறந்த சமயங்களும், தெரிந்துகொள்ளுவதற்குரிய மெய்மையாய் அவாங்மானசகோசரமாகி விளங்காநின்றது. எ-று. (௪)

அருவம், உருவம் என்பவற்ரோடு அருவுருவம் என்றது இரட்டுறமொழிதலாகக் கொள்ளப்பட்டது.

ஆதியு நடுவு மந்தமு மிலாதா யென்றதனால், அனாதி நித்தியத்தையும், அளவிலாதா யென்றதனால், அகண்டத்துவத்தையும், அருவுருவ மில்லாதா யென்றதனால் தனக்கெனவோர் வடிவிலாத் தன்மையும், குணங்குறி யில்லாதா யென்றதனால் நின்மலத்துவத்தையும், முன் பின் கீழ் மேல் பக்கமில்லாதா யென்றதனால் சமட்டி வியாபகத்தையும், ஒப்புயர்வில்லாதா யென்றதனால் சமானரகிதத்தையும் விளக்குகின்றது.

வேதாகமங்கள் வைகரியாதி வாக்கு விகற்பங்கள் பற்றி நிகழ்வதாகலினாலும் முக்கூற்றுப் புறச்சமயங்கள் பசுபாச வறிவால் முன்னொடு பின்மலைவுறத் தம்மின் முரணுதலானும், அவற்றினுக்குத் தெரிவரியதென்றது. ஜீவ போத முன்னிட்டறிதல் கூடாதென்றதனால் மனத்தினுக் கரிதா யென்றது.

கருதரு மகண்ட பூரணமாகிக் காரணங் கற்பனை கடந்த,
பெருவெளி யாகி யறிவினுக் கறிவாய்ப் பிறங்கு பல் லுயிர்களுக்குயிராய்ப்,
பொருவறு பரமா னந்த நித்தியமாய்ப் புகனிரஞ் சனநிரா லம்ப,
நிருமல மாகி யசலமா யொன்றாய் நின்றது விச்சுவப் பிரமம்.

இ-ரை.— விச்சுவப் பிரமமானது நினைத்தற்கரிய அகண்ட பரிபூரண மாகியும், சகல சிருஷ்டிக்கு நிமித்த காரணமாகியும், சுத்தாசுத்த மாயா கற்பனைகளைக் கடந்து பேரறிவாகியும், விளங்கும் ஆன்மாக்களுக்குப் பரவான்மாவாகவாகியும், ஒப்பில்லாத பிர்மானந்த சதோதயமாகியும், உபநிடதங்களாற் சொல்லப்பட்ட களங்க மில்லாததாயும், பற்றுக்கோ டில்லாததாகியும், மலமில்லாததாகியும், சலனமற்றதாகியும், ஒன்றாகியும் விளங்காநின்றது. எ-று. (௫)

வெளியென்றது, அனுமானாதி சாமக்கிரியைகளுட னிகழு மனமிறந்து அங்கொன்றும் கலாதீத வெளியினை.

அறிவினுக் கறிவாயென்றது, ஆன்ம வறிவின்கண் வியஞ்சகமாய் நின்றறிவிக்கும் பேரறிவினை.

தற்பர மாகிச் சுயம்புவாய்ச் சர்வ சாட்சியாய்த் தனிநிரா மயமாய்ச்,
சிற்பர மாகித் தீதற விளங்கு செல்வமாய்ப் பரஞ்சுட ராகி,
யற்புத மாகிச் சச்சிதா னந்த மாகிநிட் களநிரா கார,
நிர்க்குண மாகி மெய்ப்பரம் பொருளாய் நின்றது விச்சுவப் பிரமம்.

இ-ரை.—விச்சுவப் பிரமமானது, பரசிவமாய், தானாகத் தோன்றியதாய், அனைத்தையு மறியுஞ் சுத்த சைதன்னியமாய், ஒப்பற்ற வினை யில்லாததாய், சிற் சொரூபமாய், குற்ற மற்று விளங்கும் பேரின்பமாய், சிதாகாச ரூபமாய், உணர்வினுக்குக் காணப்படாத வதிசயமாய், உண்மை யறிவானந்தமாய், களங்கமின்றி வடிவற்ற குணமில்லாததாய், யதார்த்தமான பரஞானமாக விளங்குகின்றது. எ-று. (சு)

அப்பிர மத்தின் மணியிடை யொளியு மனலிடைத் தழற்சியுஞ் சுடரின்,
வெப்பமும் புனலிற் குளிர்ச்சியு மதியின் மேதகு தட்பமுந் தேனில்,
ஒப்பறு சுவையு மகிழ்வுறு சுவைமிக் கோங்குபா லிடைநறு நெய்யும்,
திப்பிய மலரின் மணமுமே யென்னத் திகழுமோர் நிட்கள சத்தி.

இ-ரை.—இரத்தினக் கல்லினிடத்துப் பிரகாசமும், அக்கினியினிடத்து அனலும், சூரியனிடத்து வெம்மையும், நீரினிடத்துக் குளிர்ச்சியும், சந்திரனிடத்துச் சீதளமும், தேனிடத்து ஒப்பற்ற சுவையும், யாவரு மகிழும்படி அதிக வினிமையினையுடைய பாலினிடத்து நெய்யும், திவ்விய புட்பத்தினிடத்து வாசனையும் போல அப்பிரமத்தினிடத்தில் (தாதான்மியமாக) ஓர் சத்தியானது விளங்கும். எ-று. (எ)

பருப்பதம், காப்பியம் என்றற் றொடக்கத்தனவொப்பத் திவ்விய மென்னும் வடமொழி திப்பியமெனத் தமிழிற் றிரிந்தது.

நிறைபர ஞான வானந்த மயமாய் நிலவொரு சத்தியைந் தொழிற்கும்,
இறைவியா யுலகேத் துறுபரை யாதி யிச்சைஞா னங்கிரி யையுமாய்,
மறைபுகழ் விசுவப் பிரமமெவ் வாறு வயங்கினுந் தானுமவ் வாறாய்,
அறைதரு பற்பல் வகையசத் திகளு மாகியின் புறத்தனி வயங்கும்.

இ-ரை.—நிறைந்த பரஞானமாகிய ஆனந்த சொரூபமாய்த் தங்கிய (தாதான்மிய) சத்தியானது சிருஷ்டியாதி யைந்தொழிற்குந் தலைவியாய், ஆன்மகோடிகள் தோத்திரிக்கும் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியுமாய், வேதங்களால் புகழப்படுகின்ற அவ்விச்சுவப் பிரமமானது எத்திறம் விளங்குமோ அத்திறந் தானும் விளங்குவதாய், (ஆகமங்கள்) சொல்லும் பலவகைப்பட்ட சத்திகளுமாய் (ஆன்மாக்கள்) உச்சிவித்தானந்திக்க விளங்கிக்கொண்டிருக்கும். எ-று. (அ)

சத்தியி னருளாற் குடிலைபாற் றோன்று தனிப்பர நாதமா யதனில்,
ஒத்துதித் தோங்கு பரவிந்துவாகி யோதுமவ் விரண்டினுந் தோன்றி,
வித்தகம் பொலிசா தாக்கியமாகி விளங்குமா கேசுர மாகிச்,
சுத்தவித் தையுமா யுலகெலாம் பரவத் துலங்குமவ் விச்சுவப் பிரமம்.

சீ

இ-ரை.—பரசிவனது பராசத்தியி னருளினாலே குடிலையினிடத் துண்டாகிய ஒப்பற்ற பரநாதமாகி, அதனிடத்திலே சமவாயத்தா லுண்டாகி விளங்கிய பரவிந்துவாகி, சொல்லிய வவ்விரண்டிலு முண்டாகிய ஞானமுங் கிரியையுமொத்த சதாசிவமாகி, அதனால் விளங்கு மகேச்சுரனாகி, சுத்தவித்தையாகி (இத்தத்துவ மைந்தால்) மேலோர்கள் வணங்கிக் கதியடையும்படி விளங்கியது விஸ்வப் பிரமம். எ-று. (௬)

இச்சுத்த தத்துவமைந்தில் ஞானமாயிருந்த அவதரம் சிவமென்றும், கிரியையாயிருந்த அவதரம் சத்தியென்றும், ஞானமுங் கிரியையுமொத்த அவதரம் சாதாக்கியமென்றும், ஞானமேறிக் கிரியை குறைந்து நின்ற அவதரம் மகேச்சுரமென்றும், கிரியையேறி ஞானங்குறைந்த அவதரம் சுத்தவித்தையென்றுஞ் சொல்லப்படும்.

இவற்றுள் சாதாக்கியமாவது சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியமென வைந்து வகைப்படும்.

வாக்கொரு நான்கா யகரமுன் னாக மருவிய வக்கரங் களுமாய்,
ஊக்கமார் தருமந் திரங்களாய் மன்னி யோங்கரு மறைகள்பற் பலவாய்த்,
தேக்குறு மேலாம் பதங்களாய் நன்மை செறிதரு புவனங்க ளாகி,
நீக்கரு நிவர்த்தி யாதியைங் கலையாய் நிலவுமவ் விச்சுவப் பிரமம்.

இ-ரை.—விஸ்வப் பிரமமானது, ஒப்பற்ற வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமையென நால்வகைப்பட்ட வாக்குகளாகி, அகர வுயிர் முதலாகக் கூடி யுண்டான வைம்பத்தோ ரட்சரமாகி, தவவலிமையையுடைய சத்தகோடி மகா மந்திரங்களாகி, மிக வுயர்வாகிய அரிய வேதசாஸ்திரங்கள் பலவுமாகி, நிறைந்த மேன்மையுடைய எண்பத்தொரு பதங்களாகி, மிக நன்மைதருதற்குரிய இருநூற்றிருபத்து நாலு புவனங்களாகி, வேறுபடாத நிவிர்த்தியாதி பஞ்சகலைகளாகி விளங்குகின்றது. எ-று. (எ)

வைகரி வாக்கானது செவியாற் கேட்கப்படுவதாய், அருத்தத்தோடு கூடியதாய், உதானவாயு உந்தியடியாய்த் தோன்றித் தலையையுமிடற்றையு நெஞ்சையும் பொருந்துதலாலுண்டாகிய வட்சரங்களை விபரீதமறக் கிரமமாக வுடைத்தாய், புந்தியையறிகாரணமாயுள்ளதாய், பிராணவாயுவைப் பொருந்தி வெளியே புறப்பட்டுக் காரியப்படும்.

மத்திமைவாக்கானது கண்டத்தினுள்ளே சவிகற்பமா யுணரத்தக்க வோசையாகிச் செவிக்கு விடயமாகாமல், பிராணவாயுவின் விருத்தியைப் பொருந்தாமல் தெளிவாகிய அக்கரங்களைச் சொல்லுஞ் செயலில்லாது வைகரிக்கு வேறாய் மெள்ள வெழுந்திடும்.

பைசந்திவாக்கானது வைகரியி லொன்றோடொன்றேவ்வாத வடிவினை யுடையதாய், வேறுபட்ட வன்னங்கள் தோற்றுதலை முறையே யொடுக்கித்தானே விளங்குவதாய் மயிலின் முட்டை தரிக்கும் சலத்தையொத்து நினைவு மாத்திரையாய் நிற்பது.

சூக்குமை வாக்கானது பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும், ஞானமாத்திரைக் கேதுவாகிய விலக்கணத்தையுடையது.

பஞ்ச கலைகளாவன:—நிவர்த்திகலை, தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்ப நிவர்த்தி செய்கையாம்.

பிரதிட்டாகலை, தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்கு முன்சொன்ன சங்கற்பம் விடுதி நிலைபெற்றுத் திடமாகப் பிரதிட்டிக்கையாம்.

வித்தியாகலை, தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்ப விடுதி நிலைபெற்றுத் திடமானத்திற் சர்வார்த்தஞானம் பிரகாசிக்கையாம்.

சாந்திகலை, தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சர்வார்த்த ஞானப் பிரகாசத்தால் இராக துவேஷமின்றி யிருக்கை.

சாந்தியாதீதகலை, தன்னிற் பொருந்தின ஆன்மாக்களுக்கு விகற்பஞானம் சாந்த மான தென்கிற முன்னினைவுங் கழிந்து அதீதமாய்ப் பரமாகச் சொரூபமாய்நிற்கை.

தெரித்தருள் கலையாய் வரைசெய்கா லமதாய்ச் சேர்தரத் திகழ்நிய தியுமாய்,
அருத்தியிற் செலுத்தும் வித்தையாய் ராக மாகியிவ் வைந்தொடு மருவிப்,
பொருத்தமாப் புலன்க ளுகர்புரு டனுமாய்ப் புகலுமூ லப்பகு தியுமாய்,
உரைத்திடு குணமா யவ்வியத் தமுமா யொளிருமவ் விச்சுவப் பிரமம்.

இ—ரை.—அந்த விஸ்வப் பிரமமானது, ஆணவத்தைச் சிறிது நீக்கி யான்மாவுக் குக் கிரியையை யெழுப்பும் கலையாய், கழிகாலத்தெல்லையையும், நிகழ்காலத்துப் பலத் தையும், எதிர்காலத்துப் புதுமையையும் வரையறுத்துப் பொருந்துங் காலமாய், எந்தக் காலமும் கன்மத்தை யிவ்வளவென்று நிச்சயம் பண்ணி நிறுத்தும் நியதியாய், ஆன்மாவுக்குச் சீக்கிரத்திலே யறிவை யெழும்பும் வித்தையாய், பெற்ற பதார்த்தங்க ளைச் சிறிதாக்கிப் பெருததிலே யிச்சை யுண்டாக்கும் அராகமாய், இக்கலையாதி பஞ் சகஞ்சுகத்துளே கூடிப் பொருந்துவதாகிச் சத்தாதி விஷயங்களை நுகரும் புருஷனு மாய், முன்சொன்ன கலையிலே அவியத்த ரூபமாய்த் தோன்றும் பிரகிருதியாய் அதி லுண்டான முக்குணங்களாய்ப் பிரகாசிக்கின்றது. எ—று. (யக)

புத்தியா யகங்கா ரங்களாய் மருவு பொருவில்ஞா னேந்திய மைந்தா,
யொத்திடு கருமேந் திரியமைந் தாகி யுரைசெய்தன் மாத்திரை யைந்தாய்ச்,
சுத்தமி லைம்பூ தங்களு மாகிச் சொலும்புறக் கருவியு மறுபான்,
தத்துவங் களுமாய் மறையெலாம் பரவத் தயங்குமவ் விச்சுவப் பிரமம்.

இ—ரை.—அந்த விஸ்வப்பிரமமானது, முன்சொன்ன குணங்களினின்று முண் டாகிய புத்தியாய், அதில் தோன்றிய மூன்றகங்காரங்களாய், பொருந்திய தைசத வக ங்காரத்திலே உயர்வாகிய சத்துவகுணம் பொருந்தத் தோன்றிய மனத்துடன் மெய்யாதி ஞானேந்திரியமைந்தாய், இதன் பின்னுன வைகரி யகங்காரத்திலே ராசத குணம்பொ ருந்தத் தோன்றிய வாக்காதி கருமேந்திரியமைந்தாய், சொல்லாநின்ற பூதாதியாங்கார த்திலே தமோகுணம் பொருந்தத் தோன்றிய சத்தாதி தன்மாத்திரையைந்தாய், அசு த்தமாகிய பஞ்ச பூதங்களாய் இம்முப்பத்தாறு தத்துவங்களுடன் கூட்டமாகச் சொல் லாநின்ற புறக்கருவிகளாகிய அறுபதுங் கூடத் தொண்ணூற்றாறு தத்துவங்களாகி, வே தங்களெல்லாம் தோத்தரிக்க இவைக ளனைத்துந் தானாய் விளங்கியது. எ—று. (யஉ)

சுத்தஞா னமதாய்ப் பேரரு ளாகித் துகளறு பிரணவ மாயவ்,
வத்துவாய் வித்தாய் முளைதளி ரிலைவேர் மாமலர் பிஞ்சுகாய் கனிகள்,
மொய்த்திடு பஞ்ச சாகைதெய் வதமா மொழியுப சாகைக ளோடு,
வித்தகர் பரவும் விருட்சமு மாகி விளங்குமவ் விச்சுவப் பிரமம்.

இ—ரை.—அந்த விஸ்வப் பிர்மமானது களங்கமற்ற ஞானமே திருவுருவாகியும், பெருங்கருணை வடிவாகியும், குற்றமில்லாத பிரணவ சொரூபமாகியும், அப்பிரணவத்தினுட் பொருளாகியும், எல்லா வுலகிற்கு முதற் காரணமாகிய ஓர் விதையாகியும், முளை, தளிர், இலை, வேர், அழகிய மலர், பிஞ்சு, காய், கனிகளாகிய இவைகளையும், வேதங்களாகிய பஞ்ச சாகைகளையும், தெய்வத்தன்மையுடையதாகச் சொல்லப்பட்ட உப சாகைகளையும், உடையதாகி, ஞானவான்களால் துதிக்கப்படுகின்ற ஓர் விருக்ஷம் போல்வதாகியும் விளங்காநின்றது. எ—று. (௰௩)

பிரணவஞ் சகல மந்திரங் களுக்குப் பீசமா மறைகட்கு மூலம்,
சாதமா ருலக காரண மோட்ச சாதனஞ் சச்சிதா னந்தம்,
பரவு மும்மூர்த்தி யினிதுதித் தொடுங்கு பரம்பொரு ளாத்மசொ ரூபம்,
பிரிவறு மேகாட் சரம்விராட் விசுவப் பிரமமு மாகியே விளங்கும்.

இ—ரை.—பிரணவமென்று சொல்லப்பட்டது, சமஸ்த மந்திரங்களுக்குப் பீசமாகியும், பெருமை பொருந்திய வேதங்களுக்கு முதலாகியும், மெய்யாகப் பொருந்திய உலகோற்பத்திக்குப் பிரதானமாகியும், மோக்ஷ மடைதற்கு எதுவாகியும், ஞானத்திற்குக் காரணமாகியும், புகழ்கின்ற திரிமூர்த்திகள் இன்பத்துடனே தோன்றி யொடுங்குதற் கிடமாகிய பரமாத்ம சொரூபமாகியும், ஜீவாத்ம சொரூபமாகியும், வேற்றுமையில்லாத ஓங்காரமாகியும், விராட் விஸ்வப்பிர்மமாகியும் விளங்கும். எ—று. (௰௪)

திகழ்நிரா கார மருவுமோங் காரந் தெளிவுளார் புகழ்சிதா னந்தம்,
நிகழ்பரஞ் சோதி பிரமவா னந்த மென்னுநிர்க் குணவடி வைந்தாய்ப்,
பகாரும் விராட்டு விச்சுவ மேகம் பரசிவம் விச்சுவ கன்மா,
புகனுமிச் சகுண வடிவமைந் தாயும் பொலியுமவ் விச்சுவப் பிரமம்.

இ—ரை.—அந்த விஸ்வப் பிர்மமானது, விளங்காநின்ற நிராகாரம் பொருந்திய ஓங்காரம் அறிவுடையோர் புகழ்கின்ற சிதானந்தம் சொல்லுகின்ற பரஞ்சோதி பிரமானந்தம் என்று சொல்லப்பட்ட நிர்க்குண சொரூபம் ஐந்தாகியும் சொல்லுதற்கரிய விராட்டு, விஸ்வம், ஏகம், பரசிவம், விஸ்வகன்மா என்று சொல்லப்பட்ட சகுண சொரூபம் ஐந்தாகியும் விளங்கும். எ—று. (௰௫)

துளங்குறு மயன்மா லுருத்திரன் மகேசன் சுடரவன் மதியுடுக் கணங்கள்,
வளம்படு சோதி யிருள்பகலிரவு மருவுமைம் பொறி புலன் பூதம்,
உளந்திகழ் கரண மற்றுள பொருள்க ளொன்றுமில் சருவசூ னியமா,
விளம்புறு காலைத் திகழ்தருஞ் சுயம்பு விராட்டெனும் விச்சுவப் பிரமம்.

இ—ரை.—அந்த விஸ்வப் பிர்மமானது விளங்காநின்ற பிரமா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், வளம்பொருந்திய பிரகாசம், இருள், பகல், இராத்திரி பொருந்திய மன முதலாகிய கரணங்கள், ஞானேந்திரியங்கள், தன்மாத்திரைகள், பஞ்ச பூதங்கள், மற்றுமுள்ள எல்லாப் பொருள்களும் தோன்றியபடியே ஒடுங்கிய சர்வ சூனியமாகச் சொல்லப்படுகின்ற மகாப்பிரளய காலத்தில் தனக்குத் தானே காரணமாயும், எல்லாந் தானாகியும் விளங்கும். எ—று. (௰௬)

ஆயிரஞ் சிரங்க ளாயிர முகங்க ளாயிரங் கருணைநேத் திரங்கள்,
ஆயிரஞ் செவிக ளாயிரம் வாய்க ளாயிர மழகிய புயங்கள்,
ஆயிரம் பதங்க ளாயிரம் படைக ளாயிர நாமமு மனேகம்,
ஆயிர வண்ட சமுகமே னியுமா யவிருமவ் விச்சுவப் பிரமம்.

இ-ரை.—அந்த விஸ்வப் பிர்மமானது அனந்தஞ் சிரசுகளையும், அனந்தம் முகங்களையும், அருள் பெருகாநின்ற அனந்த நேத்திரங்களையும், அனந்தஞ் செவிகளையும், அனந்தம் வாய்களையும், அழகிய அனந்தம் தோள்களையும், அனந்தம் திருவடிகளையும், அனந்தம் அஸ்திர சஸ்திரங்களையும், அனந்தம் பெயர்களையும் உடையதாய் அனந்தமாகிய அண்டக் கூட்டங்கள் தனக்குத் திருமேனியுமாகி விளங்கும். எ-று. (௰எ)

மின்னிய பலவா மண்டாண்டங்கள் விராட்டுவின் வடிவமா மதற்குப்,
பொன்னவிர் பாத நாபிமார் புடனே புருவமத் தியஞ்சிர முறையே,
பன்னிய வயன்மா லுருத்திரன் மகேசன் பகர்சதா சிவமுமே யென்ன,
மன்னிய புவன மம்புத மெழுநா மாருதங் ககனமு மாமே.

இ-ரை.—அந்த விஸ்வப் பிர்மத்திற்கு விளங்காநின்ற பலவாகிய அண்டபகிரண்டங்களெல்லாம் விராட் சொரூபமாகும் அந்தச் சொரூபத்திற்குப் பிருதிவியும், பிரமாவும், திருவடிகளாகும். அப்புவும், விஷ்ணுவும், நாபிஸ்தானமாகும். தேயுவும், உருத்திரனும், இருதய ஸ்தானமாகும். வாயுவும், மகேஸ்வரனும், புருவத்தி னடுவாகும். ஆகாசமும், சதாசிவமும், சிரசாகும். எ-று. (௰அ)

துலங்குமண் டாண்ட பஞ்சக பூத தூலசொ ரூபியாய் விளங்கும்,
நலங்கெழு சுராட்டு சூக்கும சொரூபி நானிலம் புகழ்சமி ராட்டுப்,
பொலங்குல வியசீர்க் காரண சொரூபி புங்கவர் பரவும்வி ராட்டே,
இலங்குமிம் மூன்று சொரூபமு மாகி யாவுமாம் விச்சுவப் பிரமம்.

இ-ரை.—அந்த விஸ்வப் பிர்மமானது இந்தப்பிரகாரம் விளங்குகின்ற சமஸ்த அண்டங்களாகிய பஞ்சபூத தூல சொரூபத்துக்கு நன்மை பொருந்திய சுராட்டு என்றும், இதன் சூக்கும சொரூபத்துக்கு உலகமெல்லாம் புகழ்கின்ற சம்ராட்டு என்றும், அழகு பொருந்திய காரண சொரூபத்துக்குத் தேவர்கள் துதிக்கப்பட்ட விராட்டு என்றும் சொல்லப்பட்டு, இந்த மூன்று சொரூபத்தை யுடையதாயும் எல்லாமாகியும் விளங்கும். எ-று. (௰௯)

கருதரும் புகழ்சால் விச்சுவப் பிரமங் கருணையாற் சத்தியோ சாதம்,
மருவிய வாம தேவம கோரம் வயங்குதற் புருடமீ சானம்,
பெருகுமிப் பஞ்சா னனத்தொடு சகளப் பிரமமா யைந்தொழின்முதலாய்,
இருநிலம் பரவும் விச்சுவ கன்மா வெனவருட் பரையொடு வயங்கும்.

இ-ரை.—நினைத்தற் கரிதாகிய கீர்த்தியையுடைய அந்த விஸ்வப் பிர்மமானது, தன்னுடைய கருணையினாலே சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்றும் பெயர் பொருந்தி விளங்குகின்ற ஐந்து திருமுகங்களோடு சகளப்

பிர்ம்மாய், பஞ்ச கிர்த்தியத்துக்கு மூலகாரணமாய், பெரிய உலகமெல்லாந் துதிக்கின்ற விஸ்வகர்மாவென்னும் பெயரையுடையதாய், தனது அருட்சத்தியோடு விளங்கும். எ-று. (உ௰)

வயங்குறு சிவமே யமூர்த்தியே மூர்த்தி மருவில்கர்த் திருகன்மா விவற்றில்,
தயங்கய னெடுமா லுருத்திரன் மகேசன் சதாசிவ னெனுமிவர் தம்மை,
முயங்குசத் திகளோ டாக்கியே சிருட்டி முதலிய முறையவர்க் கருளி,
நயங்கொளைந் தொழிலு மியற்றுறு தியற்று நாயகன் விச்சுவ கன்மா.

இ-ரை.—பிரகாசிக்கின்ற சிவம், அமூர்த்தி, மூர்த்தி, கர்த்திரு, கர்மா என்னும் பஞ்ச சாதாக்கியங்களில் விளங்காநின்ற பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் பஞ்ச கர்த்தாக்களை அவரவர்கள் சத்தியுடனே தோன்றச்செய்து, சிருஷ்டிமுதலிய தொழில்களை முறையே அவர்களுக்குக் கொடுத்தருளி நன்மை பொருந்திய பஞ்ச கிர்த்தியங்களையும் செய்யாதுசெய்தருள்கின்ற முதற் கடவுள் விஸ்வகர்மா. எ-று. (உக)

எவன்றிரு வருளா லுலகெலாந் தோன்று மெவனரு ளாலுல கிருக்கும்,
எவனது சொரூப மாயுல கொளிரு மெவனுல குக்கெலா மதிபன்,
எவனரு ளாலைம் பூதமும் விளங்கு மெவனிடத் துலகெலா மொடுங்கும்,
எவன்றரை முதலெண் வடிவமா யொளிர்வோ னவனுயர் விச்சுவ கன்மா,

இ-ரை.—எவனுடைய கிருபையால் எல்லா வுலகமும் உண்டாகுமோ, எவனுடைய கிருபையால் எல்லா வுலகமும் இரக்ஷிக்கப்படுமோ, எவனுடைய சொரூபமானது எல்லா வுலகமுமாய் விளங்குமோ, எவன் எல்லா வுலகங்களுக்கும் இறைவனே, எவனுடைய கிருபையால் பஞ்ச பூதங்களும் விளங்குமோ, எவனிடத்தில் எல்லா வுலகமும் பிரளய காலத்தில் ஒடுங்குமோ, எவன் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவுமாகிய அஷ்ட மூர்த்தியாய் விளங்கப்பட்டவனே, அவனே மேன்மை பொருந்திய விஸ்வகர்மா. எ-று. (உஉ)

எவன்மறை யாவுந் துதிசெயப் படுவோ னெவனரு மறைமுடி யமர்வோன்,
எவனரு மறையி னெறிபுரி மகங்கட் கிறையவ னுயருள் புரிவோன்,
எவனற மாதி நான்கையுந் தருவோ னெவன்சக லமுமினி தறிவோன்,
எவன்பசு பதியா மெவனிணை யிலாதா னவனுயர் விச்சுவ கன்மா,

இ-ரை.—எவன் எல்லா வேதங்களாலுந் துதிக்கப்படுவோனே, எவன் அரிய வேதங்களின் சிரசாகிய வேதாந்தத்தின் உட்பொருளாய் அமர்ந்திருப்பவனே, எவன் அரிதாகிய வேத விதிப்படி செய்யப்படுகின்ற யாகங்களுக்குத் தலைவனாக விருந்து அந்த யாகங்களின் பலன்களைக் கொடுக்கின்றவனே, எவன் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அன்பர்களுக்குக் கொடுப்பவனே, எவன் எல்லாவற்றையும் சாக்ஷி பூதமாயிருந்து அறிகின்றவனாகிய சர்வக்ஞனே, எவன் ஆன்மகோடிகளுக்கு நாயகனே, எவன் தனக்கு ஒப்பும் உயர்வு மில்லாதவனே அவனே சிரேஷ்டமாகிய விஸ்வகர்மா. எ-று. (உங)

எவன் பிறப் பிறப்போ டவித்தைவி கார மிலாதமெஞ் ஞானசொ ரூபி,
எவன்பல வான சமயங்க டோறு மிலகுபல் கடவுளா யருள்வோன்,
எவனடி யவரெண் ணியவரந் தருவோ னெவன்மல விருளிரித் தருள்வோன்,
எவனள வாப்பல் லுயிர்க்குயி ரானே னவனுயர் விச்சுவகன்மா.

இ—ரை.—எவன் ஜனனம், மரணம், அஞ்ஞானம், விகற்பம், என்னு மிவைக ளில்லாத மெய்ஞ்ஞான சொரூபியோ, எவன் பலவாயுள்ள ஒவ்வொரு சமயங்களிலும் அவரவர்கள் துதிக்கின்ற தெய்வமாக இருந்து கிருபை புரிபவனே, எவன் அடியார்கள் நினைத்த வரமெல்லாங் கொடுத்தருள்கின்றவனே, எவன் அடியார்களுடைய மும்மலங் களையும் ஒழித்தருள்கின்றவனே, எவன் அளவிடப்படாத பல ஆன்மகோடிகளுக்கு உயிராயிருப்பவனே, அவனே சிரேஷ்டமாகிய விஸ்வகர்மா. எ—று. (உச)

விஸ்வகன் மாவே யெண்குணக் கடவுண் மிறையறு சருவவி யாபி,
விஸ்வகன் மாவே யன்பிலர்க்கரியோன்விரும்புமெய்யன்பினர்க்கெளியோன்,
விஸ்வகன் மாவே விளம்புறு சருவ சாட்சியா விளங்கிடப் படுவோன்,
விஸ்வகன் மாவே யெம்மையாண் டிகல்செய் வினையறுத் தினிதருள் பவனே.

இ—ரை.—சகள சொரூபியாகிய அந்த விஸ்வகர்மாவே எண் குணங்களையுடைய முதற் கடவுளாகியும், எல்லாவற்றிலும் தடையற்ற அந்தரியாமியாய் நிறைந்து மிரு ப்பார். அந்த விஸ்வகர்மாவே தன்னிடத்தில் அன்பில்லாதவர்களுக்குக் காணுதற்கரிய வராயும், உண்மையான அன்புடையவர்களுக்கு எளிதிற் காணக்கூடியவராயு மிருப்பார். விஸ்வகர்மாவே பிரபஞ்ச முழுமையையும் வேதங்களாற் சொல்லப்பட்ட சாக்ஷிபூத மாய் விளங்குவார். விஸ்வகர்மாவே எம்மை அடிமைகொண்டு எம்முடன் பகைக்கின்ற வினைகளைத் தொலைத்து இனிதாகிய பேரின்ப வாழ்வை எமக்குத் தந்தருள்வார். எ—று. (உரு)

எண் குணங்களாவன:— தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடை மை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமையாம்.

விஸ்வகன் மாவே படைத்திட வயனாய் விளங்குவன் காத்திட வரிவாய்,
விஸ்வகன் மாவே விளங்குவ னழிக்க விளங்குவ னுருத்திர னாகி,
விஸ்வகன் மாவே மறைத்திட மகேச னாகியே விளங்குவ னருள,
விஸ்வகன் மாவே யுயர்சதா சிவனாய் விளங்குவ னெனச்சொலு மறையே.

இ—ரை.—விஸ்வகர்மாவே உலகிலுள்ள சீவாத்மகோடிகளைச் சிருஷ்டிப்பதற்கு பிர் மாவாகவும் விளங்குவார். அந்த விஸ்கர்மாவே இரக்ஷிப்பதற்கு விஷ்ணுவாகவும் விளங் வார். அந்த விஸ்வகர்மாவே சங்காரஞ் செய்வதற்கு உருத்திரனாகவும் விளங்குவார். அந்த விஸ்வகர்மாவே திரோதானஞ் செய்வதற்கு மகேஸ்வரனாகவும் விளங்குவார். விஸ்வகர்மாவே அனுக்கிரகஞ் செய்வதற்கு மேலான சதாசிவமாகவும் விளங்குவார் என்று வேதங்கள்சொல்லும். எ—று. (உசு)

விஸ்வகன்மாவேயைந்தொழின்முதல்வன்மெய்யருந்தவர்தொழப்படுவோன்
விஸ்வகன் மாவே யண்டர்தம் பதங்கண் மேம்பட நிலைபெறச் செய்தோன்.
விஸ்வகன் மாவே யெவ்வகைப் பொருட்கு மிளிர்தரு களைகணு யிருப்போன்,
விஸ்வகன் மாவே யுலகிற்கு முதல்வன் மெய்ம்மையீ துணர்சுவி ரதனே,

இ-ரை.—விஸ்வகர்மாவே பஞ்ச கிர்த்தியங்களுக்குத் தலைவராயுள்ளவரும், அருமையான மெய்த் தவத்தையுடைய மஹான்களால் தோத்திரஞ் செய்யப்படுபவருமாவார். விஸ்வகர்மாவே எல்லாத் தேவர்களுடைய பதவிகளையும் சிரேஷ்டமாக நிலைத்திருக்கும்படி செய்தவர். விஸ்வகர்மாவே உலகிலுள்ள பலவாகிய எல்லாப் பொருள்களுக்கும் விளங்குகின்ற ஆதாரமா யிருப்பவர். இவ்விதமாகச் சொல்லப்பட்ட அந்த விஸ்வகர்மாவே உலகத்திற்கு முதற்கடவுள் இஃதே உண்மையென் றறியக்கடவாய் சுவிரதமகாராஜனே, எ-று. (உஎ)

உலகிற்கு முதல்வனையுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆகத்திருவிருத்தம். ௱௩௧.

மூன்றுவது.
மகதாதி சிருட்டியுரைத்த வத்தியாயம்.

கலிவிருத்தம்.

அகனிலம் புகழுமெய் யன்பி னேங்குபு,
மிகநல மெய்துசு விரத பூபனே,
தகவுல கிற்குமுன் னேனைச் சாற்றினுங்,
திகழ்மகத் தாதிசிட் டியைவி ளம்புவாம்.

இ—ரை.—விசாலமான உலகமெல்லாம் புகழத்தக்க உண்மையான ஜீவகாருண்ணியத்தினுல் மிகவும் உயர்வாகிய நன்மை யடைந்த சுவிரத மகாராஜாவே, தகுதியாகிய உலகத்திற்கு முதற் கடவுளினது வரலாற்றை இதுவரையிலுஞ் சொன்னேம். இனி விளங்காநின்ற மகதகங்கார முதலாகிய சிருஷ்டிக் கிரமத்தைச் சொல்லுகின்றேம் கேளுமென்று காளத்தி மகாமுனிவர் சொல்லுகின்றுர். எ—று. (க)

ஆரணம் புகழ்தனி யமலன் யாவைக்குங்,
காரணன் விசுவகன் மாவெ னும்பரி,
பூரண னைந்தொழில் புரியுந் தற்பரன்,
சீரண வியபகு திப்பி ரேரகன்.

இ—ரை.—வேதங்களாற் புகழப்பட்ட ஒப்பற்றவராகியும், எல்லாவற்றிற்கும் முதற் காரணராகியும், விளங்கும் விஸ்வ கர்மாவென்கின்ற சருவ பரிபூரணரானவர், தமக்கு மேலொரு துணை வேண்டாதவராய், பஞ்ச கிர்த்தியங்களைச் செய்பவராகியும், சிறப்புப் பொருந்திய பிரகிருதி மாயையைப் பிரேரகஞ் செய்கின்றவராகியு மிருக்கின்றுர். எ—று. (உ)

நித்திய மாயொளிர் நிமல னிச்சையால்,
ஒத்திடு பகுதியு முரிய கன்மமும்,
மொய்த்திடு சிவனு மொழியுங் காலமும்,
வித்தக மறையையும் விளங்கச் செய்தனன்.

இ—ரை.—அனுதி நித்தியமாய்ப் பிரகாசிக்கின்ற நிருமல சொரூபியாகிய அந்த விஸ்வகர்மாவானவர் தமது இச்சாமாத்திரத்தில் ஒத்து நடக்கின்ற பிரகிருதி மாயையையும், செய்தற்குரிய கன்ம சம்பந்தமுள்ள ஜீவர்களையும், சொல்லுகின்ற காலங்களையும், அறிவை விளக்குகின்ற வேதங்களையும் தோன்றச் செய்தார். எ—று. (௩)

அற்புதன் சருவவி யாபி யாகிய,
சிற்பர னீறிலாத் தேவ னிச்சையாற்,
பொற்பவ னுதியாப் பொருந்து மாயைபாற்,
சொற்பெரு குமகதத் துவம் பிறந்ததே.

இ-ரை.—அஃதெப்படியென்னில், பார்க்குந்தோறும் ஆச்சரியகரராயும், சர்வவியாபகராயும், மேலான ஞான சொரூபராயும், ஒருகாலத்தும் அழிவில்லாதவராயு மிருக்கின்ற கடவுளாகிய விஸ்வகர்மாவினுடைய இச்சையால், அநாதியாயுள்ள மகா மாயையினிடத்தி லிருந்து விளங்கச் சொல்லுங்கால் நானாவிதமா யதிகரிக்கின்ற மகத் தத்துவம் உண்டாயிற்று. எ-று. (ச)

அதனிடைச் சத்துவ மவிரி ராசதம்,
இதமுறு தாமத மெனுங்கு ணங்கண்மூன்,
றுதிதரத் தனித்தனி யுள்ள டக்கியே,
பொதியுமம் மகத்துநன் குறப்பொ லிந்ததே.

இ-ரை.—அந்த மகத்தத்துவமானது, தன்னிடத்தி லிருந்து சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் தோன்றும்படி தனித்தனி தன்னுள்ளே அடக்கிக்கொண்டு பலமுடனே நன்றாக விளங்கும். எ-று. (ரு)

அம்மகத் தத்துவத் தவிருஞ் சத்துவம்,
செம்மையி ராசதந் திகழுந் தாமதம்,
மும்மையு மொத்தது சித்த மாமுதிர்ந்,
திம்மையில் வருவது புத்தி யென்பவே.

இ-ரை.—அம்மகத்தத்துவத்தினிடத்தில் பிரகாசிக்கின்ற சாத்துவிகம், செவ்வையாகிய இராசதம், விளங்குகின்ற தாமதம் என்கின்ற இம்மூன்று குணங்களும், எற்றக்குறைவின்றி ஒத்து நின்ற விடம் சித்தமாகுமென்றும், இம்மூன்றி லொன்று முனைந்து நிற்பது புத்தியென்றும் சொல்லுவார்கள் பெரியோர்கள். எ-று. (சா)

ஊன்றிடு புத்தியி னொளிருந் தைசதம்,
சான்றவை காரிபூ தாதி யென்றிடு,
மூன்றகங் காரமு முறையிற் றோன்றின,
ஆன்றவர் புகழ்பர னருளி னாலரோ,

இ-ரை.—பெரியோர்களாற் புகழப்பட்ட விஸ்வேஸ்வரனது கிருபையினாலே அப்படிப்பட்ட நிலைமையையுடைய புத்தி தத்துவத்தினின்றும், விளங்காநின்ற தைசத அகங்காரமென்றும், பொருந்திய வைகாரி அகங்காரமென்றும், பூதாதி அகங்காரமென்றும், இம்மூன்று வகையான அகங்காரங்களும் முறையே தோன்றின. எ-று. (எ)

சத்துவ குணமதாந் தைச தத்திடை,
நித்திய மாகவே நிகழ்ம னத்தொடு,
ஒத்திடு ஞானவிந் திரிய மோரைந்தும்,
சித்திர மொடுநனி சிறந்து தோன்றின.

இ-ரை.—அந்தச் சத்துவ குணம்சமாகிய தைசத அகங்காரத்தில் அழிவில்லாதாகி விளங்குகின்ற மனதும், பொருந்திய ஞானேந்திரியம் ஐந்தும், அழகுடனே மிகவுஞ் சிறந்து தோன்றின. எ-று. — ஞானேந்திரியம் ஐந்தாவன :— மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவாம். (அ)

இலகுமி ராசத மெனும்வை காரியின்,
நலமலி வாக்குமுன் ஞந வின்றிடு,
குலவுகன் மேந்திய மைந்துங் கோதிலா,
துலகெலாம் புகழ்ந்திட வுதித்த வென்பவே,

இ—ரை.—விளங்குகின்ற இராசத குணம்சமாகிய வைகாரி அகங்காரத்தில் நன்மை மிகுந்த வாக்கு முதலாகச் சொலலப்படுகிற கன்மேந்திரியம் ஐந்தும், உலகம் புகழும்படி தோன்றுமென்று சொல்லுவார்கள் பெரியோர்கள். எ—று. (கூ)

கன்மேந்திரியம் ஐந்தாவன:—வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்பனவாம்.

தாமத மெனச்சொல்பூ தாதி யென்பதிற்,
றேமலி தருதன்மாத் திரைக ளாகிய,
நேமமார் சத்தமுன் னிகழ்த்து மைந்துமே,
நாமலி புகழொடு நன்கு தோன்றின,

இ—ரை.—தாமத குணம்சமென்று சொல்லுகின்ற பூதாதி அகங்காரத்தில் இடங்கள்தோறு மிகுந்த தன்மாத்திரைகளாகிய நியதி பொருந்திய சத்த முதலாகச் சொல்லப்படுகிற பஞ்சதன்மாத்திரைகளும், நாவினுற் சொல்லப்படுகிற நல்ல புகழுடனே தோன்றின, எ—று.—பஞ்சதன் மாத்திரைகளாவன:—சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பனவாம். (ய)

சத்தம தனில்வெளி பரிசந் தன்னிடை,
ஒத்திடு வளியுரு வத்திற் பாவகன்,
தித்தியி ரசத்தினீர் திகழுங் கந்தத்தின்,
மொய்த்திடு பூமியு முறை யுதித்தன.

இ—ரை.— மேற்சொல்லிய தன்மாத்திரை ஐந்தினுள் சத்தத்தில் ஆகாயமும், பரிசத்தில் பொருந்திய வாயுவும், உருவத்தில் அக்கினியும், இனிய ரசத்தில் ஜலமும், விளங்கிய கந்தத்தில் நெருங்கிய பிருதிவியும் உண்டாயின. எ—று. (யக)

அருமறை நாயகன் பூத மைந்தையும்,
கருதரு முயர்பஞ்சீ கரணஞ் செய்துசீர்,
மருவிய வண்டபு வனங்கள் யாவையும்,
திருவளர் கருணையாற் சிருட்டி செய்தனன்.

இ—ரை.—அரிய வேதங்களுக்குத் தலைவனுகிய விஸ்வ கர்மாவானவர் இந்தப் பிரகாரம் சிருட்டி செய்த பஞ்ச பூதங்களையும், சிருஷ்டிக்குத் தகுந்தபடி பஞ்சீகரணமாகத் தாரதன்மியப்படச் சேர்த்து சமஸ்த அண்டங்களையும், புவனங்களையும், சராசரங்களையும், தம்முடைய அழகிய திருவருளாற் சிருஷ்டி செய்தார். எ—று. (யஉ)

பஞ்சீகரணமாவது:—ஒவ்வொரு பூதங்களில் ஐயைந்து பூதங்களைச் சேர்த்துச் சிருஷ்டிப்பது. எந்தப் பூதங்கள் பஞ்சீகரணஞ் செய்யப்பட்டனவோ அவைகளைப் பஞ்சீகிருதமெனபர்.

அகனில முதலிய பூத மைந்திற்கும்,
மகிழ்மல ரயன்றிரு மாலு ருத்திரன்,
புகழ்மிகு மகேச்சுரன் பொலிச தாசிவன்,
திகழிவர் முறையதி தெய்வ மாமரோ.

இ-ரை.—மேலும், சுவிரத மகாராஜாவே கேளும், முன் விசாலமாகிய பிருதிவி முதலாகச் சொல்லப்பட்ட பஞ்ச பூதங்களுக்கும் முறையே யாவரு மகிழ்கின்ற தாமரை மலரோ ஆசனமாக வுடைய பிரமா, விஷ்ணு, உருத்திரன், புகழ்மிகுந்த மகேஸ்வரன், விளங்காநின்ற சதாசிவன் என்னும் ஐவர்களும் பிரகாசிக்கின்ற அதி தெய்வங்களாக இருப்பார்கள். எ-று. (ம௩)

நவில்பர மாணுநன் னான்கு பானுவின்,
அவிரொளி யெழுதுக ளாம தெட்டுறில்,
சவிமயிர் நுனியது தானெட் டெய்திலீர்,
இவரது நாலிரண் டெய்தில் யூகையே.

இ-ரை.—சொல்லப்பட்ட அதிசூக்க அணுவானது பதினாறு கொண்டது சூரியனது விளங்காநின்ற ஒளியினாலே எழப்பட்ட இரத ரேணு, அந்த இரேணு எட்டுக் கொண்டது அழகிய மயிர் நுனி, அம்மயிர் நுனி எட்டுக்கொண்டது ஈர், எழுகின்ற அவ்வீர் எட்டுக்கொண்டது பேன், எ-று. (ம௪)

யூகையெட் டியவையா முறைசெ யன்னதெட்,
டாகுமா ணுங்குல மதுவெண் மூன்றுறில்,
வாகுள கரமது வயங்கு நான்குறில்,
தாகமார் தனுவஃ திரண்டு தண்டமே.

இ-ரை.—அப்படிப்பட்ட பேன் எட்டுக்கொண்டது இயவை, சொல்லப்பட்ட அந்த யவை எட்டுக்கொண்டது மாணங்குலம், அந்த மாணங்குலம் இருபத்து நான்கு கொண்டது அழகிய அஸ்தம், விளங்குகின்ற அவ்வஸ்தம் நான்கு கொண்டது அபேக்ஷை பொருந்திய விற்கிடை, அவ் விற்கிடை இரண்டு கொண்டது தண்டம். எ-று. (ம௫)

தண்டமீ ராயிரந் தகுகு ரோசமாம்,
எண்டரு குரோசமீ ரிரண்டொர் யோசனை,
கொண்டயோ சனையொரு நூறு கோடியே,
அண்டமொன் றிற்குறு மளவை யாமரோ.

இ-ரை.—அப்படிப்பட்ட தண்டமானம் இரண்டாயிரங் கொண்டது தகுதியாகிய குரோசம், எண்ணிக்கையைத் தருகின்ற அக்குரோசம் நான்கு கொண்டது ஒரு யோசனை, அந்த யோசனை ஒரு நூறு கோடி கொண்டது ஒரு அண்டத்துக்குப் பொருந்திய அளவாகும். எ-று. (ம௬)

நிறைதரு மண்டத்தி னடுவ ணீள்வளத்,
துறையுமம் புவியின்கீ ழளவை யோட்டுடன்,
குறைவில்யோ சனைய்ம்பான் கோடி யாகுமால்,
அறைதரு புவியின்மே லளவு மன்னதே.

இ-ரை.—புவன சராசரங்கள் நிறைந்திருக்கின்ற ஓர் அண்டத்தின் மத்தியில் பெருகிய வளப்பத்துடன் பொருந்தி யிருக்கின்ற அழகிய பூவுலகின் கீழே உள்ள அளவானது, அண்டப் பித்தியின் கனத்துடன் சேர்ந்த குறைவில்லாத ஐம்பது கோடி யோசனையாகும். சொல்லப்பட்ட பூமியின்மேல் அண்டப் பித்தியின் கனத்துடன் சேர்ந்த அளவானது ஐம்பது கோடி யோசனையாகும்.—எ-று. (௰௭)

பூதல நடுவினிற் பொலிபொன் மேருவுக்,
கோதுமெண் டிசையினு மளவை யுள்ளது,
தீதில்பித் திகைக்கனஞ் சேர்ந்து யோசனை,
கோதறு மைம்பது கோடி யாமரோ.

இ-ரை.—பூவுலகத்தின் மத்தியில் விளங்காநின்ற பொன்னாகிய மகா மேருவுக்கு எட்டுத் திக்கிலும் சொல்லப்பட்டுள்ள அளவானது, பழுதில்லாத அண்டப்பித்திக்கனஞ் சேர்ந்து குற்றமற்ற ஐம்பது கோடி யோசனையாகும். எ-று. (௰௮)

நிலவுறு மண்டத்தி னிவப்பு நீளமும்,
இலகுறு பரப்பையு மியம்பில் யோசனை,
குலவுமீ ைாம்பது கோடி யாகுமால்,
அலகிலண் டங்கட்கு மளவை யின்னதே.

இ-ரை.—விளங்காநின்ற ஓர் அண்டத்தினது உயர்ச்சி யளவையும், நெடுமை யளவையும் விளங்குகின்ற அகலத் தளவையும், சொல்லுமிடத்துக்கொண்டாடப்படுகின்ற நூறு கோடி யோசனையாகும்; இப்படிப்பட்ட எண்ணில்லாத அண்டங்களுக்கெல்லாம் இவ்விதமாகிய அளவேயாகும். எ-று. (௰௯)

இன்னவா றண்டகோ டிகளி யற்றுபு,
தன்னருள் வெளிக்குளே தயங்கச் செய்துசீர்,
துன்னிய பல்லுயிர்த் தொகை தழைத்திட,
பின்னருள் புரிந்தனன் விச்சு வேசனே.

இ-ரை.—இத்தன்மையாகப் பலகோடி அண்டங்களைச் சிருஷ்டித்து, அவ் வகிலாண்டங்களை யெல்லாம் தன்னருள் வெளியிலே விளங்கும்படிக்குச் செய்து, அவ்வண்டங்களில் நிறைந்திருக்கின்ற சிறப்பினையுடைய பலவாகிய ஜீவகோடிகளெல்லாம் தழைக்கும்படி விஸ்வேஸ்வரர் விளங்குகின்ற திருவருள் செய்தார். எ-று. (உ௰)

மகதாதி சிருஷ்டியுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் ௱௫௯.

நான்காவது

தேவநராதிசிருஷ்டியுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தகாரும் பவத்திற் கஞ்சிச் சகத்தவா வொழித்த வேந்தே,
புகழ்மகத் தாதி சிட்டி புகன்றன முணர்ந்த வாறு,
திகழ்தரு முலகிற் றேன்றுந் தேவந ராதி சிட்டி,
அகமகிழ் விச்சுவேச னாற்றிய வியல்பு சொல்வாம்.

இ-ரை.—கெடுதலில்லாத ஜனனத் துன்பத்திற்குப் பயந்து, பிரபஞ்சத்தில் ஆசை நீங்கிய சுவிரத மகாராஜாவே கேளும், இதுவரையும் யாவரும் புகழ்கின்ற மகதகங் காராதி சிருஷ்டிக் கிரமத்தைத் தெரிந்தவாறு சொன்னோம், இனி விளங்காநின்ற உலகத்தில் உண்டாயிருக்கின்ற தேவர் மனிதர் முதலாகிய சிருஷ்டியை மன மகிழ்ச்சியுண்டாகும்படி விஸ்வேஸ்வரனாற் செய்தருளிய கிரமப்படி சொல்லுகின்றோம் என்றார் காளஸ்தி மகா முனிவர். எ-று. (க)

ஷை வேறு.

விழிசிரமார் பொடுசெவிபி ராணனபா னன்றிகழ்வி யான னோடு,
வழுவறுமு தானனற்ச மானனிவை களின்முறையே மகிழ்ம ரீசி,
பொழியருளங் கிரசுபிரு கத்திரிகா சிபர்கிரது புலகர் தட்சர்,
பழியில்புலத் தியரென்னு நவப்பிரமர் தமையன்பிற் படைத்தானன்றே.

இ-ரை. மேற்சொல்லிய விஸ்வேஸ்வரனனவர் தம்முடைய நேத்திரம், சிரசு, மார்பு, காது இந்நான் கவயவங்களிலிருந்தும்; பிராணன், அபானன், விளங்குகின்ற வியானன், குற்றமற்ற உதானன், நல்லசமானன் என்கின்ற பஞ்ச வாயுக்களிலிருந்தும், முறையே மகிழ்ச்சியையுடைய மரீசி கிருபையைப் பொழிகின்ற அங்கிரசு, பிருகு, அத்திரி, காசிபர், கிரது, புலகர், தக்ஷர், பழியில்லாத புலஸ்தியர் என்று சொல்லப்பட்ட ஒன்பது பிரமர்களை அன்பினாலே சிருஷ்டித்தருளினர். எ-று. (உ)

அண்ணியவிச் சுவமூர்த்தி தனதுசத்தி யோசாத மாதி யாக,
நண்ணியபஞ் சானனத்து மனுவினொடு மயன்றுவட்டா நவிலுஞ் சிற்பி,
தண்ணியவிச் சுவக்கிரா மைவர்தமை யவரவர்கள் சத்தி யோடு,
திண்ணியபஞ் சப்பிரம ராவுலகெ லாம்படைக்கச் சிருட்டி செய்தான்,

இ-ரை.—உலகத்திற்குக் காரண கர்த்தாவா யிருக்கின்ற விஸ்வேஸ்வரனனவர், தமது சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம், என்னும் பொருந்திய ஐந்து திரு முகங்களிலிருந்தும், முறையே மனு, மயன், துவஷ்டா, சிற்பி, விஸ்வக்யன் என்னும் ஐவர்களை அவரவர்கள் சத்தியுடனே பலம்பொருந்திய பஞ்சப் பிரமாக்களாக உலகங்களையெல்லாம் உண்டாக்குவதற்குச் சிருஷ்டித்தருளினர். எ-று. (ங)

குலவியசீர்ச் சனகர்சனந் தனர்சனு தனரிருபு கோதற் ரேங்கு,
வலியசனற் குமாரரெனு முனிவர்க ளைவரையு மகிழ்வி னுக்கி,
நிலவுறுதெய் வதமறையங் கங்களுமோர்ந் தரியதவ நெறியி னின்று,
பொலிவுறுபற் பலவிருடி கணங்களையு நனிசிருட்டி புரிந்தான் மன்னே.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர் பின்னும் விளங்காநின்ற கீர்த்தி பொருந்திய சனகர், சனந்தனர், சனுதனர், இருபு, குற்றமற்று விளங்குகின்ற தபோபலம் பொருந்திய சனற்குமாரர் என்கின்ற முனிசிரேஷ்டர் ஐவர்களையும் மகிழ்வோடு படைத்து பிரகாசிக்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய வேத வேதாங்கங்களையுந் தெளியக் கற்றுணர்ந்து அரிதாகிய தவமார்க்கத்தில் நிலைபெற்று விளங்காநின்ற பலவாகிய ரிஷி கணங்களையும் மிகவுஞ் சிருஷ்டித் தருளினர். எ—று. (ச)

என்றுமொளிர் விசுவேச னூர்த்துவபா ரிசமதிலிந் திரனே டங்கி,
தென்றிசைவாழ் நமனிருதி வருணன்வளி யளகேசன் றிகழீ சானன்,
துன்றுமிவ ரெண்மரையு மாரன்முத னுட்களையுஞ் சூரி யாதி,
ஒன்றுகிர கங்களையும் பாரிசத்திற் பிதுர்களையு முவப்பற் றந்தான்.

இ—ரை.—எக்காலத்தும் விளங்காநின்ற விஸ்வேஸ்வரனுனவர் தமது திருமேனியின் மேல்நோக்கிய பாகத்திலிருந்து, இந்திரன், அக்கினி தென்றிக்கிலுள்ள இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், விளங்குகின்ற ஈசானன் என்று சொல்லப்பட்ட திக்குப் பாலர்களாகிப் பொருந்திய எண்மர்களையும், கார்த்திகை முதலாகச் சொல்லப்படுகின்ற இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சூரியன் முதலாகப் பொருந்திய ஒன்பது கிரகங்களையும் தமது திருமேனியின் பக்கத்திலிருந்து பிதுர்தேவர்களையும் பிரியத்தோடு சிருஷ்டித்தருளினர். எ—று. (ரு)

ஆற்றன்மிகு மாதேவன் றிகழுமா னுருத்திரன்சங் கரன்பா ரேத்த,
வேற்றுமையி லாநீல லோகிதனீ சானனெடு விசய னன்பாற்,
போற்றவருள் புரிவீம தேவன்பவ வோற்பவனே புகழ்க்கா பாலி,
சாற்றுசவு மியனெனுமே காதசவு ருத்திரரைத் தந்தான் மன்னே.

இ—ரை.—அந்தவிஸ்வேஸ்வரனுனவர் அதன்பின்பு ஞானசொரூபியாகிய மகாதேவன் விளங்குகின்ற அரன், உருத்திரன், சங்கரன், உலகம் புகழும்படி வேற்றுமையில்லாத நீலலோகிதன், ஈசானன், விஜயன், உள்ளன்புடனே துதிப்பவருக்கு வேண்டியவைகளைத்தருகின்ற வீமதேவன், பவோற்பவன், கீர்த்திபொருந்திய காபாலி யாவரும் புகழப்பெற்ற சவுமியன் என்று சொல்லப்படுகின்ற பதினேருவகையாகிய உருத்திரத் தலைவர்களைப் படைத்தருளினர். எ—று—. உருத்திரத் தலைவரென்றதனல் ஒவ்வொரு உருத்திரனையும் தலைமையாகக் கொண்ட கோடிகோடி உருத்திரர்களாகி பதினேரு கோடி உருத்திரர்கள் உண்டானர்களென்றுணர்க. (சு)

தாத்துருசக் கானரிய மன்செறிமித் திரன்வருணன் றாணி யோர்கள்,
எத்துபுகழ் மேயவஞ்சு மானிரணி யன்பகவா னிருள னைத்தும்,
நீத்துமகிழ் திவச்சுவான் பூடன்ச வித்துருவே நிகழ்து வட்டன்,
சீர்த்திமிகப் பெருகுறுமித் துவாதசா தித்தரையுஞ் சிருட்டி செய்தான்.

இ–ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர் பின்னும் தாத்துரு, சக்கரன், அரியமன், கிரணங்கள் நெருங்கிய மித்திரன், வருணன், உலக மெல்லாம் புகழுங் கீர்த்தி பொருந்திய அஞ்சுமான், இரணியன், பகவான், இருளை நீககிச் சந்தோஷிக்கின்ற திவச்சுவான் பூடன் சவித்துரு விளங்குகின்ற துவஷ்டன் என்று சொல்லப்பட்ட கீர்த்தி மிகுந்த துவாதசாதித்தர்களாகிய பன்னிரண்டு சூரியர்களையுஞ் சிருஷ்டித் தருளினர். எ–று. (எ)

நீங்கரிய வனலனுட னணிலனு பச்சைவ னிகழ்த்துஞ் சோமன்,
பாங்குபெறு தான்றுருவன் பிரத்தியூ சன்சொல்பிர பாச னென்னத்,
தேங்குறுசீர் பொலியுமெழி லட்டவசுக் களையுநனி சிருட்டி செய்து,
ஓங்குபுகழ்த் தசமருத்துக் களையும்விசு வேசனுவந் துதவி னுனல்.

இ–ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர் பின்னும் நீங்காத அனலன், அணிலன், ஆபச்சைவன் தேவர்களாற் சொல்லப்பட்ட சோமன் அழகு பொருந்திய தரன், துருவன், பிரத்தியூசன், துதிக்கப்பெற்ற பிரபாசன் என்று சொல்லுகின்ற நிறைந்த கீர்த்தி விளங்கிய அழகிய அஷ்டவசுக்களாகிய எண்மர்களையும் சிருஷ்டி செய்து மிக மேன்மையாகிய புகழ் பொருந்திய மருத்துக்கள் பதின்மர்களையும் சந்தோஷத்துடன் படைத்தருளினர். எ–று. (அ)

இடையினது கீழ்ப்புறத்தி லசுரர்தயித் தியர்நிருத ரியக்கர் பூதர்,
கடியபைசா சரையாக்கி யங்கத்தந் தரருரகர் கருடர் சீர்த்தி,
அடலமரர் காந்தருவர் கிம்புருடர் விஞ்சையர்கின் னரர்கள் சித்தர்,
படர்முனிவ ரந்தரவா சிகள்போக பூமியரைப் படைத்தல் செய்தான்.

இ-ரை--பின்னு மந்த விஸ்வேஸ்வரனுனவர் தமது இடையின் கீழ்பாகத்திலிருந்து பதினெட்டு வகையாகிய தேவ கணங்களுக்குள் அசுரர், தையித்தியர், நிருதர், இயக்கர், பூதர், அச்சத்தைச் செய்கின்ற பைசாசர் என்னும் ஆறுவகைக் கணங்களையும், அங்கத்திலிருந்து அந்தரர், உரகர், கருடர், கீர்த்தியும் பராக்கிரமும் பொருந்திய அமரர், காந்தருவர், கிம்புருடர், விஞ்சையர், கின்னரர், சித்தர், நன்னடையையுடைய முனிவர், ஆகாசவாசிகள், போகபூமியர்கள் என்னும் பன்னிருவகையாகிய கணங்களையும் சிருஷ்டித்தருளினர். எ–று (கூ)

வென்றிபொலி தருமயிரா வதம்புண்ட ரீகமுடன் விளங்கா நின்ற,
பொன்றலிலாப் புகழ்வாம னங்குமுத மஞ்சனஞ்சீர்ப் புட்ப தந்தம்,
நன்றியுறு சாருவபூ மஞ்சுப்ர தீபமென நவிலு மின்ன,
குன்றுபுரை தருமட்ட கயங்களையு மழகுபெறக் குயிற்றினனே.

இ–ரை.—பின்னும் அந்த விஸ்வேஸ்வரனுனவர், வெற்றியினுலே விளங்காநின்ற அயிராவதம், புண்டரீகம், பிரகாசிக்கின்ற கெடுதலில்லாத புகழையுடைய வாமனம், குமுதம், அஞ்சனம், சிறந்த புஷ்பதந்தம், நன்மை பொருந்திய சாருவபூமம், சுப்பிரதீபம் என்று சொல்லப்பட்ட மலைகளைப்போன்ற அஷ்ட கஜங்களையும், அழகு பொருந்த சிருஷ்டித்தளினர். எ–று. (ய)

செய்யகதிர் மணிமுடிக ளாயிரமும் பொலியாதி சேடன் றன்னைத்,
தையலொடு சீர்புனைவா சுகியனந்தன் றக்கனொடு சங்க பாலன்,
வெய்யகுளி கன்பதுமன் மகாபதுமன் கார்க்கோடன் விளம்பு மின்ன,
பொய்யில்புகழ் பெறுமட்ட நாகங்க டமைச்சிருட்டி புரிந்தா னன்றே.

இ—ரை.—பின்னும் அந்த விஸ்வேஸ்வரனனவர் சிவந்த கிரணங்களை விரிக்கின்ற இரத்தினங்கள் பொருந்தி விளங்காநின்ற ஆயிரம் பணமுடிகளையுமுடைய ஆதிசேஷனையும், அழகுடனே சிறந்து விளங்குகின்ற வாசுகி, அனந்தன், தக்ஷன், சங்கபாலன், வெவ்விதாகிய குளிகன், பதுமன், மகாபத்மன், கார்க்கோடன் என்று சொல்லப்பட்ட பொய்மையில்லாத புகழ்ச்சி பொருந்திய அஷ்ட நாகங்களையும் சிருஷ்டித்தருளினர். எ—று. (யக)

மன்னியகா லத்தினையும் பகலினையு மிரவினையு மருவிரண்டாப்,
பன்னியசந் திகளையுநன் மாசாதி பிரிவினையும் பண்பி னேங்கு,
துன்னியவி ருதுக்களொடு யுகமீறு யுள்ளனவுந் தோன்றச் செய்து,
மின்னியவக் கினிட்டோம முதவியயா கங்களையும் விதித்தான் மன்னே.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், நிலைபெற்ற காலங்களையும், பகலையும், இரவையும், இரண்டாகச் சொல்லும்படி பொருந்திய சந்திகளையும், நல்ல மாச முதலாகிய பிரிவுகளையும், தகுதியாக வுயர்ந்து நெருங்கிய ஆறு இருதுக்களையும், யுகாந்தமாயுள்ள சமஸ்த விஷயங்களையு முண்டாகும்படி செய்து விளங்கிய அக்கினிஷ்டோம முதலாகிய இருபத்தொரு யாகங்களையும் உண்டாகச் செய்தார். எ—று.

ருதுக்கள் ஆறுவன:—வசந்தருது, கிரீஷமருது, வருஷருது, சரருது, ஹேமந்தருது, சசிருது என்பவைகள் யாகங்கள் இருபத்தொன்றுவன, அக்கினிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்தியம், சோடசீ, வாசபேசம், அதிராத்ரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூர்ணமாசம், சாதுர்மாசியம், நிருஷபசுமந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அஷ்டகை, பார்வணம், சிராத்தம, சிராவுணி, ஆக்ரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி என்பவைகள். (யஉ)

சுத்தமலி மின்னலிடி யம்புதமிந் திரதனுசு தூம கேது,
சித்தமெலி பூகம்ப முற்பாத முதலியவுஞ் சிருட்டி செய்து,
நத்துறுமிந் திரன்முதலெண் காவலர்க்கு மிரவிமுத னவக்கோள் கட்கும்,
ஒத்தசுரர் முதற்பதினெண் கணங்களுக்கு மூர்திகளுண் டாக்கி னனால.

இ—ரை.—பின்னும் அந்த விஸ்வேஸ்வரனனவர், பரிசுத்த மிகுந்த மின்னல், இடி, மேகம், இந்திரதனுசு, வால்நக்ஷத்திரம், அச்சத்தைச் செய்கின்ற பூகம்பம், துர்நிமித்தம் இவை முதலாகிய பலவற்றையும் படைத்தருளி விரும்புகின்ற இந்திரன் முதலாகச் சொல்லப்பட்ட அஷ்டதிக்குப்பாலருக்கும், சூரியன் முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பது கிரகங்களுக்கும், பொருந்திய தேவர் முதலாகச் சொல்லப்பட்ட பதினெண்கணத்தர்களுக்கும் வாகனங்களையுஞ் சிருஷ்டித்தருளினர். எ—று. (யஈ)

அ

பரவுதன்கிழ் முகத்திருக்குந் தக்கணு னனத்தெசுரும் பகர்கு டக்காம்,
உரமுகத்திற் சாமமுமுத் தரமுகத்தி லதர்வணமு முயரீ சான,
வரமுகத்திற் பிரணவமு நவில்சாகை யொடுதிகழ வகுத்தல் செய்து,
விரவுபுக முலகனைத்து முய்யவினி தருள்புரிந்தான் விச்சு வேசன்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், யாவரும் புகழ்கின்ற தமது பஞ்ச முக ங்களுக்குள் கிழக்காகிய சத்யோஜாத முகத்திலிருந்து இருக்குவேதமும், தக்ஷிணமா கிய வாமதேவமுகத்தில் எஜுர் வேதமும் சொல்லுகின்ற மேற்காகிய அகோர முகத் தில் சாமவேதமும், வடக்காகிய தற்புருஷமுகத்தில் அதர்வண வேதமும், மேலாகிய சிரேஷ்டமுள்ள ஈசான முகத்தல் பிரணவமும், சொல்லப்பட்ட அவைகளுக்குள்ள சாகைகளுடனே விளங்கும்படி தோன்றச்செய்து புகழ் மிகுந்த எல்லா வுலகங்களும் உஜ்ஜீவிக்கும்படி இனிதாகிய கிருபை செய்தருளினுர். எ-று. (யிச)

ஆயுளருத் தந்தனுர்காந் தருவமுயர் மனுவென்ன வகிலம் போற்றும்,
தூயவுப வேதமுமந் திரம்வியா கரணமொடு சொலுநி கண்டு,
நேயமிகு சந்தோபி சிதநிருத்தஞ் சோதிடமே நிலவு மின்ன,
மேயபுகழ் பெறுவேதாங் கங்களையு மழகுபெற விதித்தல் செய்தான்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், இவையல்லாமலும் ஆயுள் வேதம், அர்த்த வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், மனுவேதம் என்று உலகத்தாரால் புகழத்தக்க உயர்வும், பரிசுத்தமும் பொருந்திய உப வேதங்கள் ஐந்தையும், மந்திரம், வியாகர ணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிஷம் என்று இந்தப் பிரகாரம் விளங் குகின்ற பொருந்திய புகழ்பெற்ற வேதாங்கங்கள் ஆறையும் அழகுபெற உண்டாக்கி யருளினுர். எ-று. (யிரு)

பெரும்புவியில் யாவர்களும் வரன்முறையிற் சுபாசுபங்கள்பிறங்க வாற்றித்
திருந்துபுரு ஷார்த்தமுறற் காயசூத் திரங்களையுஞ் சிறக்கச் செய்து,
பொருந்தியமன் னுயிர்களெலாமின்பமொடுநனிவாழ்விற்பொலிவுற்றோங்கி
விரும்பியபன் னலமெய்தச் சிற்பசாத் திரங்களையும் விதித்தான் மன்னே.

இ-ரை.— அந்த விஸ்வேஸ்வரனுனவர், விசாலமாகிய பூமியினிடத்துள்ள யாவர் களும் கிரமமாகச் சுப கர்மங்களையும், அசுப கர்மங்களையும் விளக்கமாகச் செய்து, திருத்தமாகிய தருமார்த்த காமிய மோக்ஷங்களை அடைவதற்கு விதி நிஷேதங்களை வகுப்பதாகிய ஆஸ்விலாயனுதி சூத்திரங்களையும், சிறக்கும்படி செய்து நெருங்கிப் பொருந்திய ஜீவகோடிகளெல்லாம் மிகுந்த சுகத்துடனே பலவாழ்வையும் பொருந்தி விருப்பமாகிய பல நன்மையையும் அடையும்படிக்குச் சமஸ்த விஷயங்களையுந் தெரி விக்கின்ற சிற்ப சாஸ்திரங்களையும் நியமித்தருளினுர். எ-று. (யிசு)

மகிழ்வுறுபஞ் சானனத்திற்சானகர்முன் னுகநவின்மறையோர் தம்மைத்,
தகவினுயர் திண்புயத்தி லரசனாயூ ருவன்வணிகர் தம்மைத் தாளில்,
பகருசீர்ச் சூத்திரனா யவரவர்கண் மாதரொடு படைத்தல் செய்து,
புகழ்பெருகு சதுர்விதவாச் சிரமதரு மங்களையும் பொலியச் செய்தான்.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், உலகமெல்லாம் இன்ப மடையும்படி விளங்காநின்ற தமது சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்று சொல்லப்பட்ட ஐந்து திருமுகங்களில் முறையே சானகர், சனாதனர், அபுவனசர், பிரத்தனசர், சுபர்னசர் என்று சொல்லப்பட்ட ஐந்து பிராமணர்களையும் தகுதியாக உயர்ந்த பலம் பொருந்திய புஜத்தில், க்ஷத்திரியரையும், துடையில் வைசியரையும், திருவடியில் சொல்லுதற்கரிய சிறப்புப்பொருந்திய சூத்திரரையும் அவரவர்கட்குரிய மாதர்களுடனே சிருஷ்டிசெய்து பெருகிய கீர்த்தியையுடைய பிரமசரியம், காருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று சொல்லப்பட்ட நான்குவித ஆச்சிரம தருமங்களையும் பிரகாசிக்கும்படி செய்தருளினார். எ—று. (யஎ)

தரைபுகழும் பசுவெருமை யாடுமான் கவயமொடு சாற்றும் பன்றி,
கரைதருமொட் டகமாதி யிருகுளம்புள் ளனவனைத்துங்காண்டல்செய்து,
உரைசெறிகோய் யுளைப்புரவி கர்த்தபம்வேசரியினுடனொளிரும் பட்டம்,
புரையிலிவை யாதியவோர்குளம்புளவெலாஞ்சிருட்டிபுரிந்தான்மன்னோ.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், உலகம் புகழ்கின்ற பசுக்கள், எருமைகள், ஆடுகள், மான்கள், கவயங்கள், சொல்லுகின்ற பன்றிகள், ஆரவாரிக்கின்ற ஒட்டகங்கள் முதலிய இரண்டு குளம்புகளுள்ள விலங்குகளை யெல்லாஞ் சிருஷ்டி செய்து சொல்லப்படுகின்ற கத்தரித்த நெருங்கிய புறமயிரினையுடைய குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள், விளங்காநின்ற கவரிமான்கள், குற்றமற்ற இவை முதலாகிய ஒரு குளம்புள்ள விலங்குகளை யெல்லாம் சிருஷ்டித்தருளினார். எ—று. (யஅ)

பொங்குமதம் பொழியானை வலியாளி வானரநாய் பூனை வேங்கை,
சிங்கநரி முயலாதி யைந்துகிருள் ளனவனைத்துஞ் சிருட்டி செய்து,
பங்கமிலா மாகபிலை வன்கரடி கத்தூரி பகரும் புல்வாய்,
புங்கமரை நாவிமுதல் விலங்கினமெ லாஞ்சிருட்டி புரிந்தா னன்றே.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், மிகுந்த மதம் பொழிகின்ற யானைகள், வலியையுடைய யாளிகள், வானரங்கள், நாய்கள், பூனைகள், வேங்கைப்புலிகள், சிங்கங்கள், நரிகள், முயல்கள் முதலாகிய ஐந்து நகமுள்ள விலங்குகளை யெல்லாம் சிருட்சிசெய்து, குற்ற மில்லாத ஆமா மிருகங்கள், கபிலைப் பசுக்கள், வலிய கரடிகள், கஸ்தூரி மிருகங்கள், சொல்லப்படுகின்ற கலைமான்கள், உயர்ந்த மரைகள், நாவி மிருகங்கள் முதலாகிய விலங்கு வருக்கங்களை யெல்லாம் சிருஷ்டித்தருளினார். எ—று (யகூ)

அன்னமயில் சரபமுடன் ககபதிசக் கரவாக மசுணங் கிள்ளை,
பொன்னவிர்சி லாமுகிசா தகப்பறவை சாரிகைசெம் போத்துநாரை,
உன்னமகிழ் குயில்கழுகு பருந்தன்றில் சிச்சிலிவல் லூறு காக்கை,
வன்னமலி சிவல்காடை கொக்காந்தை கோழிபுறு வானம்பாடி.

இ—ரை.—பின்னும் அந்த விஸ்வேஸ்வரனானவர்; அன்னங்கள், மயில்கள், சரபங்கள், கருடப் பக்ஷிகள், சக்கரவாகங்கள், அசுணங்கள், கிளிகள், அழகு விளங்காநின் நிலாமுகிப் பக்ஷிகள், சாதகப் பக்ஷிகள், நாகணவாய்ப்புட்கள், செம்பகங்கள், நாரை கள், நினைத்தவுடன் மகிழ்ச்சியைத் தருகின்ற குயில்கள், கழுகுகள், பருந்துகள், அன் றிற் பக்ஷிகள், சிச்சிலிப் பக்ஷிகள், வல்லூற்றுப் பக்ஷிகள், காக்கைகள், மிகுந்த நி

முள்ள பகன்றைப்பக்ஷிகள், காடைகள், கொக்குகள், ஆந்தைகள், கோழிகள், புறுக் கள், வானம்பாடிகள். எ—று (உ0)

மருவுகவு தாரியொடு கூகைகா னங்கோழி வலிய னுள்ளான்,
பெருகுதூக் கணங்குருவி யூர்க்குருவி பெருநாரை பிறங்கு வண்டீ,
திருகுதலி லாமசக மின்மினியிந் திரகோபந் தேனீ விட்டில்,
பொருவறுபொய்யாப்புள்முதற்புள்ளினமெலாஞ்சிருட்டிபுரிந்திட்டானே.

இ—ரை.—பொருந்திய கவுதாரிகள், கோட்டான்கள், கானங் கோழிகள், கரிக்கு ருவிகள், உள்ளான்கள், பெருகிய தூக்கணங் குருவிகள், ஊர்க்குருவிகள், பெருநாரை கள், விளங்குகின்ற வண்டுகள், ஈக்கள், மாறுபடாத கொசுக்கள், மின்மினிப் பூச்சிகள் இந்திரகோபப் பூச்சிகள், தேன் வண்டுகள், ஈ வண்டுகள், விட்டிற் பூச்சிகள், ஒப்பற்ற பொய்யாப்புட்கள் முதலாகிய பறவை வருக்கங்களை யெல்லாஞ் சிருஷ்டித்தருளினார். எ—று. (உக)

டைசெயும்வெங் கொடியவிட மொழுகுபுழை முள்ளெயிற்றேடுத்திவாய்ந்து,
பிரிவுறுவன் பணப்பகுவாயப் பன்னகத்தின் வருக்கமெலாம்விதித்தல்செய்து,
திரிதருபல் வகையெறும்பு தேளோந்தி யணில்கிரி சிகரி பல்லி,
பரவுறுமர்க் குனமுடும்பு கறையானு தியவனைத்தும் படைத்தான் மன்னோ.

இ—ரை.—பின்னும் அந்தவிஸ்வேஸ்வரனானவர், சொல்லப்பட்ட வெவ்விய கொ டுமையையுடைய விஷ மொழுகுகின்ற துளைபொருந்திய கூர்மையாகிய பற்களையும், ரும் புள்ளிகள் பொருந்தி விரிந்த வலிய படத்தையும், பிளப்பாகிய வாயையுமு டைய பாம்பு வருக்கங்களை யெல்லாஞ் சிருஷ்டிசெய்து, திரிகின்ற பலவித எறும்பு கள், தேள்கள், ஓந்திகள், அணில்கள், கீரிப்பிள்ளைகள், எலிகள், பல்லிகள், சொல்லப் படுகின்ற மோட்டுப் பூச்சிகள், உடும்புகள், செல்லுகள் முதலாகிய ஊர்வன ஜெந்து வருக்கங்களெல்லாஞ் சிருஷ்டித்தருளினார். எ—று (உஉ)

பகருமுயர் வலம்புரியோ டிடம்புரிநற் சலஞ்சலஞ்சீர்ப் பணில நத்தை,
மகாமுடன் றிமிலைதிமிங் கிலந்திருக்கை மயிலையிறுன் மலங்கு வாளை,
நிகாருவன் மீன்றவளை சேல்கிளிஞ்சி னண்டாரா னெடுமீனட்டை,
புகல்கமட மாதியநீர் வாழுயி ரெலாஞ்சிருட்டி புரிவிற் செய்தான்.

இ—ரை.—பின்னும், அந்த விஸ்வேஸ்வரனானவர், உயர்வாகச் சொல்லப்படுகின்ற வலம்புரிச் சங்கங்கள், இடம்புரிச் சங்கங்கள், நல்ல வலம்புரியாயிரஞ்சூழ்ந்ததாகிய சலஞ்சலங்கள், சிறப்பினையுடைய சங்கங்கள் நத்தைகள், மகர மீன்கள், திமிலை மீன் கள், யானையை விழுங்குவதாகிய திமிங்கல மீன்கள், திருக்கை மீன்கள், மயிலை மீன்கள், இறால் மீன்கள், மலங்கு மீன்கள், வாளை மீன்கள், ஒப்பில்லாத முதலைகள், தவளைகள், சேல் மீன்கள், கிளிஞ்சில்கள், நண்டுகள், ஆரால் மீன்கள், நெடு மீன் கள், அட்டைகள், சொல்லுகின்ற ஆமைகள் முதலிய நீர்வாழ்கின்றனவாகிய உயிர் வரு க்கங்களை யெல்லாஞ் அன்புடனே சிருஷ்டித்தருளினார். எ—று. (உங)

சந்தனங்கூ விளங்கடுக்கை குருந்தரசு தாதகியால் சம்புவேம்பு,
சுந்தரப்பன் னீர்கடம்பு பாதிரிகுங் குமங்கமுக சோகு தென்னை,
நந்தலிலா மந்தாரை வேங்கையகில் புளிவாகை நறும்பூம் புன்னை,
சிந்தைமகி ழிருவாட்சி சண்பகங்கோங் கனிச்சமுடன்செருந்திவெட்சி.

இ-ரை.—பின்னும் அந்த விஸ்வேஸ்வரனனவர், சந்தன மரங்கள், வில்வ மரங்கள், கொன்றை மரங்கள், குருந்த மரங்கள், அரச மரங்கள், ஆத்தி மரங்கள், ஆல விருக்ஷங்கள், நாவல் மரங்கள், வேப்ப மரங்கள், அழகிய பன்னீர் மரங்கள், கடம்ப விருக்ஷங்கள், பாதிரி மரங்கள், குங்கும மரங்கள், கமுக மரங்கள், அசோக விருக்ஷங்கள், தென்னை மரங்கள், கெடாத மந்தாரை மரங்கள், வேங்கை மரங்கள், அகில் மரங்கள், புளிய மரங்கள், வாகை மரங்கள், அழகிய நல்ல புன்னை மரங்கள், மனமகிழ்ச்சியைத் தருகின்ற இருவாக்ஷி மரங்கள், சண்பக மரங்கள், கோங்கு மரங்கள், அனிச்ச மரங்கள், செருந்தி மரங்கள், வெக்ஷி மரங்கள், எ-று. (உச)

இலந்தைமா துளைபாலை கடுவழிஞ்சி யித்திபனை யிலுப்பை தேக்கு,
வலந்தருவேய் மருதிலவு நறும்பனச மாவீஞ்சு வாழை யாதி,
பொலந்தருபைந்தருக்களொடுபூண்டுகள்புல்லுகள்கொடிகள்புதர்களென்ன,
நிலந்தழுவத் திகழ்தருதா வரவருக்க மனைத்தினையு நிருமித் தானே.

இ-ரை.—இலந்தை மரங்கள், மாதுளை மரங்கள், பாலை மரங்கள், கடுக்காய் மரங்கள், அழிஞ்சில் மரங்கள், இத்தி மரங்கள், பனை மரங்கள், இலுப்பை மரங்கள், தேக்கமரங்கள், வெற்றியைத் தருகின்ற மூங்கில் மரங்கள், மருத மரங்கள், இலவ மரங்கள், நல்ல பலா மரங்கள், மா மரங்கள், ஈச்ச மரங்கள், வாழை மரங்கள் முதலாகிய அழகைத் தருகின்ற பசுமையாகிய விருக்ஷ வருக்கங்களும், பலவாகிய பூண்டு வருக்கங்களும், புல் வருக்கங்களும், கொடி வருக்கங்களும், புதர் வருக்கங்களும் என்று சொல்லப்பட்டு உலகத்தார் விரும்பும்படி விளங்காநின்ற தாவர வருக்கங்களை யெல்லாம் சிருஷ்டித்தருளினர். எ-று. (உரு)

நெல்லுழுந்து கேழ்வரகு தினைசோளம் பிரியங்கு நிலவு சாமை,
நல்லியவ மெள்ளுசிறு தானியங்கோ துமைபயறு நலமார்காணம்,
சொல்லுமசூ ரந்துவரை மொச்சைசணங் கடலைமுதற் றுகளிலாது,
புல்லியபற் பலவகைய தானியமெ லாஞ்சிருட்டி புரிந்தான் மாதோ.

இ-ரை.-பின்னும் அந்த விஸ்வேஸ்வரனனவர், நெல், உழுந்து, கேழ்வரகு, தினை, சோளம், பிரியங்கு விளங்குகின்ற சாமை, நல்ல யவம், எள், சிறு தானியங்கள், கோதுமை, பயறு, நன்மை பொருந்திய காணம், சொல்லுகின்ற மசூரம், துவரை, மொச்சை, சணம், கடலை முதலாகிய குற்றமில்லாது பொருந்திய பற்பல வகையான தானியங்களை யெல்லாஞ் சிருஷ்டித்தருளினர். எ-று. (உசு)

துங்கமுறு பொன்வெள்ளிசெம்பிரும்போ டீயமெனச்சொலுமு லோகம்,
பொங்குபுக ழைந்தையுங்கோ மேதகநீ லம்பவளம் புருட ராகம்,
மங்கலறு மரகதமா ணிக்கமொளிர் முத்துவயி டூரி யஞ்சேர்,
பங்கமிலா வயிரமெனத் திகழுநவ மணிகளையும் படைத்தல் செய்தான்.

இ–ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், உயர்ச்சி பொருந்திய பொன், வெள்ளி, தாம்பிரம், இரும்பு, ஈயம் என்று சொல்லப்பட்ட பஞ்ச லோகங்களையும், புகழோங்கிய கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மங்குத லில்லாத மரகதம், மாணிக்கம், விளங்குகின்ற முத்து, வைடூரியம், பழுதற்றதாகிய வச்சிரம் என்று சொல்லப்பட்டு விளங்காநின்ற பொருந்திய நவரத்தினங்களையும் சிருஷ்டி செய்தருளினர். எ–று. (௨எ)

மக்களிமை யவர்மிருகந் தாவரமிந் நான்கினுக்கு மருவு சித்தி,
மிக்கபுகழ்ச் சந்துட்டி யசத்தியவித் தையுமுறையே விதித்தல் செய்து,
தக்கவருந் தவங்கருணை யன்பினொடு சந்தோடந் தன்மா தன்மம்,
துக்கசுகஞ் சலங்கொலைகா மக்குரோ தாதிகளுந் தோன்றச் செய்தான்.

இ–ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், மனிதர்களுக்குப் பொருந்திய சித்தியையும், தேவர்களுக்குப் புகழ் மிகுந்த சந்தோஷத்தையும், மிருகங்களுக்கு அசத்தியையும், தாவரங்களுக்கு அவித்தியையும் நிருமித்து, தகுதியான அரிய தவத்தையும், அருளையும், அன்பையும், இன்பத்தையும், தருமத்தையும், அதர்மத்தையும், துக்கத்தையும், சுகத்தையும், கோபத்தையும், கொலையையும், காமக் குரோத முதலாகச் சொல்லப்பட்டவைகளையும் உண்டாகும்படி செய்தருளினர். எ–று. (௨அ)

அண்டசஞ்சு வேதசமுற் பிசஞ்சரா யுசமென்ன வறையும் யோனி,
எண்டருநான் கினிற்றேவர் மக்கணாற் கால்விலங்கோ டிலங்கு பட்சி,
மண்டியூர் வனநீரில் வாழ்வனதா வரமெனுமேழ் வகையாந் தோற்றங்,
கண்டவுயிர்ப்பேதமெண்பானான்கிலக்கந்தொகைதனையுங்காண்டல்செய்தான்.

இ–ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், அண்டஜம், சுவேதஜம், முற்பிஜம், சராயுஜம் என்று சொல்லப்பட்ட எண்ணிக்கையைத் தருகின்ற நால்வகை யோனிகளில், மேன்மேலும் தோன்றும்படியாகிய தேவர்கள், மனிதர்கள் நான்கு காலையுடைய விலங்குகள்; விளங்குகின்ற பறவைகள், நெருங்கிய ஊர்வன ஜெந்துக்கள்; நீர்வாழ் ஜெந்துக்கள், தாவரங்கள் என்று சொல்லப்படுகின்ற எழ்வகையாகக் கண்ட தோற்றங்களின் தொகை எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவ பேதங்களையும் சிருஷ்டித்தருளினர். எ–று. (௨௯)

விண்ணவர்கள் யோனிபே தங்கள்பதி னோரிலக்கம் விளம்பு மக்கள்,
நண்ணியவொன்பானிலக்கம்விலங்குகள்பத்தொளிர்பறவைநவிலோர்பத்து
தண்ணியநீர் வாழ்வனபத் தூர்வனவோர் பதினைந்து தாவ ரங்கள்,
எண்ணியபத் தொன்பதெனுஞ் சராசர மெண்பாநான் கிலக்க மாமே,

இ–ரை.—தேவர்கள் பதினொரு லக்ஷம், சொல்லுகின்ற பொருந்திய மனிதர்கள் ஒன்பது லக்ஷம்; விலங்குகள் பத்து லக்ஷம், விளங்குகின்ற பறவைகள் பத்து லக்ஷம், சொல்லுகின்ற குளிர்ச்சி பொருந்திய நீர்வாழ்வன பத்து லக்ஷம், ஊர்வன பதினைந்து லக்ஷம், மதிக்கின்ற தாவரங்கள் பத்தொன்பது லக்ஷம், என்று சொல்லப்படுகின்ற சராசரங்களின் யோனி பேதங்கள் எண்பத்து நான்கு லக்ஷமாகும். எ–று. (௩௰)

தேவநராதி சிருஷ்டியுரைத்த வத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆகத்திருவிருத்தம் ௱அ௯.

ஐந்தாவது.

பிரபஞ்ச சிருட்டியுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

விரிநல மேவுசு விரத வேந்தனே,
தெரிதரு தேவந ராதி சிட்டியைப்,
பரிவொடு கூறினம் பவஞ்ச சிட்டியை,
அருமறை நாயக னாற்றல் கூறுவாம்.

இ-ரை.—மிகுந்த நன்மை பொருந்திய சுவிரத மகாராஜாவே, உமக்கு இது வரையில் தெரியத்தக்க தேவர் மக்கள் முதலாகிய சிருஷ்டிக் கிரமங்களை அன்புடனே சொன்னோம்; இனி, அரிய வேதங்களுக்குத் தலைவனாகிய விஸ்வேஸ்வரனானவர், பிரபஞ்சங்களைச் சிருஷ்டித்தருளிய கிரமங்களைச் சொல்லுகின்றோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ-று. (க)

கலிநிலைத்துறை.

ஒருவ ரும்புகழ் விச்சுவ நாயக னுலகங்,
கருது சீர்பொலி சம்புசா கங்குசை கவுஞ்சம்,
பொருவில் சான்மலி யிறலிநற் புட்கர மென்னப்,
பரவு மேழ்பெருந் தீவையு மழகுறப் படைத்தான்.

இ-ரை.—நீங்காத கீர்த்தியையுடைய விஸ்வேஸ்வரனானவர், உயர்ந்தோர்கள் மதிக்கின்ற சிறப்புப்பொருந்திய ஜம்புத்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, ஒப்பற்ற சான்மலித்தீவு, இறலித்தீவு, நல்ல புஷ்கரத்தீவு என்று சொல்லப்பட்ட பெரிதாகிய சத்த தீவுகளையும் அழகு பொருந்தச் சிருஷ்டித்தருளினர். எ-று. (உ)

உப்பு பாறதி நெய்கரும் பிரதந்தே னுதகம்,
இப்பெ ருங்கட லேழையும் படைத்தன னிதன்முன்,
செப்பு மேழ்பெருந் தீவுமித் திரைக்கட லேழும்,
துப்பி னொன்றின்பி னொன்றதாய் வரன்முறை சூழும்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், சுத்தோதகக்கடல், என்று சொல்லப்பட்ட பெரிதாகிய சத்த சமுத்திரங்களையும் சிருஷ்டித்தருளினர்; இதற்குமுன் சொல்லிய பெரிதாகிய சத்த தீவுகளும் இப்போது சொல்லிய அலைகளையுடைய சத்த சமுத்திரங்களும் ஒன்றின்பின் ஒன்றாகப் பொலிவுடனே கிரமமாகச் சூழ்ந்துகொண்டிருக்கும். எ-று. (௩)

பூமி நடுவிலிருப்பது ஜம்புத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது உவர்க்கடல், அதைச் சூழ்ந்திருப்பது சாகத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது பாற்கடல், அதைச் சூழ்ந்திருப்பது குசைத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது தயிர்க்கடல், அதைச் சூழ்ந்திருப்பது கிரவுஞ்சத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது நெய்க்கடல், அதைச் சூழ்ந்திருப்பது சான்மலித்

தீவு, அதைச் சூழ்ந்திருப்பது கருப்பஞ்சாற்றுக்கடல், அதைச் சூழ்ந்திருப்பது இறலித் தீவு, அதைச் சூழ்ந்திருப்பது தேன்கடல், அதைச் சூழ்ந்திருப்பது புஷ்கரத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது சுத்தோதகக்கடல் என்பதாம்.

அதனுக் கப்புற நிதித்தலந் தன்னையு மதைச்சூழ்,
கதிர்செய் சக்கர வாளநற் கிரியையுங் கமலம்,
இதமு றும்புறக் கடலையு மிருணிலந் தனையும்,
துதிசெயப் பெருங் கருணையிற் படைத்தனன் றுலங்க.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனானவர், மேற் சொல்லிய சுத்தோதகக்கடலுக்குப் புறத்தில் சூழ்ந்திருக்கின்ற காஞ்சன பூமியையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற ஒளிவீசுகின்ற நல்ல சக்கரவாளக்கிரியையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற இனிமைபொருந்திய ஜலத்தையுடைய பெரும்புறக்கடலையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற இருட்பூமியையும் யாவருங் கொண்டாடும்படி விளங்கப் பெருங் கருணையுடனே சிருஷ்டித்தருளினர். எ-று. (௪)

இலகு நாவற்றீ விலக்கமொன் றதற்கதற் கிரட்டி,
அலைவின் மற்றுள தீபமாங் கடல்களு மற்றே,
குலவு தீபமேழ் புணரியேழ் களுமிரு கோடி
உலைவி லாறென்ப திலக்கம்யோ சனையுள வாமே.

இ-ரை.—விளங்காநின்ற ஜம்புத்தீவின் விஸ்தாரமானது:—ஒரு இலக்ஷம் யோசனையாகும், இதற்குப் புறத்திலுள்ள அலைவில்லாத தீவுகள் ஒன்றுக்கொன்று இரட்டிப்பாகும்; கடல்களும் அப்படியே ஆகும். கொண்டாடப்படுகின்ற சத்த தீவுகளும் சத்த சமுத்திரங்களும் கூடிய யோசனை கெடாத இரண்டு கோடியே ஐம்பத்து நான்கு லக்ஷமாகும். எ-று. (௫)

நிதித்த லம்பதின் கோடியா நேமிவெற் பயுதம்,
விதித்தி டும்பெரும் புறக்கடல் கோடியின் மேலும்,
மதித்த சீரிரு பத்தியே ழிலக்கமாய் வயங்கும்,
கதித்த காரிருட் பூமியி னெல்லையுங் கரைவாம்.

இ-ரை.— மேற்சொல்லிய சத்ததீவு சத்தசாகரங்களுக்குப் புறத்திலே காஞ்சன பூமியானது, பத்துக்கோடி யோசனை; அதற்குப்புறத்தில் சக்கரவாளகிரி, பதினாயிரம் யோசனை; அதற்குப்புறத்தில் விதிக்கப்பட்ட கடல்களுக் கிறைமைபூண்ட பெரும்புறக்கடல் எண்ணிக்கையுடைய கோடியே யிருபத்தேழு லக்ஷம்யோசனையாகச் சிறந்து விளங்கும்; அதற்குப்புறத்தி லிருக்கின்ற மிகுந்த அச்சத்தைத் தருகின்ற இருட் பூமியின் அளவைகளும் சொல்வாம். எ-று. (௬)

விரியி ருட்புவி பேழைந்து கோடியின் மேலும்,
பாவு மீரொன்பா னிலக்கமோ டயுதமொன் பானும்,
முரிவில் பித்திகை கோடியா மேருவே முதலாச்,
சரிநி லந்திசை தொருமைம்பான் கோடியோ சனையே.

இ-ரை.—மேற்சொல்லிய விஸ்தாரமாகிய இருட் பூமியானது சொல்லப்பட்ட முப்பத்தைந்து கோடியே பதினெட்டு லக்ஷத்துத் தொண்ணூறாயிரம் யோசனையாகும்; கெடாத அண்டப்பித்திகைக்கனம், கோடி யோசனையாகும்; மகாமேரு முதலாக அண்டப்பித்திகை வரையில் நிலமானது எந்தத் திக்கிலும் சரியாக ஐம்பதுகோடி யோசனையாகும். எ-று. (எ)

ஜம்புத்தீவு லக்ஷம் யோசனை, உவர்க்கடல் லக்ஷம் யோசனை, சாகத்தீவு இரண்டு லக்ஷம், பாற்கடல் இரண்டுலக்ஷம், குசைத்தீவு நான்கு லக்ஷம், தயிர்க்கடல் நான்கு லக்ஷம், கிரவுஞ்சத்தீவு எட்டு லக்ஷம், நெய்க்கடல் எட்டு லக்ஷம், சான்மலித்தீவு பதினாறு லக்ஷம், கருப்பஞ்சாற்றுக்கடல் பதினாறு லக்ஷம், இறலித்தீவு முப்பத்திரண்டு லக்ஷம், தேன்கடல் முப்பத்திரண்டு லக்ஷம், புஷ்கரத்தீவு அறுபத்துநான்கு லக்ஷம், சுத்தோதகக்கடல் அறுபத்துநான்கு லக்ஷம், காஞ்சனபூமி பத்துக்கோடி, சக்கரவாளகிரி பதினாயிரம், பெரும்புறக்கடல் கோடியே யிருபத்தேழு லக்ஷம், இருட்பூமி முப்பத்தைந்து கோடியே பதினெட்டு லக்ஷத்துத் தொண்ணூறாயிரம், அண்டச்சுவற்றுக் கனம் கோடி ஆக ஐம்பது கோடி யோசனை என்பதாம்.

நேமி சூழ்தரு நாவலந் தீவிடை நிலவும்,
தாமரைப் பொகுட் டனையபொன் மேருவைத் தந்தான்,
பூமி யாழ்ந்திய தெண்ணிரண் டாயிரம் புவிமீ,
தேம வாயிர மெண்பத்து நான்குயோ சனையே.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனவர், கடலாற் சூழப்பெற்ற ஜம்புத்தீவின் நடுவில் செந்தாமரைப் பொகுட்டுப்போல விளங்காநின்ற செம்பொன்னாகிய மகாமேருகிரியைச் சிருஷ்டித்தருளினார்; அந்த மகாமேருகிரியானது, பூமியிற் பதினாறாயிரம் யோசனை ஆழ்ந்திருக்கும், பூமியின்மேல் எண்பத்து நான்காயிரம் யோசனை உயர்ந்திருக்கும். எ-று. (அ)

இன்ன மேருமேற் பரப்புமுப் பானிரா யிரமாம்,
பன்னு யோசனை பராரையி னளவதிற் பாதி,
உன்னு மேகலை மூன்றுள வாமத னுச்சி,
மன்னு மேகலை தனிற்பல சிகரங்கள் வயங்கும்.

இ-ரை.—இத்தன்மையாகிய மகாமேருகிரியின் மேற்பரப்பு முப்பத்தீராயிரம் யோசனையாகும், சொல்லுகின்ற அதன் அடிப்பரப்பு பதினாறாயிரம் யோசனையாகும், அதில் யாவருங் கருதுகின்ற மூன்றுமேகலையுளவாகும், அவற்றுள் நடுமேகலையிலே பலவாகிய சிகரங்கள் நிலைபெற்று விளங்கிக்கொண்டிருக்கும். எ-று. (கூ)

வயங்கு மேருவி னடுவண்ம னோவதி மேல்பால்,
தயங்கு வைகுந்தம் வடகிழக் கினிற்றனிக் கயிலை,
இயங்கு றுந்திசை யெட்டினிந் திரன்முத லெண்மர்,
முயங்கி வாழ்சின கரங்களும் படைத்தனன் முதல்வன்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனவர், விளங்காநின்ற அம்மகாமேரு நடுவில் பிர்மா வாசஞ்செய்வதற்கு மனோவதி நகரையும், அதன் மேல்பாகத்தில் விஷ்ணு

வாசஞ் செய்வதற்குப் பிரகாசிக்கின்ற வைகுந்த நகரையும், அதன் வடகீழ்பாகத்தில் சிவபெருமான் வாசஞ்செய்வதற்கு ஒப்பில்லாத கயிலாச நகரையும், அதன் எட்டுத் திசைகளில் ஒளிசெய்கின்ற இந்திரன் முதலாகச் சொல்லப்பட்ட திக்குப்பாலகர் எண் மர்கள் தனித்தனி பொருந்தி வாசஞ்செய்வதற்கு ஆலயங்களையும் சிருஷ்டித்தருளி னர். எ-று. (ய)

அன்ன தின்கிழக் காதிநாற் றிசையின்மந் தரஞ்சீர்,
துன்னு கந்தமா தனம்விபு லஞ்சுபார் சுவமென்,
றின்ன வெற்புநான் கையும்படைத் தனனிவை மேனி,
மன்னு வெண்மைபொன் னீலமா துளைநறு மலரே.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், அத்தன்மையாகிய மகாமேருவின் கீழ்த் திசையில் வெண்மைநிறம் பொருந்திய மந்தரகிரியையும், தென்றிசையில் பொன்னி றம் பொருந்திய சிறப்பு மிகுந்த கந்தமாதனகிரியையும், மேல்திசையில் நீலநிறம் பொருந்திய விபுலகிரியையும், வடதிசையில் மாதுளைமலர்நிறம் பொருந்திய சுபார்சுவ கிரியையும், இத்தன்மையாகிய நான்கு மலைகளையும் நிலை பெரும்படி சிருஷ்டித்தரு ளினர். எ-று. (யக)

விளங்கு நாற்றிசை மால்வரை பரப்பொடு மேல்கீழ்,
களங்கொன் மேருவிற் பாதியாங் கடம்புசம் பரசால்,
துளங்கு மவ்வரை களினுயர் வோசனை சொல்லின்,
வளங்கொன் சம்புவீ ராயிர மற்றதா யிரமே.

இ-ரை.—மேற்சொல்லிய நான்கு திக்குகளில் பிரகாசியாநின்ற பெருமை பொருந் திய மலைகளினது மேற்பரப்பும் கீழ்ப்பரப்பும் பூமியில் மேல் உயரமும், பூமியின் கீழ் அழுந்திய அளவும், இருளை நீக்குகின்ற ஒளியையுடைய மகாமேருவினது பிரமாணம் எவ்வளவோ, அதிற் பாதியாகும், விளங்காநின்ற மேற்சொல்லிய மலைகளுக்குள் மந் தரகிரியில்லிருக்கின்ற கடம்ப விருக்ஷம் ஆயிரம் யோசனை உயரமும், கந்தமாதனகிரியி லிருக்கின்ற நாவல் விருக்ஷம் இரண்டாயிரம் யோசனை உயரமும், விபுலகிரியிலிருக் கின்ற அரசவிருக்ஷம் ஆயிரம் யோசனை உயரமும், சுபார்சுவகிரியிலிருக்கின்ற ஆலவிரு க்ஷம் ஆயிரம் யோசனை உயரமுமாகச் செழுமையுடனே விளங்கும். எ-று. (யஉ)

நாவ றென்புடை நின்றகா ரணத்தினு னுவற்,
றீவெ னப்பெயர் பெற்றதித் தருவின்றீங் கனிநீர்,
ஒவி லாறதாய் மேருவைச் சூழ்ந்துதக் கினிற்சென்,
றுவன் மேயசாம் பூனதப் பெயருட னவிரும்.

இ-ரை.—மேற்சொல்லிய ஜம்புவிருக்ஷமானது தென்பாகத்தில் விளங்கிய காரணத் தினலே இந்தத்தீவானது ஜம்புத்தீவு என்கின்ற பெயரை அடைந்தது; அந்த ஜம்பு விருக்ஷத்திற் காய்த்துப் பழுத்து உதிர்ந்த மதுரமாகிய ரசமானது, கெடாத ஆருகி மகாமேருவைச் சூழ்ந்து வடக்கே சென்று யாவரும் விரும்பத்தக்க சாம்பூனத நதி யென்று பெயர்பெற்று விளங்கும். எ-று. (யங)

திகழ்கு ணக்கினின் மாலிய வான்குட திசையில்,
புகரில் கந்தமா தனமவா சியிற்பொலி நிசதம்,
நிகழ்பொற் கூடநல் லிமம்வட பாலுயர் நீலம்,
பகர்சு வேதநீள் சிருங்கமென் வரைகளைப் படைத்தான்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், மேற்சொல்லிய மலைகளுக்குக் கீழ்பாகத்தில் மாலியவான் என்னு மலையையும், மேல்பாகத்தில் குற்றமில்லாத கந்தமாதனம் என்னு மலையையும், தென்பாகத்தில் விளங்காநின்ற நிஷதம் ஒளி செய்கின்ற எமகூடம் அழகிய இமயம் என்று சொல்லப்பட்ட மூன்று மலைகளையும், வடபாகத்தில் உயர்வாகிய நீலம் துதிபெற்ற சுவேதம் நெடிய சிருங்கம் என்றுசொல்லப்பட்ட மூன்று மலைகளையும், சிருஷ்டித்தருளினுர். எ-று. (யச)

மேலுரைத்திடு நாலிரு வரைகளின் மேனி,
நீலம் பொன்மணி கனகநற் பனியொளிர் நீலம்,
ஏலு முஞ்சிதஞ் சந்திர காந்தமா மிவைகள்,
தால மீதிலீ ராயிரம் யோசனை தயங்கும்.

இ-ரை.—மேற்சொல்லிய அஷ்டகுலாசலங்களில் மாலியவான் நீல நிறத்தையும், கந்தமாதனம் பொன்னிறத்தையும், நிஷதம் மணிநிறத்தையும், ஏமகூடம் கனக நிறத்தையும், இமயம் பனிநிறத்தையும், நீலம் நீலநிறத்தையும், சுவேதம் வெண்ணிறத்தையும், சிருங்கம் சந்திரகாந்தநிறத்தையும், பொருந்திப் பூமிமின்மேல் இரண்டாயிரம் யோசனை வானத்தில் ஓங்கி விளங்கும். எ-று. (யரு)

இவற்றுண் மாலிய வான்கந்த மாதன மிரண்டும்,
உவப்பு றுந்ததந் தனித்தனி யோசனை யயுதம்,
நவிற்று மூன்றிரு நகங்களுந் தனித்தனி யகலம்,
சுவர்க்க ரும்புகழ் யோசனை யிராயிரந் துலங்கும்.

இ-ரை.—இவ்விதமாகிய அஷ்டகுல பருவதங்களுக்குள் பொலிவினையுடைய மாலியவான் கந்தமாதனம் என்னும் இரண்டு மலைகளின் அகலம் தனித்தனி பதினுயிரம் யோசனையாகும். மற்றுள்ள ஆறு மலைகளின் அகலம் தேவர்களும் புகழ்ந்து சொல்லப்பட்ட இரண்டாயிரம் யோசனையாக விளங்கும். எ-று.

இவற்றுள் தென்பாகத்திலிருக்கின்ற நிஷதம், ஏமகூடம், இமயம் என்னு மூன்று மலைகளும் கிழக்கு மேற்கில் சமுத்திரத்தைக்கூடி நிற்கும்; அவ்விதமாகவே வடபாகத்திலிருக்கின்ற நீலம், சுவேதம், சிருங்கம் என்னு மூன்று மலைகளும் கிழக்கு மேற்கில் சமுத்திரத்தைக் கூடி நிற்கும்.

இவைகளில் வடகடல் முதல் சிருங்கம் வரையில் குருவருஷம், சிருங்கமுதல் சுவேதம் வரையில் இரணிய வருஷம், சுவேதமுதல் நீலம் வரையில் இரம்மியவருஷம், மகாமேருவைச் சூழ்ந்திருக்குமிடம் இளாவிருத வருஷம், மேல்கடல்முதல் கந்தமாதனம் வரையில் கேதுமால் வருஷம், கீழ்கடல் முதல் மாலியவான் வரையில் பத்திர வருஷம், நிஷதமுதல் ஏமகூடம் வரையில் அரிவருஷம், ஏமகூட முதல் இமயம் வரையில்

கிம்புருஷ வருஷம், இமயமுதல் தென்கடல் வரையில் பாரத வருஷம் என்று சொல்லப்பட்டு நவ கண்டங்களும் விளங்குமென்பதாம். (யசு)

சோம கஞ்சும னந்துரோ ணந்தகஞ் சுரபி,
கோம தங்கிர வுஞ்சமிந் திரமொளிர் குமுதம்,
வாம னம்வப்பி ராசன மிரமிய மயிடம்,
ஏம வுன்னதந் துந்துபி யருணஞ்சந் திரமே.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனவர், பூமியினிடத்தில் விளங்காநின்ற சோமகம், சுமனம், துரோணம், தகம், சுரபி, கோமதகம், கிரவுஞ்சாம், இந்திரம், குமுதம், வாமனம், வப்பிராசனம், இரமியம், மயிடம், இன்ப மிகுந்த உன்னதம், துந்துபி, அருணம், சந்திரம். எ—று. (யஎ)

மலயம் விந்தம கேந்திரஞ் சையம்வ ராகம்,
அலகில் சீர்பொலி கயிலைநீ ளுதயமோ டத்தம்,
நிலவு மானசோத் தரமுட னளவற நிகழ்பற்,
பலபருப்பதங் களையுமா நிலமிசைப் படைத்தான்.

இ—ரை.—மலயம், விந்தம், மகேந்திரம், சையம், வராகம், அளவில்லாத சிறப்பினையுடைய கயிலை, நெடிதாகிய உதயம், அத்தம் பிரகாசியாநின்ற மானசோத்தரம் என்னும் பெயர்கள் பொருந்திய மலைகளோடு அளவில்லாதனவாகப் பொலிகின்ற பல பல பெயர்களையுடைய பருவதங்களை யெல்லாஞ் சிருஷ்டித்தருளினர். எ—று. (யஅ)

விண்ணு ளோர்களுஞ் சித்தரு முனிவரும் விழையும்,
பண்ணி யைந்தமேம் படுபுகழ்ப் பற்பல பதியும்,
எண்ணி லாதொளிர் நதிகளு நதங்களு மிணையில்,
புண்ணி யந்தரு தீர்த்தமு மளவில புரிந்தான்.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனவர், பூமியினிடத்தில் தேவர்களும், சித்தர்களும், முனிவர்களும், விரும்பத்தக்க தகுதியாகிய மேன்மையும் புகழையுமுடைய பல பல க்ஷேத்திரங்களையும், அளவில்லாதனவாய் விளங்குகின்ற நதிகளையும், நதங்களையும் ஒப்பற்ற தூய்மையைத் தருகின்ற எண்ணில்லாத தீர்த்தங்களையுஞ் சிருஷ்டித்தருளினர். எ—று. (யகூ)

மான சோத்தர மெனப்புகல் வரையினெண் மருங்கும்,
வான வர்க்கிறை தீமந னிருதியே வருணன்,
ஈன மில்வளி தனதனீ சானனெண் மருக்கும்,
தான மீரிரு நான்கையும் படைத்தனன் றக்கோன்.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனவர், புஷ்கரத்தீவின் முடிவில் ஐம்பதாயிரம் யோசனைப் பரப்பில் வட்டமாக விளங்காநின்ற மானசோத்தரமென்று சொல்லப்பட்ட மலையின் அஷ்ட திக்குகளில் முறையே இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், குற்றமில்லாத வாயு, குபேரன், ஈசானன் என்று சொல்லப்பட்ட எண்மர்களுக்கும், எட்டு நகரங்களையும் சிருஷ்டித்தருளினர். எ—று. (உய)

கணத்தர் குய்யகர் மருத்துகள் புயல்கள்கந் தருவர்,
மணத்த விஞ்சைய ரிரவியிந் திரன்கனன் மறலி,
உணக்க மற்றிடு நிருதிநீர்க் கிறையவ னுலவை,
குணக்கு பேரனீ சானற்கு முலகுகள் குயிற்றி.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், பூமிக்குமேல் பைசாச கணங்கள் வசிக்கின்ற உலகையும், குய்யகருலகையும், வாயுக்கள் சஞ்சரிக்கு முலகையும், சப்த மேகங்களும் வாசஞ்செய்யு முலகையும், கந்தருவருலகையும், மகிழ்ச்சியையுடைய வித்தியாதர ருலகையும், சூரியனுலகையும், இந்திரனுலகையும், அக்கினியுலகையும், இயமனுலகையும், வாட்டமில்லாத நிருதியுலகையும், வருணனுலகையும், வாயுவுலகையும், நற்குணம் பொருந்திய குபேரனுலகையும், ஈசானனுலகையுஞ் சிருஷ்டித்தருளி, எ-று. (உக)

திங்க டாரகை புந்திசுக் கிரனொடு செவ்வாய்,
துங்க வான்குரு மந்தனே ழிருடிக டுருவன்,
இங்கி வர்க்கெலாந் தனித்தனி மண்டில மியற்றிப்,
பொங்கு சீர்ப்புவ ருலகமு மகிழ்வொடு புரிந்தான்.

இ-ரை.—மேற்சொல்லிய உலகங்களுக்குமேல் சந்திர மண்டிலமும், அதற்குமேல் நக்ஷத்திரமண்டிலமும், அதற்குமேல் புதமண்டிலமும், அதற்குமேல் சுக்கிரமண்டிலமும், அதற்குமேல் அங்காரகமண்டிலமும், அதற்குமேல் உயர்ந்த குருமண்டிலமும், அதற்குமேல் சனிமண்டிலமும், அதற்குமேல் சப்தரிஷிகள் வசிக்கின்ற மண்டிலமும், அதற்குமேல் துருவமண்டிலமும், தனித்தனி சிருஷ்டித்தருளி, அதற்குமேல் மிகுந்த சிறப்பினையுடைய புவருலகமும், சந்தோஷத்துடனே சிருஷ்டித்தருளினர். எ-று. (உஉ)

பொன்னு லோகமு முயர்மக லோகமும் புனித,
மன்னு நற்சன லோகமு மகிழ்தவ வுலகும்,
மின்னு சத்திய வுலகரி யுலகான் விளங்கும்,
பன்னு லோகமும் விச்சுவ வுலகமும் படைத்தான்.

இ-ரை.—மேற்சொல்லிய புவர்லோகத்துக்குமேல் தேவேந்திரன் அரசாக்ஷி செய்கின்ற சுவர்க்கலோகமும், அதற்குமேல் முனிவர்கள் வசிக்கின்ற மகலோகமும், அதற்குமேல் பரிசுத்தம் பொருந்திய பிதுர் தேவர்கள் வசிக்கின்ற நல்ல ஜனலோகமும், அதற்குமேல் ஞானசொரூபிகளாயுள்ள மகத்துக்கள் இன்புறுகின்ற தவலோகமும், அதற்குமேல் விளங்காநின்ற சத்தியலோகமும், அதற்குமேல் விஷ்ணு லோகமும், அதற்குமேல் சொல்லுகின்ற சிவலோகமும், அதற்குமேல் விளங்கும் விஸ்வலோகத்தையும் சிருஷ்டித்தருளினர். எ-று. (உரு)

வைய கத்தின்மேற் கணத்துல கதன்மிசை வயங்கும்,
குய்ய கர்க்குல கதன்மிசை மருத்துல கதன்மேல்,
பெய்யு மாமுகிற் குலகுமேற் பிறங்குகந் தருவர்,
மெய்யு லாமுல கதன்மிசை விஞ்சைய ருலகே.

இ-ரை.—பூமிக்குமேல் கணத்துலகம், அதற்குமேல் குய்யகருலகம், அதற்குமேல் மருத்துலகம், அதற்குமேல் வருஷிக்கின்ற பெருமை பொருந்திய மேகவுலகம், அதற்குமேல் பிரகாசிக்கின்ற கந்தருவர் வசிக்கின்ற வுலகம், அதற்குமேல் விஞ்சையருலகமும் விளங்கும். எ-று. (உச)

இங்கி தற்குமேற் சுரநதி செல்லிட மிதன்மேல்,
செங்க திர்க்குமண் டிலமவை நிலமுதற் செறிந்த,
துங்க யோசனை யிலக்கமா மதன்மிசைத் துலங்கும்,
திங்கண் மண்டில மிலக்கமாந் திகழிதன் மீதே.

இ-ரை.—மேற்சொல்லிய விஞ்சையருலகத்துக்கு மேல் ஆகாயகங்கை விளங்குமிடம், அதற்குமேல் சூரியன் வாசஞ்செய்யு மண்டிலம், அச்சூரியமண்டிலமானது பூமி முதலாகப் பொருந்திய உயர்ச்சி இலக்ஷம் யோசனையாகும், அதற்குமேல் இலக்ஷம் யோசனையில் சந்திரமண்டிலம் விளங்கும், பிரகாசிக்கின்ற அதற்குமேல். எ-று. (உரு)

இலக்கந் தாரகை மண்டில மதன்மிசை யிலகி,
ரிலக்க மேதையின் மண்டில மற்றதன் மிசையீ,
ரிலக்கஞ் சுக்கிரன் மண்டில மாகுமீ தெழிலீ,
ரிலக்கம் பூமகன் மண்டில மாமதன் மிசையே.

இ-ரை.—இலக்ஷம் யோசனை நக்ஷத்திர மண்டிலம், அதற்கு மேல் இரண்டு லக்ஷம் யோசனை புதன்மண்டிலம், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை சுக்கிரன் மண்டிலம், அழகிய அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை அங்காரகன் மண்டிலம், அதற்குமேல், எ-று. (உசு)

இலக்க மோரிரண் டியர்குரு மண்டில மிதன்மீ,
திலக்க மோரிரண் டாஞ்சனி மண்டில மிதன்மீ,
திலக்க மொன்றெழு முனிவரர் மண்டில மிதன்மேல்,
இலக்க மொன்றினிற் சிறந்திடுந் துருவன்மண் டிலமே.

இ-ரை.—இரண்டு லக்ஷம் யோசனை மேலாகிய குருமண்டிலம், இதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை சனிமண்டிலம், இதற்கு மேல் இலக்ஷம் யோசனை சப்தரிஷி மண்டிலம், இதற்குமேல் ஒரு லக்ஷம் யோசனையில் துருவன் மண்டிலம் சிறந்திருக்கும். எ-று. (உஎ)

பூத லத்தின்மேற் பதினைந்தி லக்கமாம் புவரென்,
ரேது லோகமற் றதன்மிசை யெண்பதி னுடனே,
ஏத மற்றவைந் திலக்கமாஞ் சுவருல கிதனின்,
மீதி லார்மக வுலகிரு கோடியா மிசையே.

இ-ரை.—பூமி முதற்கொண்டு சொல்லப்பட்ட புவர்லோகபரியந்தம் பதினைந்து லக்ஷம் யோசனையாகும், அதற்குமேல் சுவர்க்கலோகம் எண்பத்தைந்து லக்ஷம் யோசனையாகும், குற்றமில்லாத அவ்வுலகத்திற்கு மேல் மகலோகம் இரண்டு கோடி யோசனையாகும், அதற்குமேல், எ-று. (உஅ)

கோடி நாலிரண் டாஞ்சன லோகமேற் கோதில்,
கோடி பன்னிரண் டினிற்றவ வுலகுகூ ரீரெண்,
கோடி மீதினிற் சத்திய வுலகுமேற் குலவுங்,
கோடி மூன்றினிற் குறைவறு மாலுல காமே.

இ-ரை.—சனலோகம் எட்டுக்கோடி யோசனையாகும், அதற்குமேல் குற்றமில்லாத தவலோகம் பன்னிரண்டுகோடி யோசனையாகும், அதற்குமேல் மிகுந்த புகழையுடைய சத்தியலோகம் பதினாறுகோடி யோசனையாகும், கொண்டாடப்பட்ட அதற்குமேல் குறைவில்லாத விஷ்ணுலோகம் மூன்றுகோடி யோசனையாகும். எ-று. (உகூ)

கோடி மூன்றின்மே லரனுல கதன்மிசைக் குறைவில்,
கோடி நான்கில்விச் சுவவுல கதன்மிசைக் குலவோர்,
கோடி யண்டத்தின் பித்திகைக் கனமதாங் கோதில்,
கோடி யைம்பதா நிலமுதற் கூடும்யோ சனையே.

இ-ரை.—மேற்சொல்லிய விஷ்ணுலோகத்துக்குமேல் சிவலோகம் மூன்று கோடி யோசனையாகும், குறைவற்ற அதற்குமேல் விஸ்வலோகம் நான்குகோடி யோசனையாகும், அதற்குமேல் பொருந்திய அண்டப்பித்தியின் கனம் ஒருகோடி யோசனையாகும், பழுதில்லாத பூமி முதல் அண்டப்பித்திக்கனம் வரையில் கூடிய யோசனை ஐம்பது கோடியாகும். எ-று. (௩௰)

அதல மோடியர் விதலநன் கவிர்தரு நிதலம்,
சுதல நற்றரா தலமகா தலமொடு துலங்கும்,
நுதனு கின்றபா தாளமும் நொடியினி லெவரும்,
இதமு றப்படைத் தனன்புவிக் கீழுள வெல்லாம்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், யாவரும் இன்பமடையும்படி பூமியின் கீழுள்ள அதலம், மேலாகிய விதலம், அழகு விளங்காநின்ற நிதலம், சுதலம், நல்ல தராதலம், மகாதலம், பாதாளம் என்று சொல்லப்பட்ட எழுலகத்தையும் பிரகாசிக்கின்ற எல்லாவற்றையும் நொடிப்பொழுதிலே சிருஷ்டித்தருளினர். எ-று. (௩க)

ஆதியானவி ரவுரவஞ் சூகர மவீசி,
ஓத தச்சிரம் விஸசன மிலவண முரோதம்,
தீது ளார்க்குறு விலோகித மப்பிர திட்டம்,
பாத கத்தர்தாழ் தருமகாச் சுவாலமும் படைத்தான்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், முதன்மையாகிய ரவுரவம், சூகரம், அவீசி, சொல்லப்பட்ட அதச்சிரம், விஸசனம், லவணம், உரோதம், மிகுந்த தீமையுடையவர்களுக்குப் பொருந்திய விலோகிதம், அப்பிரதிஷ்டம், மகாபாவிகள் அடைகின்ற மகாச்சுவாலமுமாகிய நரகங்களைச் சிருஷ்டித்தருளினர். எ-று. (௩உ)

உருதி ராம்பம்வை தாணிதிக் கிருமிச முழலும்,
கிருமி போசனங் கிருட்டின சூத்திரந் தாலம்,
தரும மற்றவர்க் குறுசுவ போசனந் தமசு,
கருமி சேரசி பத்திர வனத்தையுங் கண்டான்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், பின்னும் ருதிராம்பம், வைதரணி, தீது மிகுந்த கிருமிசம், உழலுகின்ற கிருமிபோசனம், கிருஷ்ணசூத்திரம், தால்ம், தருமஞ் செய்யாதவருக்குப் பொருந்திய சுவபோசனம், தமசு, கருமிகள் அடையத்தக்க அசிபத்திரவனத்தையும் சிருஷ்டித்தருளினுர். எ-று. (௩௩)

தூய்மை யற்றவ ரடைந்திடு மக்கினிச் சுவாலம்,
சேய்மை யாஞ்சந்த மிசத்தொடு கிருட்டினஞ் செறிந்த,
வாய்மை சொற்றிடா ரெய்துபூ யவகமுன் மறஞ்செய்,
தீமை யோரடை நரகெலாஞ் சிருட்டிசெய் தனனுல்,

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், பின்னும் ஆசாரமில்லாதவர்கள் அடையும்படியான அக்கினிசுவாலம், ஆழத்திலிருக்கின்றதாகிய சந்தமிசம், கிருஷ்ணம், பொருந்திய உண்மை சொல்லாதவர்கள் அடைகின்ற பூயவகம் முதலாகிய பாவஞ்செய்கின்ற தீயோர்கள் அடையாநின்ற எல்லா நரகங்களையுஞ் சிருஷ்டிசெய்தருளினுர். எ-று. (௩௪)

அகனி லக்கன மெண்பஃ திலக்கமா மதன்கீழ்த்,
திகழெண் பாந்தளுஞ் சேடனுந் திண்களி றெட்டும்,
சகத லத்தினைத் தாங்கிநின் றிடும்வெளி சாற்றில்,
இகழ்வி லாவொரு கோடியே யிருபதா மிலக்கம்.

இ-ரை.—விசாலமாகிய பூமியின் கனம் எண்பது லக்ஷம் யோசனையாகும், அதன் கீழ் விளங்காநின்ற அஷ்ட நரகங்களும், ஆதிசேஷனும் பலம் பொருந்திய அஷ்ட கஜங்களும் பூமியினிடத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிற வெளியைச் சொல்லுமிடத்தில் நிந்தையில்லாத ஒருகோடியே யிருபது லக்ஷம் யோசனையாகும். எ-று. (௩௫)

அதனின் கீழொன்பா னிலக்கமா டகர்பொலி கோயில்,
அதனின் கீழுறு கனிட்டபா தலமொரெட் டிலக்கம்,
அதனின் கீழ்ப்பில மேழுமே ழொன்பதா மிலக்கம்,
அதனின் கீழ்வெளி யொன்பதிற் றிலக்கமா மதன்கீழ்.

இ-ரை.—மேற்சொல்லிய நாகலோகத்தின் கீழ் ஆடகேஸ்வரர் விளங்காநின்ற உலகம் ஒன்பது லக்ஷம் யோசனையாகும், அதன்கீழ் அசுரர், நாகர், அவுணர்கள், வாசஞ்செய்கின்ற கனிஷ்டபாதலம் எட்டு லக்ஷம் யோசனையாகும்; அதன்கீழ் அதல, விதல, சுதல, நிதல, தராதல, மகாதல, பாதாளமென்று சொல்லும் சப்தபாதலங்களும் அறுபத்து மூன்று லக்ஷம் யோசனையாகும், அதன்கீழ் ஆகாயம் ஒன்பது லக்ஷம் யோசனையாகும், அதன்கீழ், எ-று. (௩௬)

ஒன்றெ ழிந்தநூ றிலக்கங்கூர் மாண்டர்த முறையுள்,
குன்று றுவதன் கீழெழு நான்கதாங் கோடி,
என்று ரைத்திடு நிரயமு மிருபதோ டொன்பான்,
துன்று கோடிமேற் பன்னிரண் டிலக்கமாந் தொகையே.

இ-ரை.—கூர்மாண்டர் சிங்காதனத்திலிருந்து வாழ்கின்ற புவனம் தொண்ணூற்றொன்பது லக்ஷம் யோசனையாகும், கெடாத அதன்கீழ் அடுக்கடுக்காக இருபத்தெட்டு கோடி நரகம் பரந்திருக்கும், அப்புவனத்தின் உயர்ச்சியும் பரப்பும் பொருந்திய இருபத்தொன்பது கோடியே பன்னிரண்டு லக்ஷம் யோசனையாகும் எ-று. (ளுஎ)

அதனின் கீழ்மிகு வலிகெழு கமடமார்ந் திருக்கும்,
அதனின் கீழ்ப்புகை படலமோ ரைந்தெனுங் கோடி,
அதனின் கீழ்ச்செழுந் தணல்பதின் கோடியதாகும்,
அதனின் கீழுறு யோசனை யெல்லையு மறைவாம்.

இ-ரை.—அதன்கீழ் மிகுந்த பலம்பொருந்திய ஆதிகூர்மம் புவனத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும், அதன்கீழ்ப் புகைப்படலம் ஐந்துகோடி யோசனையாகும், அதன்கீழ் செழுமையுள்ள அக்கினிசுவாலை பத்துக்கோடி யோசனையாகும், அதன்கீழ் பொருந்திய யோசனை யளவையையுஞ் சொல்வாம். எ-று. (ளுஅ)

குலவு செய்யகா லாக்கினி யுருத்திரர் கோயில்,
இலகும் யோசனை கோடிய தாகுமா விதன்கீழ்,
நிலவு பித்திகைக் கனமொரு கோடியா நிலக்கீழ்,
உலக மைம்பது கோடியா முரைசெய்யோ சனையே.

இ-ரை.—யாவராலுங் கொண்டாடப்பட்ட அழகிய காலாக்கினி ருத்திரர் கோயில் கோடியோசனையாக விளங்கும், அதன்கீழ் விளங்காநின்ற அண்டப்பித்தியின் கனம் ஒருகோடி யோசனையாகும், சொல்லப்பட்ட பூமியின்கீழ் அண்டப்பித்தி வரையிலிருக்கின்ற உலகங்களெல்லாம் ஐம்பதுகோடி யோசனையாகும். எ-று. (ளுகூ)

பிரபஞ்ச சிருட்டி யுரைத்தவத்தியாயம்,

முற்றுப்பெற்றது,

ஆகதிருவிருத்தம். உஈஉ௰அ.

ய

ஆருவது
அதிகாரமுறைமை யுரைத்தவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

அறைதி ரைப்புவி புரந்தசு விரதமன் னவனே,
உறைத ரும்பிர பஞ்சசிட் டியிற்சில வுரைத்தாம்,
கறையி லும்பரா தியர்தமக் கின்னதி காரம்,
முறையி னிற்றரு பேரருட் டிறஞ்சில மொழிவாம்.

இ—ரை.—சப்திக்கின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற உலகமெல்லாம் பாதுகார்த்து அரசாக்ஷி செய்த சுவிரத மகாராஜாவே கேளும், நிலைபெற்றிருக்கின்ற பிரபஞ்சங்களின் சிருஷ்டிக் கிரமத்தைச் சிறிது சொன்னேம். இனி குற்றமற்ற தேவர் முதலானவர்களுக்கு இனிதாகிய அதிகாரக் கிரமங்களை விஸ்வேஸ்வரனுனவர் கிரமப்படி கொடுத்தருளிய பெருங் கருணைத் தன்மையிற் சிறிது சொல்லுகின்றேமென்ருர் காளஸ்தி முனிவர். எ—று. (க)

ஆதி யந்தமி லாததா யகண்டமா யென்றும்,
தீதி லாததாய்ச் சுயம்புவா யெங்கணுஞ் செறிந்த,
சோதி யாகிய விச்சுவப் பிரமமே சுருதி,
ஓது ருக்கொடு மிளிர்வது விச்சுவ வுலகம்.

இ—ரை.—ஆதியந்தமில்லாததாகியும், எல்லாமாகியும், எக்காலத்தும் அழிவில்லாததாயும், ஸ்வயம்புவாகியும், எவ்விடங்களிலும் நிறைந்திருக்கின்ற தேஜோமயமாகிய ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிர்மமே வேதங்களெள்ளாங் கொண்டாடப்பட்ட சகள வடிவங்கொண்டு விளங்கிக்கொண்டிருப்பது விஸ்வலோகம். எ—று. (உ)

அலகில் பேரரு ளாற்படைப் பாதியைந் தொழிலும்,
குலவச் சத்தியோ சாதமுன் முகங்களைக் கொண்டே,
இலக யன்முத லைவரை யாக்கிய விறைபல்,
லுலக மின்புறத் திகழ்வது விச்சுவ வுலகம்.

இ—ரை.—அளவில்லாத பெருங்கருணையினாலே உலகத்தில் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிர்த்தியங்களும் பிரகாசிக்கும்படி தமது சத்யோஜாதம் முதலாகச் சொல்லப்பட்ட பஞ்சானனங்களில் விளங்காநின்ற பிர்மா முதலாகச் சொல்லப்பட்ட பஞ்ச கர்த்தாக்களையும் சிருஷ்டித்தருளிய முதற்கடவுளாகிய ஸ்ரீவிஸ்வேஸ்வரனுனவர் பலவாகிய உலகங்களிலுள்ள ஆன்மகோடிகளெல்லாம் இன்பத்தை அடையும்படி பிரகாசித்துக்கொண்டிருப்பது அந்த விஸ்வலோகம். எ—று. (௩)

இந்தி ராதிவிண் ணவரய னரியர னிவர்கள்,
அந்த மேவிவாழ் பதங்க ளெலாமழி வுறினும்,
நந்தில் சீருட னழிவில தாகியெந் நாளும்,
உந்து மேன்மையிற் பொலிவது விச்சுவ வுலகம்.

இ-ரை.—இந்திரன் முதலாகிய தேவர்கள் பிர்மா, விஷ்ணு, ருத்திரன் இவர்கள் அழகு பொருந்தி வாழ்கின்ற பதவிகளெல்லாம் அழிந்த காலத்திலும், கெடாத சிறப்புடனே அழிவில்லாததாகி எக்காலத்திலும் உயர்வு பொருந்திய பெருமையுடனே பிரகாசித்துக்கொண்டிருப்பது அந்த விஸ்வலோகம். எ-று. (ச)

மருவு பற்பல வண்டபு வனசரா சரங்கள்,
கருது மின்பொடு தழைத்திட விச்சுவ கன்மா,
பொருவி லாவருட் சத்தியோ டருமறை போற்ற,
ஒருவி லாதுவீற் றிருப்பது விச்சுவ வுலகம்.

இ-ரை.—பலபலவாகப் பொருந்திய அகிலாண்ட புவன சராசரங்களெல்லாம் பெரியோர்கள் கருதுகின்ற பலவாகிய சுகத்தையும் பொருந்தித் தழைத்தோங்கும்படிக்கு விஸ்வேஸ்வரனனவர் அரிதாகிய வேதங்களெல்லாம் ஸ்தோத்திரஞ்செய்ய ஒப்பில்லாத அருட்சத்தியோடு நீங்காது சந்தோஷமாக எழுந்தருளி யிருக்கப்பெற்றது, அந்த விஸ்வலோகம். எ-று. (ரு)

வண்ண மாமல ரயனரி யரன்முனி வரரும்,
அண்ணி யன்புட னஞ்சலித் தேத்திட வன்னோர்,
எண்ண முற்றபல் வரங்கடந் தருள்புரி யிறைவன்,
உண்ண யந்துவீற் றிருப்பது விச்சுவ வுலகம்.

இ-ரை.—அழகுபொருந்திய மகத்துவ மிகுந்த செந்தாமரை மலரே ஆசனமாக வுடைய பிர்மா, விஷ்ணு, ருத்திரன், முனிஸ்ரேஷ்டர்களும் பொருந்திய அன்புடனே நமஸ்கரித்துத் துதிசெய்ய, அவர்கள் எண்ணியபடி பலவாகிய வரங்களையெல்லாங் கொடுத்து அனுக்கிரகஞ் செய்யாநின்ற தலைவனுகிய விஸ்வேஸ்வரனனவர், மனமகிழ்ச்சியுடனே எழுந்தருளியிருப்பது அந்த விஸ்வலோகம். எ-று. (சு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உன்னரிய பன்னலமுந் துன்னியவிச் சுவவுலகத் தொளியி னேங்கி,
மின்னியபன் னவமணிகள் குயிற்றுபுவில் வீசவெழில் விரிந்து நாளும்,
பன்னரிய புகழ்ச்செம்பொற் சினகரத்தி னுப்பணருட் பராயி னேடு,
மன்னியவொண்சுடரெறிக்கு மரியணையிற்றெய்வமறை வாழ்த்தெடுப்ப.

இ-ரை.—நினைத்தற்கரிய பலவித அழகும் பொருந்திய விஸ்வலோகத்தில், கிரணங்கள் விரிந்து விளங்காநின்ற பல நவரத்தினங்கள் பதிக்கப்பெற்று ஒளிவீசுவதும், விசாலமான அழகு பொருந்தியதும் எந்நாளும் யாவராலும் சொல்லுதற்கரிய கீர்த்தியை யுடையதும், செழுமையுள்ள பொன்னுல் அமைந்ததும் ஆகிய திருக்கோயிலின் நடுவில் விஸ்வேஸ்வரனனவர் தமது திருவருட் சத்தி சமேதராக அழகிய பிரகாசத்

தை வீசுகின்ற நிலை பெற்ற சிங்காதனத்தின்மீது தெய்வத்தன்மையுடைய வேதங்களெல்லாம் துதி செய்யவும், எ—று. (எ)

மேதகுசீ ரன்பொடுவிண் ணவர்கள்பல வாத்தியமு மிகமு ழக்கக்,
காதன்மிகப் பெருகுறுபற் பலவமர ரொளிகிளர்வெண் கவரி வீசக்,
கோதறுபற் பலவிமையோ ராலவட்ட நனியசைத்துக் குலவா நிற்க,
ஏதமறு தும்புருநா ரதர்வித்தி யாதரரின் னிசைகள் பாட.

இ—ரை.—மேம்பாடு பொருந்திய சிறந்த அன்புடனே பல தேவர்கள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்னும் பஞ்ச வாத்தியங்களையும் மிகுதியாகத் தொனிப்பிக்கவும், மிகுந்த விருப்பத்துடனே பெருகிய பல பல தேவர்கள் ஒளியினாலே விளங்காநின்ற வெண்சாமரைகளை இரட்டவும் குற்றமற்ற பல பல தேவர்கள் பேராலவட்டம் சிற்றால வட்டங்களை மிகுதியாக அசைத்துக்கொண்டாடவும் குற்றமற்ற வீணையையுடைய நாரதர் வித்தியாதரர்கள் செவிக்கின்பமான பாட்டிசைகளைப் பாடவும், எ—று. (அ)

மலர்மாரி சிலர்பொழியச் சிலர்கணறு விரைத்தூம மகிழ்ந்து செய்யப்,
பொலிவார்கப் புரவிளக்கஞ் சிலர்வயக்க வனுக்கிரகம் புகழச் சில்லோர்,
சிலரார்வ மொடுசெங்கத் தொனிபுரியக் குடமுழாச் சிலரா திர்க்கப்,
பலர்பாடப் பலராடப் பல்லாண்டு பலர்கூறப் பலர்கொண் டாட.

இ—ரை.—சில தேவர்கள் புஷ்பமாரி பொழியவும், சில தேவர்கள் நல்ல வாசனையுடைய தூபங்களைச் சந்தோஷத்துடன் செய்யவும், சில தேவர்கள் பிரகாசம் பொருந்திய கருப்பூர தீபஞ் செய்யவும், சில தேவர்கள் அனுக்கிரகங்களைப் புகழ்ந்தோதவும், சில தேவர்கள் அன்புடனே சங்கத்தொனி செய்யவும், சில தேவர்கள் குடமுழா வாத்தியஞ் செய்யவும், பல தேவர்கள் பாடவும், பல தேவர்கள் நிர்த்தனஞ் செய்யவும், பல தேவர்கள் பல்லாண்டு கூறவும், பல தேவர்கள் ஸ்தோத்திரஞ் செய்யவும், எ—று. (கூ)

பொங்குநறுந் தேன்றுளிக்குங் கற்பகநன் னிழன்மேய புகழ்ச்சு ரேசன்,
செங்கமலப்பொகுட்டுறையுமறைவிரிஞ்சனிணர்த்துளபத்தெரியன்மாயன்,
துங்கமுறு முருத்திரன்முன் னுயபல வமரர்குழாந் தொழுது போற்றித்,
தங்கியபே ரன்புடனு டையையொதுக்கி வாய்புதைத்தஞ் சலித்து நிற்ப.

இ—ரை.—மிகுதியாகிய நல்ல தேனைக் கொப்பளிக்கின்ற கற்பக விருக்ஷத்தின் அழகிய நிழலில் வீற்றிருக்கின்ற புகழையுடைய தேவேந்திரன், செந்தாமரை மலர்ப் பொருட்டில் வசிக்கின்ற வேதத்திற்குரிய பிர்மா, பூங்கொத்துக்களையுடைய துளசி மாலையை அணிந்த விஷ்ணு, உயர்ச்சி பொருந்திய ருத்திரன் முதலாகிய பல தேவர் கூட்டங்களும் வணங்கித் துதித்துப் பொருந்திய பேரன்புடனே வஸ்திரங்களை விரியாதொடுக்கி வாய்புதைத்துக்கொண்டு அஞ்சலியஸ்தர்களாக நிற்கவும், எ—று. (ய)

அன்புமிகு முனிவரர்கள் கண்களிடை யானந்த வருவி பாய,
வன்புறுமென் பழலினிடை வெண்ணெயெனக்கரைந்துருக மயிர்சிலிர்ப்பக்,
கொன்பெறுசரீரநடுங் கிடச்சிரமேற் செங்கரங்கள் குவியத் தூக்கி,
இன்பமுறு பெருங்கடலுட் டிளைத்தாடி யுபநிடத மெடுத்துக் கூற.

இ-ரை.—பேரன்பு பொருந்திய சிரேஷ்டமுள்ள மஹருஷிகள் நேத்திரங்களில் ஆனந்த வெள்ளம் பெருகவும், வலிமை பொருந்திய எலும்புகள் நெருப்பினில் வெண்ணெய் உருகுவதுபோலக் கரைந்துருகவும், ரோமங்கள் சிலிர்க்கவும், அழகு பொருந்திய சரீரங்களெல்லாம் குழையவும், சிவந்த கைகளைச் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு பேரின்பமாகிய பெரிய சமுத்திரத்தில் அழுந்தி முழுகி வேத சிரசுகளாகிய உபநிடதங்களை எடுத்து ஸ்தோத்திரஞ் செய்யவும், எ-று. (யக)

ஆயபுகழ் மனுமுதலைம் பிரமர்நவப் பிரமர்சன காதி யோர்கள்,
தூயவுருத் திரர்கடிசைக் காவலர்க ளுடுக்களொளிச் சூரி யாதி,
நேயநவக் கிரகமெழிற் பிதுர்க்களா தித்தரொடு நிகழ்வ சுக்கள்,
ஏயமருத் துக்கள்சுரா சுரகணங்கள் முதலானோ ரிறைஞ்சி யேத்த.

இ-ரை.—கீர்த்தி பெற்றவர்களாகிய மனுவாதியாகச் சொல்லப்பட்ட பஞ்சப்பிரமர்கள் நவப்பிரமர்கள், சனகாதி முனிவர்கள், பரிசுத்தமாகிய ருத்திர கணங்கள் அஷ்டதிக்குப் பாலர்கள் நக்ஷத்திர கணங்கள், பிரகாசம் பொருந்திய சூரியன் முதலாகிய அன்புள்ள நவக்கிரகங்கள், அழகிய பிதுர்த் தேவர்கள், துவாதசாதித்தர்கள், விளங்காநின்ற அஷ்ட வசுக்கள், பொருந்திய தசமருத்துக்கள் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்கள், அறுபத்தாறு கோடி அசுரர்கள் முதலானவர்களெல்லாம் வணங்கித் துதிக்கவும், எ-று. (யஉ)

ஓங்குபலசதகோடி செழுங்கதிர்க ளொருங்குதித்த வொளியைப்போலும்,
வீங்குசெழு மறைபரவு திருமேனி யழகொளிர வீற்றிருந்து,
தாங்குறுபற் பலவகில புவனசரா சரங்களெலாந் தழைவுற் றோங்கத்,
தேங்குபுகழ் விசுவேசன் பெருங்கருணை சுரந்தருளிச் சிறந்தான் மன்னோ.

இ-ரை.—உயர்வாகிய அனந்தகோடி சூரியர்கள் ஒரே காலத்தில் ஒன்றாக உதயஞ்செய்த பிரகாசம்போல மிகுந்த மாக்ஷிமைதங்கிய வேதங்களெல்லாம் புகழ்கின்ற திருமேனி யழகு விளங்க மகிழ்ச்சியுடனே எழுந்தருளி யிருந்து இரக்ஷிக்கப்படுகின்ற பலபலவாய் நிறைந்த அண்ட புவனங்களிலுள்ள சராசரங்களனைத்தும் செழிப்புற்றோங்கும் பொருட்டு நிறைந்த கீர்த்தியையுடைய ஸ்ரீவிஸ்வேஸ்வரனானவர் பேரருள் சுரந்தருளி விளங்கினர். எ-று. (யங)

தாமரையோன் சிருட்டிசெயத் திருநெடுமா றிதிபுரியத் தகுபு ராரி,
நேமமொடு சங்காரஞ் செயச்சிவன்றி ரோதான நெறியிற் செய்யக்,
காமருச தாசிவனல் லனுக்கிரகஞ் செய்திடவுங் கருணை கூர்ந்து,
தேமருவு மவரவர்கட் கிறைமையையு நல்கியருள் செய்தா னன்றே.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், அண்டபுவனங்களில் நிறைந்திருக்கின்ற ஜீவான்மகோடிகளை யெல்லாம் செந்தாமரை மலரில் எழுந்தருளி யிருக்கின்ற பிரமாவானவர் சிருஷ்டிக்கும்படியாகவும், லக்ஷிமிபதியாகிய விஷ்ணுவானவர் இரக்ஷிக்கும்படியாகவும், தகுதியாகிய ருத்திரனனவர் கிரமப்படி சங்கரிக்கும்படியாகவும், முறைப்படி மகேஸ்வரனனவர் திரோபவிக்கும்படியாகவும், அழகு பொருந்திய சதாசிவமூர்த்தியானவர் அனுக்கிரகித் தருளும்படியாகவும் திருவருள்செய்து, அண்டபுவனங்களில்

வசிக்கின்ற தேவர்கள், அசுரர்கள் முதலானவர்களுக்குத் தகுந்தபடி தலைமையான அதிகாரங்களையும் கொடுத்தருளினர். எ-று. (யச)

தரைபுகழு மனுப்பிரம னயசிருட்டி மயப்பிரமன் ருரு சிட்டி,
பிரிவில்துவட் டப்பிரமன் ரும்பிரசிட் டியுஞ்சிற்பிப் பிரம னென்றும்,
துரிசறுசி லாசிருட்டி விசுவக்கி யப்பிரமன் சுவண சிட்டி,
தெரியிவைக ளாற்பவஞ்ச சிட்டிபரி பாலனஞ்செய் திடச்செய் தானல்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், உலகத்தார்கள் புகழ்கின்ற மனுப்பிர்மா அயமுதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், மயப்பிர்மா தருக்கள் முதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், வேற்றுமையில்லாத துவஷ்டப்பிர்மா தாம்பிரமுதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், சிற்பிப்பிர்மா எந்நாளும் குற்றமற்ற சிலை முதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், விஸ்வக்ஞப்பிர்மா சுவர்ண முதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும் ஆகிய யாவருந் தெரிந்துக்கொள்ளத்தக்க இப்பஞ்சகிர்த்தியங்களினாலே பிரபஞ்சங்களை நிர்மாணஞ்செய்து, பிரபஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற ஜீவான்மகோடிகள் சமஸ்த போகபோக்கியங்களையும் அனுபவிப்பதற்கு எதுவாகிய கருவிகளையெல்லாம் செய்தருளி இரக்ஷிக்கும்படியான அதிகாரங்களை மேற்சொல்லிய பஞ்சப்பிர்மாக்களுக்குக் கொடுத்தருளினர். எ-று. (யரு)

வலங்குலவு நவப்பிரமர் சனகாதி முனிவரர்கள் வசுக்கள் சித்தர்,
இலங்குமுருத் திரர்பிதுர்க்க ளாதித்தர் மருத்துக்க ளியக்கர் பூதர்,
அலங்கசுரர் விஞ்சையர்கின் னரமரர் கிம்புருட ராதி யோரைப்,
பொலங்குலவுமவரவர்கட்காயவுழியடைந்தின்பம்பொருந்தச்செய்தான்.

இ-ரை.—அந்த விஸ்வேஸ்வரனனவர், வெற்றியினாலே கொண்டாடப்பட்ட நவப்பிர்மாக்கள், சனகாதிமுனி ஸ்ரேஷ்டர்கள், அஷ்ட வசுக்கள், நவநாத சித்தர்கள், விளங்காநின்ற பதினொரு கோடி ருத்திரர்கள், பிதுர்த் தேவர்கள், துவாதசாதித்தர்கள், தசவாயுக்கள், யக்ஷர்கள், பூதர்கள், சஞ்சரிக்கின்ற அசுரர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் முதலானவர்களுக்குத் தகுந்த அதிகாரங்கள் கொடுத்து, அவரவர்களுக்குத் தகுதியாகிய அழகு பொருந்திய இடங்களிற் சேர்ந்து மகிழ்ச்சியுடனே வாழும்படிக்கு அனுக்கிரகஞ்செய்தார். எ-று. (யசா)

கதிரவன்முன் னயகிர கங்கடா ரகைகளுக்குங் களைக ணகத்,
ததைதருசிர்ச் சிமுசுமா ரத்தினுக்குத் துருவணைநற் றலைவனக்கித்,
திதிபுரியிந் திரன்முதலெண்காவலனா முறையேயெண் டிசையின்வைகி,
இதமொடுநன்காசுபுரிந்திடப்பணித்தான்மறைமுடிவாழிறைவன்றனே.

இ-ரை.—வேதங்களின் முடியில் விளங்காநின்ற அந்த விஸ்வேஸ்வரனனவர், சூரியன் முதலாகிய கோள்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் ஆதாரமாகப் பொருந்திய சிறப்புள்ள சிமுசுமாரசக்கரத்துக்குத் துருவனை அழகிய அதிபதியாகச் செய்து, காவற்றொழிலையுடைய இந்திரன் முதலாகிய அஷ்ட பாலகரை முறைப்படி அஷ்ட திக்குகளிலும் பொருந்தி இன்பமுடனே அரசாக்ஷி செய்யும்படி ஆக்ஞாபித்தருளினர். எ-று.. (யஎ)

இந்திரனை வசுவாதி சுரர்க்கும்வரு ணனைப்புனற்கு மியமன் றன்னை,
உந்துபிதுர்க் களுக்குஞ்சு ராசுரந ராதிபல வுயிர்க ளுக்கும்,
கந்தலிலாக் கனைகணு கியவிரவி தனைக்கிரகங் களுக்கு மேலாம்,
சந்திரனை யுடுக்களோ டதிக்குமிறை யாகவரு டந்தான் மன்னே.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், அஷ்ட வசுக்கள் முதலாகிய தேவர்களுக்குத் தேவேந்திரனை அதிபதியாகவும், ஜலத்துக்கு வருணனை அதிபதியாகவும், உயர்ந்த பிதுர்த் தேவர்களுக்கு இயமனை அதிபதியாகவும், தேவர், அசுரர், மனிதர் முதலாகிய பல ஜீவர்களுககும் கெடுதலில்லாத ஆதாரமாகிய சூரியனை அதிபதியாகவும், நக்ஷத்திரங்களுக்கும் தானியங்களுக்கும் கிரகங்களுக்கு மேலாகிய சந்திரனை அதிபதியாகவுஞ் செய்தருளினுர். எ—று. (யஅ)

வென்றியயி ராவதத்தை யானைகட்குஞ் சிங்கத்தை மிருகங்கட்கும்,
நன்றிபெறு மிமவானை மலைகளுக்கும் வாசுகியை நாகங் கட்கும்,
துன்றுகரு டனைப்பறவை களுக்குமதி பதியாக்கிச் சொற்றி டாது,
நின்றபல வற்றினுக்குந் தக்கவா றதிபதியை நியமித் தானல்.

இ—ரை.—அந்த விஸ்வேஸ்வரனுனவர், யானைகளுக்கு வெற்றி பொருந்திய அயிராவதத்தை அதிபதியாகவும், மிருகங்களுக்குச் சிங்கத்தை அதிபதியாகவும், மலைகளுக்கு நன்மைபொருந்திய இமவானை அதிபதியாகவும், பாம்புகளுக்கு வாசுகியை அதிபதியாகவும், பறவைகளுக்குப் பொருந்திய கருடனை அதிபதியாகவும் செய்து, சொல்லாது நின்ற பலவற்றிற்கும் தகுந்தபடி அதிபதிகளை நிலைபெறச் செய்தருளினுர். எ—று. (யகூ)

அதிகாரமுறைமை யுரைத்த வத்தியாயம்,

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், உ௱சுயஎ.

ஏழாவது
காலப்பிரமாண முரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொருவரு மலரின் மேய புங்கவன் முதலி யோருக்,
கொருவிலபே ரதிகா ரங்க ளுதவிய வியல்பு சொற்றும்,
அருமறை முடியி லென்று மமர்தனி விச்சு வேசன்,
கருணையின் வகுத்த காலக் கணக்குறை செய்கு வாமால்.

இ—ரை.—அன்பு பொருந்திய சுவிரத மகாராஜாவே கேளும், இதுவரையும் தாமரை மலரி லிருக்கின்ற பிர்மா முதலானவர்களுக்கு நீங்காத பெருமை பொருந்திய அதிகாரங்களைக் கொடுத்தருளிய முறைமைகளைச் சொன்னோம்; இனி, அரிதாகிய வேதங்களின் சிரசில் எக்காலும் விளங்காநின்ற ஒப்பில்லாத விஸ்வேஸ்வரனுனவர் கிருபையினாலே பிரித்தருளிய காலத்தின் அளவுகளை சொல்வாம் என்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்ணினிமைபதினெட்டோர்காட்டையாகுங் காட்டைமுப்பானோர்கலையாங் கலைமூவைந்து, நண்ணுமொரு நாழிகைநாழிகையிரண்டு நவிலொருமுகூர்த்த மதா முகூர்த்த முப்பான், எண்ணுபக லிரவாநா ளந்நாண் மூவைந் தியம்பு பக்க மப்பக்க மிரண்டோர் மாசம், அண்ணியமற் றஃதாறே ரயன மாகு மயனமிரண் டோர்வருட மாகுந் தானே.

இ—ரை.—கண்ணிமை பதினெட்டுக்கொண்டது ஒரு காஷ்டை என்று சொல்லப்படும், அக்காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலையாகும், அக்கலை பதினைந்து கொண்டது பொருந்திய ஒரு நாழிகையாகும், அந்நாழிகை இரண்டுகொண்டது ஒரு முகூர்த்தமாகும், அம்முகூர்த்தம் முப்பதுகொண்டது மதிக்கின்ற பகலிரவு கூடிய ஒரு தினமாகும், அத்தினம் பதினைந்துகொண்டது சொல்லுகின்ற ஒருபக்ஷமாகும், அப்பக்ஷம் இரண்டுகொண்டது ஒருமாசமாகும், பொருந்திய அம்மாசம் ஆறுகொண்டது ஒரு அயனமாகும், அவ்வயனம் இரண்டுகொண்டது ஒரு வருஷமாகும், எ—று. (உ)

பன்னியமா னவர்தங்கட் கொருமா சந்தான் பாவுபிதிர்க்கோர்தினமாதிமத்தினத்தில், துன்னியகிட் டினபக்கம் பகல தாகுந் துலங்குறுசுக் கிலபக்க மிரவ தாகும், மின்னியசீர் மகரமதி யாதி யாக மிதுனந்த முத்தரா யணம தாகும், மன்னியகற் கடகமதி முதற்றுரோண மதிவரையிற்றக்கணா யனமாமன்னே.

இ—ரை.—சொல்லப்பட்ட மனிதர்களுக்கு ஒரு மாசமானது துதிக்கின்ற பிதுர்களுக்கு ஒரு தினமாகும், அந்த ஒரு தினத்தில் பொருந்திய கிருஷ்ணபக்ஷம் பகலாகும், பிரகாசிக்கின்ற சுக்கிலபக்ஷம் இராத்திரியாகும், விளங்காநின்ற சிறப்பினையுடைய தைம்மாத முதற்கொண்டு ஆனிமாத முடிவுவரையில் உத்தராயணமாகும், நிலைபெற்ற ஆடிமாத முதற்கொண்டு மார்கழிமாத முடிவுவரையில் தக்ஷிணயனமாகும். எ—று. (௩)

இம்மனுட வருடமொன்று தேவர்க் கோர்நா
ளிங்காளிற் றக்கண யனமிராவுஞ்
செம்மைகொ ளுத் தராயணமே பகலு மாகுஞ்
செப்புமிங்நாண் முப்பதொரு மாச மாகும்
பொம்மலுறு மிம்மாசம் பன்னி ரண்டு
பொருந்து மொருவற்சரமவ் வற்சரந்தான்
அம்மநுவல் பன்னீரா யிரம தாகி
லழகுபொலி சதுர்யுகமோன் றுகுந் தானே.

இ-ரை.—இவ்வித அளவினையுடைய மானிடர்க்குரிய ஒருவருஷமானது: தேவர்களுக்கு ஒரு தினமாகும்; இவ்வொரு தினத்தில், இராப்பொழுது தக்ஷிணயனமும், நன்மை பொருந்திய பகற்பொழுது, உத்தராயணமுமாகும்; இவ்வாறு சொல்லப்பட்ட தினம், முப்பதுகொண்டது, ஒரு மாதமாகும்; பொலிவினையுடைய இந்த மாதம் பன்னிரண்டுகொண்டது, ஒரு வருஷமாகும்; அப்படிச் சொல்லப்பட்ட வருஷம் பன்னீராயிரங்கொண்டது, அழகுபொருந்திய ஒரு சதுர்யுகமாகும். எ—று. (௪)

சதுர்யுகத்திற் கிருதயுக் வருடஞ் *சந்தி
சந்தியஞ்ச மொடுநாலா யிரத்தெண்ணூறும்
மதிசெய் திரோ தாயுகமூ வாயிரத்தின்
மன்னுமறு நூறுகுந் துவாபரத்திற்
கதிபுகழீ ராயிரத்து நானூ றுகு
மாங்கலிக்கா யிரத்திருநூ றுகுமிந்த
விதிமுறையிற் சதுர்யுகமா யிரந் திரும்பில்
விளங்குபிர மன்றனக்கோர் பகல தாமே.

இ-ரை.—மேற் சொல்லிய சதுர்யுகமானது: கிருதயுகம், திரோதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்குவகைப்படும்; அவற்றுள், கிருதயுகத்துக்குத் தேவமான வருஷம் நாலாயிரமும், அதற்குப்பொருந்திய * சந்தி சந்தியமிசங்களின் வருஷம் எண்ணூறுமாகும்; மதிக்கத்தக்க திரோதாயுகத்துக்கு வருஷம் மூவாயிரமும்; அதற்குப் பொருந்திய சந்தி சந்தியமிசங்களின் வருஷம் அறுநூறுமாகும்; மிக்க புகழினையுடைய துவாபரயுகத்துக்கு வருஷம் இரண்டாயிரமும்; அதற்குச் சந்தி சந்தியமிசங்களின் வருஷம் நானூறுமாகும்; நான்காவதாகிய கலியுகத்துக்கு வருஷம் ஆயிரமும், அதற்குச் சந்தி சந்தியமிசங்களின் வருஷம் இருநூறுமாகும், முறையாக வரப்பட்ட இந்தச் சதுர்யுகம் ஆயிரமானல், பிரமனுக்கு ஒரு பகலாகும். எ—று. (ரு)

பிரசமலர்ப் பிரமனொரு பகற்கா லத்திற்
பெரும்புகழ்சேர் பதினன்கு மனுக்க டோன்றி
பரசு செய்வ ரொவ்வொர்மனு வந்த ரங்க
ளாயசதுர் யுகமெழுபத் தொன்ற தாகும்

---

* சந்தியாவது, யுகத்துக்கு முற்பட்ட காலம்; சந்தியமிசமாவது, யுகத்துக்குப் பிற்பட்ட காலம்.

எட்டாவது

ஆயுணிண்ணய முறைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

தூய காலத் தளவினைச் சொற்றனம்
பாய பாரிற் பகர்பல சீவர்க்கும்
மேய சீர்விசு வேசன் விதித்திடும்
ஆயு ணிண்ணய மன்பொடு கூறுவாம்.

இ-ரை.—(அன்பிற்சிறந்த சுவிரத மகாராஜாவே கேளும்,) இதுவரையும் பரிசுத்தமாகிய காலவளவைகளைச் சொன்னோம்; இனி விசாலமாகிய பூமியினிடத்தில் சொல்லப்படுகின்ற சகல ஆன்மாக்களுக்கும் சிறப்பினையுடைய விஸ்வேஸ்வரனாலே விதிக்கப்பட்ட ஆயுட்பிரமாணங்களை அன்புடனே சொல்லுவோமென்றார் காளஸ்தி மகாமுனிவர். எ—று. (க)

அறைச ராயுசங் கட்காண்டு நூறதாம்
முறையி னண்டசங் கட்குறை முப்பது
கறையி லுற்பிசங் கட்கைந்து மாமதி
உறுசு வேதசத் திற்கோர் மதியரோ.

இ-ரை.—சொல்லப்பட்ட கருப்பையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது நூறுவருஷமும், கிரமப்படி முட்டையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது முப்பது வருஷமும், குற்றமில்லாத வித்திற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது ஐந்து மாதமும், பொருந்திய வெயர்வையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது ஒரு மாதமுமாகும். எ—று. (உ)

மக்கட் காயுள் வயங்கொரு நூறதாம்
தக்க சிங்கங்கட் குச்சத வற்சரம்
மிக்க யாளிக்கு மேவுநா றுயனம்
மர்க்க டக்கு வயதுமுந் நூறதே.

இ-ரை.—மனிதர்களுக்கு வயது விளங்காநின்ற நூறுவருஷமும், தகுதியுள்ள சிங்கங்களுக்கு வயது நூறுவருஷமும், மேன்மை பொருந்திய யாளிகளுக்கு வயது நூறுவருஷமும், குரங்குகளுக்கு வயது முந்நூறுவருஷமுமாகும். எ—று. (ங)

வேங்கைக் காயுள் விளம்பறு பத்துநான்
கோங்கு நாய்கட் குறுஞ்சமை முப்பது
வாங்கு மொட்டகங் கட்குறை வற்சரம்
பாங்கு சேரெழு பத்திரண் டாமரோ.

இ-ரை.—புலிகளுக்குச் சொல்லுகின்ற வயது அறுபத்துநான்கு வருஷமும், வளர்கின்ற நாய்களுக்குப் பொருந்திய வயது முப்பதுவருஷமும், வளைந்த வுடலை யுடைய ஒட்டகங்களுக்கு வயது அழகிய எழுபத்திரண்டுவருஷமுமாகும். எ—று. ()

யானைக் காயுணூ றுகுங் கடற்பெரு
மீனுக் காயுள் விளம்புறு மாயிரம்
பூனைக் காயுள் பொருந்திய முப்பது
மானுக் காயுள் வயங்கு மிருபதே.

இ-ரை.—யானைகளுக்கு வயது நூறுவருஷமும், சமுத்திரத்திலேயுள்ள பெரிய மீன்களுக்குச் சொல்லப்பட்ட வயது ஆயிரம்வருஷமும், பூனைகளுக்குரிய வயது முப்பதுவருஷமும், விளங்காநின்ற மான்களுக்கு வயது இருபதுவருஷமுமாகும். எ—று (ரு)

கோட்டு மேதிக் குலங்கட்கு நாற்பதாம்
ஊட்டு நற்சுர பிக்குறை முப்பது
காட்டுப் பன்றி களுக்குநூ றுயனம்
நாட்டுப் பன்றிவாழ் நாண்முப்ப தாண்டரோ.

இ-ரை.—கொம்புகளையுடைய எருமைக்கூட்டங்களுக்கு வயது நாற்பதுவருஷமும், கன்றுகளூட்டுகின்ற பசுக்களுக்கு வயது முப்பதுவருஷமும் காட்டுப்பன்றிகளுக்கு வயது நூறுவருஷமும், நாட்டுப் பன்றிகளுக்கு வயது முப்பதுவருஷமுமாகும். எ—று. (சு)

கரடிக் காயுள் கருதுமுந் நூறதாம்
நரிகளுக்கு வாழ நாளுறை முப்பது
பரிக ளுக்குப் பருவமுப் பத்திரண்
டுரிய வரட்டிற் குறைபதி னெட்டரோ.

இ-ரை.—கரடிகளுக்கு வயது மதிக்கப்படுகின்ற முந்நூறுவருஷமும், நரிகளுக்கு வயது முப்பதுவருஷமும், குதிரைகளுக்கு வயது முப்பத்திரண்டுவருஷமும்; ஆடுகளுக்குரிய வயது பதினெட்டுவருஷமுமாகும். எ—று. (எ)

கவயங் கட்குக் கவின்சத வற்சரம்
சவரங் கட்குச் சமையிரு பத்துநான்
கிவவு வேசரிக் காண்டிரு பத்தைந்தாம்
நவின் முயற்குமுந் நான்கு வருடமே.

இ-ரை.—அழகிய காட்டுப்பசுக்களுக்கு வயது நூறுவருஷமும், சவரி மிருகங்களுக்கு வயது இருபத்துநான்கு வருஷமும், இழிவாகிய கழுதைகளுக்கு வயது இருபத்தைந்துவருஷமும், சொல்லப்பட்ட முயல்களுக்கு வயது பன்னிரண்டுவருஷமுமாகும். எ—று. (அ)

உயர் பெரும்புக ழோங்கு கருடனுக்
கியலு முப்பத் திரண்டு வருடமாம்

மயில்கட் காயுள் வளர்பதி னெட்டுநற்
குயில்கட் காயுள் குலவிரு நான்கரோ.

இ-ரை.—பரந்த கீர்த்தியையுடைய மேலாகிய கருடப்பக்ஷிகளுக்குப் பொருந்திய வயது முப்பத்திரண்டு வருஷமும், வளர்கின்ற மயில்களுக்கு வயது பதினெட்டு வருஷமும், சிறப்பினையுடைய குயில்களுக்கு வயது எட்டு வருஷமுமாகும். எ—று.

அன்னங் கட்கு வருடமைந் நூறதாம்
மன்னு காக்கைக்கு வற்சர மாயிரம்
முன்னு கூகைக்கு முந்நூறு வற்சரம்
பன்னு மாந்தைக்குப் பன்னிரண் டாயுளே.

இ-ரை.—அன்னப்பக்ஷிகளுக்கு வயது ஐந்நூறுவருஷமும், காக்கைகளுக்குப் பொருந்திய வயது ஆயிரம்வருஷமும், மனவலியையுடைய கோட்டான்களுக்கு முந்நூறுவருஷமும், சொல்லுகின்ற ஆந்தைகளுக்கு வயது பன்னிரண்டுவருஷமுமாகும். எ—று. (ய)

நாரை கட்கு வயதுமுந் நான்குபே
ராரியக் கிளிக் காண்டு பதினைந்தாம்
சாரி கைக்குத் தகுமெட்டு வற்சரம்
சீரிலங்கு சிவற் குறை பத்தரோ.

இ-ரை.—நாரைப் பக்ஷிகளுக்கு வயது பன்னிரண்டு வருஷமும், பேரழகு வாய்ந்த கிளிகளுக்கு வயது பதினைந்து வருஷமும், நாகணவாய்ப் பறவைகளுக்கு வயது எட்டுவருஷமும், அழகு பொருந்திய கவுதாரிகளுக்கு வயது பத்துவருஷமுமாகும். எ—று. (கக)

பொருந்து மாயுள்செம் போத்தினுக் கெட்டதாம்
பருந்துகட்குப் பகரெட்டு வற்சரம்
விரிந்த வன்சிறை வீசு கழுகுக்குத்
திருந்து மாயுகஞ்சேருமைந் நூறதே.

இ-ரை.—செம்புகத்துக்குப் பொருந்திய வயது எட்டுவருஷமும், பருந்துகளுக்குச் சொல்லப்பட்ட வயது எட்டுவருஷமும், வீசுகின்ற விரிந்த சிறைகளையுடைய கழுகுகளுக்குத் திருத்தமாகிய வயது ஐந்நூறுவருஷமுமாகும். எ—று. (கஉ)

மகிழ்வல் லூறுக்கு வற்சர மீரெட்டுப்
பகருங் கோழிக்குப் பன்னிரண் டாஞ்சமை
புகழ் புறுக்கட் பொருந்துறை பத்ததாம்
திகழ்கு ரண்டங்கட் சேர்வய தெட்டரோ.

இ-ரை.—மகிழ்ச்சிபொருந்திய வல்லூறுப் பக்ஷிகளுக்கு வயது பதினாறுவருஷமும், சொல்லுகின்ற கோழிகளுக்கு வயது பன்னிரண்டு வருஷமும், புகழ்கின்ற புறுக்களுக்கு வயது பத்துவருஷமும், விளங்காநின்ற கொக்குகளுக்கு வயது எட்டு வருஷமுமாகும். எ—று. (கரு)

குருவி கட்குக் குலாவுமைந் தாஞ்சமை
கரிய வண்டு களுக்கோர் வருடமாம்
தருத ரங்கச் சலசரங் கட்கெலாம்
மருவு மாயுள் வயங்குமுந் நூறதே.

இ-ரை.—குருவிகளுக் குரிய வயது ஐந்துவருஷமும், பெருமையுடைய வண்டுகளுக்கு வயது ஒருவருஷமும், அலைகளையுடைய நீரிலே வசிக்கின்ற செந்துக்களுக்கெல்லாம் பொருந்திய வயது விளங்குகின்ற முந்நூறுவருஷமுமாகும். எ—று. (கச)

சற்பங் கட்குச்சம் வற்சர மாயிரம்
னொப்பிலா யுண்முந் நூறுமண் டூகத்துக்
கெய்ப்பிலா விடங் கற்குறை யெண்பதாம்
ஒப்பிலாமைக் குறுசமை பத்தரோ.

இ-ரை.—பாம்புகளுக்கு வயது ஆயிரம்வருஷமும், தவளைகளுக்கு வயது மறுத்தவில்லாத முந்நூறுவருஷமும், தளர்வில்லாத முதலைகளுக்கு வயது எண்பது வருஷமும், ஒப்பு நீங்கிய ஆமைகளுக்கு வயது பத்துவருஷமுமாகும். எ—று. (கரு)

கீரி கட்குக் கிளத்திரு பான்வய
தேர ணிற்கு வருட மிருபதாம்
வாரு டம்பிற்கு வற்சர நூறதாம்
சாரு மோந்தி தனக்காயு ளாறரோ.

இ-ரை.—கீரிப்பிள்ளைகளுக்குச் சொல்லப்படுகின்ற வயது இருபதுவருஷமும் அழகிய அணிற்பிள்ளைகளுக்கு வயது இருபது வருஷமும், நெடிய உடும்புகளுக்கு வயது நூறுவருஷமும், ஓந்திகளுக்குப் பொருந்திய வயது ஆறுவருஷமுமாகும். எ—று. (கசு)

வல்லெலிக்கு வருட மைந் தாகுமால்
பல்லி கட்குப் பருவ மோர் மூன்றதாம்
புல்லு தேட்குப் பொருந்தொரு வற்சரம்
ஒல் லெறும்புக் குறையொன்ற தாகுமே.

இ-ரை.—வலிமையுள்ள எலிகளுக்கு வயது ஐந்துவருஷமும், பல்லிகளுக்கு வயது மூன்றுவருஷமும், விஷம் பொருந்திய தேள்களுக்குரிய வயது ஒருவருஷமும், எறும்புகளுக்குரிய வயது ஒருவருஷமுமாகும். எ—று. (கஎ)

இலகு மற்குனத் திற்கறு திங்களாம்
மலி கொசுக்கு மதியைந்து மும்மதி
உலவு மீக்களுக் கோர்மதி பேனுக்குப்
பொலி மாயுள் புழுக்கைந்து நாளரோ.

இ-ரை.—விளங்காநின்ற மோட்டுப் பூச்சிகளுக்கு வயது ஆறுமாதமும், மிகுதியான கொசுகுகளுக்கு வயது ஐந்துமாதமும், திரிகின்ற ஈக்களுக்கு வயது மூன்று

மாதமும், பேன்களுக்கு வயது ஒருமாதமும், கிருமிகளுக்கு விளங்காநின்ற வயது ஐந்துநாளுமாகும். எ—று. (கஅ)

தேவ தாரந் திகழ்தரு சந்தனம்
மேவு குங்குமம் வேங்கை யகிலொடு
தாவு தென்னை யெனுமித் தருக்கட்குப்
பாவு நூற்றிரு பான்வய தாமரோ.

இ-ரை.—தேவதார விருக்ஷம் விளங்காநின்ற சந்தன விருக்ஷம், விரும்புகின்ற குங்கும விருக்ஷம், வேங்கை விருக்ஷம், அகில் விருக்ஷம் மேலோங்கி வளர்கின்ற தென்னை விருக்ஷம் என்று சொல்லப்பட்டவைகளுக்கு வயது பரவிய நூற்றிருபது வருஷமாகும். எ—று. (கக)

பன்னு பாரிற் பராவு மரசொடு
மின்னு மத்தி விரிந்திடு மால்புளி
புன்னை யித்தி புகழ்க்கருங் காலிக்கு
மன்னு மாயுள் வருடநூ றாமரோ.

இ-ரை.—பூமியிலுள்ளவர்கள் புகழ்கின்ற அரச விருக்ஷமும், விளங்காநின்ற அத்தி விருக்ஷமும், விசாலமாகிய ஆல விருக்ஷமும், புளிய விருக்ஷமும், புன்னை விருக்ஷமும், இத்தி விருக்ஷமும், புகழ்ச்சிபொருந்திய கருங்காலி விருக்ஷமும் ஆகிய இவைகளுக்குப் பொருந்திய வயது நூறுவருஷமாகும். எ—று. (உ0)

நலந்தரு கடு நாவல் கரும்பனை
வலந்த ருந்தனி வாகைநல் வேம்புடன்
இலந்தை பாலை யெழின்மிகு தேக்குறை
கலந்த வாண்டிவை கட்குநூ றுகுமே.

இ-ரை.—நன்மைசெய்கின்ற கடு விருக்ஷமும், நாவல் விருக்ஷமும், கரிய பனை மரமும், வெற்றியைத் தருகின்ற ஒப்பற்ற வாகை விருக்ஷமும், அழகிய வேம்பு விருக்ஷமும், இலந்தை விருக்ஷமும், பாலை விருக்ஷமும், அழகுமிகுந்த தேக்கு விருக்ஷமும் ஆகிய இவைகளுக்குப் பொருந்திய வயது நூறுவருஷமாகும். எ—று. (உக)

குருந்து நெல்லி குலாவு கடம்புவிண்
பொருந்த சோகு புகழ்மரு தோங்குமா
திருந்தி லுப்பை செறிந்த விளாவுக்கும்
பரந்த வாயுளெண் பான்சமை யாமரோ.

இ-ரை.—குருந்த விருக்ஷமும், நெல்லி விருக்ஷமும், யாவரும்பரவுகின்ற கடம்ப விருக்ஷமும், ஆகாயத்தையளாவுகின்ற அசோக விருக்ஷமும், புகழையுடைய மருத விருக்ஷமும், உயர்ந்த மா விருக்ஷமும், பாவத்தைநீக்குகின்ற இலுப்பை விருக்ஷமும், அடர்ந்த விளா விருக்ஷமும் ஆகிய இவைகளுக்கு வயது எண்பதுவருஷமாகும். எ—று. (உஉ)

வில்வம் புன்கு விளங்கு நறும்பலா
மல்கு கோங்கு மகிழொடு பாதிரி
புல்கு மார்கந்தி போற்றிரு வாட்சிக்கும்
பல்கு மாண்டெழு பத்தைந்த தாகுமே.

இ-ரை.—வில்வ மரமும், புன்கு மரமும், விளங்காநின்ற நல்ல பலா மரமும் செழித்த கோங்கு மரமும், மகிழ மரமும், பாதிரி மரமும், பொருந்திய ஆத்தி மரமும், கமுக மரமும், புகழ்கின்ற இருவாக்ஷி மரமும், ஆகிய இவைகளுக்கு வயது பெருகிய எழுபத்தைந்து வருஷமாகும். எ—று. (உங)

பொலிய ழிஞ்சில்பொ ருந்தில வீஞ்சிற்கும்
நலமி குந்தநாற் வற்சர நாற்பதாம்
குலவு மாதுளை கொய்யா நரந்தமோ
டிலிகு சத்திற்கு மாயு ளிருபதே.

இ-ரை.—அழகிய அழிஞ்சில் மரம், அமைந்த இலவ மரம், ஈஞ்சு மரம், இவைகளுக்கு வயது நன்மை பொருந்திய நாற்பதுவருஷமும், கிளைகளையுடைய மாதுளை மரம், கொய்யா மரம், நாரத்தை மரம், எலுமிச்சை மரம் இவைகளுக்கு வயது இருபது வருஷமுமாகும், எ—று. (உச)

முருங்கை மூங்கிற்கு முப்பது வற்சரம்
நெருங்கு தாழை நிகழ்த்துறு சண்பகம்
சுருங்கு றுவெட்சி சொல்லுமங் தாரையோ
டொருங்கி வைகட் குறையிரு பத்தைந்தே.

இ-ரை.—முருங்கை மரம், மூங்கில் மரம், இவைகளுக்கு வயது முப்பது வருஷமும், முட்களடர்ந்த தாழை மரம், சொல்லப்படுகின்ற சண்பக மரம், குறைவில்லாத அழகினையுடைய வெட்சி மரம், துதிக்கப்பட்ட மந்தாரை மரம் ஆகிய இவைகளுக்கெல்லாம் வயது இருபத்தைந்து வருஷமுமாகும். எ—று. (உரு)

சுரும்பு லாவுபன்னீர் துணர்க் கொன்றைக்கு
விரும்பு மாயுள் விளம்புறு முப்பதாம்
அரம்பைக் காயு ளறைந்திடு மூன்றதாம்
கரும்புக் காயுள் கருதிய வொன்றரோ.

இ-ரை.—வண்டுகள் மொய்க்கின்ற பன்னீர் மரம், பூங்கொத்துக்களுடைய கொன்றை மரம், யாவரும் விரும்புகின்ற இவைகளுக்கு வயது சொல்லப்பட்ட முப்பது வருஷமும், துதிக்கப்பட்ட வாழை மரத்துக்கு வயது மூன்றுவருஷமும், எண்ணுகின்ற கரும்புகளுக்கு வயது ஒருவருஷமுமாகும். எ—று. (உசா)

செடிக ளுக்குத் திகழ்வய தேழதாம்
கொடிக ளுக்குக் குலாவுமைந் தாயனம்
படர்புற் கட்குப் பருவமூன் றுகுமால்
அடரும் பூடுகட் காண்டொன்ற தாகுமே.

இ-ரை.—தும்பைமுதலிய செடிகளுக்கு வயது விளங்குகின்ற எழுவருஷமும், முல்லைமுதலிய கொடிகளுக்கு வயது சொல்லுகின்ற ஐந்துவருஷமும், பரவுகின்ற அறுகு முதலிய புல்லுகளுக்கு வயது மூன்றுவருஷமும், நெருங்கிய நெரிஞ்சிமுதலிய பூண்டுகளுக்கு வயது ஒருவருஷமுமாகும். எ—று. (உஎ)

விரியும் புண்ணியத் தாலாயுள் விர்த்தியும்
திரியும் பாவத்தி னாலாயுட் சீணமும்
உரிய பற்ப னுயிர்களு மெய்துமென்
றரிய மாமறை யன்பொடு கூறுமால்.

இ-ரை.—உலகிற்பொருந்திய பலவித வுயிர்களும் விரிவாகிய புண்ணியச் செய்கையினாலே ஆயுள்விருத்தியையும், கெடுதலாகிய பாவச்செய்கையினாலே ஆயுட் குறைவையும் அடையுமென்று அரிதாகிய பெருமையையுடைய வேதங்கள் அன்புடனே கூறுகின்றன. எ—று. (உஅ)

ஆயுணிர்ணய முரைத்தவத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், உ௱அ௰௪.

ஒன்பதாவது.

பிராமணாதிவருணதருமமுரைத்த

வத்தியாயம்.

உலகுபுகழ் பற்பலவுயிர்க்குமு னமைத்த
நலமருவு மாயுணின் னயமினி துரைத்தாம்
அலகில்புகழ் பெருகுமறை யவராதி யாக
நிலவுவரு ணத்தினர்க ணெறிசிறி துரைப்பாம்.

இ-ரை.—(கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையில்) இவ்வுலகத்தின்கண் புகழ்பெற்று விளங்காநின்ற பலவகைப்பட்ட சீவபேதங்களுக்கெல்லாம் (விஸ்வேஸ்வரனு) லமைத்த நன்மைபொருந்திய ஆயுட்பிரமாணங்களை யினிதாகச்சொன்னோம். (இனி) எண்ணிறந்த நல்ல புகழினையுடைய பிராமணர்முதலாக விளங்காநின்ற நான்கு வருணத்தவர்களுக்கு முரிய சில தருமங்களை யெடுத்துச்சொல்லுவோம் (என்றார் காளஸ்திமகாமுனிவர்.) (க)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருமறை முதல்வன் பஞ்சா னனங்களின் முறைமை யாக
ஒருவில்சத் துவகுணத்தோ டுதித்திடு முதற் குலத்தோர்
கருதரும் வேதவேதாங் கங்கண்முற் பலநூ லோதல்
பெருகுற விரும்பி னோர்க்குப் பெட்புட னோது வித்தல்.

இ-ரை.—உயர்வாகிய வேதங்களுக்குத் தலைவனாக விளங்கும் விஸ்வேஸ்வரனது சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானமென்னு மைந்து திருமுகங்களினின்றும்; வரன்முறைப்படி எப்பொழுதும் நீங்காத சத்துவ குணத்துடனே தோன்றிய முதல் வருணத்தாராகிய பிராமணர்கள், எண்ணுதற்கரிய வேதங்கள், வேதாங்கங்கள்முதலிய பல நூல்களையும் தாங்களோதுதலும், ஆசையுடனே ஓதல் வேண்டி விரும்பித் தம்மை யடுத்தவர்க்கு, நன்றாய் விளங்கும்படி யோதுவித்தலும். எ—று. (உ)

அக்கினிட் டோமமாதி யாகிய மகங்க ளெல்லாம்
மிக்கவன் போடியற்றல் விதிமுறை யியற்று வித்தல்
தக்கதா னங்கணல்க றருபவ ரிடநன் கேற்றல்
ஒக்குமித் தொழில்க ளாறு முடையவ ராகி யென்றும்.

இ-ரை.—அக்கினிஷ்டோமமுதலாகிய யாகங்களையெல்லாம் மிகுந்த அன்புடனே செய்தலும் அவற்றை விரும்பினவர்களுக்கு விதிப்படி செய்வித்தலும், செய்யத்தக்க தானங்களைச் செய்தலும்; கொடுக்கப்பட்டவரிடத்திலிருந்து அவர்களுக்கு நன்மையுண்டாகும்படி பெற்றுக்கொள்ளுதலும் (என்றுசொல்லப்பட்ட) சாஸ்திரசம்மதமாகிய இந்த ஆறு தொழிலையும் எந்நாளுமுடையவராகி. எ—று. (ங)

பரவுறு நான மேதர்ப் பணஞ்சிர வுதசு மார்த்தம்
விரவிய வங்கி கோத்ர மிளிரவு பாச ஞாதி
உரியபல் கரும மெல்லா முவந்து செய்திடல் பிறர்க்குக்
கரிசறத் திகழ் வைதீக கருமங்க ணனிசெய் வித்தல்.

இ-ரை.—யாவரும் புகழ்கின்ற ஸ்நானம்,"தர்ப்பணம், சுருதி சமபந்தமாகவும், ஸ்மிருதி சம்பந்தமாகவுஞ்செய்யப்பட்ட கருமங்கள், அக்னிஹோத்திரம் ஔபாசனங் கள்முதலிய தம் வருணத்திற்குரிய பலவித கருமங்களெல்லாம் மனமகிழ்ச்சியுடன் செய்தலும், குற்றமில்லாமல் விளங்குகின்ற வைதீக கருமங்களைப் பிறருக்குச்செய் வித்தலுமாகிய இவற்றுடனே. எ—று (ச)

ஆவல்சேர் மகஞ்சி ராத்த மாதிய கிரியை யாலே
தேவர்கள் பிதுர்க ளுக்குத் திருத்திசெய் துலகத் துள்ளோர்
மேவுநற் றரும மெல்லாம் விளங்கிட வுரைத்து நாளும்
தாவறு முதவி செய்து தண்ணளி யுடனே வாழ்வார்.

இ-ரை.—விருப்பத்தைச்செய்கின்ற யாகமுதலியகிரியைகளாலே தேவர்களையும், சிராத்தமுதலிய கிரியைகளாலே பிதுர்க்களையும், திருப்திசெய்வித்து உலகத்திலுள்ள வர்கள் அறிந்து நடக்கவேண்டிய நல்ல தருமங்களையெல்லாம் அவர்கள் மனதில் நன் ருய் விளங்கும்படி உபதேசித்து எந்நாளும் அவர்களுக்கு (அவர்கள் செய்யவேண்டிய வைதீக கருமங்களுக்கு வேண்டும்) கெடுதலில்லாத பல உதவிகளையுஞ்செய்து நல்ல கிருபையுடையவர்களாய் வாழ்வார்கள். எ—று. (ரு)

கலிவிருத்தம்.

நாகர்பர வும்விசுவ நாயக னெழிற்றிண்
வாகுவிலி ராசத குணத்தினொடு வந்த
ஊகமிகு மன்னவ ருயர்ந்தமறை யோதும்
யாகநனி செய்திடுத லின்பமுற வீதல்.

இ-ரை.—தேவர்கள்முதலிய பலரும் துதிக்கின்ற விஸ்வேஸ்வரனது அழகும் பலமும்பொருந்திய புயங்களினின்றும் இராஜதகுணத்தோடுந் தோன்றிய, அறிவிற் சிறந்த க்ஷத்தியர்கள், மேன்மைபொருந்திய வேதங்களாலெடுத்துச் சொல்லப்பட்ட யாகமுதலிய கருமங்களை நன்ருகச் செய்தலும், (சுவர்கக முதலிய மறுமைப்பயனை யடைய விரும்பித் தானதருமங்களைச் செய்தலும். எ—று. (சு)

வேதமுட னங்கமும் விளங்கு பல நூலும்
ஓதல் படை கூழ்குடி யுயர்ந்த வர ணட்பு
போதமிக மைச்சிவை பொருந்தியுல கோம்பல்
ஏதமுறு நண்ணல ரிறைஞ்ச வமர் செய்தல்.

இ-ரை.—வேதங்களுடனே வேதாங்கங்களையும், அவற்றினுட்கருத்தைக்கொண்டு விளங்காநின்ற ஸ்மிருதி புராணமுதலிய பலநூல்களையும் வாசித்தலும், படை பொருள், குடிகள் தங்குவதற்கிடமாயுள்ள நாடு உயர்வாகிய அரண் நட்பு அறிவிற் சிறந்த அமைச்சு (என்று சொல்லப்பட்ட) இந்த * ஆறு அங்கங்களையுமுடையவராகி

உலகத்திலுள்ளவர்களைக் காத்தலான அரசியல் நடத்தலும், தனதரசாட்சிக்கு விரோதமான குற்றங்களைச்செய்யும் பகைவர்கள் அஞ்சி வணங்கும்படி யுத்தஞ்செய்தலும். எ—று. (எ)

பத்திரமு தற்பரவு பல்படை பயிற்றல்
ஒத்தவித் தொழில்களிரு மூன்று முளராகி
நித்தியநை மித்திக நியாயநூ னெறியே
சித்தமகிழ் வோடு நனி செயவு முரி யோரே.

இ-ரை.—யாவரும் புகழப்பட்ட அஸ்திரசஸ்திரமுதலிய நானாவித படைத்தொழிலிற் பழகுதலும் ஆகிய தருமசாஸ்திரசம்மதமான இவ்வறுவகைத்தொழிலையுமுடையவராயிருப்பதுமன்றி, மனுமுதலிய நூல்களில் விதித்தபடி மனமகிழ்ச்சியோடு நித்தியம் நைமித்திகம் என்னும் இருவகைக் கருமங்களையும் சிறப்பாகச் செய்வதற்கும் உரியவராவர். எ—று. (அ)

அஸ்திரம்—வேல்முதலிய கைவிட்டுப்பெயரும்படை.
சஸ்திரம்—வாள்முதலிய கைவிடாப்படை.
நித்தியம்—தினந்தோறுஞ் செய்யுங்கிரியை.
நைமித்திகம்—விசேடநிமித்தஞ் செய்யுங்கிரியை.

ஏர்பெருகு சட்குண மியைந்த சக நாதன்
ஊருவில்ர சோகுணத மோகுணமு மொத்துச்
சீர்பெற வுதித்தவை சியர்மகிழ்வி னோடு
பார்பரவு நிகமாதி பற்பனூ லோதல்.

இ-ரை.—பேரழகினையுடைய ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுமுடைய உலகமுதல்வனாகிய விஸ்வேஸ்வரனது தொடைகளினின்றும் இரஜோகுண தமோகுணங்களுடனே தோன்றிய வைசியர்கள், உயர்ந்தோரால் புகழப்பட்ட வேதாகமமுதலிய பற்பலசாஸ்திரங்களை வாசித்தலும். எ—று. (கூ)

மாமறை விதிப்படி வயங்குபல வாகும்
தூமக மியற்றிடுதல் சொற்பெருகு தானம்
நேமமொடு செய்திடுத னீள்பயிர்க ளாக்கற்
கேமமுடன் மேதினியி னேருழுத லுனே.

இ-ரை.—மகத்தாகிய வேதங்களில் விதித்த முறைமைப்படி விளங்காநின்ற நெய், பொறி. சமிதை முதலியவற்றைச் சொரிந்து செய்கின்ற பலவகைப்பட்ட

---

* மேல் ஆறங்கமென்றதனுள், படை என்றது தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னு நாற்படையினை; கூழ் என்றது சோற்றை, அது அஃதுண்டாதற்கேதுவான பொருளின்மேல் நின்றது; குடி என்றது குடிகளை, அது அவர்கள் வசிப்பதற்கேதுவான, நாட்டின்மேல் நின்றது; அரண் என்றது கோட்டையினை, நட்பென்றது சிநேகத்தை அமைச்சென்றது மந்திரா அமாத்தியரொன்பது, அமைச்சரென மருவியது அமா—அண்மை.

யாகங்களைச்செய்தலும், நாற்றிசையினும் புகழ்பரவுதற்காரணமாகிய தான தருமங்களைக் கிரமமாகச்செய்தலும், பூமியின்கண் பயிர்களானவை செழித்து வளரும்படி இன்பமுடனே பொன்னேர் கட்டியுழுதலும். எ—று. (ய)

பாயவற நூன்முறை பசுக்களைக் காத்தல்
மேயபல தானியம் விளங்குமணி பொன்னாற்
றாயபொரு ளீட்டலித் தொழிலாறு முளராய்
ஏய*வான் னிகநனிசெய் திடவுமுரி யோரே.

இ-ரை.—விரிந்த தருமசாஸ்திர விதிப்படி பசுக்கூட்டங்களை யிரக்ஷிப்பதும், பலவகைப்பட்ட தானியங்கள் பிரகாசியாநின்ற நவரத்தினங்கள் பொன்முதலிய வுலோகங்கள் (முதலியவற்றால்) செய்யப்பட்ட வியாபாரமுறைமையில் பழிபாவங்களுக்கிடமில்லாதபடி நல்ல பொருள்களைச்சேர்த்தலுமாகிய இவ்வாறு தொழிலினையுமுடையவராய்த் தமக்கு விதித்த ஆன்னிககருமங்களையுஞ் செய்வதற்குரியவராவர். எ—று. ()

இலகுபுக ழெண்குண மியைந்த விசு வேசன்
குலவுசா ணிற்றம குணத்தினொடு தோன்றிப்
பொலிவுபெறு சூத்திரர்கள் பொங்குபொருளீட்டல்
நிலவுமுதன் மூவர்பணி நியமமொடு செய்தல்.

இ-ரை.—பரந்த புகழினையும் தன்வயத்தனுதன்முதலிய எட்டுக்குணங்களினையுமுடைய விஸ்வேஸ்வரனது வேதச்சிலம்புகள் சூழ்ந்து விளங்காநின்ற திருவடிகளில் தமோகுணத்துடனே தோன்றிய சிறப்பினையுடைய சூத்திரர்கள் விருத்தியாகத் தக்க நல்வழியிற் பொருளைச் சேகரித்தலும் மேற்சொல்லிய பிராமணர் முதலிய மூன்று வருணத்தாராலுங் கட்டளை யிடப்பட்ட பணிவிடைகளைக் கிரமமாகச் செய்தலும். எ—று. (யஉ)

பரிவொடு நிலத்தர மறிந்து பயிர் செய்தல்
தெரிகுயி லுவத்தொழில் சிறப்பநனி யாற்றல்
அரிய காருகவினையை யாக்கல்கோக் காத்தல்
உரியவித் தொழிலாறு முடையவர்க ளாகி.

இ-ரை.—அன்புடனே நிலங்களினது வேறுபாடுகளை யறிந்து அந்தந்த நிலத்திற்குரிய பயிர்களைச் செய்தலும், தாம் பழகிய தோற்கருவி முதலிய வாத்தியத் தொழில்களை யாவரும் வியக்கும்படி செய்தலும் பல தொழிலினுஞ் சிறந்த நெய்தற்றொழிலைச் செய்தலும் பசுக்கூட்டங்களைக் காத்தலும் என்று சொல்லப்பட்ட ஆறு தொழில்களையுமுடையவர்களாய். எ—று. (யங)

மன்னுமிதி காசமும் வயங்குறு புராணம்
என்னுமிவை முதலியன வின்பமுற வோதல்
மின்னிய வறஞ்செயல் விளங்குபிதுர் கட்குத்
தென்னுலவு கருமங்கள் செயவுமுரி யோரே.

---

* ஆன்னிகம் பிரதி தினமுஞ் செய்யுங் கிரியை.

இ-ரை.—கிலைபெற்று விளங்காநின்ற இதிகாச புராணங்களென்று சொல்லப் பட்ட இவை முதலிய பல நூல்களையும் இனிமையாக வாசிக்கவும், எத்திசையிலும் பரவத்தக்க தருமங்களைச்செய்யவும், அழகிய பிதுர்களுக்குரிய கருமங்களை விடாது செய்யவும் உரியவராவர். எ—று. ஏ-அசை. (யச)

பிதுரர் என்றது—படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதியை.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துங்கமா மறைக டுதிவிராட் புருடன் றூயவா னனம்புயந் துடைதாள்
புங்கமார் தருமிவ் விடங்களி னுதித்தோர் புரிதரு மஞ்சில புகன்றும்
பங்கமி லுல்வ ராண்பெணு மாறிப் பண்பொடு புணர்ந்திடப் பிறந்த
சங்கர சாதிப் பெயர்களும் பொதுவாந் தருமமுஞ் சிறிதெடுத் துரைப்பாம்.

இ-ரை.—பரிசுத்தமுடைய மேலான வேதங்களாற் றுதிக்கப்பெற்ற பிரமாண் டத்தின் காரண சரீர வபிமானியாயுள்ள விஸ்வேஸ்வரனது அழகுபொருந்திய முகம், தோள், துடை, பாதம் என்று சொல்லப்பட்ட உயர்வு பொருந்திய இந்நான் கிடத்து முதித்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்னும் நான்கு வரு ணத்தார்களும் கிரமமாகச் செய்யவேண்டிய தருமங்களுட் சிறந்த சிலவற்றை எடுத் துச் சொன்னேம் குலப்பழுதில்லாத அந்நான்கு சாதியிலுமுள்ள புருடர்களும், ஸ்ரீக ளும் காமவிச்சையினலே தங்கள் தங்கள் குலாசார தருமங்களுக்கு விரோதமாக யிதர ஜாதி ஸ்ரீகளுடனும் புருடனுடனும் தேகசம்மந்தப்பட அதனுற்பிறந்த சங்கர சாதிகளின் பெயர்களையும் யாவருக்கும் பொதுவாகிய சில தருமங்களையும் மேலெடுத் துச் சொல்லுவோம். எ—று. (யரு)

உயர்குல வாணு மிழிகுலப் பெணுஞ்சேர்ந் துதவுபுத் திரனனு லோமன்
உயர்குலப் பெண்ணே டிழிகுலவாண்சேர்ந் துதவிய சேய் பிரதி லோமன்
பெயரனு லோமத் தாண்பிரதி லோமப் பெணுந்தரு சேயந்த ராளன்
பெயர்பிரதி லோமத் தாணனு லோமப் பெணும்பெறு காளவிராத் தியனே.

இ-ரை.—மேற்சொல்லிய நாற்குலத்தவர்களுள் உயர்ந்த குலத்திற்பிறந்த புருட ரும், தாழ்ந்த குலத்திற்பிறந்த ஸ்ரீகளும், சேரப்பிறந்த புத்திரன் பெயர் அனுலோமன் உயர்ந்தகுலத்துப்பெண்ணும் தாழ்ந்தகுலத்துப்புருடனுஞ் சேரப்பிறந்த புத்திரன் பெயர் பிரதிலோமன்; அனுலோமனென்னும் பெயரையுடைய புருடனும், பிரதி லோம குலத்திற்பிறந்த பெண்ணுஞ் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அந்தராளன்; பிரதிலோமப் பெண்ணும் அநுலோமப் புருடனுஞ் சேரப்பிறந்த புத்திரன் பெயர் விராத்தியன். எ—று. (யசு)

அந்தணர்மாது சோரவந்தணர்ச்சேர்ந் தருளிய மதலைகுண் டகனே
அந்தணர்மாது கைம்மையாய் மறையோர்க் களித்திடு குமான்கோ ளகனே
அந்தண னரசர் மகளிைத் தழுவி யளித்தசேய் சவன் னன்மன் மாதை
அந்தணன் கரவிற் சேர்ந்துயிர்த் தோனக் கத்திர சீவக னமே.

இ-ரை.—பிராமணஜாதிக் கன்னிகையானவள் அப்பிராமண குலத்திலேயே சோரநாயகனைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் குண்டகன்; பிராமண்குலத்துக் கைம்பெண்ணானவள், வேறு பிராமணனுக்குப்பெற்ற புத்திரன் பெயர் கோளகன்; பிராமணன் க்ஷத்திரியகுலகன்னிகைத் தழுவிப்பெற்ற புத்திரன் பெயர் சவன்னன்; பிராமணன் க்ஷத்திரிய குலப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் நக்ஷத்ரஜீவகன். எ—று. (௰எ)

மறையவ னுய்கர் மகளினைக் கூடி வழங்கிய புதல்வனம் பட்டன்
மறையவ னுய்கர் மகளினைக் களவின் மருவவந் தோன்கும்ப காரன்
மறையவன் பின்னோ ரணங்கினைப் புல்ல வந்திடு பிள்ளைபா ரசவன்
மறையவன்றனைப்பின்னவர்பெண்சோரத்தின் மருவவந் தவன்பெயர்நிடாதன்

இ-ரை.—பிராமணன் வைசிய ஜாதிப்பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அம்பட்டன்; பிராமணன் வைசிய ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற்சேரப்பிறந்த புத்திரன் பெயர் கும்பகாரன்; பிராமணன் சூத்திரஜாதிப் பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் பாரசவன்; பிராமணன் சூத்திர ஜாதிப்பெண்ணைச் சோரத் தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் நிடாதன். எ—று. (௰அ)

மன்னவன் மறையோர் மாதினைக் கூடி வழங்கிய சேய்பெயர் சூதன்
மன்னவன் களவிற் புணர்ந்தபார்ப் பனிபால் வந்தவன் கூவிர னாகும்
மன்னவர் குலப்பெண் சோரமன் னவனை மருவவந் தோன்பெயர் போசன்
மன்னவன் றன்னைக் கைமையாய்ப் புணர்மன் மாதருள் புதல்வனா விதனே

இ-ரை.—க்ஷத்திரியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சேரப் பிறந்த புத்திரன் பெயர் சூதன்; க்ஷத்திரியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேரப் பிறந்த புத்திரன் பெயர் கூவிரன்; க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணானவள் அந்த க்ஷத்திரிய ஜாதியிலேயே சோரநாயகனைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் போஜன்; க்ஷத்திரிய ஜாதிக் கைம்பெண்ணானவள் வேறு க்ஷத்திரியனைச் சோரத்தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் நாவிதன். எ—று. (௰௯)

புரவலன் றனக்கு வணிகர்பெண் ணீன்ற புதல்வன்மா கிட்டிய னாகும்
புரவலன் றன்னை வணிகர்பெண் களவிற் புணர்ந்தருள் சேய்பெயர் விசன்மா
புரவலன் றன்னைப் பின்னவர் மாது புல்லவுக் கிரனுதித் திடுவன்
புரவலற் குழவர் பெண்பெறு சோரப் புதல்வன்சூ லிக்கிய னாமே.

இ-ரை.—க்ஷத்திரன் வைசிய ஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாகிட்டியன்; க்ஷத்திரியன் வைசிய ஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் விசன்மா, க்ஷத்திரியன் சூத்திர ஜாதிப் பெண்ணைச் சேரப் பிறந்த புத்திரன் பெயர் உக்கிரன், க்ஷத்திரியன் சூத்திர ஜாதிப்பெண்ணைச் சோரத் தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சூலிக்கியன். எ—று. (உ௰)

வைசியன் மறையோர் மகளினைத் தழுவி வழங்கிய கான்முளை கத்தா
வைசியன் களவிற் பார்ப்பனி யோடு மருவிமீன் றிடுமகன் மிலேச்சன்

வைசியன் மன்னர் மகளிரைச் சேர்ந்து மகிழ்ந் தருள் புதல்வன்மா கதனும்
வைசியற் கரசர் மாதுசோ ரத்தின் வழங்குசே யர்த்தக னாமே.

இ-ரை.—வைசியன் பிராமண ஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கத்தா; வைசியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மிலேச்சன்; வைசியன் க்ஷத்திரிய ஜாதிப் பெண்ணை மகிழ்ச்சியுடன் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாகதன்; வைசியன் க்ஷத்திரியகுலப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அர்த்தகன். எ—று. (உக)

வணிகர்தம் மாதை வணிகன்சோ ரத்தின் மருவியீன் றவன்மணி காரன்
வணிகனைக் கைம்மை யாயபின் வணிசர் மாதுசேர்ந் துயிர்த்தவன் புளிந்தன்
வணிகனைப் பின்னோ ரணங்குசேர்ந் தளித்த மகன்றவு டியந்தனென் றுரைப்பர்
வணிகனைப் பின்னோர் மகளிர்சோ ரத்தின் மருவவந் தோன்கட காரன்

இ-ரை.—வைசியன் வைசியஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மணிகாரன்; வைசியன் வைசிய ஜாதிக் கைம்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் புளிந்தன்; வைசியன் சூத்திர ஜாதிப் பெண்ணைத்தழுவிப் பெற்ற புத்திரன் பெயர் தௌஷியந்தனென்று சொல்லுவர்; வைசியன் சூத்திரஜாதிப்பெண்ணைச் சோரத்தாற்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கடகாரன். எ—று. (உஉ)

சூத்திரன் மறையோர் மகளிரைப் புணரத் தோன்றிய மதலைசண் டாளன்
சூத்திரன் களவின் மறையவர் மாதைச் சுகித்தருள் சுதன்பாகு தாயன்
சூத்திரன் றனக்கு மன்னர்மான் பெற்ற சுதனபி தானம்வை தேகன்
சூத்திரன் றனக்குக் களவினி லரசர் சுரிகுழ லீன்றசேய் பலதன்.

இ-ரை.—சூத்திரன் பிராமண ஜாதிப் பெண்ணைச்சேர அதனாற்பிறந்த புத்திரன் பெயர் சண்டாளன்; சூத்திரன் பிராமணஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பாகுதாயன்; சூத்திரன் க்ஷத்திரியர் குலத்திற்பிறந்த மான் போலும் மருண்ட பார்வையினையுடைய பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர், வைதேகன்; சூத்திரன் க்ஷத்திரியகுலத்திற் பிறந்த சுருண்ட கூந்தலையுடைய பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பலதன். எ—று. (உங)

பின்னவன் றனக்கு வணிகர்தம் மாது பெறுசுதன் பெயரயோ கவனும்
பின்னவன் றனக்கு வணிகர்மான் களவிற் பெற்றசேய் சத்திரி யாகும்
பின்னர்பெண் களவிற் பின்னவற்கீன்ற பிள்ளைமா லாசித னாகும்
பின்னர்பெண் கைம்மை யாய்ப்பின்னோற் களித்த பிள்ளையி னுமமுற் பலனே

இ-ரை.—சூத்திரனானவன் வைசியகுலப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அயோகவன்; சூத்திரனுக்கு வைசிய ஜாதிப் பெண்ணானவள் சோரத்தாற் பெற்ற புத்திரன் பெயர் சத்திரி; சூத்திரனுக்கு அச்சூத்திர ஜாதிப்பெண் சோரத்தாற் பெற்ற புத்திரன் பெயர் மாலாசிதன்; சூத்திரனுக்குச் சூத்திரஜாதிக் கைம்பெண்ணானவள் பெற்ற புத்திரன் பெயர் உத்பலன்; எ—று. (உச)

வேதியர் மன்னர் வணிகர்மற் றிவர்கள் விளங்குதத் தம்வரு ணத்து
மாதர்க ளொடுசேர்ந் தளித்தபுத் திரர்கள் வகுத்தகாலங்களில் விதியின்

ஏதமி லுபந யனமுதலாக வியற்றுகி ரியையிலா திருப்பின்
ஓதரு மறைகாயத்திரியுமிலா துழல்விராத் தியர்களா குவரே.

இ-ரை.—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லப்பட்ட இம்மூன்று வருணத்தாரும் மேன்மைபெற்று விளங்காநின்ற தங்கள் தங்கள் குல ஸ்திரீகளோடு சேர்ந்து பெற்ற புத்திரர்கள் விதிப்படிச் செய்துகொள்ளவேண்டிய குற்றமற்ற உபநயனமுதலிய கிரியைகளை விதித்த காலங்களில் கிரமப்படி செய்துகொள்ளாமலிருப்பார்களாயின், சொல்லுதற்கரிதாகிய வேதங்களையும் முறையாக அனுஷ்டிக்கவேண்டிய காயத்திரிமுதலிய மந்திரங்களையும் அனுஷ்டிக்கும் யோக்கியமில்லாதவராய் வருந்துகின்ற விராத்தியராவார்கள். எ—று. (உரு)

அந்தணர் குலத்து விராத்தியன் றன்னை யந்தணி யணிமுலை ஞெமுங்கச்
சுந்தர மாகப் புல்லியே பயந்த தோன்றலா வந்திய னாகும்
நந்துறு வாச விராத்தியன் றன்னை நலமிகு மன்னவர் மாது
சிந்தையார் வத்திற் புணர்ந்தினி தளித்தசேய்பெயர் மல்லனென்றிசைப்பர்

இ-ரை.—பிராமணகுலத்திற் பிறந்த விராத்தியனானவன் பிராமணஜாதிப்பெண்ணை அவளுடைய அழகிய முத்துமாலைகள் தரிக்கப்பெற்ற இரண்டு ஸ்தனங்களும் குழையும்படி தழுவிப்பெற்ற புத்திரன் பெயர் ஆவந்தியன்; செல்வமுதலியவற்றிற் குறைவில்லாத க்ஷத்திரிய குலத்திற் பிறந்த விராத்தியனானவன் நற்குணங்களமைந்த க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணை மனமகிழ்ச்சியோடு இனிதாகக் கலந்துபெற்ற புத்திரன் பெயர் மல்லன் என்று மேலோரெடுத்துச் சொல்லுவர். எ—று. (உசு)

போற்றுசீர் வசிய விராத்தியன் றன்னைப் பொம்மல்வெம் முலைவசியப்பெண்
ஏற்றம தாகச் சேர்ந்தளித் திடுசே யின்பெயர் சுதன்வனென் றுரைப்பர்
ஆற்றல் சேர் வசிய விராத்தியன் றன்னை யழகிய வசியர்தம் மாது
சாற்றுறு களவிற் புணர்ந்தரு ளியசேய் தன்பெயர் மைத்திர னாமே.

இ-ரை.—யாவரும் புகழத்தக்க கீர்த்தியினையுடைய வைசிய குலத்திற் பிறந்த விராத்தியனானவன், கண்டோர் விரும்பும்படியான அழகிய முலைகளையுடைய வைசியகுலப்பெண்ணைப் பெருமையாகச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சுதன்வனென்றுசொல்லுவர்; பொருள் சம்பாதிப்பதில் வல்லவர்களாகிய வைசியகுலத்திற்பிறந்த விராத்தியன் அழகிய வைசியஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மைத்திரன். எ—று. (உஎ)

பார்ப்பனி தவுடி யந்தனைக் கூடிப் பயந்தசந் ததிபல கண்டன்
பார்ப்பனி வைதே கன்றனைத் தழுவிப் பயின்றபுத் திரனிர சகனும்
பார்ப்பனி நிடாதன் றன்னொடு புல்லப் பண்பொடு புட்பத னுதிப்பன்
பார்ப்பன மாதுக் கிரன்றனைக் கலந்து பணித்தசேய் தக்கக னாமே.

இ-ரை.—பிராமணஜாதிப்பெண்ணானவள் தௌஷ்டியந்தனைக்கூடிப்பெற்றபுத்திரன் பெயர் பலகண்டன்; பிராமணஜாதிப்பெண்ணானவள் வைதேகனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் இரசகன், பிராமணஜாதிப்பெண்ணானவள் நிடாதனெ

ன்பவனைச் சேர்ந்து அன்புடனே பெற்ற புத்திரன் பெயர் புட்பதனென்பர்; பிராமண ஜாதிப்பெண்ணானவள் உக்கிரனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் தக்ஷகன். எ—று. (உஅ)

அந்தணி சண்டா ளன்றனைப் புல்லி யருள்சுதன் சுவபச னாகும்
அந்தணி சுவபசன் றனைக்கூடி யருளிய சேய்பெயர் குகபன்
அந்தணி குகபன் றன்னொடு தழுவி யளித்திடு மைந்தனே கரணன்
அந்தணி திகழு மயோகவற் புணர்ந்தீன் றருண்மகன் சருமகா ரன்னே.

இ-ரை.—பிராமண ஜாதிப்பெண் சண்டாளனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் சுவபசன்; பிராமண ஜாதிப்பெண் அந்தச் சுவபசனென்பவனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் குகபன், பிராமண ஜாதிப்பெண் அக்குகபனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் கரணன்; பிராமண ஜாதிப்பெண் விளங்காநின்ற அயோகவனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சருமகாரன். எ—று. (உகூ)

மன்னவர் மாது நிடாதனைச் சேர்ந்து வழங்குசேய் பாரக னாகும
மன்னவர் மாது நாபிதற் கூடி மகிழ்ந்தருள் பிள்ளைவே ணுகனும்
மன்னவர் குலப்பெண் மாகதற் புணர் வந்தபுத் திரன்பெயர் கனகன்
மன்னவர் குலப்பெண் விராத்திய னுடனே மருவவந் திடுவனஸ் திகனே.

இ-ரை.—க்ஷத்திரியஜாதிப் பெண்ணானவள் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர், பாரகன், க்ஷத்திரியஜாதிப் பெண்ணானவள் நாபிதனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர், வேணுகன்; க்ஷத்திரியஜாதிப் பெண் மாகதனென்பவனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் கனகன்; க்ஷத்திரியஜாதிப் பெண்ணானவள் விராத்தியனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அஸ்திகன். எ—று. (௩௰)

மன்னர்பெண் வைதே கன்றனாற் றருசேய் வர்த்தன சாலிக னாகும்
மன்னர்பெண் கரணன் றன்னொடு கூட வந்தசேய் கருமகா ரன்னே
மன்னர்பெண் சண்டா ளனுக்குயிர்த் திட்டமகன்பெயர் தண்டகபோலன்
மன்னர்பெண் கனகற் கூடியீன் றருள்கால் மகிழ்வுறு மார்க்கவ னாமே.

இ-ரை.—க்ஷத்திரியகுலப்பெண் வைதேகனோடு சேர்ந்துபெற்ற புத்தின் பெயர் வர்த்தனசாலிகன்; க்ஷத்திரிய குலப்பெண் கரணனென்பவனைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர், கருமகாரன்; க்ஷத்திரிய குலப்பெண் சண்டாளனுக்குப் பெற்ற புத்திரன் பெயர் தண்டகபோலன்; க்ஷத்திரிய குலப்பெண் கனகனென்பவனை மனமகிழ்ச்சியோடு கூடிப் பெற்ற புத்திரன் பெயர் மார்க்கவன். எ—று. (௩க)

வசியர்பெண் பார சவனனைப்புல்லி வழங்குபுத் திரன்பெயர் சல்லன்
வசியர்பெண் மாகிட் டியன்றனைத் தழுவ வந்தவன் வந்திக னாகும்
வசியர்தங் குலப்பெண் ணிடாதனைச் சேர்ந்து வாடநா னன்றனைப் பெறுவள்
வசியர்தம் மாதுக் கிரன்றனைப் புணர்ந்து வழங்குசேய் கண்டக னாமே.

இ-ரை.—வைசிய ஜாதிப்பெண் பாரசவனென்பவனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் சல்லன்; வைசியஜாதிப் பெண் மாகிட்டிய னென்பவனைக் கூடிப் பெற்ற புத்

திரன் பெயர் வந்திசன்; வைசிய ஜாதிப்பெண் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் வாடதானன்; வைசிய ஜாதிப்பெண் உக்கிரனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கண்டகன். எ—று. (௩௨)

வணிகர்பெண் கரணன் றன்னொடு புணர வந்திடு மைந்தனே சற்பன்
வணிகர்பெண் சற்ப னுற்றரு சேயை மகிழ்சவுண் டிகனென விசைப்பர்
வணிகர்பெண் சவுண்டி கன்றனைப் புல்ல வந்திடு பிள்ளைசாத் துவதன்
வணிகர்பெண் சாத்து வதனுடன் சேர வருசுதன் றசியுவென் றறைவர்.

இ-ரை.—வைசிய ஜாதிப்பெண்ணானவள் கரணனென்பவனோடு சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் சற்பன், வைசியகுலப் பெண் சற்பனென்பவனோடு மனமகிழக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் சவுண்டிகனென்று சொல்லுவர்; வைசியஜாதிப்பெண் சவுண்டிகனென்பவனைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் சாத்துவதன்; வைசியஜாதிப் பெண் சாத்துவதனென்பவனைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் தசியுவென்று மேலோர் சொல்வர். எ—று. (௩௩)

சூத்திர மாது நிடாதனுக் குயிர்த்த தோன்றலின் பெயர்பயி ரவனும்
சூத்திர மாது சண்டாளனுக் கீன்ற சுதன்பெய ராசிர யிகனும்
சூத்திர மாது மாகதற் புணாத் தோன்றிய புத்திரன் கரண்டன்
சூத்திர மாது பலதனுக் கருளுஞ் சூனுசா முத்திர னுமே.

இ-ரை.—சூத்திரஜாதிப் பெண்ணானவள் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பைரவன்; சூத்திரஜாதிப் பெண் சண்டாளனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் ஆசிரயிகன்; சூத்திரஜாதிப் பெண் மாகதனென்பவனைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் கரண்டன்; சூத்திரஜாதிப் பெண் பலதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சாமுத்திரன். எ—று. (௩௪)

சதுர்த்தர்பெண் டசியு வொடுபுணர்ந் துதவு தனயன்மா லாகரனாகும்
சதுர்த்தர்பெண் சாத்து வதன்றனைச்சேர்ந்து தந்தசேய் கைவர்த்தனென்பர்
சதுர்த்தர்பெண் சவுண்டி கன்றனைத் தழுவித் தருசுத னீலகா ரன்னே
சதுர்த்தர்பெண் டண்ட கபோலனாற் பயின்ற சந்ததி பெயர்வர் ணாகனே

இ-ரை.—சூத்திர குலப்பெண் தசியுவென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் மாலாகாரன்; சூத்திர குலப்பெண் சாத்துவதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கைவர்த்தனென்று மேலோர் சொல்லுவர்; சூத்திர குலப்பெண் சவுண்டிக னென்பவனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் நீலகாரன்; சூத்திர குலப்பெண் தண்டகபோலனென்பவனுக்குப் பெற்ற புத்திரன் பெயர் வர்ணாகன். எ—று. (௩௫)

மறையவ னயோகவப்பெண்ணைத் தழுவ வந்தவன் பிங்களனாகும்
முறைவரு சவன னம்பட்ட மாதை முயங்கிட நர்த்தக னுதிப்பன்
அறைதரு மாகிட் டியன்றனாற் கர்ண வணங்கருள் பிள்ளைமா தங்கன்
தறைபுகழ் மல்லன் விச்சிலை மாதைத் தழுவவந் தோன்பெயர் நடனே.

இ-ரை.—பிராமணன் அயோகவஜாதிப் பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் பிங்களன்; முறைமையிற் பிறந்த சவனனென்பவன் அம்பட்டஜாதிப் பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புதல்வன் பெயர் நர்த்தகன்; மேற்சொல்லிய மாகிட்டியனென்பவன் கரணஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாதங்கன்; உலகத்திலுள்ளவர் புகழாநின்ற மல்லனென்பவன் விச்சிலைஜாதிப் பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் நடன். எ—று. (௬௬)

சற்பன்மன் னவர்பெண் டன்னொடு சேர்ந்து தந்தசேய் திரமிள னாகும்
அற்பினிற் காரோ சருமக ணிடாதற் களித்தகான் முளைசர்ம சீவி
பொற்புறு மயோக வன்றனைப் புணர்ந்து பொலிவுறு நீலகா ரப்பெண்
வற்பொடு தருசேய் நாமநீ லாதி வன்னவிக் கிரேதனென் றிசைப்பர்

இ-ரை.—சற்பனென்பவன் க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணுடனே புணர்ந்து பெற்ற புத்திரன் பெயர் திரமிளன்; நிடாதனென்பவன் காரோசரும ஜாதிப்பெண்ணை அன்புடனே தழுவிப்பெற்ற புத்திரன் பெயர் சர்மசீவி; அழகுபொருந்திய அயோகவனென்பவனை நீலகாரஜாதிப்பெண் மனமகிழ்ச்சியோடு சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் நீலாதிவன்ன விக்கிரோதாவென்று சொல்லுவர். எ—று. (௬௭)

உக்கிரப் பெண்கத் தாவினைக்கூடி யுதவிய கால்சுவ பாகன்
பொக்கமில்பின்னோனிடாதகன் னிகையைப்புணர்ந்தருள்பிள்ளைகுக் குடனும்
மிக்கவம் பட்ட மாதைவை தேகன் விழைந்தரு ளியசுதன் வேணன்
தக்கசூத் திரப்பெண் வேணனுக் குயிர்த்த சந்ததி புற்கச னாமே.

இ-ரை.—கத்தாவென்பவன் உக்கிரஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சுவபாகன்; தனக்கு விதித்த ஒழுக்கத்திற் றவறுதலில்லாத சூத்திரன் நிடாதஜாதிக்கன்னிகையைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் குக்குடன்; வைதேகனென்பவன் அழகில் மிகுந்த அம்பட்ட ஜாதிப்பெண்ணை ஆசையுடன் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் வேணன்: அந்தவேணனென்பவன் யௌவன மமைந்த சூத்திரஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் புல்கசன். எ—று. (௬௮)

பெருகுவே தியனுக் கிரப்பெணுக் கீன்ற பிள்ளையா விரதனென் றுரைப்பர்
திருகுதீர் மறையோ னம்பட்ட மாதைச் சேர்ந்தருள் செம்மலபீரன்
கருதுமந் தணனை யயோகவ மாது கலந்தருள் மதலைதிக் குவணன்
பொருவில் பார்ப்பனியைத் தண்டக போலன் புணர்ந்தருளியசுதன் கசனே

இ ரை.—மேன்மையிற் சிறந்த பிராமணன் உக்கிரஜாதிப்பெண்ணுடனே சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் ஆவிரதனென்று சொல்லுவர்; குற்றமற்ற பிராமணனானவன் அம்பட்ட ஜாதிக்கன்னிகையைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அபீரன்; வேதார்த்தங்களைச் சிந்திக்கின்ற பிராமணன் அயோகவஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் திக்குவணன்; தண்டகபோலனென்பவன் ஒப்பில்லாத பிராமண ஜாதிப்பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கசன். (௬௯)

தருமயோ கவப்பெண் டசியுவைத் தழுவித் தருசுதன் சைரந்தி ரியனே
நிகழும்வை தேக னயோகவ மாதை நேர்ந்தருள் சேய்மைத்தி ரேயன்

புகழயோ கவப்பெ ணிடாதனைப் புல்லப் பொருவில்பார்க்கவனுதித் திடுவன்
நகுவிதே கப்பெண் கரண்டனைக் கூடி நல்குவள் காருவா ரனையே.

இ-ரை.—தசியுவென்பவன் அயோகவப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சைரந்திரியன்; விளங்காநின்ற வைதேகனென்பவன் அயோகவ ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மைத்திரேயன்; புகழ்பெற்று விளங்குகின்ற நிடாதனென்பவன் அயோகவ ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் ஒப்பில்லாத பார்க்கவனும்; கரண்டனென்பவன் அழகிய விதேகஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் காருவாரன். எ—று. (௬ம்)

துன்னுசண் டாளன் வைதேகியைப் புல்லத் தோன்றுவ ன்பாண்டுசோபாகன்
மின்னுவை தேகி நிடா தனைத் தழுவ விரும்புமா கிண்டிக னுதிப்பன்
உன்னுசண் டாளன் றனைப்புற்க சப்பெண் ணுற்றருள் பிள்ளைசோ பாகன்
அந்நிடா தப்பெண் சண்டாளனைச் சேர வந்த்யாவ சாயிதோன் றுவனே.

இ-ரை.—சண்டாளனென்பவன் வைதேகஜாதிப் பெண்ணுடனே சேரப்பிறந்த புத்திரன் பெயர் பாண்டுசோபாகன்; நிடாதனென்பவன் விளங்காநின்ற வைதேக ஜாதிப் பெண்ணைச்சேர அதனால் விருப்பத்தைச் செய்கின்ற ஆகிண்டிகனென்பவன் தோன்றுவன்; யாவரும் தாழ்வாக நினைக்கின்ற சண்டாளனென்பவன்புல்கஜ சாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சோபாகன்; மேற்சொல்லிய நிடாதஜாதிப் பெண்ணானவள் சண்டாளனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அந்தியாவசாயி. எ—று. (௬௧)

இன்னவா றுக மாறியாண் பெண்சேர்ந் தீன்றசந் ததிப்பெய ரனந்தம்
அன்னவை யனைத்தும் விரித்துரை செய்தற் கடங்கிடா வுலகெலா மேத்த
மன்னிய விசுவ நாயகன் வகுத்த மாண்புறு மறைநெறி திறம்பா
நன்னிலை யுடையோர் யாவரே யெனினு நலம்பல வெய்திவாழ் குவரே

இ-ரை.—மேற்சொல்லியபடி உயர்ந்த குலத்திற் பிறந்த ஆடவரும், தாழ்ந்த குலத்திற் பிறந்த மாதர்களும், தாழ்ந்த குலத்துப் புருடரும் உயர்ந்த குலத்து மாதரும் காமாந்தகாரத்தினாலே முறைபிறழ்ந்து தேகசம்பந்தப்பட்டதனாற் பிறந்த புத்திரர்களின் பெயர் பலவாகும், அப்பெயர்களையெல்லாம் விரிவாக எடுத்துச்சொல்வதற்கு அவைகள் என் சொல்லளவில் அடங்காவாம். எவ்வுலகத்தி லுள்ளவர்களும் துதிக்கும்படி விளங்காநின்ற விஸ்வேஸ்வரன் ஆன்மாக்கள் மலபரிபாக மடையவேண்டுமென்னுங் காருணியத்தா லருளிச்செய்த மாட்சிமைபெற்ற வேதங்களிற் கூறும் விதிவிலக்குகளினின்றும் தவறாமல் நடக்கின்ற நலலொழுக்கத்தினையுடையவர்கள் எந்தக் குலத்திற் பிறந்தவராயிருந்தாலும் பல நன்மைகளையும் பெற்று வாழ்வார்கள். எ—று.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அகனி லத்து வாழ் யாவருக்கும் பொது வாகிய தருமங்கள்
புகழருட்கட வுளைத்தொழல் பெரியரைப் போற்றுத லறஞ் செய்தல்
மகிழுமில்லறம் பேணுதல் கற்புடை மனையவ ளொடும் வாழ்தல்
இகழ்விலா மகப் பெறுதலன் புற்றிட லெய்திய விருந் தோம்பல்.

இ-ரை.—சேளும் சுவிரதமகாராஜனே, இதுவரையில் பிராமணர்முதலிய நான்குவருணபேதவொழுக்கங்களையும் அனுலோமர்முதலிய சங்கசாதியர்களின் பெயர்களையும் ஒருவாறெடுத்துச்சொன்னோம்; இனி இடமகன்ற இப்பூமியிலுள்ள எல்லாச் சாதியார்களுக்கும் பொதுவாயுள்ள தருமங்களென்னவெனில்: அருளே திருமேனியாகக்கொண்ட புகழினையுடைய விஸ்வேஸ்வரனை வழிபடுதலும், நல்லறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களை வணங்குதலும், இம்மை மறுமை வீடென்னு மூன்றனையும் தருவதற்கேதுவாகிய தருமங்களைச்செய்தலும், தென்புலத்தார் முதலியோர் மகிழும்படி இல்வாழ்க்கைத் தருமங்களிற்றவறாமனடத்தலும் கற்பிற் சிறந்த மனைவியுடனே மருவி மனமொத்து வாழ்தலும், பிறராற் பழிக்கப்படாத நல்ல புத்திரர்களைப் பெறுதலும் பிறவுயிர்களின்மேலருள்பிறத்தற்குக்காரணமாகிய அன்புடையவராயிருத்தலும், தம்மையடைந்த விருந்தினர்களுக்கு உண்டிமுதலியவையுதவி உபசரித்தலும். எ—று. (௪௩)

இனிய வாசகம் பகரனன் றியையறிந் திடுதனீ தியி னிற்றல்
மனமெய்வாக்கையு மடக்கனல் லொழுக்கினை வழுவுறா தினி தோம்பல்
கனவினும்பிறர் மனைநலம் வெறுத்திடல் கருதுசீர்ப் பொறை யெய்தல்
நனிபொறாமையை யொழித்திடல் பிறர்பொரு ணசையொடு கவராமை.

இ-ரை.—மனதின் கணிசமும் பேருவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச்சொல்லுதலும், பிறர் தமக்குச்செய்தவுபகாரத்தை மறவாமலறிந்து நடத்தலும், பகைவனென்றும், சினேகனென்றும், உறவினனென்றும் நினையாமல் யாவரிடத்தும் ஒரு தன்மையால் நடத்தும் நடுநிலைதவறாமையும், மனவாக்குச்காயங்களைத் தீய கருமங்களிற் செல்லவிடாமையும், தங்கள் வருணங்களுக்குரிய நல்லொழுக்கங்களைத் தவறாதபடி இனிதாகப்பாதுகாத்தலும், சொப்பனவஸ்தையிலும் காம மயக்கத்தாற் பிறன்மனையாளிடத்துப் போகநலத்தை விரும்பாமையும் ஒரு காரணத்தினாலாவது, அறியாமையினாலாவது ஒருவன் தமக்குத்தீங்குசெய்தபோதிலும் அத்தீங்கை யாவரும்புகழும்படிபொறுத்துக்கொள்ளுதலும், பிறருடைய செல்வம்புகழ்முதலியவற்றைக்கண்டவிடத்துண்டாகும் பொறாமையை யறவேயொழித்தலும், பிறர்பொருளை அபகரியாதிருத்தலும். எ—று. (௪௪)

பிறர்தமைப்பழி யாமைவீண் வார்த்தைகள் பிழையுறப் பகராமை
யறமலாததீ வினைபுரி யாமைநெஞ் சகமகிழ் வொடு நாளும்
உறுபரோபகா ரஞ்செய விரப்பவர்க் குவந்தியன் றவை யீதல்
நெறியினின்றிடு மான்றவர் மகிழ்வுற நிலைபெறு புகழ் தேடல்.

இ-ரை.—பிறரைக்காணாதவிடத்தில் இகழ்ந்து பேசன்முதலிய சொற்குற்றங்களைச் செய்யாதிருத்தலும், தமக்கேனும் பிறருக்கேனும் அறமுதலிய புருஷார்த்தங்களிலொன்றினையுந் தராத வீண்வார்த்தைகளைப் பேசாதிருத்தலும், தரும விரோதமான பாவகாரியங்களைச் செய்யாதிருத்தலும், மனமகிழ்ச்சியுடனே எப்போதும் பிறருக்குத் தங்களாலியன்ற வுபகாரங்களைச்செய்து வருதலும், யாசிப்பவர்களுக்கு இல்லையென்னுமற் கொடுக்கக்கூடியவைகளைக் கொடுத்தலும், இல்லறம் துறவறம் என்னுமிரண்டு தருமங்களினின்றுந்தவறாதபெரியார்களுங்கண்டு சந்தோஷிக்கும்படி இம்மை மறுமையென்னுமிரண்டிடத்தும் உறுதியைத்தருவதான புகழைச்சம்பாதித்தலும். எ—று. (௪௫)

கல்வியோம்புதல் கற்றுணர் மேலவர் காமரு சொற்கேட்டல்
ஒல்லுநுண்ணறி வுடைமைதீ தொழித்திட லுயர்ந்தவர் துணைக்கோடல்
புல்லர் தங்கள்சி னேகத்தை யொழித்திடல் புகாறத் தெரிந் தாற்றல்
அல்லறீர்வலி காலமு மிட முநன் கறிந்தொரு தொழில் செயதல்.

இ-ரை.—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைக் காணுதற்குக் கருவியாயுள்ள நூல்களைக்கற்று அவற்றுள் விதித்தபடி நடத்தலும், வாசித்துணர்ந்த பெரியோர்களாற் சொல்லப்பட்ட அழகுபொருந்திய வார்த்தைகளைத்தாம் வாசித்த கல்விப்பயனுறுதிபெறக் கேட்டுத் தெளிவடைதலும், தாங்கற்ற கல்வி கேள்விகளாலுண்டாகிய அறிவோடு அவற்றின் பேதாபேதங்களைப்பகுத்தறியும் கூரிய புத்தியுடையவரா யிருத்தலும், காமமுதலிய பகை வர்க்கங்களாற்றினையும் தம்மிடத்துண்டாகாதபடி நீக்கி நடத்தலும், அறிவொழுக்கங்கங்களிற் சிறந்த மேலோர்களைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதலும், தூர்த்தர், விடர்முதலிய அற்பர்களுடைய சினேகத்தையறவேயொழித்தலும், தாஞ்செய்யத் தொடங்கிய காரியங்களை நன்காராய்ந்து செய்யுந் திறமுடையவரா யிருத்தலும், அவ்வாறு ஆராய்ந்து ஒரு தொழிலைச்செய்யுமிடத்தும், அது இடையூறின்றி முடியத்தக்க வலிமை, இடம், காலம்முதலியவைகளை நன்ருக அறிந்து செய்தலும். எ—று. (௬௬)

தெரிந்து தேறுதல் கிளைஞரை யாதரித் திடன்மறப் பில்லாமை
விரிந்த பாரில நீதியை யொழித்திடல் வெருவந்த செய்யாமை
பரிந்தி ரக்கமெய் திடுதனல் லொற்றுரைப் பவர்தமைக் கொண்டாடல்
திருந்து மூக்கமுற் றிடன்மடி யின்மைசீர் திகழ்முயற் சியிஞேங்கல்.

இ-ரை.—தமக்குரிய தொழிலாளர்களின் பிறப்பு, குணம், அறிவு முதலியவற்றைப் பலவகையிலு மாராயந்து எல்லாவற்றிலுஞ்சிறந்தவராயின், அவரிடத்து நம்பிக்கைவைத்து நடத்தலும், தம்மைச்சார்ந்த வுறவினரைத் தாம் வறுமைப்பட்ட விடத்தும் பாதுகாத்தலும், தமக்குண்டாகிய செல்வமுதலியவற்ருமுண்டாகும் பெருமகிழ்ச்சியால் தாஞ்செய்யவேண்டிய காரியங்களை மறவாமற்செய்தலும், இடமகன்ற விப்பூமியினிடத்து நியாய விரோதமான காரியங்களைச் செய்யாதொழித்தலும், யாவரும் அஞ்சும்படியான காரியங்களைச் செய்யாமையும், எல்லாவுயிர்களிடத்தும் மிகுந்த கருணையுடையவராயிருத்தலும், பிறரிடத்திருந்து தம்மிடத்து வந்து பேசும் தூதரைப் புகழ்ந்து பேசுதலும் தமக்குண்டாகும் தளர்ச்சியை மாற்றுவதான மனக்கிளர்ச்சியுடையவரா யிருத்தலும், சோம்பலில்லாதிருத்தலும், எப்போதும் தக்கமுயற்சியிலேயே மனம்வைத்து நடத்தலும். எ—று. (௬௭)

துன்ப மெய்திடின் மனந்தளராமைசொற் சோர்வுற மொழியாமை
அன்பி னிற்குறிப் பறிநதிட லவையறிந் திடல்வை யஞ்சாமை
நன்பு விக்கண்யா வரையுமேம் பாடுசெய் நற்பொரு ணிதேடல்
இன்ப ளிக்குநட் புற்றிட றீயநட் பின்மைபே தைமையின்மை.

இ-ரை.—வறுமை முதலியவற்ருற்றமக்குத் துன்பம்வந்தவிடத்தும் அதுகாரணமாக மனங் கலங்காதிருத்தலும், பேசுஞ் சொற்களிலே குற்றமுண்டாகப் பேசாமையும், பிறருடைய மனக்கருத்தை குறிப்பினாலறிந்து அவர் சந்தோஷமடையும்படி

அன்போடு நடத்தலும், தாங்கள் சேர்ந்த சபையினது ஒப்புயர்வு தாழ்வுகளையறிந்து அதற்குத்தக்கபடி நடத்தலும், மேற்சொல்லியபடி சபைத்திறமறிந்து பேசத்தொடங் குமிடத்து அஞ்சாமற்பேசுந் திறமுடைமையும், நன்மை மிகுந்த இப்பூமியினிடத்து எவ்வகைப்பட்டவரையும் மேன்மைப்படுத்துவதாகிய பொருளைச்சம்பாதிக்கும் திறமு டையவராயிருத்தலும், மனதுக்கு இனிமையைத்தராநின்ற நற்குணமுடைய சிநேக ரைப் பொருந்தியிருத்தலும், லாபத்தைக்கருதியாவது, தமக்குள்ளிருக்கும் பகையை முடிக்குங்காலம் வருமளவாவது மேலுக்குச் சிநேகபாவனையைக் காட்டி நடக்கும் கொடிய சிநேகரை வெறுத்து விடலும், அறியாமைக் குணத்தை யொழித்தலும். எ—று. (௪௮)

ஏய்ந்திடும் பகை யின்மைமிக் கோர்தமை யிகழ்ந்தவ மதியாமை
வாய்ந்த மாதர்சொல் வழியொழு காமைபல் வஞ்சனை நயம்பேசித்
தோய்ந்திடும் பரத் தையைவிரும்பாமை துர்க்குணம் பலசெயு மென்றே
ஆய்ந்து ளோரிகழ் மதுவருந் தாமைசூ தாடலை நினையாமை.

இ-ரை.—கோபமுதலிய காரணங்களாலுண்டாகும் உட்பகை புறப்பகையென் னு மிருவகைப் பகையுமில்லாதிருத்தலும், கல்வி கேள்விகளால் முதிர்ந்த பெரியோர் களைப்பழித்து அவமதியாதிருத்தலும், காமங்காரணமாகப் பேதைமையுடையாராகிய பெண்களின் சொல்வழி நடவாதிருத்தலும், வஞ்சனைமுதலிய கொடுஞ்செய்கைகள் தம்மனத்தினிடத்துளவாயினும் அவைகளைக் காட்டாமல் யாவரையும் தங்களினிய வார்த்தைகளால் மயக்கிச்சேரும் பரத்தையரிடத்துண்டாகும் போக நுகர்ச்சியை விரும்பாதிருத்தலும், பலவித கெட்ட குணங்களை யுண்டாக்குமென்று மேலோர் இக ழ்ந்து சொல்லும் கள்ளுண்ணாதிருத்தலும், தரும முதலியவற்றைக் கெடுக்கும் சூதாடு தலை என்றும் நினையாதிருத்தலும். எ—று. (௪௯)

கொடிய நோய்க்கிடங் கொடுத்திடா தொழுகறங் குலவொழுக்கினைப்பேணல்
படியின் மானமும் பெருமையு மாண்புறு பண்புமிக் கினிதோம்பல்
குடிநலம்பெருக் குதன்மிடி தவிர்த்திடல் குறையுற விரவாமை
நெடிய மற்றிவை யனைத்தையு மிருதியி னெறிக்கொள லுரித்தாமால்.

இ-ரை.—ஆசாரம் தொழில் முதலிய பேதங்களாலுண்டாகும் கொடிய வியாதி களுக்கிடங்கொடாதபடி அவைகளைச் சரிவர நடத்தலும், தங்கள் தங்கள் குலாசார தருமங்களிற் றவறாதிருத்தலும், தங்கள் வருணாச்சிரம நிலைகளிற்றவறாது நடத்தலும், தருக்கின்மை, பிறர் குற்றங்கூறாமைமுதலிய பெருந்தன்மை யுடைவராயிருத்தலும், மாட்சிமைபெற்ற பல நற்குணங்களைத் தழுவி நடத்தலும், தாம் பிறந்த குடியைப்பல வாற்றானுமுயர்வடையச் செய்யுந் திறமுடையராயிருத்தலும், பிறரிடத்தே போய் யாசித்தன் முதலிய துன்பங்களையுண்டாக்கித் தம்மைப்பெற்ற தாயாலும் வெறுக்கச் செய்யும் தரித்திரத்திற் கிடங்கொடாதிருத்தலும், எப்போதும் பிறர் தம்மைப்பழிக்கு ம்படி பிறருடைய தலைவாயிலிற்சென்று யாசியாதிருத்தலும், மற்றும் பலவகைப்பட்ட இவைபோல்வனவாகிய நல்லொழுக்கங்களை யெல்லாம் தருமசாத்திரங்களில் விதித்த

முறைமைப்படி அனுசரித்து நடத்தல் எல்லா வருணத்தார்க்குமுரிய பொதுவாகிய தருமங்களாகும். எ—று. (௩௰)

பிராமணாதிவருணதருமமுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௩௱௩௰௬.

௳

பத்தாவது

பிரமவமிசமுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தருமநூ லனைத்து மோர்ந்து தயங்குசுவிரத வேந்தே
மருவிய மறையோ ராதி வருணத்த ரியல்பு சொற்றும்
பொருவறு முனிவர் விண்ணுள் புரந்தரன் முதலோர் கேட்பப்
பெருகய னுரைத்த வாய்மைப் பிரமவ மிசஞ்சொல் வாமால்.

இ-ரை.—தருமசாஸ்திரங்களெல்லாங் கற்றுணர்ந்து விளங்கிய சுவிரத மகாராஜனே கேளும், இதுவரையும் பெருமைபொருந்திய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு ஜாதியர்களின் றன்மையையும், இந்த நான்கு ஜாதிகளில் மாதரும், ஆடவரும் முறைபிறழ்ந்து கலத்தலினாலுண்டாகிய சங்கரஜாதிகளின் றன்மையையுஞ் சொன்னோம்; இனி ஒப்பில்லாத முனிவர்களும், தேவலோகத்தைக் காக்கின்ற இந்திரன் முதலாகிய தேவர்களும், வேண்டுதல் செய்ய அவர்களுக்கு அழகு மிகுந்த பிரமதேவன் திருவாய் மலர்ந்தருளிய உண்மையாகிய பிரமவமிசத்தைச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (௧)

காதிமன் னவன்றன் மைந்தன் கவுசிக னென்னும் வேந்தன்
நீதியிற் செங்கோ லோச்சி நெடுங்கடற் புவன மெல்லாம்
பாதுகாத் தருளு நாளிற் பலரொடுங் கானி லெய்தி
ஆதரம் பெருக வேட்ட மாடிடு மெல்லை தன்னில்.

இ-ரை.—காதிமகாராஜாவின் புத்திரனாகிய கவுசிகனென்னும் பெயரையுடைய விசுவாமித்திர மகாராஜனானவன் தருமநெறி வழுவாமல் தனதாணையைச்செலுத்தி நெடியகடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ள ஜீவான்மகோடிகளை இரக்ஷித்து வரும் பொழுது ஒருநாள் மந்திரிமுதலிய சகல சயின்னியங்களுடனே காட்டினிடத்துச் சென்று மிகுந்த விருப்பத்துடனே வேட்டையாடிக்கொண்டிருக்கிற சமயத்தில எ—று. (௨)

சுந்தரம் பெருகோர் மானைத் தொடர்ந்துசிக் குறுதா லோய்ந்து
நந்துமிவம் பசிதாகத்தா னலிந்தொரு வனத்தை நண்ணி

அந்தட நீர ருந்தி யயர்வுசற் றொழிய வங்கண்
வந்திடு முனிவர் தம்மால் வசிட்டனல் வனமென் றோர்ந்து.

இ-ரை.—அழகுமிகுந்த ஒரு மானைக்கண்டு அந்த மானைப் பிடிக்கும்பொருட்டு அதன் பின்னே தொடர்ந்து நெடுந்தூரஞ் சென்றும் அகப்படாமையினாலே சோர்வடைந்து, வருத்துகின்ற கொடிய பசியினாலும், தாகத்தினாலும் மெலிந்து, ஒரு வனத்தை யடைந்து அந்த வனத்திலுள்ள அழகிய தடாகத்தின் ஜலத்தை யுண்டு சிறிது வருத்த நீங்கி யிருக்கின்றபொழுது, அவ்விடத்து வந்த சில முனிவர்களாலே வசிஷ்ட மகாரிஷியினது அழகிய வனமென்று தெரிந்துகொண்டு. எ—று. (௩)

மகிழ்வுட னவன்பாற் சென்று வந்தனை முறையிற் செய்யப்
புகழ்தவ வசிட்ட னாசி புகன்றிருந் தருள்வா யென்னத்
தகவிருந் துழிநீ யீங்குச் சார்ந்ததால் விருந்த மைப்பன்
தொகுநின தனிகத் தோடுந் துய்த்தினி தகன்மி னென்றான்.

இ-ரை.—சந்தோஷத்துடனே வசிஷ்ட மகாரிஷியினிடம் போய் கிரமப்படி வணங்கி நிற்க யாவராலும் புகழப்பெற்ற தவத்தையுடைய வசிஷ்டமுனிவன் ஆசீர்வாதஞ்செய்து வீற்றிருந்து தயைசெய்யென்று சொல்ல அவ்வாறே தகுதியானவிடத்தி லிருந்தபொழுதில் நீ இவ்விடத்திற்கு வந்தபடியால், உனக்கு விருந்து செய்வேன் உன்னுடன் கூடி வந்திருக்கின்ற சேனைகளுடனே இனிதாக வுண்டு போவென்றான் எ—று. (௪)

என்றுவான் சுரபி தன்னை விளித்துநீ யிவர்கட் கெல்லாம்
துன்றறு சுவையி னோடு சுரந்தரு ளுண்டி யென்ன
அன்றது பற்பன் மாத ராகியே யவர்கட் கெல்லாம்
நன்றுறு முணவ ளித்து நனியவ ருண்ட பின்னர்.

இ-ரை.—இவ்வாறு சொல்லிய வசிஷ்டமுனிவன் பெருமை பொருந்திய காமதேனுவை அழைத்து, நீயே இவர்களுக்கெல்லாம் அறுசுவை பொருந்திய பதார்த்தங்களுடனே உணவைச் சுரந்தருள்வாயென்று நியமிக்க அப்பொழுது, அந்தக் காமதேனுவானது, பற்பல பெண்களாகி விசுவாமித்திரனுக்கும், அவனது சேனைகளுக்கும் நன்மை பொருந்திய ஆகாரங்களைப் படைத்து அவர்களெல்லாம் திருப்தியாகப் போசனஞ் செய்த பின்பு. எ—று. (௫)

விரைமலர் கலவைச் சாந்தம் வெள்ளிலை யடைக்கா யாதி
பரிவொடு நல்கித் தெய்வப் பசுதன துருவ மெய்தக்
கருதுறு மிவை யனைத்துங் கவுசிக மன்ன னோர்ந்து
பெரிதுவந் தருந்த வன்பாற் பெட்புடன் சென்று போற்றி.

இ-ரை.—வாசனை பொருந்திய புஷ்பமாலை, பரிமளம் பொருந்திய கலவைச் சந்தனம், தாம்பூல முதலியவை யெல்லாம் அன்புடனே கொடுத்து, தெய்வத்தன்மையுடைய காமதேனுவானது, தன்னுருவ மடைந்ததாக மதிக்கத்தக்க இவைகளையெல்லாம் விசுவாமித்திர மகாராஜன் அறிந்து மிகுந்த களிப்படைந்து விருப்பத்துடனே, வசிஷ்டமுனிவனிடம் போய் வணங்கி. எ—று. (௬)

அருந்தவ முனிவ வென்னோ டடைந்தபல் படைகட் கெல்லாம்
பரிந்தமு தளித்த தெய்வப் பசுவையெற் கருள்வா யென்ன
விரிந்தசீர் வசிட்ட மேலோன் வேந்தவிக் காம தேனு
பொருந்துபாற் கடலிற் றோன்றிப் புரந்தரன் றன்பால் வைகும்.

இ-ரை.—அரிய தவத்தையுடைய வசிஷ்ட முனிவரே என்னுடனே வந்த பலவாகிய சேனைகளுக்கெல்லாம் அன்புடனே உணவு நல்கிய தெய்வத்தன்மையுடைய பசுவை எனக்குக் கொடுத்தருளவேண்டுமென்று கேட்கப்பரந்த கீர்த்தியையுடைய மேலாகிய வசிஷ்டமுனிவன் விசுவாமித்திரனைப் பார்த்து அரசனே, இந்தக் காமதேனுவானது அழகு பொருந்திய பாற்கடலினிடத் துண்டாகி இந்திரனுக்குரியதாயிருக்கும். எ—று. (௭)

எற்கது சொந்த மன்றென் றியம்பிநீ வருவ தாகில்
வற்பொடு கொடுபோ வென்ன மன்னவன் சுரபி தன்னைப்
பொற்புறப் பிணித்துச் செல்லும் போழ்திலப் பிணியை வீட்டி
அற்புட னரசற் கென்னைக் கொடுத்தியோ வருந்த வத்தோய்.

இ-ரை.—ஆதலால், அந்தக் காமதேனுவானது எனக்குச் சொந்தமல்லவென்று சொல்லி, அது வருவதானால் நீ உன் வலிமையினாலே கொண்டுபோவென்றமாத்திரத்தில், விசுவாமித்திரன் காமதேனுவை அழகுடனே கட்டிக்கொண்டு புறப்படும்போது அந்தப்பசுவானது, அக்கட்டினை அறுத்துக்கொண்டு வசிஷ்டமுனிவரிடம் வந்து வணங்கி, அரியதவத்தையுடைய முனிவர் பெருமானே அன்புடனே விசுவாமித்திரனுக்கோ என்னைக் கொடுக்கிறாயென்று கேட்டது. எ—று. (௮)

என்னலு முனிவன் யானே யீந்திலன் வயிரத்திண்டோண்
மன்னவன் பிடித்த கன்றா னென்னவான் சுரபி சீறித்
தன்னுடன் மயிர் சிலிர்ப்பத் தனிப்படை யொடுபல் வீரர்
தென்னுறத் தோன்றி வேந்தன் சேனைக ளனைத்து மாய்த்தார்.

இ-ரை.—இவ்வாறு கேட்ட காமதேனுவை நோக்கி வசிஷ்டமுனிவன் நான் கொடுத்தேனல்லேன், வச்சிர மலைபோலும் பலமுள்ள புஜத்தையுடைய அரசன்றானே உன்னைப் பிடித்துக் கொண்டுபோகத் தொடங்கினனென்று சொல்லக்கேட்ட பெருமை பொருந்திய காமதேனுவானது, பெருங்கோபமடைந்து தன்னுடம்பின், மயிரைச் சிலிர்த்தது, அப்பொழுது அப்பசுவினிடத்து ஒப்பில்லாத ஆயுதங்களுடனே அழகு பொருந்திய பலவாகிய வீரர்களுண்டாகி விசுவாமித்திரன் சேனைகளெல்லாவற்றையுங் கொன்றார்கள். எ—று. (௯)

தானைகண் மடிய மன்னன் றனையர்கள் சீற்ற மெய்தித்
தேனுவின் செயலி தன்று செழுந்தவன் கபட மென்னா
ஊனகு படைக் கலத்தோ டுருத்தெதிர்த் தனர்வ சிட்டன்
றானெரி யெழ விழித்தான் சாம்பரா யினர்க ளன்னோர்.

இ-ரை.—சேனைகளெல்லா மாய்ந்ததை நோக்கி விசுவாமித்திரன் குமாரர்கள் கோபமெய்தி, இப்படியாகச் செய்தது பசுவின் றிறமன்று, வசிஷ்டமுனிவனது வஞ

சகமேயென்று உதிரக்கறையுடன் விளங்காநின்ற ஆயுதங்களுடனே ஆரவாரித்து, வசிஷ்ட முனிவன்மேலெதித்தார்கள்; அப்போது வசிஷ்ட முனிவன் கண்களிலே நெருப்பெழும்படி விழித்துப்பார்த்தலோடும் அரசன் குமாரர்களெல்லாம் மரணமடைந்து வெந்து சாம்பராயினார்கள். எ—று. (௰)

மைந்தர்நூற் றுவரிவ் வாறுமடிந்தமை யரசன் கண்டு
செந்தழ லெனவே பொங்கு சினமுறீஇச் சிலையைக் கோட்டி
அந்தமில் கணைக ளெய்ய வருந்தவ முனிவன் றானும்
சந்தமார் தருதன் யோக தண்டினை யெதிர்க வென்றான்.

இ-ரை.—இவ்விதமாக நூறுபுத்திரரும் இறந்ததை விசுவாமித்திரன் கண்டு மூண்டெரியும் அக்கினிபோல மிகுந்த கோபமுடையவனாகி, வில்லை வளைத்து அளவில்லாத பாணங்களைப் பிரயோகித்தான்; அதைக்கண்ட வசிஷ்ட முனிவனும் அழகுபொருந்திய தமது கையிலிருந்த யோகதண்டத்தை நோக்கி, நீ எதிர்த்திடுகவென்று ஏவினான். எ—று. (௰௧)

புரவலன் விடுத்த தெய்வப் பொருபடைக் கலங்க ளெல்லாம்
விரவுசீர் முனிவன் றண்டம் விழுங்கிமேற் றிகழ்த னோக்கி
அரியமா தவத்தி னோர்க ளாற்றலே சிறந்த தல்லாற்
பரவைசூ ழுலகங் காக்கும் பாழியும் பாழி யாமோ.

இ-ரை.—விசுவாமித்திரன் பிரயோகித்த தேவதாஸ்திரமுதலிய படைக்கலங்களெல்லாவற்றையும் சிறப்புப்பொருந்திய வசிஷ்ட முனிவனது தண்டமானது விழுங்கி மேன்மையாகப் பிரகாசித்தலை விசுவாமித்திரன் பார்த்து அரிதாகிய மாக்ஷிமை தங்கிய தவத்தையுடைய முனிவர்களது வல்லமையே சிறப்புடையதன்றி கடல்சூழ்ந்த உலக முழுவதையும் ஆளுகின்ற வல்லமையும் ஒரு வல்லமையாகுமோவென்று தீர்மானித்தது. எ—று. (௰௨)

எனத்தவன் செயலை யெண்ணி யிந்திரன் றிசையை நண்ணிக்
கனத்தவக் கோல மெய்திக் கருதருந் தவஞ்செய் காலைத்
தனக்கிடர் விளையு மென்றத் தவத்தினுக் கூறு செய்வான்
வனப்பினிற் பொலிதி லோத்த மையைவிடுத் தனன்வ லாரி.

இ-ரை.—இவ்வாறு தீர்மானித்த விசுவாமித்திரனானவன் தவத்தையுடைய வசிஷ்ட முனிவன் செய்த வெற்றிச்செயலையே மனத்தினால் நினைத்து இந்திரன் திக்காகிய கீழ்த்திசையை அடைந்து சிறந்த தவவேடந்தரித்து நினைத்தற்கரிய தவஞ்செய்கின்றபோது இந்திரன் பார்த்து அந்தத்தவத்தால் தனக்கு துன்பமுண்டாகுமென்று அத்தவத்தைக் கெடுத்தற்காக அழகிற் சிறந்து விளங்காநின்ற திலோத்தமையென்று சொல்லப்பட்ட தெய்வப்பெண்ணை யேவினான். எ—று. (௰௩)

வந்தமின் னழகை நோக்கி மாதவ மிழந்து மன்னன்
புந்திமாழ் குற்று மோகப் புணரியி னழுந்திப் பின்னர்
இந்திரன் செய்த வஞ்ச மெனச்சினந் தரிவை தன்னை
அந்தமார் வசுந்த ரைப்பெண் ணதியென் றேவிச் சென்றான்.

இ-ரை.—இந்திரன் ஏவலால் வந்த திலோத்தமையினது அழகைக்கண்டு மதிமயங்கித் தவத்தைவிட்டு ஆசையாகிய கடலில் மூழ்கி அவளின்ப நுகர்ந்திருந்து பின்பு தெளிந்து இந்திரன் பண்ணின கபடமிதுவென்று கோபித்து அழகுநிறைந்த திலோர்த்தமையைப்பார்த்து நீ பூலோகத்துப் பெண்ணுவாயென்று அனுப்பிவிட்டுப் போனுன். எ—று. (௰௪)

சென்றுதென் றிசையை மேவிச் செய்தவம் புரியு மேல்வை
வென்றிசேர் திரிசங் கென்னும் வேந்துதன் குருவை நண்ணித்
துன்றிய சரீரத் தோடு சுவர்க்கத்தை யடையச் செய்வாய்
என்றனன் குரவன் ருனு மிறந்தபின் னடைவா யென்ருன்

இ-ரை.—இவ்வாறு சென்ற விசுவாமித்திரன் தென்திசையை யடைந்து செய்தற்குரிய தவத்தைச் செய்யுஞ்சமயத்தில் வெற்றிபொருந்திய திரிசங்குவென்று சொல்லப்பட்ட அரசனுனவன் தன் குருவாகிய வசிஷ்ட முனிவனை யடுத்து பொருந்திய சரீரத்துடன் சுவர்க்கத்தையடைய எனக்கு அருள்செய்கவென்று பிரார்த்தித்தான்; அதற்கு ஆசாரியனுகிய வசிஷ்ட முனிவன் ஆயுள்கழிந்தபின்பு அடைவாயென்று சொன்னுன். எ—று. (௰௫)

ஐயநிற் கொல்லா தாகில் யானெவ ரைக்கொண் டேனும்
செய்குவன் வேள்வி யென்னச் சினந்துமுற் குருவை நீக்கி
வெய்யநிற் கிதஞ்செய் வானை விரும்பினை யாத லானீ
வையமெண் புலைய னுவா யென்றனன் மறைவ சிட்டன்.

இ-ரை.—அதைக்கேட்ட திரிசங்குராஜன் ஐயனே! உனக்கு இசையாதாகில் வேறு எவரைக்கொண்டாவது நான் அதைக்குறித்து யாகஞ்செய்வேனென்று சொல்ல அதைக்கேட்ட வசிஷ்ட முனிவன் கோபித்துக் கொடுமையையுடைய அரசனே பூர்வாசாரியனைவிட்டு உனக்குத் தகுதியான காரியங்களைச் செய்யப்பட்டவனைத் தேடினை அதனுலே நீ புவியோரிகழும்படியான நீசனுவாயென்று சபித்தான். எ—று.

மறைமுனி வரன்சா பத்தால் வனப்பிழந் துருவ மாறி
இறைவனூர் வந்தான் யாரு மிகழ்தலாற் கானி லெய்திச்
சிறிதுநாட் கழித்தோர் வைகை திகழ்கவு சிகப்பேர் மன்னன்
உறைவனங் குறுக வன்னு னுற்றநீ யாவ னென்ருன்.

இ-ரை.—வேதங்களை யுணர்ந்த வசிஷ்ட முனிவனிட்ட சாபத்தால் திரிசங்குராஜன் அழகிழந்து வேற்றுருவடைந்து ஊருக்கு வந்தான் எல்லாரு மிகழ்ந்து பேசுதலாலே காட்டினிடத்துச் சென்று சிலநாள் கழித்து வருகையில், ஒருநாள் விளங்காநின்ற கவுசிகனென்கிற பெயரையுடைய விசுவாமித்திரராஜன் வசிக்கின்ற சோலையை அடைந்தான் அந்த விசுவாமித்திரன், இவ்விடத்தில் வந்த நீயாரென்று கேட்டான். எ—று. (௰௭)

என்னமே னிகழ்ந்த யாவு மெடுத்துரைத் திறைஞ்சி நின்ற
மன்னவன் றன்னை நோக்கி மாமக முறையி னுற்றி

162056

உன்னுசி ரமரர் வாழு முலகுனக் களிப்பே னென்னுத்
துன்னுமா தவரைக் கூவத் தொக்கனர் முனிவ ரெல்லாம்

இ-ரை.—இவ்வாறு கேட்டவுடன் மேல் நடந்த செய்திகளெல்லாவற்றையு மெடுத்துச்சொல்லி வணங்கி நின்ற திரிசங்குராஜனை விசுவாமித்திரன் பார்த்து பெரிய யாகத்தை விதிப்படி முடித்து யாவருங் கருதுகின்ற சிறப்பினையுடைய தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்கலோகத்தை உனக்குக் கொடுப்பேனென்று சொல்லி யாகஞ்செய்தற்பொருட்டு நெருங்கி யிருக்கின்ற முனிவரை யழைக்க முனிவரெல்லாம் வந்து கூடினார்கள். எ—று. (௰௮)

யாவரும் புகழ நின்று வேள்வியை யினிது முற்றித்
தேவரை விளித்தா னன்னோர் சேர்தரா மையினாற் சீறித்
தாவருந் தவத்தால் யானே சாற்றினன் றுறக்கம் போவென்
றேவின னேவ மன்னன் விமானத்தி னேறிச் சென்றான்.

இ-ரை.—எல்லாருங் கொண்டாடும்படி விசுவாமித்திரன் சலியாது நின்று நன்மையுடனே யாகத்தை முடித்து, தேவர்களை வரக்கடவீரென்று அழைத்தான். அவர்கள் வராமலிருந்தமையால், கோபித்துக் கெடுதலில்லாத தவவலிமையினால் நானே சொன்னேன் நீ சுவர்க்கலோகத்தை அடையக்கடவாயென்று ஆக்ஞாபித்தான்; அப்படி ஆக்ஞாபித்தவுடனே திரிசங்குராஜன் விமானத்தின்மேலேறி சுவர்க்கலோகத்தை யடையச் சென்றான். எ—று. (௰௯)

மற்றவன் சுவர்க்க மெய்த வானவர் நீச னீயிங்
குற்றிட லென்னே பாரி னுறுகெனப் பற்றி லாமற்
கொற்றவன் கவிழ்ந்து வீழ்காற் கோமுனி சரணமென்ன
வெற்றிமா தவன்மே லோங்கி வேந்தநின் னில்லென் றார்த்தான்

இ-ரை.—அந்தத் திரிசங்குராஜன் சுவர்க்கலோகத்தையடையச்செல்லத் தேவர்கள் கண்டு சண்டாளனாகிய நீ இவ்விடத்திற்கு வருவதற்குக் காரணம் யாது நிலவுலகத்திற்றானே பொருந்துகவென்று தள்ள திரிசங்குராஜன் ஆதாரமில்லாமல் குப்புற்று விழும்போது பெருமை பொருந்திய விசுவாமித்திர முனிவனே, அடைக்கலமென்று சொல்ல அதைக்கேட்ட வெற்றி பொருந்திய விசுவாமித்திர முனிவன் உயரவெழும்பித் திரிசங்குராஜனே நில் நில்லென்று சொல்லி ஆரவாரஞ் செய்தான். எ—று. (௨௰)

எனைமதி யாதி கழ்ந்த விமையவர் பதமுன் னாக
நனிதிகழ் பதங்க ளாள்கோ ணவில்சரா சரங்களெல்லாம்
கனிவின்வே றமைப்பே னென்னுங் காலையில் விண்ணு ளோரும்
புனிதமா தவருங் கூடிப் பொறுத்தருண் முனிவர் கோனே.

இ-ரை.—அப்படி ஆரவாரஞ்செய்த விசுவாமித்திரன் பெருங் கோபத்துடன் எமது சொல்லை மதிக்காமல் அவமதித்த தேவர்கள் பதவிமுதலாக விளங்காநின்ற பதவிகளையும், நக்ஷத்திரங்களையும், கிரகங்களையும் சொல்லப்பட்ட இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களாகிய எல்லாவற்றையும் வேறாக வுண்டாக்குவேனென்று நினைக்

குங்காலத்தில் தேவலோகத்திலுள்ள தேவர்களும், முனிவர்களும் ஒருங்குசேர்ந்து, முனிவர் பெருமானே, க்ஷமித்தருள்வாயென்று சொல்லி. எ—று. (உக)

பொருவரு நின்பால் வந்து புகல்புகுந் தவனைக் காத்தல்
தருமமே யதனா லன்னோன் றாரகைக் கணத்தி னோடும்
ஒருவுறு தமைக வென்னா வும்பரும் போய பின்னர்
வருணன்வாழ் திசையை நண்ணி மாதவம் புரியுங் காலை.

இ-ரை.—தவத்தினாலே ஒப்பற்ற உன்னிடத்தில் வந்து அடைக்கலம் புகுந்தவனைக் காப்பாற்றுதல் தருமமேயாகும்; ஆதலால், அந்தத் திரிசங்குவென்பவன் நக்ஷத்திரக்கூட்டங்களுடனே நீங்காது சேர்ந்திருக்கக்கடவனென்று சொல்லி தேவர்களும் முனிவர்களும் போனபின்பு வருணன் வசிக்கின்ற திக்காகிய மேற்றிசையை அடைந்து பெருமை பொருந்திய தவத்தை முயன்று செய்யுங்காலத்தில். எ—று. ()

வாரிசூ ழுலகம் போற்று மன்னவ னம்ப ரீடன்
சீரிய புருட மேதஞ் செய்யவோர் சிறுவற் கொள்வான்
ஆரரும் பொருடே ரிற்கொண் டடவியிற் சென்று தேடி
ஏரிய றவத்தி னோங்கு மிரிசிகன் வனத்தை நண்ணி.

இ-ரை.—சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தைப்பரிபாலனஞ்செய்யும் அம்பரீஷமகாராஜனென்பவன் சிறப்பினையுடைய புருஷமேதயாகஞ் செய்வதற்கு ஒரு சிறுவனைக் கொள்ளும் பொருட்டு வேண்டிய அருமையாகிய பொருள்களைத் தேர்மேல் வைத்துக் கொண்டு காடுகளிற்போய்த் தேடிவருகையில் அழகிய தவத்தினா லுயர்ந்த இரிசிக முனிவன் வசிக்கின்ற காட்டை யடைந்து. எ—று. (உ௩)

மன்னவன் வினவ வன்னோ ரிணங்கினர் மைந்தர் தம்முள்
அன்னைபின் னவனெற் கென்றா ளத்தன்முன் னவனெற் கென்றான்
என்னலு நடுக்கு மாரன் சிரித்திறை வனைப்பார்த் தெந்தை
தன்னிலம் பாடு தீரத் தந்தருள் வெறுக்கை யென்றான்.

இ-ரை.—அம்பரீஷமகாராஜன் அவரைக்கேட்க அம்முனிவரும் முனிவர் பத்தினியும் உடன்பட்டார்கள்; ஆயினும், அவர்கள் புத்திரர் மூவருள் தாயானவள் இளையவனாகிய சுனகன் எனக்கே யுரியனென்றாள்; தந்தையானவன் மூத்தவனாகிய சுனப்புச்சன் எனக்கே யுரியனென்றான்; இருவருமிப்படிச் சொன்னவளவில் எஞ்சி நின்ற சுனச்சேபனென்கிற புத்திரன் அவ்விருவருடைய அறியாமைக்குச் சிரித்து, அந்த அரசனைப்பார்த்து என் பிதாவினது தரித்திரமானது, அறவொழியும்படி விரும்புவதாகிய திரவியத்தைக் கொடுத்தருள்வாயென்று சொன்னான். எ—று. (உ௪)

என்றுதா தையை வணங்கி யிறையவன் றேரி னேறிச்
சென்றிடும் போதி னென்றூழ் சேர்ந்தன னுச்சி யங்கண்
நன்றிழிந் தாசர் கோமா னவிலருங் கடன்க ளாற்ற
நின்றிடு சிறுவன் றானு நியமங்கள் செயச்சென் றானால்.

இ-ரை.—என்றுசொல்லித் தந்தையைத்தொழுது அரசனது தேர்மேலேறிச்செல்லும்போது சூரியபகவான் ஆகாயத்துச்சியிற் பிரவேசித்தான்; அவ்விடத்தில் அரசன்

நன்மையுடனே தேர்விட்டிறங்கிச் சொல்லுதற்கரிய மாத்தியான்னிகத்திற்குரிய கரும மாகிய கடன்களைச் செய்யாநிற்க இறங்கிநின்ற சிறுவனாகிய சுனச்சேபனும் நியமங்க ளைச் செய்யப்போனான். எ—று. (௨௫)

அவ்வயிற் கவுசி கப்பே ரருந்தவ முனியைக்கண்டு
கவ்வையி னிறைஞ்சி நின்ற காளையை முனிவனோக்கி
எவ்வமென் னுரைத்தி யென்ன வென்னையீன் றவளும் முன்னை
தவ்வலி லரசற் கென்னைத் தந்தனள் பொருள்கொண் டென்றான்.

இ-ரை.—அச்சிறுவன் போயின அவ்விடத்தில் கவுசிகனென்னும் பெயரையு டைய அரிய தவத்தினாற்சிறந்த விசுவாமித்திரனைக்கண்டு மனக்கவலையுடனே வண ங்கி நின்ற சிறுவனை அம்முனிவன் பார்த்து மன வருத்தத்துக்குக் காரணமென்ன சொல்லுகவென்று கேட்க, முனிவனைநோக்கி என்னைப்பெற்ற தாயாகிய உனக்கு மூத்தவள் என்பிதாவின் சம்மதப்படி திரவியத்தைப் பெற்றுக்கொண்டு என்னைக் கெ டாத புகழையுடைய அரசனுக்குக் கொடுத்தாளென்று சொன்னான். எ—று. (௨௬)

மறைமுனி வினவி யஞ்சேன் மருகநிற் கிரண்டு விஞ்சை
அறைகுவன் யூபத் தெய்தி யாய்தியே லிமையோ ரெல்லாம்
செறிகுவர் வேள்வி முற்றுந் தீதுனக் கெய்தா தென்று
குறைதப வுபதே சித்தான் குமரன்மன் னவன்பா லுற்றான்.

இ-ரை.—வேதங்களையுணர்ந்த விசுவாமித்திரமுனிவன் தன் மைத்துனனுந் தம க்கையுங் கொடுத்த முறையைக்கேட்டு மருமகனே! நீ அஞ்சாதே, உனக்கு இரண்டு மந்திரங்களை உபதேசிக்கின்றேன்; நீ யாகத்தம்பத்தை யணைந்து ஜபித்துக்கொண்டி ருப்பாயாகில், தேவர்களெல்லாம் வந்து சேருவார்கள், யாகமும் முடியும், உன்னுயி ருக்கு முடிவுண்டாகமாட்டாதென்று சொல்லி அவன் மனத்தளர்ச்சி நீங்க உபதே சித்தான்; அச்சிறுவனும் அரசனிடத்தில் வந்துசேர்ந்தான். எ—று. (௨௭)

அண்ணல்செய் வேள்வி யூபத் தணைந்துமா முனிவன் சொற்ற
வண்ணமே செபிக்க வங்கண் மலரயன் முதலி யோர்கள்
நண்ணுபு மகமுங் காத்து நவில்சிறு வனையுங் காத்தார்
எண்ணருந் தவத்தின் மிக்கா னெழில்வட திசையிற் புக்கான்.

இ-ரை.—அரசனாற் செய்யப்பட்ட யாகத்தம்பத்தை யணைந்து பெருமை பொரு ந்திய விசுவாமித்திரமுனிவன் சொன்னபிரகாரமே அந்த மந்திரங்களை ஜபிக்க அவ் விடத்தில் பிரமன்முதலிய தேவர்களெல்லாம் வந்து கூடி வேதவிதிப்படிச் செய்கிற யாகத்தையும், சொல்லப்பட்ட சிறுவனுயிரையுங் காத்தார்கள், மதிக்கத்தக்க அரிய தவத்தினாற் சிறந்த விசுவாமித்திரமுனிவன் வடதிசையிற்போனான். எ—று. (௨அ)

வடதிசை முனிவன் மேவி மருவுமைம் புலன்வென் றேமப்
பொடியுடன் முழுதும் பூசிப் பொருவில்கண் மணிகள் பூண்டு

நெடியசெஞ் சடைதரித்து நிலவுவற் கலையு டுத்தி
ஒடிவிலங் தங்கி நாப்ப ணேரெழுத் திதயத் தெண்ணி.

இ-ரை.—விசுவாமித்திர முனிவன் வடதிசையிற் சென்று பொருந்திய பஞ்சேந்திரியங்களையு நிக்கிரகித்து யக்ஞத்தாலாகிய விபூதியைச் சரீர முழுவதும் உத்தூளனஞ் செய்து ஒப்பில்லாத ருத்திராக்ஷ மணிகளை யணிந்து நெடிய சிவந்த ஜடைமுடியைத்தாங்கி விளங்காநின்ற மரவுரி தரித்துக் கெடுதவில்லாத பஞ்சாக்கினி மத்தியில் சகல மந்திரங்களுக்கு மூலமாகிய பிரணவத்தை உள்ளத்தில் தியானித்து. எ—று. ()

பிரிவறத் தோமு ருது பிறங்குபல் பருவ நின்றே
அரியமா தவம்பு ரிந்தா னத்தவச் சுடரின் றூமம்
விரவியெவ் வயினுந் தாவி மேவுறு மந்த காரம்
ஒருவரப் பொதித லாலெவ் வுலகமு நடுங்கிற் றம்மா.

இ-ரை.—நீங்காமலும் இடையூறில்லாமலும் விளங்காநின்ற அனேக வருஷகாலம் நின்று செய்தற்கரிய பெரிய தவத்தைச்செய்தான்; அவ்வாறு செய்த தவத்தினுலுண்டாகிய அக்கினியின் புகையானது, எவ்விடங்களிலுங் கலந்து பரந்து பொருந்திய விருள் நீங்காது போர்த்துக்கொண்டதனுலே எல்லாவுலகமு நடுங்கினது. எ—று. (௬௰)

ஷை வேறு.

தேவர் பலரும் வெருண்டனர்க டிசைவாழ் கரிகண் மருண்டன வெண்
காவலவருந் திகைத் தனர்கள் கருதுமசர சரங்களெனும்
யாவுமெலிந்த வதுகாலை யவணங் கமல நறும்பொகுட்டின்
மேவுங் கடவுண் மறை விரிஞ்சன் விண்ணோர் பரவ வடைந்தனனுல்.

இ-ரை.—பலவகுப்பினராய் விளங்காநின்ற தேவர்களெல்லாம் பயமடைந்தார்கள்; எட்டுத் திசைகளிலுமுள்ள அஷ்டகஜங்களு மயக்கமடைந்தன; இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலர்களும் பிரமித்தார்கள்; எண்ணப்படுகின்ற நிலையியற்பொருள் இயங்கியற் பொருள்களாகிய எல்லாந்தளர்வடைந்தன; அந்தக்காலத்தில் அழகிய நல்ல தாமரைப் பொகுட்டில் வீற்றிருக்கின்ற தெய்வத்தன்மையுடைய வேதங்களுக்குத் தலைவனுகிய பிரமதேவன் தேவர்களெல்லாந் தன்னைச் சூழ்ந்து வணங்கும்படி அவ்விடத்தில் வந்தான். எ—று. (௬௧)

தனிமா தவத்தின் விளங்குமுனி தன்னை யெதிர்ந்து நீபுரிந்த
இனிதாந் தவத்தி னுயர்பிரம விருடியாகு யென் றிசைப்பக்
கனிவோ டிறைஞ்சி வசிட்டமுனி கழறல்வேண்டு மெனப்புகலப்
பனிமா மலரிற் பண்ணவனும் பரிந்து வசிட்டன் முகநோக்கி.

இ-ரை.—ஒப்பில்லாத பெருமைபொருந்திய தவத்தினுலே பிரகாசியாநின்ற விசுவாமித்திரமுனிவனைச் சந்தித்து நீ செய்த தவத்தினுலே மேலாகிய பிரமரிஷியாகுயென்று திருவாய் மலர்ந்தருளக்கேட்ட விசுவாமித்திரமுனிவன் மகிழ்வடைந்து பிரமதேவனைத் தொழுது வசிஷ்ட முனிவன் வாக்கினுற் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் குளிர்ச்சிபொருந்திய அழகிய தாமரைமலரில் எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவன் அன்புடனே வசிஷ்ட முனிவன் முகத்தைப்பார்த்து. எ—று. (௬௨)

ஞானா கரநின் றிருவாயா னவிற்று கென்ன வுரைத்திடலும்
ஆனாற் பிரம விருடியென வறைந்தான் வசிட்டன் கவுசிகனும்
தானோர்விதத்தின் மகிழ்சிறந்தான் றனியோ திமத்தின்மீதுறைவோன்
வானோர் பிறரு மவரவர்கள் வசிக்கு மிடங்கள் சேர்ந்தனரால்.

இ-ரை.—ஞானத்துக் கிருப்பிடமானவனே, அழகிய உன் வாக்கினாலே விசுவாமித்திர முனிவனைப் பிரமரிஷியானாயென்று சொல்வாயெனத் திருவாய் மலர்ந்தருளலும், வசிஷ்டமுனிவன் ஆனாற் பிரமரிஷியென்று சொன்னான்; அப்படிச் சொல்லக் கேட்ட விசுவாமித்திரமுனிவன் ஒருவாறு மகிழ்ச்சியடைந்தவனானான்; ஒப்பில்லாத அன்னவாகனனாகிய பிரமதேவனும், தேவர்களும், முனிவர்களும் அவரவர்கள் வாசஞ்செய்யு மிடங்களிற் சென்றார்கள். எ—று. (௫௫)

வேறு.

இன்னண நிகழ வப்போ திரட்டுறத் தனைவசிட்டன்
சொன்னவா றெண்ணி யெண்ணித் துனியொடு சின்னாட் சென்ற
பின்னர்மற் றதனை மாற்றும் பெற்றிநூன் முறையி னோர்ந்து
பொன்னக ரினிது காக்கும் புரந்தரன வையினுற்றான்.

இ-ரை.—இந்தப் பிரகாரம் நடந்த காலத்தில் விசுவாமித்திர முனிவனானவன் தன்னை ஆனாற் பிரமரிஷியென்று இரண்டு பொருள்பட வசிஷ்டமுனிவன் சொன்ன வார்த்தையை நினைந்து நினைந்து மனத்துயருழந்து சிலகாலஞ் சென்ற பின்பு அச்சொல்லைத் தீர்ப்பதற்கான தன்மையைச் சுருதி முதலிய நூல்களா லுணர்ந்து இன்புடனே தேவலோகத்தைப் புரக்கின்ற இந்திரனது சபையை அடைந்தான். எ—று.

உற்றகோ சிகனை யுள்ளத் துவகையோ டெதிர்ந்து போற்றிப்
பொற்றவி சிருத்தி யீண்டுப் போந்தமை யருளிக்காத்தி
நற்றவ வென்ன லோடு நனிமகிழ்ந் தமரர் வேந்தே
மற்றிவ ணடைந்த செய்தி வகுப்பலென் றுரைப்ப தானான்.

இ-ரை.—தன்னுடைய சபையில் வந்த விசுவாமித்திரமுனிவனை இந்திரன் மனமகிழ்ச்சியுடனே சந்தித்து வணங்கிப் பொன்னாலாகிய ஆசனத்திலிருக்கச்செய்து நல்ல தவச்செல்வத்தையுடைய முனிவர் பெருமானே, இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரியத்தைத் திருவாய்மலர்ந்தருளி இரக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, மிகுந்த களிப்படைந்து தேவராஜனே, இவ்விடத்திற்கு யான்வந்த செய்தியைச் சொல்லுவேனென்று சொல்லத்தொடங்கினான். எ—று. (௫௬)

மருவுசீர் மறைவசிட்ட மாமுனி யென்னை யானாற்
பிரமவி ருடிதா னென்னப் பேசின சங்கை தீர
விரவிய வமரர் சித்தர் விஞ்சைய ரவுணர் நாகர்
பொருவரு முனிவர் யாரும் பொருந்துநின் சமூகந் தன்னில்

இ-ரை.—சிறப்புப் பொருந்திய வேதங்களையுணர்ந்த வசிஷ்டமகாமுனிவன் என்னை ஆனாற் பிரமரிஷிதானென்று சொன்ன சந்தேகந் தீரும்பொருட்டுத் தேவர்களும்,

சித்தர்களும், வித்தியாதரர்களும், அசுரர்களும், நாகர்களும் ஒப்பில்லாத முனிவர்களும் கலந்து பொருந்திய உன்னுடைய சபையினிடத்தில். எ—று. (௧௬)

தன்னிகர் மறைக ளோடு தருமநூல் சாட்சி யாக
மின்னுமத் தவனும் யானும் விவகரித் திடுதல் வேண்டும்
என்னலு மகவா னாதி யிமையவர் முனிவர் யாரும்
மன்னிய மேருவின்கண் வந்துவீற் றிருந்தா ரன்றே.

இ-ரை.—தனக்குத்தானே சமானமாகிய சுருதிஸ்மிருதிகளின் சம்மதமாக விளங்காநின்ற அந்த வசிஷ்டமுனிவனும் யானும் நியாயமாகிய வழக்குப் பேசுதல் வேண்டுமென்று சொன்னவுடன் இந்திரன் முதலிய தேவர்கள் முனிவர்களெல்லாரும் நிலைபெற்ற மகாமேருகிரியில் வந்து மகிழ்ந்திருந்தார்கள். எ—று. (௧௭)

வீற்றிருந் திடலு மங்கண் விளங்கிய கவுசிகன்றான்
மாற்றருஞ் சீர்த்திவாய்ந்த வசிட்டனை யினிது நோக்கி
ஏற்றமார் தவஞ்செய்தேனை யிரட்டுற மொழிந்த தென்னே
சாற்றுதி யெனவன் னானேன்சத் திரியனீ யதனாலென்றான்.

இ-ரை.—விளங்காநின்ற அவ்விடத்தில் யாவரும் வந்திருந்தவுடன் விசுவாமித்திர முனிவன் நீங்குதற்கரிய சிறப்புப் பொருந்திய வசிஷ்டமுனிவனை நன்மையுடன் பார்த்து மேன்மைபொருந்திய தவஞ்செய்த என்னை ஆனாற் பிரமரிஷியென்று இரண்டு பொருள்படச் சொன்னது யாதுகாரணஞ் சொல்லென்று கேட்க வசிஷ்டமுனிவன் நீ க்ஷத்திரிய வமிசத்திற் பிறந்ததனாலே எத்தன்மையாகிய தவஞ்செய்தாலும் இராஜரிஷியே யல்லது பிரமரிஷியாக மாட்டாயதனா லப்படிச் சொன்னே னென்றான். எ—று. (௧௮)

ஜென்மனா ஜாய தேசூத் திரவெனும் வசனத்திற்கு
நன்மைசால் பொருள்யா தென்ன நவின்றகோ சிகனை நோக்கித்
தொன்மைமூற் குலத்தி னோர்க்கே சொற்றதவ் வசன மல்லால்
இன்மையா மற்றை யோர்க்கென் றிசைத்தனன் மறைவசிட்டன்.

இ-ரை.—அவ்வாறு சொல்லக்கேட்ட விசுவாமித்திர முனிவன் வசிஷ்டமுனிவனைப்பார்த்து ஜென்மனாஜாயதே சூத்திரவென்னும் வாக்கியத்திற்குப் பிரயோசனமாகிய அருத்தமென்னவென்று வினாவிய விசுவாமித்திர முனிவனைப்பார்த்துப் பழமையாகிய முதல் வருணத்தாராகிய பிராமணர்களுக்கே அந்த வாக்கியமுரியதன்றி மற்ற வருணத்தாருக்கு உரியதல்லவென்று சொன்னான் வேதங்களையுணர்ந்த வசிஷ்டமுனிவன். எ—று. (௧௯)

ஆயினின் குலம்யா தென்ன வயன்சுதன் மறையோ னென்னத்
தாய்குல மெதுவோ வென்னத் தரணியி லோர்வித் திட்டால்
ஏயமண் ணெதுவானாலு மிட்டதே முளைக்கு மென்றான்
தூயநின் மொழிநன் றென்னக் கவுசிக னகைத்துச் சொல்வான்.

இ-ரை.—அப்படியானல் உன்னுடைய குலமென்னவென்று விசுவாமித்திர முனிவன்கேட்க பிரமாவின் புத்திரனுகிய வசிஷ்டமுனிவன் நான் பிராமணகுலத்தனென்று சொல்ல உன்தாயின் குலம் என்னவென்று விசுவாமித்திரமுனிவன் கேட்க அதற்கு வசிஷ்டமுனிவன் பூமியில் ஒருவிதையைப் பதித்தால் அதுபொருந்திய மண் எதுவாயிருந்தபோதிலும் பதித்தவித்தே முளைக்குமல்லாமல் வேறு முளையாதபடியால் தாயின் குலத்தை விசாரிப்பதிற் பயனில்லை யென்றான். அதைக்கேட்ட விசுவாமித்திர முனிவன் பரிசுத்தமாகிய தவத்தையுடைய வசிஷ்டமுனிவனே உன் வார்த்தை நன்றாயிருந்ததென்று சிரித்துச் சொல்லுவான். எ—று. (௪௰)

புயலினம் பொழிநீ ரொன்றே பொருந்துமண் ணியற்கை யாலே
அயமள வாதபேத மாதலை யுணர்ந்தி லாயோ
வியனிலம் விதையு மொத்தான் மேன்மையாம் பிறழுமாகிற்
பயனுற லரிதா மென்னப் பகர்ந்தினும் பகரலுற்றான்.

இ-ரை.—மேகக்கூட்டங்கள் வருஷிக்கின்ற ஒரே தன்மையாகிய ஜலமானது பொருந்திய பூமிசாரவியற்கையினாலே அந்த ஜலத்தின் குணம் அளவில்லாத வேறுபாடாகின்றதை நீயறிந்ததில்லையோ; ஆதலால், பெருமைபொருந்திய பூமியும் வித்தும் வேறுபாடில்லாமல் ஒத்திருந்தால, மேம்பாடு பொருந்திய பலனுண்டாகும். ஒன்றுக்கொன்று மாறுபடுமானல் பிரயோசனமுண்டாகுவ தரிதாகுமென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லத்தொடங்கினன். எ—று. (௪௧)

அருமறை மிருதியாதி யாகிய நூல்க ளெல்லாம்
வருணமோர் நான்கி லாண்பெண் மாறுபு தழுவ வந்தோர்
பெருகுசங் கரர்களென்றே பேசுவ துணர்ந்தி லாயோ
மருளுற மறந்தாய் கொல்லோ மறைத்துரை செய்கின்றாயோ

இ-ரை.—வசிஷ்டமுனிவனே, பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்னும் நான்குவருணத்தார்களில் மாதரும் ஆடவரும் முறைபிறழ்ந்து சேரப்பிறந்தவர்களை அருமையாகிய சுருதிஸ்மிருதி முதலாகிய பல நூல்களிலும் விருத்தியாகிய சங்கரஜாதியார்களென்று சொல்லப்படுகின்றதை நீ அறிந்ததில்லையோ, அல்லது மதிமயக்கத்தால் மறந்தனையோ, அல்லது மறைத்துச் சொல்லுகின்றனையோ. எ—று. (௪௨)

வயங்குசங் கரர்கட் கெல்லாம் வரன்முறை யபிதானங்கள்
நயங்கொளு மறைமுன்னூல்க ணவின்றன வரைவின் மாதை
முயங்கிட வுதித்தோர்க் குப்பேர் மொழிந்திலை யாதலானீ
தயங்குசங் கரிற் றாழ்ந்துந் தனிமுதற் குலத்த னென்றாய்.

இ-ரை.—அவ்வாறு தோன்றி விளங்குகின்ற சங்கரஜாதியர்களுக்கெல்லாம் கிரமமாகப் பெயர்களை நன்மை பொருந்திய சுருதிமுதலிய நூல்களிற் சொல்லப்படுகின்றன. வேசியுடன் றழுவத் தோன்றிய சந்ததிகளுக்குப் பெயர் சொல்லப்படவில்லை. ஆதலால் நீ விளங்காநின்ற சங்கரஜாதியார்களிலும் கீழ்மையான ஜாதியாயிருக்கவும் ஒப்பில்லாத பிராமண ஜாதியென்று சொன்னது நியாயமோ வென்றான். எ—று. (

கொச்சகக்கலிப்பா.

தேனின்மொழி யூர்வசிபாற் செனித்தமுனி வர கேட்டி
யானரசர் குலக்காதி யண்ணலரு ளியசு தன்முன்
மானுதரந் தனிற்றோன்றி வந்தகலைக் கோட்டாரும்
ஊனமறு சுரபிவயிற் றுதித்தருளுங் கவுதமரும்.

இ-ரை.—தேன்போன்ற மதுரமாகிய சொற்களையுடைய ஊர்வசி கருப்பத்தில் தோன்றிய வசிஷ்டமுனிவனே கேட்பாயாக, நான் க்ஷத்திரிய வமிசத்துக் காதிராஜாவின் புத்திரன்முன்; மான்வயிற்றிற் பிறந்த கலைக்கோட்டு மகாமுனிவரும் குற்றமற்ற பசுவின் வயிற்றிற் பிறந்தருளிய கவுதமமுனிவரும். எ—று. (௬௪)

இணங்குபுகழ் நரிகருப்பத் திடைமருவு சம்புகரும்
சுணங்கனது பண்டியினுட் டோன்றுசவு னக முனியும்
அணங்குறுகர்த் தபமேட்டி னுர்ந்திடுகார்க் கேயருநற்
குணம்பெறுகிள் ளையின்கருவிற் கூடிவரு சுகமுனியும்.

இ-ரை.—கீர்த்தி பொருந்திய நரியின் வயிற்றிற் பிறந்த ஜம்புகமுனிவரும், நாயின் வயிற்றிற் பிறந்த சவுனகமுனிவரும், அழகுபொருந்திய கழுதை வயிற்றிற் பிறந்த கார்க்கேயமுனிவரும், நற்குணம் பொருந்திய கிளியின் வயிற்றிற் பிறந்த சுகமுனிவரும். எ—று. (௬௫)

பகர்வலியன் குக்கிவரு பரத்துவா சத்தவரும்
மகிழ்தவளை யகட்டினுறு மாண்டவிய முனிவாரும்
திகழுமுயர் கும்பமதிற் செறிந்ததமிழ்க் குறுமுனியும்
புகல்விதவை வயிற்றிருந்து பொலிகவுண்டன் னியமுனியும்.

இ-ரை.—துதிக்கப்படுகின்ற கரிக்குருவியின் வயிற்றிற் பிறந்த பரத்துவாசமுனிவரும், களிப்பையுடைய தப்பளையின் வயிற்றிற் பிறந்த மாண்டவியமுனிவரும், விளங்காநின்ற மேலாகிய குடத்தினிடத்திற் பிறந்த மகிமை பொருந்திய தமிழ்க்குரிய அகஸ்திய முனிவரும் சொல்லப்பட்ட கைம்பெண் வயிற்றிற் பிறந்து விளங்காநின்ற கவுண்டன்னிய முனிவரும், எ—று. (௬௬)

நலத்தபுகழ்ச் சண்டாளி நன்கீன்ற சத்தியரும்
புலைச்சியகட் டினிற்றரித்த புகழ்மிகுப ராசரரும்
வலைச்சியுத ரத்தினிடை வதிந்தருள்வி யாசருஞ்சக்
கிலிச்சிசுமந் தளித்தவெழில் கெழுமதங்க மாமுனியும்.

இ-ரை.—நல்ல புகழையுடைய சண்டாளப்பெண் பெற்ற சத்திமுனிவரும், புலைப்பெண் வயிற்றிற் பிறந்த மிகுந்த கீர்த்திபொருந்திய பராசரமுனிவரும், செம்படவப்பெண் வயிற்றிற் பிறந்தருளிய வியாசமுனிவரும், சக்கிலியப்பெண் பெற்ற அழகு பொருந்திய மதங்கமுனிவரும். எ—று. (௬௭)

நனிதிகழ்வண் ணார்வனிதை நல்கியநா ரதமுனியும்
வனசரப்பெண் வழங்கியநல் வான்மீக முனிவாரும்

இனியநா விதமடந்தை யீன்றருள்வ பனமுனியும்
புனிதமறைக் குலத்தினரோ புகழ்தவத்தி னுயர்ந்தனரோ.

இ-ரை.—பெருமையுடனே விளங்காநின்ற வண்ணாரப்பெண் பெற்ற நாரத முனிவரும், வேடப்பெண் பெற்ற அழகிய வான்மீகமுனிவரும், அம்பட்டப்பெண் பெற்றருளிய வபனமுனிவரும் ஆகிய இவர்களெல்லாரும் பரிசுத்தமாகிய பிராமண குலத்திற் பிறந்தவர்களோ அல்லது புகழ்ச்சி பொருந்திய தவத்தினாலுயர்ந்தவர்களோ. எ—று. (௪௮)

பொன்றுதலி லாமறையும் புகழ்பெருகு மிருதிகளும்
நன்றிபெற மொழிந்தவெலா நன்குதெளிந் துரைசெய்வாய்
என்றிடலும் விதிபுதல்வ னெதிர்மொழிசொ லாதுமனங்
கன்றுபுநா ணொடுசென்னி கவிழ்ந்தூமை யினிருந்தான்.

இ-ரை.—அழிவில்லாத சுருதிகளும், மிகுந்த புகழையுடைய ஸ்மிருதிகளும், உலகத்தார் நன்மை யடையும்படி சொல்லிய வினைத்தையும் செவ்வையாக ஆலோசித் தறிந்து சொல்லக்கடவா யென்று விசுவாமித்திரமுனிவன் சொன்னதற்கு, வசிஷ்ட முனிவன் எதிர்வார்த்தை யொன்றுஞ் சொல்லாமல் மனவருத்த மடைந்து வெட்கத்துடனே தலை குனிந்து ஊமையைப்போலிருந்தான். எ—று. (௪௯)

இருந்தமறை முனிவரனை யிமையவர்க ளிறைநோக்கிப்
பொருந்துகவு சிகமுனிவன் புகன்றமொழிக் கெதிர்மாற்றம்
பரிந்துரையா தென்னீவிர் பகர்கூற்று ணின்னயந்தான்
தெரிந்துகொள லெவ்வாறு செப்புகென முனிபுகலும்.

இ-ரை.—அத்தன்மையாக விருந்த வேதங்களை யுணர்ந்த வசிஷ்ட மகாமுனிவனைத் தேவர்கள் தலைவனாகிய இந்திரன் பார்த்து நேராகப் பொருந்திய விசுவாமித்திர முனிவன் வினவிய வார்த்தைகளுக்கு எதிர்வார்த்தை பரிவுடனே பேசாதிருப்பதென்னகாரணம்; நீங்களிருவரும் பேசிய வார்த்தைகளாலே நாங்களெப்படி உண்மையைத் தெரிந்துகொள்ளுதல் சொல்லுகவென்று கேட்க, வசிஷ்ட முனிவன் சொல்லுவான். (௫௰)

மகபதிகேண் மதுவூற்று மரைமலரோன் மாடெய்திப்
புகலின்வெளி யாகுமெனப் புரந்தரனா தியபலரும்
திகழுமறைக் கிழவனிடஞ் சென்றுநிகழ்ந் தனவனைத்தும்
பகரவய னன்னோரைப் பார்த்துமுறு வலிதநியம்பும்.

இ-ரை.—யாகங்களுக்குத் தலைவனாகிய இந்திரனே கேட்பாயாக; தேனைச்சொரிகின்ற செந்தாமரை மலரே ஆசனமாகவுடைய பிரமதேவனிடஞ் சென்று விண்ணப்பஞ் செய்துகொண்டால் உண்மை விளங்குமென்று சொல்ல; உடனே தேவேந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், விளங்காநின்ற வேதங்களுக்குரிய பிரமதேவனிடத்திற்குப்போய் நடந்த விவரங்களை யெல்லாஞ் சொல்லக்கேட்ட பிரமதேவன் அவர்களைப்பார்த்து நகைத்துச் சொல்லுவான். எ—று. (௫௧)

கலிநிலைத்துறை.

வேதமாதிய பற்பல நூல்களும் விதியின்
ஓதியோர்ந்துமற் றுலகிய லனைத்தையு முணர்ந்தும்
நீதியார்மறைக் குலத்தின ரிவரென நீவிர்
ஆதரத்தறி கில்லது மயங்கிய தழகே.

இ-ரை.—வேதமுதலாகிய பலபல நூல்களையும் முறையாக ஓதி யுணர்ந்தும் உலகத்தியற்கையெல்லாந் தெரிந்திருந்தும் நீங்கள் அன்புடனே உண்மையாகிய பிரமவமிசத்தினர் இன்னுரென்று அறியாமல் மதிமயக்கமடைந்தது அழகாயிருந்தது. எ—று. (௫உ)

மேயநும்பொருட் டன்றியும் விரிகடற் புவியின்
ஏயமாந்தரு மெளிதினி லுணர்தர விசைப்பாம்
தூயவாகிய சிருட்டியே பிரமர்வான் றொழிலென்
றுயுமாமறை முதற்பல நூல்களு மறையும்.

இ-ரை.—விரும்பிவந்த உங்கள் பொருட்டல்லாமலும் விரிந்தகடல் சூழ்ந்த பூமியினிடத்திலிருக்கின்ற மனிதர்களும் இலேசாகத் தெரிந்து கொள்ளும்படியாகவும் சொல்லுவாம்; பரிசுத்தமாகிய சிருஷ்டி கிர்த்தியமே பிரமவமிசத்தினருக்கு மேலான கிர்த்தியமென்று ஆராய்ந் தறியத்தக்க பெருமைபொருந்திய வேதமுதலாகிய பலநூல்களிலுஞ் சொல்லப்படுகின்றது. எ—று. (௫௩)

முன்னர் விச்சுவ நாயக னிமையவர் முதலாத்
துன்னுதாவர மிறுதியாம் பல்லுயிர்த் தொகையும்
பன்னுசீருரு மாமறை கூறிய படியே
என்னை யாக்குதி யெனநியமித்தரு ளினனுல்.

இ-ரை.—ஆதிகாலத்தில் உலகத்திற்கு முதற் கடவுளாகிய விஸ்வேஸ்வரன் தேவர்முதல் நெருங்கிய தாவர மிறுதியாகிய பலவித ஜீவான்மகோடிகளையெல்லாம் புகழ்ந்துரைக்கப்பட்ட அருமையும் பெருமையுமுடைய வேதங்களிற் சொல்லிய வண்ணமே என்னைச் சிருஷ்டிசெய்யக் கடவாயென்று சங்கற்பித் தருளினுன்.— எ—று. (௫௪)

அனைய பல்வகைச் சீவரும் பலபல வாக
நனிசிறந்திடு போகங்க ணன்கனு பவித்தே
இனிதின் வாழ்வுறத் திகழ்சக சிருட்டிசெய் திடற்கு
மனுமுன் னைவராம் பிரமரை மாண்புறப் பணித்தான்.

இ-ரை.—அவ்வாறு சிருஷ்டிக்கப்படுவனவாகிய பல வகுப்பினையுடைய ஜீவான்ம கோடிகளெல்லாம் பலபலவிதமாகச் சிறப்புற்ற மிகுந்த போகங்களைச் செவ்வையாக அனுபவித்து இன்பத்துடனே வாழ்வதற்கு விளங்காநின்ற ஜகததைச் சிருஷ்டி செய்யும் பொருட்டு மனுமுதலாகிய ஐந்து பிரமாக்களை அழகுபொருந்த நியமித்தருளினன். (௫௫)

தேவ நாயக ஞணையைச் சிந்தையிற் கொண்டு
ஏவ ரும்புக ழாரண முறைத்தவா றினிது
மேவு பற்பல வயின்மெரு று மளவற விளங்குஞ்
சீவ கோடிக ளனைத்தையுஞ் சிருட்டிசெய் கின்றேன்.

இ-ரை—தேவர்களுக்கு முதல்வனுகிய விஸ்வேஸ்வரனது ஆக்ஞையை மனதிலே தியானித்துக்கொண்டு யாவரும் புகழ்கின்ற வேதங்களிற்சொல்லியபடியே பலபலவாகிய விடங்களிலும் இன்பத்துடனே பொருந்தி விளங்கும் அளவில்லாத ஜீவகோடிகளையெல்லாம் நான் சிருஷ்டிக்கின்றேன். எ—று. (௫௬)

பேசு மாமனு முதலவைம் பிரமரு மன்னோர்
நேச மார்மர பினருமோங் கருமறை நெறியே
ஆசி லாவய மாதியாற் பன்னல மமைந்து
தேசு லாம்புகழ்ப் பிரபஞ்ச சிருட்டிசெய் கின்றார்.

இ-ரை—சொல்லுகின்ற பெருமை பொருந்திய மனுமுதலாகிய ஐந்து பிரமர்களும் அவர்கள் அன்புள்ள வமிசத்தினர்களும் உயர்வாகிய அரிய வேதங்களிற்சொல்லியபடியே குற்றமற்ற அயம், தாரு, தாம்பிரம், சிலை சுவர்ணமென்னு மிவைகளாலே பலநலங்களும் பொருந்தி அழகு விளங்காநின்ற கீர்த்திமிகுந்த பிரபஞ்சங்களைச் சிருஷ்டிக்கின்றார்கள். எ—று. (௫௭)

இன்ன தன்மைய சிருட்டிக ளிரண்டிலொன் றேனும்
உன்னு மேன்மையி னியற்றுதற் குரியவ ராகி
மன்னு மாமறை நெறிதிறம் பாநலம் வாய்ந்தோர்
மின்னு சீர்மலி பிரமவ மிசத்தரோ யாவார்.

இ-ரை—இத்தன்மையாகிய ஜீவசிருட்டி ஜகசிருஷ்டி யென்னும் இரண்டு சிருஷ்டிகளில் ஒரு சிருஷ்டியாகிலும் எண்ணப்படுகின்ற பெருமையுடனே செய்தற்குச் சுதந்தரமுள்ளவராகி நிலைபெற்ற மாக்ஷிமைதங்கிய சுருதிகளில் விதிக்கப்பட்ட நல்லொழுக்கந் தவறாத நன்மையுடையவர்களே விளங்காநின்ற சிறப்புமிகுந்த பிரமவமிசத்தினராகுவர். எ—று. (௫௮)

ஒரு சிருட்டியும் புரிவதற் குரியவ ரல்லார்
சுருதி யோர்கினு மகந்தவ மியற்றினுந் தூய
பிரம ஞானமுள் ளவரெனப் பேசுவ தல்லால்
அருமை சேர்தரு பிரமவ மிசத்தின ராகார்.

இ-ரை—மேற்சொல்லிய இருவிதசிருஷ்டிகளில் ஒரு சிருஷ்டியுஞ்செய்தற்குச் சுதந்தரமில்லாதவர் வேதங்களை யுணர்ந்தாலும் யாகங்களையும் தவங்களையுஞ் செய்தாலும் பரிசுத்தமாகிய பிரமஞானமுடையவரென்று சொல்லப்படுவார்களே யன்றி அருமையாகிய பிரமவமிசத்தின ராகார்கள். எ—று. (௫௯)

என்று பற்பல மறைகரி யாவெடுத் திசைப்ப
ஒன்று மன்பொடு கேட்டவர் சங்கைமுற் ளுெழிந்து
துன்று மெல்லிதழ் மலரவன் றிருவடி தொழுது
நன்றி ருப்பிட நண்ணுபு நனிமகிழ்ந் திருந்தார்.

இ-ரை—பிரமவமிசத்தினர் இத்தன்மையரென்று பலபல சுருதிகளைச் சான்றாக வெடுத்துச் சொல்லியருளியதைப் பொருந்திய அன்புடனே கேட்ட இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும், சந்தேக முழுவதுந் தீர்ந்து நெருங்கிய மிருதுவாகிய இதழ்களையுடைய தாமரை மலரிலிருக்கின்ற பிரமதேவன் திருவடிகளை வணங்கி நன்மையுடனே அவரவர்கள் வாசஞ்செய்யுமிடங்களிற் சேர்ந்து மிகுந்த சந்தோஷமடைந்திருந்தார்கள். எ—று. (சூ௰)

பிரமவமிசமுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் ௲௱௯௰௪.

பதினொன்றாவது

கோத்திராதிகளுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உலகி லெவரு மகிழ்சுகுண மோங்கு மளியார் சுவிரதனே
மலிவண் புலவர் புகழ்பிரம வமிசத் தினரை நனியுரைத்தாம்
குலவு மவ்விச் சுவப்பிரம குலகோத் திரசூத் திரசாகை
இலகு மெழிலார் பிரவரமு மினிநன் குரைப்பாம் வரன்முறையே.

இ-ரை—உலகத்தில் யாவருஞ் சந்தோஷிக்கின்ற நல்ல குணத்தையும் பேரன்பையுமுடைய சுவிரதமகாராஜனே கேளும் இதுவரையும் கீர்த்திமிகுந்த அறிவுடையோராற் புகழத்தக்க பெருமை பொருந்திய பிரம வமிசஸ்தர்களைச்சொன்னோம். இனி பிரகாசிக்கின்ற அந்த விஸ்வப் பிர்ம வமிசஸ்தர்களின் கோத்திரங்களையும் சூத்திரங்களையும் சாகைகளையும் விளங்காநின்ற அழகுபொருந்திய பிரவரங்களையும் நன்மையுடனே வரிசையாகச் சொல்லுவோ மென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

கோத்திரங்களாவன.

ஒவ்வொரு வமிசத்தின் மூலபுருஷர்களின் பெயர்கள் அவற்றுள்.
அயகாரராகிய மனுப்பிர்ம வமிசஸ்தர்களின் கோத்திரம் உ௫.
தாருகாரராகிய மயப்பிர்மவமிசஸ்தர்களின் கோத்திரம் உ௫.
தாம்பிரகாரராகிய துவஷ்டப்பிர்மவமிசஸ்தர்களின் கோத்திரம் உ௫.
சிலாகாரராகிய சிற்பிப்பிர்மவமிசஸ்தர்களின் கோத்திரம் உ௫.
சுவர்ணகாரராகிய விஸ்வக்ஞப்பிர்ம வமிசஸ்தர்களின் கோத்திரம் உ௫.
ஆக—கோத்திரங்கள் ௱உ௫

சூத்திரங்களாவன.

கருப்பாதானமுதலிய சோடசக்கிரியைகளையும் யாகங்களையும் வருணச்சிரம தருமங்களையும் அபரக்கிரியைகளையும் சொல்லுகின்ற நூல்கள் அவற்றுள்.—

ஆஸ்விலாயன சூத்திரம் மனுப்பிர்மவமிசஸ்தருக்கும்
ஆபஸ்தம்பசூத்திரம் மயப்பிர்மவமிசஸ்தருக்கும்
போதாயன சூத்திரம் துவஷ்டப்பிர்ம வமிசஸ்தருக்கும்
கார்த்தியாயன சூத்திரம் சிற்பிப்பிர்மவமிசஸ்தருக்கும்
ரௌப்பியாயன சூத்திரம் விஸ்வக்ஞப்பிர்மவமிசஸ்தருக்கும்
உரியனவாகும். ஆக. சூத்திரங்கள் ௫.

சாகைகளாவன வேதங்கள் அவற்றுள்.

இருக்குசாகை மனுப்பிர்ம வமிசஸ்தருக்கும்
யஜுர்சாகை மயப்பிர்மவமிசஸ்தருக்கும்
சாமசாகை துவஷ்டப்பிர்மவமிசஸ்தருக்கும்
அதர்வணசாகை சிற்பிப்பிர்மவமிசஸ்தருக்கும்
பிரணவசாகை விஸ்வக்ஞப்பிர்மவமிசஸ்தருக்கும்
உரியனவாகும். ஆக. சாகைகள் ௫.

பிரவரங்களாவன உற்பத்திஸ்தானங்கள் அவற்றுள்.

சத்தியோஜா தப்பிரவரம் மனுபிர்ம வமிசம்
வாமதேவப் பிரவரம் மயப்பிர்ம வமிசம்
அகோரப் பிரவரம் துவஷ்டப்பிரம வமிசம்
தற்புருஷப் பிரவரம் சிற்பிப்பிர்ம வமிசம்
இசானப்பிரவரம் விஸ்வக்ஞப்பிர்ம வமிசம்
ஆக பொதுப்பிரவரங்கள் ௫

சிறப்புப்பிரவரங்களாவன.

ஒருகோத்திர ரிஷியுடன் மூன்றுரிஷிகள் சேர்ந்திருப்பது
திரியாரிஷேயப் பிரவரமாகும்
ஒருகோத்திர ரிஷியுடன் ஐந்துரிஷிகள் சேர்ந்திருப்பது
பஞ்சாரிஷேயப் பிரவரமாகும்
ஒருகோத்திர ரிஷியுடன் சேர்ந்த ரிஷிகள் மற்றொரு கோத்திர ரிஷியுடன்
சேராதிருந்தால் கொள்வன கொடுப்பன செய்யலாம்
ஒருரிஷி இரண்டுகோத்திரத்தில் சேர்ந்திருந்தால் சமானப்பிரவரமாதலால் கொள்வன கொடுப்பன் செய்யலாகாது.

ஷை வேறு.

மருவியசீர் மனுவினொடு மயன்றுவட்டா சிற்பிவிசு வக்ஞ னென்னும்
பொருவருமைம் பிரமர்களைச் சானகர்ச ஞதனரம் புவியி லுள்ளோர்
கருதுபுக ழபுவனசர் பிரத்தனசர் சுபர்னசராங் கரிசிலோரைந்
திருடிகளென் னவுமுறையே நிகரரிய தெய்வமறை யியம்பு மாதோ.

இ-ரை—சிறப்புப்பொருந்திய மனுப்பிர்மா மயப்பிர்மா துவஷ்டப்பிர்மா சிற்பிப்பிர்மா விஸ்வக்ஞப்பிர்மா வென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத ஐந்து பிரமர்களையும் முறையே அழகிய பூமியிலுள்ளவர்கள் மதிக்கின்ற புகழையுடைய சானகரிஷி சனஞனரிஷிஅபுவனசரிஷி பிரத்தனசரிஷி சுபர்னசரிஷியுமாகிய குற்றமற்றஐந்துரிஷிகளென்று சமானமில்லாத தெய்வத்தன்மையுடைய வேதங்கள் சொல்லும். எ—று.

புனிதவயந் தாருதாம் பிரஞ்சிலைபொன் காரரெனப் புகல்வோர் தம்முள்
மனுவையுருத் திரனெனவு மயனைநெடு மாலெனவும் வானோர் போற்றும்
இனியதுவட் டாவையய னென்னவுஞ்சிற் பியைமகவா னெனவுஞ் சீர்த்தி
முனிவறுவிச் சுவக்கியனைச் சவிதாவென் னவுமறைகண் மொழியுமன்றே.

இ-ரை—பரிசுத்தமாகிய அயகாரர் தாருகாரர் தாம்பிரகார் சிலாகாரர் சுவர்ணகாரர் என்று சொல்லப்பட்டவர்களிலே அயகாரராகிய மனுப்பிர்மாவை உருத்திரனென்றும் தாருகாரராகிய மயப்பிர்மாவை விஷ்ணுவென்றும் தேவர்கள் துதிக்கின்ற தாம்பிரகாரராகிய துவஷ்டப்பிர்மாவை பிர்மாவென்றும் சிலாகாரராகிய சிற்பிப்பிர்மாவைஇந்திரனென்றும் கீர்த்தியையுடைய சினமில்லாத சுவர்ணகாரராகிய விஸ்வக்ஞப்பிர்மாவைச் சூரியனென்றும் வேதங்கள் சொல்லும். எ—று. (௫)

மகிழ்திதியின் வடிவமனு வாசரத்தின் றிருவுருவ மயனே யாகும்
திகழுநக்ஷத் திரவுருவந் துவட்டாவாம் யோகவுருச் சிற்பி யாகும்
புகழ்கரணத் திருவுருவம் விசுவக்ஞ னெனவும் புலவ ரெல்லாம்
அகமகிழுங் கடவுண்மறை யாதியபன் னூல்களெலா மறையு மன்றே.

இ-ரை—களிப்பைத் தருகின்ற திதிகளின் உருவம் மனுப்பிர்மாவென்றும் அழகிய வாரங்களின் உருவம் மயப்பிர்மாவென்றும் விளங்காநின்ற நக்ஷத்திரங்களின் உருவம் துஷ்டப் பிர்மாவென்றும் யோகங்களின் உருவம் சிற்பிப் பிர்மாவென்றும் புகழ்பெற்ற கரணங்களின் உருவம் விஸ்வக்ஞப் பிர்மாவென்றும் வித்வான்களெல்லா மகிழ்ச்சி யடைகின்ற தெய்வத்தன்மையுடைய வேதமுதலிய பலநூல்களுஞ் சொல்லும். எ—று.
(௪)

நிலவுமனுப் பிரமனுக்குச் சத்திபரை மறையிருக்கு நிகழ்ரீம் பீஜம்
குலவுறுசக் காமூலம் வசந்தருது மருவுதிரி கோண குண்டம்
பொலியரவ குண்டலம்வெண் குடைவெள்ளி யுபவிதம் புகலுங் கந்தம்
இலகுதிரி புண்டரநற் றண்டமா விர்சிதமு மென்பர் மாதோ.

இ-ரை—விளங்கா நின்ற மனுப்பிர்மாவுக்குப் பராசத்தியும் இருக்கு வேதமும் ஒள்ளிய ரீம் பீஜாக்ஷரமும் புகழ்பெற்ற மூலாதாரச் சக்கரமும் வசந்தரிதுவும் பொருந்திய திரிகோணகுண்டமும் பொலிவினையுடைய நாககுண்டலமும் வெள்ளைக்குடையும் இரஜிதயக்ஞோப வீதமும் சொல்லப்பட்ட திரிபுண்டரகந்தமும் அழகிய ஆலின் தண்டமும் விளங்காநின்ற வெள்ளித்தண்டமும் உரிமையாமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௫)

மங்கலஞ்சேர் மயப்பிரமன் றனக்காதி சத்தியஜுர் மறைஸ்ரீம் பீஜம்
தங்குசுவா திட்டான சக்கரங்கி ரீஷ்மருது சதுர்க்கோண் குண்டம்
பொங்குமக ரக்குழைசத் திரநீலந் தாமரைமுப் புரிநூல் கந்தம்
பங்கமிலூர்த் துவந்தண்ட மாசுகருந் தாதுமெனப் பகருவாரே.

இ-ரை—சுபகரம் பொருந்திய மயப்பிர்மாவுக்கு ஆதிசத்தியும் யஜுர்வேதமும் ஸ்ரீம்பீஜாக்ஷரமும் பொருந்திய சுவாதிஷ்டான சக்கரமும் கிரீஷ்மரிதுவும் சதுஷ்கோணகுண்டமும் பொலிவினையுடைய மகரகுண்டலமும் நீலக்குடையும் தாமரை நூலால் ஆகிய யக்ஞோப வீதமும் குற்றமில்லாத ஊர்த்துவகந்தமும் அரசின் தண்டமும் இரும்பினாலாகிய தண்டமும் உரிமையாமென்று மேலோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௬)

அவிர்துவட் டாப் பிரம னுக் கிச்சாசத்தி சாமமறை யையும் பீஜம்
கவிசொல்மணி பூரகசக் கரம்வருஷ ருதுகுண்டங் கவின்சேர் வட்டம்
புவிபுகழு மாதனகுண் டலஞ்செய்ய சத்திரம்பொன் பூணூல் கந்தம்
சவிதிகழ்வர்த் துலந்தண்டம் புரசுதாம் பிரமுமெனச் சாற்றுவாரே.

இ-ரை—விளங்காநின்ற துஷ்டப்பிர்மர்வுக்கு இச்சாசத்தியும் சாமவேதமும் ஐயும் பீஜாக்ஷரமும் வித்வான்கள் புகழ்கின்ற மணிபூரகசக்கரமும் வருஷரிதுவும் அழகுபொருந்திய வர்த்துலாகாரகுண்டமும் பூமியுலுள்ளவர்கள்கொண்டாடப்பட்ட அரதனகுண்டலமும் சிவப்புக்குடையும் சுவர்ணயக்ஞோபவீதமும் அழகுவிளங்காநின்ற வர்த்துலாகாரகந்தமும் புரசின் தண்டமும் தாம்பிரத்தாலகிய தண்டமும் உரிமையாமென்று அறிவுடையோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௭)

கிளரெழில்சேர் சிற்பிக்கு ஞானசத்தி யதர்வமறை கிலியும் பீஜம்
அளவில்புகழ்ச் சக்கரம னாகதஞ்சீ ரிருதுசர மறுகோண் குண்டம்
மிளிர்மணிகுண் டலம்பசிய சத்திரஞ்செம் பருத்தியுப வீதங் கந்தம்
ஒளிர்தருப டாகாரந் தண்டமயங் கதிரமுமென் றுரைப்பர் மிக்கோர்.

இ-ரை—விளங்காநின்ற அழகுபொருந்திய சிற்பிப்பிர்மாவுக்கு ஞானசத்தியும் அதர்வணவேதமும் கிலியும் பீஜாக்ஷரமும் எண்ணில்லாத புகழையுடைய அனாகதச் சக்கரமும் சிறந்த சரரிதுவும் சஷ்கோணகுண்டமும் விளங்குகின்ற மாணிக்கக்குண்டலமும் பச்சைக்குடையும் செம்பருத்திநூலால் ஆகிய யக்ஞோப வீசமும் பிரகாசிக்கின்ற படாகாரகந்தமும் கருங்காலித்தண்டமும் இரும்பினாலாகிய தண்டமும் உரிமையாமென்று சான்றோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௮)

தனிவிசுவக் கியற்குசத்தி கிரியைமறை பிரணவநற் சவ்வும் பீஜம்
இனிதுயராக் கினைவட்ட மேமந்த சிசிருது வெண்கோண் குண்டம்
நனிசுவண குண்டலஞ்சத் திரம்பீத முபவீத நவிற்றுசெம்பொன்
கனிவுறுகந்தாக்ஷதையாம் பொன்னதவுந் தண்டமெனக்கரைவர்மேலோர்.

இ-ரை—ஒப்பில்லாத விஸ்வக்ஞப் பிர்மாவுக்குக் கிரியாசத்தியும் பிரணவமும் நலமுள்ள சவ்வும் பீஜாக்ஷரமும் உயர்வாகிய மேன்மையைத் தருகின்ற ஆக்கினைச் சக்கரமும் ஹேமந்தரிதுவும் சிசிரரிதுவும்அஷ்டகோணகுண்டமும் பெருமைபொருந்திய சுவர்ணகுண்டலமும் மஞ்சட்குடையும் சொல்லப்பட்ட சுவர்ணயக்ஞோப வீதமும் மகிழ்ச்சியைத் தருகின்ற திரிபுண்ட ரகந்தாக்ஷதையும் உரிமையாமென்று உயர்ந்தோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௯)

* மனுமுதலிய ஐந்து பிரமவமிசஸ்தர்களுக்கும் திரிபுண்டர கந்தாக்ஷதை பொருந்தும்.

ஷை வேறு.

மன்னு புகழ்விச் சுவமூர்த்தி வயங்கு சத்தி யோசாதம்
என்னு முகத்தில் வருமனுவு மினிய பரையு நனிகூடி
உன்னு மகிழ்வி னீன்றருளு மயலோக காரரென் பவர்க்கு
மின்னு மெழிற்சா னகராதி விப்பிரா ஜர்கா சிபரே.

இ-ரை—நிலைபெற்ற கீர்த்தியையுடைய விஸ்வேஸ்வரனது விளங்காநின்ற சத்யோஜாதமென்று சொல்லப்பட்ட திருமுகத்திற்றோன்றிய மனுப்பிர்மாவும் மேன்மை பொருந்திய பராசத்தியும் மகிழ்ச்சியுடனே மானசிய சங்கற்பத்தினாலே உண்டாக்கியருளிய அயலோககாரரென்று சொல்லப்பட்ட மனுப்பிர்ம சந்ததிகளுக்கு அழகுடனே விளங்காநின்ற ஆதியாகிய சானகரிஷியும், விப்பிராஜரிஷியும், காசிபரிஷியும், எ—று. (௧௦)

பெருகு மனுவிச் சுவகருமர் பிறங்கு விசுவாத் துமகரெழின்
மருவு மன்னி யுபதர்பொலி மாமன் னியர்பூ பலர்சுவர்த்தர்
தருமு விசுவ்வேத் தரொடு சமந்தர் சுவேதாங் கதர் தகவிற்
பொருவி லாதபுரஞ் சயர்விண் புலவர் புகழும் பானுமதி.

இ-ரை—புகழ்மிகுந்த மனுவிஸ்வகர்மரிஷியும், விளங்காநின்றவிஸ்வாத்மகரிஷியும், அழகுபொருந்திய மன்யுபதரிஷியும்,பிரகாசிக்கின்ற மாமன்யுரிஷியும், பூபலரிஷியும், சுவர்த்தரிஷியும், தருமசொரூபியாகிய விஸ்வவேத்தரிஷியும், சமந்தரிஷியும், சுவேதாங்கதரிஷியும், ஒப்பில்லாத குணத்தையுடைய புரஞ்சயரிஷியும் தேவர்கள் கொண்டாடப்பட்ட பானுமதிரிஷியும், எ—று. (௧௧)

மயர்வில் சயற்கு மாரரொடு வனசர் பாசுவந் தர்மது
பயனர் தருசித் திரவசுதா பசரே சுயட்சர் மகிழ்சுதபர்
தயவார் பிரபோ தகர்வசுலோ சனரே புகல்சித் திரதருமர்
இயலார் தருமிவ் விருபானந் திருடி களினற் கோத்திரமே.

இ-ரை—மயக்கமில்லாத ஜயத்குமாரரிஷியும், வனஜரிஷியும் பாஸ்வந்தரிஷியும் மதூரிஷியும்,' பிரயோசனமிகுந்த சித்திரவசுரிஷியும், தாபசரிஷியும், சுயக்ஷரிஷியும் மகிழ்ச்சியுடைய சுதபரிஷியும், கிருபைநிறைந்த பிரபோதகரிஷியும், வசுலோசன ரிஷியும் சித்திரதருமரிஷியும் ஆகிய நல்லொழுக்கமுடைய இந்த இருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும். எ—று. (கஉ)

திகழ்சீ ராசுவி லாயனசூத் திரமா மிருக்கு சாகைமிகு
புகழார் சத்யோ சாதமெனப் பொதுவாப் புகலும் பிரவரமே
மகிழ்சே ரிவருட் பாசுவந்தர் மாமன் னியர்சித் திரதருமர்
துகடீர் சயற்கு மாரரொடு சுவேதாங் கதர்நற் புரஞ்சயரே.

இ-ரை—சிறந்துவிளங்கும் ஆஸ்விலாயன சூத்திரமும் இருக்குசாகையும் பொதுவாகச் சொல்லப்பட்ட புகழ்மிகுந்த சத்யோஜாதப்பிரவரமும் உரியனவாகும் மேற்சொல்லிய மாக்ஷிமை பொருந்திய சித்திரதருமரிஷியும் பாஸ்வந்தரிஷியும் மாமன்யுரிஷியும் குற்றமில்லாத ஜயத்குமாரரிஷியும் சுவேதாங்கதரிஷியும் நன்மை பொருந்திய புரஞ்சயரிஷியும். எ—று. (கங)

விப்பிராசர் சுயட்ச ரெழில் விசுவாத் துமகர் வனசர்நெறி
தப்பில் பிரபோ தகரென்னச் சாற்று பதினோ ரிருடிகளும்
ஒப்பில் பஞ்சாரி ஷேரென்ப ரொழிந்த பன்னுன் கிருடிகளும்
செப்புந் திரியா ரிஷேயரென்பர் திகழ்மா மறைமுற் றுணர்ந்தவரே.

இ-ரை—அழகிய விப்பிராஜரிஷியும், சுயக்ஷரிஷியும், விஸ்வாத்மகரிஷியும்' வனஜரிஷியும் நீதிவழுவாத பிரபோதகரிஷியும் என்றுசொல்லப்பட்ட பதினொரு ரிஷிகளும் பஞ்சாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் சொல்லாதொழிந்த பதினான்கு ரிஷிகளும் திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் விளங்காநின்ற பெருமை பொருந்திய வேதங்களை முழுதுமுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கச)

மனுப்பிர்ம சந்ததிகளின்பிரவரான்விதம்.

க.-மனு, விஸ்வதேவ, சானக, திரியாரிஷேயப்பிரவரான்வித, [சானகரிஷிகோத்திர:

உ.-சானக, மனிஸ்ச, கர்மஹர,ஜயதேவ,விப்பிராஜ,பஞ்சாரிஷேயப் பிரவரான்வித [விப்பிராஜரிஷிகோத்திர:

ங.-கஸ்யப ஹயவுஸ்சார்ய,நைத்திருவ, திரியாரிஷேயப் பிரவரான்வித, [காசிபரிஷி கோத்திர:

ச.-மனு,சானக, விஸ்வாத்மக, திரியாரிஷேயப்பிரவரான்வித [மனுவிஸ்வகர்மரிஷி கோத்திர:

ரு.-விஸ்வாத்மக, கர்மஹர, ஜயதேவ, காசிப, ஹயவுஸ்சார்ய, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித [விஸ்வாத்மகரிஷிகோத்திர:

சு.-மன்யு, மாமன்யு, மன்யுபத, திரியாரிஷேயப், பிரவரான்வித, [மன்யுபத ரிஷிகோத்திர:

எ.-மாமன்யு, மிருத்யுய, பூபல, விரூபாக்ஷ, ஸப்ய, பஞ்சாரிஷேயப் பிரவ்ரான்வித [மாமன்யுரிஷிகோத்திர:

அ.-மனு,மன்யு,பூபல,திரியார்ஷேயப், பிரவரான்வித,[பூபலரிஷிகோத்திர
௯.-பூபல, விருபாக்ஷ, சுவர்த்த, திரியாரிஷேயப் பிரவரான்வித,[சுவர்த்திரிஷிகோத்திர:

௧0.-விரூபாக்ஷ, சுவர்த்த, விஸ்வவேத்த, திரியாரிஷேயப் பிரவரான்வித,[விஸ்வவேத்தரிஷிகோத்திர :

௧௧.-சமந்த; சுவேதாங்கத, புரஞ்சய, திரியாரிஷேயப் பிரவரரன்வித,[சமந்தரிஷிகோத்திர:

௧௨.-சுவேதாங்கத, புரஞ்சய, பானுமதி, கர்மதக்ஷ, ஜயத்குமார, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, [சுவேதாங்கதரிஷிகோத்திர:

௧௩.-புரஞ்சய, பானுமதி, கர்மதக்ஷ, ஜயத்குமார, சுசித்ர, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித [புரஞ்சயரிஷிகோத்திர:

௧௪.-பானுமதி, கர்மதக்ஷ, ஜயத்குமார, திரியாரிஷேயப், பிரவரான்வித,[பானுமதிரிஷிகோத்திர:

௧௫.-ஜயத்குமார, சுசித்ர, சித்ரசார, சுசி, சுபோதக, பஞ்சாரிஷேயப் பிரவரரன்வித [ஜயத்குமாரரிஷிகோத்திர:

௧௬.-வனஜ, வானஜ, பாசுவத, தபன, தாபன, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித [வனஜரிஷிகோத்திர:

௧எ.-பாஸ்வந்த, தபன, தாபன, மது, மாதவ, பஞ்சாரிஷேயப் பிரவராவித,[பாஸ்வந்தரிஷிகோத்திர:

௧அ.-மது, மானுமதி, சர்வபத்ர, திரியாரிஷேயப் பிரவரான்வித, [மதுரிஷிகோத்திர:
௧௯.-சதுஷ்பாத,சுமதி, சித்ரவசு, திரியாரிஷேயப் பிரவரான்வித,[சித்ரவசுரிஷிகோத்திர;

௨0.-வனஜ, வானஜ தாபச, திரியாரிஷேப் பிரவரான்வித, [தாபசரிஷிகோத்திர:

௨௧.-சத்யக, வசுயக்ஞ, யக்ஞசாம்பிரதீக, சுதப, சுயக்ஷ, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, [சுயக்ஷரிஷிகோத்திர:

௨௨.-வசுயக்ஞ, யக்ஞசாம்பிரதீக, சுதப, திரியாரிஷேயப் பிரவரான்வித, [சுதபரிஷிகோத்திர:

௨௩.-சுதப, பிரசத்த, பரிஹி, காலநாப, பிரபோதக, பஞ்சாரிஷேயப், பிரவரான்வித [பிரபோதக ரிஷிகோத்திர:

௨௪.-பிரபோதக, தூர்வ, வசுலோசன, திரியாரிஷேயப்பிரவரான்வித, [வசுலோசனமனுரிஷிகோத்திர:

௨௫.-வசுலோசன, சுனந்த, சாந்தமதி, சித்தபோத, சித்திரதர்ம, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, [சித்திரதருமரிஷிகோத்திர:

ஷ வேறு.

மறைபுகழ் விச்சுவ நாயகன் வாம வத்திரமதில் வந்த
தறைமகிழ் மயனும் பேரரு ளாதி சத்தியு மினிதீன்ற
கறையறு தாரு காரர்த மக்குக் கருதுசன ஞதனர்முன்
முறைதிகழ் வாம தேவர்ப வத்தை முருக்குவி சுவசட்சு.

இ-ரை—வேதங்களாலே கொண்டாடப்பட்ட உலகமுதல்வனாகிய விஸ்வேஸ்வரனது வாமதேவத்திருமுகத்திற்றோன்றிய பூமியிலுள்ளவர்கள் சந்தோஷிக்கின்ற மயப்பிர்மாவும் பெருங்கருணையே திருவுருவாகவுடைய ஆதிசத்தியும்மகிழ்ச்சியுடனே மானசிய சங்கற்பத்தினாலே உண்டாக்கியருளிய குற்றமற்ற தாருகாரரென்றுசொல்லப்பட்ட மயப்பிர்ம சந்ததிகளுக்கு யாவருமதிக்கத்தக்க ஆதியாகிய சனாதனரிஷியும் ஒழுக்கத்துடனே விளங்காநின்ற வாமதேவரிஷியும் பாவத்தைக் கெடுத்தருளுகின்ற விஸ்வசக்ஷுரிஷியும். எ—று. (௧௫)

சீர்மலி பிரதி தட்சர் சுனந்தர் திகழ்மா னுஷமனுவே
வார்கட லுலகம் பாவுச னற்கு மாரர்சி றந்ததவத்
தார்மிணி யோடுவி தாத்துரு துவிச தருமர்சொல் வர்த்தகிநல்
ஏர்மலி பாவ போத மனுவுட னிசைநல மிகுதட்சு.

இ-ரை—சிறப்புமிகுந்த பிரதிதக்ஷரிஷியும் சுனந்தரிஷியும் விளங்குகின்ற மானுஷமனுரிஷியும், நெடியகடல்சூழ்ந்த வுலகத்தோர் துதிக்கின்ற சனத்குமாரரிஷியும் சிறந்த தவத்தையுடைய தார்மிணிரிஷியும் விதாத்துருரிஷியும் துவிஜதருமரிஷியும் சொல்லப்பட்ட வர்த்தகிரிஷியும் அழகுநலமிகுந்த பாவபோதமனுரிஷியும் நல்லகீர்த்தி மிகுந்த தக்ஷுரிஷியும். எ—று. (௧௬)

தேர்ந்துயர் சாந்த மதியொடு யாக்கிய சேனர் சட்சுஷரோ
தோய்ந்திடு விச்சுவ தட்சர் விசுவதர் சுமேதரொ டுபன்னர்
சாந்தர்சொ லிரைவத மனுவொடு பிரவரர் சயதர் பரிஷங்கர்
ஏய்ந்தநல் வித்தி யாந்த ரெனப்புக ழிருடிகள் கோத்திரமே.

இ-ரை—வேதங்களையுணர்ந்து பெருமைபொருந்திய சாந்தமதிரிஷியும் யாக்யசேனரிஷியும் சக்ஷுஷரிஷியும் இன்பக்கடலில் முழுகிய விஸ்வதக்ஷரிஷியும் விஸ்வதரிஷியும் சுமேதரிஷியும் பன்னரிஷியும் பொறுமையாளர்கள் புகழ்கின்ற ரைவதமனுரிஷியும் பிரவரரிஷியும் ஜயதரிஷியும் பரிஷங்க ரிஷியும் நன்மைபொருந்திய வித்யாந்தரிஷியும் என்று சொல்லப்பட்ட இந்த இருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும். எ—று. (௧௭)

புவிபுக ழாபத் தம்ப சூத்திரம் பொற்புறு யசுர்சாகை
உவமையில் வாம தேவப் பிரவர முறைசெயு மற்றிவருட்
கவினுறு மானுஷ மனுபரி ஷங்கர் கருதுபி ரதிதட்சர்
அவிரிரை வதமனு சுவேதர் வித்தி யாந்தர் சட்சுஷரே.

இ-ரை—பூமியிலுள்ளவர்கள் புகழ்கின்ற ஆபஸ்தம்பசூத்திரமும் அழகுபொருந்திய யஜுர்சாகையும் நிகரில்லாத வாமதேவப்பிரவரமும் உரியனவர்கும். சொல்லப்பட்ட இந்த ரிஷிகளிலே அழகுவாய்ந்த மானுஷமனு ரிஷியும் பரிஷங்கரிஷியும் மதிக்கின்ற பிரதிதக்ஷரிஷியும் விளங்காநின்ற ரைவதமனுரிஷியும் சுமேதரிஷியும் வித்தியாந்தரிஷியும் சக்ஷுஷரிஷியிம். எ—று. (கஅ)

துங்கவி தாத்துரு விச்சுவ சட்சு சுகம்பெறு சாந்தமதி
பங்கமி லாதுயர் தட்சரெ னப்பகர் பதினே ரிருடிகளும்
மங்கவில் பஞ்சா ரிஷேய செனவு மற்றுள பதினல்வர்
தங்கிய திரியா ரிஷேய ரெனவுஞ் சாற்றுவர் பெரியோரே.

இ-ரை—பரிசுத்தமாகிய விதாத்துருரிஷியும் விஸ்வசக்ஷுரிஷியும் இன்பத்தையுடைய சாந்தமதிரிஷியும் பழுதில்லாத மேன்மையுடைய தக்ஷரிஷியும் என்றுசொல்லப்பட்டபதினெருரிஷிகளும் கெடாத பஞ்சாரிஷேயப்பிரவரரிஷிகளென்றும் எஞ்சியிருக்கின்ற பதினன்குரிஷிகளும் திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கக)

மயபிர்ம சந்ததிகளின் பிரவரான்விதம்

க.—சனாதன, விஷ்ணு, வாமதேவ, திரியாரிஷேயப் பிரவரான்வித, சனாதனரிஷிகோத்திர:

உ.—மய, விஷ்ணு, வாமதேவ, திரியாரிஷேயப் பிரவரான்வித, வாமதேவகோத்திர:

ங.—விஷ்ணு, வாமதேவ, விஸ்வமய், விஸ்வதக்ஷ, விஸ்வசக்ஷு, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, விசுவசக்ஷுரிஷிகோத்திர:

ச.—விஸ்வதக்ஷ, விஸ்வசக்ஷு, விதக்ஷ, சுதக்ஷ, பிரதிதக்ஷ, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, பிரதிதக்ஷரிஷிகோத்திர:

ரு.—சுதக்ஷ, பிரதிதக்ஷ, சுனந்த, திரியாரிஷேயப் பிரவரான்வித, சுனந்தமனுரிஷிகோத்திர:

சு.—மானுஷ, மார்கணிக, சனத்குமார, தார்மிணி, தேசிக, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித மானுஷமனுரிஷிகோத்திர:

எ.-சனத்குமார, தார்மிணி, தேசிக, திரியாரிஷேயப் பிரவரான்வித, சனத்குமாரரிஷிகோத்திர:

அ.—தார்மிணி, தேசிக, வைதாத்ரு, திரியாரிஷேயப் பிரவரான்வித, தார்மிணிரிஷிகோத்திர:

கூ.—விதாத்துரு, துவிஜதரும, தேவசேன, நிஜதரும, போதன, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, விதாத்துருமனுரிஷிகோத்திர:

க௦.—துவிஜதரும, நிஜதரும, தேவசேன, திரியாரிஷேயப் பிரவரான்வித, துவிஜதரும ரிஷிகோத்திர:

கக.—வர்த்தகி, பாவபோத, தக்ஷா, திரியாரிஷேயப்பிரவரான்வித, வர்த்தகிரிஷிகோத்திர:

க௨.—பாவபோத, தக்ஷா, ஸ்தபதி, திரியாரிஷேயப் பிரவரான்வித, பாவபோதமனுரிஷிகோத்திர:

க௩.—தக்ஷா, ஸ்தபதி, யாகரக்ஷித, சாந்தமதி, ப்ரமதி, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, தக்ஷாரிஷிகோத்திர:

க௪.—சாந்தமதி, அனந்த, வேஸ்மகர்த்த, யாக்ஞசேன, ப்ரமதி, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, சாந்தமதிரிஷிகோத்திர:

க௫.—அனந்த, வேஸ்மகர்த்த, யாக்ஞசேன, திரியாரிஷேயப் பிரவரான்வித, யாக்ஞசேனரிஷிகோத்திர:

க௬.—விஸ்வதோமுக, ஸ்தாபக, நீலாங்கத, விசுவதக்ஷ, சக்ஷாஷ, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, சக்ஷாஷரிஷிகோத்திர:

க௭.—ஸ்தாபக, யக்ஞேச, விஸ்வதக்ஷ, திரியாரிஷேயப் பிரவரான்வித, விஸ்வதக்ஷரிஷிகோத்திர:

க௮.—யக்ஞேச, விஸ்வதக்ஷ, விஸ்வத, திரியாரிஷேயப்பிரவரான்வித, விஸ்வதரிஷிகோத்திர:

க௯.—விபுல, விஸ்வத, க்ஞானசீதி, மேத, சுமேத, பஞ்சாரிஷேயப் பிரவரான் வித, சுமேதிரிஷிகோத்திர:

௨௦.—சுமேத, பிரதிமேத, பன்ன, திரியாரிஷேயப்பிரவரான்வித, பன்னரிஷிகோத்திர:

௨க.—ஜன, ஜன்ன, ஜயத, ரேவத, ரைவத, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, ரைவத, மனுரிஷிகோத்திர:

௨௨.—ஜஹன்னு, ஜயத, பிரவர, திரியாரிஷேயப்பிரவரான்வித, பிரவரரிஷிகோத்திர:

௨௩.—ஜயத, பிரவர, ரேவத, திரியாரிஷேயப் பிரவரான்வித, ஜயதரிஷிகோத்திர:

௨௪.—ரேவத, ரைவத, அஜித, பரிதிருத, பரிஷங்க, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித பரிஷங்கரிஷிகோத்திர:

௨௫.—அஜித, பரிதிருத, பரிஷங்க, விதித, வித்யாந்த, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, வித்யாந்தரிஷிகோத்திர:

ஷை வேறு.

உரைசெய் விச்சுவே சுரனகோரந்தனிலு தித்திடுது வட்டாவும்
புரையி லிச்சையு மகிழ்ந்தினி தருளிய புகழ்க்கஞ்ச காரர்க்குத்
தரைசொல் சீர்த்திய பூனசர் பத்திர தத்தர்காண் டவர்நாளும்
திரைநி லம்புகழ் விச்சுவ ரூபரேசிமுகர்சம்வர்த்தர்.

இ-ரை—சொல்லப்பட்ட விஸ்வேஸ்வரனது அகோரத் திருமுகத்திற்றோன்றிய துவஷ்டப்பிர்மாவும் ஒப்பில்லாத இச்சாசத்தியும் மகிழ்ச்சியுடனே மானசீயசங்கற்பத்தினாலே உண்டாக்கியருளிய கீர்த்தியையுடைய கஞ்சகாரரென்று சொல்லப்பட்ட துவஷ்டப்பிர்ம சந்ததிகளுக்கு உலகத்தோர் சொல்லுகின்ற மிகுந்த புகழையுடைய அபுவனசரிஷியும் பத்ரதத்தரிஷியும் காண்டவரிஷியும் எக்காலமும் கடல் சூழ்ந்த புவியிலுள்ளோர் கொண்டாடுகின்ற விஸ்வரூபரிஷியும் ஸ்ரீமுகரிஷியும் சம்வர்த்தரிஷியும். எ—று. (௨௰)

எக்ய பாலரேபு கழ்க்குச தருமர்நன் கிலகுதாம் பிரகர்ப்பர்
தக்க சீரதிதாத் துருலோகே சமனுபது மதட்சர்
மிக்க மாவிதட் சமனுமே தமதியே விச்சுவ மயர்பாரிற்
பொக்க மற்றினி துயர்வுறு போதா யனரெனும் புகழாளர்.

இ-ரை—எக்ஞபாலரிஷியும் புகழையுடைய குசதருமரிஷியும் நன்மையுடனே விளங்குகின்ற தாம்பிரகர்ப்பரிஷியும் தகுதியானசிறப்பினையுடைய அதிதாத்துருரிஷியும் லோகேசமனுரிஷியும் பத்மதக்ஷரிஷியும். பேரழகு பொருந்திய விதக்ஷமனுரிஷியும் மேதமதிரிஷியும் விஸ்வமயரிஷியும் உலகத்தில் பொய்ம்மையின்றி யுயர்வாகிய பெருமைபொருந்திய கீர்த்தியையுடைய போதாயனரிஷியும். எ—று. (௨௧)

சாத ரூபரே சித்திர சேனரிச் சகம்புகழ் சயசேனர்
தீதி லாவிகனசர்பிர போன்னதர் தேவலர் சீர்வினயர்
நீதி சேர்தரு பிரமதீட் சிதரொடு நிலவிய வரிதர்மர்
ஏத மற்றவிவ் விருடிகள் கோத்திர மென்பர்க ற்றுணர்ந்தோரே.

இ-ரை—ஜாதரூபரிஷியும் சித்திரசேனரிஷியும் இவ்வுலகம்புகழும் ஜயசேனரிஷியும் கெடுதியில்லாத விகனசரிஷியும் பிரபோன்னதரிஷியும் தேவலரிஷியும் சிறந்த வினயரிஷியும் மெய்ம்மையுடைய பிர்மதீக்ஷிதரிஷியும் விளங்காநின்ற ஹரிதருமரிஷியும் ஆகிய குற்றமற்ற அறிஞராலே சொல்லப்பட்ட இந்த இருபத்தைந்து ரிஷிகள் கோத்திரங்களும்.எ—று. (௨௨)

தூய்மை யெய்துபோ தாயன சூத்திரஞ் சொல்லரும் புகழ்மேய
சாம சாகைய கோரநற் பிரவாஞ் சாற்றிய விவர்தம்முள்
ஏம முற்றிடு பத்திர தத்தர்நன் கிலகுமெக் கியபாலர்
நேம மார்சய சேனர்மே தமதியே நிலவுசித் திரசேனர்.

இ-ரை—பரிசுத்தமாகிய போதாயன சூத்திரமும் சொல்லுதற்கரிய புகழ்ச்சி பொருந்திய சாமசாகையும் அழகிய அகோரப்பிரவரமும் உரியனவாகும் மேற்சொல்லிய ரிஷிகளிலே இன்பத்தையுடைய பத்ரதத்தரிஷியும் அழகுடனே விளங்காநின்ற எக்ஞபாலரிஷியும் நியமமுடைய ஜயசேனரிஷியும் மேதமதிரிஷியும் விளங்காநின்ற சித்திரசேனரிஷியும். எ—று. (௨௩)

பிரம தீட்சிதர் பதுமதட் சரெனப் பேசுமிவ் வெழுவோரைக்
காவி லாதபஞ்சா ரிஷேயரெனக் கரைவர்மற் றிவரன்றிப்
பாவு மிக்கசீர் பொலிவுறு மீரொன் பானிருடி கடம்மை
இரவி சூழ்புவி தனிற்றிரி யாரி ஷேயரென் றுரைப்பாரே.

இ-ரை—பிர்ம தீக்ஷிதரிஷியும் பத்மதக்ஷரிஷியுமென்று சொல்லப்பட்ட எழுரிஷிகளையும் வஞ்சகமில்லாத பஞ்சாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் இவர்களன்றித்துதிக்கப்பெற்ற மிகுந்த சிறப்புடனே பிரகாசியாநின்ற பதினெட்டுரிஷிகளையும் சூரிய கிரணங்களால் விளங்குகின்ற பூமியினிடத்தில் திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள், எ—று. (உச)

துவஷ்டப்பிர்ம சந்ததிகளின் பிரவரான்விதம்.

க.—அபுவனச, த்வஷ்ட, விஸ்வரூப, திரியாரிஷேயப் பிரவரான்வித, அபுவனச ரிஷிகோத்திர:

உ.—அபுவனச, த்வஷ்ட, விஸ்வரூப, திரிரூப, பத்திரதத்த, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, பத்திரதத்ரிஷிகோத்திர:

ங.—பத்திரதத்த, விஸ்வகோசர, காண்டவ, திரியாரிஷேயப் பிரவரான்வித, காண்டவரிஷிகோத்திர;

ச.—விஸ்வரூப, அதிரூப, விஸ்வகோசர, திரியாரிஷேயப் பிரவரான்வித, விஸ்வரூப ரிஷிகோத்திர;

ரு.—தாண்டவ, கவி, ஸ்ரீமுக, திரியாரிஷேயப் பிரவரான்வித, ஸ்ரீமுக ரிஷிகோத்திர;

சு.—சம்வர்த்த, யக்ஞபால, பிரதிதக்ஷ, திரியாரிஷேயப் பிரவரான்வித, சம்வர்த்த ரிஷிகோத்திர;

எ.—யக்ஞபால, பிரதிதக்ஷ, சுரோத்தம, குசதர்ம, தாம்ரகர்ப்ப, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, யக்ஞபால ரிஷிகோத்திர;

அ.—பிரதிதக்ஷ, சுரோத்தம, குசதர்ம, திரியாரிஷேயப் பிரவரரன்வித குஜதர்ம, ரிஷிகோத்திர:

கூ.—அதிதாத்துரு, லோகேச, தாம்ரகர்ப்ப, திரியாரிஷேயப் பிரவரான்வித, அதிதாத்துரு ரிஷிகோத்திர:

க0.—தாம்ரகர்ப்ப, லோகேச, அதிதாத்துரு, திரியாரிஷேயப் பிரவரான்வித, தாம்ரகர்ப்ப ரிஷிகோத்திர:

கக.—லோகேச, தாத்துரு, விதக்ஷ, திரியாரிஷேயப் பிரவரான்வித, லோகேசமனு ரிஷிகோத்திர:

கஉ.—தாத்துரு, விதக்ஷ, வைதக்ஷ, மேதமதி, பத்மதக்ஷ, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, பத்மதக்ஷரிஷிகோத்திர:

கரு.—விதக்ஷ, வைதக்ஷ, மேதமதி, திரியாரிஷேயப் பிரவரான்வித, விதக்ஷமனு ரிஷிகோத்திர:

கச.—மேதமதி, பத்மதக்ஷ, விஸ்வவேத்திய, விஸ்வமயவிஸ்வோப, சித்ர, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, மேதமதிரிஷிகோத்திர:

கரு.—விஸ்வமய, விஸ்வோபசித்ர, விஸ்வபர்ஹி, திரியாரிஷேயப் பிரவரான்வித, விஸ்வமய ரிஷிகோத்திர:

கசு—போதாயன, ஜாதரூப, சித்ரசேன, திரியாரிஷேயப் பிரவரான்வித, போதாயன ரிஷிகோத்திர:

கஎ.—ஜாதரூப, சித்திரசேன, பிரபோதன, திரியாரிஷேயப் பிரவரான்வித, ஜாதரூப ரிஷிகோத்திர:

கஅ.—சித்திரசேன, பிரபோதன, விஜய, ஜயசேன, விபவ, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, சித்திரசேனரிஷிகோத்திர:

கக.—ஜயசேன, விபவ, வியப்ரத, பிரதிதார்மிக, விகனச, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, ஜயசேனரிஷிகோத்திர:

௨௦.—விகனச, சுதப, பிரஜாபதி, திரியாரிஷேயப் பிரவரான்வித, விகனசரிஷிகோத்திர:

௨க.—பிரபோன்னத, தேவல,வினய, திரியாரிஷேயப் பிரவரான்வித, பிரபோன்னதரிஷிகோத்திர:

௨௨.—தேவல, வினய, வைநேய, திரியாரிஷேயப் பிரவரான்வித; தேவல ரிஷிகோத்திர:

௨ந.—வினய, வைநேய, ஜகதத்த, திரியாரிஷேயப் பிரவரான்வித, வினயரிஷிகோத்திர:

௨ச.—பிர்ம்மதீக்ஷித, ஹரிதர்ம, ஜகதத்த, ஜாப்பில, விஜய, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, பிர்ம்மதீக்ஷித ரிஷிகோத்திர:

௨ரு.—ஹரிதரும, ஜகதஸ்த, ஜாம்பிவ, திரியாரிஷேயப் பிரவரான்வித, ஹரிதரும, ரிஷிகோத்திர:

ஷை வேறு.

பொருவில்விச் சுவநா தன்றற் புருடத்தி லுதித்த சிற்பி
மருவிய ஞான சத்தி மகிழ்ந்திரு வோரு மீன்ற
திருகில் பாடாண கார ரொனத்தனி சிறந்து ளாருக்
கருள்பி ரத்தனச ராதி யழகுறு முருசி தத்தர்.

இ-ரை—ஒப்பில்லாத விஸ்வேஸ்வரனது தற்புருடத் திருமுகத்திற்ரோன்றிய சிற்பிப்பிர்மாவும் பொருந்திய ஞானசத்தியும் மகிழ்ச்சியுடனே மானசிய சங்கற்

பத்தினாலே உண்டாக்கியருளிய மாறுதலில்லாத பாஷாணகாரரென்று சொல்லப்பட்ட சிறப்புற்றோங்கிய சிற்பிப்பிர்ம சந்ததிகளுக்கு ஆதியாகியகிருபையுடைய பிரத்தனசரிஷியும் அழகுபொருந்திய ருசிதத்தரிஷியும். எ—று. (௨௫)

பற்றுமன் புடைய வாஸ்து பதிகவு சலரோ யின்பம்
பெற்றச னுபசன் சீர்ப் பிரகரி ஷணன் குரோதஞ்
செற்றவு லோக வேத்தர் சித்திர கமனு சீர்த்தி
உற்றிடு சகஸ்த் ரபாகு வுயர்தே சிகமனு மன்னோ.

இ-ரை—தொடர்ந்தவன்பினையுடைய வாஸ்துபதிரிஷியும் கௌசலரிஷியும் அகமகிழ்ச்சி பொருந்திய சனுபசரிஷியும் சிறப்புற்ற பிரஹர்ஷணரிஷியும் குரோதமில்லாத லோகவேத்தரிஷியும் சித்திரகமனுரிஷியும் கீர்த்திபொருந்திய சஹஸ்ரபாகுரிஷியும் மேலாகிய தேசிகமனுரிஷியும், எ—று. (௨௬)

வாஸ்து கரிந்த்ர சேனர் வளர்கிரி தருமர் நேமி
எத்துவ சுதர்மர் விண்ணோ ரிறைஞ்சிடு வச்ரி சேதர்
பார்த்தருள் விசுவ பத்ரர் பத்திரர் தேவ பத்ரர்
கீர்த்திமூ வுலகும் பெற்றுக் கிளர்வியஞ் சிகரென் பாரே.

இ-ரை—வாஸ்துகரிஷியும் இந்திரசேனரிஷியும் உயர்வாகிய கிரிதருமரிஷியும் உலகந்துதிக்கின்ற வசுதருமரிஷியும் தேவர்கள் வணங்கும் வஜ்ரிசேதரிஷியும் ஆராய்ந்தருள்புரிகின்ற விசுவபத்ரரிஷியும் பத்ரரிஷியும் தேவபத்ரரிஷியும் சுவர்க்க மத்யபாதலமென்னு மூன்றுலகத்தினுங் கீர்த்திபெற்று விளங்காநின்ற வியஞ்சிகரிஷியும். எ—று. (௨௭)

பிரபோத மனுவே சக்கு வரர்மிகு பெருமை சான்ற
உரவுசேர் வேத பால ரோங்குமி ராச தர்மர்
வரமிகுத் திடுபோத் தவ்யர் பிரக்கியா மதியென் றோது
விரவுமிவ் விருபா னைவர் விளங்குகோத் திரம தாமே.

இ-ரை—பிரபோதமனுரிஷியும் சக்குவரரிஷியும் மிகுந்தபெருமைபொருந்திய வேதபாலரிஷியும் பேரறிவுடைய இராஜதர்மரிஷியும் விருப்பமிகுந்த போக்தவயமனுரிஷயும் பிரக்யாமதிரிஷியும் என்று சொல்லப்பட்டவர்களாகிய இந்தஇருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும், எ—று. (௨௮)

அற்புடனேத்து கார்த்தி யாயன சூத்ர மிக்க
பொற்புறு மதர்வ சாகை பிரவரம் புருட மாகும்
சொற்படு மிவருட் சித்தி ரகமனு துகளு ருத
நற்பிரத் தனசர் தேவ பத்திர ரிராச தர்மர்.

இ-ரை—அன்புடனே யாவருந் துதிக்கப்பட்ட கார்த்தியாயன சூத்திரமும் மிகுந்த அழகுபொருந்திய அதர்வணசாகையும் தற்புருஷப் பிரவரமும் உரியனவா

கும் மேற்சொல்லப்பட்டவர்களில் குற்றமில்லாத சித்திரகமனுரிஷியும் அழகிய பி ரத்தனசரிஷியும் தேவபத்ரரிஷியும் இராஜதர்மரிஷியும். எ—று. (௨௯)

கவுசலர் சிறந்த தேசி கமனுவே வச்ரி சேதர்
நவில்வசு தருமர் பத்ரர் நகுசக்கு வார்நன் கோதும்
இவரொரு பதின்மர் பஞ்சா ரிஷேய ரெஞ்சிய மூவைவர்
அவிர்திரி யாரி ஷேய் ராமென வுரைப்ப ரான்றோர்

இ-ரை—சிறப்புள்ள கௌசலரிஷியும் தேசிகமனுரிஷியும் வஜ்ரிசேதரிஷியும் சொல்லப்படுகின்ற வசுதருமரிஷியும் பத்ரரிஷியும் விளங்காநின்ற சக்குவரரிஷியு மென்று சொல்லப்படுகின்ற இந்தப்பத்துரிஷிகளும் பஞ்சாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும், சொல்லாதொழிந்த பதினைந்துரிஷிகளும் விளங்காநின்ற திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௩௦)

சிற்பிப்பிர்ம சந்ததிகளின் பிரவரான்விதம்.

க.—பிரத்னச, சிற்பி, வாஸ்துக, ருஜிதத்த, சனுபச, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, பிரத்னசரிஷிகோத்திர:

உ.—சிற்பி, வாஸ்துபதி, ருஜிதத்த, திரியாரிஷேயப் பிரவரான்வித, ருஜிதத்த, ரிஷி கோத்திர:

௩.—வாஸ்துபதி, ருஜிதத்த, சனுபச, திரியாரிஷேயப் பிரவரான்வித, வாஸ்துபதி ரிஷிகோத்திர:

௪.—ருஜிதத்த, சனுபச, தைவக்ஞ, கௌசல, ஐந்திரசேன, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, கௌசலரிஷிகோத்திர:

௫.—சனுபச, தைவக்ஞ, கௌசல, திரியாரிஷேயப் பிரவரான்வித, சனுபசரிஷிகோ த்திர:

௬.—பிரஹர்ஷண, சிலாதண்ட, லோகவேத்த, திரியாரிஷேயப் பிரவரான்வித, பிர ஹர்ஷணரிஷிகோத்திர:

௭.—லோகவேத்த, கோத்ரபேத, சகஸ்ரபாஹு, திரியரரிஷேயப் பிரவரான்வித, லோகவேத்தரிஷிகோத்திர:

௮.—சிலாதண்ட, லோகவேத்த, கோத்ரபேத, சகஸ்ரபாஹு, சித்ரக, பஞ்சாரிஷே யப் பிரவரான்வித, சித்ரகமனுரிஷிகோத்திர:

௯.—சகஸ்ரபாஹு, சித்ரக, பாவபோத, திரியாரிஷேயப் பிரவரான்வித, சகஸ்ர பாஹுரிஷிகோத்திர:

௧௰.—சகஸ்ரபாஹு, சித்ரக, பாவபோத, மாந்தினி, தேசிக, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, தேசிகமனுரிஷிகோத்திர:

௧௧.—வாஸ்துக, இந்திரசேன, கிரிதரும, திரியாரிஷேயப் பிரவரான்வித, வாஸ்துக ரிஷிகோத்திர:

கஉ.—இந்திரசேன, கிரிதரும, வசுதரும, திரியாரிஷேயப் பிரவரான்வித, இந்திர சேனரிஷிகோத்திர:

கஙு.—வசுதரும, வஜ்ரிசேத, கிரிதரும, திரியாரிஷேயப்பிரவரான்வித, கிரிதரும ரிஷி கோத்திர:

கச.—வசுதரும, வஜ்ரிசேத, வியஞ்சிக, வியாஜிக, அதிமந்த, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, வசுதருமரிஷிகோத்திர:

கரு.—வஜ்ரிசேத, வியஞ்சிக, வியாஜிக, அதிமந்த, சுமந்த, பஞ்சாரிஷேயப் பிரவரான் வித, வஜ்ரிசேதரிஷிகோத்திர :

கசு.—விஸ்வபத்ர, ஞானபத்ர, தேவபத்ர, திரியாரிஷேயப்பிரவரான்வித விஸ்வபத்ர ரிஷிகோத்திர :

கஎ.—ஞானபத்ர, தேவபத்ர, குஹிக, யாஹ்நிக, சாஹ்நிக, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, பத்ரரிஷிகோத்திர :

கஅ.—தேவபத்ர, குஹிக, யாஹ்நிக், சாஹ்நிக, வியஞ்சிக, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, தேவபத்ரரிஷிகோத்திர :

ககூ.—வியஞ்சிக, வியாஜிக, வீரசேன, திரியாரிஷேயப் பிரவரான்வித, வியஞ்சிக ரிஷிகோத்திர :

உ0.—வீரசேன, வேத்ரசங்கத, பிரபோத, திரியாரிஷேயப் பிரவரான்வித, பிரபோ தமனுரிஷிகோத்திர :

உக.—சக்வர, சாக்வர, முமுக்ஷு, போக்தவ்விய, வேதபால ; பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, சக்வரரிஷிகோத்திர :

உஉ.—முமுக்ஷு, போக்தவ்விய, வேதபால, திரியாரிஷேயப் பிரவரான்வித, வேதபா லரிஷிகோத்திர :

உஙு.—சாக்வர. முமுக்ஷு, போக்தவ்ய, வேதபால, ராஜதரும, பஞ்சாரிஷேயப் பிரவ ரான்வித, ராஜதருமரிஷிகோத்திர :

உச.—போக்தவ்ய, வேதபால, ராஜதரும, திரியாரிஷேயப் பிரவரான்வித போக்தவ் யமனுரிஷிகோத்திர :

உரு.—வேதபால, ராஜதரும, பிரக்ஞாமதி, திரியாரிஷேயப் பிரவரான்வித, பிரக் ஞாமதிரிஷிகோத்திர :

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆற்றல்சேர் தருவிச் சுவகன்மா வுயரீ சானவா னனந்தனி லுதித்த
சாற்றெழில் விசுவக் கியனுடன் கிரியா சத்தியும் விழைந்தினி தீன்ற
போற்றுறுசுவணகாரர்க டமக்குப் புகழ்மிகு சுபர்ணச ராதி
ஏற்றமார் விசுவக் கியர்திகழ் பரித ரினியச வுரசனே ரன்றே.

 மஅ

இ-ரை—ஞானசொரூபியாகிய விஸ்வேஸ்வரனது மேலாகிய ஈசானத்திருமுகத்திற்றோன்றிய, சொல்லுகின்ற அழகினையுடைய விஸ்வக்ஞப்பிர்மாவும், கிரியாசத்தியும், மகிழ்ச்சியுடனே மானசீய சங்கற்பத்தினாலே உண்டாக்கியருளிய, உலகம்போற்றுகின்ற சுவர்ணகாரரென்று சொல்லப்பட்ட விஸ்வக்ஞப்பிர்மசந்ததிகளுக்குப் பெருகிய புகழையுடைய ஆதியாகிய சுபர்னசரிஷியும், உயர்வாகிய விஸ்வக்ஞரிஷியும் விளங்காநின்ற பரிதரிஷியும் பெருமைபொருந்திய சௌரசேனரிஷியும். எ—று. (௩௧)

சாங்கியா யனர்சீர் மிருமணி பத்ரர் தங்குபே ரெழின்முனி சுதர்
பாங்குசேர் சுருதி வர்த்தனர் பொலிபார் பரவுயாக் ஞகர்சௌக் கியகர்
ஓங்கு மாதித்த சேன ரார்வந்த ரொளிருமர்ச் சிதர்கருத் தமர்சீர்
தேங்கு வான் பரவுப ரார்ச்சிதர் தேசோ தருமரே திகழ்சுதர்சனரே.

இ-ரை—பரந்த கீர்த்தியையுடைய சாங்கியாயனரிஷியும் மணிபத்ரரிஷியும் பேரழகுபொருந்திய முனிஸ்வரதரிஷியும் அழகிய சுருதிவர்த்தனரிஷியும் பொலிவினையுடையஉலகந்துதிக்கின்ற யாக்ஞகரிஷியும் சௌக்ஞகரிஷியும் மேலாகிய ஆதித்தசேனரிஷியும் ஆர்வந்தரிஷியும் விளங்காநின்ற அர்ச்சிதரிஷியும் கர்த்தமரிஷியும் சிறப்பினையுடைய தேவர்களும் பரவுகின்ற பரார்ச்சிதரிஷியும் தேஜோதருமரிஷியும் பிரகாசிக்கின்ற சுதர்சனரிஷியும். எ—று. (௩௨)

புகழுப கோப ரெக்கியர் சாந்து பொருவாத் திகழுப கற்பர்
நிகழ்வுறு தேவ சேனரா தித்தர் நிகமரே யுயருப யக்ஞர்
பகருமிவ் விருபா னைந்திருடிகளின் பாயசீர்க் கோத்திர மாகும்
திகழ்புவி பரவி ரவுப்பியா யனசூத் திரமெனப் புகலுவர் மன்னே.

இ-ரை—யாவரும் புகழ்கின்ற உபகோபரிஷியும் எக்ஞரிஷியும் சாந்துரிஷியும் ஒப்பற்று விளங்கும் உபகல்பரிஷியும் விளங்குகின்ற தேவசேனரிஷியும் ஆதித்தரிஷியும் நிகமரிஷியும் மேலாகிய உபயக்ஞரிஷியும் என்று சொல்லப்பட்ட இந்த இருபத்தைந்துரிஷிகளின் கோத்திரங்களும் விளங்காநின்ற உலகம் பரவுகின்ற ரௌப்பியாயன சூத்திரமும் என்று சொல்லுவார்கள். எ—று. (௩௩)

பிரணவ சாகை மகிழுமீ சானப் பிரவர மாமிவர் தம்முட்
பரிதரா தித்த ரெக்கிய ரான்றோர் பரவுப ரார்ச்சித ருலகின்
விரிபுகழ் மணிபத் திரர்சுத ரிசனர் விண்ணவ ரேத்துமார் வந்தர்
தெரிதரு முபயக் கியருபர் சாந்து சீர்மிரு சாங்கியா யனரே.

இ-ரை—பிரணவசாகையும் சந்தோஷிக்கின்ற ஈசானப்பிரவரமும் உரியனவாகும் மேற்சொல்லியவர்களில் பரிதரிஷியும் ஆதித்தரிஷியும் எக்ஞரிஷியும் மேலோர் துதிக்கின்ற பரார்ச்சிதரிஷியும் உலகத்திற்பரந்தபுகழையுடைய மணிபத்திரரிஷியும் சுதரிசனரிஷியும் தேவர்கள்துதிக்கின்ற ஆர்வந்தரிஷியும் யாவையுமுணர்ந்த உபயக்ஞரிஷியும் மேலாகிய சாந்துரிஷியும் விரிந்தகீர்த்தியுள்ள சாங்கியாயனரிஷியும். எ-று. ()

என்றுரை யொருபா னிருடிகள்சிறந்த வெழிற்பஞ்சாரிஷேயமற் றெஞ்சி
நின்றவோர்பதினைந்திருடிகடிரியாரிஷேயமென்னவுங்கழ்த்திடுவர்
நன்றுற முன்னந் தனித்தனி யைந்தா நவின்றது பொதுப்பிர வரமாம்
பின்றகவுரைத்த பிரவர மிரண்டுஞ் சிறப்பெனப் பேசுவர் பெரியோர்.

இ-ரை—இவ்வாறுசொல்லப்பட்ட பத்துரிஷிகளையும் அழகிய பஞ்சாரிஷேயப்பிரவரரிஷிகளென்றும் எஞ்சிநின்ற பதினைந்துரிஷிகளையும், திரியாரிஷேயப்பிரவரரிஷிகளென்றும் சொல்லுவார்கள் நன்மைபொருந்தமுன்பு தனித்தனி ஐந்தாகச்சொன்னது பொதுப்பிரவரமாகும் பின்புசொல்லிய பஞ்சாரிஷேயந்திரியாரிஷேயமென்னும் இரண்டையும் சிறப்புப்பிரவரமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். எ—று. (௩௫)

விஸ்வக்ருப்பிர்மசந்ததிகளின் பிரவரான்விதம்.

௧.—விஸ்வக்ஞ, அர்க்க, சுபர்னச, திரியாரிஷேயப்பிரவரான்வித, சுபர்னரிஷி கோத்திர :

௨.—விஸ்வக்ஞ, கர்மசாக்ஷி, கனகாசன திரியாரிஷேயப்பிரவரான்வித, விஸ்வக்ஞ ரிஷிகோத்திர :

௩.—கர்மசாக்ஷி, கனகாசன, களாக்யாதி, சௌரசேன, பரித பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, பரிதரிஷிகோத்திர :

௪.—சௌரசேன, பரித, பரிஷங்க, திரியாரிஷேயப்பிரவரான்வித, சௌரசேனரிஷி கோத்திர :

௫.—பரித, பரிஷங்க, சாத்விக, சத்யக, சாங்கியாயன, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித சாங்கியாயனரிஷிகோத்திர :

௬.—மணிபத்ர, ஹாடகாங்க, சர்வதம, விஸ்வாத்ம, விஸ்வரக்ஷ, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, மணிபத்திரரிஷிகோத்திர :

௭.—முனிஸ்வரத, உதர, வேதபாலக, திரியாரிஷேயப்பிரவரான்வித, முனிஸ்வரத ரிஷிகோத்திர :

௮.—உதர, வேதபாலக, சுருதிவர்த்தன, திரியாரிஷேயப்பிரவரான்வித, சுருதிவர்த்தனரிஷிகோத்திர :

௯.—வேதபாலக, சுருதிவர்த்தன, யாக்ஞியக, திரியாரிஷேயப்பிரவரான்வித, யாக்ஞிகரிஷிகோத்திர :

௧௦.—சுருதிவர்த்தன, யாக்ஞிக, சௌக்ஞியக, திரியாரிஷேயப்பிரவரான்வித, சௌக்ஞிகரிஷிகோத்திர :

௧௧.—ஆதித்யசேன, தபநீய, ஆர்வந்த, திரியாரிஷேயப்பிரவரான்வித, ஆதித்யசேன ரிஷிகோத்திர :

௧௨.—தபநீய, அர்ச்சித, பிரார்ச்சித, பிரியமேதச, ஆர்வந்த, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, ஆர்வந்தரிஷிகோத்திர :

௧௩.—அர்ச்சித, பிரார்ச்சித, பிரியமேதச, திரியாரிஷேயப்பிரவரான்வித, அர்ச்சித ரிஷிகோத்திர:

௧௪.—ஆர்வந்த, ரவிரஸ்மி, கர்த்தம, திரியாரிஷேயப்பிரவரான்வித, கர்த்தமரிஷிகோத்திர:

௧௫.—கர்த்தம, ரவிரஸ்மி, ஆர்வந்த, பிரியமேதச, பிரார்ச்சித, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, பிரார்ச்சித ரிஷிகோத்திர:

௧௬.—மைத்திரேய, சூரிச, தேஜோதரும, திரியாரிஷேயப்பிரவரான்வித, தேஜோதரும ரிஷிகோத்திர:

௧௭.—தேஜோதரும, சுதர்சன, எக்ஞ, உபகோப, சாந்துவ: பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, சுதர்சனரிஷிகோத்திர:

௧௮.—சுதர்சன, எக்ஞ, உபகோப, திரியாரிஷேயப்பிரவரான்வித, உபகோபரிஷிகோத்திர:

௧௯.—எக்ஞ, உபகோப, சாந்துவ, மதிபோதக, கௌசல, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, எக்ஞரிஷிகோத்திர:

௨0.—சாந்துவ, உபகோப, சுருதிபோத, மதிபோத, கௌசல பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, சாந்துரிஷிகோத்திர:

௨௧.—போதக, கல்ப, உபகல்ப, திரியாரிஷேயப்பிரவரான்வித, உபகல்பரிஷிகோத்திர:

௨௨.—தேவசேன, ஆதித்ய, விஸ்வக்ஞ, திரியாரிஷேயப்பிரவரான்வித, தேவசேன ரிஷிகோத்திர:

௨௩.—ஆதித்ய, விஸ்வக்ஞ, மனுஜ, விசேதச, விதி, பஞ்சாரிஷேயப் பிரவரான்வித, ஆதித்யரிஷிகோத்திர:

௨௪.—விசேதச, விதி, நிகம, திரியாரிஷேயப்பிரவரான்வித, நிகமரிஷிகோத்திர:

௨௫.—உபயக்ஞ, சப்ய, கிரம, நியத, சிரியார்த்த, பஞ்சாரிஷேயப்பிரவரான்வித, யக்ஞரிஷிகோத்திர:

கோத்திராதிகளுரைத்த வத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௪௱௨௧.

பன்னிரண்டாவது

பஞ்சகிர்த்தியமுரைத்த வத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாதி ரம்புக ழன்பி ேனாங்கி வய்ங்கு சுவிரத பூபனே
கோது ருவிசு வப்பி ராமணர் கோத்தி ராதிகள் சொற்றனந்
தீது ருவய மாதி யாலவர் செக மகிழ்ச்சியு றச்செயும்
ஓது பஞ்சகி ருத்தி யங்க ளுவந் துரைத்திடு வாமரோ.

இ-ரை—பூமியிலுள்ளவர்கள் புகழாநின்ற அன்பினாலுயர்ந்து விளங்கும் சுவிரத மகாராஜனே கேளும் இதுவரையுங்குற்றமற்ற விஸ்வப்பிராமணர்களுடைய கோத்திர சூத்திர சாகை பிரவரங்களையுஞ்சொன்னோம் இனியவர்கள் உலகம் பலவிதசுகங்களையும்பெறும்பொருட்டுச் சொல்லுகின்ற அயம் தாரு தாம்பிரம் சிலை சுவர்ணமுதலியவற்றால் நடாத்துகின்ற பஞ்சகிர்த்தியங்களை மகிழ்ச்சியுடனே சொல்லுவோ மென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (

பழுதில் சானக ராதி யாமிரு பத்தி யைவர் கண் மரபினோர்
கொழுவி னோடுத ராசு நீள்கதிர் கூரி லேகணி கத்திமுன்
தழுவு வாளுடை வாள்கை வாள்சமு தாடு திண்கதை தோமரம்
மழுவ ழற்படை சக்க ரப்படை வச்சிரப் படை சூலம்வேல்.

இ-ரை—குற்றமில்லாத சானகரிஷிமுதலாகிய இருபத்தைந்துரிஷிகோத்திரங்களிலே பிறந்தவர்கள் (காறுமுனை தராசுமுனை கதிர்முனை எழுத்தாணிமுனை கத்திமுனை என்னுமைந்தினால் உலகம் சம்ரக்ஷணையாகுநிமித்தம்) நிலங்களையுழுது பயிர்செய்தற்குக் கொழுக்களையும் பண்டங்களை நிறுத்தற்குத் தராசுகளையும் ஆடைமுதலியவற்றிற்கு உபயோகமான நூல்களை நூற்றற்கு நீண்டகதிர்களையும் சகலவிஷயங்களையும் எழுதற்குக் கூர்மைபொருந்திய எழுத்தாணிகளையும் உந்திக்கொடியை அறுத்தன்முதலிய தொழில்கட்குக் கத்தியையும் மற்றும் வேண்டுவனவாகிய வாட்படைகளையும் உடைவாள்களையும் கைவாள்களையும் சமுதாடுகளையும் பலம்பொருந்திய கதாயுதங்களையும் இருப்புலக்கைகளையும் அக்கினிமயமாகிய மழுவாயுதங்களையும் சக்ராயுதங்களையும் வச்ராயுதங்களையும் சூலாயுதங்களையும் வேலாயுதங்களையும். எ—று. (உ)

புங்க மேவிய தூணி கைப்படை போர்செய் பற்பல பகழிகள்
தங்கு கூரொறி யாயு தத்தொடு சத்தி ரம்பல்ப டைக்கலம்
துங்க மேவிய கீசகங் குளிர் சூசி தாறுச லாகை கோல்
அங்கு சங்கடி வாள மெய்யுறை யவிர்கு டாரம்வி லங்குபூண்.

இ-ரை—அஸ்திரங்கள் தங்கப்பெற்ற அம்புக்கூடுகளையும் கையாயுதங்களையும் போர்செய்தற்குரிய பலவிதபாணங்களையும் கூர்மைபொருந்திய எறியாயுதங்களையும் கைவிடாப்படைகளையும் இன்னுமுள்ளபலவித ஆயுதங்களையும் பெருமைபொருந்திய தலைச்சீராக்களையும் அரிவாள்களையும்ஊசிகளையும் இருப்புமுட்களையும்சிறுசவளங்களையும் குதிரைச்சம்மட்டிகளையும் அங்குசங்களையும் கடிவாளங்களையும் இருப்புக்கவசங்களையும் பிரகாசிக்கின்ற கோடாரிகளையும் விலங்குகளையும் பலவிதமாகிய பூண்களையும். எ—று. (௩)

கச்ச மோடுளி யாமைமண் ணெறி கருவி சங்கிலி குறடுகோல்
மெச்சு பட்டடை பாரை சுத்தியல் வீக மேவுறு திறவுகோல்
அச்சு கீன்முளை தாணி றைப்படி யளவு செய்குள கம்படி
இச்சை யோடுல கத்தில் யாரு மியற்று பற்பல கருவிகள்.

இ-ரை—குதிரை அங்கவடிகளையும் தறிக்குங்கருவியாகிய உளிகளையும் அரசராயுதங்களையும் மண்வெட்டிகளையும் சங்கிலிகளையும்குறடுகளையும் துலாக்கோல்களையும் புகழ்கின்ற பட்டடைகளையும் கடப்பாரைகளையும் சுத்தியல்களையும் பூட்டுகளையும் பொருந்திய திறவுகோல்களையும் பண்டியச்சுகளையும் கதவின்கீல்களையும் முளையாணிகளையும் கதவின் தாள்களையும் பண்டங்களைநிறுத்தற்குரிய படிகளையும் அளத்தற்குரியமரக்கால்களையும் படிகளையும் விருப்பத்துடனே உலகத்தில் யாவரும்செய்யப்பட்ட பலபல உபகரணங்களையும். எ—று. (௪)

இன்ன தன்மைய கருவி யாதிய சிட்டி யாவுமி யற்றியே
மின்னு நித்திலம் வீசு தெண்டிரை வேலை சூழுல கத்தினில்
மன்ன றம்பொரு ளின்பம் வீடென மருவு சித்திவி ளங்கவே
பன்னு சீர்பொலி யருளொ டும்பரி பால னம்புரி வாரரோ.

இ-ரை—இப்படிப்பட்ட தன்மையையுடைய உபகரணங்கள்முதலாகியசிருஷ்டிகளையெல்லாஞ்செய்து பிரகாசிக்கின்ற முத்துகளைக் கரையோரங்களிலே வீசுகின்ற தெளிவாகிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் நிலைபெற்ற தருமார்த்தகாமிய மோக்ஷமென்னும் பொருந்தியசித்திகளைப்பெற்று விளங்கும்படியாகச்சொல்லப்பட்ட நன்மைமிகுந்த கருணையுடனேபரிபாலனஞ் செய்வார்கள். எ—று. (௫)

ஷை வேறு.

நற்றவத்தர் போற்றிடுஞ்ச னதனதி யாகவே
உற்றவிரு பத்தியைவர் கோத்திரத்து தித்துளோர்
சொற்றிடுங்க லப்பைநற்சு ருக்குசுரு வத்துடன்
வெற்றிவில்கொ டிஞ்சிதேர் விளங்குபண்டி வாகனம்.

இ-ரை—நல்லதவத்தினையுடைய முனிவர்களாலே கொண்டாடப்பட்ட சனதனரிஷிமுதலாகப் பொருந்திய இருபத்தைந்துரிஷிகோத்திரங்களிற்பிறந்தவர்கள் சிற்பசாஸ்திரங்களிற்சொல்லியபடி நிலங்களையுழுதற்குக் கலப்பைகளையும் யாகாக்கினியில் அவிசொரிதற்குப் பிரதானமாகிய ஸ்ருக்கு என்னும் நெய்த்துடுப்புகளையும்

ஸாருவமென்னும் நெய்த்துடுப்புகளையும் ஜெயத்தைத்தருகின்ற வில்லுகளையும் மேன்மொட்டையுடைய ரதங்களையும் விளங்குகின்ற பலவிதபண்டிகளையும் பலவிதவாகனங்களையும். எ—று. (௬)

பெட்டிபேரி யானகம்பி றங்குமொந்தை கேடகம்
தட்டைதொண் டகங்கிணை தயங்குபம்பை கோட்பறை
கொட்டுதுடி மத்தளங் குடப்பறைநற் றூரியம்
முட்டுறுத கோஷ்தயாழ்மு ழங்குமைம்மு கம்முழா.

இ-ரை—பெட்டகங்களையும் இரணபேரி ஜெயபேரிமுதலிய பேரிகைகளையும் துந்துபிகளையும் சப்திக்கின்ற ஒருகட்பறைகளையும் பரிசைகளையும் பரந்தவடிவுள்ள குறிஞ்சிநிலப்பறைகளையும் மருதநிலப்பறைகளையும் விளங்காநின்ற முல்லைநிலப்பறைகளையும் நெய்த நிலப்பறைகளையும் கொட்டப்படுகின்ற பாலைநிலப்பறைகளையும் மத்தளங்களையும், கடவாத்தியங்களையும் நலமுள்ள உவகைப்பறைகளையும் குறைவுபடாத ஒழுங்காகிய நரம்புகளையுள்ள வீணைகளையும் முழங்குகின்ற ஐந்துமுகவாத்தியங்களையும். எ—று. (௭)

பதலையோ டுகைத்திரி பாவுடுக்கை கத்திரி
இதமுறும்பல் வாச்சிய மெழிற்சுருட்டி சத்திரம்
சிதைவிலால வட்டமாதி சீகரங்க மண்டலம்
கதவுதாணி லைமரக்க லம்பகடு போதிகை.

இ-ரை—வாயகன்றபறைகளையும் இடக்கைவாத்தியங்களையும் புகழப்படுகின்ற உடுக்கைகளையும் யானைக்கன்றினடிபோலவிளங்காநின்ற கைத்திரியென்னும் வாத்தியங்களையும் இதம்பொருந்திய பலவிதவாத்தியங்களையும் அழகிய சுருட்டிகளையும் குடைகளையும்கெடாத சிற்றாலவட்டம் பேராலவட்டமுதலாகிய விருதுகளையும்சாமரங்களையும் முனிவர்கமண்டலங்களையும்கதவுகளையும் கதவின்றாள்களையும் நிலைகளையும் மரக்கலங்களையும் ஓடங்களையும் குறுந்தறிகளையும். எ—று. (௮)

உத்திரஞ் சிறந்ததூ ணுலக்கை கந்து சாளரம்
நத்துவேள்வி யூபமோடு நாடுபெறற்பல் பாத்திரம்
ஒத்தநாழி கட்டில்பீட மூசலேணி தட்டுரல்
மத்துசிக்க மாதியா வயங்குபற்ப லாசனம்.

இ-ரை—சிறப்பினையுடைய விட்டங்களையும் ஸ்தம்பங்களையும் உலக்கைகளையும் யானைமுதலியவைகட்டுந் தூண்களையும் பலகணிகளையும் விரும்புகின்ற யாகஸ்தம்பங்களையும் அபேக்ஷிக்கின்ற யாகபாத்திரமுதலிய பலபலபாத்திரங்களையும் அளக்கப்படுகின்ற பொருந்திய நாழிகளையும் கட்டில்களையும் பீடங்களையும் ஊஞ்சல்களையும் ஏணிகளையும் பலவிதமரத்தட்டுகளையும் மத்துகளையும் சீப்புகள்முதலிய விளங்காநின்ற பலபல ஆசனங்களையும். எ—று. (௯)

இவ்வணஞ்சி றந்தசிட்டி பற்பலவி யற்றியே
கவ்வையின்றி யேயுளங்க ளித்துயிர்கள் வாழ்வுறச்
செவ்விசேர்பெ ருங்கருணை கூர்ந்துசெ றியன்பொடும்
பௌவநீர் நிலத்தினூம் பாலனஞ்செய் வாரரோ.

இ-ரை—இந்தப்பிரகாரம், பலபலவிதமாகச் சிறப்புற்றோங்கிய, சிருஷ்டிகளெல்லாஞ்செய்து, கடல்சூழ்ந்தபூமியிலுள்ள, ஆன்மகோடிகளனைத்தும், யாதொருதுன்பங்களுமில்லாமல், மனமகிழ்ச்சியுடனே, வாழும்பொருட்டு, அழகினையுடைய, பேரருள்சுரந்து பொருந்திய, அன்புடனேபரிபாலனஞ் செய்வார்கள். எ—று. (௧0)

கலிவிருத்தம்.

மருவும்புகழ் மலிசீரபு வனசர் முதலாகப்
பெருகுந்தனி யையைவர்கள் பெட்பார்தரு மரபோர்
அருமாமறை நெறியிற்பல வாருஞ்சம யத்தோர்
கருதும்பல பலதெய்வத வெழில்விக்கிர கங்கள்.

இ-ரை—மிகுந்த கீர்த்திபொருந்திய சிறப்பினையுடைய, அபுவனசரிஷிமுதலாகிய, சமானமில்லாத பெருமைமிகுந்த இருபத்தைந்து ரிஷிகோத்திரங்களில் விருப்புடனே பிறந்தவர்கள், அருமையும்பெருமையுமுடைய, வேதாகமங்களிற்கூறிய, பலவாகிய சமயத்தோர்களும், அவரவர்கள், விரும்புகின்ற, பலபலவிதங்களான, அழகுபொருந்திய, விக்கிரகங்களையும். எ—று. (௧௧)

மன்னுந்தூப றுந்தூமம்வ யங்கப்புரி கருவி
மின்னும்பல தீபத்தொடு மேவுந்தொனி மணிகள்
சின்னங்கண்மி டாகொப்பரி சேகண்டிப டிக்கம்
துன்னுங்கல சங்கெண்டிது லங்கும்பற சும்பர்.

இ-ரை—உயர்ச்சிபொருந்திய நல்லவாசனைத் தூபங்கள்விளங்குதற்குச், செய்யப்படுங்கருவிகளையும், பிரகாசிக்கின்ற, அலங்காரதீபமுதலிய, பலவித, தீபங்கள் விளங்குதற்குச் செய்யப்படுங்கருவிகளையும், ஓசைபொருந்திய, பலவிதமணிகளையும், திருச்சின்னங்கள்முதலாகிய பலவாச்சியங்களையும், தாம்பிரம், பித்தளை, வெண்கலமுதலியவற்றுலாகிய மிடாக்களையும், கொப்பரைகளையும், சேமக்கலங்களையும், படிக்கங்களையும், அழகியகலசங்களையும், கெண்டிச்செம்புகளையும், பலவிதமாகவிளங்குங் குடங்களையும். எ—று. (௧௨)

ஞாலம்புகழ் தாளத்தொடு நனியூதிடு கொம்பு
கோலந்திகழ் கிண்ணங்கள்கு லாவுஞ்சரு வங்கள்
ஏலும்பல வகல்சட்டுவ மினிதுண்கல மாதி
சீலம்பெறு வோர்சொற்பல வாகத்திகழ் கருவி.

இ-ரை.—பூமியிலுள்ளவர்கள் புகழாநின்ற கைத்தாளங்கள் சாலரிமுதலியவை களேயும், ஊதுகின்றபெருமையுடைய கொம்புகளேயும், அழகுவாய்ந்தகிண்ணங்களே யும், கொண்டாடப்படும் பலபாத்திரங்களேயும், பலவிதமாகப்பொருந்திய, தகழிகளே யும், அகப்பைகளேயும், பெருமைபொருந்திய உண்கலமுதலாகிய ஒழுக்கமுடையவர் களாற் சொல்லப்பட்ட, விளங்காநின்ற பலவிதமாகியகருவிகளேயும். எ—று. (கஙு)

இத்தன்மைய பலசிட்டிகள் யாவுந்தனி யாற்றி
வித்தம்பெறு மேலோர்கள்வி யப்பப்பொலி தூய்மை
நத்தும்புவி யோர்பற்பல நலமெய்துபு வாழச்
சித்தந்திக ழார்வத்தொடு திதிசெய்குவர் மாதோ.

இ-ரை.—இத்தன்மையாகிய பலவித சிருஷ்டிகளெல்லாவற்றையும் ஒப்பில் லாமற்செய்து பரிசுத்தஞானமுடைய பெரியோர்கள் அதிசயிக்கும்படி விளங்கா நின்ற பூமியிலுள்ளவர்கள், விரும்புகின்ற பலபலவாகிய சுகங்களேப்பொருந்தி வா ழும்பொருட்டு உள்ளத்தில் மிகுந்தஅன்புடனே பரிபாலனஞ்செய்வார்கள். எ—று.

ஷை வேறு.

அறைசீர் மிகுந் தோங்கு பிரத்னச ராதியாகக்
குறையாவிரு பானுடனைவர்கள் கோத் திரததோர்
மறைபேசு கெர்ப்பக கிரகத்தொடு மண்டபங்கள்
தறைமீதள வாத்தெய்வநிர் மிதோத்தா ரணங்கள்.

இ-ரை.—சொல்லப்பட்ட மிகுந்த புகழ்பெற்றுயர்ந்த பிரத்னசரிஷிமுதலாகிய குறைவில்லாத இருபத்தைந்துரிஷிகோத்திரங்களிற்பிறந்தவர்கள், பூமியினிடத்தில் சிற்பசாஸ்திரங்களிற் சொல்லாநின்ற கெர்ப்பக்கிரகங்களேயும், அர்த்தமண்டப மஹா மண்டப சபாமண்டபங்கள்முதலிய மண்டபங்களேயும் அளவில்லாத தெய்வநிர்மா ணங்களேயும், பிரதிஷ்டைகளேயும்; எ—று. (கரு)

புகழ்சேர்தரு மண்டலந் தேயம்பு ரங்கிராமம்
திகழ்கேடகங் கர்வடம் பாடிபல் சீர்மடப்பம்
மகிழ்வோங்கு குறிச்சிகு றும்புசம் வாகம்பாக்கம்
நிகழ்பட்டினங் கோபுரந்தூபி நிலாவளிந்தம்.

இ-ரை.—புகழ்ச்சிபொருந்திய, நாடுகளேயும், தேசங்களேயும், நகரங்களேயும்,கிரா மங்களேயும், விளங்காநின்ற, மலேசூழ்ந்தகிராமங்களேயும், மலேயும் நதியுஞ்சூழ்ந்தகிரா மங்களேயும், முல்லேநிலஞ்சூழ்ந்தகிராமங்களேயும், பலசிறப்பும்பொருந்திய ஐந்நூறு கிராமங்களுக்குத் தலேக்கிராமங்களேயும், மகிழ்ச்சியைத்தருகின்ற குறிஞ்சிநிலஞ்சூழ்ந் தகிராமங்களேயும், பாலேநிலஞ்சூழ்ந்தகிராமங்களேயும் மலேயின்மேல் விளங்குங்கிராமங் களேயும், மருதநிலஞ்சூழ்ந்தகிராமங்களேயும், நெய்தனிலஞ்சூழ்ந்தகிராமங்களேயும், கோ புரங்களேயும் ஸ்தூபிகளேயும் சந்திரகாந்தக்கற்களாலாகிய மேடைகளேயும். எ—று.()

மதிலோடகழ்நாஞ்சில் பரிகம் வயங்கு வாய்தல்
பதிமாளிகை மந்திர மாலயம் பண்ட சாலை
பொதிமன்ற மத்தாணி யறப்புறம் போற்றரங்கம்
துதிசேர்பிர காரமடுக்களை தூயகுண்டம்.

இ-ரை.—சுற்றுமதில்களையும், அகழிகளையும், மதிளுறுப்புக்களையும், மதிலுண் மேடைகளையும், கோபுரவாயில்களையும், விளங்காநின்ற இராஜதானிகளையும், இராஜகிரகங்களையும், மாளிகைகளையும், தேவாலயங்களையும், பண்டசாலைகளையும், அழகுதங்கிய சபைகளையும், ஆஸ்தானமண்டபங்களையும், தருமசத்திரங்களையும், புகழ்மிகுந்த நாடகசாலைகளையும், துதிபொருந்திய பிராகாரங்களையும், பாகசாலைகளையும், பரிசுத்தமாகிய யெக்ஞசாலைகளையும். எ—று. (௧௭)

கலைபற்பல தேரிடம் வேதிகை கந்த வாரம்
குலவுந்துறை பற்பல வீதிகு ளந்த டாகம்
அலகின்றெளிர் கூடமொ டாவண மாதி தன்னை
உலகின்புறச் சிட்டி புரிந்து வப்பர் மாதோ.

இ-ரை.—வித்தியாசாலைகளையும், வேதிகைகளையும், அந்தர்ப்புரங்களையும், விளங்குகின்ற படித்துறைகளையும், பலபலவீதிகளையும், திருக்குளங்களையும், தடாகங்களையும், பிரகாசிக்கின்ற அளவில்லாத வீடுகளையும், கடைவீதிகள்முதலானவைகளையும் உலகத்திலுள்ளவர்கள், பலவாகிய இன்பங்களை அனுபவிக்கும்பொருட்டு நிர்மாணஞ்செய்து மகிழ்ச்சியுடனே பரிபாலனஞ்செய்வார்கள். எ—று. (௧௮)

௸ வேறு.

முன்னுபெ ரும்புகழ் மேவுசு பர்ன்னசர் முன்னாக
மன்னிரு பானுட னைவர்கண் மரபினில் வந்தோர்கள்
மின்னுகி ரீடம தாணிப தக்கம்வி ளங்காரம்
தென்னுறு விற்குழை யாதிய பற்பல்செ விப்பூண்கள்.

இ-ரை.—யாவருங்கருதுகின்ற விசாலமானகீர்த்தியையுடைய சுபர்னசரிஷிமுதலாகப்பொருந்திய இருபத்தைந்துரிஷிகோத்திரங்களிற் பிறந்தவர்கள், விளங்காநின்ற கிரீடங்களையும், மார்பணிகளையும், பதக்கங்களையும், பிரகாசிக்கின்ற மாதரணிவடங்களையும், அழகுபொருந்தி விளங்காநின்ற குண்டலமுதலாயுள்ள பலபல காதணிகளையும். எ—று. (௧௯)

பொங்கொளி மேவிய தலையணி சுட்டிபொ லம்பட்டம்
துங்கநு தலணிகள் வாகுவி லணியணி சொலு மங்கைக்
கங்கண மெழில்பொலி கைவளை யாதிய கதிராழி
சங்கிலி பிறைவட மங்கிலி யஞ்சுடர் தழுவும்பூண்.

இ-ரை—மிகுந்தவொளிபொருந்திய தலையாபரணங்களையும், வாகுச்சுட்டிகளையும், அழகியபட்டங்களையும், உயர்ச்சிபொருந்திய, நெற்றியிலணியப்பட்ட ஆபரணங்களையும், புஜங்களில் அணியப்பட்ட ஆபரணங்களையும், புகழையுடைய, கைகளில் அணியப்பட்ட அழகுவிளங்காநின்ற கங்கணங்கள், கடகங்கள், வளையல்கள், கொலுசுகள் முதலிய ஆபரணங்களையும், பிரகாசிக்கின்ற மோதிரங்களையும், சந்திரஹாரங்களையும், ஒளிபொருந்திய திருமங்கிலியமுதலிய ஆபரணங்களையும்; எ-று.()

விரிசிகை மேகலை செழியக லாபமி ளிர்காஞ்சி
சரிமணி பருமஞ் சீரரை ஞாண்பொலி தருதண்டை
தெரிதரு நூபுர மோடுசெ தங்கைசெ றிவுற்ற
பரிபுர மாதிய பற்பல வணியா பரணங்கள்.

இ-ரை—மாதர்கள் இடையிலணியப்பட்ட முப்பத்திரண்டு கோவைமணியாபரணங்களையும், எழுகோவைமணியாபரணங்களையும், அழகிய அரைப்பட்டிகைகளையும், விளங்காநின்ற எட்டுக்கோவைமணியாபரணங்களையும், பதினறுகோவைமணியாபரணங்களையும், பதினெண்கோவைமணி யாபரணங்களையும், சிறந்த அரைவடங்களையும், அழகினையுடைய தண்டைகளையும், ஆராயத்தக்க காற்சிலம்புகளையும், சலங்கைகளையும், பொருந்தியபாதகிண்கிணிமுதலாகிய அணியத்தக்க பலபல ஆபரணங்களையும்; எ—று. (௨௧)

விற்பொலி நவவித மணிகள்கு யிற்றுபு விரிசோதிப்
பற்பல வணிகல னுதிய சிட்டிப ரிந்தாற்றிப்
பொற்புடன் யாவரு மின்புறும் வண்ணம் புவிமீதிற்
சொற்படு பேரருள் கூர்ந்து புரந்து சுகிப்பாரே.

இ-ரை.—ஒளிமிகுந்த நவரத்தினங்கள் பதிக்கப்பெற்று, விரிந்தகிரணங்களைவீசுகின்ற, பலபலவிதமாகிய ஆபரணங்களையெல்லாம், அன்புடனே சிருஷ்டிசெய்து பூமியினிடத்துள்ளயாவரும், அழகுடனே இன்பத்தையடையும்பொருட்டுச் சொல்லப்பட்ட பெருங்கருணைசுரந்தருளிப் பரிபாலனஞ்செய்து வாழ்வார்கள். எ—று. (௨௨

பஞ்சகிர்த்தியமுரைத்த வத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௬௱௫௧.

பதினமூன்றாவது

நித்தியகருமமுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவளரம் புவிகழைய நனிபுரியு மைங்கொழிலிற் சிறிதுரைத்தாம்
அருமறைக ளினிதுபுக றவந்தான நோன்புமக மாதி யாய
தருமநெறி யெவற்றினுக்குந் தலைமையதா யுயிர்க்குறுதி தருவ தாகும்
பெருமையுறு நித்தியகன் மங்களிற்சிற் சிலவெடுத்துப் பேசு வாமால்.

இ-ரை.—சுவிரதமகாராஜனே கேளும், இதுவரையும் பலசெல்வமும் பெருகிய அழகியபூமியிலுள்ளவர்கள் தழைத்தோங்க, விஸ்வப்பிர்மவமிசஸ்தர்களால் நடத்தப்படுகின்ற பஞ்சகிர்த்தியங்களின் பெருமைகளிற் சிறிதுசொன்னோம், இனி, அரிய வேதங்களால் இனிதுசொல்லப்பட்ட தவங்கள், தானங்கள், விரதங்கள், யாகங்கள், முதலாகிய தருமவழிகள்பலவற்றிற்கும், முதன்மையாகியும், ஆன்மகோடிகளுக்கு நன்மையைத்தருவதுமாகிய பெருமைபொருந்திய நித்தியகன்மநெறிகளிற் சிலசில வெடுத்துச்சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர்; எ—று. (க)

செங்கதிர்கீழ்த் திசையெழவைங் கடிகையெனத் துயினீங்கிச் செறியின் போங்கத்
துங்கமுறு விசுவேசன் றனைக்கருதி வசுந்தரையைத் தொழுது போற்றி
ஐங்கரனைச் சங்கரனைச் சங்கரியைச் சங்கரியை யலர்மேன் மின்னைப்
பங்கயமென் னறும்பொகுட்டி லிருந்தருளு மறையோனைப் பனுவன்மானை

இ-ரை.—சிவந்தகிரணங்களையுடைய சூரியன், கிழக்குத் திசையிலுதிப்பதற்கு * ஐந்துநாழிகை உண்டென்னுங்காலமாகிய பிராமீமுகூர்த்தத்திலே, நித்திரைவிட்டெழுந்து மிகுந்தமகிழ்ச்சிபெருகும்பொருட்டு, உயர்வுபொருந்திய முதற்கடவுளாகிய விஸ்வேஸ்வரனைத்தியானித்து, பூமிதேவியை வணங்கித்துதித்து, ஐந்துதிருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளையும், சிவபெருமானையும், உமாதேவியாரையும், சங்கத்தையுடைய திருமாலையும், கமலாசனியாகிய இலக்குமியையும், செந்தாமரை மலரின் மிருதுவாகிய அழகியபொகுட்டில் வீற்றிருந்தருளும் பிர்மாவையும் சகலகலைகளுக்கும் நாயகியாகிய சரஸ்வதியையும். எ—று. (உ)

கந்தமலி பசுந்துணர்மென் முகைநறுந்தண் டேன்றுளிக்குங் கற்ப நீழல்
இந்திரனைச் செழுஞ்சுடரைச் சற்குருவைத் தந்தையுட னீன்ற தாயைச்

---

* இவ்வைந்துநாழிகை உத்தமமெனவும், மூன்றேமுக்கால் நாழிகை மத்திமமெனவும், உதயம் அதமமெனவும், இச்சந்தியாகாலத்தில் நித்திரைசெய்தவன், அசுத்தனெனவும், அவன் ஒருகருமத்துக்கும் யோக்கியனலனெனவும் பெரியோர்கள்சொல்லுவார்கள்.

சிந்தனைசெய் தாலயத்துக் கணிநகருக் கீசான திசையை நீக்கி
அந்தமிகு வேறுதிசை களினூறு தண்டளவுக் கப்பாற் சென்று.

இ-ரை —வாசனைமிகுந்த பசியபூங்கொத்துகளின் மிருதுவாகிய அரும்புகள் மலர்ந்து, நல்லதேனைத்துளிக்கின்ற கற்பகவிருக்ஷத்தினிழலில் அரசுவீற்றிருக்கும் இந்திரனையும், சிவந்தகிரணங்களையுடைய சூரியனையும், சத்குருவையும், பிதாவையும், மாதாவையும், மனதிலேதியானித்துப்; பெருமைபொருந்திய தேவாலயத்துக்கும், ஊருக்கும், ஈசானதிக்கொழிந்த அழகுமிகுந்த வேறுள்ள திக்குகளிலே நூறு தண்டப்பிரமாணத்தின் அளவுக்கப்புறம்போய்; எ—று. (௩)

மன்னியமுப் புரிநூலை வலச்செவியி லணிந்துமேல் வத்திரத்தைச்
சென்னிமிசைச் சுற்றிமவு னம்பொருந்தி வழிமறுகு திகழான் மந்தை
மின்னுகிரி விளைபூமி களர்குளம யானநதி மேடு புற்று
துன்னுமலர்ச் சோலைபுனற் கரையுமலா நிலத்திஞெரு துரும்பு சேர்த்தி.

இ-ரை.—மார்பிலேபொருந்திய உபவீதத்தை வலக்காதிலே சேர்த்து மேல் உத்தரீயத்தைத் தலைமறையச்சுற்றி மௌனம்பொருந்தி, வழியும், வீதியும், பிரகாசிக்கின்ற பசுமந்தைநிற்குமிடமும், விளங்காநின்ற மலையும், விளைநிலமும், உவர்நிலமும், குளமும், மயானமும், நதியும், மேடும், புற்றும், நெருங்கியநந்தனவனமும், நீர்க்கரையுமாகிய இவைகளல்லாத பூமியில் அவ்விடத்துள்ள தேவர்முதலானவர்கள் விலகும்பொருட்டு, மூன்றுதரங் கைதட்டி, ஒருதுரும்பைச்சேர்த்து. எ—று. (௪)

பகலிருசந் திகள்வடக்கு மிரவினிடைத் தென்றிசையும் பார்த்திருந்து
தகவினுயர் பசுவொளிவெண் மதிபரிதி யனல்பெரியோர் தமைநோக்காமல்
நிகழுமெழி னாசிநுனி யினைநோக்கி யிருமலமு நீக்கிப் பின்னர்ப்
புகலிடக்கையாற்குறியைப் பிடித்தெழுந்து நீர்க்கரையின் புறத்தைநண்ணி

இ-ரை.—பகலிலும் இரண்டுசந்தியாகாலங்களிலும் வடக்குமுகமாகவும், இரவில் தெற்குமுகமாகவும் நோக்கியிருந்து, உயர்வுபொருந்திய பசுவையும், காந்திபொருந்தியவெள்ளிய சந்திரனையும், சூரியனையும், அக்கினியையும், பெரியோர்களையும் பாராமல், அழகுவிளங்காநின்ற நாசிநுனியைப்பார்த்துக்கொண்டு, மலசலவிசர்க்கஞ்செய்து, பின்பு சொல்லுகின்ற இடக்கையாற் குறியைப்பிடித்துக்கொண்டெழுந்து, புண்ணியதீர்த்தமல்லாத நீர்க்கரையின்பக்கத்தையடைந்து. எ—று. (௫)

அணவியபாத் திரமிலதா யிடின்மருவு நீர்க்கொருசா ணளவின் வைகி
மணலுவர்மண் ணெலியகழ்மண் புனலுறுமண் வன்மீக மண்சுக் கான்மண்
புணர்சடைமண் பித்திகைமண் புழுவுறைமண் ணிவைநீக்கிப் புனிதபூமித்
தணவருமண் ணுமலகப் பரிமாண மெடுத்ததனிற் சலமுஞ்சேர்த்து.

இ-ரை.—பொருந்திய ஜலபாத்திரமில்லாதாயின் கிட்டியிருக்கும் நீர்நிலைக்கு ஒருசாணளவுக்கிப்பால் இருந்துகொண்டு மணல் உவர்மண் பெருச்சாளிதோண்டிய மண் நீருக்குளிருக்குமண் புற்றுமண் சுக்கான்மண் மரங்களின் வேரிற்பொருந்திய

மண் சுவர்மண் புழுக்கள்பொருந்தியமண் ஆகிய இவைகளைநீக்கி சுத்தநிலத்துள்ள மிருதுவாகிய மண்கொணர்ந்து வலப்புறத்திலே வைத்துக்கொண்டு முந்தி அசுத்தத் தினாற்றமும் பற்றுமறும்படியான சவுசஞ்செய்து பின்புசுத்திக்காக அந்தமண்ணில் நெல்லிக்காய்பிரமாணம் எடுத்து அதனோடு ஜலத்தையுஞ்சேர்த்துக்கொண்டு. எ—று

கருதுமிலிங் கத்தொருகாற் குதத்திலைங்காற் கழுவுமிடக் கைக்கீ ரைங்கால்
இருகாஞ்சேர்த் தெழுகாற்கை கால்களுக்கோவ் வொருகாலு மினிது பூசி
மருவுபுன லாற்சுத்தி செய்திடலில் லறத்தோர்க்கு வகுத்த தாகும்
ஒருவிலுயர் பிரமசா ரியர்க்கதனி லிரட்டியென வுரைக்கு நூலே.

இ-ரை.—*எண்ணப்படுகின்ற குறியையொருதரமும்,குதத்தை ஐந்துதரமும்,சௌசஞ்செய்த இடக்கையைப் பத்துத்தரமும், இரண்டுகைகளையுஞ்சேர்த்து எழுதரமும், பூசி ஜலத்தினாற்சுத்திசெய்தெழுந்து கைகளுக்கும் கால்களுக்கும் ஒவ்வோர்தரம்பூசிச்சுத்திசெய்து,சௌசஞ்செய்த இடத்தை ஜலத்தினாலே அலம்பவேண்டும். இவ்வாறு செய்தல் கிருகஸ்தருக்கும் இதினிரண்டுமடங்குசெய்தல் மேன்மைபொருந்திய பிரமசாரிகளுக்கும் உரியனவென்று தருமநூல்களிற்சொல்லப்படும். எ—று. (எ)

தண்ணியவா னப்பிரத்தற் கதனிரட்டி யதனிரட்டி சந்நியாசிக்
கண்ணியநால் வருக்குமிவை பகற்காகு மிருட்பொழுதுக் கதனிற்பாதி
எண்ணிவழி யினிற்படவோர் தாமும்வே தனைசெய்பிணி யெய்தினோரும்
நுண்ணிடையார் தாமுமிவை களினான்கி லொன்றுசெய நுவலுமாதோ.

இ-ரை.—மேற்சொல்லப்பட்ட பிரமசாரிகளுக்குரிய விதியின் இருமடங்கு சாந்தகுணத்தையுடைய வானப்பிரஸ்தருக்கும் அதினிருமடங்கு சந்நியாசிகளுக்கும் உரியனவாகும் இந்தப்பிரகாரம் பொருந்திய கிரகஸ்தர் பிரமசாரி வானப்பிரஸ்தர் சந்நியாசி என்னுநால்வரும் பகற்காலத்திற் செய்யவேண்டுமென்றும் இராக்காலத்தில் இவைகளிற்பாதிசெய்தல்வேண்டுமென்றும் ஒருகாரியார்த்தமாக வழிநடப்பவரும்வருத்துகின்றநோயாளரும் மாதர்களும் இவைகளில் நான்கிலொன்று செய்தல்வேண்டுமென்றும் தருமநூல்களிற் சொல்லப்படும். எ—று. (அ)

---

* ஜலவிசர்க்கஞ்செய்யில் குறியை ஒருதரமும் இடக்கையைமூன்றுதரமும் இரண்டுகையையுஞ்சேர்த்து ஒருதரமும் இரண்டுகால்களையும் ஒவ்வோர்தரமும் சுத்திசெய்து நான்குதரம்வாய்கொப்பளித்து ஆசமனம்பண்ணல்வேண்டும்.

* ஜலபாத்திரத்தைக்கையில்வைத்துக்கொண்டு சலமலவிசர்க்கஞ்செய்யில் அந்தச்சலம் மூத்திரத்துக்குச்சமானமாகும் அதனாற்சௌசஞ் செய்யலாகாதென்றும் உபவீதத்தைக் காதில்வைத்துக்கொள்ளாது விசர்க்கஞ்செய்யில் சௌசாசமனஞ்செய்து பின்பு ஸ்நானஞ்செய்து முன்புதரித்த வுபவீதத்தைக்களைந்துவிட்டு புதியவுபவீதந் தரிக்கவேண்டுமென்றும் ஈரவஸ்திரத்தோடு விசர்க்கஞ்செய்யில் புனஸ்நானஞ்செய்து மூன்றுபிராணயாமம் பண்ணல்வேண்டுமென்றும் உத்தரீயத்தைத் தலையிற்கட்டிக்கொள்ளாது விசர்க்கஞ்செய்யில் அவனைத்தேவர்கள் சபிப்பார்களென்றும் தருமநூலுணர்ந்தபெரியோர்கள் சொல்லுவார்கள்.

இவ்வணமா கச்சவுச மியற்றியே வேறுதுறை யெய்தி வாய் கண்
செவ்விதிகழ் செவிநாசி கால்கையுகி ரிவைசுத்தி செய்து வாய்ப்பெய்
கவ்வையொழித் திடுபுனலெண்காலிடப் பாலுமிழ்ந்துதலேக்கட்டவிழ்த்துத்
தவ்வலின்முந் நூலினைமுன் போலணிந்து வயங்குசிகை தனைமுடித்து.

இ-ரை.—இவ்விதமாகச் சௌசஞ்செய்தபின் அவிடம் நீங்கி வேறுதுறையிற் போய் வாயையும் கண்களையும் அழகுவிளங்காநின்ற காதுகளையும் நாசியையும் கால்களின் நகங்களையுஞ் சுத்திசெய்து துன்பத்தைநீக்குவதாகிய ஜலத்தை எட்டுதரம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்துத் தலையிற்சுற்றிய உத்தரீயத்தை அவிழ்த்து இடையிலே தரித்து கெடுதலில்லாத உபவீதத்தைக் கிரமமாகத்தரித்து விளங்குகின்ற சிகையைமுடித்து. எ—று. (௯)

சாம்பருமி யென்புகரி யாதியசுத் தங்களிலாத் தகுதா னத்தில்
ஒம்பலுறு குணக்கேனு முதக்கேனு நோக்கியிருந் துவர்நீர் வெந்நீர்
ஏம்பன்மிகு புழுவுறுநீ ரசுத்தநீ மலேநுரைநீ ரிவைய லாத
தீம்புனல்கொண் டவரவர்கட் குரித்தாய வாசமனஞ் செய்தல் வேண்டும்.

இ-ரை.—சாம்பல் உமி எலும்பு கரிமுதலாகிய அசுத்தங்களில்லாத தகுதியான விடத்தில் விரும்பப்படுகின்ற கிழக்குமுகமேனும் வடக்குமுகமேனும் பார்த்திருந்து உவர்நீர் வெந்நீர் மிகுந்த அருவருப்புடைய புழுக்கள்பொருந்திய நீர் அசுத்தமாகிய நீர் அலைநீர் நுரைநீர் இவைகளல்லாத மதுரமாகிய சுத்தநீர்கொண்டு அவரவர்களுக்குரித்தாகிய ஆசமனஞ்செய்தல்வேண்டும். எ—று. (௧0)

அலங்குமெழில் வலதகங்கை கோகன்ன சாமாக்கொண் டாசமிக்குஞ்
சலங்குலவந் தணரிதய மன்னவர்கந் தரம்வணிகர் சாற்று முண்ணு
வலங்கொண்மட வியருழவர் வாயளவுஞ் செலவருந்தன் மாபா மிவ்வா
றிலங்குபுனன் மனுவொடுமும் முறைபருகிக் கைபூசி யெழில்விண்ணோக்கி

இ-ரை.—விளங்குகின்ற அழகினையுடைய வலதுள்ளங்கையை பசுவின் காது போல வைத்துக்கொண்டு ஆசமனஞ்செய்கின்ற ஜலமானது கொண்டாடப்படுகின்ற பிராமணர்களுக்கு இருதயம்வரையிலும் க்ஷத்திரியர்களுக்குக் கண்டம்வரையிலும் வைசியர்களுக்குச்சொல்லப்பட்ட அண்ணவின்வரையிலும் வெற்றிபொருந்திய சூத்திரர்களுக்கும் மாதர்களுக்கும் வாய்வரையிலும் செல்லும்படி பானம் பண்ணுதல் முறைமையாகும். இந்தப்படி ஜலத்தை மந்திரத்துடனே மூன்று முறைபானம் பண்ணிக் கைகழுவி அழகிய ஆகாயத்தைப்பார்த்து, எ—று. (௧௧)

அங்குட்ட மூலமதா லிருமுறைய தாரந்தைவந் தங்கைபூசிக்
கொங்குற்ற நடுவிர லொருமூன்றால் வாய்தொட்டங் குட்ட வீற்றால்
துங்கப்பொற் கன்னமதை வலமிடமு முறையாகத் தொட்டங் குட்டம்
தங்குற்ற வனுமிகையி னுனியின்வல மிட்விழிக டன்னைத் தொட்டு.

இ-ரை.—† அங்குஷ்டவிரலடியால் அதரங்களைவலப்புறந்தொடங்கி இரண்டுதரந் துடைத்து அழகியகையையலம்பி வாசனையுள்ள மலர்போலுங் கையிலுள்ள தர்ச்சனி மத்யமை அனாமிகை என்றும் மூன்றுவிரல்களாலே வாயுதடுகளைத்தொட்டு அங்குஷ்ட விரல்நுனியால் அழகினாலுயர்ந்த வலக்கன்னத்தையும் இடக்கன்னத்தையு முறையாகத்தொட்டு அங்குஷ்டவிரல்சேர்ந்த அனாமிகைவிரனுனியால் வலக்கண்ணையும் இடக்கண்ணையும் தொட்டு, எ—று. (௧௨)

திகழ்தருமங் குட்டமுறு தர்ச்சனியால் வலமிடநா சிகளைத் தொட்டுப்
புகழ்கனிட்டைவிரனுனியாற் செவிகளைமத் திமைநுனியாற்புயங்கடம்மை
மகிழும்வல மிடந்தொட்டுச் செங்கைவிரல் களைக்குவித்து மார்பைத்தொட்டுத்
துகளில்விரல் களைவிரித்துச் சிரசையுமந் திரங்களொடு தொடுதல்வேண்டும்

இ-ரை.—விளங்குகின்ற அங்குஷ்டவிரல்பொருந்திய தர்ச்சனி விரல்நுனியால் வலமூக்கடியையும் இடமூக்கடியையுந் தொட்டு புகழ்பெற்ற அங்குஷ்ட விரல் சேர்ந்த கனிஷ்டைவிரல் நுனியால் வலச்செவியையும் இடச்செவியையுந் தொட்டு அங்குஷ்டவிரல்சேர்ந்த மத்யமைவிரல் நுனியால் வலத்தோளடியையும் இடத்தோளடியையும் தொட்டு மகிழ்வைத்தருகின்ற செவ்விய கைவிரல்களைக்குவித்து மார்பினைத்தொட்டு குற்றமற்றவிரல்களைவிரித்துச்சிரசினையும்மந்திரங்களுடனே தொடல் வேண்டும். எ—று. (௧௩)

வேம்புபுளி யிலவரசு பேயத்தி யாமணக்கு விசும்பி னோங்குங்
காம்புநறும் பனசமெழின் முருங்கையொடு பட்டமாங்கவின்சேர் நெல்லி
சாம்பர்செழுந் தடக்கைவிரல் செங்கல்கரி மணல்பாளை சாற்றும்வைக்கோல்
தேம்புறுமற் றிவைகளினாற் பல்விளக்கிற் செய்தவம்போந் தீமையெய்தும்

இ-ரை.—‡ வேம்பு புளி இலவு அரசு பேயத்தி ஆமணக்கு ஆகாயத்தையளாவுகின்ற மூங்கில் நல்லபலா அழகியமுருங்கை பட்டமரங்கள் அழகுபொருந்தியநெல்லி இவற்றின்கொம்புகள் சாம்பல் செழுமையுள்ள நெடியகைவிரல் செங்கல் கரி மணல் பாளை சொல்லப்பட்ட வைக்கோல் மெலிவைத்தருகின்ற இவைகளினாலே பல்விளக்கினால் செய்த தவங்கள்நீங்கும், தீங்குண்டாகும். எ—று. (௧௪)

நாயுருவி மாவிஞ்சு மகிழ்மருது குருக்கத்தி நாவ லாத்தி
மேயகுமிழ் தேக்கழிஞ்சில் கடம்பிறலி சண்பகம்பூல் வேலி லுப்பை
ஏயநறுங் கொன்றைகடு வன்னிவிளா நறுவிலியு மில்லோர்க் காகும்
தூயபெருங் குமிழ்வாகை புன்குநொச்சி கருங்காலி துறவோர்க் காமால்

---

† சௌரமானமுடையவர்களும் சாந்திரமானமுடையவர்களும் அவரவர்கள் சூத்திரவிதிப்படி ஆசமனஞ்செய்யவேண்டும்.

‡ பனை கருதாளம் பாக்கு தாழை ஆல் பேரீஞ்சு தெங்கு இவை எழும் துரும்புகளுக்கு அரசாதலால் இவற்றால் மறந்தும் பல்விளக்கலாகாது.

இ-ரை.—நாயுருவி மா ஈஞ்சு மகிழ் மருது குருக்கத்தி நாவல் ஆத்தி பொருந்திய குமிழ் தேக்கு அழிஞ்சில் கடம்பு இத்தி சண்பகம் பூல் வேல் இலுப்பை நன்மையமைந்த கொன்றை கடு வன்னி விளா நறுவிலி இவற்றின்கொம்புகள் இல்லறத்தார்களுக்குரியனவாகும் சுத்தமாகிய பெருங்குமிழ் வாகை புன்கு நொச்சி கருங்காலி இவற்றின் கொம்புகள் துறவறத்தார்களுக்குரியனவாகும். எ—று. (கரு)

சொற்றதரு வினிற்கணுக்கோண் டுளைவடுவி லாதுபசுந் தோலி னோடும்
உற்றசிறு விரற்பருமைக் கொம்பளவை விரன்மறையோ ரோங்கு முந்நான்
கற்றமின்மன் னவர்பதினொன் றுயர்வணிக ரொருபதுபின் னவர்களொன்பான்
குற்றமின்மங் கையர்நான்கு துறவியிரு நான்குமெனக் கொள்ளல் வேண்டும்

இ-ரை.—மேற்சொல்லப்பட்ட கொம்புகள் கணு கோணல் துளை வடு இவைகளில்லாததாயும் பசுமையுள்ள தோலோடுபொருந்தியதாயும் சிறுவிரற் பருமையுடையதாயும் இருத்தல்வேண்டும் கொம்பினளவை உயர்வாகிய பிராமணர்கள் பன்னிரண்டங்குலநீளமும் மெலிவில்லாத க்ஷத்திரியர்கள் பதினோரங்குலநீளமும் மேலாகியவைசியர்கள் பத்தங்குலநீளமும் சூத்திரர்கள் ஒன்பதங்குலநீளமும் குற்றமற்ற மாதர்கள் நாலங்குலநீளமும் துறவிகள் எட்டங்குலநீளமுங் கொள்ளல்வேண்டும். எ—று. (கசு)

நுதலியகொம் பினைக்கழுவிக் கிழக்கேனும் வடக்கேனு நோக்கி வைகி
இதமிகுபற் களினுறுமா சறத்தேய்த்து நாவைவழித் திடப்பாற் போக்கி
உதகமணி வாய்ப்பெய்து பன்னிருகால் வாமத்தி னுமிழ்ந்து பின்னர்
வதனமொடு கைகால்கள் சுத்திபுரிந் தாசமன மாடல்வேண்டும்.

இ-ரை.—அவரவர்களுக் குரியதாக மேற்சொல்லப்பட்ட கொம்பைக்கழுவிக் கிழக்குமுக நோக்கியேனும் வடக்குமுக நோக்கியேனும் குக்குடாசனமாக இருந்துகொண்டு மௌனம்பொருந்தி இதமிகுத்த பற்களின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் மாசறத்தேய்த்து நாவைவழித்து இடப்புறத்திலே எறிந்துவிட்டு ஜலத்தை அழகியவாயிற்கொண்டு பன்னிரண்டுதரம் † இடப்புறத்திலே கொப்பளித்து பின்பு முகத்தையும் கைகால்களையும் சுத்திசெய்து ‡ ஆசமனஞ்செய்தல்வேண்டும். எ—று.()

---

* நின்றுகொண்டும் நடந்துகொண்டும் போர்த்துக்கொண்டும் தந்தசுத்திசெய்யலாகாது.

† பிராமணனுக்கு எதிரில் தேவதைகளும் வலதுபக்கத்தில் பிதுர்க்களும் பின்பக்கத்தில் ரிஷிகளும் வசிக்கிறபடியால் இடப்புறத்திலே உமிழவேண்டும்.

‡ சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் நின்றுகொண்டும் குனிந்துகொண்டும் படுத்துக்கொண்டும் காலைநீட்டிக்கொண்டும் குடுமியை அவிழ்த்துக்கொண்டும் தலையில் வேஷ்டியைக்கட்டிக்கொண்டும் காதில் உபவீதத்தைவைத்துக்கொண்டும் காலில் பாதுகையிட்டுக்கொண்டும் மேற்குத்திக்கையேனும் தெற்குத்திக்கையேனும் பார்த்துக்கொண்டும் ஆசமனஞ்செய்யலாகாது. தடாகமுதலியவற்றில் ஆசமனஞ்செய்யில் முழங்காலளவினதாகிய ஜலத்திலே நின்று இடக்கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கையால் ஆசமனம்பண்ணல்வேண்டும்.

இல்லறத்தோர் விடுவயனம் விண்டுபதி சடசீதி யியம்பு நந்தை
புல்லுமுவா விதிபாத நவமியுப ராகமெனப் புகலுநாளிற்
பல்விளக்கிற் குலநசிக்கும் பழுப்பிலையாற் செய்தனலம் பழுப்பு மின்றேற்
சொல்லுநறு நீர்கொடுமுந் நான்குமுறை கொப்பளிக்கிற் றூய்மை யாகும்

இ-ரை.—இல்லறத்தோர்கள் விஷுவத்புண்ணியகாலம் தக்ஷிணாயனபுண்ணிய காலம் உத்தராயணபுண்ணியகாலம் விஷ்ணுபதி புண்ணியகாலம் ஷடசீதிபுண்ணிய காலம் பிரதமை சஷ்டி ஏகாதசி என்றுசொல்லுகின்ற நந்தை திதிகள் பொருந்திய அமாவாசை பௌர்ணமி வ்யதீபாதநாமயோகம் நவமி திதி சூரியசந்திரகிரகணங்கள் என்றுசொல்லப்பட்ட காலங்களிலே தந்தசுத்திசெய்தால் குலம்நசித்துப்போகும் மாம் பழுப்பிலைகளினாலே தந்தசுத்திசெய்யில் நன்மையுண்டாகும் அப்பழுப்பு மில்லை யாகில் தருமநூல்களிற்சொல்லியபடி சுத்தஜலம் வாயிற்கொண்டு பன்னிரண்டுதரங் கொப்பளிக்கில் பரிசுத்தமாகும். எ—று. (௧அ)

† துறவறத்தோர்கள் எந்நாளுந்தந்தசுத்திசெய்தல்வேண்டும்.

† சித்திரைமாசசங்கிரமம் ஐப்பசிமாசசங்கிரமம் என்னுமிரண்டும் விஷுவத் புண்ணியகாலம், ஆடிமாசசங்கிரமம் தக்ஷிணாயனபுண்ணியகாலம், தைமாசசங்கிரமம் உத்தராயணபுண்ணியகாலம், வைகாசி ஆவணி கார்த்திகை மாசி என்னும் இந்நான்கு மாசசங்கிரமும் விஷ்ணுபதி புண்ணியகாலம், ஆனி புரட்டாசி மார்கழி பங்குனி என் னும் இந்நான்குமாசசங்கிரமும் ஷடசீதிபுண்ணியகாலம்.

தேசுறுநீர்க் கரைசார்ந்துத் தரியமிடை மீதணிந்து சிகை முடித்தே
ஆசமன மாயாமஞ் சங்கற்ப மார்ச்சனமு மன்பிற் செய்து
மாசறுமண் புனலோடு சிரமிசையொன் றுந்தியின்மேன் மருவி ரண்டு
பேசதன்கீழ் மூன்றுமிரு தாட்குமிரு மூன்றுமுறை பிறங்கப் பூசி.

இ-ரை.—அழகுபொருந்திய நதிமுதலிய ஸ்நானகட்டத்தையடைந்து உத்தரீ யத்தை இடையிற்றரித்து சிகையைமுடித்து ஜலத்திலிரங்கி (நதியிலேயாயின் அத ற்கெதிர்முகமாகநின்றும் தடாகமுதலியவைகளிலேயாயின் கிழக்குமுகமாகவே னும் வடக்குமுகமாகவேனும் நின்றும்) ஆசமனம் பிராணாயாமம் சங்கற்பம் மார்ஜனம் இவைகளைமுறையே அன்போடுசெய்து குற்றமற்ற மண்ணைஜலத்துடனே எடுத்துச் சிரசின்மேல் ஒருதரமும் உந்திக்குமேல் பொருந்திய இரண்டுதரமும் சொல்லப்பட்ட உந்திக்குக்கீழ் மூன்றுதரமும் ஒவ்வொருகாலுக்கும் மும்மூன்றுதரமும் விளங்கும்படி பூசி. எ—று. (௧௧)

மன்னுபுன லாடிக்கோ மயமுடலிற் றடவிமறை மனுவை யோதிப்
பன்னுசெவி விழிநாசி தமைவிரல்க ளாற்றிரோப வித்து மூழ்கி
முன்னுசெழுங் கதிரவற்கு மனுவினோ டருக்கியமும் முறைதந் தன்பாய்
உன்னுமிரு காங்கொடுவிண் ணவர்முனிவர் பிதுர்களுக்கு முதக நல்கி.

இ-ரை.—பொருந்தியஜலத்தில் மூழ்கியெழுந்து சரீரமுழுவதுங் கோமயந்தடவி இரண்டுகை அங்குஷ்டவிரல்களால் இரண்டுகாதுகளையும் இரண்டுதர்சனி விரல்களால்

இரண்டுகண்களையும் இரண்டுமெத்யமைவிரல்களால் இரண்டுநாசிகளையும் மூடிச் சொல்லப்பட்டவேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு ஸ்நானஞ்செய்து தியானிக்கப்படுகின்ற சிவந்தகிரணங்களையுடைய சூரியனுக்கெதிரில் இரண்டுகையினாலுநிரம்ப ஜலத்தையள்ளி மந்திரத்துடனே மூன்றுதரம் அர்க்கியங்கொடுத்து விளங்காநின்ற † தேவதர்ப்பணம் ‡ ரிஷிதர்ப்பணம் § பிதுர்தர்ப்பணம் இவைகளை அன்புடனேசெய்து.எ-று.

நயங்குலவ வாசமித்துக் கரையேறி யுத்தரிய நனிபி ழிந்து
வயங்குலர்வத் திரத்தீரந் துவட்டிவே றுலர்ந்ததுகின் மருங்க சைத்துத்
தயங்குகுண திசைநோக்கி வெண்ணீறு மனுவினொடு தரித்தின் போங்க
முயங்குபவித் திரமணிந்து சந்தியா வந்தனமு முறையிற் செய்து.

இ-ரை.—நன்மைபொருந்த ஆசமனஞ்செய்து கரையில்வந்து தெற்குநோக்கி அரையிற்றரித்த உத்தரீயத்தை மறித்துப்பிழிந்து சிகையின் ஜலத்தை முகத்துக்கு நேராகவிடுத்து † உலர்ந்தவஸ்திரத்தால் ஈரத்தைத்துவட்டி விளங்குகின்ற வேறு உலர்ந்தவஸ்திரத்தை இடையிற்புனைந்து உத்தரீயமுமணிந்து பிரகாசத்தையுடைய கிழக்குத்திக்கை நோக்கியிருந்து இன்பம்பெருகும்பொருட்டு மந்திரத்துடனே விபூதி அணிந்து பொருந்திய பவித்திரந்தரித்து பிராதக்கால சந்தியாவந்தனமும் நியதியாகச்செய்து. எ—று. (உக)

† உலர்ந்தவஸ்திரமில்லையாயின் ஈரவஸ்திரத்தைப்பிழிந்து விரித்துச்சூரியனுக்கெதிரில் எழுதரமுதறித் துவட்டிக்கொள்ளல்வேண்டும்.

‡ இரண்டுவஸ்திரந்தரித்துக்கொண்டே ஸ்நானஞ்செய்யவேண்டும். ஒருவஸ்திரந்தரித்துக்கொண்டேனும் கௌபீனமாத்திரந் தரித்துக்கொண்டேனும் யாதொரு கருமமுஞ்செய்யலாகாது.

§ வியாதியாளர் கண்டஸ்நானம் கடிஸ்நானம் ஜங்கஸ்நானம் பாதஸ்நானம் என்னும் இவற்றுளொன்றை இயன்றபடி ஜலத்தினாலேகழுவி எஞ்சிய உடம்பை ஈரவஸ்திரத்தினாலே துடைத்துக்கொள்ளல்வேண்டும்.

|| சுத்திசெய்யப்பட்ட ஸ்தலத்தில் தர்ப்பாசனம் வியாக்ரசர்மம் சித்திராசனம் பீடப்பலகை இவற்றுள் ஒன்றில் ஸ்வஸ்திகாசனமாகயிருந்து கொண்டு சந்தியாவந்

---

† கிழக்குமுகநோக்கி உபவீதத்தை இரண்டுகை அங்குஷ்டவிரல்களில் மாட்டிக்கொண்டு முனைபொருந்திய தருப்பையுடன் இருகையும் அஞ்சலியாகக் கீழ்நோக்கிய விரல்நுதியால் விடுநீராகிய தேவதீர்த்தத்தினாலே தேவர்களுக்கு ஜலதருப்பணஞ்செய்யவேண்டும்.

‡ பின்பு உபவீதத்தை மாலையாகத்தரித்து முன்போல் அங்குஷ்டவிரல்களில் மாட்டிக்கொண்டு குடங்கைக்கும் கனிஷ்டைவிரலுக்குநடுவாக விடுநீராகிய பிரஜாபத்திய தீர்த்தத்தினாலே ரிஷிதர்ப்பணஞ்செய்யவேண்டும்.

§ பின்பு உபவீதத்தை இடமாகத்தரித்து முன்போல் அங்குஷ்டவிரல்களில் மாட்டிக்கொண்டு அங்குஷ்டவிரலுக்கும் தர்ச்சனிவிரலுக்கு நடுவுள்ள சந்தில் விடுநீராகிய பிதுர்தீர்த்தத்தினாலே பிதுர்தர்ப்பணஞ்செய்யவேண்டும்.

தனஞ்செய்யவேண்டும் பிராதக்கால சந்தியை நக்ஷத்திரங்கள் மறையாமலிருக்கையிலும் மத்தியானசந்தியைப் பதினைந்துநாழிகையாகிய மத்தியானத்திலும் சாயங்கால சந்தியைச் சூரியன் பாதிமறைந்துகொண்டிருக்கையிலும் செய்யவேண்டும். பிராதக் காலசந்தியைக் கிழக்குமுகமாகவும் மத்தியானசந்தியையும் சாயங்காலசந்தியையும் வடக்குமுகமாகவும் இருந்துசெய்யவேண்டும்.

¶ ஜெபத்திலும் ஹோமத்திலும் தானத்திலும் வேதமோதுதலிலும் தென்புலத்தார்கடன்கழித்தலிலும் பொன், வெள்ளி, தருப்பை, இவைகளைக்கையில் அணிந்திருக்கவேண்டும் பிராமணருக்கு முனையோடுங்கூடிய நான்குதருப்பைகளாலும் க்ஷத்திரியருக்கு மூன்றுதருப்பைகளாலும் வைசியருக்கு இரண்டுதருப்பைகளாலும் பவித்திரமுடியிருத்தல் வேண்டும்.

முனை அருமலுள்ளனவும் அடிவரையுங்கூடியுள்ளனவும் பவித்திரமுடியுடையனவும் பரிசுத்தமானவும் மெல்லியனவும் மங்கலகரமாயுள்ளனவுமாகிய தருப்பைகளைத் தென்புலத்தார் தேவர்கள் இருடிகள் இவர்கள் பூஜையினிமித்தம் விதிப்படிசேகரித்து வைத்துக் கொள்ளல்வேண்டும். மஞ்சணிறமுடைய தருப்பைவேள்விக்கும் பச்சை நிறமுடையதருப்பை பாகவேள்விக்கும் அடியோடுகூடியதருப்பை தென்புலத்தாருக்கும் பலவண்ணங்கூடிய சித்திரநிறத்தருப்பை வைசுவதேவாதிகருமத்துக்கும் உரியதாகும். தருப்பையின் அடியில் பிரமனும் நடுவில் விஷ்ணுவும் நுனியில்சிவனும் வசிக்கின்றூர்கள், ஆதலால் பரிசுத்தனுகி ஆவணிமாசத்து அமாவாசைதினத்தில் சுத்தமாகிய இடத்தினின்று கிழக்கு அல்லது வடக்குமுகனுகி பிரணவமந்திரத்தைஉச்சரித்து தருப்பையைக்கொய்தல்வேண்டும். வழியிலுள்ளனவும் பிணஞ்சுடுமிடத்திலுள்ளனவும் குறுக்கிட்டுத் தாண்டப்பட்டுள்ளனவும் நீர்நிலைக்கண்ணுள்ளனவும் நகத்தாற் கிள்ளப்படுவனவும் ஆகாவாம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முத்தாரத்தம் பொன்னீலம் படிகநிறப்பஞ்ச
  முகமூவைந் தம்பகமொண் பிறைமணிநீண் முடியும்
நத்தும்வா தாபயமங் குசங்குசைக பால
  நருகதைசங் காழியிணைக் கமலமுமார் கைகள்
தத்துவங்க ளிருபானுன் கினுக்கும்வா சகமாச்
  சாரிருபா னுன்குமனு வரியொளியே தனுவா
ஒத்ததெய்வந் தனைமுப்போழ் தாம்பேதம் பற்றி
  யுறவெவ்வே ருகநினைந் தேசெவித்தன் முறையே.

இ-ரை—முத்துநிறமும் பவளநிறமும் பொன்னிறமும் நீலநிறமும் படிகநிறமும் தனித்தனிபொருந்திய ஐந்துதிருமுகங்களையும் திருமுகமொன்றுக்குமும்மூன்றுகண்களாகப் பதினைந்துதிருக்கண்களையும் ஒளிபொருந்திய இளம்பிறைவிளங்காநின்றஅரதனமணிமுடியையும் யாவரும் விரும்புகின்ற வரதம் அபயம் அங்குசம் சாட்டை வெள்ளிய கபாலம் கதை சங்கு சக்கரம் உபயதாமரை இவைகள் பொருந்திய பத்துத் திருக்கைகளையும் இருபத்துநான்குதத்துவங்களுக்கும் வாசமாகப்பொருந்திய இரு

பத்துநான்குமந்திர வெழுத்தினொளியே திருமேனியாகவுமுடைய கர்யத்திரிதெய்வத்தை மூன்றுசந்தியாகாலபேதம்பற்றி சிருஷ்டி ஸ்திதி சங்காரமென்னும் முத்தொழிற்றலைவர் திருவுருவாகவேறுவேறு தியானித்து ஜபித்தல்முறைமையாகும். ()

* ஐந்து திருமுகங்களும் பத்துத்திருக்கரங்களும் பதினைந்து திருக்கண்களும் இருபத்துநான்குமந்திரவெழுத்தே திருமேனியாகவுமுடைய காயத்திரிதெய்வம் உலகிற்கு முதற்கடவுளாகிய விஸ்வகர்மாவின் திருக்கோலமாயும் மும்முதற்கடவுள் திருவுருவாயும் உள்ளதாமாதலின் முச்சந்தியின்காலபேதம்பற்றி வேறுவேறு தியானங்களுங்கூறப்பட்டன.

சந்தியாதேவதையைக் காலையில் காயத்திரி எனவும், உச்சிப்போதில் சாவித்திரி எனவும் மாலையில் சரஸ்வதி எனவும் மூவகையாகக்கூறப்பட்டது. காயத்திரி செந்நிறத்தவராயும் சாவித்திரி வெண்ணிறத்தவராயும் சரஸ்வதி கருநிறத்தவராயும் உபாசிக்கப்படுவர்.

காயத்திரிபிரமன்வடிவாம், சாவித்திரிஉருத்திரன்வடிவாம், சரஸ்வதிவிஷ்ணுவடிவாம், எனவே காலத்திற்கேற்றநாமரூபவேறுபாட்டால் உபாசிக்கவேண்டுமென ஸ்மிருதிகளிற் கூறப்பட்டுள்ளது.

காயத்திரிமந்திரங்களை ஒவ்வொருசந்தியாகாலத்திலும் தவறாமல் ஜபிக்கவேண்டும். ஆயிரமுறைஜபித்தல் உத்தமம், நூறுமுறைஜபித்தல் மத்தியமம் பத்துமுறை ஜபித்தல் அதமம்.

காயத்திரிமந்திரம் பத்துவிசைஜபிக்கப்பட்டால் மூன்றுதினத்திற்செய்த சிறுபாவங்களெல்லாமொழியும், நூறுதரம்ஜபிக்கப்பட்டால் பாவராசிகளைச்சாந்திசெய்யும், ஆயிரமுறைஜபிக்கப்பட்டால் உபபாதகங்களையெல்லாநாசஞ்செய்யும், நூறாயிரமுறை ஜபிக்கப்பட்டால் மஹாபாதகங்களையெல்லாம் ஒழிக்கும், கோடிதரம் நியமாகஜபிக்கப்பட்டால் இச்சித்தபயனெல்லாம் அடையக்கூடும்.

உலாவிக்கொண்டாயினும் நகையாடிக்கொண்டாயினும் இருபுறமும் நோக்கிக்கொண்டாயினும் இளைப்படைந்தாயினும் வேறுரையாடிக்கொண்டாயினும் தலைக்காடைசுற்றிக்கொண்டாயினும் ஒருகாலைமற்றொரு காலால் மிதித்துக்கொண்டாயினும் கைகளை மிதித்து அல்லது கட்டிக்கொண்டாயினும் அடங்கியமையாத மனத்தையுடையவனாகவாயினும் வேறுவிஷயங்களைக்கேள்விப்பட்டுக் கொண்டாயினும் பிறர் கேட்கத்தக்கதாகவாயினும் ஜபிக்கலாகாது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

செய்யநிறத் துகிலுடுத்திச் செழுமலர்மா லிகைசூடிச் செறிசெஞ் சாந்துஞ்
செய்யபொலங் கலன்களையு மணிந்தெகின மீதிவர்ந்து சிறந்த மாதைச்
செய்யமறை புகழ்காயத் திரியணங்கைத் திகழிருநான் ககவை வாய்ந்த
செய்யவுரு வாகநினைந் திரவியுதித் திடுங்காறுஞ் செவித்தல் வேண்டும்.

இ-ரை—செந்நிறவஸ்திரந்தரித்து செந்நிறமலர்மாலைபுனைந்து நிறைந்தகலவைச்செஞ்சாந்தும் செம்பொன்னாபரணங்களையுமணிந்து அம்சவாகனமூர்ந்து அழகியவே

தங்களாற் புகழப்பட்ட பெண்வடிவமாகச்சிறந்து விளங்காநின்ற காயத்திரியாகிய சந்தியாதேவதையை எட்டுவயது பொருந்திவிளங்கும் சிவந்ததிருவுருவமாகத் தியானித்துச் சூரியன் உதிக்குமளவும் ஜபிக்கவேண்டும். எ—று. (உ௩)

இந்தவித மாயிரத்தெட் டோதியின னுவத்தான மியற்றித் தெய்வ
சிந்தனையோ டஞ்சலியும் புரிந்தபிவா தனமுறையிற் செய்தல்வேண்டும்
நந்தில்கதி ரவனுச்சி மேவியபோழ் தினிலெழுந்து நன்னீ ராடிச்
சந்ததமா ரன்பினொடு மாத்தியான் னிகமுநெறி தவறு தாற்றி.

இ-ரை.—இந்தப்பிரகாரம் ஆயிரத்தெட்டுத்தரம் ஜபித்து சூரியோபஸ்தானஞ்செய்து இஷ்டதெய்வத்தியானமும் நமஸ்காரங்களுஞ்செய்து விதிப்படி அபிவாதனமுஞ்செய்தல்வேண்டும்,பின்பு எக்காலத்தும் அழிவில்லாத கிரணங்களையுடைய சூரியன் மத்தியில் வந்தசமயத்தில் எழுந்து ஸ்நானஞ்செய்து நீங்காது பொருந்தியஅன்புடனே மாத்தியான்னிகசந்தியாவந்தனமும் விதிதவறாமல்செய்து. எ—று. (உ௪)

வெண்ணிறமென் றாசணிந்து நறுந்துணர்வெண் மலர்மாலை மீதுவேய்ந்து
வெண்ணிறமால் விடையினையூர்ந் துயபாபய வரதமுடன் விளங்கு மின்னை
வெண்ணிறப்பொற் கலன்றுங்கி யொளிர்தருசா வித்திரியை விமலமேய
வெண்ணிறத்த வுருவாக நினைந்தன்பி னொடுசெவித்தல் வேண்டுமாதோ.

இ-ரை—மிருதுவாகிய வெண்ணிறவஸ்திரந்தரித்து வாசனைபொருந்திய பூங்கொத்துக்களையுடைய வெண்ணிறமலர்மாலையணிந்து வெண்பொன்னலாகிய ஆபரணங்களைப்புனைந்து பெருமையையுடைய வெண்ணிறவிருஷபவாகனமூர்ந்து அபயவரதகரங்களுடனே பெண்வடிவமாகவிளங்காநின்ற சாவித்திரியாகிய சந்தியாதேவதையைப் பரிசுத்தம்பொருந்திய வெண்ணிறத்திருவுருவாகத்தியானித்துஅன்புடனே ஜபிக்கவேண்டும். எ—று. (உ௫)

காதலொடு பாவுவயிச் சுவதேவ வோமபலி கருமம் பண்ணி
ஏதநோ யினர்பதித ரிழிஞர்நாய் கொடிகள்பலி யினிதி னிட்டு
வேதமுணர் வோர்துறவோர் பிரமசா ரியர்சீல விருத்தர் பாலர்
ஆதுலர்கர்ப்பிணியாகப் போதருவோர்க் கியன்றவுண வளித்தல் வேண்டும்.

இ-ரை—விருப்பத்துடனேகொண்டாடப்பட்ட ‡ வைசுவதேவ ஹோமமும்பலிகரணமுஞ்செய்து பின்பு துன்பமிகுந்தவியாதியாளருக்கும் பதிதருக்கும் சண்டாளருக்கும் சுவானத்துக்கும் வாயசத்துக்கும் நன்மையாகப்பலிவைத்து அதன்பின்புவீட்டிற்குவருகின்ற வேதமோதுவோர் துறந்தோர் பிரமசாரி சீலமுடைய வயோதிகர் சிறுவர்வறுமையாளர் கருப்பிணி என்னுமிவர்கள்முன்பு புசிக்கும்படி இயன்ற ஆகாரங்களைக்கொடுத்தல் வேண்டும். எ—று. (உ௬)

‡ பிரம க்ஷத்திரிய வைசியர் என்னும் மூன்றுவருணத்தார்களும் அவரவர்கள்சூத்திரப்படி வைசுவதேவத்திற்காகப் பாகஞ்செய்யப்பட்டிருக்கிற அன்னத்தை லௌகீகாக்கினியில் அக்கினிக்கும் சந்திரனுக்கும் அக்கினிஷோமர்களுக்கும் ஒன்றாகவும்

தெருவினிடைச் சென்றோன் கறக்குங்கா லளவுமதி திகளுக் காக
ஒருவருமன் புடனெதிர்பார்த் திருந்தடைந்த வதிதியொடு முறையுள்வந்து
பொருவில்பவித் திரமணிந்து கேளிரொடு மதிதியொடும் புதல்வ ரோடு
மருவுகுண திசையெனினும் வடதிசையெ னினுநோக்கி மகிழ்ந்துவைகி.

இ-ரை—பின்பு நீங்காத அன்படனே வீதியிற்சென்று ஒரு பசுக்கறக்குநேரம் வரையில் அதிதிகளுக்காக எதிர்பார்த்திருந்து வந்த அதிதிகளுடனே வீட்டில்வந்து ஒப்பில்லாத பவித்திரந்தரித்துப் பொருந்திய சுற்றத்தார்கள் அதிதிகள் புதல்வர்களுடன் கிழக்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நோக்கிச் சந்தோஷமாக இருந்து. எ—று. (உஎ)

முருக்கதவு சுரைதான்றி தாழையா லாமணக்கு மொழிமந் தாரை
எருக்கரசு தேக்காம்ப லிவற்றினிலை நீக்கியெழி லாம்பை புன்னை
வருக்கைகமு கிதழ்தெங்கு பாதிரிசண் பகங்கடம்பு மாவெட் பாலை
இருப்பையுமாங் கதலியெனிற் றண்டுரியா தடிவலப்பா லிடுதல்வேண்டும்.

இ-ரை—முருக்கிலை அத்தியிலை சுரையிலை தான்றியிலை தாழையிலை ஆலிலை ஆமணக்கிலை சொல்லுகின்ற மந்தாரையிலை எருக்கிலை அரசிலை தேக்கிலை அல்லியிலை இவைகளைநீக்கி அழகியவாழையிலை சண்பகவிலைகடம்பிலை மாவிலை வெட்பாலையிலை இருப்பையிலை இவைகள் போசனபாத்திரத்துக்கு உபயோகமாகும். வாழையிலையாகில் தண்டுரியாது அதனடி வலப்பக்கத்திலே பொருந்தப்போடல் வேண்டும். எ—று. (உஅ)

இலைதைக்குமிடத்துக் கலப்பின்றி ஒருமரத்தினிலைகொண்டே ஒரு இலை முழுதுந் தைத்தல்வேண்டும்.

விஸ்வதேவர்களுக்கும் தன்வந்திரிக்கும் குருவுக்கும் அனுமதிக்கும் பிரஜாபதிக்கும் ஆகாசபூமிகளுக்கும் ஒன்றாகவும் இவைகளின்முடிவில் ஸ்விஷ்டகிருதுவுக்கும் அந்தந்த தேவர்களைத் தியானித்துக்கொண்டு ஓமஞ்செய்து, பின்பு கிழக்குத்திக்கில் இந்திரனுக்கும் தெற்குத்திக்கில் யமனுக்கும் மேற்குத் திக்கில் வருணனுக்கும் வடக்குத்திக்கில் சோமனுக்கும் நடுவில் பிரமனுக்கும் வாஸ்து புருஷனுக்கும் வடகிழக்கில் லக்ஷுமிக்கும் தென்மேற்கில் பத்திரகாளிக்கும் பின்பக்கத்தில் சர்வாந்திரியாமிக்கும் பூமியில்விதிப்படிபலிவைத்து தேவர்களுக்குவீட்டுவாசற்படியிலும் வனதேவதைகளுக்கு உரலுலக்கையிலும் பகல் வைசுவதேவத்தில் பகலிற்சஞ்சரிக்கும் உயிர்களுக்கும் இராத்திரிவைசுவதேவத்தில் இரவிற்சஞ்சரிக்கும் உயிர்களுக்கும் முற்றத்தில்பலிவைத்துப் பிதுர்களுக்கு மிகுந்தஎல்லாவன்னத்தையும் தென்முகமாகக்காலைமடித்துக்கொண்டு உபவீதத்தை அபசவ்விய மாக்கிக்கொண்டு பூமியில் பலிவைக்கவேண்டும் அதன்பின்பு, வீட்டிற்குப்பாகஞ் செய்திருக்கிற அன்னத்தில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு நாய் பதிதன் சண்டாளன் தீராப்பிணியுள்ளவன் காக்கை கிருமிமுதலிய இவைகளுக்குச் சுத்தபூமியில் மெல்லப்பலிவைத்தல் வேண்டும்.

தருகலத்தி னெய்தெளித்துத் தெறுவிகொண்டுப் பொடுகெறியோ தனமு மிட்டு, நிகழிடக்கை யாற்கலந்தொட் டிருக்கோதி வலக்கரத்தா னீர்புரோக்கித், திகழ்வருநீர் வலஞ்சுற்றிக் கலத்தின்வலப் பாலனமைந் திடத்த மைத்துத், திகழுமனுப் புகன்றுசிறு விரலானீர் விடுத்தொன்றுச் சேர்த்து வைத்து.

இ-ரை—மேற்சொல்லிய போஜனபாத்திரங்களிலே தருதியானதை ஜலத்தினலே கழுவிப்போட்டு அதில் நெய்யினற்புரோக்ஷித்து இரும்பல்லாத அகப்பையினல் லவணம் கறிகள் அன்னம் இவைகளை ஒன்றேடொன்று கலவாமற்படைத்த பின்பு விளங்காநின்ற இடக்கை அனுமிகைவிரலால் போஜனபாத்திரத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கரத்தில் ஜலத்தைவிட்டுப் புரோக்ஷணமந்திரஞ்சொல்லி அன்னமுதலியவற்றிற் புரோக்ஷணஞ்செய்து பின்பு குற்றமற்றஜலத்தை முன்போல விட்டுக்கொண்டு பரிஷேசனமந்திரஞ்சொல்லி வலமாகப் பரிஷேசனஞ்செய்து கலத்தின் அடிப்பக்கத்தில் சிறிதுசிறிது அன்னம் நேராத ஐந்திடத்தில்வைத்துப் பிரகாசிக்கின்ற சித்திரான்னமந்திரஞ்சொல்லி வலக்கைச்சிறுவிரலால்ஜலத்தைவிடுத்து ஒன்றுசச்சேர்த்து வைத்து. எ—று. (உசு)

ஊறுகாய் பச்சடி வற்றல் வடகம் கனிகள் பணியாரங்கள்முதலியவும்கையாற் படைக்கலாம்.

தூய்நறு நெய்படைத்து மறைசொலிநீர் வலமாகச் சுற்றி நீரோற்
றேயபரி வுடனுபோ சனங்கொண்ட னுமிகைமத் திமையங் குட்டம்
ஆயவிரன் மூன்றினமு தவியொடெடுத் தெயிறுபடா தன்பி னேடு
மேயபிரா ணுகுதிசெய் தகமகிழ்வின் முறையாக விழைந்த ருந்தி.

இ-ரை—பின்பு அவ்வன்னத்தில் பரிசுத்தமாகிய நல்ல நெய்யைப்படைத்து முன்போல வலக்கையில் ஜலத்தைவிட்டுக்கொண்டு பரிஷேசனமந்திரஞ்சொல்லிவலமாகப் பரிஷேசனஞ்செய்து முன்போல ஜலத்தைக் கையில் விட்டுக்கொண்டு சுகம் பொருந்த ஆபோஜனமந்திரஞ்சொல்லி ஆபோஜனஞ்செய்து வலக்கை அனுமிகை மத்யமை அங்குஷ்டமென்னும் மூன்றுவிரல்களாலும் அன்னத்தைநெய்யுடன் பிசைந்து சிறிதுசிறிதாகவெடுத்து பிராணுகுதிமந்திரஞ்சொல்லிப் பல்லிற்படாமல்பொருந்திய அன்புடனே பிராணுகுதிசெய்து வலக்கையால் அன்னத்தைத் தொட்டுக்கொண்டு இடக்கைவிரலையெடுத்து ஜலத்தினலே அலம்பி ஆத்மமந்திரஞ்சொல்லி இருதயத்தைத்தொட்டு எடுத்துவிட்டுப் பின்புமனமகிழ்ச்சியுடனே விரும்பி வரன் முறையாகப் ‡ புசித்து. எ—று. (௩0)

புசிக்கும்போது அன்னத்தில் மயிர் ஈ எறும்பு கொசுகு முதலியன காணப்படின் அவைகளைச் சிறிதன்னத்தோடு புறத்தேநீக்கிவிட்டுச் சுத்திசெய்து புசித்தல் வேண்டும்.

---

‡ புசிப்பதற்கிடையிலே உப்பையும் நெய்யையும் படைத்துக்கொள்ளல் போஜனத்துக் குபயோகமாகாத வார்த்தைபேசல் சிரித்தல் நாய் பன்றி கோழி காகம்பருந்து கழுகு என்பவைகளையும் புலையர் ஈனர் பூப்புடையவள் என்பவர்களையும் பார்த்தல் முதலியன ஆகாவாம்;

உத்தரா போசனங்கொண் டெஞ்சியநீர் பெருவிரலா லுகுத்தெ ழுந்து
சுத்தநீர்வாய்ப் பெய்தெண்கா விடப்பா லுமிழ்ந்துகைகால் சுத்திசெய்தே
ஒத்தவா சமனஞ்செய் தருந்தியவை சீரணித்தின் புதவ வென்று
சித்தமார் மகிழ்வின்மனுச் செவித்தடைக்காய் முதலியவை தின்ற பின்னர்

இ-ரை—பின்பு முன்போல ஜலத்தைக்கையில்விட்டுக்கொண்டு உத்தராபோஜனமந்திரஞ்சொல்லி உத்தராபோஜனஞ்செய்து மிகுந்த ஜலத்தை அங்குஷ்டவிரல் நுனியால் இலையில்விடுத்து எழுந்து வெளியில்வந்து கைகழுவி ஜலம்வாயிற் கொண்டு எட்டுத்தரம் இடப்புறத்திலே கொப்பளித்து வாயையும் கைகளையும் கால்களையும் சுத்திசெய்துபின்பு ஆசமனஞ்செய்து புசித்தவையெல்லாம் ஜீரணமாகி இன்பத்தைத் தரக்கடவதென்று நிறைந்தமனமகிழ்ச்சியுடனே மந்திரஞ்செபித்து பாக்கு வெற்றிலை முதலியவைகளையெல்லாந் தின்றபின்பு. எ—று. (௬௧)

கனிகள் கிழங்குகள் வற்றல்கள் வடகங்கள் இலட்டுமுதலியபலகாரங்கள் தவிர மற்றப்பழய வுணவுகளையும் தேன் நெய் மா இவைகளைத் தவிர உண்டமிகுந்தவைகளையும் புசிக்கலாகாது.

புசிக்குங்காலத்தில் விளக்கவியில் அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி விளக்கேற்றி வருமளவும் காயத்திரியை ஜபித்துக்கொண்டிருந்து வேறுஅன்னத்தைப்படைத்துக்கொள்ளாமல் அவ்வன்னத்தையே புசித்துக் கைகழுவல்வேண்டும்

அன்னமல்லாதபண்டங்கள் புசிக்கில் நான்குதரம் வாய்கொப்பளித்து ஆசமனஞ் செய்தல்வேண்டும்.

பொங்குபுகழ் மேவறிவு நூல்களினி துணர்ந்துபகற் பொழுது போக்கிச்
செங்கதிரோ னத்தவரைப் படுபொழுதிற் புரிகடனைத் திகழு மில்லிற்
றங்குபசுத் தொழுவின்வனந் தனின்மலையி னதியினதி சங்க மத்தில்
பங்கமறு சினகாத்திற் செயவொன்றுக் கொன்றனந்த பலனுண் டாமால்.

இ-ரை.—அறிவைவிளக்காநின்ற மிகுந்த புகழ்பொருந்திய நூல்களை ஓதியும் அவற்றின் பொருள்களையுணர்ந்தும் பகற்பொழுதைக்கழித்து சிவந்தகிரணங்களையுடைய சூரியன் அஸ்தமனகிரியை அடையப்படுங்காலத்தில் செய்யவேண்டிய சாயங்காலசந்தியாவந்தன கருமங்களை விளங்காநின்ற தன்னுடையகிரகத்தில் செய்யவேண்டும். அப்படிச்செய்வதிலும் பசுக்கள் தங்குவதாகிய கொட்டிலில் செய்வது விசேஷபலனுண்டாகும். அதிலும் நந்தனவனத்திற் செய்வது விசேஷம் அதிலும் மலையிற் செய்வது விசேஷம் அதிலும் நதியிற்செய்வது விசேஷம் அதிலும் நதிசங்கமத்திற் செய்வது விசேஷம். அதிலும் குற்றமில்லாத தேவாலயத்திற்செய்வது விசேஷம். எ—று. (௬௨)

நீலநிறத் தூசுபுனைந் துவணனிவர்ந் தளிமுரல நெகிழ்ந்து தேன்பெய்
நீலநிற மாலைமிலைந் துயர்சாம மறைவடிவாய் நிகரி லாத

நீலநிறப் பொற்பணிக ளணிந்தொளிருஞ் சரஸ்வதியை நிலவுந் தூய
நீலநிற நங்கையைவா னிடையுடுத்தோன் றுந்துணையு நினைத்தல்வேண்டும்

இ-ரை—நீலநிறவஸ்திரந்தரித்து வண்டுகள் சத்திக்கமலர்ந்து தேன்பொழி கின்ற நீலநிறமலர்மாலையணிந்து ஒப்பில்லாத நீலநிறத்தையுடைய அழகிய ஆபரணங்களைப்புனைந்து கெருடவாகனமூர்ந்து மேலாகிய சாமவேதசொருபியாயும் பிரகாசிக்கின்ற பரிசுத்தமான நீலநிறம்பொருந்திய பெண்வடிவாயும் விளங்காநின்ற சரஸ்வதியாகிய சந்தியாதேவதையை ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் உதிக்குமளவும் தியானித்து ‡ ஜபிக்கவேண்டும். எ—று. (௲௩)

‡ ஜபகாலத்தில் பெரியோர்கள்வந்தால் அவர்களை நமஸ்கரித்து உபசரித்து க்ஷேமங்களை விசாரித்து அவர்கள் அனுமதிபெற்றுப் பின்பு ஜபத்தைமௌனமாகச் செய்யவேண்டும் காயத்திரிமுதலிய மந்திரஜபத்தை வாயாற்சொல்லி ஜபிப்பதாகிய வாசிகமாகச்செய்தால் ஒருபங்குபலனையும் மந்திரங்கள் அந்நியருக்குக்கேளாமல் மெதுவாக உச்சரிப்பதாகிய உபாம்சுவாக ஜபித்தால் ஒன்றுநூறுபலனையும் மந்திரத்தின் எழுத்துக்களை வரிசையாகத் தியானிப்பதாகிய மானசிகமாக ஜபித்தால் ஒன்றுஆயிரம் பலனையும் தரும்.

சகலபாபங்களையும் ஒழிக்கத்தக்கதாகிய காயத்திரியை உத்தமபக்ஷம் ஆயிரந்தரமும் மத்தியமபக்ஷம் நூறுதரமும் அதமபக்ஷம் பத்துதரமும் பிரதிசந்தியைகளிலும் தப்பாமல் ஜபிக்கவேண்டும்.

விரலால் எண்ணிஜபிப்பதினுல் ஒருபங்கும் விரலின்ரேகைகளால் எண்ணுவதினுல் எண்மடங்கும் ஜீவரத்தினங்களால் எண்ணுவதினுல் பத்துப்பங்கும் சங்கமணியினுல் நூறுபங்கும் பவளத்தால் ஆயிரம்பங்கும் ஸ்படிகத்தால் பதினுயிரம்பங்கும் முத்துக்களால் நூறுயிரம்பங்கும் தாமரைமணிகளால் பத்துலக்ஷம்பங்கும் பொன்மணிகளால் கோடிபங்கும் தர்ப்பத்தால்செய்த பவித்திரமுடியாலும் ருத்திராக்ஷங்களாலும் எண்ணிஜபித்தால் கணக்கல்லாத பங்குமானபலனைத்தரும்.

ஜபமாலையில் மணிகள் ௱அ உத்தமம், ௫௪ மத்தியமம், இருபத்தேழு அதமம்? நடுவில் சம்பாஷித்துக்கொண்டும் நடந்துகொண்டும் செய்தஜபம் நிஷ்பலம்.

பின்னாழற் கருமமுடன் வைச்சுவதே வாதிகளும் பிறங்கச்செய்து
மின்னுமதி திகளையுப சரித்துணவா தியவனைத்தும் விருப்பி னல்கிப்
பன்னுமகிழ் வொடுதானு மடிசினுகர்ந் தாசமனம் பண்ணி ஞற்றி
மன்னுதிரு மாலடியை வணங்கியிருஞ் சிறைக்கருடன் மறைசெ வித்து.

இ-ரை.—அதன்பின்பு அக்கினிகாரியங்களையும் வைசுவதேவமுதலிய நியதிகளையும் முறையாகவிளங்கும்படிசெய்து பிரகாசிக்கின்ற அதிதிகளைஉபசரித்துபோஜனம் படுக்கைமுதலானவைகளை இயன்றவளாயில் விருப்பத்துடனேகொடுத்து சொல்லப்பட்ட மகிழ்ச்சியுடனே தானும்போஜனஞ்செய்து ஆசமனம்பண்ணி நிலைபெற்ற புகழையுடைய விஷ்ணுவின் திருவடிகளைத்தொழுது பெரியசிறைகளையுடைய கருடமந்திரத்தை ஜபித்து. எ—று. (௲௪)

மறைமுடிவாழ் பசுபதியைத் தொழுதேத்தித் தலைமாட்டின்மணிவிளக்கும்
நிறைகுடமும் வைத்தணையின் மீதென்றும் வடதிசையை நீக்கி நாளும்
தறைபுகழுங் குணக்கேனுந் தெற்கேனுங் குடக்கேனுந் தலையை வைத்து
முறையெழிற்கற் புடையமக ளிரைத்தழுவித் துயில்புரிதன் முறைமை
(யாமே

இ-ரை.—வேதங்களின் சிறப்பொருளாய் விளங்காநின்ற சகலஜீவான்ம கோடிகளுக்கும் நாயகனுயுள்ள பரமபதியை வணங்கித்துதித்து தலைப்பக்கத்தில் அழகிய தீபமும் நிறைந்த நீர்க்குடமும்வைத்து படுக்கையின்மேல் எக்காலமும் வடக்குத் திக்கை ஒழித்து உலகத்தார்புகழ்கின்ற கிழக்குத்திக்கிலேனும் தெற்குத் திக்கிலேனும் மேற்குத்திக்கிலேனும் சிரசைவைத்து முறைமையாக அழகுபொருந்திய கற்புடையமனைவியைத் தழுவிக்கொண்டு நித்திரைசெய்தல் கிருகஸ்தருக்குரிய ஒழுக்கமாகும். எ—று. (௫௫)

தன்வீட்டிற் கீழ்த்திசையினும், தன்மாதுலன் வீட்டிற்றென்றிசையினும், வேற்றூரில் வதியின் மேற்றிசையினுந் தலைவைத்துறங்கவேண்டுமென்பார் பிறரும்.

நித்தியகருமமுரைத்த வத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௨௱௮௯.

பதினான்காவது

கர்ப்பாதானமுறைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நிலவுநூன் முறையே மேலா நித்திய கருமஞ் சொற்றும்
பொலிவுறு பிரமதேசு பூரண வாயுள் செல்வம்
நலமலி கல்வி யாதி நவிலுல கத்தோ ரெய்தக்
குலவுறு கருப்பா தான விதியினைக் கூற லுற்றும்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையும் விளங்காநின்ற தருமநூல்களிற் கூறியபடியே மேன்மைபொருந்திய நித்தியகருமவிதிகளைச்சொன்னேம் இனி சொல்லப்பட்ட அழகுபொருந்திய பிரமதேஜசு தீர்க்காயுள் ஐஸ்வரியம் நன்மை மிகுந்த கல்விமுதலியவைகளைப் பூமியிலுள்ளவர்கள் அடையும்படி சந்தோஷிக்கின்ற கர்ப்பாதானமுறைமையைச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர் எ—று.()

பொருவரு மாதர் பூப்புப் பொருந்துமத் தினஞ்சண் டாளி
பெருகுறு மிரண்டா நாளிற் பிரமகா தகிமூன் றுநாள்
மருவிர சகியா மென்ன வகுத்த நாண்மூன் றிரவும்
திருவ மார்மனைப் புறத்தே சேர்ந்து வைகுதல் வழக்காம்.

இ-ரை.—ஒப்பில்லாத அழகினையுடைய மாதர்கள் வீட்டுக்குவிலக்கான அன்றையத்தினத்தில் புலைச்சிக்குச்சமானமும் நிறைந்த இரண்டாந்தினத்தில் பிர்மஹத்திசெய்தவளுக்குச் சமானமும் பொருந்திய மூன்றாந்தினத்தில் வண்ணாத்திக்குச்சமானமும் என்றுசொல்லப்பட்டதனாலே அம்மூன்றிராத்திரியும் ஐஸ்வரியம்பொருந்திய வீட்டிற்கு வெளிப்புறத்திற் பொருந்தியிருத்தல் நீதியாகும். எ—று. (உ)

பூத்திடு மடநல் லாரோர் பொழுதலா லுண்டல் வேறு
பூத்தமங் கையரைத் தீண்டல் புகறிவா வுறங்கல் பேசல்
வாய்த்தநா யகன்முன் னிற்றன் மனையுள்வை குதனெற் குற்றல்
ஏத்துவெள் ளிலைபா குண்ட லிவையெலாந் தீதா மன்றே.

இ-ரை—*வீட்டுக்குவிலக்காகிய மாதர்கள்பகலிலே ஒருதரம்புசித்தலன்றிஇரண்டாந்தரம் புசித்தலும் இரவிற்புசித்தலும் வேறுவிலக்காயுள்ள மாதர்களைத்தொடுதலும் சொல்லுகின்ற பகலிலேநித்திரைசெய்தலும் கணவனுடனேபேசுதலும் கணவனெதிரேநிற்றலும் வீட்டுக்குளிருத்தலும் நெற்குத்தலும் புகழ்ச்சிபொருந்திய பாக்குவெற்றிலைதின்றலுமாகிய இவைகளெல்லாம் தீங்கைவிளைவிக்கும். எ—று. (௩)

* வீட்டுக்கு விலக்காயுள்ள மூன்றுதினமும் சரீரசுத்திக்கு வேறஒருவரைத் தண்ணீர்தரச்சொல்லி சரீரசுத்திசெய்தல்வேண்டும் தான்புண்ணியநதிகளைத் தொடுதலும் கிணற்றிலே தண்ணீர் இரைத்தலும் சமையல்செய்தலும் ஆகாது.

மண்ணுறு மகளிர் பூப்பு வைகறைப் பொழுதின் முன்பேல்
அண்ணிய முதனு ளாதி யாகிய மூன்று நாளும்
எண்ணும் வைகறையி லேனு மியம்புமற் றதன்பின் பேனும்
நண்ணுமத் தினமுன் மூன்று நாளுமவ் விதியின் வைகி.

இ-ரை.—பூமியிலுள்ளமாதர்கள் இராத்திரி பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள் வீட்டுக்குவிலக்கானால் பொருந்திய முதனாள்முதற்கொண்டு மூன்றுதினமும் மேற்சொல்லிய பதினெட்டேமுக்கால் நாழிகைக்குமேற்பட்டு மதிக்கப்படுகின்ற வைகறைப்பொழுதிலேனும் சொல்லப்பட்ட அதற்குப்பின்பேனும் விலக்கானால் பொருந்திய அன்றையத்தினமுதற்கொண்டு மூன்றுதினமும் மேற்கூறியவிதிப்படி யிருந்து. எ—று. (௪)

தானிருக்கும் இடமுதல் பதினாறுஅடிவரையில் தீட்டாகுமாதலால் தனக்குச் சமீபத்தில் விறகினாலேனும் புல்முதலியவற்றாலேனும் மறைத்துக்கொண்டிருத்தல் வேண்டும் அப்பாலுள்ளநிலத்திற்குத் தீட்டில்லை.

பாவுநான் காநு ணீரிற் படிந்துநா யகனை யெண்ணி
இரவியைத் தரிசித் துப்பின் பெழின்மனை யெய்தி யன்று
விரவு பாத்திரந் தொடாமன் மேதக விருந்தைந்தா நாள்
உரமொடு புனலின் மூழ்கி யுயர்பணிக் குரிய ராவார்.

இ-ரை.—சொல்லப்பட்ட * நாலாந்தினத்தில் சூரியோதயமாகி ஆறுநாழிகைக்குமேல் ஸ்நானஞ்செய்து தன்கணவனை மனசில் நினைத்துச் சூரியனைத் தரிசித்து வீட்டிற்குவந்து அன்றுமுழுவதும் வீட்டிலிருக்கின்ற பாத்திரங்களைத்தொடாமல் மேம்பாடாகஇருந்து ஐந்தாந்தினத்தில் மனவெழுச்சியுடனே ஸ்நானஞ்செய்து மேலாகிய கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச்செய்தற்குச் சுதந்தரமுடையவராவார்கள். எ—று. (௫)

* நாலாந்தினத்தில் தானிருந்தவிடத்தைப் பசுவின்சாணத்தினாலே மெழுகிப் பாத்திரங்களை நன்றாகத்தேய்த்துப் புண்ணியநதிகளல்லாத குளம் ஏரி வாய்க்கால் முதலிய இடங்களிலே புடவைகளைத்தோய்த்து ஸ்நானஞ்செய்தல்வேண்டும் ஸ்நானஞ்செய்தவுடன் சிறிது உப்பும் அரிசியும் புசித்துக்கணவன்முகத்திலே விழித்தல் வேண்டும் வேறுபுருஷர்முகத்தில்விழித்தலாகாது.

உத்திரத் திரைய மோண முரோகணி சதயந் தோணி
அத்த மூலஞ் சுவாதி யனுடமு நிஷேகத் திற்காம்
சித்திரை புனர்தம் பூசஞ் சென்னிமான் றலை யவிட்டம்
மத்திம மற்றை நாட்கள் வருசென்ம நாட்க டதே.

இ-ரை.—வது வரர்களுக்கு நிஷேகமுகூர்த்தஞ்செய்ய உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி திருவோணம் ரோகணி சதயம் ரேவதி அஸ்தம் மூலம் சுவாதி அனுஷமுமாகிய இந்தநக்ஷத்திரங்கள் உத்தமமாகும் சித்திரை புனர்பூசம் பூசம் அஸ்வதி மிருகசிரம் அவிட்டம் இந்த நக்ஷத்திரங்கள் மத்திமமாகும் மற்றுள்ள நக்ஷத்திரங்களும் ஜன்மநக்ஷத்திரமும் அனுஜன்மநக்ஷத்திரமும் திரிஜன்மநக்ஷத்திரமும் தீதாகும். எ—று

அட்டமி யுவா விருத்தை யவிர்துவா தசியுந் தீதாம்
சட்டிமத் திமமீ தன்றித் தகுதிதி புணர்ச்சிக் காமால்
சிட்டார்கொள் வெள்ளி புந்தி திங்கள்பொன் வார நன்மை
வட்டாளு யிறுசேய் மந்தன் வாரமும் பகலுந் தீதே.

இ-ரை.—நிஷேகமுகூர்த்தத்திற்கு அஷ்டமி விளங்காநின்ற பௌர்ணமி அமாவாசை † ரித்தை துவாதசி இந்தத்திதிகள்தீதாகும்சஷ்டி மத்திமமாகும் இவைகளன்றியுள்ளனவாகிய தகுதியான திதிகள் உத்தமமாகும் மேலோர்கள் அங்கீகரிக்கப்பட்ட சுக்கிரவாரம் புதவாரம் சோமவாரம் குருவாரம் இவைகள் நன்றாகும் வட்டவடிவாகியபானுவாரம் அங்காரகவாரம் சனிவாரம் இவைகள் தீதாகும். எ—று. (எ)

† ரித்தைதிதிகளாவன சதுர்த்தி நவமி சதுர்த்தசி.

கடகநன் மிதுனஞ் சிங்கங் கன்னிமீன் றனுது லாஞ்சீர்
இடபமும் புணர்ச்சிக் காகு மெஞ்சிய வோரை நல்லோர்
அடலுற நோக்கி னன்று மட்டமத் தெவருந் தீயர்
சுடரவன் சனிசேய் புந்தி சொலுமிலக் கினத்திற் றீதே.

இ-ரை—நிஷேகமுகூர்த்தத்திற்கு நன்மைபொருந்திய கடகம் மிதுனம் சிங்கம் கன்னி மீனம் தனுசு துலாம் சிறப்பினையுடைய விருஷபம் இந்தலக்கினங்கள் உத்தமமாகும் சுபக்கிரகங்கள் பலமுண்டாகப்பார்க்கில் மற்றுள்ளனவாகியஇலக்கினங்களும் உத்தமமாகும் லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் எந்தக்கிரகமிருந்தாலும் தீதாகும் லக்னத்தில் சூரியன் சனி அங்காரகன் புதன் என்று சொல்லப்பட்ட கிரகங்களிருந்தாலும் தீதாகும். எ—று. (அ)

இந்துநான் கொன்றேழ் பத்தி னெழிற்புத னென்பா னேழில்
உந்துசீர் வெள்ளி செம்பொ னுதயமைந் தொன்பான் றன்னில்
முந்துறு பாவ ரெல்லா மூன்றுபன் னொன்றா றாறில்
நந்து றுதினி திருக்கி னலங்கர்ப்பா தானத் திற்கே.

இ-ரை—நிஷேகமுகூர்த்தத்திற்கு சந்திரனனவன் லக்கினம் நாலாமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் இவைகளில் இருக்கினும் அழகிய புதன் ஒன்பதாமிடம் ஏழாமிடம் இவைகளில் இருக்கினும் சிறப்பினுயர்ந்த சுக்கிரன் குரு இவர்கள் லக்கினம் ஐந்தாமிடம் ஒன்பதாமிடம் இவைகளில் இருக்கினும் முதன்மையாகிய பாவக்கிரகங்களெல்லாம் கெடாதமேன்மையுடன் மூன்றாமிடம் பதினோராமிடம் ஆறாமிடம் இவைகளில் இருக்கினும் நன்மையுண்டாகும். எ—று. (கூ)

மதிகதிர்க் கேழிற் சேய்சுன் வதியினே யிருவருக் காம்
மதிகதிர்க் கிருபாற் சேய்சுன் வதியிற் கேடிரு வருக்கும்

மதிக்குமுந் நான்கி னுன்கின் மண்மகன் சுடர்நின் ருலும்
மதிக்கிரு புறத்தும் பாவர் வைகினு மாதுக் கீனம்.

இ-ரை—சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஏழாமிடத்தில் அங்காரகனும்சனியுமிருக்கில் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் வியாதியுண்டாகும் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இருபக்கத்திலும் அங்காரகன் சனி இருக்கில் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அழிவுண்டாகும் சந்திரனுக்குப்பன்னிரண்டாமிடத்திலும் நாலாமிடத்திலும் அங்காரகன் சூரியனிருக்கிலும் சந்திரனுக்கு இருபக்கத்திலும் பாவர்கள் இருக்கிலும் பெண்ணுக்கு மரணமுண்டாகும். எ—று. (௧0)

உற்றிடு மடநல் லார்பூத் துதகமா டியநாண் முன்னஞ்
சொற்றபன் னிரண்டு நாளுஞ் சூலுறுங் கால மாகும்
மற்றதி லிரட்டை நாளாண் வயங்குறு மொற்றை நாள்பெண்
வெற்றிகொண் மகவை வேண்டி விதித்திடு காலந் தேர்ந்து.

இ-ரை.—பேதமைக்குணம்பொருந்திய மாதர்கள் வீட்டுக்குவிலக்காகி ஸ்நானஞ்செய்ததினமுதல் சொல்லிய பன்னிரண்டுதினமும் கருப்பமுண்டாகின்ற காலமாகும் அத்தினங்களில் இரட்டைநாட்களிற் கருத்தரிக்கில் ஆண்குழந்தையும் விளங்குகின்ற ஒற்றைநாட்களிற் கருத்தரிக்கில் பெண்குழந்தையுமுண்டாகும் ஆதலால் ஜயம்பொருந்திய ஆண்குழந்தையை விரும்பி விதிக்கப்பட்டகாலங்களைத் தெரிந்து கொண்டு. எ—று. (௧௧)

பன்னியை யாசம் பத்திற் பதிகூடும் படிசெய் நாளிற்
பன்னியும் பதியு நீரிற் படிந்துபுத் துடைகள் வேய்ந்து
பன்னிய மலர்த்தார் சாந்தம் பணிகள் பொற்புற வணிந்து
பன்னியார் வலன்றன் வாம பாகத்தி லிருந்த பின்னர்.

இ-ரை.—முதலில் நாயகியை நாயகன் தழுவும்படிசெய்யப்பட்ட நிஷேகமுகூர்த்ததினத்தில் நாயகியும் நாயகனும் ஸ்நானஞ்செய்து புதியவஸ்திரங்கள் தரித்து நெருங்கியமலர்மாலைகள் சந்தனம் ஆபரணங்கள்முதலியவைகளை அழகு பொருந்த அணிந்து நாயகியை நாயகன் இடதுபக்கத்தில் இருக்கும்படிசெய்து அவ்வாறு அவ்விருவரும் கிழக்குமுகமாக இருந்தபின்பு. எ—று. (௧௨)

அருண்மிகு குரவன் புண்ணி யாகவா சனநன் காற்றி
ஒருவருங் கும்ப பூசை யுஞற்றுபு வோமஞ் செய்து
பொருவரு மாசீர் வாதம் புரிந்தபின் மகிழ்ச்சி பொங்க
இருவரு மிரவிற் பாற்சோ றின்புற வருந்தல் வேண்டும்.

இ-ரை.—தயாளகுணமிகுந்த புரோஹிதர் புண்யாஹவாசனம் நீங்காத பெருமையையுடைய கலசபூசை ஓமம்வளர்த்தல் உதகசாந்திமுதலிய கிரியைகளையெல்லாஞ் செவ்வையாகச்செய்து ஆசீர்வாதம்பண்ணியபின்பு மனமகிழ்ச்சியோங்க அன்றிரவில் அவ்விருவரும் பாலும் அன்னமும் இன்பத்துடனே புசித்தல்வேண்டும். எ—று. (௧௩)

சிலைநுதற் கருங்கட் செவ்வாய்ச் சிற்றிடை நாபி தன்னிற்
றலைமகன் வலக்கை வைத்துச் சவுதரி சனமென் றோதும்
உலைவின்மா மனுவை யோதி யுவந்திரு வோரு மாரன்
கலைவழி விழைவி னின்பக் கலவிசெய் திடுதன் மாண்பே.

இ-ரை.—அதன்பின்பு கேளிக்கிரகத்தில் பலதானமுதலிய வெல்லாஞ் செய்து வில்லையொத்தபுருவங்களையும் கரியகண்களையும் சிவந்தவாயையும் நுண்ணிய இடையையுமுடைய நாயகியினது நாபிஸ்தானத்தில் நாயகனது வலதுகையைவைத்து சவுதரிசனமென்று சொல்லப்பட்ட கெடாத மகாமந்திரத்தைச்சொல்லியபின்பு மகிழ்ந்து மன்மதனூலின்படி நாயகிநாயகனிருவர்களும் விருப்பத்துடனே இன்பம் பெருகும்படியான புணர்ச்சிமுதலிய போகங்களை அனுபவிப்பது முறையாகும். எ—று.()

கலவிசெய் யிரவின் விந்து கலந்துநீர் மயமாய்ப் பின்பு
குலவுறு மேழா நாளிற் குமிழியாய் முப்பா னாளின்
இலகுபிண் டமுமாய்த் திங்க ளிரண்டினிற் சென்னி தோன்றி
நிலவிய மூன்று மாச நிகழ்த்துகால் கைக ளுண்டாய்.

இ-ரை.—இவ்வாறு நாயகிநாயகனிருவரும் இராக்காலத்தில் புணர்ச்சி செய்யும்போது சுக்கிலமானது சுரோணிதத்துடனேசேர்ந்து ஜலமயமாகிப்பின்பு சந்தோஷிக்கின்ற எழாந்தினத்தில் குமிழியாகி முப்பதாந்தினத்தில் விசாலமானபிண்டமாகி இரண்டாமாதத்தில் அப்பிண்டத்திற்குச் சிரசுண்டாகி விளங்காநின்ற மூன்றுமாதத்தில் சொல்லப்பட்ட கால்களுங்கைகளுமுண்டாகி. எ—று. (௧௫)

மதிநான்கின் விரல்க ளுண்டாய் வயங்குபின் பாக மைந்தாம்
மதியினுண் டாகி யாறு மதியினிற் கண்கா துண்டாய்
மதியேழிற் சீவ னுண்டாய் வழுத்திலக் கணங்க ளெல்லாம்
மதியெட்டி னுண்டா யொன்பான் மதியினில் ஞான முண்டாய்.

இ-ரை.—நாலாமாதத்தில் கைகால்களில் விரல்களுண்டாகி ஐந்தாமாதத்தில் விளங்குகின்ற பின்பாகங்களுண்டாகி ஆறுமாதத்தில் கண்களுங்காதுகளுமுண்டாகி ஏழாமாதத்தில் பிராணனுண்டாகி எட்டாமாதத்தில் சொல்லப்பட்ட அவயவங்களெல்லாமுண்டாகி ஒன்பதாமாதத்தில் அறிவுண்டாகி. எ—று. (௧௬)

மதியொரு பதிற்பார் வந்த மகவினுக் கறமுன் னாகத்
துதிசெய்நாற் பயனு மெய்தச் சொலுங்கருப் பாதானாதி
அதிபுகழ்க் கிரியை யாவு மவரவர் சூத்தி ரத்தின்
விதிவரன் முறையே செய்ய வேண்டுமென் றுரைப்பர் மிக்கோர்.

இ-ரை—பத்தாமாதத்தில் பூஸ்பரிசமாகப்பிறந்த குழந்தைக்குத் தர்மார்த்தகாமிய மோக்ஷமென்று புகழப்பட்ட புருஷார்த்தமாகிய நான்கு பிரயோஜனத்தையும் அடையும்படி சொல்லப்பட்ட கர்ப்பாதானமுதலாகிய புகழ்மிகுந்த சமஸ்காரங்களையெல்லாம் அவரவர்களுக்கு விதித்த சூத்திரப்பிரகாரமே செய்யவேண்டுமென்று மேலோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௧௭)

கர்ப்பாதானமுரைத்த வத்தியாயம் - முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௩௱௬.

பதினைந்தாவது

பும்ஸவனமுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொருவார் கலிவெண் டிரைசுருட்டும் பொலிவார் மகரா லயம்புடைசூழ்
தருவார் புவியிற் றிகழ்கருப்பா தான விதியை யினிதுரைத்தாம்
கருவார் தருமம் மகவினுக்குக் கருது மாயுள் விருத்திபெறப்
பெருகா தரவிற் புரிந்திடும்புஞ் சுவன விதியைப் பேசிடுவாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே கரையோரங்களில் மோதுகின்ற மிகுந்த வோசையுடனே வெண்மையாகிய அலைகளானது சுருட்டும்பொலிவுநிறைந்த கடலை மருங்கிற் சூழக்கொண்டு மா பலா தெங்கு கமுகு முதலிய பலவிருக்ஷங்கள் நெருங்கிய சோலைகளையுடைய பூமியினிடத்துள்ளவர்கள் விளங்காநின்ற வேதவிதிப்படி செய்தற்குரிய கர்ப்பாதானவிதியை இனிமையாகச்சொன்னோம்; இனி அந்தக்கர்ப்பாதானக்கிரியையினால் மாதாவினது கர்ப்பாசயத்துள் தங்கிவளர்கின்ற சிசுவானது யாவருங்கருதுகின்ற தீர்க்காயுளைப்பெறும்பொருட்டு மிகுந்த அன்புடனே செய்யும் பும்ஸவனக்கிரமங்களைச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

ஆற்று புஞ்சு வனமதிமூன் றாறெட் டொருநான் கிவற்றொன்றில்
ஏற்ற மிகுமுற் பக்கமதி னிருத்தை யுவாக்க ளலாத்திதியில்
போற்று சுபர்கள் வாரமதிற் பூசமோண மெனுநாளிற்
சாற்று மிதுனங் கன்னிகுளி ரலாத தகுவே றிலக்கினத்தில்.

இ-ரை—விதிப்படி செய்தற்குரிய பும்ஸவனமென்னுங்கிரியையானது கருத்தரித்த மூன்று நான்கு ஆறு எட்டு என்றுசொல்லப்படுகின்ற மாதங்களில் ஒன்றில் சந்திரன் சோடசகலைகளாலும் வளருதற்குரிய பூருவபக்ஷத்தில் சதுர்த்தி நவமி சதுர்த்தசி பௌர்ணமி அமாவாசை நீங்கிய மற்றைய திதிகளில் யாவராலும் கொண்டாடப்படும் திங்கள் புதன் வியாழம் வெள்ளி என்றுசொல்லப்பட்ட சுபவாரங்களில் பூசம் திருவோணமுதலிய சுபநக்ஷத்திரங்களில் மேலோர்சொல்லிய மிதுனம் கன்னி கடகம் இவைகளொழிந்த மற்றையசுபலக்கினங்களில். எ—று. (உ)

மதிக்கு நவிலுச் சாட்சிசுப வருக்க மாதி பலமுறவே
உதிக்குஞ் சுபர்கேந் திரகோணத் துறமூன் றாறிற் பன்னொன்றிற்
கதிக்கும் பாவ ரினிதிருக்கக் கருதட் டமஞ்சுத் தமதாகத்
துதிக்கும் புஞ்சு வனக்கிரியை தொடங்கி முடித்த லுத்தமமே.

இ-ரை—சந்திரனவன் சொல்லுகின்ற உச்சஸ்தானத்தையாவது ஆக்ஷிஸ்தானத்தையாவது நவாமிசமுதலிய சுபவருக்கங்களிலே யாவது பலத்திருக்கவும் சுபக்கிரகங்கள் தங்கள் தங்கள் கேந்திரகோணஸ்தானங்களிலே பொருந்தியிருக்கவும் பலத்தபாவக்கிரகங்கள் மூன்றுமிடம் பதினோராமிடம் எட்டாமிடம் இவைகளில்இருக்கவும் யாவருங்கருதுகின்ற எட்டாமிடஞ் சுத்தமாயிருக்கவும் புகழ்ந்துணாக்கப்பட்ட பும்ஸவனம் என்னுஞ் சடங்கினை ஆரம்பித்துச்செய்துமுடித்தல் உத்தமமாகும் எ-று.

ஓரா யிரநூற் றெட்டிவற்றி னொன்று குதியோ மஞ்புரிந்து
பாரார் வடத்தின் முகிழுழுந்து பால்விட் டாக்கித் துகிலினிட்டு
நோராத் தெரிவை தனையிருத்தி நிகழ்த்தி மனுவை மகன்வேண்டில்
வாரார் வலநா சியிற்பிழிந்து வாயா லுன்பித் திடல்வேண்டும்.

இ-ரை—ஒப்பில்லாத ஆயிரமாகுதியினாலாவது நூற்றெட்டாகுதியினாலாவது அக்கினியில் ஓமஞ்செய்து பூமியிற்பொருந்திவளர்கின்றஆலமரத்திலுள்ளமொக்குளையும் உழுந்தையும் அம்மியில்வைத்துப் பால்விட்டு அரைத்து சுத்தமாகத்தோய்த்துலர்த்திய வெண்மையாகிய வஸ்திரத்தில்வைத்து முடிந்து கருப்பவதியை கிரமப்படி கிழக்குமுகமாக நிமிர்ந்திருக்கச்செய்து அதற்குரியமந்திரங்களைச்சொல்லி ஆண்குழந்தையைவிரும்பினல் நேர்மைபொருந்திய வலதுநாசியிலும் பெண்குழந்தையை விரும்பினல் இடதுநாசியிலும் பிழிந்து அதை இரேசகபூர்வகமாகவாங்கி வாயினலுண்ணச்செய்தல்வேண்டும். எ—று. (௪)

துன்னு கருப்பா தானமுதற் சுபகன் மங்க ளவற்றினையும்
மின்னு புவியிற் புரிவதன்முன் மிளிர்விக் கினேச பூசைநனி
பன்னு மன்பி னெடுபுரிந்து பகர்புண் ணியாக வாசனமும்
முன்னு பிதிர்கண் மகிழ்நாந்தீ முகமும் புரிந்து செயல்வேண்டும்.

இ-ரை—புகழ்பெற்றுவிளங்காநின்ற பூமியினிடத்தில் பொருந்தியயாவருக்கும் மங்களகரமுண்டாகச் செய்வதான கருப்பாதானமுதலிய சோடசக்கிரியைகளையும் செய்யத்தொடங்குவதன்முன் அக்கருமங்கள்இடையூறின்றி முடிதற்பொருட்டுவிளங்காநின்ற் விக்கிநேஸ்வரபூஜை மிகுந்த அன்புடனேசெய்து அதற்குமேல் புண்யாஹவாசனமும் பிதுர்க்களுக்கு மகிழ்ச்சியைத்தருவதான நாந்தீமுகமென்னுங்கிரியையுஞ் செய்து மேற்சொல்லிய கிரியைகளைச்செய்தல் முறைமையாகும். எ—று. (௫)

† நாந்தீமுகமாவது சுபகருமங்கள் செய்யத்தொடங்குவதன் முன் பிதுர்க்களைக் குறித்துச் செய்யுமொருவகைச்சிரார்த்தம்.

மருவு புஞ்சு வனமொடுசீ மந்தஞ் சவுள முபநயனம்
பெருகு விரத மணத்தினுக்குப் பிரதி சாஞ்செய் திடல்வேண்டும்
ஒருவி ஞம காணஞ்சோ றூட்ட லென்னும் வினைக்கொழித்துத்
திருகின் மற்றைக் கிரியைகட்குச் செந்தீ வளர்த்தல் விதியாமே.

இ-ரை—செய்தற்குரிய பும்ஸவனம் சீமந்தம் சவுளம் உபநயனம்மனேபீஷ்டங்களெல்லாம் நின்றவேறுநிமித்தம் அனுஷ்டிக்கும் விரதங்கள் விவாகமென்றுசொல்லப்

பட்ட இந்தக்கருமங்களுக்கெல்லாம் இரக்ஷாபந்தனஞ்செய்து கொள்ளல்வேண்டும் இன்றி யமையாமற்செய்யவேண்டுவனவாகிய நாமகரணம் அன்னப்பிராசனம் என்னு மிவ்விரண்டு கிரியைகளுக்குநீக்கி மாறுபடுதலில்லாத மற்றையகிரியைகளுக்கெல் லாம் விதிவழுவாமல் அக்கினிவளர்த்து ஓமஞ்செய்யவேண்டுவது முறைமையாகும். எ—று. (சு)

மனைவி கருப்ப முறிற்கணவன் வழங்கு தான மேற்றிடுதல்
புனையா லயமில் லாதிவிழாப் புரித லின்றோர்க் கலாதசுப
வினைகள் புரிதல் கடலாடன் மேவு தீர்த்த யாத்திரைகள்
வனையும் பிறர்பாற் புசித்தறலை மழுக்க லிவைக டூதாமே.

இ-ரை—மனைவியானவள் கர்ப்பவதியா யிருக்குங் காலத்தில் அக்கர்ப்பவதி யின் கணவன் நல்லபயனை அடையவேண்டுமென்னும் விருப்பத்துடனேஒருவர்செய் கின்ற தானங்களைப்பெறுதலும் இஷ்டதேவதைகளை வழிபடுவதற்குரிய தேவாலயங் களையும் வீடுமுதலியவைகளையும் நூதனமாகச்செய்தலும் திருவிழாமுதலிய விசேஷ கருமங்களைச்செய்தலும் தன்னைப்பெற்ற தாய்தந்தையர்களுக்கல்லாமல் மற்றையோர் களுக்கு உத்தரகிரியைமுதலிய கருமங்களைச்செய்தலும் புண்ணியகாலங்களில் சமுத் திரஸ்நானஞ்செய்தலும் புண்ணியபலனைத்தருவதான தீர்த்தயாத்திரை செய்தலும் பந்துக்களாயுள்ளவர்கள் வீட்டிலும் விருந்தினராகச்சென்றுபுசித்தலும்க்ஷவரஞ்செய்து கொள்ளலுமாகிய இக்கருமங்களெல்லாம் துன்பத்தைத்தருமென்று மேலோர்சொல் லுவார்கள். எ—று. (எ)

பும்ஸவனமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௫௱௭.

பதினாறாவது

சீமந்தமுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அஞ்சொன் மடமங் கையர்மயலற் றறிவி னோங்கு சுவிரதனே
மஞ்சு திகழுங் மகவினுயிர் வளரப் பலசெல் வமுமோங்க
எஞ்சு றாத புகழ்மருவு மினிய மறையி னெறியியற்றும்
புஞ்சு வனத்தின் விதிபகன்றும் புகழ்ச்சீ மந்த முரைத்திடுவாம்.

இ-ரை.—கேட்பவர்களுக் கினிமையைத்தருவதான மதுரவார்த்தைகளையுடைய மங்கைப்பருவப் பெண்களிடத்துண்டாகுங் காமமயக்கத்தை யறவேயொழித்து மேலாகிய ஞானசாதனங்களை விசாரித்தறியுமெய்யறிவினையுடைய சுவிரதமகாராஜனே கேளும் இதுவரையும் கர்ப்பாதானக்கிரியைபெற்று மாதாவினுதரத்தில் அழகுடனே வளர்கின்ற சிசுவினுயிரானது நாளுக்குநாள் விருத்தியாகிவளரவும் பலவகைச்செல்வங்களும் பெருகவும் கெடாதகீர்த்திபொருந்திய இன்பத்தைத்தருகின்ற வேதவிதிப்படிச்செய்யும் பும்ஸவனக்கிரமத்தைச்சொன்னோம்; இனிப்புகழ்பெற்ற சீமந்தக்கிரியை நடத்தவேண்டிய விதியையுஞ் சொல்லுவாமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (௧)

திங்க ணான்கா றெட்டினிற்சீ மந்தஞ் சகடுத் திரமுன்று
துங்க மதியத் தம்புனர்தந் தோணி யோணம் பூசமதிற்
பங்க மறுநல் வாரமுதற் பக்கமதனிற் சதுர்த்தி சட்டி
தங்கு நவமி யுவாக்கடுவா தசியு நீக்கி வருதிதியில்.

இ-ரை.—மேன்மைபொருந்திய சீமந்தமென்னுங்கிரியையானதுகருப்பமடைந்த நான்காமாதம் ஆறாமாதம் எட்டாமாதம் என்னுமிவற்றுள் யாதாமொருமாதத்தில் உரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி மேலாகிய மிருகசீரிடம் அஸ்தம் புனர்பூசம் இரேவதி திருவோணம் பூசமுதலிய நல்லநக்ஷத்திரத்தில் குற்றமற்ற சுபர் வாரங்களில் பூருவபக்ஷத்திற் பொருந்திய சதுர்த்தி சஷ்டி நவமி பௌர்ணமி அமாவாசை துவாதசியென்னுந் திதிகளை நீக்கி மற்றைய திதிகளில். எ—று. (௨)

சொற்ற வரிதே ளாகாவாஞ் சுபர்க ளிருக்க நோக்கமுற
மற்ற வோரா நலமாகு மதியட் டகம்வை ஞசிகமேல்
உற்ற சென்ம நாட்களுட னுரைமுன் றைந்தேழ் தீதாகும்
வெற்றி பொலியட் டமசுத்தி வேண்டுஞ் சீமந் தத்தினுக்கே.

இ-ரை.—வெற்றியைத்தருவதான சீமந்த முகூர்த்தத்திற்கு சோதிடநூல்களின் விதிப்படி சிங்கலக்கினமும் விருச்சிகலக்கினமும் தீதாகும், சுபக்கிரகங்கள் இருப்பதும் பார்ப்பதுமான மற்றையலக்கினங்கள் நன்மையாகும், பொருந்தியகருப்பவதியின் ஜன்மநக்ஷத்திரமும் அநுஜன்மநக்ஷத்திரமும் திரிஜன்மநக்ஷத்திரமும் மூன்றாநக்ஷத்திரமும் ஐந்தாநக்ஷத்திரமும் ஏழாநக்ஷத்திரமும் வயினாகத்தாரையாகிய இருபத்திரண்டாநக்ஷத்திரமும் சந்திராஷ்டகமும் தீதாகும்; முகூர்த்தலக்கினத்துக்கு எட்டாமிடஞ் சுத்தமாகவு மிருக்கவேண்டும். எ—று. (௩)

புதுவத் திரமா தியவணிந்து புகழ்நூற் றெட்டா குதிபுரிந்தே
அதவுக் கொம்பு பசுந்தருப்பை யடற்பன் றியின்முள் ளிவைகூட்டி
வதுவை மகளு பியிற்கணவன் வைத்து மனுவை யுரைத்ததனில்
இதமா நேரே யுச்சிவரை யிழுத்து வகிர்தல் விதியாமே.

இ-ரை.—கருப்பவதியான சீமந்தப்பெண்ணை நூதன வஸ்திராபரணங்களாலே அலங்கரித்து விதிப்படியலங்கரித்த விடத்திலிருக்கச்செய்து தேவர்களுங் கொண்டாடும்படி நூற்றெட்டாகுதியால் அக்கினியில்ஓமஞ்செய்து அத்திக்கொம்புபச்சைத்தருப்பை வலியமைந்தபன்றியின்முள் இவைகளைக்கற்றையாகச்சேர்த்து கணவன் கையால் அப்பெண்ணினுடைய நாபிஸ்தானத்தில்வைத்து அதனின்றும் வேதமந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு இதமாக நேரே உச்சிவரையிலிழுத்து வகிர்தல் விதியாகும். எ—று. (௪)

கேத மறவே ழாமதியிற் கிரக மேழைப் பூசித்து
மாத மோரெட் டினிலோணம் வயங்கு ரோணி யெனுநாளில்
ஓது சுபர்கள் வாரமதி லுறுசீர் பொலிமுற் பக்கமதிற்
றீதி லேழாம் பன்னிரண்டாந் திதியிற் காலை நண்பகலில்.

இ-ரை.—கருப்பமடைந்த ஏழாவதுமாதத்தில் துன்பமுண்டாகா திருக்கும்படி இராகு கேது நீங்கலாகிய சப்தக்கிரகங்களையும் முறையாகப்பூசித்து எட்டாவதுமாதத்தில் விளங்காநின்ற திருவோணம் உரோகணி யென்றுசொல்லப்பட்ட சுபநக்ஷத்திரத்தில் திங்கள் புதன் வியாழம் வெள்ளியென்றுசொல்லப்படும் சுபர்வாரங்களில் சிறப்புப்பொருந்தி விளங்காநின்ற பூருவபக்ஷத்தில் குற்றமில்லாத சத்தமி துவாதசி யென்னுந்திதியில் காலையிலாவது உச்சிக்காலத்திலாவது. எ—று. (௫)

தீங்கு ருது வளர்கருப்பந் தீர்க்கா யுளையெய் துபுவாழ
ஆங்கு திருவாழ் மிறத்தரியை யாவா கனஞ்செய் தருச்சித்தே
ஒங்கு நூற்றெட் டாகுதிசெய் தொளிரெண் பிரம சாரியனாப்
பாங்கு பெறச்சோ றூட்டிதலே பாவு விண்டு பலியாகும்.

இ-ரை.—தாயின்கருப்பத்திற் றீமையடையாது வளருஞ்சிசுவானது தீர்க்காயுளைப்பெற்றுயிர்வாழவேண்டி சர்வான்மாக்களிடத்துங்கிருபைவைத்தருளுகின்றஇலக்குமிவசிக்கின்ற வக்ஷஸ்தலத்தினை யுடைய விஷ்ணுவைக்கிரமப்படி ஆவாகனஞ்செய்து அருக்கியமுதலிய சோடசோபசாரங்களாலும் பூசித்து உயர்வாகியநூற்றெட்

டாகுதிமந்திரத்துடன் ஓமஞ்செய்து பிரமதேஜசுடன்விளங்கும் பிரமசாரிகளெண்மர் களையழைத்து அவர்களுள்ளமகிழும்படி முறைமையாக அன்னம்படைத்துண்ணச் செய்வது யாவருமதிக்கத்தக்க விஷ்ணுபலியென்னுங் கிரியையாமென்று மேலோர் சொல்லுவர். எ—று. (௬)

சூத கமனை புகவத்தஞ் சோதி யுருளுத் திரத்திரையம்
கோதி லனுடம் பயரோணங் குதிரை புனர்த மதிநாளில்
ஏதி லருக்கன் சேயுமொழித் திலகு வாரத் திருத்தையலாக்
காத லுறுநற் றிதியின்விட்டி காணங் கும்பந் தேணீக்கி.

இ-ரை.—கருப்பவதியை பிரசவஸ்தானத்தில் சேர்ப்பதற்கு அஸ்தம் சுவாதி உரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி குற்றமற்ற சித்திரை திருவோணம் அசுவதி புனர்பூசம் மிருகசீரிஷம் என்னுநக்ஷத்திரங்களில் ஞாயிறு செவ்வாயொழித் துள்ள மற்றையவாரங்களில் சதுர்த்தி நவமி சதுர்த்தசி திதிகளுமல்லாமல் யிச்சிக்கத் தகுந்த மற்றையதிதிகளில் சகுனி சதுஷ்பாதம் நாகவம் கிமிஸ்துக்கினம் என்னும் விஷ்டிகரணங்கள் நீங்கிய மற்றைக்கரணங்களில் கும்பம் விருச்சிகமென்னு மிலக்கி னங்களையுநீக்கி. எ—று. (எ)

நன்மை பெருகு மிலக்கினத்தி னலமார் சன்ம விராசியினுக்
கன்மை யாறெட் டீராறு மலாத விராசித் தானத்தின்
மென்மை யுறவே மெழுகியதில் விளம்பு கடுகெள் ளைப்புகைத்துத்
தொன்மை மகளி ரொடுமெங்கட் சூற்கொண் மாதை யிருத்துகவே.

இ-ரை.—நன்மைகளைத்தருவதான மற்றச்சுபலக்கினங்களில் கருப்பவதியினது நன்ஸமபொருந்திய ஜன்மராசிக்குப்பொருத்தமில்லாத ஆறு எட்டு பன்னிரண்டாம் ராசிகளல்லாத மற்ற இராசிஸ்தானங்களிலொன்றை கோமயாதிகளால் மிர்துவாக மெழுகி அவ்வீடத்தில் கடுகு எள் இவ்விரண்டினையும் நெருப்பின்மேலிட்டுப் புகை யச்செய்து பின்புவயதின்முதிர்ந்த சுமங்கலிகளுடனே கருப்பவதியை அவ்விடத்தி லிருக்கச்செய்யவேண்டும். எ—று. (அ)

சீமந்தமுறைத்தவத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௫௱ய்அ.

பதினேழாவது

சாதகன்மமுரைத்த வத்தியாயம்.

கலிநிலைத்துறை.

தூய வாகிய சீமந்த விதியினைச் சொற்றும்
ஆயு ளாதிய பற்பல பாவமு மறிந்து
நேய மிக்குறச் செய்வன செய்திட நிகழ்த்தும்
பாய சீர்பொலி சாதகன் மத்தியல் பகர்வாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! இதுவரையில் பரிசுத்தமாகிய சீமந்தவிதியைச்சொன்னோம் இனி கருப்பமுதிர்ந்து பிறந்தகுழந்தையின் ஆயுர்த்தாயமுதலிய பன்னிரண்டுபாவங்களையுமறிந்து அவற்றின் பலாபலன்களுக்குத் தக்கபடிநடந்துகொள்வதற்கு அன்பின்மிகுதியாற் செய்யவேண்டியவைகளைத் தெரிவிக்கும் மிகுந்த சிறப்பினையுடைய சாதகன்மக்கிரியையின் றன்மையைச்சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

மகவு யிர்த்தவப் போழ்தினிற் றந்தையுண் மகிழ்ந்து
பகலி ராவெனி னும்புனன் மூழ்கிநற் பசுபொன்
தகுசெ ழும்புவி யாடைநெல் லாதிய தானம்
புகர றத்தனி செய்துபின் வினைகளும் புரிக.

இ-ரை.—கருப்பவதி குழந்தையைப்பெற்றகாலத்தில் பிதாவானவன் மனமகிழ்ச்சியடைந்து பகற்காலமாயிருந்தாலும் ஸ்நானஞ்செய்யக்கூடாத இராக்காலமாயிருந்தாலும் நதிமுதலிய நீர்நிலைகளில் திடீரெனக்குதித்து ஸ்நானஞ்செய்து நன்மையைத்தருவதான கோதானம் சுவர்னதானம் செந்நெல்விளையத்தக்க பூதானம் வஸ்திரதானம் நெல்விரைதானமுதலிய பலவாகியதானங்களையும் பலகுற்றங்களுநீங்கும்படிமகிழ்ந்து செய்து மற்றுஞ்செய்யவேண்டிய கிரியைகளையும் விதிப்படிசெய்யக்கடவன். எ-று.

* திடீரெனக்குதித்தற்குக் காரணம் அக்காலத்துமேலே யெழுநீர்த்திவலைகளுக்குப் பிதுர்க்கள் கையேற்றுநிற்பாராதலின் நீர்த்திவலைகள்மேலே செல்லுதற்கென்க.

மக்க டோன்றிய காலத்தின் வானவர் மகிழும்
எக்கி யத்தினிற் கிரகண காலத்தி னியம்பும்
மிக்க சங்கிர மணத்தினி லிரவினீர் விழைவிற்
புக்கி யாடுதல் விதியென மிருதிகள் புகலும்.

இ-ரை.—புத்திரோற்சவமானகாலத்திலும் தேவர்கள்மகிழும்படி யாகங்களைச் செய்கின்றகாலத்திலும் சந்திரசூரிய கிரகணங்களிலும் மிருதியாகச் சொல்லப்பட்ட

பன்னிரண்டுமோதப் பிரவேசபுண்ணிய காலங்களிலும் இராக்காலத்தில் நீரிலிறங்கி ஸ்நானஞ்செய்வது விதியென்று தருமசாஸ்திரங்க ளெடுத்துச்சொல்லும். எ—று. ()

நாட்ட மார்முலைப் பால்கொடுத் திடுதன்முன் னுளம்
வீட்டு முன்குழந் தையினுறுப் பனைத்தையும் வெந்நீர்
ஆட்டி மைந்தனன் முகம்பிதா வன்பொடு கண்டு
தேட்ட மாரும் பொருளெனக் களிமகிழ் சிறந்து.

இ-ரை—விருப்பத்தையுடைய குழந்தைக்கு முலைப்பால் அருத்துவதற்கு முன்னும் நாபிக்கொடியைச் சேதிப்பதற்குமுன்னும் அந்தக்குழந்தையின் சர்வாங்கமும் நனையும்படி வெந்நீரினால் ஸ்நானஞ்செய்வித்துப் பின்பு அக்குழந்தையின் முகத்தைப்பிதாவானவன் உள்ளன்புடனேபார்த்துத் தான் நெடுநாளாகத்தேடிய கிடைத்தற்கரிய பெருஞ்செல்வமிதுவென்று மிகுந்தமனமகிழ்ச்சியுடையவனாகி. எ—று. (௪)

வெல்ல நெய்பசுந் தேன்விராய்க் குழவிமென் னாவில்
ஒல்ல நீவியே கழுவுபு வொளிர்வல முலைப்பால்
செல்ல வூட்டிநீ ளுந்தியி னாளத்தைச் சிதைத்து
நல்ல வோலையிற் சாதகம் பொறித்தனல் விதியே.

இ-ரை—வெல்லம் நெய் செழுமையாகிய தேன் இம்மூன்றையுமொன்றாகக் கலந்து மத்தித்து அதனை அக்குழந்தையின் மிருதுவாகிய நாவிற்படும்படி தடவிப் பின்பு தாயினது அழகுபொருந்திய வலதுஸ்தனத்தைச் சுத்தமாகியநீரினாலலம்பி அந்தக்குழந்தைக்கு வயிறுறவுண்பித்து அதன் நாபிக்கொடியைத் துண்டித்து அதன் பின்பு புள்ளிமுடங்கல் முதலியவைகளில்லாத அழகிய தாளிப்பனையோலையில்சாதகமெழுதுவித்தல் விதியாகும். எ—று. (ரு)

மூன்றைந் தேழெனுந் தினங்களின் மொழிதருங் குழந்தை
ஏன்றி டும்படுக் கையைநனி யுதறியிட் டிடுக
ஆன்ற நாளொரு பதிற்பிதா வபனநன் காற்றித்
தோன்று நீர்படிந் தொருபதி னொன்றெனச் சொலுநாள்.

இ-ரை.—மேற்சொல்லிய அக்குழந்தைபிறந்த மூன்றாநாள் ஐந்தாநாள் ஏழாநாள் என்றுசொல்லப்பட்ட தினங்களில் அக்குழந்தையைக்கிடத்தியிருந்த படுக்கையை நன்றாகவுதறி வேறேபடுக்கையிட்டு அப்படுக்கையிற்கிடத்தல் வேண்டும் பொருந்திய பத்தாநாளில் பிதாவானவன் செவ்வையாக க்ஷவரஞ்செய்துக்கொண்டு விளங்காநின்ற பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து பதினோராவதுதினத்தில். எ—று. (சு)

பூதி நெய்புளி மயத்தின்வெண் கலமுதற் பொருந்த
ஓது சுத்திசெய் தறுவையே காலிநன் கொலித்துக்
காத லிற்றன் மயமண்ணான் மெழுகிமட் கலம்பாய்
ஆகி யாம்பல பொருள்களும் வெளிப்புறத் தாக்கி.

இ-ரை.—சாஸ்திரங்களிற் சொல்லியபடி வெண்கலப்பாத்திரங்களைச் சாம்பலினாலும் பித்தளைப்பாத்திரங்களை நெய்யினாலும் தாம்பிரப்பாத்திரங்களைப் புளியினாலும் ஈயப்பாத்திரங்களையும் இருப்புப்பாத்திரங்களையும் சாணத்தினாலும் சுத்திசெய்து வஸ்திரங்களை வண்ணான்வெள்ளாவியில்வைத்துத் தோய்த்துத்தரச்செய்து மண்பாத்திரங்களையும் பாய்முதலிய பலபொருள்களையும் வீட்டுக்குவெளிப்புறத்திலே யெறிந்துவிட்டு வீடுமுழுமையும் மண்ணினாலும் பசுவின்சாணத்தினாலும் நன்றாய் மெழுகச்செய்து. எ—று. (எ)

விரிந்த சீர்பொலி மகவைநீ ராட்டிவே றிடத்துத்
திருந்து தூயராற் சேர்த்திரு வோருநீ ராடிப்
பொருந்து புண்ணியா வாசனம் புரிந்திடப் போற்றிப்
பரிந்த வன்பினு ளைந்தையும் பருகுதன் மாண்பே.

இ-ரை—மிகுந்த சிறப்புடனே விளங்காநின்ற அக்குழந்தையை ஸ்நானஞ்செய்வித்து வேறிடத்தில் பரிசுத்தமானவர்களா லெடுத்துச் சேர்க்கச்செய்து பின்பு தாய்தந்தையரிருவரும் ஸ்நானஞ்செய்துசகலசூதகங்களையும் பரிகரிக்கத்தக்கபுண்ணியாகவாசனத்தை விதிப்படிசெய்வித்து ஆசாரியரால் மந்திரபூர்வகமாக அமைத்துக்கொடுக்கும் பஞ்சகௌவியத்தை நிறைந்தவுள்ளன்புடன் புகழ்ந்துவாங்கி யருந்துதல் சிறப்பாகும். எ—று. (அ)

பாலாரிஷ்டம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பெருமெழிற் புவியிற் பிள்ளை பிறந்தபோழ் தாதி யாக
மருவிய நன்மை தின்மை மாண்புறத் தெரிதல் வேண்டும்
தெருளுறு குழவி தோன்று மிலக்கினஞ் சீவ னென்றும்
ஒருவரு மதியி னோரை யுடலென்று முரைப்பர் மிக்கோர்.

இ-ரை.—அழகுமிகுந்த பூமியினிடத்துப் பிள்ளைபிறந்த லக்கின்முதலாகப் பன்னிரண்டு ஸ்தானங்களிலும் நவக்கிரகங்களிருந்து கொடுக்கும் பூர்வகன்மபலாபலங்களைக் கிரமமாகத்தெரிந்து கொள்ளல்வேண்டும் அழகுபொருந்திய குழந்தை பிறந்த லக்கினமானது உயிரென்றும் ஒப்பற்ற சந்திரலக்கினமானது உடலென்றும் கணிதநூல்வல்ல மேலோர்சொல்லுவர். எ—று. (க)

துதிபெறு மிலக்கி னாதி பதிகுரு சுங்கன் றானும்
இதமொடு கோணங் கண்டத் திருந்திடிற் றீர்க்க மாயுள்
திதிவார மோரை நட்சத் திரங்களா லுறும ரிட்டம்
அதிபுகழ் வியாழங் கண்டத் தமர்ந்திடி னிவர்த்தி யாமே.

இ-ரை.—யாவரும் புகழ்கின்ற சன்மலக்கினாதிபதியும் குருவும் சுக்கிரனும் சாதகனுக்கு நன்மையைத்தரும்படி கேந்திரகோணங்களிலிருந்தால் பூரணாயுசுடையதாயிருக்கும் ஜனனகாலத்திய திதியினாலும் வாரத்தினாலும் நக்ஷத்திரத்தினாலும் இலக்

கினத்திலும் குழந்தைக்குநேரிடும் துன்பமானது மிக்கபுகழினையுடைய குருவான வர் கேந்திரம்பெற்றிருந்தால் நிவர்த்தியாகும். எ—று. (௧0)

செங்கதிர் பரணி சோமன் சித்திரை சேயுத் ராடம்
பொங்குசீர்ப் புதன விட்டம் போற்றுறு வியாழங் கேட்டை
சுங்கனற் புகழ்ப்பூ ரரடஞ் சொற்சனி தோணி யென்னத்
தங்கிய விவற்றிற் பிள்ளை சனித்திடிற் றுயா மாமே.

இ-ரை—சூரியன் பரணியிலும், சந்திரன் சித்திரையிலும், அங்காரகன் உத்திரா டத்திலும்; சிறந்தபுகழினையுடைய புதன் அவிட்டத்திலும், வணங்குதற்குரிய குரு கேட்டையிலும், சுக்கிரன் கீர்த்தியினையுடையபூராடத்திலும், பாவக்கிரகமான சநி யிரேவதியிலும், தங்கியிருக்குங்காலத்தில் குழந்தைபிறக்குமாயின் பிறந்தசிசுவிக் கே துன்பத்திற் கிடமாகும். எ—று. (௧௧)

உத்திரம் பூரா டத்தோ டுரைசெயும் பூச முற்கால்
சித்திரை தன்னின் முன்னே செறிதரு மிரண்டு பாதம்
அத்தநாள் பரணி நாண்மூன் றும்பத மிவற் றுதிக்கில்
நத்துறு பிதாவி னுக்கு நவிலுவ ரரிட்ட மென்றே.

இ-ரை.—உத்திரம் பூராடம் பூசமிவற்றின் முதற்பாதத்திலும் சித்திரையின் முதலிரண்டுபாதத்திலும் அஸ்தம் பரணி யிவற்றின்மூன்றாம்பாதத்திலும் குழந்தை பிறக்குமாயின் விருப்பத்தினையுடைய பிதாவினுக்குடனே துன்பமுண்டாகுமென்று கணிதநூல்வல்லோர் சொல்லுவர். எ—று. (௧௨)

பூசஞ்சித் திரைபூ ராடம் பொருந்திய விரண்டாம் பாதம்
தேசுறு தாய்க்கு மூன்றேற் சிசுவிற்கு முற்ற நான்கேல்
பேசுமா துலன்ற னக்கும் பிறங்குபூ சம்பூ ராடம்
தூசறு மூன்றும் பாதந் துணைவர்க்கு மரிட்ட மாமே.

இ-ரை.—பூசம் சித்திரை பூராடம் என்னுமிந்த மூன்றுநக்ஷத்திரங்களில் வரும் இரண்டாம்பாதத்தில் குழந்தைபிறந்தால் அழகுபொருந்திய தாய்க்கும் மூன்றாம்பா தத்தில் குழந்தைபிறந்தால் பிறந்தகுழந்தைக்கும் பொருந்திய நான்காம்பாதத்தில் குழந்தைபிறந்தால் சொல்லுகின்ற அம்மானுக்கும் விளங்காநின்றபூசம் பூராடமென்னு நக்ஷத்திரங்களின் மூன்றாம்பாதத்தில் குழந்தைபிறந்தால் குற்றமற்ற சகோதரர்களுக் கும் அரிஷ்டமுண்டாகுமென்று கணிதநூலோர்சொல்லுவர். எ—று. (௧௩)

பரிமக மூல முற்பா தத்தினு மாயில் கேட்டை
விரிகலம் பிற்பா தத்து மேவுறு கடிகை நான்கில்
கரிசறு முதலிற் றந்தை கருதிரண் டன்னை மூன்றில்
தெரிதரு துணைவர் நான்கிற் சேய்க்குமா மரிட்டந் தானே.

இ-ரை.—அஸ்வதி மகம்மூலம் இந்தநக்ஷத்திரங்களின் முதற்பாதத்திலும் ஆயிலி யம்கேட்டை மிகுந்தபுகழினையுடைய இரேவதி யிம்மூன்று நக்ஷத்திரங்களி னுன்காம்

பாதத்திலும்வரும் நான்குநாழிகையில் முதல்நாழிகையில் குற்றமில்லாத பிதாவுக்கும் இரண்டாம் நாழிகையில் உத்தமகுணமுடையவளென யாவரும் நினைக்கத்தக்க தாய்க்கும் மூன்றுவதுநாழிகையில் புகழினையுடைய சகோதரர்களுக்கும் நான்காவது நாழிகையில் பிறந்தசிசுவுக்குந் துன்பமுண்டாகும். எ—று. (௧௪)

களிசெய்நீ சமதாய்க் கோணங் கனிவிருக் கின்ற கோட்கள்
ஒளிரவி தந்தை சோமற் குற்றதாய் சேய்பி ராதா
அளியுறு புந்தி மாம னவிர்குரு தாயின் றந்தை
தெளிபுகர் தாயின் றாய்சுன் சிசுவிற்குங் கண்ட மாமே.

இ-ரை.—ஜன்மலக்கினத்திற்கு மகிழ்ச்சியைத்தருகின்ற ஐந்துஒன்பது என்னும் கோணங்களில் விளங்காநின்ற சூரியன் நீசமடைந்திருப்பின் பிதாவுக்கும் சந்திரன் நீசமடைந்திருப்பின் பொருந்திய மாதாவுக்கும் செவ்வாய் நீசமடைந்திருக்கில் சகோதரர்களுக்கும் நல்ல பலனைத்தருபவனனபுதன் நீசமடைந்திருப்பின் மாமனுக்கும் புகழினையுடைய குருநீசமடைந்திருப்பின் தாயைப்பெற்றபாட்டனுக்கும் சாஸ்திரஞானத்தையுடைய சுக்கிரன் நீசமடைந்திருப்பின் தாயைப்பெற்றபாட்டிக்கும் சநிநீசமடைந்திருப்பின் பிறந்த சிசுவுக்கும் கண்டமென்றுசொல்லுவர். எ—று. (௧௫)

தெரிந்திடு சன்ம நட்சத் திரந்திதி ராசி யந்தம்
பொருந்திடிற் சிசுக்க ரிட்டம் புகழ்மதிக் கேழிற் சேய்சுன்
இருந்திடிற் றாய்க்க ரிட்ட மிரவிக்கேழ் சனிசே யாகில்
பரிந்திடு பிதாவ ரிட்ட மாமெனப் பகர்வர் மிக்கோர்.

இ-ரை.—தெரியத்தக்க சன்மநக்ஷத்திரம் திதி லக்கினம் இவைகளினன்கர்ம்பாதத்திற்பிறந்தால் பிறந்தகுழந்தைக்குத் துன்பமுண்டாகும் புகழையுடைய சந்திரலக்கினத்திற் கேழாமிடத்தில் அங்காரகனும் சநியுமிருந்தால் தாய்க்குத் துன்பமுண்டாகும் சூரியனின்றலக்கினத்திற் கேழாமிடத்தில் அங்காரகன் சநிஎன்கிறபாபக்கிரகங்களிருக்குமாகில் அன்புடைய பிதாவுக்கரிஷ்டமுண்டாகுமென்று கணிதநூலோர் சொல்லுவர். எ—று. (௧௬)

உதயலக் கினத்துஞ் சோம னுறையிலக் கினத்து நல்லோர்
திதிபுரி நோக்க மின்றித் தீயர்க ளிருக்கி லேனும்
மதியுறு வீட்டி னனும் வருசன்மத் ததிபன் றானும்
பதிதரு பகையா னனும் பாலனுக் கரிட்ட மாமே.

இ-ரை.—சனனராசியிலும் சந்திரனிருந்தராசியிலும் சுபக்கிரகங்களாற் பார்க்கப்படாமலே பாபக்கிரகங்களிருந்தாலும் சந்திரலக்கினதிபதியும் சன்மாதிபதியும்தம்மிற் பகையுடையவராயிருந்தாலும் பிறந்தசிசுவுக்குத் துன்பமுண்டாகும். எ—று. (௧௭)

இலக்கினத் திரவி சோம னெட்டினிற் பாவ ரேனும்
நலத்தவொன் றினிற்சேய் கேது நண்ணினு மேழிற் பானு

பலத்திடு நாலிற் செவ்வாய் பகருத யத்திற் காரி
வலத்துறு சுபர்நோக் கின்றி மருவினுஞ் சேய்க்க ரிட்டம்.

இ-ரை.—சன்மலக்கினத்திற்சூரியனுஞ் சந்திரனும் எட்டாமிடத்திற் பாபக்கிரகங்களும் நன்மையைத்தரத்தக்க ஜன்மலக்கினத்தில் அங்காரகனும் கேதுவும் ஏழாமிடத்திற் சூரியனும் நான்காமிடத்தில் வலிமையுடையஅங்காரகனும் சொல்லுகின்ற ஜன்மலக்கினத்திற் சநியும் வெற்றியையுடைய சுபக்கிரகங்கள்பார்வையைப்பெறாமல் இருந்தாலும்பார்த்தாலும் பிறந்தகுழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (கஅ)

ஒன்றினி லேழிற் பாவ ரோடுதேய் மதியுற் றாலும்
என்றொடு மதிய மொன்றி னெய்தச்சேய் பார்க்கி லேனும்
வென்றிசே ருதயத் திந்து வியஞ்சுட ரைந்திற் காரி
வன்றிறற் சேயெட் டேனு மகவினுக் கரிட்ட மாமே.

இ-ரை—சன்மலக்கினத்திலும் அதற் கேழாமிடத்திலும் பாபக்கிரகங்களோடு க்ஷீணசந்திரன்கூடியிருந்தாலும் சன்மலக்கினத்திற்சூரியனும் சந்திரனும் இருக்கஅங்காரகனாற் பார்க்கப்பட்டாலும் வெற்றிபொருந்தியசன்மலக்கினத்தில் சந்திரனும் பன்னிரண்டாமிடத்தில் சூரியனும் ஐந்தாமிடத்திற் சநியும் எட்டாமிடத்தில் வலிமையுடைய அங்காரகனும் இருப்பார்களாயின் பிறந்தகுழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (கக)

இந்துத யத்திற் பாவ ரிருபுறங் களிலு நிற்கச்
சிந்துறு வெட்டேழ் நான்கிற் றீயர்க ளிருக்கி லேனும்
நந்திடா வொன்றிற் பானு நண்ணிடப் பாவர் கூட
உந்துசேய் காரி பத்தி லுறினுஞ் சேய்க் கரிட்டமாமே.

இ-ரை—சன்மலக்கினத்திற் சந்திரனிருக்க அதற்குமுன்னும் பின்னுமாகிய விரண்டுபக்கத்திலும் பாபக்கிரகங்களிருந்தாலும் நன்மையைத்தருவதானநான்கு ஏழு எட்டென்னுமிடங்களிற் பாபக்கிரகங்களிருந்தாலும் சன்மலக்கினத்திற்கெடாத வொளியினையுடைய சூரியனிருந்தாலும் அவனோடு பாபக்கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் உயர்வுபொருந்திய பத்தாமிடத்தில் அங்காரகனும் சநியும் சேர்ந்திருந்தாலும் அல்லது தனித்தனியிருந்தாலும் பிறந்தகுழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (உ0)

அரவிலக் கினத்து மேழி லாதித்த னுலிற் சேயும்
உரமுட னிருக்கி லேனு மொன்றேழெட் டொடுவி யத்தில்
திரமதி பாவ ரோடு சேர்ந்திட நல்லோர் தாமும்
பரவிடப் பாரா ரேனும் பாலனுக் கரிட்ட மாமே.

இ-ரை.—சன்மலக்கினத்தில் இராகுவும் ஏழாமிடத்திற்சூரியனும் நான்காமிடத்தில் அங்காரகனும் வலியுற்றிருந்தாலும் ஒன்று ஏழு எட்டு பன்னிரண்டாமிடத்தில் பூர்வபட்சச்சந்திரன் பாபக்கிரகங்களோடு சேர்ந்திருந்தாலும் அவர்களை யாவரும் கொண்டாடச் சுபக்கிரகங்கள் பார்க்காவிட்டாலும் குழந்தைக்குத் தோஷமுண்டாகும். எ—று. (உக)

தேய்மதி யுதய மெய்தத் திகழ்விய மெட்டி ரண்டில்
தீயர்க ளிருக்கக் கண்டத் தினைச்சுபர் பாரா ரேனும்
ஏயதேய் மதிய மொன்றி னிருந்திடச் செவ்வா யெட்டில்
ஆயபா வரைச்சேர்ந் தாலு மரிட்டமா மகவி னுக்கே.

இ-ரை.—சன்மலக்கினத்தில் க்ஷீணசந்திரனும் இரண்டெட்டு பன்னிரண்டென்றசொல்லப்பட்ட ஸ்தானங்களில் பாபக்கிரகங்களுமிருக்க ஒன்று நான்கு எழு பத்தென்னும் கேந்திரஸ்தானங்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காவிடினும் சன்மலக்கினத்தில் க்ஷீணசந்திரனிருக்க எட்டாமிடத்தில் அங்காரகன்பாபக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டிருந்தாலும் குழந்தைக்குத்துன்பமுண்டாகும். எ—று. (உஉ)

சென்மலக் கினத்தில் வெய்யோன் றிகழ்சுபர் நோக்க மின்றித்
தன்மையி லிருக்க நல்லோர் தமைமதி கூடி னூனும்
வன்மைசே ருதய மேழின் மலிதீய ரிருக்கத் தீயோர்
நன்மதி யுடனுற் றாலு நவில்சிசுக் கரிட்டந் தானே.

இ-ரை.—சன்மலக்கினத்திற் சூரியனானவன் விளங்காநின்ற சுபக்கிரகங்களின் பார்வையைப்பெறாமற் றனித்திருக்க மற்றெந்தலக்கினங்களிலாவது சுபக்கிரகங்களுடனே சந்திரன்கூடியிருந்தாலும் சன்மலக்கினத்திலும் எழாமிடத்திலும் பாபக்கிரகங்கள்வலியுற்றிருக்க பாபக்கிரகங்களோடு சந்திரனுஞ்சேர்ந்திருந்தாலும் குழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (உ௩)

இரண்டினிற் சனிசேய் வெய்யோ னிருந்திடின் மாதுர் கண்டம்
முரண்டரு பரிதி சேய்சுன் மூன்றுறத் துணைவர் கண்டம்
தெருண்டநான் கினிற்சே யெட்டிற் றிடவரா வியத்திற் காரி
அரண்டிட விருக்கிற் பாலற் கரிட்டமுண் டாருந் தானே.

இ-ரை.—இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்களான சூரியன் செவ்வாய் சனி இவர்களிருந்தால் தாய்க்குத்துன்பமுண்டாகும் மூன்றுமிடத்தில் சூரியன் அங்காரகன் சனி இவர்கள்வலியுற்றிருந்தால் சகோதரர்களுக்குக் கண்டமும் தெளிவான நான்காமிடத்தில் அங்காரகனும் எட்டாமிடத்திலிராகுவும் பன்னிரண்டாமிடத்திற்சனியும்யாவரும் அஞ்சும்படியிருப்பார்களாகில் பிறந்தகுழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (உ௪)

ஐந்துபத் தினிற்சே யாகி லம்மானுக் கரிட்ட மாகும்
மந்தனேற் சிசுக்க ரிட்ட மதியெனிற் றாய்க்க ரிட்டம்
வந்திடு மிரவி யாகின் மகிழ்பிதா விற்க ரிட்டம்
உந்துநான் கெட்டிற் பாவ ருறச்சிசுக் கரிட்ட மாமே.

இ-ரை.—ஐந்தாமிடத்திலேனும், பத்தாமிடத்திலேனும், அங்காரகனிருந்தால் அம்மானுக்குத் துன்பமுண்டாகும் சனியிருந்தால் குழந்தைக்குத் துன்பமுண்டாகும் சந்திரனிருந்தால் தாய்க்குத்துன்பமுண்டாகும் சூரியனிருந்தாற் களிப்பையுடைய

பிதாவுக்குத் துன்பமுண்டாகும் உயர்வாகிய நான்காமிடத்திலு மெட்டாமிடத்திலும் பாபக்கிரகங்கள் யிருப்பார்களாயின் குழந்தைக்குதுன்பமுண்டாகும். எ—று. (உடு)

ஆறினி லிரவி நிற்க வவற்கேழிற் சனிசேய் நிற்கத்
தேறிய பிதாவி னோடு சிசுவிற்கு மாரண முண்டாம்
கூறிய மதிய மாறிற் குளிர்மதிக் கேழிற் சேய்சுன்
மாறிலா திருக்கிற் றாய்க்கு மகவிற்கு மரிட்ட மாமே.

இ-ரை.—ஆறுமிடத்திற் சூரியனிருந்து எழாமிடத்தில் அங்காரகனுஞ் சநியுமிருந்தால் வல்லமையுடைய பிதாவுக்கும் குழந்தைக்கும் மரணமுண்டாகும் மேலெடுத்துச்சொல்லிய ஆறுவது வீட்டில் சந்திரனும் சந்திரலக்கினத்திற் கேழாமிடத்திலங்காரகனும் சநியும் மாறுமலிருப்பார்களாயின் தாய்க்கும்குழந்தைக்குந் துன்பமுண்டாகும். எ—று. (உசு)

ஏழினி லெட்டிற் காரி யிருந்திடிற் சிசுக்க ரிட்டம்
சூழ்தரு பாவ ரேழிற் றுலங்கிடத் தாய்க்க ரிட்டம்
போழ்தரு மிரவி யேழிற் பொருந்திடப் பாவர் பார்க்கத்
தாழ்வறு பிதாவி னுக்குத் தானுறு மரிட்டந் தானே.

இ-ரை.—ஏழாமிடத்திலும் எட்டாமிடத்திலும் சநியிருந்தால் குழந்தைக்குத் துன்பமுண்டாகும் ஏழாமிடத்தில் மண்டலவரிசையாகச் சுற்றிவருகின்ற பாவக்கிரகங்களிருந்தால் தாய்க்குத்துன்ப முண்டாகும் ஏழாமிடத்தி லிருட்கூட்டங்களைச் சிதைக்காநின்ற சூரியனிருந்து பாபக்கிரகங்களாற் பார்க்கப்பட்டாலும் குற்றமற்ற பிதாவிற்குத்துன்பமுண்டாகும். எ—று. (உஎ)

எட்டினிற் பாவ ரெய்த விலகுதேய் மதியந் தானும்
திட்டமாக் கேந்தி ரிக்கிற் சிசுவினுக் கரிட்ட மாகும்
வட்டமா மதிய மாறில் வன்பாவ ருடனி ருக்கில்
இட்டமா யீன்ற வன்னைக் கெய்திடு மரிட்டந் தானே.

இ-ரை.—எட்டாமிடத்திற்பாபக்கிரகங்களிருந்து விளங்காநின்றக்ஷீணசந்திரன் கிரமமாகக்கேந்திரம் பெற்றிருந்தாலும் குழந்தைக்குத்துன்பமுண்டாகும் ஆறுமிடத்தில் வட்டவடிவினையுடைய சந்திரனானவன் வலிய பாபக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டு இருப்பானாகில் விருப்பத்துடனே பெற்றமாதாவுக்குத் துன்பமுண்டாகும். ()

ஒன்பதிற் பாம்பு நிற்க வுறும்பிதா விற்க ரிட்டம்
இன்புறு வியம்பத் தைந்தி லிரவிசேய் சனியு நிற்க
அன்புறு பிதாவ ரிட்ட மவிர்பதி னொன்றொன் பானில்
தென்பொலி சனிசேய் நிற்கச் சிசுவினுக் கரிட்ட மாமே.

இ-ரை.—ஒன்பதாம் இடத்தில் இராகுவிருந்தால் பிதாவுக்குத் துன்பமுண்டாகும் பன்னிரண்டாமிடத்திலேனும் பத்தாமிடத்திலேனும், ஐந்தாமிடத்திலேனும் மகிழ்ச்

சிபொருந்திய சூரியனும் அங்காரகனும் சநியுமிருப்பார்களாயின் வுள்ளன்புடைய பிதாவுக்குத் துன்பமுண்டாகும் விளங்காநின்ற பதினொன்றுஒன்பது இந்தஸ்தானங்களில் அழகுபொருந்திய சனியும் அங்காரகனுமிருந்தாற் சிசுவுக்குத் துன்பமுண்டாகும். எ—று. (௨௧)

பன்னிரண் டொன்பா னெட்டிற் பரிதிதேய் மதிசேய் காரி
மன்னியே யிருக்கிற் றேன்று மகவினுக் கரிட்ட மாகும்
மின்னுபன் னிரண்டில் வெய்யோன் மிளிர்தரு குசனு நிற்கப்
பன்னிய வன்னை யோடு பாலனுக் கரிட்ட மாமே.

இ-ரை.—பன்னிரண்டு ஒன்பது எட்டு இந்தஸ்தானங்களில் சூரியனும் கிருஷ்ணபக்ஷசச்சந்திரனும் அங்காரகனும் சநியும் நிலைபெற்றிருப்பார்களாயின் பிறந்தசிசுவுக்குத் துன்பமுண்டாகும் பன்னிரண்டாமிடத்திற் பிரகாசியாநின்ற சூரியனும்அங்காரகனுமிருப்பார்களாயின் மாதாவுக்கும், சிசுவுக்கும் துன்பமுண்டாகும். எ—று. ()

வியமுட னைந்தெட் டொன்பான் விளங்குதேய் மதியம் பானு
நயமுறு சனிசேய் நிற்க நன்மக வரிட்ட மாகும்
சயமிகு மைந்தில் வெய்யோன் றண்மதி சனிசேய் நிற்கப்
பயமுறு பிதாவி னோடு பாலனுக் கரிட்ட மாமே.

இ-ரை.—இதம்பொருந்திய ஐந்து ஒன்பது எட்டு பன்னிரண்டு என்னு மிந்தஸ்தானங்களில் க்ஷீணசந்திரனும் சூரியனும் சநியும் அங்காரகனுமிருந்தால் நற்குணமுடைய குழந்தைக்குத் துன்பமுண்டாகும் ஐந்தாமிடத்தில் வெற்றிபொருந்திய சூரியனும் குளிர்ந்தசந்திரனும் சநியும் அங்காரகனும் மிருப்பாராயின் பிரயோசனமுடைய பிதாவுக்கும் சிசுவுக்குந்துன்பமுண்டாகும். (௫௧)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இலகுமோ ரெட்டிற் பாவர்க ளிருக்க வேழுநா ளதிற்சிசுக் கரிட்டம்
நிலவுத யத்திற் பாம்பொடு சனியு நிற்கவே ழினின்மதி யிருக்கக்
குலவிய விரவி யாதல்சே யாதல் கூடிடப் பத்துநா ளரிட்டம்
நலமறு பாவர் சனியுட னொன்றி னண்ணிலீ ரெட்டுநா ளாமே.

இ-ரை.—விளங்காநின்ற வெட்டாமிடத்தில் பாபக்கிரகங்களிருக்குமாயின் பிறந்தயேழாவதுநாளுக்குள் சிசுவுக்குதுன்பமுண்டாகும் பிரகாசிக்கின்ற சன்மலக்கினத்தில் ராகுவும் சநியும் சம்பந்தப்பட்டிருக்கவும் எழாமிடத்தில் சந்திரனிருக்கவும் கொண்டாடப்பட்ட சூரியனாவது அங்காரகனாவது சம்பந்தப்பட்டிருந்தால் ஜனித்த பத்துநாளைக்குள் குழந்தைக்குத்துன்பமுண்டாகும் சன்மலக்கினத்தில் நன்மையில்லாத சநியோடு மற்றைப்பாவக்கிரகங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் பதினாறுநாளைக்குள் குழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. (௫௨)

வளர்மதி நான்கி லாறினி விரவி மருவவீ ரொன்பது தினமாம்
தளர்வறு மிரவி மதியுமெட் டெய்தச் சனிகுசன் கூடிடப் பார்க்கக்

கிளர்தின மிருபத் தைந்தென மொழிவர் கிளத்துமோ ரெட்டினிற்சுங்கன்
அளவுறு மிரவி சேய்சனி கூடி லரிட்டமோர் முப்பது தினமே.

இ-ரை.—நான்காமிடத்தில் வளர்பிறைச்சந்திரனும் ஆறாமிடத்தில் சூரியனும் தங்கியிருப்பார்களாயின் பதினெட்டுநாளையில் குழந்தைக்குத்துன்பமுண்டாகும் எட்டாமிடத்திற் சூரியனும் சந்திரனும் வலியுற்றிருக்க அவர்களோடு சநியும் அங்காரகனுஞ் சம்பந்தப்பட்டிருந்தாலும் பார்த்தாலும் இருபத்தைந்துநாளுக்குள் தோன்றிய குழந்தைக்குத் துன்பமுண்டாகுமென்றுசொல்லுவர் சொல்லுகின்றஎட்டாமிடத்தில் சுக்கிரனும் சூரியனும் அங்காரகனும் சநியும் சம்பந்தப்பட்டிருப்பார்களாயின் முப்பது தினத்துக்குள் கீர்த்தியைத்தருவதான குழந்தைக்குத் துன்பமுண்டாகும். எ—று. ()

மன்னிய வெட்டி லிரவியு மதியும் வதிதரக் கண்குரு டென்பர்
உன்னிய வாறெட் டினின்மதி பாவ ருடனிருந் திடில்விழி குருடாம்
பன்னிரண் டதனி லிரவியு மதியும் பரிந்துறச் சேய்சனி நோக்க
மின்னிட நயனங் குருடென மொழிவர் மிளிர்தரு கணிதநா வலரே.

இ-ரை.—பொருந்திய எட்டாமிடத்திற் சூரியனும் சந்திரனும்யிருந்தால் பிறந்தகுழந்தைக்கு கண்குருடாகுமென்று சொல்லுவர் மேற்சொல்லிய யெட்டாமிடத்திலும் ஆறாமிடத்திலுஞ் சந்திரன்பாபக்கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தால் நேத்திரபங்கமுண்டாகும் பன்னிரண்டாமிடத்திற்சூரியனும் சந்திரனும் பொருந்தியிருக்க அவர்களை அங்காரகனுஞ் சநியும் பார்க்கப்பட்டால் ஒளிபொருந்திய இடது நேத்திரத்துக்குப் பங்கமுண்டாகுமென்று சொல்லுவர் மேலானகணிதநூற் புலவர்கள். எ—று. (௬௪)

திகழ்பனி ரண்டிற் சனியுற வலக்கண் சேயுற விடக்கணுங் குருடு
பகர்மதி யிரவி யிருவருங் கூடிப் பன்னிரண் டுறவிழிக் கூனம்
தகவியத் திருப்போர் தமைநில மகனுஞ் சனியுநோக் கிடில்விழி கெடுமால்
அகமகிழ் சுபர்க ளிருந்திட நோக்க வரிட்டங்க ணிவர்த்தியா மன்னே.

இ-ரை.—விளங்காநின்ற பன்னிரண்டாமிடத்திற் சநியிருந்தால் வலதுநேத்திரமும் அங்காரகனிருந்தா லிடதுநேத்திரமும் பங்கமாகும் மேற்சொல்லிய பன்னிரண்டாமிடத்தில் சந்திரனுஞ்சூரியனுமாகிய விருவருஞ்சம்பந்தப்பட்டிருந்தால் நேத்திரபங்கமுண்டாகும் மேலான பன்னிரண்டாமிடத்திலிருக்குங் கிரகங்களை அங்காரகனும் சநியும்பார்ப்பராயில் நேத்திரபங்கமுண்டாகும் அப்பன்னிரண்டாமிடத்திற்சுபக்கிரகங்கள் மனமகிழ்ச்சியுடனிருந்தாலும் பார்த்தாலும் மேலெடுத்துச்சொல்லிய சகல தோஷங்களும் நிவர்த்தியாகும். எ—று. (௬௫)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நாட்டிய விலக்கி னத்தில் ராகுமாந் தியுமி ருக்க
ஈட்டிய விலக்கி னாதி யெட்டாமா திபனுங் கூடித்
தேட்டமில் குரூர ராசித் திரேக்காணந் தனிலி ருக்கக்
கோட்டிசேர் பிள்ளை தானுங் கொடிசுற்றிப் பிறக்குந் தானே

இ-ரை.—நிச்சயிக்கப்பட்ட சன்மலக்கினத்திலிராகுவும் குளிகனும் பொருந்திய ஜன்மலக்கினாதிபதியும் எட்டாமிடத்திற்குரியவனும் ஒன்றாகச்சேர்ந்து விருப்பமற்ற கொடியபாவக்கிரகராசித் திரேக்காணத்திலிருந்தால் மேன்மையுடைய குழந்தையானது கொடிசுற்றிக்கொண்டு பிறக்குமென்று சொல்லுவர், எ—று. (௬௬)

பொலிவுறு முதயந் தன்னிற் புகன்றிடு பாவர் நிற்கப்
பலமுறு கொடியோர் பார்க்கப் பாம்புக ளினிது கூடி
இலகுறு பாவர் வீடே யியம்பிலக் கினம தாகில்
குலவிய மாலே யிட்டுக் கொடிசுற்றிப் பிறக்குந் தானே.

இ-ரை.—அழகு பொருந்திய சன்மலக்கினத்தில் தீமையைத் தருபவரென்று சொல்லப்பட்ட பாபக்கிரகங்களிருக்க வலியுற்ற பாபக்கிரகங்களாற் பார்க்கப்பட்டு பாபக்கிரகங்களுக்குரிய ஆட்சிஸ்தானமே உதயலக்கினமாகி அவ்விலக்கினத்தில் இராகுகேதுக்களிருந்தால் விளங்காநின்ற மாலேத்தரித்தும் கொடிசுற்றிக்கொண்டும் குழந்தைபிறக்கும். எ—று. (௬௭)

தேடிய வுதயத் திற்குந் தீயர்க்கு நடுவி லேதான்
பாடுபொம் புறச்சன் மத்தைப் பானுசேய் பார்க்கி லேனும்
ஆடரி யிடபஞ் சிவ ஞகவே காரி புந்தி
கூடினுஞ் சரீரந் தன்னிற் கொடிசுற்றிப் பிறக்குந் தானே.

இ-ரை—ஆராய்ந்தறிந்த சன்மலக்கினத்திற்கும் பாவக்கிரகங்களிருக்கும் லக்கினத்திற்கும்மத்தியில் துன்பத்தைச்செய்பவரான இராகுகேதுக்களிருக்க சன்மலக்கினத்தைச் சூரியன் அங்காரகன் பார்த்தாலும் மேஷம் ரிஷபம் சிங்கம் இந்தஸ்தானங்கள் சன்மலக்கினமாக அதில் சநியும்புதனும் கூடியிருந்தாலும் குழந்தையானதுதேகத்திற் கொடிசுற்றிக்கொண்டு பிறக்கும். எ—று. (௬அ)

மகிழுத யத்தை யாதல் மதியிலக் கினத்தை யாதல்
அகமகிழ் சுபர்நோக் கெய்தா வரவுகண் பார்க்கி லேனும்
பகர்சுபர் நோக்கு ருத பணிகள்கேந் திரத்துற் ருலும்
புகழ்சிசு கொடியே சுற்றிப் புவியினிற் பிறக்குந் தானே.

இ-ரை.—விருப்பத்தைச்செய்கின்ற சன்மலக்கினத்தையாவது சந்திரலக்கினத்தையாவது மனமகிழ்ச்சியைத் தராநின்ற சுபக்கிரகங்களின் பார்வையைப்பெருத இராகுகேதுக்கள் பார்த்தாலும் சொல்லப்பட்ட சுபக்கிரகங்களாற் பார்க்கப்படாத இராகுகேதுக்கள் கேந்திரஸ்தானங்களிலிருந்தாலும் கீர்த்திபொருந்திய குழந்தையானது இப்பூமியினிடத்துக் கொடிசுற்றிக்கொண்டு பிறக்கும். எ—று. (௬௯)

சாதகன்மமுறைத்த வத்தியாயம்.
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௫௭௫௭.

பதினெட்டாவது

நாமகரணமுரைத்தவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

தீது றுதவம் மகச்செய விவாவையுந் தெரிக்கும்
சாத கன்மத்தி னெறிசில சாற்றினு மிதன்மேன்
மேத கப்பொலி நூல்வழி யுலகிடை விளங்க
ஓது சீருறு நாமக ரணவிதி யுரைப்பாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையில் குற்றமில்லாத அந்தக் குழந்தையினுடைய பலாபலங்களையெடுத்துச்சொல்லும் சாதகன்மக்கிரியாவிதிகளிற் சிலவற்றைச்சொன்னோம், இனி மேன்மைபெற்றுவிளங்காநின்ற தருமசாஸ்திரங்களிற்கூறிய முறைமைப்படி உலகத்தில் விளக்கமாகச்சொல்லப்பட்ட சிறப்புப்பொருந்திய நாமகரணஞ்செய்யவேண்டியவிதிகளை யெடுத்துச்சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுநிவர். எ—று. (க)

முன்னு நாமக ரணஞ்செயப் பிறந்தநாண் முதலாப்
பன்னி ரண்டுபன் னொன்றெனுந் தினத்தின்முற் பகலிற்
சென்னி விட்டமான் றலையிரு பூசமுத் திரங்கள்
மன்னு தோணிசெக் கத்தமூ லம்பனை மகம்பார்.

இ-ரை.—யாவருங்கருதுகின்ற மேற்சொல்லியநாமகரணஞ்செய்வதற்குக் குழந்தைபிறந்த தின்முதலாகக்கொண்டு பதினொன்றுபன்னிரண்டு என்றுசொல்லப்பட்ட தினங்களின் முற்பகற்காலத்தில் பொருந்திய அஸ்வதி, அவிட்டம், மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி, சதயம், அஸ்தம் மூலம், அனுஷம் உரோகணி, மகம், எ—று. (உ)

சோதி யோணமுஞ் சுபர்கள்வா ரமும்பெய ரிடற்காம்
தீது வாக்களட் டமியிருத் தையுமலாத் திதியில்
ஏதி லட்டம சுத்தியாந் திரவிலக் கினமாம்
ஓது நல்லவர் பலுமுறி லுபயமு நன்றாம்.

இ-ரை—சுவாதி, திருவோணம் என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களும் சுபக்கிரகவாரங்களும் தீமைமைத்தருவதான பௌர்ணமி, அமாவாசை அஷ்டமி, இருத்தையாகிய சதுர்த்தி நவமி சதுர்த்தசியுமல்லாத திதிகளும் குற்றமில்லாத எட்டாமிடஞ்சுத்தமடைந்த ஸ்திரலக்கினத்திலும் நல்லவர்களென்றுசொல்லப்பட்ட சுபக்கிர

கங்கள் பலமடைந்து நிற்பார்களாயி னுபயலக்கினங்களும் நாமகரணக்கிரியைநடத்து வதற்கு நன்மையாகும். எ—று. (௩)

ஒல்லு முச்சமித் திரக்கி கங்கணேக் குறினும்
புல்லி னுஞ்சுபர் காலவோ ரையுநனி பொருந்தும்
நல்ல கோளுத யத்திரேக் காணமு நலமாம்
செல்லு நீசக்கோ ணேக்கினும் பெயரிடத் தீதே.

இ-ரை.—பொருந்திய வுச்சக்கிரகங்களாவது நட்புக்கிரகங்களாவது பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் சுபக்கிரகங்களுடைய காலவோரையும் உதையலக்கினத்துக்கு நன்றாகவமைந்த சுபக்கிரகத் திரேக்காணலக்கினங்களும் நன்மையாகும் நன்மையைப் போக்குவதான நீசக்கிரகங்கள் பார்வையுள்ளலக்கினங்கள் நாமகரணக்கிரியை செய்வதற்குத்தீதாகும். எ—று. (௪)

உலக மின்புறு நூற்றியெட் டாகுதி யோமம்
இலகு றப்புரிந் தச்சுதஞ் சென்னியி லிட்டுக்
குலதெய் வப்பெயர் குடிப்பெரி யோர்பெயர் வேறு
நலமு றும்பெயர் களிற்சன்ம நாள்களுக் கிசைய.

இ-ரை—உலகத்திலுள்ளவர்களெல்லாஞ் சந்தோஷமடையும்படி நூற்றெட்டாகுதி அக்கினியில் ஓமஞ்செய்து அக்குழந்தையின் சிரசின்மேற் பிரகாசியாநின்ற அட்சதைகளா லாசீர்வதித்துத் தங்கள் குலதேவதைகளின்பெயர் தத்தம்குடிகளிற்பிறந்த பெரியோர்களின்பெயர் அல்லதுநன்மையைத்தருவதான மற்றுமுள்ள பெயர்களில் ஜன்மநக்ஷத்திரங்களுக்குப் பொருந்த, எ—று. (௫)

பெருகு மங்கலம் பொருணல மிதமுறும் பெயரைப்
பொருவி றந்தைவைத் திடல்விதி யாமிதிற் பொருந்தச்
சரும னேர்பொலி வருமனற் பூதியே தாசன்
வருணர் நால்வர்க்கு மிம்முறை யேபெயர் வருமால்.

இ-ரை—மிகுந்த மங்களகரமாயும் அர்த்தபுஷ்டியுள்ளதாயும் கேட்பவர்க்கினிமையுண்டாகத்தக்கதுமான பெயர்களில் ஒன்றை ஒப்பில்லாத தந்தையானவன் அழகிய குழந்தைக்குத் தரித்தல் கிரமமாகும் இவ்வாறு தரிக்கும்பெயர்களின் அந்தியத்தில் பிராமணவருணத்தார் சர்மாவென்பதையும் அழகிற்சிறந்த க்ஷத்திரியவருணத்தார் வர்மாவென்பதையும் வைஸ்யவருணத்தார் பூதியென்பதையும் சூத்திரவருணத்தார் தாசனென்பதையு முரிய பட்டப்பெயர்களாக வழங்கிவரும்படி தரிக்கவேண்டும். எ—று. (௬)

அவனி மீதிலாண் மகவினுக் கிரட்டையக் கரத்தும்
கவவி லாதபெண் மகவினுக் கொற்றையக் கரத்தும்
தவல ரும்பெய ரிட்டபின் னிருகாத் தானும்
இவர்ப தம்புயஞ் சிரத்தினு மச்சுத மிடுக.

இ-ரை.—இப்பூமியினிடத்துப்பிறந்த குழந்தைக்கு நாமகரணஞ்செய்யுமிடத்து ஆண்குழந்தையானால் இரட்டைப்பட்ட வெழுத்துக்களாலும் கவலையில்லாத பெண் குழந்தையானால் ஒற்றைப்பட்ட வெழுத்துக்களாலும் கெடுதலில்லாத பெயரிட்டழைத்தபின்பு இரண்டுகைகளாலும் அக்குழந்தையினுடைய பாதங்களிலும் புயடங்களிலும் சிரத்திலு மக்ஷதையிட்டாசீர்வதிக்கவேண்டும். எ—று. (எ)

பருகு பால்புகட் டுதற்கொரு பதுபதி னாறு
திருகின் முப்பதி னொன் றுநா லெட்டெனுந் தினத்தில்
பொருவி னாமகரணத்தினுக் குரைத்தவா போழ்தின்
மருவு சீர்பொலி யமிர்தசஞ் சீவிமந் திரத்தை.

இ-ரை.—குழந்தைக்கு உண்ணும்படியான பால்புகட்டுவதற்கு வேண்டிய விதியையும் கேளும் சுவிரதமகாராஜனே குழந்தைபிறந்த பத்து பதினாறு முப்பத்தொன்று முப்பத்திரண்டென்று சொல்லப்பட்ட ஒரு நல்லதினத்தில் ஒப்பில்லாதநாமகரணக் கிரியையினுக் கெடுத்துச்சொல்லப்பட்ட நட்சத்திரமுதலியவைகளமைந்த சுபவிலக்கினத்தில் சிறப்புற்று விளங்காநின்ற அமிர்தசஞ்ஜீவியென்னுமந்திரத்தை. எ—று. ()

இன்பு றச்செவித் தட்சதை சென்னியி லிட்டுப்
பின்பு சங்கினாற் பாலருத் துதல்விதி பிறங்க
முன்பு ரைத்தகா லங்களின் மொழிதரு மகவை
அன்பி னோடுநற் றொட்டிலி னிடல்விதி யாமே.

இ-ரை—அக்குழந்தையானது இன்பமடையும்படி செபித்துக் குழந்தையினது சிரசில் அக்ஷதையிட்டு அதற்குமேல் பாலடையினா லக்குழந்தைக்குப் பாலருத்துதல் விதியாகும் மேல் நாமகரணக்கிரியைகளுக்கு விளங்கும்படியெடுத்துச் சொல்லியசுபதினங்களில் யாவரும்புகழ்ந்து வியத்தற்குரிய குழந்தையையன்புடனே யழகியதொட்டிலிலே எற்றுதல் கிரமமாகும். எ—று. (கூ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மங்கலம் பெருக வழகுமிக் கோங்க வார்செவி துளைத்திடப் புவியிற்
பங்கமின் றுதித்த தினமுத லாகப் பன்னிரண் டொருபதி னாறில்
திங்களோ ராறி னேழிரு நான்கிற் றிகழுமீ ரைந்தின்முற் பகலில்
துங்கமான் றலையா திரையிரு பூசந் தோணிசித் திரைதிரு வோணம்.

இ-ரை.—இப்பூமியினிடத்துக் குழந்தைக்கு மங்களகரமுண்டாகவும் பேரழகு மிகுந்து விளங்கவும் விதிப்படிசெய்யவேண்டிய காதுகுத்தலென்னுங் கிரியையைச் செய்வதற்குக் குழந்தைபிறந்த குற்றமற்ற தினமுதலாகப் பன்னிரண்டாவது பதினாறுவது தினங்களிலாவது ஆறு, எழு, எட்டு, பத்தென்னுமாதங்களிலாவது வுச்சிப்பொழுதுக்கு முற்பட்டபகற்காலத்தில், சுபகருமங்களுக்குரியதான மிருகசீரிஷம் திருவாதிரை, புனர்பூசம், பூசம், இரேவதி, சித்திரை, திருவோணம், எ—று. (கய)

அத்தமுத் திரமுன் றவிட்டமுங் காதுக் காகுமேற் சுபர்கள்வா ரத்தில்
ஒத்தபஞ் சமியே காதசி தசமி யொளிர்துவா தசியொடு துதியை

சத்தமி சட்டி திரிதியை திரையோ தசிகளின் மறிகலை யிரண்டும்
மத்திமந் தனுமீன் யாழ்விடை கடக மகிழ்துலை கன்னியுத் தமமே.

இ-ரை.—அஸ்தம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அவிட்டமென்னு நட்சத்திரங்களும் சுபக்கிரக வாரங்களில் பொருந்திய பூர்வபட்சத்துத்துதியை திரிதியை, பஞ்சமி, சஷ்டி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரையோதசி, என்று சொல்லப்பட்ட திதிகளில் மீனம், மிதுனம், ரிஷபம், கடகம், மகிழ்வைத்தரும் துலாம் கன்னியென்னும் லக்கினங்களுங் காதுகுத்தலென்னுங் கிரியையைச்செய்வதற்கு உத்தமமாகும் மேஷம் மகரமென்று சொல்லப்பட்ட இவ்விரண்டுலக்கினங்களு மத்திமமாகும், எ—று. (௧௧)

சொற்படு குடந்தே ளரியிருசந்தி துலங்குபிற் பகலுட னிரவு
பொற்புறு மிரண்டு திதியுடு விரண்டு பொருந்துவா சரஞ்செவிக் காகா
நற்பக னிறைந்த பக்கமு நிறைந்த நாளுமுற் றிடினல மென்பர்
அற்புறத் திகழு மிலக்கினந் தனக்கெட் டாமிடஞ் சுத்தியை யடைய.

இ-ரை.—அன்புடனே பெரியோர்களால் விலக்கிச்சொல்லப்பட்ட கும்பம்விருச்சிகம் சிங்கமென்னு மிலக்கினங்களும் காலை மாலையென்னு மிரண்டு சந்தியாகாலங்களும் விளங்காநின்ற அபரான்ன சாயான்ன காலங்களாகிய உச்சிப்பொழுதுக்குப் பிற்பட்டகாலங்களும் இராக்காலங்களும் அழகிய இரண்டுதிதிகளாவது இரண்டு நக்ஷத்திரங்களாவது ஒருதினத்தில் பகற்காலத்திலேயே வரப்பட்ட வாரங்களும் காதுகுத்தலென்னுங்கிரியையை நடத்துவதற்காகாதென்றுசொல்லுவர் எட்டாமிடஞ்சுத்தமாக விளங்காநின்ற லக்கினங்களும் நடுப்பகலாகிய வுச்சிக்காலமும் ஒருதினத்தின்பகற்பொழுதெல்லாம் பூர்ணமாயிருக்கின்றதிதிகளும் நட்சத்திரங்களும் பொருந்துமாயின் அதையன்புடனே யாவரும்நல்லதென்று சொல்லுவர். எ—று. (௧௨)

சோமனைந் திரண்டே ழொன்பது மூன்றுஞ் சொலும்பதி னொன்றுறப் பாவர், எழுறு பதினொன் றாறுமூன் றதனி லெய்திட நன்மைய தாகும்
காமுறு புந்தி யெட்டினற் புகரோன் கருதுமே ழெட்டிரு மூன்றில்
வாமமார் குருபத் தாறிரு நான்கில் வதியிற்கா தமைத்திடத் தீதே.

இ-ரை.—ஐந்து, இரண்டு, ஏழு, ஒன்பது, மூன்று, பதினொன்று, இந்த ஸ்தானங்களிற் சந்திரனிருந்தாலும் இன்பம்பொருந்திய மூன்று, ஆறு, பதினொன்று, இந்த ஸ்தானங்களிற் பாபக்கிரகங்களிருந்தாலும் நல்லதாகும் விரும்பப்பட்ட எட்டாமிடத்திற்புதனும், ஆறு, ஏழு, எட்டென்னுமிந்தவிடங்களில் மதிக்கத்தக்க சுக்கிரனும் பத்து, ஆறு, எட்டென்னுமிடங்களில் அழகிய குருவுமிருந்தால் காதுகுத்துவதற்குத் தீதாகும். எ—று. (௧௩)

நாமகரணமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௫௱எ0.

பத்தொன்பதாவது

உபநிஷ்கிரமணமுரைத்த வத்தியாயம்.

கலி விருத்தம்.

உன்னு பல்வள னேங்கு முலகுளோர்
பன்னு நாம கரணம் பகர்ந்தனம்
மன்னு பற்பல விள்பு மகப்பெறத்
துன்னு பநிட்கி ராமணஞ் சொல்லுவாம்.

இ-ள.—கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையில் விரும்பப்பட்ட வெல்லா வளப்பங்களும் மேன்மேற்பெருகுதற் கிடமாகிய விப்பூமியிலுள்ளவர்களுக் குரியதாகச் சொல்லப்பட்ட நாமகரணக்கிரியாவிதியைக் கிரமமாகச்சொன்னேம் இனிமெற் சொல்லிய குழந்தைக்கு எல்லாநன்மைகளுமுண்டாகும்படி செய்யப்படுவதான பெருமைபொருந்திய வுபநிஷ்கிரமணவிதியையுங் கிரமமாகச்சொல்லுவோமென்றார்காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

கலிநிலைத்துறை.

மங்கு றுதபல் செல்வமு மாயுளும் வளரப்
பொங்கு சீருப நிட்கிர மணநனி புரிதல்
திங்கண் மூன்றினல் லோரையிற் பொருந்திய தினத்தில்
கங்குல் சீத்தெழு செழுங்கதி ரோன்றனைக் காட்டி.

இ-ள.—அழிவில்லாதபலவகைப்பட்ட செல்வங்களும் வாழ்நாள்களும் மேன்மேலுண்டாகத் தக்கதான மிகுந்த சிறப்பினையுடைய வுபநிஷ்கிரமணமென்னுங் கிரியை கிரமமாகச்செய்வதற்குக் குழந்தைபிறந்தமூன்றாவதுமாதத்தில் அக்குழந்தைக்கு சுபகாரியங்களுக்குரியதாகிய திதிவாரநட்சத்திரலக்கினங்களி லிருட்கூட்டங்களை யறவேயொழித் துதயமாகின்ற ஆயிரங்கிரணங்களை யுடைய சூரியதரிசனஞ்செய்வித்து. எ—று. (உ)

மாத நான்கினிற் பொருந்துநா ளோரையின் மகவுக்
கோது சீர்பொலி செருத்தலான் றனையுமோர் கிரணச்
சீத வெண்மதி தன்னையுஞ் சிறப்புறக் காட்டி
மேத கப்பொலி தருமங்கான் மதியிடை விளங்கும்.

இ-ள.—குழந்தைபிறந்த நான்காவது மாதத்திற்பொருந்திய சுபவார திதிநட்சத்திரலக்கினங்களில் அக்குழந்தைக்கு யாவரும் துதிக்குஞ்சிறப்பும் பொலிவும் முடைய குடம்போன்றமடியும் உத்தமலட்சணங்களும் அமைந்ததுமான பசுவினையும்

ஒப்பற்ற குளிர்ந்தவமுதகிரணமும் வெண்மைநிறமும் பொருந்திய சந்திரனையும் தரிசனஞ்செய்வித்து மேலாகவிளங்குகின்ற மேற்சொல்லிய நான்காவதுமாதத்தில், எ-று.

புனர்த மான்றலே பயறுசெக் குருள்கரம் பூசம்
அனுட மோணமுத் திரங்களி ரேவதி யவிட்டம்
இனியர் வாரமு நன்றுவா வட்டமி யிருத்தை
நினைவில் பாவர்நோக் குறவுறு மோரையு நீக்கி.

இ-ள்.—சந்திமிதித்தலென்னுங் கிரியையைச்செய்வதற்கு புனர்பூசம், பூசம், அஸ்தம், மிருகசீரிஷம், சித்திரை, சதையம், உரோகணி, அனுஷம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி அவிட்டம், ரேவதி, என்றுசொல்லப்பட்ட நல்லநக்ஷத்திரங்களும் சுபக்கிரகவாரங்களும் நன்றாகும், பௌர்ணமி அஷ்டமி இருத்தைமுதலிய திதிகளும் மனதிலும் நினைக்கப்பெறாதபாவக்கிரகங்களின் பார்வையைப் பெற்றலக்கினங்களையும் நீக்கி. எ—று. (௪)

மருவு மோரையி லொருபதா மிடஞ்சுத்தி வாய்ப்பக்
கருத ருங்குழந் தையையழ குறவலங் கரித்துப்
பெருகு றுஞ்சத வாகுதி புரிந்தபின் பெற்றோன்
பொருவி லுச்சிமோந் தாசிநால் வர்கணனி புரிய.

இ-ள்.—பொருந்திய பத்தாமிடஞ் சுத்தமாயிருக்கப்பெற்ற மற்றைய சுபலக்கினங்களில், கிடைத்தற்கரிய தென்றியாவரும் புகழத்தக்ககுழந்தையை, யழகுபொருந்தச்சிங்காரித்து நூறுகுதிமேலோங்கி வளராநின்ற வக்கினியில் ஓமஞ்செய்து அதற்குப்பின்பு அக்குழந்தையைப்பெற்ற பிதாவானவன் குழந்தையினதுவுச்சியைமோந்து சிறந்த நான்குபெரியோர்களா லாசீர்வதிக்கச்செய்து. எ—று. (௫)

மாது லன்மக வெடுப்பநன் மங்கல முழங்க
ஏதில் சந்திமி தித்துய ராலய மெய்திப்
பாது காக்கவன் பொடுகட வுளைப்பணி வித்திட்
டாத ரத்தின்மீண் டகத்தினில் வால்விதி யாமே.

இ-ள்—நன்மையாகிய பலவித மங்களவாத்தியங்களொலிக்கவும் மாமனானவன் அந்தக்குழந்தையை யெடுத்துக்கொண்டு குற்றமில்லாத நாற்சந்தி முச்சந்தி முதலிய சந்திகளைமிதிக்கச்செய்து மேன்மைபொருந்திய சிவாலயமுதலிய தங்கள் தங்களிஷ்டதேவதைகளின் கோயிலுக்குக்கிரமப்படிசென்று அன்புடனேகாத்திரட்சிக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையோடு கடவுளைவணங்கச்செய்து விருப்பத்துட னாலயத்தைவிட்டுத்திரும்பி வீட்டுக்குவருதல் கிரமமாகும். எ—று. (௬)

எழுசீர்க்கழிநெடி யாசிரியவிருத்தம்.

பூடண மணிய மான்றலே யோணம் பூசமு ரோகணி சதயம்
தேடரு மனுட முத்திரத் திரையஞ் சித்திரை தோணிவி சாகம்

நாடுறும் புரவி யத்தமிந் நாளி னந்தைபூ ரணையெனுந் திதியில்
கூடிய மதிமால் சுக்கிரன் சனிபொன் குலவுமிவ் வாரநன் றாமால்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே மேற்சொல்லிய குழந்தைக்கு திருவாபரணந்தரிப்பதற்குப் பொருந்திய திங்கள், புதன், வெள்ளி, வியாழம், சனி, யென்று சொல்லப்பட்ட வாரங்களும், பிரதமை, சஷ்டி, ஏகாதசி, பௌர்ணமி, யென்னுந்திதிகளும், மிருகசீரிஷம் திருவோணம், பூசம், உரோகணி, சதயம், நாடுதற்கரிய அனுஷம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சித்திரை, இரேவதி, விசாகம், விரும்புகின்ற அஸ்வதி, அஸ்தம், என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களும் நல்லதாகும். எ—று. (எ)

ஏந்தெழிற் றனுமீன் கன்னியாழ் விடைநன் றெட்டிடஞ் சுத்தம தாகக்
கேந்திர கோணங் களிற்சுபர் பாவர் கிளர்பதி னொன்றுமூன் றாறில்
வாய்ந்திடப் புகர்மால் குருகட கத்தின் மருவமற் றஃதிலக் கினமாய்க்
காந்திசேர் குருதன் னங்கிசமடையக் கருதுபூ ணணியநன் றாமே.

இ-ரை.—கேந்திர ஸ்தானங்களிலும், கோணஸ்தானங்களிலும், சுபக்கிரகங்களிருக்க விளங்காநின்ற மூன்று, ஆறு, பதினொன்றென்னும் ஸ்தானங்களிற் பாவக்கிரகங்கள் பொருந்தியிருக்க கடகலக்கினத்திற் சுக்கிரன், புதன், குரு, இவர்கள்கூடியிருக்க எட்டாமிடஞ்சுத்தமாகப்பெற்ற மிகுந்தவழகினையுடைய தனுசு மீனம் கன்னி மிதுனம் ரிஷபம் என்றுசொல்லப்பட்ட லக்கினங்களுளொன்றில் ஒளியினையுடைய குருவானவர் தன்னங்கிசமடைந்திருக்குங்காலத்தில் குழந்தைக்குத் திருவாபரணஞ் சூட்டுவது நன்மையாகும். எ—று. (அ)

உந்துசீ ரிரவி மேடசிம் மத்தி னுறவிலக் கினமஃ தாகில்
நந்தவில் குருமீன் றனுகட கத்தி னண்ணிட வோரையு மதுவேல்
சந்திர னுதயந் தன்னிலொன் பானிற் சாற்றரு முச்சனு யிருக்கச்
சிந்துறு வேழிற் பொன்னவ னிருக்கத் திகழ்பணி யணியநன் றாமே.

இ-ரை.—சிறப்பினையுடைய, மேஷம், சிங்கம், என்னுமிலக்கினங்களே யுதைய லக்கினமாயிருந்தாலும் அல்லது அவ்விலக்கினங்களில் சூரியனிருந்தாலும் கெடுதெல்லாத குரு, மீனம், தனுசு, கடகமிந்தலக்கினங்களிலிருக்க இவைகளே யுதைய லக்கினமாயிருந்தாலும் உதையலக்கினத்திலும் ஒன்பதாமிடத்திலும் சந்திரனானவன் சொல்லுதற்கரிய வுச்சம்பெற்றிருந்தாலும் நிறைந்தபுகழினையுடைய வேழாமிடத்தில் குருவானவரிருந்தாலும் குழந்தைக்குப் பிரகாசியாநின்ற ஆபரணந்தரிக்க நன்றாகும். எ—று. (கூ)

புதுத்துகில் புனைய வத்தமுத் திரங்கள் புனர்வசு பூசமச் சுவினி
துதித்திடு சதய முறப்பனே சகடு சோதிசித் திரைகல மவிட்டம்
மதித்தவிந் நாளின் மதிகதிர் வார மத்திமம் பொன்புகர் புந்தி
கதித்திடு நலமாஞ் சேய்சனி யிருத்தை கருதமா வட்டமி தீதே.

இ-ரை.—மேற்சொல்லிய குழந்தைக்குக் கோடிவஸ்திரம் தரிப்பதற்கு, புதன், வியாழம், வெள்ளி, என்னு மூன்றுவாரங்களும் உத்தமமாகும், ஞாயிறு திங்களென்னு மிவ்விரண்டுவாரங்களு மத்திமமாகும், செவ்வாய், சநி, யிவ்விரண்டுவாரங்களும் அதம மாகும், சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அமாவாசியை அஷ்டமி, யித்திதிகளாகாவாம், அஸ்தம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, புனர்பூசம், பூசம், அஸ்வதி, சொல் லுகின்ற சதயம், அனுஷம், விசாகம், உரோகணி, சுவாதி, சித்திரை, அவிட்டம், இரே வதி, ஆகிய இந்நக்ஷத்திரங்கள் நல்லதென்று சொல்லுவர். எ—று. (௰)

சிங்கமான் மேடந் தேள்குடந் தனுசு நீதிவை யொழிந்தவை நலமாம்
பொங்குசீ ருதயந் தனிற்சுப ரேழிற் புந்தியெட் டாமிடஞ் சுத்தி
பங்கமி லாறு மூன்றுபன் னொன்றிற் பாவர்கள் பொருந்தநன் றாகும்
சுங்கனுன் கொடுமுந் நான்கினிற் றீதாந் தூயவாந் துகில்புனைந் திடவே.

இ-ரை.—சிங்கம், மகரம், மேஷம், விருச்சிகம், கும்பம், தனுசு இவையொழிந்த மற்றையலக்கினங்கள் நன்மையாகும், மிகுந்தசிறப்பினையுடைய வுதயலக்கினத்திற் சுபக்கிரகங்களும், ஏழாமிடத்திற்புதனும், எட்டாமிடஞ்சுத்தமும், குறைவில்லாத மூன்று, ஆறு, பதினொன்றென்னுமிடங்களிற் பாவக்கிரகங்களும், பொருந்தியிருந் தால் நன்மையாகும், நான்கு, பன்னிரண்டென்னுமிடங்களிற் சுக்கிரனிருந்தாற் பரி சுத்தமாகிய கோடிவஸ்திரம் தரிப்பதற்கு ஆகாவாம். எ—று. (௧௧)

உபநிஷ்கிரமணமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௫௱௮௧.

இருபதாவது

அன்னப்பிராசனமுரைத்த வத்தியாயம்.

கோச்சகக்கலிப்பா.

ஒண்புவியிற் கூறு முபநிட் கிரமணத்தை
நண்பினொடு செய்யும் விதியை நவின்றனமால்
அண்பலவின் பெய்து மன்னப்பி ராசனத்தைப்
பண்பினனி யாற்றும் பரிசு புகன்றிடுவாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! அழகுபொருந்திய இப்பூமியினிடத்து வாழு மெவ்வகைப்பட்டவரும் விருப்பத்துடன் செய்வதற்குரியதென்று ஸ்மிருதி முதலிய நூல்களாற் சொல்லப்பட்ட உபநிஷ்கிரமணமென்னும் கிரியையின் முறைமையை இதுவரையிலெடுத்துச்சொன்னோம்; இனி அக்குழந்தையானது பொருந்திய பலவின்பங்களையு மடையத்தக்கதாகச் செய்யப்படுவதான அன்னப்பிராசனமென்னுங் கிரியையினை மிகுந்தவன்புடனே செய்யவேண்டியவிதியையும், கிரமமாகச்சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இதமுறு மன்னப் பிராசனஞ் செயவா றெட்டொரு பதுபனி ரண்டாம்
மதியினி லத்தஞ் சித்திரை சோதி மாமக சிரம்பனை யவிட்டம்
சதயமுத் திரங்கள் கலந்திரு வோணஞ் சகடிரு பூசமிந் நாளில்
விதிவரு சன்ம மூன்றைந்தே ழாநாள் விலக்கிநற் சுபர்கள்வா ரத்தில்.

இ-ரை.—நன்மையைத் தருவதான அன்னப்பிராசனமென்னுங் கிரியையைச் செய்வதற்கு குழந்தைபிறந்த ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டென்னு மாதங்களில் நல்லசுபக்கிரக வாரங்களில், அஸ்தம், சித்திரை, சுவாதி, அஸ்வதி, மிருகசீரிஷம், அனுஷம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, திருவோணம், உரோகணி, புனர்பூசம், பூசமென்னுநக்ஷத்திரங்களில், சன்மநக்ஷத்திரமும், அதற்கு மூன்று, ஐந்து, எழென்னும் நக்ஷத்திரங்களையும் நீக்கி மற்றைய நக்ஷத்திரங்களில். எ—று. (உ)

அட்டமி யிருத்தை யுவாக்களு நீக்கி யவிர்தரு சுக்கிலத் திதியில்
விட்டியாங் கரணஞ் சுக்கிராத் தமனம் விலக்கிவா னிருமல மாக
இட்டமார் தருபத் தாமிடஞ் சுத்தி யெய்திட விளங்குமுற் பகலில்
ஒட்டிய மீன்றேள் மேடமு மொழிந்த வோரைநன் றாமுண வினுக்கே.

இ-ரை.—அஷ்டமி சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசியை, என்றுசொல்லப்பட்ட திதிகளைநீக்கி விளங்காநின்ற சுக்கிலபக்ஷத்து மற்றையதிதிகளில், சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம் என்னுங்கரணங்களையும், சுக்கிராஸ்தமன காலங்களையுநீக்கி, ஆகாயம் நிருமலமாகவும் விரும்பப்பட்ட பத்தாமிடஞ் சுத்தமாகவு மமைந்து விளங்குமுச்சிப்பொழுதுக்கு முற்பட்டகாலத்தில், பொருந்திய மீனம், விருச்சிகம், மேஷம், ஆகிய இலக்கினங்களைநீக்கி மற்றையலக்கினங்களில் அன்னப்பிராசனமென்னுங் கிரியை செய்வதற்குநலமாகும். எ—று. (௩)

புந்தியீ ராறுஞ்ன் பான்றனிற் சுங்கன் பொருந்துமே ழாறுபன் னிரண்டில்
உந்துபொன் னுன்கா றெட்டுசே யெட்டி னுற்றிடி னிவைக்கீட தாகும்
இங்கெழி லுதய முதயவங் கிசங்க ளெய்தினு முணவினுக் காகா
முந்துறு பாவ ராறுபன் னொன்றின் மூன்றினு மிருந்திட நலமே.

இ-ரை.—ஒன்பது, பன்னிரண்டென்னுமிடங்களிற் புதனும் பொருந்திய, ஆறு எழு, பன்னிரண்டென்னு மிடங்களிற் சுக்கிரனும், நான்கு, ஆறு, எட்டென்னுமிடங்களின் மேன்மைபொருந்தியகுருவும் எட்டாமிடத்திலங்காரகனுந் தங்கியிருப்பதும் அழகு பொருந்திய உதயலக்கினத்திற் சந்திரனிருப்பதும் சந்திரனுனவனுதயலக்கினத்தி லங்கிசங்களைப்பெறறிருப்பதுமாகிய விக்காலங்க ளன்னப்பிராசனக் கிரியையைச்செய்வதற்காகாதென்று மேலோர்விலக்கி யிருப்பதா லக்காலங்கள் தீதாகும் மேற்சொல்லிய கிரியையைச்செய்வதற்கு, மூன்று, ஆறு, பதினொன்றென்னுமிடங்களிற் பாவக்கிரகங்களிருந்தால் நன்மையாகும். எ—று. (௪)

மொழிதரு போழ்தின் விநாயக பூசை முதலிய வாற்றியம் மகவுக்
கெழில்பெறத் தீம்பா லிதத்தினு குதிசெய் தெஞ்சிய பாயச மூட்டி
வழிமது நெய்யில் விராய்மனு வுரைத்தம் மகவையுண் பித்திடன் முறையாம்
தழுவுமிக் காலந் தன்னிலக் குழந்தை தனக்குரை பயிற்றவு நலமே.

இ-ரை.—மேற்சொல்லிய சுபலக்கினத்தில் விநாயகபூஜைமுதலிய கிரியைகளைச் செய்து அழகுபொருந்த மதுரமாகிய பாயசத்தினுலே அக்கினியில்ஓமஞ்செய்து மிகுதியானபாயசத்தை அந்தக்குழந்தைக்குண்பித்து பெருகியதேனும் நெய்யுமொன்றுக் கலந்து மத்தித்து வழித்து அக்கிரியைக்குரிய வேதமந்திரங்களைச்சொல்லி அக்குழந்தையை யுண்ணச்செய்வது கிரமமாகும், பொருந்திய அக்காலத்திலேயே யந்தக்குழந்தைக்குச் சொற்களைக்கற்பித்தலும் நன்மையாகும். எ—று. (௫)

மகிழ்வுறு மத்த பூர்த்தியிற் சன்ம மதியினிற் சன்மதா ரகையில்
புகழ்மிகு முதக சாந்திசெய் தந்தப் புனல்கொடு மகவைநீ ராட்டி
அகமகிழ் நவக்கோள் சன்மநாட் சாந்தி யாயுளோ மமுநனி புரிந்து
திகழ்தரு மறையோ ராசிகள் செய்து சென்னியி லட்சதை யிட்டு.

இ-ரை.—மகிழ்ச்சிபொருந்திய குழந்தைபிறந்து ஒருவருஷநிறைந்தபின்பு அக்குழந்தை பிறந்தமாதம் பிறந்தநக்ஷத்திரதினத்தில், கீர்த்திபொருந்திய உதகசாந்தி செய்து அந்தசாந்தி கும்பஜலத்தினற் குழந்தைக்கபிஷேகஞ்செய்வித்து உள்ளத்தில்

மிக்க மகிழ்ச்சியுடனே நவக்கிரகசாந்தி ஜன்மநக்ஷத்திரசாந்தி ஆயுஷ்கர்மஹோமம் என்னுமிவைகளெல்லாம் கிரமமாகச்செய்து பிரமஞானமுடையவராய் விளங்கும் வேதப்பிராமணர்களா லக்குழந்தையின் சிரசிலக்ஷதையிட் டாசீர்வதிக்கச்செய்து. எ—று.()

அன்பொடு புதுவத் திரமணிந் தரைநா ணாதிய பூடண மணிந்தே
இன்புறு சிவிகை யாதிவா கனத்தி லேத்தியந் நகர்வலம் புரிந்து
பின்புமா நதியைக் கடவுளைத் தரிசிப் பித்திடன் முறைமையா மிதனால்
முன்புறு மாயுள் விருத்திநற் செல்வ முதலிய நன்மையுண் டாமே

இ-ரை.—அன்புடனே குழந்தைக்குப் புதுவஸ்திரமும் அரைநாண்முதலியவாபரணங்களுந்தரித் தலங்கரித்து யாவரும்சந்தோஷிக்கும்படி சிவிகைமுதலியவாகனங்களிலேத்தி யந்தக் கிராமப்பிரதட்சணஞ்செய்வித்து, பின்பு தெய்வத்தன்மை பொருந்திய நதிகளையும் தான்வழிபடுகடவுளையும், தரிசனஞ்செய்வித்தல்விதியாகும் இவ்வாறு செய்விப்பதனால் முதன்மையாகிய ஆயுள்விருத்தியும் அஷ்டஐஸ்வரியமும் மற்றும் பலநன்மைகளுமுண்டாகும். எ—று. (எ)

அன்னப்பிராசனமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௩௱௮௮.

இருபத்தொன்றாவது

சவுளமுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

விழைவுறு மாயுளு மிடலு மேன்மையும்
தழைவுறு மனப்பிரா சனமி தாகுமால்
வழுவறு மறைநெறி மகிழ்ந்தி யற்றிடும்
அழகுறு சவுளநன் கறைகு வாமரோ.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே விரும்பப்பட்ட வாழ்நாளும், பலமும், மேன்மையும், நாளுக்குநாள் விருத்தியடையவேண்டிச்செய்கின்ற அன்னப்பிராசனமென்னுங் கிரியை யித்தன்மையவாகும் இனி குற்றமற்ற வேதவிதிப்படி மனமகிழ்ந்துசெய்யப்படுவதான அழகுபொருந்திய சவுளமென்னுங்கிரியையைக் கிரமமாகச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுநிவர். எ—று. (க)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

விருப்பமுடனுயுள்விருத் தியுமழகும் பெறச்சவுள வினைநன் காற்றக்
கருப்பமுறு வருடமுத லலாதுசன்ம வருடமுதற் கரிசு றுமல்
திருப்பொலியு மூன்றைந்தேழ் வருடமதிற் சிறந்தவுத்த ராய ணத்தில்
மருப்புகர்பொன் மூடமதி மாசமல மாசமக மாச நீக்கி.

இ-ரை.—ஆயுள்விருத்தியும் நிறைந்தவழகும் மேன்மேலும் பெருகவுண்டாகவேண்டுமென்னும்விருப்பத்துடனே அச்குழந்தைக்குச்சௌளமென்னுங்கிரியையினை நன்றாகச்செய்வதற்கு கருவிற்றங்கிய வருடமுதற்கொண்டாவது கருப்பம்நீங்கிப்பிறந்த வருடமுதற்கொண்டாவது குற்றமில்லாதவனப்பினையுடைய மூன்று ஐந்து எழு என்னும் வருடங்களில் ஒன்றில் மேன்மையானவுத்தராயண மாதங்களில் சுக்கிரன் குருயிவர்கள் பிரகாசமற்று மூடத்திலிருக்குங்காலமும் ஒருமாதத்தி இரண்டு அமாவாசைவருவதாகிய அதிமாசமும் ஒருமாதத்தில் இரண்டுபௌர்ணமி வருவதாகிய மலமாசமும் மாசிமாதமும் நீக்கி. எ—று. (உ)

பொலிவுபெறு திங்களிற்சித் திரையவிட்ட மத்தமிரு பூசந் தோணி
மெலிவின்மக சிரமுலக்கை யசுவதியுத் தமஞ்சதய மிளிர்சு வாதி
வலியசக டுத்திரங்கண் மத்திமமாம் பனைமூல மரண முண்டாம்
அலைவில்வப னத்திலுக்கெஞ் சியநாளுஞ் சந்திராட் டகமுந் நீதே.

இ-ரை.—அழகுபொருந்திய மற்றையமாதங்களில்வரும், சித்திரை, அவிட்டம் அஸ்தம், பூசம், புனர்பூசம், இரேவதி, மெலிதலில்லாத மகம், மிருகசீரிஷம், திருவோணம், அஸ்வதி, இந்தநக்ஷத்திரங்கள் உத்தமமாகும், சதயம்விளங்காநின்ற சுவாதி வலிமைபொருந்திய வுரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, யிவைகள் மத்திமமாகும் அனுஷம், மூலம், என்னுநட்சத்திரங்கள் மரணத்தைத்தருவனவாகும் மற்றையநட்சத்திரங்களும் சந்திராஷ்டகமும் இன்பத்தைத்தருவதாகிய வபனத்திற்குத் தீதாகும். எ—று. (கூ)

சென்மவுடுக் களுமூன்றைந் தேழாநாட் களும்வைனு சிகமுந் தீதாம்
மன்மயிர்க்குச் சனிமாணஞ் சேயிரவி தீதுசுபர் வார நன்றும்
தன்மையிலட் டமிசட்டி யிருத்தையுட னுவாக்கடுவா தசியு நீக்கி
நன்மைதரு சுக்கிலபக் கமுமபர மூன்றைந்து நலமுண் டாமே.

இ-ரை.—ஜன்மநக்ஷத்திரமும் அதற்குப்பத்தாவதாகிய அனுஜன்மநக்ஷத்திரமும் அதற்குப்பத்தாவதாகிய திரிஜன்மநக்ஷத்திரமும் மூன்றாவதாகிய விபத்தாரையும் ஐந்தாவதாகிய பிரத்தியரத்தாரையும் எழாவதாகிய வதைத்தாரையும் ஜன்மநக்ஷத்திரபாத முதல் எண்பத்தெட்டாம்பாதமுள்ள நக்ஷத்திரமாகிய வைனுசிகத்தாரையும், தீதாகும் சனிவாரமாகில் மரணமுண்டாகும் ஞாயிறு செவ்வா யென்னும்வாரங்கள்தீதாகும் மற்றைய சுபர்கள்வாரங்கள் நன்மையாகும் சுகுணமில்லாத அஷ்டமி, சஷ்டி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, துவாதசியென்னுந் திதிகளைநீக்கி நன்மையைத்தருகின்ற பூருவபக்ஷத்துமற்றையதிதிகளும் அமரபக்ஷத்துத்திரிதியை பஞ்சமி என்னுந்திதிகளும் க்ஷவரஞ்செய்வதற்கு நன்மையைத்தருவனவாகும். எ—று. ()

கடகமிது னந்துலமீ னிடபமக ரம்புகழுங் கன்னி நன்றும்
குடமரண மயிர்வினைக்கெஞ் சியவோரை சுபர்நோக்கக் கூடி நிற்கத்
திடமலியட் டமசுத்தி யுறச்சுபர்கேந் திரகோணஞ் சேர்ந்தி ருக்கத்
தொடர்புறுமூன் றுறுபன்னொன் றினிற்பாவ ரெய்தமிகு சுகமுண் டாமே

இ-ரை—க்ஷௌரக்கிரியை செய்வதற்குப் புகழ்ச்சிபொருந்திய கடகம், மிதுனம், துலாம், மீனம், விருஷபம், மகரம், கன்னியென்னுமிலக்கினங்கள் நன்மையாகும் கும்பம், மரணமுண்டாகும், மற்றுள்ளவிலங்களில் சுபக்கிரகங்களிருப்பதும் பார்ப்பதும் எட்டாமிடஞ்சுத்தமுள்ளதும் சுபக்கிரகங்கள் ஒன்று, நான்கு எழு பத்தென்னுங் கேந்திரஸ்தானங்களிலாவது ஐந்தொன்பதென்னுந் திரிகோண ஸ்தானங்களிலாவது கூடியிருப்பதும் பொருந்தியபாவக்கிரகங்கள் மூன்று, ஆறு, பதினொன்றென்னுமிடங்களில் அமைந்ததுமாகிய லக்கினங்கள் மிகுந்தசுகங்களைத்தருவதாகும். எ—று. (ரு)

அதிபுகழ்முற் பகனலமா ய்ப் பிற்பகலி ராவுமிக வல்ல லுண்டாம்
துதிபெறுசெங் கதிரவ னங் காரகனி ராகுசனி சுங்கனேழில்
மதியுதய மிருமூன்றின் முந்நான்கிற் குருவியத்தின் மருவத் தீதாம்
திதிபுகரோ னெட்டி லு ற மயிர்வினைக்காந் தந்தசுத்தி செயவு மாமே.

இ-ரை—சௌளஞ் செய்வதற்கு மிகுந்தபுகழையுடைய முற்பகலுத்தமமாகும். பிற்பகலும் இராக்காலமும் மிகுந்த துன்பத்தையுண்டாக்கும். யாவரும்புகழ்கின்றசிவந்தகிரணங்களையுடைய சூரியன், அங்காரகன், இராகு, சனி, சுக்கிரன், என்னு மிவர்கள் ஏழாமிடத்திலிருந்தாலும், உதயம் ஆறு பன்னிரண்டுஎன்னு மிடங்களில் சந்திரனிருந்தாலும், பன்னிரண்டாமிடத்தில்குருவிருந்தாலும், தீதாகும். எட்டாமிடத்தில் சுக்கிரனிருக்க நன்மையாகும். இந்தவிதி தந்தசுத்திசெய்வதற்கு முரியதாகும். எ—று

இனிதுகண பதிபூசை முதலியசெய் தாகுதிநூற் றெட்டி யற்றித்
தனியறுகான் மயபிண்ட மாவிலைவைத் தனையிடப்பாற் றுய்கை யேந்தக்
கனிவினொடு தந்தைவலப் பாவில்வெந்நீர் தண்ணீருங் கலந்தின்போங்கப்
புனிதமிகு காதலன்சென்னியிற்றெளித்து நாவிதன்வா ள் பொருந்தவாங்கி

இ-ரை.—இனிமையுடனே விநாயகபூசைமுதலியவைகளைச் செய்து அக்கினியில் நூற்றெட்டாகுதி ஓமஞ் செய்தபின்பு குழந்தையின் தாயானவ ளிடப்பக்கத்தில் ஒப்பில்லாத அறுகுடனே பசுவின்சாணத்தினுற் செய்தபிண்டத்தை மாவிலையில் வைத்துக் கையிலேந்தவும் தந்தையானவன்மகிழ்ச்சியுடனே வலபக்கத்தில் வெந்நீருந்தண்ணீரும் ஒன்றாகக்கலந்து நன்மைபெருகும்படி மிகுந்தபரிசுத்தமாகிய குழந்தையினது சிரசிலே புரோக்ஷணஞ்செய்து நாவிதனிடத்துள்ள கத்தியைவாங்கி. எ—று. (எ)

எய்துநுனி யுளதருப்பை மூன்றதனைச் சென்னியினுன் கிடத்துவைத்துக்
கொய்துகாத் தேந்தியவான் மயத்தினிலிட் டாசடியிற் குலவச் சேர்த்தி
வைதிககு மாரரொடு மருத்திவனை சிகைவிடுத்து மற்றி டத்தின்
மொய்தருகே சங்குறைத்து நீராட்டி யலங்கரித்தன் முறைமை யாமே.

இ-ரை.—கூர்மையமைந்துள்ள மூன்றுபசுந்தருப்பைகளை அக்குழந்தையினது சிரசில் நான்கிடத்தில் மந்திரத்துடன்வைத்துத் துண்டித்துத்தாயினது கையில்வைத்தேந்திக்கொண்டிருக்கின்ற பசுவின்சாணத்தாலாகிய பிண்டத்தில்வைத்து அதனையெடுத்துக்கொண்டுபோய் அரசமரத்தினடியிலே பொருந்தும்படி வைத்துவிட்டுப் பின்பு வைதீகச்சிறுவர்களுடனே குமாரபோசனஞ்செய்வித்து அதன்பின்பு குழந்தையின்சிரசில் குடுமியைவிடுத்து மற்றிடங்களிலே நெருங்கிய வுரோமங்களைக்களையச் செய்து ஸ்நானஞ்செய்வித்து ஆடையாபரணங்களினுலே அழகுபெற அலங்காரஞ் செய்வித்தல் முறைமையாகும், எ—று. (அ)

சவுளமுப நயனம்வி ரதங்கண்மண மெனப்புகலுஞ் சமக்கா ரங்கள்
புவியினிற்செய் திடமுதனு ளங்குராற் பணமினிது புரிதல் வேண்டும்
கவலைமிகு ரோகியமங் கலைமலடி கிழவியொடு கன்னி யன்றி
நவிற்றுசு மங்கலையே விளங்குறுபா லிகைதெளிக்க நன்மை யாமே.

இ-ரை.—பூமியினிடத்துள்ளவர்கள் பிறந்தகுழந்தைக்குச் செய்ய வேண்டுவனவாகிய சவுளம், உபநயனம், விரதங்கள், விவாகம், என்றுசொல்லப்பட்ட சமஸ்காரங்களைச் செய்வதற்குக் குறித்ததினத்திற்கு முதனுளில் அங்குரார்ப்பணமென்னுங் கிரி

யையினை யின்பத்துடனேசெய்தல்வேண்டும். மிகுந்தமனக்கவலையுடைய, நோயாளி விதவை, மலடி, கிழவி, கன்னிப்பருவப்பெண்கள் இவர்களை நீக்கிச்சொல்லப்பட்ட நல்லசுமங்கலிகளாலேயே அழகு பொருந்திய முளைப்பாலிகைதெளித்தல் நன்மையாகும். எ—று. (கூ)

அக்ஷராப்பியாசம்.

மகவினுக்கைந் தாம்வயசி லுத்தரா யணமதனின் மாசி நீக்கிப்
பகர்மதியிற் சென்னிகல மாதிரையோ ணம்புனர்தம் பயறு சோதி
திகழ்பனையத் தங்களிற்பொன் புந்திபுகர் நன்றுசனி சேயுந் தீதாம்
தகவில்பிர தமையிருத்தை யட்டமியு வாத்திரையோ தசியு நீக்கி

இ-ரை.—குழந்தைபிறந்த ஐந்தாம்வயதில் உத்தராயணத்தில் மாசிமாத நீக்கிச்சொல்லப்பட்ட மற்றையமாதங்களில்அஸ்வதி, ரேவதி, திருவாதிரை, திருவோணம் புனர்பூசம், சித்திரை, சுவாதி, விளங்காநின்ற அனுஷம், அஸ்தமென்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களில் தீமையைத்தருவதான செவ்வாய் சனியென்னும் வாரங்களை நீக்கி நன்மையைத்தருகின்ற வியாழம், புதன், வெள்ளி, யென்றுசொல்லப்பட்ட சுபர்கள்வாரங்களில் தகுதியல்லாத பிரதமை, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, திரையோதசியென்னுந் திதிகளைநீக்கி. எ—று. (௧0)

அன்புறுசுக் கிலத்திதிமுற் பகலினெட்டா மிடஞ்சுத்தி யாக வைந்தில்
இன்புறுபொன் புகர்மேவ நிலையோரா யொழித்துபய விலக்கி னத்தில்
முன்புறுவி நாயகனைக் கலைமகளை யன்பின்விதி முறைபூ சித்துத்
தென்பொலியா ரியன்சிறுவற் கட்சராப் பியாசநனி செயநன் றாமே.

இ-ரை.—யாவரும் விரும்புகின்ற பூருவபக்ஷத்து மற்றையதிதிகளில் உச்சிப்பொழுதிற்கு முற்பட்டகாலத்தில் எட்டாமிடஞ்சுத்தமாகவும் ஐந்தாமிடத்தில்மகிழ்ச்சிபொருந்திய குருசுக்கிரனிருக்கவும் ஸ்திரலக்கினங்களைநீக்கி உபயலக்கினங்களில் யாவராலும் எக்கருமத்திற்கு முதலிற்பூசித்தற்குரிய விநாயகக்கடவுளையும் சரஸ்வதிதேவியையும் விதிப்படி அன்புடனேபூசித்து உத்தமலக்ஷணம்பொருந்தி விளங்கும் உபாத்தியாயராலே அக்குழந்தைக்கு நன்மையைத்தருவதான அக்ஷராப்பியாசஞ்செய்விப்பதற்கு நலமாகும். எ—று. (௧௧)

சவுளமுறைத்த வத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

௪, ௧ திருவிருத்தம், ௫௱௯௯.

இருபத்திரண்டாவது

உபநயனமுறைத்தவத்தியாயம்.

வஞ்சிவிருத்தம்.

சுவிரத மன்னவ னேசொற்
சவுளமி யற்றலி தாகும்
நவிலரு முபநய னந்தான்
புவிமகி ழப்புகல் வாமால்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே வைதீகர்களாற் புகழ்ந்து சொல்லப்பட்ட சௌளமென்னுங் கருமத்தைச் செய்யவேண்டியவிதிகளை யிதுவரையிற்சொன்னேம் இனி சொல்லுதற்கரிய வுபநயனமென்னுங் கருமத்திற்குரியவிதிகளையும் இப்பூமியிலுள்ள வைதீகக்கிரியை தவறுமலொழுகு பலருங்கேட்டு மனமகிழும்படி சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுநிவர். எ—று. (க)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

போற்றுபுகழ் மறைநெறிநன் குயர்பிரம தேசுபலம் பொருளு மெய்த
ஆற்றுபந யனங்கருப்ப முதலேனுஞ் சனனமுத லாகவேனும்
சாற்றுமறை யவர்க்கேழெண் ணாண்டின்மகி ழரசருக்குத் தகுபன் னொன்
றில், ஏற்றமிகு வணிகர்தமக் குறுபனிரண் டினுமுரித்தா மிவைகணீங்கில்

இ-ரை.—பிறந்த புதல்வனுக்கு மேலாகியபிரமதேஜசும், நல்லபலமும், பலசெல்வச்சிறப்புகளுமுண்டாகும்படி பெரியோர்களால் வணங்கிப் புகழத்தக்கவேதவிதிப்படிக்குச் செய்யப்பட்ட வுபநயனமென்னுங்கிரியையானது தாயின்கருப்பத்திற் புத்திரன் றங்கியநாள்தொடங்கியாவது பூமியிற்பிறந்த நாள் தொடங்கியாவது உயர்ந்த வருணத்தினரென்று சொல்லப்பட்ட பிராமணகுலத்தவர்க்கு ஏழாவது, எட்டாவது, வயதிலும், மகிழ்ச்சிஸயத்தராநின்த க்ஷத்திரியகுலத்தவர்க்குப் பதினோராவது வயதிலும் பெருமைபொருந்திய வைஸ்யகுலத்தவர்க்கு பன்னிரண்டாவதுவயதிலும் செய்தற்குரியதாகும் மேற்சொல்லிய வருடங்களிற் செய்யத்தவறினல். எ—று. (உ)

அந்தணர்க்கீ ரெட்டாண்டின் காறுமர சருக்கிருபா னாண்டின் காறும்
முந்துவணி கருக்கறுநான் காண்டினள வும்புரிதன் முறைமை யாகும்
சிந்தைமகி ழினையகா லங்களினுந் தவறின்விராத் தியர்களாகி
உந்துபுகழ் மறையொடுகா யத்திரிக்கு மருகமலா துழல்வர் மாதோ

இ-ரை.—பிராமணருக்குப் பதினாருவதுவயதளவும், க்ஷத்திரியருக்கு இருபது வயதளவும், மேற்சொல்லிய வைஸ்யருக்கு இருபத்தினான்காவதுவயதளவு முபநய

னஞ்செய்வது கிரமமாகும் மனமகிழ்ச்சியுடன் செய்தற்குரியதென்று மேல்விதித்த விரண்டுகாலங்களிலுஞ் செய்யத்தவறினல் அப்படித்தவறினவர்கள் மிகுந்த கீர்த்தியையுடைய வேதங்களோடு காயத்திரிமுதலிய மஹாமந்திரங்களையுங்கிரமப்படி யத்தியயனஞ்செய்வதற்கு யோக்கியதையில்லாத விராத்தியரென்னும் வகுப்பிற்சேர்ந்தவர்களாகிப் பின்னரும் பலவிததுன்பங்களி லுழன்றுகொண்டிருப்பர். எ—று. (௫)

இருக்குமுதற் சாகையினோர் தமக்குமுறை யேகுருசுக் கிரன்சேய் புந்தி
உருக்கிளரென் றதிபதியவ் வவர்சாகா பதிகள்பல முறநன் றாகும்
தருக்குமிள வேனில்மறை யோர்க்குமுது வேனிலர சருக்குங் கூதிர்
திருக்கில்வணி கருக்கும்விசே டமதாம்பொன் புகர்மூடந் தீதா மன்னே.

இ-ரை.—இருக்குசாகையுடையவருக்கு குருவும், யஜுர்சாகை யுடையவருக்கு சுக்கிரனும், சாமசாகையுடையவருக்குஅங்காரகனும், அதர்வணசாகையுடையவருக்கு புதனும், பிரணவசாகையுடையவருக்கு அழகுவிளங்காநின்ற சூரியனும் அதிபதிகளாகும் உபநயனஞ்செய்துகொள்பவர்களுக்குஅவரவர்கள் சாகாதிபதிகள்பலம்பொருந்தியிருக்க நன்மையாகும் மகிழ்ச்சியைத்தருகின்ற இளவேனிற்காலம் பிராமணருக்கும் முதுவேனிற்காலம் க்ஷத்திரியருக்கும் கூதிர்க்காலம் மாறுபடுதலில்லாத வைசியருக்கும் விசேஷமாகும் யாவருக்கும் குருஅஸ்தமனம்சுக்கிராஸ்தமனம் தீதாகும். எ-று

திதிமாச நாளந்தஞ் சந்திராட் டகஞ்சன்மத் திரைய நாட்கள்
பதியார்வை ஞசிகமூன் றைந்தேழ்மு வொன்பானாள் பரிகங் கம்பம்
விதிபாதம் வைதிருதி வச்சிரங்கண் டங்கள்வியா காதம் விட்டி
அதிமாசஞ் சடசீதி யபராணஞ் சந்திகளந் தகநா டீதே.

இ-ரை.—திதிகளின் அந்தமும், மாதங்களின் அந்தமும், நக்ஷத்திரங்களின் அந்தமும், சந்திராஷ்டகமும் ஜன்ம அனுஜன்ம திரிஜன்மநக்ஷத்திரங்களும் எண்பத்தெட்டாம் பாதம்பொருந்திய வைஞசிகநக்ஷத்திரமும் மூன்று, ஐந்து, ஏழு, இருபத்தேழு என்னுநக்ஷத்திரங்களும், பரிகம், கம்பம், விதிபாதம், வைதிருதி, வச்சிரம், கண்டம் அதிகண்டம், வியாகாதம், என்னும் யோகங்களும் விஷ்டியென்று சொல்லப்பட்ட நாகவம், கிமிஸ்துக்கினம், சகுனி, சதுஷ்பாதம், என்னுங்கரணங்களும் இரண்டுஅமாவாசை வருகின்றமாதமும், சூரியன், உபயராசிமாதங்களிற் பிரவேசிக்கின்ற ஷடசீதி புண்ணியகாலங்களும் அபராண்ணகாலமும் காலைமாலைகளில் நேரிடும் இரண்டு சந்தியாகாலங்களும் அந்தகநக்ஷத்திரங்களும் தீதாகும். எ—று. (௬)

மொழியுமுத்த ராயணத்திற் சுக்கிலபக் கத்திரண்டு மூன்றைந் தாறேழ்
பழியிலொரு பதுபன்மூன் றுத்தமமாம் பன்னொன்று பன்னி ரண்டும்
ஒழிவறுமத் திமமாகுங் கிருட்டினத்திற் பன்மூன்று மொன்று நன்றும்
கழிதருமட் டமியிருத்ந்த யுவாக்களுந்தீ தாகுமெனக் கரைவர் மேலோர்.

இ-ரை.—உயர்வாகச்சொல்லப்பட்ட உத்தராயணத்தில் சுக்கிலபக்ஷத்தில்வரும் துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, குற்றமில்லாத தசமி, திரயோதசி, யென்னு மிந்தத்திதிகளுத்தமமாகும், ஏகாதசி துவாதசியென்னுமிரண்டுதிதிகளு மத்

திமமாகும். கிருஷ்ணபக்ஷத்தில் பெரியோர்களாலங்கீகரிக்கப்பட்ட, பிரதமை, திரயோதசியென்னு மிரண்டுதிதிகளும் நன்றாகும் அஷ்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமாவாசை இவைகள் தீமையைத்தருவனவென்று பெரியோர் சொல்லுவர். எ—று. (௬)

பொருவருமுத் திரத்திரைபஞ் சோதிசக டத்தமிரு பூசஞ் சென்னி
மிருகசிரம் பணிமூலங் கலம்பயரே ணஞ்சதயம் விட்ட நன்றாம்
குருபுதனுத் தமமிரவி மதிபுகர்மத் திமங்காரி குருதி வாரம்
மருவபாத் துறுசோம வாரமூந்தீ தாகுமென வகுப்பர் மிக்கோர்.

இ-ரை.—ஒப்பற்ற உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சுவாதி, உரோகணி அஸ்தம், புனர்பூசம், பூசம், அஸ்வதி, மிருகசீரிஷம், அனுஷம், மூலம், இரேவதி, சித்திரை, திருவோணம், சதயம், அவிட்டம், என்றசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களுபநயனத்திற்கு நல்லதாகும், வியாழம், புதன், என்னும்வாரங்க ளுத்தமமாகும் ஞாயிறு, திங்கள், வெள்ளி, யிந்தவாரங்கள் மத்திமமாகும். சநி, செவ்வாய், கிருஷ்ணபக்ஷத்தில்வரும் திங்கள் என்றசொல்லாநின்ற வாரங்கள் அதமமாகுமென்று மேலோர் சொல்லுவர். எ—று. (௭)

சிங்கமிது னங்கடகங் கன்னிதுலை மீனிடபஞ் சிலைநன் றாகும்
தங்குமறி தேள்குடமான் றீதாகு மதியோரை தனக்கே ழெட்டில்
பொங்குசுப ரிருக்கநல மீனத்திற் சுங்கனுறப் பொன்ன வன்றான்
துங்கமுறு தனுமீனங் கடகத்திற் பொருந்தமிகு சுகமுண் டாமே.

இ-ரை.—சிங்கம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மீனம், விருஷபம், தனுசு என்னும் இந்தலக்கினங்களுத்தமமாகும், பொருந்திய மேஷம், விருச்சிகம், கும்பம், மகரம், இந்தலக்கினங்கள்தீமையைத்தருவனவாகும். சந்திரலக்கினத்திற்கு, ஏழு, எட்டென்னு மிடங்கள் மிகுந்த நன்மையைச்செய்கின்ற சுபக்கிரகங்களிருந்தாலும், அழகுபொருந்திய மீனலக்கினத்திற் சுக்கிரனிருந்தாலும், மேன்மைபொருந்திய, தனுசு மீனம், கடகம், இந்தலக்கினங்களிற் குருவிருந்தாலும், மிகுந்த க்ஷேமமுண்டாகும். எ—று. (௮)

இலக்கினத்திற் குருபுதன்வெள் ளியுமிரண்டிற் புகர்குருவுமிலகு மூன்றில்
விலக்கருமெக் கோள்களுநான் கினிற்குருபுந் தியுமைந்தில் வெய்யோன்
சுங்கன், அலக்கணறு மதிகுருபுந் தியுமாறிற் பாவர்களு மவிரு மேழில்
துலக்கமுறு மதிபுதன்வி யாழமுமட் டமநன்கு சுத்த மாக.

இ-ரை—உதயலக்கினத்தில் குரு, புதன், சுக்கிரனும், இரண்டா மிடத்திற் சுக்கிரனும், குருவும், பிரகாசியாநின்ற மூன்றாமிடத்தில் நீக்கற்கரிய எந்தக்கிரகங்களும், நான்காமிடத்திற் குருவும், புதனும், ஐந்தாமிடத்தில் நன்மையைத்தருகின்ற சூரியன், சுக்கிரன், சந்திரன், குரு, புதன், என்னும் கிரகங்களும், ஆறாமிடத்திற்பாவக்கிரகங்களும், விளங்காநின்ற ஏழாமிடத்திற் பிரகாசியாநின்ற சந்திரன், புதன், குரு என்னுங்கிரகங்களும், எட்டாமிடஞ்சுத்தமாகவும். எ—று. (௯)

ஒன்பதினிற் சுக்கிரன்பொன் னவன்சோமன் மதிமகனு முளாசெய் பத்தில்
மின்பொலியி ரவிமதிசேய் புந்திகுரு சுக்கிரனு மிளிர்பன் னொன்றில்
கொன்பெறுமெக் கோள்களும்பன் னிரண்டினிற்சேயிரவிபுதன்குருவுநிற்க
இன்பமிகப் பெருகுறுமற் றிடங்களிற்கோ ளுறத்தீமை யெய்துந் தானே

இ-ரை.—ஒன்பதாமிடத்தில், சுக்கிரன், குரு, சந்திரன், புதன், என்னுங் கிரகங்களும், பத்தாமிடத்திற் கிரணங்களையுடைய சூரியன், சந்திரன், அங்காரகன், புதன் குரு, சுக்கிரனென்றுசொல்லப்பட்ட கிரகங்களும், அழகுபொருந்திய பதினோராமிடத்தில் பெருமைபொருந்திய எந்தக்கிரகங்களும், பன்னிரண்டாமிடத்திற், சூரியன் அங்காரகன், புதன், குரு, என்னுங்கிரகங்களு மிருப்பார்களாயின் மிகுந்தக்ஷேமகரமுண்டாகும், மேற்சொல்லிய முறைபிறழ்ந்து நவக்கிரகங்களிருக்குமாயின் கெடுதி சம்பவிக்கும். எ—று. (௧௦)

உலகினுப நயனவுறுப் புபவீதங் கலையினுரி யுக்த ரீயம்
குலவுறுமே கலைதண்ட மாமிவற்று ளுபவீதங் கோதி லாது
நலமுறுபஞ் சினைவிதியிற் கொணர்ந்து நூற் றதனைவிர னான்கு தன்னில்
இலகுறுதொண் ணூற்ருறு சுற்றியிவற் றிழையதனோ டிரண்டி ணக்கி.

இ-ரை.—உலகத்தில் உபநயனத்திற்குரிய அங்கங்களாகிய முப்புரிநூலும், கிருஷ்ணாசனமும், உத்தரீயமும், விளங்காநின்ற மேகலையாகிய முஞ்சிப்புற்கயிறும் ஆகிய விவற்றுள் உபவீதமானது, களங்கமற்று வெண்மையாகப் பிரகாசியாநின்ற நல்லபருத்திப்பஞ்சினை விதிப்படிகொண்டுவந்து, சரியாக நூற்றுநூலாக்கி யந்நூலை நான்குவிரல்களில் முறைப்படி தொண்ணூற்ருறுசுற்ருகச் சுற்றி அதன் நிகளத்துக்குத்தக்கபடி யிரண்டிழைகளை யதனோடுசேர்த்து. எ—று. (௧௧)

ஆசகலக் கழுவியிரு வோர்கிழக்கு மேற்குமுக மாக்க லந்து
காசிலிடக் கரங்கீழ தாகநனி முறுக்கிவலக் காங்கீ ழாக
ஏசறுமுப் புரியாகத் திரித்துமல ரிலைதருப்பை யிவற்று ளொன்றின்
நேசமொடு கிழக்கிருந்தோன் மகிழ்ந்துமுனம் வைத்ததினன் னீர்தெளித்து

இ-ரை.—அதிலுள்ள மலினம் நீங்கும்படி நன்ருகவலம்பிச் சுத்தஞ்செய்துகிழக்குமுகமாக ஒருவரும் மேற்குமுகமாக வொருவரும் நின்றுகொண்டு குற்றமில்லாத யிடதுகை கீழாகவும் வலதுகைமேலாகவுங்கொண்டு நன்ருகமுறுக்கிப் பின்பு வலதுகை கீழாகவு மிடதுகைமேலாகவுங் கொண்டு குற்றமற்ற மூன்ருக மடித்துத்திரித்து அவ்வாறு திரித்தகயிற்ற்ற, மலர், இலை, தருப்பை யிவற்றுளொன்றின்மே லன்புடன் கிழக்கில்நின்ற வன்மனமகிழ்ச்சியோடு முதலில் வைத்து அக்கயிற்றுக்கு நல்ல சலந் தெளித்து. எ—று. (௧௨)

முன்புறுகை களிற்பிடித்துத் தர்ச்சனியங் குட்டமதான் முடியுங் காலை
இன்புதவுங் கலைமகள்சா வித்திரிகா யத்திரியை யினிதி ருத்திப்
பின்பிறுக முடிந்திடுத லுபவீத மாகுமெழில் பெருக நாளும்
அன்பினைய னரியானுப வயங்குபுரி மூன்றிடத்து மமர்வர் மாதோ.

இ-ரை.—தனக்குமுன்னிருக்கின்ற கயிற்றை கையினலெடுத்து மூன்றுசுற்று கச்சுற்றிப் பிடித்துக்கொண்டு அங்குஷ்டம், தர்ச்சனியென்னும் இரண்டுவிரல்களா லுமுடியத்தொடங்குகையில் நன்மையைத்தருஞ் சரஸ்வதியையும், சாவித்திரியை யும், காயத்திரியையு மினிதாக வதிலாவாகனஞ்செய்து பின்பு நன்றாகயிறுகும்படி முடிபோடுவது உபவீதமாகும், அவ்வாறமைந்து விளங்கும் உபவீதத்தின் மூன்றுபுரி களிடத்தும் அழகுபொருந்தச் சதாகாலமு மன்புடனே பிரமன், விஷ்ணு, உருத்திர னென்று சொல்லப்பட்ட மும்மூர்த்திகளும் பொருந்துவார்கள். எ—று. (௧௩)

அழிவில்பிர ணவங்கனலிந் தாதவன்கால் பிதிரரய னரிய ரன்றுன்
செழியபுக ழுபவீதத் திழையொன்பான் றனக்குரிய தேவ ராகும்
பழியில்பிரு கத்திரிகா சிபர்புலகர் புலத்தியர்பார் பரவு தட்சர்
மொழிதரும ரீசிகிரு தங்கிரா வென்னுமிவர் முனிவ ராமே.

இ-ரை.—உலகோற்பத்திக்குக் காரணமாகி யழிவற்றபிரணவமும், அக்கினியும் சந்திரனும், சூரியனும், வாயுவும், பிதுர்க்களும், பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனு மாகிய இவ்வொன்பதின்மரும் மிகுந்தபுகழைத்தருவதான அவ்வுபவீதக்தி லடங்கிய வொன்பதிழைகளுக்கும் அதிதேவதைகளாகும், பிறராற்பழிக்கப்படாத பிருகு, அத் திரி, காசிபர், புலகர், புலஸ்தியர், உயர்ந்தோரால் வணங்கப்பட்ட தக்ஷர், யாவரும்பு கழ்கின்ற மரீசி, கிருது, அங்கிரா, என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பதின்மரு மவ் வொன்பதிழைகளுக்கு முரியரிஷிகளாகும். எ—று. (௧௪)

வண்ணமலி தருகலைமான் புள்ளிமா னிவையொன்றின் மயிர்க ளோடும்
அண்ணியசீ டுரியளவை யங்குலமூன் றிரண்டொன்று மகல மேவ
எண்ணுமுப வீதம்போ லிருதலையு மிணக்கியணிந் திடுத லாகும்
நண்ணுமுத்த ரியமுந்நூ லெனக்கலிங்கத் திருதலையு நணுக வேய்தல்

இ-ரை.—அழகுபொருந்திய புண்ணியபூமியில் வசிக்கும், கலைமான் அல்லது புள்ளிமான் என்னுமிவற்றுள் ஒன்றினது மயிர்களோடுங்கூடிய சருமத்தில் பிராம ணன், மூன்றங்குலவகலமும், க்ஷத்திரியனிரண்டங்குல வகலமும், வைசியன் ஒரு அங்குல வகலமும், ஆகியவளவினையுடையதாக வெடுத்து அதனிருபக்கங்களையும், முன்னுபவீதத்தை முடிந்ததுபோன் முடிந்து தரித்துக்கொள்ளல்வேண்டும் பொருந் திய வஸ்திரத்தி னிருபக்கங்களையும் முன்னும்பின்னுந் தங்கும்படி வுபவீதம்போல் தரிப்பதுவே உத்தரியமாகும். எ—று. (௧௫)

ஏதமறு முஞ்சியெனும் புன்மூன்று புரியினுறு மெழிற்க யிற்றைக்
காதலுட னிடைமேன்முச் சுற்றுறநன் கணிவதுமே கலையதாகும்
வேதியர்முன் மூவருக்கு முஞ்சிநெடு நாணல்சணை விதித்த தாகும்
ஓதுமிவை கிடையாதேன் மூவருக்குந் திகழ்தருப்பை யுரியதாமே.

இ-ரை.—குற்றமற்ற முஞ்சியென்னு மொருவகைப்புல்லின லழகுபொருந்த மூன்றுபுரியாகத் திரித்தகயிற்றை யிடுப்பில் மூன்றுசுற்றாகப்பொருந்த மிகுந்தவன்பு டனே கடிசூத்திரம்போலணிவது மேகலையென்றுசொல்லப்படும் அவ்வாறனமேகலை

யையணியுமிடத்து பிராமணன், முஞ்சிப்புல்லினாலும், க்ஷத்திரியன் நீண்டநாணற் புல்லினாலும், வைசியன், சணற்புல்லினாலு மணியவேண்டுமென்பது விதியாகும், மேற்சொல்லியவைகள் கிடைக்காவிடின் மூன்றுவருணத்தாருந் தருப்பைப்புல்லினாலமைத்துத் தரித்துக்கொள்ளுவது கிரமமாகும். எ—று. (௧௬)

தண்டமறை யோர்தமக்குக் கூவிளம்ப லாசமுமாஞ் சாற்று மன்னர்க்
கொண்டருமால் கருங்காலி வணிகர்தமக் கத்தியுட னிறலி யாகும்
கொண்டமுறை யேசிரநன் னுதனாசி யுயரம்வடுக் கோண்சூ டின்றி
மண்டதன்றோ லொடுமழகு வாய்ந்தவொரு தண்டுகொளல் வழக்காமன்றே

இ-ரை.—மேற்சொல்லிய தண்டமாவது, வேதத்திற்குரிய பிராமணர்களுக்கு வில்வமரமும், புரசமரமு முரியதாகும், சொல்லுகின்ற க்ஷத்திரியர்களுக்குஆலமரமும் வலிவமைந்த கருங்காலிமரமு முரியதாகும், வைசியர்களுக்கு அத்திமரமும், இச்சிமரமுமுரியதாகும், அவ்வாறுகொள்ளுமிடத்துப் பிராமணர்கள் சிரத்தளவினதாகிய வுயரமும், க்ஷத்திரியர்கள். நெற்றியளவினதாகிய வுயரமும், வைசியர்கள், நாசியளவினதாகிய வுயரமுமுள்ளதாகவும், வடுக்களும், கோணல்களும், சூடும், இல்லாததாகவும் மேற்றோலோடு பொருந்தி யழகுவாய்ந்ததுமான ஒப்பற்ற ஒரு தண்டத்தைக் கொள்வது முறையாகும். எ—று. (௧௭)

மன்னுவிநா யகபூசை புண்ணியா கம்மனுஞை மகிழ்சங் கற்பம்
தன்னமிலங் குரம்பிரதி சாநாந்தீ யுடனுதக சாந்தி யோமம்
முன்னமியற் றுபுகுமா போசனஞ்செய் துயர்வபன முடித்து மூழ்கிப்
பன்னுமெழிற் சிறுவனையுந் தாமுகமா வங்கியின் றென் பாலிருத்தி.

இ-ரை.—எடுத்தகருமங்களை யினிதாகமுடிக்கவல்ல விக்கினேஸ்வரபூசை புண்ணியாஹவாசனம், அனுஞை, மனமகிழ்ச்சியுடன்செய்யுஞ் சங்கற்பம் குறைவில்லாத அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், நாந்திமுகசிரார்த்தம், உதககும்பசாந்தி, அக்கினியிற்செய்வதாகிய ஓமம் இவைகளை முதலில் கிரமமாகநடத்திப் பின்பு தம்மாலியன்றவளாயில் பிரம்சரியச்சிறுவர்களுக்குப் போசனஞ்செய்வித்து, அதற்குமேல் சவுளவினைமுடித்து ஸ்நானஞ்செய்திருக்கிற உபநயனகருமத்திற்குரிய சிறுவனை அக்கினிகுண்டத்தின் தென்திசையில் வடக்குமுகமாக விருக்கச்செய்து. எ—று. (௧௮)

அங்கிவட பாலுபவீ தாதிகளை யிருத்திமனு வறைந்து நீராற்
புங்கமுறத் தெளித்துபவீ தாதிகளை மனுவினொடு பொருந்தத் தாங்கித்
துங்கமுறக் காலலம்பி யாசமித்தா னைந்தருந்தித் தோய முக்காற்
பங்கமறப் பருகிமுறை யேபிரம வுபதேசம் பரிவிற் செய்து.

இ-ரை.—அக்கினிதங்கிய வோமகுண்டத்தின் வடதிசையி லுபவீதத்தையுமதற் கங்கங்களாகிய கிருஷ்ணா[illegible]னம், மேகலைதண்டம், வுத்தரீய முதலியவைகளைவைத்து வேதமந்திரங்களைச்சொல்லி ஜலம்புரோக்ஷித்துச் சுத்தப்படுத்திப் பின்பு உபவீதமுதலியவைகளைக் கிரமப்படிதரித்துக்கொண்டு சுத்தமாகக்காலலம்பி யாசமனஞ் செய்து பஞ்சகௌவியமருந்தி மறுபடியும் ஆசமனஞ்செய்து விதிப்படி ஆசாரியராற்பிரமோபதேசஞ்செய்யப்பெற்று எ—று. (௧௯)

நீங்கரிய வாகுதிகள் புரிந்திரவி தனைத்தொழுது நிகழ்செந் தீயை
ஓங்குவலம் புரிந்தன்னை யவளுடனே பிறந்தாடன் னுடன்பி றந்தாள்
வாங்கருநல் லன்புடையா ளென்னுமிவர் தம்முளொரு வரைய டுத்துத்
தேங்குபுகழ்த் தெய்வமறை யந்தணர்கள் பவதிபிட்சாந் தேகி யென்றும்.

இ-ரை.—அவசியம் செய்யவேண்டிய ஆகுதிகளைநடத்திச் சூரியநமஸ்காரஞ் செய்துசெம்மைநிறங்கொண்டு விளங்காநின்ற வக்கினிகுண்டத்தைக்கிரமப்படி பிரதக்ஷணஞ்செய்து, தாய், தாயோடுகூடப்பிறந்தசிறியதாய், பெரியதாய், தன்னோடுதித்த சகோதரி, தன்னிடத்துக்கெடாத வன்புள்ளவர்களென்றுசொல்லப்பட்ட விவர்களுள்ளொருவரிடத்திற்சென்று மிகுந்தபுகழினையுடைய தெய்வத்தன்மைவாய்ந்த வேதங்களில் விதித்தபடி பிராமணர்கள், பவதி, பிக்ஷாந்தேகி என்றும். எ—று. (உ0)

தேற்றமுறு மன்னவர்க ளன்பொடுபிட் சாம்பவதி தேகி யென்றும்
போற்றுறுவை சியர்தேகி பிட்சாம்ப வதியெனவும் புகன்றிவ் வாறு
சாற்றருமுத் தினமிரந்துண் டிருபோதும் பொலிசமிதா தானஞ் செய்து
வேற்றுமையி னன்காநாள் பலாசவோ மமும்புரிதல் விதியா மன்னே.

இ-ரை.—கல்விஞானத்தையுடைய க்ஷத்திரியர்களன்புடனே பிக்ஷாம்பவதிதேகியென்றும், புகழ்கின்ற வைசியர்கள் தேகி பிக்ஷாம்பவதியென்றுஞ்சொல்லி யிவ்விதமாகச்சொல்லுதற்கரிய மூன்றுநாள் பிட்சையெடுத்துப்புசித்து ஒவ்வொருநாளிலும் காலைமாலையென்னு மிருசந்தியாகாலங்களிலும் விளங்காநின்ற அக்கினியில் ஓமஞ்செய்து, குறைவில்லாத நான்காவதுநாளில் பலாசஓமமும்விதிப்படி செய்வதுமுறைமையாகும். எ—று. (உக)

அருண்மருவு குருவேனுந் தந்தையா யினுமுபந யனஞ்செய் வித்து
மருவுபுக ழருமறைகண் முதலியபன் னூல்களெலா மகிழ்விற் றேர்ந்து
தருமநெறி வழாதொழுக வாசாரஞ் சவுசமொடு சமிதா தானம்
பொருவரிய சந்தியா வந்தனமுஞ் சீடனுக்குப் புகல வேண்டும்.

இ-ரை.—மேற்சொல்லிய வுபநயனக் கிரியைகளையெல்லாம், அருளேவடிவாய் வந்த ஆசாரியனாவது, தந்தையாவது, செய்வித்துக் கீர்த்தியினையுடைய அருமையாகிய வேதங்கள்முதலிய பலதருமசாஸ்திரங்களையெல்லாம் அன்புடனே யாராய்ந்து அவற்றில்விதித்தபடி தருமமுதலிய நல்லொழுக்கங்களிற் றவறாமலனுசரித்துவரவும் ஆசாரம், சவுசம், அக்கினி காரியங்கள், ஒப்பற்றசந்தியாவந்தனமுதலிய வைகளையும் சீடனுக்குபதேசஞ் செய்யவேண்டும். எ—று. (உஉ)

உபநயனமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - கூ௱உ.

இருபத்துமூன்றாவது

உபாகருமமுறைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

புனிதமு முழுவலும் பொருந்து மன்னனே
நனிதிகழ் வுறுமுப நயனஞ் சொற்றனம்
கனிவொடு புரியுபா கருமந் தன்னையும்
தனியரு மறைநெறி சாற்று வாமரோ.

இ-ரை.—பரிசுத்தமான குணத்தையும் நீங்காதபேரன்பையுமுடைய சுவிரதமகாராஜனே கேளும் இதுவரையும் மேன்மையாக விளங்காநின்ற உபநயனக்கிரியை நடத்தவேண்டிய கிரமங்களைச்சொன்னோம்; இனி, ஒப்பில்லாத அருமையாகிய வேதவிதிப்படி மனமகிழ்ச்சியுடனே செய்யப்படுகின்ற உபாகருமக்கிரியையின் முறைமையையும் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுநிவர். எ—று. (க)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இலகுபா கருமஞ் சிங்கமா மதியி னிருக்குவே திகள்சிர வணத்தும்
நிலவெசுர் வேதி பூரணை தனிலு நிகழ்த்திய சாமவே தத்தோர்
நலிவின்முற் பக்கச் சதுர்த்தியோ டத்த நாளினு மதர்வண வேதி
பொலிசிர வணத்தும் பிரணவத் தவர்கள் பூரணை யினுஞ்செயன் முறையே

இ-ரை.—இவ்வுலகத்தில் நிலைபெற்று விளங்காநின்ற வுபாகருமக்கிரியைகளை இருக்குவேதிகள், ஆவணிமாதத்தில்வரும் திருவோணநக்ஷத்திர வியாப்தியிலும், யஜுர்வேதிகள், சந்திரன் சோடசகலைகளோடுங்கூடி விளங்கும் பௌர்ணமிவியாப்தியிலும், சாமவேதிகளென்று சொல்லப்பட்டவர்கள், சந்திரன்கலைகளாற் குறைவில்லாத பூர்வபக்ஷச் சதுர்த்தியோடுவரும் அஸ்தநக்ஷத்திரவியாப்தியிலும், அதர்வண வேதிகள் அழகிய திருவோணநக்ஷத்திரவியாப்தியிலும் பிரணவவேதிகள்பௌர்ணமி வியாப்தியிலும் செய்வது கிரமமாகும். எ—று. (உ)

கிரகணஞ் சங்கி ரமமதி மாசங் கிளர்மல மாசமுன் றூடம்
விரவிடிற் கடக மதியினிற் புரிக விளம்புமம் மதியினுந் தோடம்
தெரிதரிற் கன்னி மதியினுற் றுகவித் திங்கண்மூன் றினுஞ்சம மாக
மருவிய தோட முற்றிடிற் சிங்க மதியினிற் செய்வது விதியே.

இ-ரை.—மேற்சொல்லிய ஆவணிமாசத்தில் சூரியகிரகணம் சந்திரகிரகணம் மாதப்பிறப்புகள் இரண்டு அமாவாசைகள் இரண்டு பௌர்ணமிகள் முதலாகிய தோஷங்

கள் நேரிடுமாகில் ஆடிமாதத்திலே செய்யவேண்டும் சொல்லப்பட்ட அந்த ஆடிமாசத்திலும் அவ்வகைத் தோஷங்களுண்டாகுமாயில் புரட்டாதிமாசத்திலே செய்யவேண்டும் இந்தமூன்றுமாசங்களிலும் சமமாக மேற்சொல்லிய தோஷங்கள் நேரிடுமாகில் முதலிலே எடுத்துச் சொல்லிய ஆவணிமாசத்திலேயே செய்துமுடிப்பது முறையாகும். எ—று. (௫)

புகர்குரு மூட மெய்திய காலம் புகலுமச் சாகையோர்க் காகா
நிகழுபா கரும நித்திய மதனு னிலவத்தி யயனவா ரம்பம்
புகழ்பெறச் செய்தன்முக்கிய மெனலாற் பொருந்துசங் கிரமதோடத்துக்
கிகழ்வறு பிராயச் சித்தவா குதிசெய் தியற்றுத னூன்முறை யாமே.

இ-ரை.—சொல்லப்படுகின்ற சுக்கிரன் மூடமெய்திய காலம் யஜுர்வேதிகளுக்கும் குருமூடமெய்திய காலம் இருக்குவேதிகளுக்கும்ஆகாது நடத்தவேண்டிய உபாகருமக்கிரியையானது நித்தியமாதலினாலும் விளங்காநின்ற வேதாத்தியயனவாரம்பம் புகழ்ச்சிபொருந்தச்செய்யவேண்டுவது. முக்கியமென்றுசொல்லப்படுவதினாலும்உண்டாகிய மாதசங்கிரமதோஷத்திற்கு நிந்தையில்லாத பிராயச்சித்தவோமம் விதிப்படி செய்து பின்பு உபாகருமக்கிரியை நடத்துவது தருமசாஸ்திர சம்மதமாகும். எ—று.

உதயகா லத்தி னனசந் திகளை யுளுற்றுபு சமிதைதா னஞ்செய்
திதமுறு வபனஞ் செய்துநீ ராடி யெழிலுப வீதநன் கணிந்திட்
டதிபுகழ்க் காமோ காரிடி செபம்பே ரன்பினூற் றெட்டினி தியற்றித்
துதிபெறு மாத்தி யானிகம் புரிந்து சொன்மகா சங்கற்ப நவின்று.

இ-ரை.—சூரியோதயகாலத்தில் ஸ்நானங்களையும், சந்தியாவந்தனங்களையுஞ் செய்து, சமிதாதானங்களையும் நடத்தி, நலம்பொருந்திய க்ஷவரஞ் செய்துகொண்டு சர்வாங்க ஸ்நானம்செய்து அழகுபொருந்திய நூதன எகஞோபவீதந்தரித்து மிகுந்த வன்புடனே நூற்றெட்டுத்தரம் பெரும்புகழ்வாய்ந்த காமோகாரிஷி ஜெபஞ்செய்து, தியானபூர்வகமாகச் செய்யப்படும் மாத்தியான்னிககருமங்களையுஞ்செய்து மேலோரால் ஏற்படுத்திய மகாசங்கற்பமுஞ் செய்துக்கொண்டு. எ—று. (௬)

மொழிதரு நானஞ் செய்துப வீத முஞ்சியா திகளுநன் கணிந்தே
எழில்பெறு காண்ட ரிடிதருப் பணஞ்செய் தின்பருள் கணபதி பூசை
பொழியருட் புண்ணி யாகநல் வருண பூசையு மன்பொடு புரிந்து
பழிதபு காண்ட விருடியோ மம்பார் பரவுநூற் றெட்டினி தாற்றி.

இ-ரை.—தருமசாஸ்திரங்களிற் சொல்லிய விதிப்படி ஸ்நானஞ்செய்து உபவீதம் மௌஞ்சிகிருஷ்ணஜினமுதலியவைகளை யணிந்து அழகுபொருந்திய காண்டரிஷிதர்ப்பணஞ் செய்து எல்லாநலங்களையு மனுக்கிரகிக்கும்படி விநாயகபூஜைமேலான தெய்வத்தன்மையுள்ள புண்ணியாகவாசனமும் வருணபூஜையு மன்புடனேசெய்து உலகத்தாரால் துதிக்கப்பட்ட நற்குணமமைந்த காண்டரிஷியோமம் நூற்றெட்டுத்தர முறையாகச்செய்து. எ—று. (௭)

மற்றைநா ளுதயத் தறலிடை மூழ்கி வயங்குறு சந்திவந் தனைசெய்
தற்றமில் சமிதா தானமு முறையி னூற்றிய பின்பலா சத்தின்
உற்றிடு சமித்தா லாயிரத் தெட்டென் றோதுமா குதிபுரிந் தனலின்
முற்றில்சீர்க் காயத் திரிசெபஞ் செய்து முடித்திட லுபாகன்ம நெறியே.

இ-ரை.—மறுநாள் சூரியோதயகாலத்திற் சுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து, விள ங்காநின்ற சந்தியாவந்தனமுஞ்செய்து கிரமப்படி குறைவில்லாத சமிதாதானஓமமுஞ் செய்து முடித்தபின்பு புரசினது சமித்தினால் மந்திரபூர்வகமாயமைந்த அக்கினியில் அதற்குரிய மந்திரங்களைச்சொல்லி ஆயிரத்தெட்டாகுதிசெய்து நிறைந்தபுகழினையு டைய காயத்திரி மகாமந்திரத்தைச்செபித்து முடிப்பது உபாகன்ம விதியாகும். எ-று.

உபாகருமமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - சு௱உஅ.

இருபத்துநான்காவது
வேதாரம்பமுரைத்த வத்தியாயம்.

கலிவிருத்தம்.

பொற்பொடு மேன்மை பொருந்துல கத்தில்
சொற்பெறு பாகரு மஞ்சில சொற்றும்
நற்புக ழோடு நலம்பல நல்கும்
அற்புத வேதா ரம்ப முரைப்பாம்.

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே, அழகுடனே மேன்மையும் பொருந்திவி ளங்காநின்ற இந்த உலகத்தின்கண் மேலோராலெடுத்துச்சொல்லுதற்குரிய வுபாகர் மவிதிகளுட் சிலவற்றையெடுத்துச்சொன்னோம், இனி அழியாதகீர்த்தியோடு பலவ ளங்களையுங் கொடுக்கத்தக்க மேன்மையையுடைய வேதாரம்பஞ்செய்தற்குரிய விதிக ளையுங் கிரமமாகச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வேதவா ரம்பஞ் சித்திரை யவிட்ட மிருகசீ ரிடமிரு பூசம்
ஆதிரை யோணஞ் சதயநல் லனுட மத்தமொண் சோதியுத் தமமாம்
கோதிலுத் திரமூன் றுரோகணி ரேவதி குதிரையு மத்திம மாகும்
தீதுமற் றொழிந்த நாட்கள்சுக் கிரன்மால் செய்யபொன் வாரமு நலமே.

இ-ரை.—வேதாரம்பஞ் செய்வதற்குச் சித்திரை, அவிட்டம், மிருகசீரிஷம், பூசம், புனர்பூசம், திருவாதிரை, திருவோணம், சதயம், நன்மையைத்தரு மனுஷம் அஸ்தம், அழகுபொருந்திய சுவாதி, என்னும் நட்சத்திரங்களுத்தமமாகும், குற்ற மற்ற வுத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, இரேவதி, அஸ்வதி யென்னும் நக்ஷத்திரங்கள் மத்திமமாகும், மற்றையநக்ஷத்திரங்கள் தீமையைத்தருவனவாகும் புதன், வியாழம், வெள்ளி, என்று சொல்லப்பட்ட வாரங்களுத்தமமாகும். எ—று. (௨)

மதிகதிர் வார மத்திமஞ் சனிசேய் வாசர மாணம தாகும்
திதியிரண் டொருப தாறுமூன் றைந்து திகழ்பதி னென்றுமுத் தமமாம்
துதிதரு பதின்மூன் றேழுமத் திமமாந் துலங்கிரு நான்குமுந் நான்கு
பதியுவா விருத்தை யொன்றுதீ தாகும் பகாரு மறைதொடங் குதற்கே

இ-ரை.—சொல்லுதற்கரிய வேதாரம்பஞ்செய்வதற்கு ஞாயிறு, திங்க ளிந்தவாரங்கள் மத்திமமாகும், செவ்வாய், சநி, என்னும் வாரங்கள் தீமையைத் தருவனவாம். துதியை திருதியை, பஞ்சமி, சஷ்டி, தசமி, ஏகாதசி, யென்றுசொல்லப்பட்ட திதிகளுத்தமமாகும். மேன்மையமைந்த, திரையோதசி, சப்தமி, என்னுமிவ்விரண்டுதிதிகளுமத்திமமாகும். விளங்காநின்ற அஷ்டமி துவாதசி அமாவாசை பௌர்ணமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பிரதமை, இந்தத்திதிகள் தீமையைத் தருவனவாகும். எ-று.

சயனமோ டுத்தா யனமெனு மேகா தசிமனு வாதியு காதி
அயர்வறு சங்கி ரமங்கள்சத் தமியோ டவிர்திரை யோதசி நிசிகள்
உயர்பிர தோட காலங்க டனிலு மொளிர்மறை பயிலுத லாகா
தியலிடி விழல்பூ கம்பிதங் கிராண மிவைகட்கு முத்தினந் தீதே.

இ-ரை.—சயன, ஏகாதசி, உத்தாயன, ஏகாதசி, மன்வாதிகள், யுகாதிகள் தவறுதலில்லாத சங்கிரமங்கள் விளங்காநின்ற சத்தமி, ஏகாதசியென்னுந் திதிகளின்இராத்திரிகள் மேன்மைபொருந்திய பிரதோஷகாலங்கள் இவைகளில் பிரகாசிக்கின்ற வேதாத்தியயனஞ்செய்யலாகாது, பூமியிற்பொருந்த இடிவிழுதல் பூகம்பிதமாதல்கிரகண காலம் இவைகளுக்கு மூன்று தினம்வரையில் வேதாத்தியயனஞ்செய்வது கூடாது. எ—று. (௩)

குருவொடு சிட னிருவர்மத் தியினிற் கோழிகார்க் காகமண் டூகம்
பொருவரு பசுமூ டிகம்பணி கீரி பூனைக ளேகின்முத் தினமும்
மருவுமவ் விருவர் நடுவினின் முயனுய் வந்திடிற் றிங்களோ ராறும்
திருவளர் வேத வத்திய யனந்தான் செய்திடிற் றீமையுண் டாமே.

இ-ரை.—ஆசாரியன், மாணுக்கனென்னு மிவ்விருவர்களுக்கும் நடுவில், கோழி, கருங்காக்கை, தவளை, ஒப்பற்றபசு, பெருச்சாளி, பாம்பு, கீரிப்பிள்ளை, பூனைகளென்னுமிவைகள் குறுக்கேசெல்லுமாயின், மூன்றுநாளும் பொருந்திய, அவ்விருவருக்கு மத்தியில், முயல், நாய், இவைகள்வந்தால் ஆறுமாதமும் எல்லாநன்மைகளுமுண்டாவதற்கேதுவாகிய வேதாத்தியயனத்தைச் செய்யக்கூடாது, இதைக்கடந்து செய்வார்களாயின் பலவிததுன்பங்களுண்டாகும். எ—று. (ரு)

உத்தம முபய விலக்கின மாகு முறைதரு சரங்கண்மத் திமமா
நத்துறு திரங்க ளதென மொழிவர் நான்கிரு நான்கெனு மிடங்கள்
சுத்தம தாகச் சுபர்பல மெய்தச் சுருதிக டுவக்கநன் றுமால்
வித்தியா ரம்பஞ் செய்திட விதற்கு விளம்புகா லங்களுத் தமமே.

இ-ரை.—வேதாத்தியயனஞ்செய்வதற்கு தனுசு, மீனம், மிதுனங், கன்னி, என்னுமுபையலக்கினங்க ளுத்தமமாகும், மேஷம், கர்க்கடகம், துலாம், மகரமென்னுஞ் சரலக்கினங்கள் மத்திமமென்று சொல்லுவர் விரும்பப்பட்டவிருஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம், என்னும், ஸ்திரலக்கினங்களதமமாகும், உதையலக்கினத்திற்கு நான்காமிடமும் எட்டாமிடமுமாகிய யிவைகள் சுத்தமாயிருக்கவும், சுபக்கிரகங்கள் பலமடைந்திருக்கவும் நன்மையாகும். இவ்வேதாத்தியயனத்திற்கு எடுத்துச்சொல்லப்பட்ட காலங்கள் வித்தியாரம்பஞ்செய்வதற்கு முத்தமமாகும். (சு)

புந்திவா ரத்திற் கன்னியோ ரையினிற் புதன்மதி யிரவிநின் றுலும்
சந்திர னிரவி யதியுச்ச மாகத் தகுசுப ருதயமுற் றுலும்
முந்துறு மிரவி யதியுச்ச மெய்த மொழிபுதன் விடையினிற் புகரோன்
உந்துமீ னுற்று லுஞ்சா சுவதி யோகமாங் கலைதொடங் குதற்கே

இ-ரை.—புதன்கிழமையில் கன்னியராசியில், சந்திரன், சூரியன், புதன், இவர்களிருந்தாலும், சந்திரனுஞ்சூரியனும் அதியுச்சமடைந்திருக்க உதையலக்கினத்தில் சுபக்கிரகங்களிருந்தாலும், மேன்மையையுடைய சூரியனதியுச்சமடைந்திருந்து சொல்லப்பட்ட விருஷபலக்கினத்திற் புதனிருந்தும், துதிக்கின்ற மீனலக்கினத்திற் சுக்கிரனிருந்தாலும், வித்தியாரம்பஞ்செய்வதற்கு நன்மையைத்தருகின்ற சாஸ்வதியோகமென்று சொல்லுவர். எ—று. (எ)

பொன்னவன் வாரந் தனிற்குரு வோரை பொருந்துநண் டதிலைந்தாம் பாகை, தன்னிற்பொன் னுறமற் றஃதிலக் கினமாய்ச் சார்ந்திடில் வித்தியா யோகம், பன்னுசுக் கிரன்வா ரத்திரு பத்தேழ் பாகைமீ னிற்புகர் மேவ மின்னிய புகரோ ரையிற்கய லுதயம் வித்தியா யோகநன் றுமே.

இ-ரை.—குருவாரத்திற் குருவோரையில் குருவினுச்சஸ்தானமாகிய கடகலக்கினத்தில் ஐந்தாம்பாகத்திற் குருவிருந்து அவ்விலக்கினமே யுதயலக்கினமாயிருந்தால் வித்தியாயோகமென்றும் சுக்கிரவாரத்தில் சுக்கிரவோரையில் பொருந்திய மீனலக்கினத்தில் இருபத்தேழாவது பாகத்திற் சுக்கிரனிருந்து பிரகாசம்பொருந்தியசுக்கி

ரனுக்கு உச்சஸ்தானமாகிய மீனலக்கினமே யுதயலக்கினமாயிருந்தால் மேற்சொல்லிய வித்தியாயோகமென்றும் இவைநல்லதென்றும் சொல்லுவர். எ—று. (அ)

புனர்வசு பூச மிரேவதி யத்தம் பொருந்துரோ கணியொடு கேட்டை
யனுடமிந் நாட்கள் வியாகர ணத்துக் காகுமா திரைதிரு வோணம்
இனியசு வாதி யுத்திரத் திரைய மெழிற்கரம் பூசநற் சதயம்
தனியுரோ கணியச் சுவினியிந் நாட்க டருக்கநூ றுவக்கநன் றுமே.

இ-ரை.—வியாகரணசாஸ்திரங்களை ஆரம்பிப்பதற்கு பூசம், புனர்பூசம், இரேவதி அஸ்தம், பொருந்தியவுரோகணி, கேட்டை, அனுஷம், என்னுமிந்நக்ஷத்திரங்களுத்தமமாகும், தருக்கசாஸ்திரங்களை ஆரம்பிப்பதற்குத் திருவாதிரை, திருவோணம்இன்பத்தைத்தருவனவாகிய, சுவாதி, யுத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அழகுபொருந்திய அஸ்தம், பூசம், நல்லசதையம், உரோகணி, அஸ்வதி, இந்த நக்ஷத்திரங்களுத்தமமாகும். எ—று. (௯)

சோதிபூ சங்கள் சதயமோ டத்தந் தோணிமா மூலமிந் நாட்கள்
சோதிடத் துக்கா மவிட்டநா ளுலகு சொலுந்தனுர் வேதத்தி னுக்குந்
தீதறு மாயுள் வேதத்தி னுக்குஞ் சிறந்தது திகழ்புனர் பூசம்
நீதிநூல் சாமுத் திரிகங்காந் தருவ நிகழ்த்துமிந் நூல்களுக் காமே.

இ-ரை.—சோதிடசாஸ்திரங்களை அப்பியாசஞ் செய்யத் தொடங்குவதற்கு, சுவாதி, புனர்பூசம், பூசம், சதயம், அஸ்தம், இரேவதி, அசுவதி, மூலம், இந்நக்ஷத்திரங்களுத்தமமாகும், தனுர்வேதங்களை வாசிப்பதற்கும், ஆயுள்வேதமாகிய வைத்தியசாஸ்திரங்களைக் கற்பதற்கும், உயர்ந்தோராற்புகழப்பட்ட அவிட்ட நக்ஷத்திரமுத்தமமாகும், நீதிசாஸ்திரங்கள் சாமுத்திரிகாசாஸ்திரங்கள், காந்தருவசாஸ்திரங்களென்று சொல்லப்பட்டவைகளை யாரம்பிப்பதற்கு விளங்காநின்ற புனர்பூசநக்ஷத்திரமுத்தமமாகும். எ—று. (௧௦)

அசுவதி யசுவ சாத்திரத் துக்கா மாதிரை சித்திரை யவிட்டம்
இசையிரு பூச முத்திரத் திரைய மினியபார் மான்றலை யோணம்
உசிதமாஞ் சோதி சதயமிந் நாட்க ளொப்பறு சிற்பநூற் காகும்
வசையறு சதயஞ் சோதியிந் நாட்கண் மகிழ்தரு யோகநூற் காமே.

இ-ரை.—அஸ்வசாஸ்திரங்கற்பதற்கு அஸ்வதி நக்ஷத்திரமுத்தமமாகும், ஒப்பற்றசிற்பசாஸ்திரங்களைத் தொடங்குவதற்கு, திருவாதிரை, சித்திரை, அவிட்டம்,புனர்பூசம், பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, மிருகசீரிஷம், திருவோணம், மேன்மைபொருந்திய, சுவாதி, சதயம், இந்நக்ஷத்திரங்க ளுத்தமமாகும், குற்றமற்றமகிழ்ச்சியைத்தருவதான யோகசாஸ்திராப்பியாசஞ் செய்வதற்கு, சதயம், சுவாதி யிந்நக்ஷத்திரங்க ளுத்தமமாகும். எ—று. (௧௧)

மந்திரா ரம்பஞ் செயவிடை யரிதேள் வன்றனு துலைகுட மீனம்
சுந்தர மாமிம் மதிகணன் றுகுந் துலங்குகர்க் கடகமா மிதுனம்

கொந்தவிழ் தெரியற் கன்னியா டென்னக் குலவுமிம் மதிகளு தாகும்
நந்துசேய் வார முவாவொடு சதுர்த்தி நவிலுமட் டமியிவை தீதே

இ-ரை.—மந்திரசாஸ்திரங்களைக் கற்கத்தொடங்குவதற்கு, வைகாசி, ஆவணி, கார்த்திகை, பலமுள்ள மார்கழி, ஐப்பசி, மாசி, பங்குனி, என்றுசொல்லப்பட்டஅழகுபொருந்திய இம்மாதங்கள் நன்மையாகும், விளங்காநின்ற ஆடி, தை, ஆனி, முறுக்கவிழ்ந்து நறுமணம்வீசாநின்ற புஷ்பமாலையைத்தரித்த பெண்வடிவுள்ள புரட்டாசி சித்திரையென்னு மிம்மாதங்கள் தீமையைத்தருவனவாகும், கேட்டைத்தருவதானசெவ்வாய்க்கிழமையும், பௌர்ணமி, சதுர்த்தி, சொல்லப்பட்ட அஷ்டமியென்னுந்திதிகளுந் தீமையைத்தருவனவாம். எ—று. (௧௨)

பூசமோ ரிரண்டுத் திரங்கண்மூன் றனுடம் புகலுரு ளகல்மகங் கேட்டை
தேசுறு சோதி யாதிரை யோணஞ் சித்திரை யத்தநன் றாகும்
மாசுதீர் சரங்க ளுத்தம முபய மத்திமந் திரங்களு தாகும் (ற்கே.
பேசுறு மெட்டா மிடஞ்சுத்தி வேண்டும் பிறங்குமா மனுத்தொடங் குத

இ-ரை.—விளங்காநின்ற சிறப்பினையுடைய மந்திரசாஸ்திரங்களைத் தொடங்குவதற்குப் பூசம், புனர்பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அனுஷம், உரோகணி, விரிந்தபுகழினையுடைய மகம், கேட்டை, ஒளிபொருந்திய சுவாதி, திருவாதிரை, திருவோணம், சித்திரை, அஸ்தமென்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள் நல்லனவாகும், குற்றமற்ற, மேஷம், கடகம், துலாம், மகரமென்னுஞ் சரலக்கினங்களுத்தமமாகும், மிதுனங் கன்னி, தனுசு, மீனமென்னு முபயலக்கினங்கள் மத்திமமாகும், விருஷ்பம், சிங்கம், விருச்சிகம், கும்பம், என்னும்ஸ்திரலக்கினங்க ளதமமாகும் யாவரும்புகழப்பட்ட யெட்டாமிடஞ்சுத்தமாகவிருக்கவேண்டுமென்றுசொல்லுவர்.எ-று.()

வேதாரம்பமுறைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௬௱௬௧.

இருபத்தைந்தாவது

பிரமசரியவிதியுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

விதியி னெவரும் பாவுதனி வேதாரம்ப மினிது ரைத்தாம்
அதிருந் தரங்கக் கருங்கடல்சூழ வனி யோர்க ளணியோம்பும்
மதிசெய் சதுராச் சிரமத்துள் வயங்கு முதலாச் சிரமமெனத்
துதிசெய் பிரம சரியவிதி சுருதி நெறியே சிறிது ரைப்பாம்

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே! வரன்முறைப்படி யெவ்வுலகத்திலுள்ள வருங் கொண்டாடத்தக்க ஒப்பில்லாத வேதாரம்பவிதிவினைக் கிரமமாகச்சொன்னோம் இனி ஒலிக்கின்ற அலைகளையுடைய பெரியகடலாற் சூழப்பட்ட யிவ்வுலகத்திலுள்ள உயர்ந்தோர்களாற் றவறும லனுஷ்டிக்கத்தக்கதும் யாவராலு நன்குமதிக்கப் பெற்றது மான பிரமசரியம், கிருகஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசமென்னும் நான்காச்சிரமங்க ளில் விளங்காநின்ற முதலாவதாச்சிரமமென்று சொல்லப்பட்ட கீர்த்தியினையுடைய பிரமசரியவிதிகளுட் சிலவற்றை வேதங்களில் விதித்தபடியெடுத்துச் சொல்லுவோ மென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

சீரார் தருநல் லுபநயனஞ் செய்து கொண்ட மாணக்கன்
வாரார் முந்நூ லாதிகளை வயங்கத் தரித்து நாடோறும்
பேரார் நதியின் விதிவழியே பிறங்க மூழ்கித் தூய்மையனாய்
ஏரார் தேவர் முனிவருட னிலகு பிதிரர் தருப்பணமும்

இ-ரை.—மேன்மைபொருந்திய அழகிய உபநயனமென்னுங் கிரியை ஆசாரிய ரால் மந்திரபூர்வகமாகச்செய்துகொண்ட மாணாக்கனானவன், விதிப்படி யளவமைந்த யக்ஞோபவீதம், தண்டம், மௌஞ்சி, கிருஷ்ணாஜனமுதலிய பிரமசரியத்திற்குரிய அங்கங்கள் தன்னிடத்தில் விளங்கத்தரித்து, பிரதிதினமும் பெருமை பொருந்திய கங்கைமுதலிய புண்ணியநதிகளிலேனும், பத்மாகரமென்னுந் தாமரையமைந்தநீர்நிலை களிலேனும் ஸ்நானவிதியுட் கூறியவொழுங்கின்படித் தேகமானது மலினநீங்கிப்பிர காசிக்கும்படி ஸ்நானஞ்செய்து பரிசுத்தமுடையவனாய் அழகுபொருந்திய தேவர்க ளுக்கும், ரிஷிகளுக்கும், பிதுரர்களுக்கும், விடாது செய்யவேண்டிய தர்ப்பணங் களையும். எ—று. (உ)

பரிவிற் காலை மாலையினும் பாவு மேலாஞ் செழுங்கனலிற்
புரியுஞ் சமிதா தானமெனப் புகலுந் தன்னியோ மங்களையும்

கரிசு தீர்த்தின் புதவுதிரி கால சந்தி வந்தனத்தோ
டுரிய செபமுஞ் செய்துநவி லுபத்தா னமுஞ்செய் திடல்வேண்டும்.

இ-ரை—அன்புடனே காலை மாலையென்று சொல்லப்பட்ட விரண்டுசந்தியாகாலங்களிலும், வணங்குதற்குரிய மேன்மையமைந்த நன்மையாகிய வக்கினிமுகத்திற் செய்யப்படுவதான * சமிதாதானமென்று பெரியோர்களாற் சிறப்பித்துச் சொல்லப்பெற்ற வொப்பில்லாத வக்கினிகாரியங்களையும் தான்செய்துள்ள பாவகருமங்களையெல்லா மறவேயொழித்து மேலான மோக்ஷநிலையைத் தருவதற்கேதுவாயுள்ள காலை மாலை. உச்சியென்று சொல்லப்பட்ட திரிகாலங்களிலுஞ் சந்தியாவந்தனங்களையும் கணித்தற்குரிய காயத்திரிஜெபமுஞ்செய்து அதற்குமேற் செய்யவேண்டுவனவாகிய உபஸ்தானங்களையும் விடாதுசெய்யக்கடவன். எ—று. (ரு)

ஈன்றாள் புதல்வி யுடன்பிறந்தா ளெனினுந் தனியோ ருழிவைகல்
மான்றோன் முஞ்சி தண்டொழித்தன் மருவு தமர்கே ளொடு துய்த்தல்
தோன்று விடயங் களினெஞ்சஞ் சுழலவிடுத்தல் வதைசெய்தல்
ஆன்றோ ரிகழ்புல் லரைக்கூட லடைக்காய் தின்ற லிவைதீதே.

இ-ரை.—தன்னைப்பெற்றதாய், தன்வயிற்றிற்பிறந்தாலன்ன புத்திரிமுறைமையுடையவள், தன்னுடன்பிறந்த சகோதரியென்றசொல்லப்பட்டவர்களாயிருந்தாலும் அவர்களோடு தனித்தோரிடத்திலிருத்தலும், கிருஷ்ணஜினம், மௌஞ்சி, தண்டு, இவைகளை நிஷ்காரணமாய் கைவிட்டிருத்தலும், தனக்குப்பொருந்திய வுறவினர் நட்பினரென்னு மிவர்களோடிருந்து உண்டிமுதலியனபுசித்தலும், அப்போதைக்கப்போதுண்டாகும் ஐம்புலவிஷயவாசனைகளில் மனதைச் சுழலவிடுத்தலும், ஜீவயிம்சை செய்தலும் பெரியோர்களாற் பழிக்கப்பட்ட பதிதர்களோடு கூட்டுறவா யிருத்தலும், தாம்பூலதாரணஞ்செய்துக் கொள்ளுதலும் குற்றமாகும். எ—று. (சா)

கந்த மலர்தேன் சுவைதயிர்பால் கருது மிறைச்சி யெழின்மடவார்
முந்து காமங் குரோதாதி மொழியப் பியங்க னந்திலதம்
நந்தில் கவிகை கழல்சூது நடித்தல் பாடல் வம்பு மொழி
உந்து பழிபொய் முதலியதோ மொழித்தன் மாணன் விதியாமால்.

இ-ரை.—பிரமசரிய விரதத்தைப்பூண்ட மாணக்கனுனவன் சந்தனம், அத்தர் புனுகுமுதலிய வாசனைத்திரவியங்களையும், மல்லிகை, முல்லைமுதலிய சுகந்தபுஷ்பங்களையும் தேன்முதலிய லாகிரிவஸ்துக்களையும், கார்த்தல், புளித்தல் முதலிய அறுவகைருசிபாகங்களின்மே லுண்டாகும் விருப்பத்தினையும், தயிரையும், பாலையும், இழிவாகநினைக்கப்பட்ட மாமிசங்களையும், அழகின்மிகுந்த பெண்களிடத் துண்டாகும் விருப்பத்தையும், காமங், குரோதமுதலிய வறுவகைப்பட்டவுட்பகையினையும் சொல்

* சமிதாதானமாவது சேய்மைக்கணிருந்து சமித்துக்களைக் கொண்டு வந்து நிலத்தின்மேல்வையாம லுன்னதஸ்தானத்தில் வைத்திருந்து காலை, மாலை, யென்னுமிருசந்தியாகாலங்களிலு மந்தச் சமித்துக்களா லக்கினியினிடத் தோமஞ்செய்வது.

லப்பட்ட எண்ணெயிட்டுக்கொண்டு தலைமுழுகுதலையும், கஸ்தூரி, சிந்தூரமுதலிய திலதங்களையும், கெடுதலில்லாதகுடைகளையும், பாதுகையையும், சூதாடலையும், நாடகமாடுதலையும், சங்கீதம்பாடுதலையும், விகடவார்த்தைகள் பேசுதலையும், ஒருவனுடைய பழிப்பாயிருக்கின்ற வசனங்களைச்சொல்லுதல் பொய்பேசன்முதலிய குற்றங்களைச் செய்யாதிருத்தலுங், கிரமமாகும். (ரு)

மலர்பைந் தருப்பை மண்சமித்து வகையா தியவேண் டியநல்கிக்
குலவும் பணியோ கையிற்புரிந்து குருவின் வலத்தா ளிடத்தாளில்
நிலவு வலக்கை யிடக்கையுற நெறியின் மாறி நனியிறைஞ்சி
இலகிந் திரிய மெலாமடக்கி யெதிரிற் பிரமாஞ் சலிசெய்து.

இ-ரை.—பிரமசரியவிரதத்தை மேற்சொல்லியபடி யனுஷ்டிப்பவன் ஆசாரியனுக்குவேண்டிய பத்திரபுஷ்பங்கள், தருப்பைகள், மிருத்திகைகள், சமித்துக்கள், முதலியவைகளை நாடோறுஞ்சேகரித்துக்கொடுத்து, மற்றுமவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையும் மனத்திருப்தியாகச்செய்து, ஆசாரியனது வலதுபாதத்திற்றன்னுடைய வலதுகையும், யிடதுபாதத்திற் றன்னுடையயிடதுகையும், பொருந்தும்படி மாறிவைத்து, விதிப்படிநன்றாக வணங்கி, விளங்காநின்ற, பஞ்சேந்திரியங்களையுமடக்கி, எதிரிலிருந்து பிரமாஞ்சலியாலு நமஸ்காரஞ்செய்து. எ—று. (சு)

மருவு வடக்கு முகமேனும் வயங்கு கிழக்கு முகமேனும்
குருவுத் தரவின் படிவைகிக் கோது றுது வான்முறையே
அருளா சிரியன் மொழிவேத வத்தி யயனஞ் செயல்வேண்டும்
பெருகத் துவக்கன் முடித்தலினும் பிரண வஞ்சொல் லுதல்விதியே.

இ-ரை.—ஆசாரியனிட்ட கட்டளைப்படி, வடக்குமுகமாயாவது விருத்தியைத்தரத்தக்கதாய் விளங்குங் கிழக்குமுகமாயாவது, சித்தரப்பாவையைப்போலசைவின்றியிருந்து, அருளேதிருமேனியாகக்கொண்டெழுந்தருளிய பரமாசாரியனால், குற்றமறக்கிரமமாகக் கற்பித்தபடி, வேதாத்தியயனங்களைச்செய்துவரவேண்டும். அவ்வாறுசெய்துவருகையில், ஆரம்பகாலத்திலு, முடிக்குங்காலத்திலும், பிரணவமந்திரத்தை யுச்சரித்தல்விதியாகும். எ—று. (எ)

கூறு முபந யனஞ்செய்து கொண்டு மறையா திகளோதித்
தேறி லான்வை திககருமஞ் செயற்கு முதவா னுதலினல்
வீறு புகழா ரியனருளால் விரத நெறிக டவறுமல்
ஏறு மகிழ்வி னருமறையா திகணன் கோதன் மரபாமே.

இ-ரை.—மேற்சொல்லியபடி, உபநயனக்கிரியைப்பெற்றுக்கொண்டு, வேதமுதலிய சாஸ்திரங்களைக் கிரமப்படி யத்தியயனஞ்செய்து, தேர்ச்சியடையாத பிரமசரியனானவன் எவ்விதவைதீககருமங்களையுஞ் செய்வதற்குதவானுதலினல், மிகுந்தபுகழினையுடைய ஆசாரியனனுக்கிரகத்தால், பிரமசரியவிரதத்தைக்கைக்கொண்டவனதற்குரிய உபவீதம், மௌஞ்சி, அரைஞாண், தண்டமுதலிய வங்கங்களைவிடாது தடுத்து

க்கொண்டு, விரதங்களைத் தவறுமலனுஷ்டித்து, எப்பொழுதுமகிழ்ச்சியுட னருமையாகிய வேதமுதலிய சாஸ்திரங்களை, முறைமையாக வத்தியயனஞ்செய்வது முறைமையாகும். எ—று. (அ)

வேத முடன்முத் தழல்வேள்வி மேன்மை தருநித் தியகருமம்
ஓது நைமித் திககரும முடையோர் கிரகங் களிற்சென்று
கோது றுது மூன்றிடக்குக் குறையா வணம்வேண் டியமட்டில்
தீதி லனப்பிச் சையையேற்றுத் திகழா ரியற்கு நிவேதித்து.

இ-ரை.—வேதாத்தியயனஞ்செய்வதுடன், ஆகவனீயம், தக்ஷிணுக்கினியம், காருகபத்தியமென்றுசொல்லப்பட்ட மூன்றக்கினிகளால், யாகங்களையும், நன்மையைத்தருவதான நித்தியகருமங்களையும், நைமித்திக்கருமங்களையும், விதிப்படிசெய்பவர்களின்வீடுகளில், மூன்றுவீட்டுக்குக்குறையாமற்போய், தருமசாஸ்திரங்களிற் சொல்லியபடி தனக்கு வேண்டியவளவு குற்றமில்லாத வன்னபிட்சையெடுத்து, அந்தப்பிக்ஷான்னத்தை ஆசாரியருக்கு நிவேதனஞ்செய்து. எ—று. (கூ)

ஆச மனஞ்செய் தனம்பூசித் தன்பிற் பரிஷே சனம்பண்ணி
ஏசில் கிழக்கு முகநோக்கி யிருந்து களிப்பி னுடுபுசித்துத்
தேசு பெறக்கை காலலம்பித் திகழ்கண் காது நாசிகளை
மாசு தீரத் துடைத்துமன மகிழ்ந்தா சமனஞ் செயல்வேண்டும்

இ-ரை.—ஆசமனஞ்செய்து, அவ்வன்னத்தைவிதிப்படிபூசித்து, அன்புடனேபரிஷேசனஞ்செய்து பழிப்பில்லாத கிழக்குமுகமாகயிருந்து சந்தோஷ முடையவனுகப்புசித்து மலினம்நீங்கும்படி கைகால்களைச்சுத்திசெய்து, விளங்காநின்ற கண்கள் நாசிகள் காதுகளாகிய விவைகளை நன்றுகத்துடைத்து விருப்பத்துட னுசமனஞ்செய்தல் வேண்டும். எ—று. (க0)

ஒப்பில் பிரம தீர்த்தமுட னுரைசெய் காய தீர்த்தமிகச்
செப்பு தேவ தீர்த்தமெனத் திகழும் மூன்றி னுென்றதனுல்
துப்பி லாச மனஞ்செயலாந் துகளார் பிதிரர் தீர்த்தமதால்
தப்பி லாச மனஞ்செய்யத் தகாதென் றுரைப்பர் மிக்கோரே.

இ-ரை.—சமானமில்லாத பிர்ம்மதீர்த்தம். சொல்லுகின்ற காயதீர்த்தம். தேவதீர்த்தம் என்று. மேன்மையாகச் சொல்லப்பட்டு விளங்காநின்ற இம்மூன்று தீர்த்தங்களுள் ஒன்றினுலே குற்றமற்ற ஆசமனஞ்செய்யலாகும். குற்றம்பொருந்திய பிதுர்தீர்த்தத்தினுலே தவறுதலில்லாத ஆசமனஞ்செய்யலாகாதென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். எ—று. (கக)

* அங்குஷ்டவிரலினடிப்பிரதேசத்தைப் பிர்ம்மதீர்த்தமென்றும், கனிஷ்டைவிரலினடிப்பிரதேசத்தைக் காயதீர்த்தமென்றும், விரல்களினுனியைத் தேவதீர்த்தமென்றும், அங்குஷ்டவிரலுக்குந் தர்ச்சனிவிரலுக்கு மத்தியைப்பிதுர்த்தீர்த்தமென்றும், சொல்லப்படும்,

ஆயுள் வேட்டோன் கிழக்குமுக மாயுங் கீர்த்தி பெறவேட்டோன்
மேய தெற்கு முகமாயும் விளங்கு சம்பத் தினைவேட்டோன்
பாய மேற்கு முகமாயும் பகர்சத் தியத்தை விரும்பினவன்
ஏய வடக்கு முகமாயு மிருந்து புசித்தன் முறையாமே.

இ-ரை.—மேற்சொல்லிய பிரமசாரியானவன் பிக்ஷான்னத்தைப் புசிக்குங்காலத்தில் நீடித்த வாயுளைவிரும்பினவன் கிழக்குமுகமாகவும், கீர்த்தியை விரும்பினவன் யாவரும்இச்சிக்கின்ற தெற்குமுகமாகவும், சிறப்பைத்தருஞ்சம்பத்தைவிரும்பினவன் விரிந்தபுகழையுடைய மேற்குமுகமாகவும், சத்தியநெறியைவிரும்பினவன் பொருந்திய வடக்குமுகமாகவு மிருந்து புசிப்பது சாஸ்திரங்களில் விதித்தபடியாகும்எ—று.

மன்னு புகழ்சே ருபவீத மான்றோன் முஞ்சி தண்டமிவை
உன்னு மசுத்த மாயிடினு முறைசெய் பின்ன மாயிடினும்
மின்னு சலத்திற் புதைத்துவிட்டு வேறு புதிதா யவ்வவற்றின்
பன்னு மனுவி னொடுதரித்தல் பாய மறையி னெறியாகும்.

இ-ரை.—தன்னிடத்திற்பொருந்திய கீர்த்தியைத்தருவதான வுபவீதம் கிருஷ்ணாஜனம், மௌஞ்சி, தண்டமுதலியவைகள் நிஷேதிக்கத்தக்க வசுத்தத்தையடைந்தாலும், மேலோரால் விலக்கப்பட்ட பின்னங்களையடைந்தாலு, மவைகளை மேன்மைபெற்று விளங்காநின்ற தடாகமுதலிய தீர்த்தங்களி லமிழ்ந்தும்படி யெறிந்துவிட்டு மேற்சொல்லிய ஒவ்வொன்றும் வேறு புதிதாகச் சேகரித்து அதற்குரிய மந்திரபூர்வகமாகத் தரித்தல் விரிந்தபுகழையுடைய வேதங்களில் விதித்தமுறைமையாகும் எ-று.

சொற்ற குரவர் தந்தையர்க டுறவோர் முன்னோர் மாதுலன்மார்
உற்ற விருத்தர் புரோகிதரென் றோது மிவர்க டமைக்காணில்
அற்ற மறநன் கெழுந்தபிவா தனஞ்செய் திறைஞ்சன் முறையாகும்
மற்று மவர்கள் பிரத்தியபி வாத னஞ்செய் திடல்வேண்டும்.

இ-ரை.—வேதாத்யயனஞ்செய்வித்த வாசிரியன்பிதாக்கள், எல்லாப் பற்றையும் விட்டுத் துறவறம்பூண்ட பெரியோர்கள், தமையன்முதலானபெரியோர்கள் அம்மான் மாமன்முதலானவர்கள் வயோதிகமுள்ளபெரியோர்கள் தனது குடும்பபுரோகிதர்களென்று சொல்லப்பட்டவர்களைப் பிரமசரியனானவன் கண்டால் தக்ஷணமே திடீரென்றெழுந்து அவர்களுக்கபிவாதனஞ்செய்து வணங்குவது கிரமமாகும் அவ்வாறு செய்யக்கண்ட வப்பெரியோர்களு மவனுக்குப் பிரத்தியபிவாதனஞ் செய்தல் வேண்டும். எ—று. (௧௪)

ஈன்ற வன்னை தந்தைகுரு விம்மூ வருமே மூவுலகம்
மூன்று சிரம மூன்றுமறை மூன்றக் கினிகள் மூன்றெழுத்தென்
றூன்றே ருனாப்ப ராதலினா லன்னோ ரிட்டப் படியொழுகித்
தோன்ற வவர்தாண் முப்போதுந் தொழுது வணங்கல் வேண்டுமால்.

இ-ரை.—தன்னைப்பெற்ற தாய், தந்தை, ஆசாரியன், என்னுமிம் மூவருமே சொர்க்கம், மத்தியம், பாதலமென்னு மூன்றுலகங்களென்றும், பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென்னு மூன்றாச்சிரமங்களென்றும், இருக்கு, யசுர், சாமமென்னு மூன்றுவேதங்களென்றும், ஆகவனீயம், தக்ஷணாக்கினியம், காருகபத்தியமென்னுமூன்றக்கினிகளென்றும், அகரம், உகரம், மகரம், என்றுசொல்லப்பட்ட மூன்றெழுத்துக்களென்றும் பெரியோர்கள் சொல்வார்களாதலின லம்மூன்றுபேர்களுடைய மனேபீஷ்டப்படி நடந்து அம்மூன்றுபேர்களுடைய திருவடிகளை, காலை, யுச்சி, மாலை, என்னுந் திரிசந்தியாகாலங்களிலுந் தோத்திரஞ்செய்து வணங்குதல் வேண்டும். எ—று.

பிரமசரியவிதியுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆ க திருவிருத்தம் - சு௱௫சு.

இருபத்தாறுவது

விரதசமாவர்த்தனமுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இயங்கு முலகத் தூரியவர்க ளினிதி னியற்றி யின்பமுற
வயங்கு பிரம சரியவிதி வகுத்துச் சிறிது புகன்றனமால்
நயங்கொள் விரத மொருநான்கு நவிலு முறையே யனுட்டித்துத்
தயங்கு மதன்மேற் புரிந்திடுச மாவர்த் தனநன் குரைசெய்வாம்.

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே புகழ்பெற்றுவிளங்காநின்ற இவ்வுலகத்தின்கண் செய்தற்குரியவர்கள் இனிதாகச்செய்து அதனாலுண்டாகும் நற்கதியைப்பெறுமாறு நல்ல புகழைத்தராநின்ற பிரமசரியவாச்சிரமவிதியினுட் சிலவற்றைச் சொன்னோம்? இனி! அப்பிரமசரியர்கள் செய்யவேண்டிய நன்மையான பிரஜாபத்தியமுதலிய விரதங்களான்கினையும் வேதவிதிப்படி யனுஷ்டித்து அதற்குமேல்செய்யவேண்டிய வானசமாவர்த்தனமென்னும் கருமத்தின்விதிகளையும் நன்றாகச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

...வகி லாநன் முகூர்த்தமதிற் செப்பு பிராசா பத்தியஞ்சீர்
ஓங்கு புகழார் சவுமியநன் கொளிரு மாக்கி னேயமொடு
பாங்கு பெறுவை சுவதேவம் பகரிவ் விரத நான்கினையும்
வீங்கு போன் பொடுதுவக்கி விதியோ டனுட்டித் திடல்வேண்டும்.

இ-ரை.—குற்றமற்ற நல்லசுபமுகூர்த்த காலத்தில் வேதங்களிற்கூறும், பிரஜா பத்தியம், சிறப்பைத்தருவதாகிய நல்லகீர்த்தியையுடைய சௌமியம், விளங்காநின்ற ஆக்கினேயம் அழகுபொருந்திய வைசுவதேவமென்று சொல்லப்பட்ட இந்நான்குவிர தங்களையு மிகுந்த வுள்ளன்புடனாரம்பித்துக் கிரமப்படி யனுஷ்டித்து வரல்வேண டும். எ—று. (உ)

அன்பின் விரத முறையாக வனுட்டித் ததற்பி னுத்திரங்கள்
இன்ப மிகுமான் றலையனுட மினிய வத்தந் திருவோணம்
வன்பு தருபூ சங்களிரோ வதியு ரோணி யெனுந்தினத்தில்
துன்பி லிரவி சுக்கிரன்பொன் சோமன் புலவன் வாரமதில்.

இ-ரை.—அன்புடனே மேற்சொல்லிய நான்குவிரதங்களையுங் கிரமப்படியனுஷ் டித்து வந்ததற்குமேல், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இன்பத்தைத்தருவ தான மிருகசீரிஷம், அனுஷம், நன்மையைத்தரும், அஸ்தம், திருவோணம், நல்லப லனைக்கொடாநின்ற புனர்பூசம், பூசம், இரேவதி, உரோகணியென்னு மிந்நக்ஷத்திர ங்களிற் கெடுதியைத்தராத ஞாயிறு, திங்கள், புதன், வியாழம், வெள்ளியென்று சொ ல்லப்பட்ட சுபவாரங்களில். எ—று. (ங)

பதினொன் றைந்து மூன்றிரண்டேழ் பன்மூன் றெருபத் திருமூன்றுந்
திதியின் விடைமீன் றலைமிதுனஞ் சிலைமான் கன்னி யிலக்கினத்தில்
விதியி னேழா மிடஞ்சுத்தி மேவப் புகர்பொன் மூடமுறுத்
துதிசேர் தருமுத் தராயணத்திற் றொடங்கு கசமா வருத்தனமே.

இ-ரை.—துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, திர யோதசி, என்னுமிச்சுபதிதிகளில், ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், தனுச், மக ரம், மீனம், என்றுசொல்லப்பட்ட விலக்கினத்தில் கிரமப்படி ஏழாமிடஞ் சுத்தமாக வும், மேன்மையையுடைய சுக்கிரனுங்குருவும் மூடத்தையடையாத நன்மைபொருந் திய வுத்தராயண மாதங்களில் சமாவர்த்தனமென்னுங் கிரியை யாரம்பித்துச் செய்ய வேண்டும், எ—று. (ச)

வாய்ந்த சிகைநீ ளிருபுருவம் வயங்கு மிருகூர்ப் பாமிவ்ற்றின்
ஏய்ந்து செறியு மயிர்தவிர வெழில்சேர் வபன நனிசெய்தே
ஆர்ந்த புனலி னிடைமூழ்கி யன்பிற் சதவா குதிபுரிந்து
வேய்ந்த முஞ்சி யாதிகளை விடுத்து முந்நூ லிரண்டணிந்து.

இ-ரை.—பொருந்தியகுடுமி, நீண்டவிரண்டுபுருவங்கள், விளங்காநின்த விரண் டுமுன்கைமுதல் முழங்கைவரையிலுள்ள விடங்கள் இவைகளிற்பொருந்தி யடர்ந்தி

ருக்கின்ற பஞ்சசிகைகள்தவிர அழகுபொருந்திய மற்றையவிடங்களை நன்றாக க்ஷ ஞ்செய்துக்கொண்டு நீர்நிறைந்தவிடங்களில் ஸ்நானஞ்செய்து அன்புடனே நூறுகு திசெய்துப் பிரமசரியவாச்சிரமத்தைப் பெற்றுக்கொண்டகாலத்திற் றரித்த மௌஞ் சியனைஞாண், கிருஷ்ணாஜனம், முதலியவைகளை யொழித்து இரண்டியக்ஞோபவீத த்தை முறைப்படிதரித்து. எ—று. (ரு)

இலங்கு மலர்சாந் தாதிகளை யினிதி னணிந்தா சனத்திருந் து
தலங்கு லாவு மன்பொடுகோ தான விரத நனியாற்றி
அலங்கு புகழ்சேர் தருபஞ்சா வமிர்த மகிழ்வு பெறவருந்தி
வலங்கொ டையை வலஞ்செய்தெதிர் வணங்கல் சமாவர்த் தனமாமே.

இ-ரை.—விளங்காநின்ற புஷ்பங்கள் சந்தனமுதலிய கலவைச்சாந்துகளை யினி தாகத் தரித்து சுகாசனத்திலிருந்து பூமியிலுள்ளவர்கள் கொண்டாடும்படி யன்புட னே கோதானமுதலிய விரதங்களை நன்றாகச்செய்து பரந்தகீர்த்தியைப்பெற்று விளங் கும் பஞ்சாமிர்தத்தைவிருப்பத்துடன் புசித்து மந்திரபூர்வகமாய் விளங்கும் அக்கினி யைப் பிரதக்ஷணஞ்செய்து எதிர்முகமாக வணங்குவது சமாவர்த்தனமென்னுங் கிரி யையாகும். எ—று. (சு)

விரதசமாவர்த்தனமுணர்த்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - சுாசுஉ.

இருபத்தேழாவது
விவாகபேதங்களுரைத்த வத்தியாயம்.

கலிவிருத்தம்.

மங்கலம் பெருகுச மாவ ருத்தனம்
பங்கமு றுநலம் படவு ரைத்தனம்
புங்கமொ டுலகினிற் புகல்வி வாகபே
தங்களை யொருவகை சாற்று வாமரோ.

இ-ரை.—கேளுஞ்சுவிரதமகாராஜனே? இதுவரையும், மங்களகரத்தைத் தருவ தான சமாவர்த்தனமென்னுங் கிரியையினைக் கெடாதநன்மையுண்டாகத் தக்கதாக வெடுத்துச்சொன்னோம், இனியிவ்வுலகத்தின்கண் ணுயர்வாகச்சொல்லப்பட்டவிவா கபேதங்களை யொருவாறெடுத்துச் சொல்லுவோமென்றூர் காளஸ்திமகாமுநிவர் எ-று

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பல்ல றங்களினு யர்ந்த தென்றுலகு பண்பி னோடுரைசெ யில்லறம்
நல்ல மாண்புடைய மனைவி யோடுசெயி னண்ணும் யாவுமல தில்லையால்
மல்ல லம்புவியின் விரத மாற்றுபுச மாவ ருத்தனமு டித்தபின்
பில்ல றப்புரிவ தற்கு நூன்முறையி னேது வாகியம ணஞ்சொல்வாம்.

இ-ரை.—பலவகைப்பட்ட தருமங்களினு மேலானதருமமென்று உயர்ந்தோர்க ளாற் சிறப்பித்துச்சொல்லப்பட்ட வில்லறதருமமானது, அழகுடனே நற்குணநற்செ ய்கைகளையுடைய மனைவியோடு மனமொத்துச்செய்யின் எல்லாநலங்களு முண்டா கும் அவ்வாறு மனமொத்துச்செய்யாதவிடத்துச் சிறப்பைத்தராவாம், வளப்பம்பொ ருந்திய வழகிய விப்பூமியினிடத்துப் பிரமசரியவாச்சிரமத்திற்குரிய விரதங்களையனு ஷ்டித்ததற்குமேல் மேற்சொல்லிய விரதசமாவர்த்தனமுஞ்செய்து நிறைவேற்றிப் பின்பு இல்லறதருமத்தைக் கைக்கொண்டு நடத்துவதற்கேதுவாகிய விவாகங்களின் விதிகளையுஞ் சாஸ்திரோக்த்தமாகச் சொல்லுவோம். எ—று. (௨)

உரைசெ யுந்தனது கோத்தி ரத்தர்மறை யோதி லார்தகவொ ழுக்கிலார்
நிரைசெய் பெண்ணையல தாண்பெ றுதவர்நி கழ்த்து மூலநவி குன்மநோய்
புரைசெய் குட்டமொடு பெருவி யாதிமிகு புன்க ணல்குகய நோயுளார்
தரைசொ லும்பழிகொண் மரபு ளாரிவர்க டங்கு லக்கொடிக டதரோ.

இ-ரை.—தனது கோத்திரத்திற் பிறந்தவர்களென்று சொல்லப்பட்டவர்களும், வேதாத்தியயனஞ்செய்யத்தவறினவர்களும், நல்லொழுக்க மில்லாதவர்களும், ஆண்

குழந்தையே யில்லாமல் பெண்குழந்தைகளையே வரிசையாகப் பெறுபவர்களும்,சொல்லப்பட்ட மூலம், வருத்தத்தைத்தருவதரன குன்மங்கள், தேகத்தைக்குறையச்செய்கின்ற குஷ்டம், பெருவியாதி ஆரூதமேகமுதலிய விரணங்கள் துன்பத்தைத்தருவதாஙக்ஷயநோய் முதலிய வியாதிகளையுடையவர்களும், உலகத்தவராற்பழிக்கப்பட்ட மரபிற்பிறந்தவர்களும்,ஆகியவித்தன்மைகளையுடையவர்களதுகுடும்பத்திற்பிறந்தகொடிபோன்ற விடையினையுடைய பெண்களைவிவாகஞ்செய்யி லதனாற்றுன்பமே யுண்டாகும். எ—று. (௩)

மயிரி லாதவளு டம்பெ லாநிறையு மயிர்க ளுள்ளவள்செம் மயிருளாள்
உயர மானவள்கு ரூர மாயமொழி யுள்ள வள்புருட வடிவுளாள்
அயர்வில் வானுடுவி ருட்சமோடு நதி யரவு பட்சிமலை யிவைகளின்
பெயரு ளாளொடுப யந்த ருங்கொடிய பெயரு ளாளுமுத வாதரோ.

இ-ரை.—முக்கியமாயிருக்கவேண்டிய விடங்களில் நீண்ட மயிர்களில்லாதவளும், தேகமெங்கு நிறைந்தமயிர்களையுடையவளும், செம்பட்டமயிர்களுடையவளும் மிகவுமுயரமாக வளர்ந்திருப்பவளும், கடினமாகிய வார்த்தைகளுள்ளவளும், ஆண்பிள்ளைகளுக்குரிய வடிவங்களுள்ளவளும், கெடுதியில்லாத ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரம், விருக்ஷம், நதி, பாம்பு, பக்ஷி, மலை, இவைகளின் பெயர்களையுடையவளும், கேட்பவருக்கு அச்சத்தைவிளைக்கும்படியான கொடுமையானபெயருடையவளும் முறைப்படி விவாகஞ்செய்துக்கொள்ளத் தகாதவளாவள். எ—று. (௪)

செங்க ணுள்ளவள்வி கார ரூபமுள தெரிவை சோதரமி லாதவள்
அங்க மீததிக முங்கு றைந்திடலு மாமு றுப்புடையண் மூப்பினள்
பொங்குகோபமுளள் மிருக றுப்புடையள் புகல்பெ ருத்தகுர லுள்ளவள்
பங்க மேவுபிற ரால்வ ளர்த்தவள்ப கர்ந்த மற்றிவர்க ளுதரோ.

இ-ரை.—சிவந்த கண்களையுடையவளும், விகாரமான ரூபமுள்ளவளும், சகோதரர்களில்லாதவளும், தேகத்தில் அதிகமானஉறுப்புக்களையுடையவளும், குறைவான உறுப்புக்களையுடையவளும், தன்வயதிற்கு மேற்பட்டவயதினையுடையவளும்,மிகுந்தகோபமுடையவளும், மிகவுங் கறுத்தநிறமுள்ளவளும், சொல்லப்பட்ட பெருத்த குரலுள்ளவளும், தாழ்வடைந்த ஜாதியர்களால் எடுத்துவளர்க்கப்பட்டவளு மாகிய மேற்சொல்லிய பெண்கள்விதிப்படி விவாகஞ்செய்து கொள்ளுவதற்குரிய ராகார்கள். எ—று. (௫)

கற்பி லக்கணம மைந்து ளாள்வதுவை கருது தற்கிளைய வயசினள்
நற்கு ணத்தினைய டைந்து ளாள்மகிழ்ந லம்பொ ருந்தினிய மொழினள்
பொற்பு நூலினிது ணாத்த பேரெழில்பொ ருந்தி னுளுலக மேத்துபேர்
ஆற்பி னளினைய பெண்ணை வேட்டன்மறை யாதி நூல்களின் வழக்கரோ.

இ-ரை.—மாதர்களுக் கின்றியமையாததாகிய கற்பிலக்கணங்கள் முழுதும்பொருந்தியவளும் விவாகஞ்செய்துக்கொள்ளும்படி விரும்புவோனுக்கு முறைப்படி சின்னவயதுள்ளவளும், இல்லத்திற்குரிய நற்குணநற்செய்கைகளை யுடையவளும், கேட்

பவர்களுக்கு மகிழ்ச்சியையும், இனிப்பையுந் தரத்தக்க குளிர்ந்தசொற்களையுடையவளும், சாமுத்திரிகா சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட பேரழகுடையவளும், உலகத்திலுள்ளவர்களெல்லாம் புகழத்தக்க பேரன்புடையவளும், ஆகியவிவ்வகையான பெண்களை விவாகஞ்செய்துக்கொள்ளுதல் வேதமுதலிய சாஸ்திரங்களிற் சொல்லிய விதியாகும். எ—று. (சு)

ஓது மெட்டகவை யெய்தி னுள்கவுரி யொன்ப தாண்டின ளுரோகணி
எதில் பத்துவய சுடையள் கன்னிமகிழ் வெய்து மாயுள்பனி ரண்டுளாள்
தீதி லாவிடளி யென்று ரைத்திடுவர் செப்பு சீர்பெருகு கவுரியை
ஆத ரத்தினொடு தான நல்கினவ ரவிர்சு வர்க்கநக ரெய்துவார்.

இ-ரை.—சொல்லப்பட்ட எட்டுவயதினையுடையவள், கௌரியென்னும் பருவமுடையவளென்றும், ஒன்பதுவயதினையுடையவன் உரோகணியென்னும் பருவமுடையவளென்றும், பத்துவயதினையுடையவள் கன்னியென்னும் பருவமுடையவளென்றும், யாவருங்கண்டு மகிழத்தக்க பன்னிரண்டுவயதினையுடையவள் குற்றமற்ற விடளிப்பருவமுடையவளென்றும் மேலோர்சொல்லுவர். அப்பருவப் பெண்களுள் சிறந்ததென்றுசொல்லப்படுவதான கௌரிப்பருவப்பெண்ணைத் தக்கவரனுக்கு அன்புடனே தானமாகக்கொடுத்தவர்கள் பிரகாசியாநின்ற சுவர்க்கலோகத்தில் வாழ்வார்கள். எ—று. (எ)

விளங்கு ரோகணிவ ழங்கி னோர்கமல மேவு மாலுலகில் வாழ்குவர்
வளங்கொள் கன்னியை யளித்துளோர்கணறு மலர யன்றனுல கெய்துவர்
துளங்கு சீர்விடளி யைக்கொ டுத்தவர்க டேய்மை யற்றநர கடைகுவர்
உளகொ ளாயுளிதன் மேற்கொண் மாதர்தமை யுதவு வோர்கள்பய னறிகி
(லேன்.

இ-ரை.—விளங்காநின்ற வுரோகணிப்பருவப்பெண்ணைத் தானமாகக் கொடுத்தவர்கள் நன்மைபொருந்திய வைகுண்டமென்னும் விஷ்ணுபதவியில் வாழ்வார்கள். பெண்களுக்குரிய ரூபலக்ஷணங்களிற் சிறந்த கன்னியாபருவப்பெண்ணைத் தானமாக விவாகஞ்செய்துக் கொடுத்தவர்கள் நல்லவாசனையைத்தராநின்ற தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமதேவனுடைய சத்தியலோகத்தை யடைவார்கள். பிரகாசியாநின்ற விடளிப்பருவப்பெண்ணைத் தானமாகக்கொடுத்தவர்கள் பழிக்கத்தக்கநரகலோகத்தை யடைவார்கள். இப்பருவங்களுக்கு மேற்பட்ட வயதினையுடைய பெண்களை மனதறிந்து தானமாகக்கொடுப்பவர்க ளெவ்விதபலனை யடைவார்களோ யானறிகிலேன். எ—று. (அ)

மங்கை பூத்தபினு மோர்வ ரற்கினிய வதுவை யாற்றுபு கொடாதவர்
புங்க மார்பொருள்வி ழைந்து பற்றியெழில் பொலியு மாதினை யளித்தவர்
தங்கு லத்தினுயர் வுறுகு லத்தினிழி தாழ்கு லத்தெனினும் வேட்டவர்
பங்க மார்கொடிய நிரய மெய்தியிடர் படுவ ரென்றுமறை பகருமால்.

இ-ரை.—பெண்கள் பூப்படைந்தபிறகும் தக்கவரனுக்குக்கிரமப்படி விவாகஞ் செய்துக் கொடாதவர்களும் பெருந்தொகையான பொருள்களை விருப்பத்துடன்வாங்

கிக்கொண்டு அழகுமிகுந்த கன்னிகையைக்கொடுத்தவர்களும், தாங்கள்பிறந்த குலத்திற்கு மேற்பட்ட குலத்திலாவது தாழ்ந்தகுலத்திலாவது விவாகஞ் செய்துக்கொண்டவர்களும், கொடியதுன்பத்தைத்தருவதான தீநரகத்திலழுந்தித் துன்பப்படுவோர்களென்று வேதமுதலியசாஸ்திரங்களெல்லா முறையிட்டுச்சொல்லும். எ—று. (கூ)

வேறு - எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பெருமைசால் பிரமநற் றெய்வமா ரிடநனிபி றங்கு பிரசா பத்தியம்
கருதுசீ ராசுரங் காந்தருவ நவிலிராக் கதமிழிப சாச மென்ன
மருவுறுவி வாகமெட் டாம்பிரம முதனான்கு மறையவர்க் குரியதாகும்
பொருவிலசு ரஞ்சொல்காந் தருவமொடி ராக்கதம் புரவலர்க் குரியதாமே.

இ-ரை.—உலகத்தில் வேதோக்தமாகச் சொல்லப்பட்ட விவாகங்கள் பெருமைபொருந்திய பிரமமணமென்றும் நன்மையைத்தருவதான தெய்வமணமென்றும் ஆரிஷமணமென்றும் மேன்மையாக விளங்காநின்ற பிரஜாபத்தியமணமென்றும் யாவராலுநினைக்கப்பட்ட சிறப்பினையுடைய அசுரமணமென்றும், காந்தருவமணமென்றும்,சொல்லுகின்ற இராக்ஷதமணமென்றும், தாழ்வாகிய பைசாசமணமென்றும், எண்வகைப்படும்அவற்றுள் பிரமம் தெய்வம் ஆரிஷம்பிரஜாபத்தியம், என்றசொல்லப்பட்டநான்குமணங்களும், பிராமணர்களுக்குரியதாகும். ஒப்பில்லாத அசுரமணமும், தக்கதென்றசொல்லப்பட்ட காந்தருவமணமும், இராக்ஷதமணமும், க்ஷத்திரியர்களுக் குரியதாகும். எ—று. (௧௦)

ஆசுரம் பொலிவணிக ருக்காகு நன்குதிக ழாசுரங் காந்த ருவமென்
றேசுதவி லாமணஞ் சூத்திரர்த மக்குரிய தென்னமிரு திகளு ரைக்கும்
மாசிலரு மறையாதி தேர்ந்துநலொ ழுக்கமிகு மாணியை யழைத்தங்கிமுன்
பேசுகல னொடுதனது கன்னியைய ளிப்பதுயர் பிரமமணமென்பர்மன்னோ

இ-ரை.—அசுரமணமானது அழகுபொருந்தியவைசியர்களுக்குரியதாகும். நன்மையாக விளங்குகின்ற, அசுரமணம், காந்தருவமணமென்றசொல்லப்பட்ட பழிப்பில்லாத மணங்களிரண்டும், சூத்திரர்களுக்குரியதாகுமென்று தருமசாஸ்திரங்களெடுத்துச்சொல்லும். இவற்றுள் குற்றமற்றமேன்மையையுடைய வேதமுதலிய சாஸ்திரங்களை நன்றாக ஓதியுணர்ந்து நல்லொழுக்கங்களமைந்திராநின்ற பிரமசாரியைத்தானாகவே அழைப்பித்து அவனுக்குத் தனதுபெண்ணைச் சர்வாபரணங்களால் அலங்கரித்து அக்கினிசாக்ஷியாகத் தானஞ்செய்வது எல்லாமணங்களிலுமுயர்வாகச்சொல்லப்பட்ட பிராமமணமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். எ—று. (௧௧)

எக்கியஞ் செய்வித்த வற்கீன்ற கன்னிதனை யீதலே தெய்வ மணமாய்
தக்கபசு வோரிரண் டின்பொருள்க வர்ந்துபெண் டருதலா ரிடவி வாகம்
மிக்கவா வொடுகேட்ட வர்க்குமக ளைத்தரல்வி ளம்புபிர சாபத்தியம்
தொக்கபொருள் விழைவிற்க வர்ந்துபெண் ணீதலா சுரமணமெ னப்புகல்
(வரோ.

இ-ள.—சோதிஷ்டோமாதி எக்கியத்தில் தனக்குப்புரோகிதனுக விருப்பவனுக்குத் தன்பெண்ணை அலங்கரித்துக்கொடுப்பது தெய்வமணமென்றும், தான்செய்யவேண்டிய யாகாதிதருமத்துக்காக வரனிடத்தில் தகுதியானவிரண்டு பசுவைவாங்கிக்கொண்டு அல்லது அவ்விரண்டு பசிவின்விலையாகிய பொருளை வாங்கிக்கொண்டு தன்பெண்ணைக்கலியாணஞ் செய்துகொடுப்பது ஆரிஷமணமென்றும், மிகுந்த ஆசையுடனே வரனது இனத்தார்வேண்டிக்கேட்க. அதற்குடன்பட்டு அவ்வரனுக்கு தருமங்களைச் செய்யுங்களென்று தன்பெண்ணைக்கொடுப்பது சொல்லாநின்ற பிரஜாபத்தியமணமென்றும், பெருந்தொகையான பணங்களை ஆசையுடனே வாங்கிக்கொண்டு தன்பெண்ணைக்கொடுப்பது ஆசுரமணமென்றும், பெரியோர்கள்சொல்வார்கள். எ-று.

கன்னியுங் குமரனுங் காதலொடு தாமே கலத்தல்காந் தருவ மணமாம்
இன்னலுற் றலறிடக் கன்னியைக் கொள்ளுதலி ராக்கதவி வாக மென்பர்
துன்னுறுக ளிப்புளோர் துயில்வுளோர் மூத்துளோர் சொல்லுமிவ ளாக்க
ளவினில், பன்னுறப் புணர்வதுல கத்தவரி கழ்ந்திடுப சாசமண மென்பர்
(மாதோ.

இ-ரை.—வதுவரனென்று சொல்லப்பட்ட மாதராடவரிருவரும் புணர்ச்சியின் ஆசையால் ஒருவருக்கொருவர் மனமொத்துக்கூடுதல் காந்தருவமணமென்றும், பெண்ணும் பெண்ணினத்தார்களு முடன்படாமல் மனவருத்தமடைந்தழும்படி வலிதிற் கொள்வது இராக்ஷதமணமென்றும், மதுமுதலிய லாகிரிவஸ்துக்களைப்புசித்து மயக்கமடைந்திருப்பவளும், நித்திரைசெய்துக்கொண்டிருப்பவளும், தன்வயதுக்கு மேற்பட்டவயதினையுடையவளும், என்று சொல்லப்பட்டவர்களை களவுப்புணர்ச்சியாகச் சேர்வது உலகத்தில் யாவரும் பழிக்கப்பட்ட பைசாசமணமென்றும் பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (கங)

மருவுமந் தணராதி நால்வருந் தத்தமது மரபினரி வையைம ணப்பின்
அருளகங் கைபற்ற னெறியதா மந்தணர்க ளரசர்கன் னியைவேட் டிடில்
பொருதுசீர் பெறுமம்பு கைபற்ற னெறியதாம் புகழுமந் தணர்வேந்தரும்
திருவமார் வணிகமா தினைவேட்பி னுழவுகோல் செங்கைபற் றுதனெறி
(யரோ.

இ-ரை.—மேன்மையையுடைய பிராமணர்முதலிய நான்குவருணத்தாரும், தங்கள்தங்கள்மரபிற்பிறந்தபெண்களை மேற்சொல்லியவிவாகமுறைமைப்படிஅன்புடனே வதுவரர்கள் ஒருவருக்கொருவர் பாணிக்கிரஹணஞ்செய்துக்கொள்ளுதல் விதியாகும் பிராமணர்கள் க்ஷத்திரியப்பெண்களை விவாகஞ்செய்யுமிடத்துச் சத்துருக்களை வெல்லுஞ் சிறப்புடைய அம்பினைக்கையாற் பிடித்தல்விதியாகும் புகழ்பெற்று விளங்கும் பிராமணராயினும், க்ஷத்திரியராயினும், செல்வச்சிறப்பமைந்த வைசிய ஜாதிப்பெண்ணைவிவாகஞ்செய்யுமிடத்துச் செந்தாமரைபோன்றகையால் உழவுகோலைப்பிடித்தல் விதியாகும். எ—று. (கச)

மன்னுமறை யவராதி மூவர்வே ளாளர்குல மகளைவிதி முறைவேட் டிடின்
மின்னுமொண் டுகிலினது மென்றலைபி டித்தலே மேவுமன்ற னெறிவழக்

காம், நன்னெறிவ ழாமணங் தனில்வேட்ட மடமங்கை நன்மகவை யினிது
பெறுவள், தின்மைசேர் மணம்வேட்ட மாதுமிரு தீதுபுரி சிறுவனைப்பெ
(றுவண்மாதோ.

இ-ரை.—நிலைபெற்ற பிராமணர், க்ஷத்திரியர், வைசியரென்று சொல்லப்பட்ட மூன்றுவருணத்தவரும் சூத்திரஜாதிப்பெண்ணை விதிப்படி விவாகஞ்செய்தால், விளங்காநின்ற அழகியவஸ்திரங்களி னொருபக்கத்து நுனியைக் கையாற்பிடித்தலே யாவரும் விரும்புகின்ற வேதமுதலிய சாஸ்திரங்களில் விதித்தமுறையாகும், மேற்சொல்லிய விவாகபேதங்களுள் நன்மையைத்தருவதான நீதிவழுவில்லாத விவாகமுறைமைப்படி கலியாணஞ்செய்துக்கொண்ட அழகியமாதர்கள் சத்புத்திரர்களைப்பெறுவார்கள். விவாகமுறைமையின்றித் தீமையைத்தருவதான புணர்ச்சியைவிரும்பிய மாதர்கள் மிகுந்த தீமைகளைச்செய்கின்ற துற்புத்திரர்களைப்பெறுவார்களென்று மேலோர்கள் சொல்வார்கள். எ—று. (கரு)

* அஷ்டவிவாகங்களில் வேதவிதிப்படி வதூர்களுடைய மாதாபிதா பந்துவர்க்கங்கள் சம்மதியால் பாணிக்கிரகணமுதலியவும், மாங்கல்யதாரணமுஞ் செய்யப்படுவதேவிவாகம். அப்படிச்செய்யப்படாத மற்றவைகளைவிவாகமென்று சொல்வதற்குநியாயமில்லை. அரசர்களிஷ்டப்படி பலமாதர்களைப் புணரும்படி விதித்ததற்குத் தக்கதாகச் சமாதானஞ்சொன்னதேயன்றி விவாகமென்றுசொல்லுவது பொருந்தாது.

விவாகபேதங்க ளுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௬௱௭௭.

இருபத்தெட்டாவது

விவாகப்பொருத்தங்களுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

துங்க மாமறை சொல்லும் விவாகபே
தங்க ளின்பந் தழைத்திடச் சொற்றனம்
மங்கு றுதவி வாகப்பொ ருத்தங்கள்
புங்க மோடுபு கன்றிடு வாமரோ.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையில் தூய்மையாகிய பெருமை பொருந்திய வேதங்களாலெடுத்துச்சொல்லப்பட்ட விவாகங்களின் பிரிவுகளை யின்பம்பெருகும்படி சொன்னோம். இனி, விதிவிலக்குகளிற் கெடாத விவாகத்திற்குரிய பொருத்தங்களை அன்புடனேசொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று.()

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மன்றல்புரி தற்குரிய மடமாத ராடவர்த மகிழ்வுபெறு சாதகத்தால்
ஒன்றுறத் திகழாயுண் முதலாய பாவகமு முண்மைநூல் வழியி னோர்ந்து
துன்றுநனி மித்தமுஞ் சகுனமும் பார்த்துமேற் சொற்றிடுபொ ருத்தங்க
ளும், நன்றெனில்வி திப்படிம ணம்புரிதன் முறையாகு நவையென்னின்
(முறையன்றரோ.

இ-ரை.—விவாகஞ்செய்வதற்குரிய விளமைபொருந்திய வதுவரர்களினுடைய ஜாதகங்களைக்கொண்டு பொருத்தமாகிய மகிழ்ச்சியைப்பெறத்தக்க விளங்காநின்ற ஆயுர்பாவமுதலிய துவாதசபாவநிர்ணயங்களையும்ஆன்றோர்களெடுத்தாண்ட பிரமாணமாகிய சோதிஷசாஸ்திரமுறைமைப்படி ஆராய்ந்தறிந்து நன்மைபொருந்திய நிமித்தங்களையும், சகுனங்களையும், நன்றாகப்பார்த்து அதற்குமேற்சொல்லுகின்ற அவர்கள் ஜன்மநக்ஷத்திரங்களினாலே தசவிதப்பொருத்தங்களும், நன்மையாகவிருந்தால் கிரமப்படி விவாகஞ்செய்வது முறைமையாகும் தின்மையாகவிருந்தால் முறைமையன்றாகும். எ—று. (௨)

காதல்கூர் தருவிவா கம்புரிவ தற்குரிய கன்னிநா ளாதியாகத்
தீதறுதி னங்கணந் திகழுமா கேந்திரஞ் சிதீர்க்க மருவும்யோனி
ஓதியவி ராசியொடி ராசியா திபதிநன் கொளிர்வசிய நவிலிரச்சு, வேதையு
மெனப்புகல்பொ ருத்தத்தி னியல்புகள்வி ளங்கவுரை செய்வாமரோ.

இ-ரை.—கணவனுமனைவியுமனமொத்து வாழும்படி செய்யப்பட்ட விவாகத்துக்குரிய வதுவின்நக்ஷத்திரமுதலாகக்கொண்டு குற்றமற்ற தினப்பொருத்தம் கணப்

பொருத்தம் விளங்காநின்ற மாகேந்திரப்பொருத்தம் ஸ்ரீதீர்க்கப்பொருத்தம் பொருந்திய யோனிப்பொருத்தம் சொல்லப்பட்ட இராசிப்பொருத்தம் இராசி யதிபதிப்பொருத்தம் விளங்குகின்ற நன்மைபொருந்திய வசியப்பொருத்தம் மேற்சொல்லுகின்ற இரச்சுப்பொருத்தம், வேதைப்பொருத்தமென்றசொல்லப்பட்ட தசவிதப்பொருத்தங்களின் றன்மைகளைத்தெளிவாக யாவருக்கும் விளங்கும்படிசொல்லுவோம். எ—று.()

தினப்பொருத்தம்.

வதுவினு ளாதிவா னுள்வரையி லெண்ணியதை மருவுமொன் பதிலரித்துத், துதிமருவு சேடநான் காறெட்டி ரண்டினொடு சொல்லுமொன் பானுநலமாம், உதவிலே லைந்துமூன் றென்றுதீ தாமிரண் டொன்பதினி லெட்டு மூன்றில், சிதையுநான் காயவயி னுசிகமு மொன்பதுந் தீதேக ராசி (நலமே.

இ-ரை.—வதுநக்ஷத்திரமுதற்கொண்டு வரனக்ஷத்திரம் வரையி லெண்ணிக்கண்டதொகையை ஒன்பதிற்கழித்து மதிக்கின்ற மிகுதியானது இரண்டு. நான்கு, ஆறு எட்டு, ஒன்பது, என்றசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாகவிருந்தால் உத்தமமாகும்உபயோகமில்லாத, ஒன்று, மூன்று, ஐந்து, எழு, என்றசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாகவிருந்தால், தீதாகும், ஒன்பதொன்பதாகக்கழிப்பதில் இரண்டாமொன்பதில் வருகின்ற எட்டாநக்ஷத்திரமும், மூன்றுமொன்பதில்வருகின்ற கெடுதியைத்தரத்தக்க வைநாசிகமாகிய நான்காநக்ஷத்திரமும் ஒன்பதாநக்ஷத்திரமும் தீதாகும் வதுவரர்களுடைய இராசிகளிரண்டு மொன்றுகில் நன்மையாகும். எ—று. (ச)

† ஒன்பதிற்கழித்து வருகின்ற மிகுதி ஒன்றுகில், ஜன்மத்தாரை இரண்டாகில் சம்பத்தாரை மூன்றுகில், விபத்தாரை நான்காகில், க்ஷேமத்தாரை ஐந்தாகில், பிரத்யரத்தாரை ஆறுகில், சாதகத்தாரை எழாகில், வதைத்தாரை எட்டாகில், மைத்திரத்தாரை, ஒன்பதாகில், பரமமைத்திரத்தாரையென்றும், ஜன்மநக்ஷத்திர பாதத்தொடங்கி, இருபத்திரண்டு அல்லது, இருபத்துமூன்றுவது, நக்ஷத்திரங்களில் வருகின்ற எண்பத்தெட்டாம்பாதநின்ற நக்ஷத்திரமாகிய வைநாசிகத்தாரையென்றுஞ் சொல்லப்படும்.

இதுவுமது.

ஒருராசி யிருநாளில் வானுள்மு னும்பெணுக் குரியநாள் பின்னுயினும், இருராசி நாளில்வா னுக்குமுன் கால்பெணுக் கினியபின் காலாயினும் திருவார்பெ ணுக்குமுற் பாதமூன் றும்பதஞ் சீர்பெறுவ ரற்கென்னினும் பெருகாடவற்குமுன் னிருகால்பி னிருகால்பெ ணுக்கெனினுநன்மையாமே

இ-ரை.—வதுவரர்களுக்கு ஒருராசியாகவிருப்பதிலும் ஒருராசியிலடங்கியஇரண்டுநக்ஷத்திரங்களில் வரனுடைய நக்ஷத்திரமுன்னும் வதுவினுடைய நக்ஷத்திரம்பின்னுமாகவிருந்தாலும் இரண்டுராசியிலும் பொருந்தியிருக்கின்ற நக்ஷத்திரங்களில் வரனுக்கு முதற்பாதமும், இனியகுணத்தையுடைய வதுவுக்கு நான்காம்பாதமுமாகவிருந்தாலும், அழகுநிறைந்த வதுவுக்கு முதற்பாதமும், சிறப்புப்பொருந்திய வரனுக்கு

மூன்றும்பாதமுமாக விருந்தாலும், பெருமைமிகுந்தவரனுக்கு முன்னிரண்டு பாதமும் வதுவுக்குப் பின்னிரண்டு பாதமுமாக விருந்தாலும் நன்மையாகும். எ—று. (௫)

இதுவுமது.

உரைசெயிவை மாறிடிற் றீதாகு மிவையன்றி யொருராசி யிருநாள் களில், தரைசொல்கார்த் திகைபரணி வண்டரவு விட்டமேற் சதயமுந் தீமையாகும், புரையிலெரி நாள்சென்னி சதயமத் தஞ்சோதி பூராட மக முரோணி, வரைசெயிவை வதுவினுட் பாதமுந் துறின்மிகும கிழ்ச்சிதரு (நன்மையாமே.

இ-ரை.—மேற்சொல்லிய முறைப்படியில்லாமல் வேறுபட்டிருந்தால் கெடுதி யாகும். இவைகளல்லாமல் ஒருராசியிலடங்கிய விரண்டுநக்ஷத்திரங்களில் உலகத்தார் புகழ்கின்ற, கார்த்திகையும் பரணியும், பூசமும், ஆயிலியமும் மேலாகிய அவிட்டமு ஞ்சதயமுமாக விருந்தால் தீதாகும், குற்றமில்லாத கார்த்திகை, அசுவதி, சதயம், அஸ்தம், சுவாதி, பூராடம், மகம், ரோகணி, என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களில் வதுநக்ஷத்திரபாத முந்தியிருக்கில் மிகுந்தமகிழ்ச்சியைத்தருகின்ற நன்மையாகும். எ—று. (௬)

இதுவுமது.

ஆதிரைமு றஞ்சகடு தோணிமக முத்திரட் டாதிதிரு வோணமத்தம்
ஓதுமிரு வர்க்குமொரு தினமாகி னன்மையா முத்திரஞ் சென்னியறுமீன்
தீதிலிரு பூசமான் றலைபூர முற்குளஞ் சித்திரைய னுடமத்திமம்
சோதிசத யம்பரணி விட்டம்பு ரட்டாதி சொன்மூல முந்தீதரோ.

இ-ரை.—வதுவரனிருவருக்கும், திருவாதிரை, விசாகம், ரோகணி, ரேவதி, மகம், உத்திரட்டாதி, திருவோணம், அஸ்தம், என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள், ஒரேநக்ஷத்திரமாகில், உத்தமமாகும், உத்திரம், அசுவதி, கார்த்திகை, கெடுதியில்லாத புனர்பூசம், பூசம், மிருகசீரிஷம், பூரம், பூரர்டம், சித்திரை, அனுடம், இந்தநக்ஷத்திரங்கள் ஒரேநக்ஷத்திரமாகில், மத்திமமாகும், சுவாதி, சதயம், பரணி, அவிட்டம், பூரட்டாதி, மூலம், என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள் ஒரேநக்ஷத்திரமாகில் கெடுதியுண்டாகும். எ—று. (௭)

கணப்பொருத்தம்.

மூன்றுத்தி ரங்களா திரையுரோ கணிபரணி முப்பூர மக்கள்கணமாம்
மான்றலைசு வாதியிரு பூசமத் தந்தோணி மகிழ்சென்னி யோணமனுடம்
சான்றவுயர் தேவகண மாகுமெரி நாண்மகஞ் சதயமூ லஞ்சித்திரை
ஏன்றவா யிலியம்வி சாகம்விட் டங்கேட்டை யிவையிராக் கதகணமரோ.

இ-ரை.—உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவாதிரை, ரோகணி, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதி, யென்னும், இந்த ஒன்பதுநக்ஷத்திரங்களும், மனுஷியகணமாகும், மிருகசீரிஷம், சுவாதி, புனர்பூசம், பூசம், அஸ்தம், ரேவதி, களிப்பைத்தருகின்ற, திருவோணம், அனுஷம், என்னும், இந்த ஒன்பதுநக்ஷத்திரங்களும் உய

ர்ச்சிபொருந்திய தேவகணமாகும். கார்த்திகை, மகம், சதயம், மூலம், சித்திரை பொருந்திய ஆயிலியம், விசாகம், அவிட்டம், கேட்டை, என்னும், இந்த ஒன்பதுநக்ஷத்திரங்களும், இராக்ஷதகணமாகும். எ—று. (அ)

இதுவுமது.

மருவொருக ணங்களுத் தமமானி டந்தெய்வ மத்திமம ரக்கர் தேவர்
திருகதம நரிராக் கதர்மாண மீரேழ்தி னத்தின்பி னுறினன்மையாம்
தருகிரக மித்திரமொ டேகாதி பத்தியஞ் சமசத்த கமுமொத்துறில்
பெருகிரச் சுடன்வேதை கணமிரா சிகளின்வரு பிழையெலாந் தீருமன்றே.

இ-ரை.—வதுவரனிருவருக்கும் ஒரேகணமாகில் உத்தமமாகும். மனுஷியகணமுந் தேவகணமுமாகில், மத்திமமாகும். மாறுபடுகின்ற இராக்ஷதகணமும், தேவகணமுமாகில் கெடுதியாகும், மனுஷியகணமும் இராக்ஷதகணமுமாகில் மரணமுண்டாகும். வதுவின் நக்ஷத்திரமுதல் பதினான்குநக்ஷத்திரங்களுக்கு மேற்பட்டு வரனக்ஷத்திரமிருக்குமாகில். எல்லாக்கணமும், உத்தமமாகும். நன்மையைத்தருகின்ற கிரகமித்திரம், ஏகாதிபத்தியம், சமசத்தகமும், ஒத்திருந்தால், மிருந்தரச்சுப்பொருத்தம்,வேதைப்பொருத்தம், கணப்பொருத்தம், இராசிப்பொருத்தம், இவைகளால் நேரிடுகின்ற தோஷங்களெல்லாம் நீங்கும். எ—று. (கூ)

மாகேந்திரப்பொருத்தம் ஸ்ரீதீர்க்கப்பொருத்தம்.

ஒன்றுநான் கேழுபத் தொருபன்மூன் றெண்ணிரண் டொன்றெழித்
திட்டவிருபான், துன்றுமிரு பத்திரண் டிருபத்தி யைந்தெனச் சொல்லு
நாள் வரனுளெனில், நன்றுமா கேந்திரமெ னச்சொல்வர் பன்மூன்று நாளு
க்கு மேலுத்தமம், வென்றிதரு சீதீர்க்க மென்பர்சில ரேழுக்கு மேற்படினு
(நன்றென்பரே.

இ-ரை.—வதுவினக்ஷத்திரமுதல் வரனக்ஷத்திரமானது ஒன்றாவது, நான்காவது ஏழாவது, பத்தாவது, பதின்மூன்றாவது, பதினாறாவது, பத்தொன்பதாவது, நெருங்கிய வீருபத்திரண்டாவது, இருபத்தைந்தாவது, என்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாகில், மாகேந்திரப்பொருத்தம், உத்தமமாகும். இந்தமுறைமை மாறியிருக்குமாகில் மத்திமமாகும், வதுநக்ஷத்திரமுதல் பதின்மூன்றுநக்ஷத்திரங்களுக்குமேல் வரனக்ஷத்திரமிருக்குமாகில் வெற்றியைத்தருகின்ற ஸ்ரீதீர்க்கப்பொருத்தம் உத்தமமாகும் சிலஜோதிஷ நூலோர் எழுநக்ஷத்திரத்துக்குமேற்பட்டிருந்தாலும், உத்தமமென்று சொல்லுவார்கள், எ—று. (௰)

யோனிப்பொருத்தம்.

அச்சுவினி யாண்புரவி பரணியாண் குஞ்சரம ளக்கர்பெண் ணுடுரோணி
நச்சரவு மகசிரஞ் சாரையா திரைபெட்டை நாய்புனர்த மாம்பெண் வெரு
கே, இச்சையுறு பூசமாண சமாயி லாண்பூனை யெழின்மகம் புகலா ணெலி
மெச்சுபூ ரம்பெணெலி யுத்திரம் விளங்கெருது மிளிர்காம் பெண்ணெரு
(மையே.

இ-ரை.—அஸ்வதிநக்ஷத்திரம் ஆண்குதிரையாகும். பரணிநக்ஷத்திரம் ஆண்யானையாகும். கார்த்திகைநக்ஷத்திரம் பெண்ணாடாகும். ரோகணிநக்ஷத்திரம் விஷமுள்ளபாம்பாகும். மிருகசீரிஷநக்ஷத்திரஞ் சாரைப்பாம்பாகும். திருவாதிரை நக்ஷத்திரம் பெண்ணாயாகும். புனர்பூசநக்ஷத்திரம் பெண்பூனையாகும். விரும்பத்தக்க பூசநக்ஷத்திரம் ஆணாடாகும். ஆயிலியநக்ஷத்திரம் ஆண்பூனையாகும். அழகிய மகநக்ஷத்திரம் சொல்லப்படுகின்ற ஆணெலியாகும். சிறந்த பூரநக்ஷத்திரம் பெண்ணெலியாகும். உத்திரநக்ஷத்திரம் விளங்காநின்ற விருஷபமாகும். ஒளிர்கின்ற அஸ்தநக்ஷத்திரம் பெண்ணெருமையாகும். எ—று. (௧௧)

இதுவுமது.

சித்திரைபு லிப்போத்து சோதியெரு மைக்கடா திகழ்விசா கம்பெண்புலி
சுத்தவனு டம்பிணை மான்கேட்டை யாண்மான்று லங்குமூ லக்குக்கலாண்
ஒத்தபூ ராடமாண் கவியுத்தி ராடநன் குறைசெயு மலட்டுப்பசு
வித்தமலி யோணம்பெண் மர்க்கடம விட்டம் விளங்கரிப் பெண்ணுமரோ.

இ-ரை.—சித்திரைநக்ஷத்திரம் ஆண்புலியாகும். சுவாதிநக்ஷத்திரம் ஆணெருமையாகும். விளங்காநின்ற விசாகநக்ஷத்திரம் பெண்புலியாகும். பரிசுத்தமாகிய அனுஷநக்ஷத்திரம் பெண்மானாகும். கேட்டைநக்ஷத்திரம் ஆண்மானாகும். பிரகாசிக்கின்ற மூலநக்ஷத்திரம் ஆண்நாயாகும். ஒத்திருக்கின்ற பூராடநக்ஷத்திரம் ஆண்குரங்காகும். உத்திராட நக்ஷத்திரம். சொல்லப்பட்ட வழகிய மலட்டுப்பசுவாகும். செல்வ மிகுந்த திருவோணநக்ஷத்திரம் பெண்குரங்காகும். அவிட்டநக்ஷத்திரம் பிரகாசியாநின்ற பெண்சிங்கமாகும். எ—று. (௧௨)

இதுவுமது.

சதயநாள் பெண்பரிபு ரட்டாதி புருடன் றயங்குத்தி ரட்டாதியோ
துதிசெய்பாற் பசுகலம் பிடியானை யாகுந் துலங்கியா னைக்குமனுடர்
குதிரைக்கு நற்பசுவெ லிக்குமார்ச் சாலங் குரங்கினுக் குரைசுவானம்
மதியரவி னுக்காடு மானெருமைக்குமிகு வலியபுலி யும்பகையரோ.

இ-ரை.—சதயநக்ஷத்திரம் பெண்குதிரையாகும், பூரட்டாதி நக்ஷத்திரம் ஆண்சிங்கமாகும், விளங்காநின்ற உத்திரட்டாதி நக்ஷத்திரம் யாவரும்புகழ்கின்ற பாற்பசுவாகும், ரேவதிநக்ஷத்திரம் பெண்யானையாகும், விளங்காநின்ற இவற்றுள் யானைக்கு மனிதரும், குதிரைக்குநல்லபசுவும், எலிக்குப்பூனையும், சொல்லுகின்ற குரங்குக்கு நாயும், மதிக்கப்பட்ட பாம்புக்கு ஆடும், மானுக்கும் எருமைக்கும் வலிமிகுந்தபுலியும் பகையாகும். எ—று. (௧௩)

இதுவுமது.

இலகிரண் டும்புருட யோனியா கிற்பகையி ரண்டும்பெண் யோனியாகில், நல்மாகு மாண்யோனி யாணும்பெண் யோனியே நவில்பெண்ணு மாகினன்றும், குலவுமாண் யோனிபெண் யோனியாப் பெண்யோனி கூறும்மாண் யோனியாகில், சிலர்கண்மத் திமமெனப் பலர்களுத் தமமெனச் செப்(புவா ருலகின்மாதோ.

இ-ரை.—விளங்காநின்ற வதுநக்ஷத்திரயோனிவர நக்ஷத்திரயோனியிரண்டும் ஆண்யோனியாகில் பகையுண்டாகும். பெண்யோனியாகில் நன்மையாகும், வரனுக்குஆண்யோனியும், வதுவுக்குப்பெண்யோனியுமாகில், நன்மையுண்டாகும். கொண்டாடப்படுகின்ற வரனுக்குப் பெண்யோனியும், சொல்லுகின்ற வதுவுக்கு ஆண்யோனியுமாகில், உலகத்தில் சிலஜோதிஷர்கள் மத்திமமென்றும், பலஜோதிஷர்கள் உத்தமமெனறுஞ் சொல்லுவார்கள். எ—று. (கச)

இராசிப்பொருத்தம்.

எழில்வதுவி ராசிமுதல் வான்ராசி யேழெனினு மேழின்மேற் படினுநன்றும், பழகியவி ரண்டுபனி ரண்டுமுனை தருமூன்று பதினொன்று நான்குபத்தும், ஒழிவிலைந் தொன்பதுந் திகழாறு மெட்டுமா யுற்றிடிற் றீமையாகும், மொழிதரவி ளங்குமிவை யோரைந்து மந்தந்த முறையாக மாறி (னன்றே.

இ-ரை.—இராசிப்பொருத்தம். அழகுபொருந்திய வதுவினது சந்திரலக்கின முதல் வரனது சந்திரலக்கினமானது, எழானாலும், எழுக்குமேலானாலும், உத்தமமாகும். பார்க்கப்படுகின்ற வதுவினது ராசி இரண்டும், வரனதுராசிபன்னிரண்டாகவும், சொல்லாநின்ற வதுவினது ராசிமூன்றும், வரனது ராசி பதினொன்றாகவும், வதுவினதுராசி நான்கும், வரனது ராசி பத்தாகவும், குறைவில்லாத வதுவினதுராசி ஐந்தும், வரனது ராசி ஒன்பதாகவும், விளங்காநின்ற வதுவினது ராசி ஆறும், வரனதுராசி எட்டாகவு மிருக்கில், கெடுதியுண்டாகும். யாவரும்புகழும்படி விளங்காநின்ற இவ்வைந்தும், அந்தந்தமுறையாகவே மாறியிருக்கில் உத்தமமாகும். எ—று. (கரு)

இராசி - அதிபதிப்பொருத்தம்.

மேடமெறி தேட்குறவு மான்குண்டை கன்னிதுலை மிதுனமாம் விடைதுலைக்குப், பாடமிது னத்தினொடு தேளாதி யாறுமாம் பகருமிதுனங் கனிக்கு, நாடரிய சிங்கமீ னொழியவிரு நான்குமா நண்டினுக் கிடபமிதுனம் தேடுதனு மீன்கன்னி யாகுமுழு வைக்குச் சிறந்தமீன் மேடமாமே.

இ-ரை.—மேஷராசி விருச்சிகராசியிரண்டுக்கும் மகரராசி, விருஷபராசி, கன்னியாராசி, துலாராசி, துதிக்கின்ற மிதுனராசி, இவ்வைந்துராசிகளும், உறவாகும், விருஷபராசி, துலாராசியிரண்டுக்கும், மிதுனராசி, விருச்சிகராசி, தனுராசி, மகரராசி, கும்பராசி, மீனராசி, மேஷராசி, இவ்வேழுராசிகளும் உறவாகும். சொல்லுகின்ற மிதுனராசி, கன்னியாராசி, இரண்டுக்கும் தேடுதற்கரிய சிங்கராசி, மீனராசி, யல்லாத மேஷராசி, விருஷபராசி, கடகராசி, துலாராசி, விருச்சிகராசி, தனுராசி, மகரராசி, கும்பராசி, இவ்வெட்டுராசிகளும் உறவாகும். கடகராசிக்கு, விருஷபராசி, மிதுனராசி, யாவரும் விரும்புகின்ற தனுராசி, மீனராசி, கன்னியாராசி, இவ்வைந்து ராசிகளும் உறவாகும். சிங்கராசிக்கு சிறப்பினையுடையமீனராசி, மேஷராசி யிவ்விரண்டு ராசிகளும் உறவாகும். எ—று. (கசு)

இதுவுமது.

தனுவினொடு மீனந்த னக்குநிறை கும்பமுஞ் சாற்றுவிடை முதலாறுமாம், புனிதமக ரங்குடத் துக்குமிது னங்கன்னி புகழ்பெருகு தனுசு

மீனம், இனியவிடை துலையுமுற வாகுமாற் பொலிவதுவி ராசியதி பன்ற
னக்கும், நனிவானி ராசியதி பற்குநவில் பகையின்றி நட்பாகி லுத்தம
(மரோ.

இ-ரை.—தனுசுராசிமீனராசியிரண்டுக்கும் நிறைந்தகும்பராசிசொல்லுகின்றவிரு ஷபராசி, மிதுனராசி, கடகராசி, சிம்மராசி, கன்னியாராசி, துலாராசி, இவ்வேழுராசிகளும் உறவாகும். சுத்தமாகிய மகராராசி கும்பராசியிரண்டுக்கும் மிதுனராசி, கன்னியாராசி, புகழ்மிகுந்த தனுசுராசி, மீனராசி, இனிமையுடைய விருஷபராசி, துலாராசி, இவ்வாறு ராசிகளும் உறவாகும், இவற்றுள், வதுவினது ராசியதிபதிக்கும் மிகுந்த வழகினையுடைய வரனது ராசியதிபதிக்கும் சொல்லுகின்ற பகையில்லாமல் உறவாக விருக்கில் உத்தமமாகும். எ—று. (கஎ)

வசியப்பொருத்தம்.

வான்றவர்கள் புகழ்தரும ணம்புரிவ தற்குரிய வதுவரர்கள் சன்மராசி
மீன்றனக் குத்துலையு மிதுனந்த னக்குயர்வி ருச்சிகமு மகிழ்குடத்துக்
கேன்றகர்க் கடகமும றிக்குநவில் கன்னியுந விடையந்த னக்குவிலலும்
ஆன்றமக ரத்தினுக் கரியுமா காதிவைய லாதவைகள் வசியமாமே.

இ-ரை.—மேலாகிய தவத்தினையுடைய முனிவர்களும் புகழத்தக்க விவாகத்திற்குரிய வதுவுக்கு ஜன்மராசி மீனமாகில் வரனுக்கு ஜன்மராசி துலாமாகவிருத்தலும் மேன்மைபொருந்திய வதுவுக்கு மிதுனராசியாகில் வரனுக்கு விருச்சிகராசியாக விருத்தலும், மகிழ்ச்சிபொருந்திய வதுவுக்குக்கும்பராசியாகில் தகுதியுள்ளவரனுக்குக் கடக்ராசியாகவிருத்தலும், சொல்லப்பட்ட வதுவுக்கு மேஷராசியாகில், வரனுக்குக் கன்னியாராசியாக விருத்தலும், அழகிய வதுவுக்கு விருபராசியாகில் வரனுக்குத்தனுசுராசியாகவிருத்தலும், அமைவினையுடைய வதுவுக்கு மகரராசியாகில் வரனுக்குச் சிங்கராசியாகவிருத்தலும், தீதாகும். இதுவரையிற்சொல்லிய முறையல்லாது வேறு எந்தவிதமாக விருந்தாலும், வசியப்பொருத்தம் உத்தமமாகும். எ—று. (கஅ)

இரச்சுப்பொருத்தம்.

பாதிமதி போன்மூன்று வரைகீறி யவைகளின் பாதமுத லாக்குறுக்கே
ஏதமறு நான்குவரை கீறவஃ திருபத்தி யேழுசந் திகளாகுமால்
ஆதிவரை முனையிலச் சுவினிதனை வைத்துவல மாகமுறை யேயடக்க
ஓதியவி ரச்சுசிர மொளிர்கண்ட நாபியெழி லூருபா தமுமாமரோ.

இ-ரை.—இரச்சுப்பொருத்த மறிவதற்கு அர்த்தசந்திரனைப்போல் வரிசையாக மூன்றுவரைகீறி, அம்மூன்றுவரைகளின், அடிமுதலாகக்குறுக்கே இடைவிட்டு நான்குவரைகீற அதுகுற்றமற்ற விருபத்தேழுசந்திகளாகும். அவைகளில் அடிவரையின் முனையில் அசுவதிநக்ஷத்திரத்தை நாட்டி அதுமுதல் மேலேவலமாக ரேவதிவரையில் முறையாகவே அடைத்தால் பெரியோர்களாற்சொல்லிய விளங்காநின்ற சிரரச்சு கண்டரச்சு, நாபிரச்சு, ஊருரச்சு, பாதரச்சுவென்று சொல்லப்பட்ட ஐந்துவிதமாக அழகுடனே விளங்கும். எ—று. (கக)

இருவர்நா ளொருவனாயு றக்கேட தாஞ்சிரவி ரச்செனிற் பெண்ணுசமாம்
மருவியக மூத்தாகில் வரன்மரண நாபியேன் மைந்தர்சா மூருமலடாம்
கருதரிய பாதமேற் பொருளுச மவரோக ணந்துக்க மாரோகணம்
பெருகுசில நாட்போக மாறியுற மிகுசுகம் பெற்றுநனி வாழ்வரன்றே.

இ-ரை.—அவற்றுள் வதுநக்ஷத்திரமும், வரனக்ஷத்திரமும். ஒருவனாயிருந்தால் கெடுதியுண்டாகும். அப்படியிருப்பதில், சிரவிரச்சுவாகில் வதுவுக்குமரணமுண்டாகும். பொருந்தியகண்டரச்சுவாகில் வரனுக்குமரணமுண்டாகும். நாபிரச்சுவாகில், அவ்விருவருக்கும் பிறக்கின்றகுழந்தைகளுகு மரணமுண்டாகும். ஊருரச்சுவாகில் மலடாகும். பாதரச்சுவாகில் நினைத்ததற்கரிய பொருள்நாசமாகும். இரங்குமுறையிலிருக்குமாகில் துக்கமுண்டாகும். எதுமுறையிலிருக்குமாகில் சிலநாள்மிகுந்த போகமுண்டாகும். இரங்குமுறையிலொன்றும் எறுமுறையிலொன்றுமாக மாறியிருக்கில் மிகுந்தவின்பங்களையெல்லா மனுபவித்துப் பெருகிவாழ்வார்கள். எ—று. (உ0)

மிருகசீரிடம்.		சித்திரை.		அவிட்டம்.	
ரோகணி	திரு	அஸ்தம்	சுவாதி	திருவோ	சதயம்
கார்த்திகை	புனர்பூ	உத்திரம்	விசாகம்	உத்திரா	பூரட்
பரணி	பூசம்	பூரம்	அனு	பூராடம்	உத்திரட்
அசுவதி	ஆயிலி	மகம்	கேட்	மூல	ரேவதி

வேதைப்பொருத்தம்.

அசுவதிக் குக்கேட்டை பரணிநா ளுக்கனுட மாரலுக் கொளிர்விசாகம்
நசையுருட் குச்சோதி திருவாதி ரைக்கோண நவில்கழைக் குத்திராடம்,
வசையில்பூ சக்குமுற் குளமாயி லுக்கன்றில் மகநாளி லுக்குநாவாய்
இசைகொள்பூ ரக்குத்தி ரட்டாதி யுத்திரத் திற்குநா ழியும்வேதையே.

இ-ரை.—அழகுபொருந்திய வதுவுக்கு, அசுவதிநக்ஷத்திரமாகில், வரனுக்குக் கேட்டைநக்ஷத்திரமாக விருத்தலும், வதுவுக்குப்பரணிநக்ஷத்திரமாகில், வரனுக்கு அனுஷநக்ஷத்திரமாக விருத்தலும், வதுவுக்குக்கார்த்திகை நக்ஷத்திரமாகில், வரனுக்குப் பிரகாசிக்கின்ற விசாக நக்ஷத்திரமாகவிருத்தலும், அன்பினையுடையவதுவுக்கு ரோகணி நக்ஷத்திரமாகில், வரனுக்குச் சுவாதிநக்ஷத்திரமாகவிருத்தலும், வதுவுக்குத் திருவாதிரைநக்ஷத்திரமாகில், வரனுக்குத் திருவோணநக்ஷத்திரமாக விருத்தலும் சொல்லப்பட்ட வதுவுக்குப் புனர்பூசநக்ஷத்திரமாகில், வரனுக்கு உத்திராட நக்ஷத்திரமாக விருத்தலும், குற்றமற்றவதுவுக்குப் பூசநக்ஷத்திரமாகில், வரனுக்குப் பூராடநக்ஷத்திரமாக விருத்தலும், வதுவுக்கு ஆயிலியநக்ஷத்திரமாகில், வரனுக்கு மூலநக்ஷத்திரமாக விருத்தலும், வதுவுக்கு மகநக்ஷத்திரமாகில், வரனுக்கு ரேவதிநக்ஷத்திரமாக விருத்தலும், கீர்த்திபொருந்திய வதுவுக்குப் பூரநக்ஷத்திரமாகில், வரனுக்கு உத்திரட்டாதி நக்ஷத்திரமாக விருத்தலும், வதுவுக்கு உத்திரநக்ஷத்திரமாகில், வரனுக்குப் பூரட்டாதி நக்ஷத்திரமாகவிருத்தலும், துன்பத்தைக்கொடுக்கின்ற வேதைக்கயிருகும். எ—று. ()

இதுவுமது.

அத்தநாட் குச்சதயம் வேதையா ரும்புகல விட்டமான் றலேசித்திரை
ஒத்தவிம் மூன் றுமொன் றுக்கொன்றுக் குவேதையென் றுரைசெய்வர்கணி
தநூலோர், வித்தமலி வதுவரர்க ணட்சத்தி ரங்கட்கு வேதையாகிற்றீமை
யாம், சுத்தமா கிடின்வதுவை செய்திடப் பற்பலசு கம்பெற்று வாழ்வர்
(தாமே.

இ-ரை.—வதுவுக்கு அஸ்தநக்ஷத்திரமாகில், வரனுக்குச் சதயநக்ஷத்திரமாக விருத்தலும், சொல்லுகின்ற மிருகசீரிஷஞ்சித்திரையவிட்டமென்னு மூன்றுநக்ஷத்திரங்களும், ஒன்றுக்கொன்று வேதையாகுமென்று சோதிஷநூல்வல்லவர்கள் சொல்வார்கள். நல்லறிவினையுடைய வதுவரர்கள் நக்ஷத்திரங்கள் ஒன்றுக்கொன்று வேதையாயிருக்கில் தீங்குண்டாகும், வேதையில்லாதிருக்கில் விவாகஞ்செய்தால், பலபலவிதமாகிய வின்பங்களெல்லா மனுபவித்துவாழ்வார்கள். எ—று. (உஉ)

திகழ்தருதி னங்கணமி யோனியொடி ராசிமித் திரமிரச் சுவெனவைந்தும்
தகைமைபெறு பிரதான மாகுமிவை தம்மினுஞ் சாற்றுமறை யோர்க்குநா
ளும், புகழரச ருக்குநவில் கணமும்வணி கர்க்கினிது பொலிராசி மித்திரமு
மேல், மகிழ்வுபெறு சூத்திரர்த மக்குயோ னியுமேவ யங்குறுசி ரேட்ட
(மாமே.

இ-ரை.—வதுவரர்களுக்குரிய தசவிதப்பொருத்தங்களிலும் விளங்காநின்றதினப்பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப்பொருத்தம், இராசி மித்திரப்பொருத்தம், இரச்சுப்பொருத்தம், என்பனவாகிய பெருமைபொருந்திய, ஐந்துபொருத்தங்கள்,பிரதானமாகும். இவற்றுள்ளும், சொல்லுகின்ற பிராமணர்களுக்குத்தினப்பொருத்தமும் கீர்த்திபொருந்திய க்ஷத்திரியர்களுக்குரியதாகச் சொல்லப்பட்ட கணப்பொருத்தமும், இன்பத்துடனே விளங்காநின்ற வைசியர்களுக்கு இராசிமைத்திரப் பொருத்தமும், மேலாகிய களிப்பினையுடைய சூத்திரர்களுக்கு யோனிப்பொருத்தமும், மேன்மைபொருந்திய சிரேஷ்டமாகும். எ—று. (உ௩)

நாடிப்பொருத்தம்.

சென்னியா திரைபுனர்த முத்திரங் கைமீன் சிறந்திடுங் கேட்டைமூலம்
முன்னுசத யம்புரட் டாதியிவை யொருநாடி மொழிபரணியொடுமான்றலை
மின்னுபுகழ் மதிபூச முன்னுபூ ரம்பயறு மிளிர்தரும் பனைமுற்குளம்
மன்னியவ விட்டமெழி லுத்திரட் டாதியிவை வருமத்தி யேகநாடி.

இ-ரை.—அசுவதி, திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், அஸ்தம், சிறப்புடைய கேட்டை, மூலம், கருதுகின்ற சதயம், பூரட்டாதி, இந்த ஒன்பது நக்ஷத்திரங்களும் ஏகநாடியாகும், சொல்லுகின்ற பரணி, மிருகசீரிஷம், பிரகாசமுங் கீர்த்தியும் பொருந்தி மதிக்கத்தக்க பூசம், நினைக்கத்தக்க பூரம், சித்திரை, விளங்குகின்ற அனுஷம், பூராடம், நிலைபெற்ற அவிட்டம், அழகிய உத்திரட்டாதி, இந்த ஒன்பதுநக்ஷத்திரங்களும், மத்யோக நாடியாகும். எ—று. (உ௪)

கார்த்திகையு ரோணியா யிலியமக மொண்சோதி கருதியவி சாகமுடனே, ஏத்துபுக ழுத்திரா டத்தொடோ ணந்தோணி யிவைபார்ச்சு வேக நாடி, பார்த்துமகிழ் பெருகுமெழில் மேயபெண் பிள்ளைநாள் பகருமொரு நாடியாகில், சேர்ந்துவிதி வழிமணஞ் செய்திடத் தீதெனச் செப்புவா ருல (கின்மன்னே.

இ-ரை.—கார்த்திகை, ரோகணி, ஆயிலியம், மகம், ஒளிபொருந்திய சுவாதி, நினைக்கத்தக்க விசாகம், புகழ்ந்து துதிக்கத்தக்க உத்திராடம், திருவோணம், ரேவதி இந்த ஒன்பதுநக்ஷத்திரங்களும் பார்சுவேகநாடியாகும். ஒருவருக்கொருவர் நோக்கிச் சந்தோஷிக்கத்தக்க மிகுந்த அழகுபொருந்திய, வதுவினது நக்ஷத்திரமும், வரனது நக்ஷத்திரமும், ஒரேநாடியாக விருந்து அவ்விருவருக்கும் விதிப்படி முறையாக விவாகஞ்செய்யில் தீங்குண்டாகுமென்று பூமியினிடத்துள்ள பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (உ௫)

வாசிகாஞ் சிரம்வயிர மாம்பரணி நெல்லியுனை வயிரமெரி நாளத்திபால்
காசிலா வுருணுவல் பால்மிருக சிரநவில்க ருங்காலி வயிரமாகும்
ஈசனுள் சண்பகம் பால்புனர்த மொளிர்புன்னை யிலகுபால் பூசமால்பால்
பூசலர வுயர்வாகை வயிரமக மரசுபால் பூரம்வி ளாவயிரமே.

இ-ரை.—அசுவதிநக்ஷத்திரம் எட்டிமரம் வயிரமாகும், பரணிநக்ஷத்திரம் நெல்லிமரம் வயிரமென்றுசொல்லப்படும், கார்த்திகைநக்ஷத்திரம் அத்திமரம் பாலாகும், குற்றமற்ற ரோகணிநக்ஷத்திரம், நாவல்மரம் பாலாகும், மிருகசீரிஷநக்ஷத்திரம், கருங்காலிமரம் வயிரமென்று சொல்லப்படும், திருவாதிரைநக்ஷத்திரம் ஜண்பகமரம் பாலாகும், விளங்காநின்ற புனர்பூசநக்ஷத்திரம், புன்னைமரம்பாலாகும், பிரகாசிக்கின்ற பூசநக்ஷத்திரம், ஆலமரம்பாலாகும், போர்செய்கின்ற ஆயிலியநக்ஷத்திரம் உன்னதமாகியவாகைமரம் வயிரமாகும், மகநக்ஷத்திரம் அரசமரம் பாலாகும், பூரநக்ஷத்திரம் விளாமரம் வயிரமாகும். எ—று. (உ௬)

உத்திரம் பலவுபா லத்தந லெருக்குபா லுயர்பயறு மாதுளைபயம்
சித்தமகிழ் தருசோதி வில்வம்வயி ரஞ்சுளகு திகழ்மருது வயிரமாகும்
பைத்தவனு டந்தாழை வயிரமாங் கேட்டைமகிழ்பால்மூல மூங்கில்வயிரம்
சுத்தபூ ராடமாப் பாலுத்தி ராடமிரு சுகவஞ்சி பாலாகுமே.

இ-ரை.—உத்திரநக்ஷத்திரம் பலாமரம் பாலாகும். நன்மைபொருந்திய அஸ்தநக்ஷத்திரம் எருக்கமரம் பாலாகும், உயர்வாகிய சித்திரைநக்ஷத்திரம் மாதுளைமரம்பாலாகும், மனமகிழ்ச்சியைத்தருகின்ற சுவாதி நக்ஷத்திரம் வில்வமரம் வயிரமாகும், விளங்காநின்ற விசாகநக்ஷத்திரம் மருதமரம்வயிரமாகும், அனுஷநக்ஷத்திரம் பசுமையுடைய தாழைமரம் வயிரமாகும். கேட்டைநக்ஷத்திரம் மகிழ்ச்சியைத்தருகின்ற பாலாகும். மூலநக்ஷத்திரம் மூங்கில்மரம் வயிரமாகும், பூராடநக்ஷத்திரம் பரிசுத்தமாகிய மாமரம் பாலாகும். உத்திராடநக்ஷத்திரம் மிகுந்த சுகத்தைத்தருகின்ற வஞ்சிமரம் பாலாகும். எ—று. (உ௭)

திருவோண மகிழ்பலா சம்பால விட்டநனி திகழ்வன்னி வயிரமாகும்
பொருவில்சத யம்புகழ்ம ராவயிர மாகும் புரட்டாதி புளிவயிரமாம்
மருவுத்தி ரட்டாதி வேம்புவயி ரமதாகு மகிழிரே வதியிலுப்பை
பெருகுறும் பால்மாம தாகுமற் றிவைகளின் பெற்றியுரை செய்வாமரோ.

இ-ரை.—மகிழ்ச்சியைத்தருகின்ற திருவோணநக்ஷத்திரம் புரசமரம் பாலாகும். மிகுந்த ஒளிபொருந்திய அவிட்டநக்ஷத்திரம் வன்னிமரம் வயிரமாகும். சமானமில்லாத சதயநக்ஷத்திரம் யாவரும்புகழ்கின்ற மராமரம் வயிரமாகும். பூரட்டாதி நக்ஷத்திரம் புளியமரம் வயிரமாகும். அழகுபொருந்திய உத்திரட்டாதி நக்ஷத்திரம் வேப்பமரம் வயிரமாகும். யாவருமகிழ்கின்ற ரேவதிநக்ஷத்திரம் யிலுப்பைமரம் பெருகுகின்றபாலாகும். இதுவரையிற்சொல்லிய, அசுவதிமுதல் ரேவதியந்தமாகிய நக்ஷத்திரங்களின் றன்மைகளைச்சொல்லுவோம். எ—று. (உஅ)

புகலுமாண் வயிரமும் பெண்பாலு மாகிடிற் புத்திரப் பேறதாகும்
திகழுமாண் பாலுமெழில் பெருகுபெண் வயிரமுஞ் சேரின்வெறுமலடதாகும், அகமகிழ்வு நல்குமாண் பெண்ணிருவர் களும்வயிர மாகின்மைந் தர்கணட்டமாம், பகருமாண் பெண்ணிருவர் நாட்களும் பொலிசெழும் பாலா
(கில் வாழ்வதாமே.

இ-ரை.—சொல்லப்பட்ட வரனது நக்ஷத்திரம் வயிரமும், வதுவினது நக்ஷத்திரம் பாலுமாக விருந்திடில், புத்திரப்பேறுண்டாகும். விளங்காநின்ற வரனது நக்ஷத்திரம் பாலும், அழகுமிகுந்த வதுவினது நக்ஷத்திரம் வயிரமுமாகவிருந்திடில், புத்திரப்பேறில்லாத மலடாகும். மனமகிழ்ச்சியைத்தருகின்ற வரன்வதுவென்னும், இருவர் நக்ஷத்திரங்களும் வயிரமாகவிருந்திடில், பிறந்தகுழந்தைகள் நஷ்டமாகும். சொல்லுகின்ற வதுவரனிருவர்நக்ஷத்திரங்களும், விளங்குகின்ற செழுமைபொருந்திய பாலாகவிருந்திடில், மிகுந்தவாழ்வுண்டாகும். எ—று. (உ௯)

தெரிதரும் புரவிமுத லைந்துநாள் வல்லூறு செங்கைமுத லாறுமாந்தை
அரியவுத் திரமாதி யோரைந்தும் வலியனு மனுடமுத லைந்துநாளும்
பிரியமுறு கோழியாந் திருவோண மாதியாப் பேசுநா ளாறுமயிலாம்
பாவுமயி லுக்குவல் லூறுநவி லாந்தையும் பகையென் றுரைப்பர்மன்னே.

இ-ரை.—தெரிந்துள்ள, அசுவதி, பரணி, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிஷம் என்னும் ஐந்துநக்ஷத்திரங்களும், வல்லூறாகும். திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரமென்னும், ஆறுநக்ஷத்திரங்களும் ஆந்தையாகும். அருமையானஉத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகமென்னும், ஐந்துநக்ஷத்திரங்களும் வலியனாகும். அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடமென்னும், ஐந்துநக்ஷத்திரங்களும், பிரியமிகுந்த கோழியாகும். திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி உத்திரட்டாதி, ரேவதி யென்னும், ஆறுநக்ஷத்திரங்களும் மயிலாகும். கொண்டாடப்பட்ட மயிலுக்கு வல்லூறும், சொல்லுகின்ற ஆந்தையும், பகையாகுமென்று ஜோதிஷநூல்வல்லவர்கள் சொல்வார்கள். எ—று. (௩0)

பாருலவு கோழிக்கு வல்லூறு மாந்தையும் பகையென்பர் வலியனுக்குச்
சீருலவு மாந்தைபகை யாந்தைக்கு வலியன் செறிந்தபகை யென்றுணர்ப்பர்
ஏருலவு வல்லூற்றி னுக்காந்தை கோழியுட னெழில்பெருகுமயிலும்பகை
பேருலவு மிவைகளிற் சொல்லாத வெல்லாம் பிறங்குமுற வென்பர்மாதோ

இ-ரை.—பூமியினிடத்தில் சஞ்சரிக்கின்ற கோழிக்கு வல்லூறும், ஆந்தையும் பகையாகுமென்றும், சிறப்புப்பொருந்தியவலியனுக்கு, ஆந்தைபகையாகு மென்றும், ஆந்தைக்குவலியன்மிகுந்த பகையாகுமென்றும், அழகுபொருந்திய வல்லூறுக்கு ஆந்தையும், கோழியும், மிகுந்த அழகினையுடைய மயிலும், பகையாகுமென்றும், பெருமைபொருந்திய இவைகளிற்சொல்லாதொழிந்த வெல்லாம், விளங்காநின்ற உறவென்றும், ஜோதிஷநூல்வல்லோர்கள் சொல்வார்கள். எ—று. (ருக)

விவாகப்பொருத்தங்களுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - எளஅ.

இருபத்தொன்பதாவது

விவாகமுரைத்த வத்தியாயம்.

கலிநிலைத்துறை.

மனைய றத்தினுக் குரியசீர்க் கற்புறு மகளிர்
தனைம ணந்திடப் பொருத்தங்க ளுரைத்தனந் தருமம்
இனிதி யற்றுபு விருமையின் பங்களு மெய்த
நனிசி றந்தவி வாகத்தின் விதிசில நவில்வாம்.

இ-ரை.—சுவிரதமகாராஜனே கேளும்! இல்லறதருமங்களைக் கிரமமாகநடத்து தற்குரிய கற்பிற்சிறந்தபெண்ணை விவாகஞ்செய்துகொள்வதற்குப் பார்க்கவேண்டிய தசவிதப்பொருத்தங்களையுங் கிரமமாகச்சொன்னோம். இனி, அவ்வில்லறதருமங்களை முறையாகநடத்தி, இம்மை மறுமையென்றுசொல்லப்பட்ட விருவகை யின்பங்களை யுமடைவதற்குரிய, மிகுந்தசிறப்பினையுடைய விவாகவிதிகளுட் சிலவற்றைச்சொல் லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மணம்புரிய வுத்தரா யணம்வி சேட
 மன்னுதக்ஷ ணாயனமத் திமமி வற்றுள்
குணங்கொளெட்டு மதிநலமாந் தனுசு கன்னி
 குடங்கடக மெனுநான்கு மதியுந் தீதாம்
இணங்குறுமீன் மிதுனம்விடை மகரந் தேளென்
 றியம்புமதி தனம்பாக்ய மிகுசந் தானம்
அணங்குநல முந்தருமே டந்து லாத்தோ
 டரிமதியு மத்திமமென் றறைவர் சில்லோர்.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு உத்தராயணமுத்தமமாகும். பொருந் திய தக்ஷணாயனமத்திமமாகும். இவ்விரண்டயனங்களுள்ளும், வருகின்ற, ஆடி, புரட் டாதி, மார்கழி, மாசி, என்றுசொல்லப்பட்ட நான்குமாதங்களுந்தீதாகும். நன்மை யைத்தருவதான, சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, பங் குனி, யென்றுசொல்லப்பட்ட வெட்டுமாதங்களும், ஐஸ்வரியத்தையும், சந்தானமுத லிய சகலபாக்கியங்களையும், மதிக்கத்தக்கமேன்மையையுந்தருவனவாகும். இவற்றுள் சித்திரை, ஆவணி, ஐப்பசியென்னுமூன்றுமாதங்களும், மத்திமபலனைத் தருவனவா மென்று சிலஜோதிஷவித்துவான்கள் சொல்லுவார்கள். எ—று. (உ)

பாலகுரு வானுசம் பால வெள்ளி
பகர்ந்தவது நாசமுறுந் தேய்ந்த வெள்ளி
சீலமுள வரன்றனக்கு நாச மெய்துந்
தேய்ந்தகுரு வதுவினுக்கு நாச முண்டாம்
ஏலுமதோ முகநாட்கள் மரண முண்டா
மியம்புதிரி யக்முகநாட் சுரமுண் டாகும்
ஞாலமகி ழூர்த்வமுக நாட்க ளெல்லா
நன்மைதரு மணத்தினுக்கென் றுரைப்பர் மிக்கோர்.

இ-ள்.—விவாகமுகூர்த்தத்தை, குருவானவர் அஸ்தமனநீங்கி, ஒளிவளர்ந்து வருங்காலத்திற் செய்தால் வரனுக்குக்கெடுதியுண்டாகும். சுக்கிரன், அஸ்தமனநீங்கி ஒளிவளர்ந்துவருங்காலத்திற் செய்தால் வதுவுக்குக்கெடுதியுண்டாகும். சுக்கிரன்க்ஷீணத்தையடைந்து வருங்காலத்திற்செய்தால், நல்லொழுக்கமுள்ள வரனுக்குக் கெடுதியுண்டாகும். குரு க்ஷீணத்தையடைந்துவருங்காலத்திற் செய்தால் வதுவுக்குக் கெடுதியுண்டாகும். பொருந்திய அதோமுகநக்ஷத்திரங்களிற் செய்தால் மரணமுண்டாகும். திரியக்முகமென்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களிற்செய்தால் சுரநோயுண்டாகும். உலகத்திலுள்ளவர் வியக்கத்தக்க ஊர்த்துவமுக நக்ஷத்திரங்களிற் செய்தால், எல்லாநன்மைகளேயுந் தருமென்று மேலாகிய ஜோதிஷநூற்புலவர்கள் சொல்வார்கள். எ—று. (௩)

உத்திரமூன் றத்தமிரே வதியொண் சோதி
யுரோணிமக மிருகசிர மனுட மூலம்
இத்தகுநா ணன்றெழிந்த நாட்க டூதா
மியம்புதிதி யேழைந்து மூன்றி ரண்டுய்
ஒத்தபதின் மூன்றுபதி னொன்று பத்து
முத்தமமொன் றாறுபனி ரண்டு மெட்டும்
மத்திமந்தீ தொழிந்தவைதேய் தருமெட் டின்மேல்
வருதிதிகண் மரணமுண்டா மனத்தி னுக்கே.

இ-ள்.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், ரேவதி, அழகியசுவாதி, ரோகணி, மகம், மிருகசீரிஷம், அனுஷம், மூலம், என்றுசொல்லப்பட்ட இந்தப்பதினொருநக்ஷத்திரங்களும், உத்தமமாகும், மற்றையநக்ஷத்திரங்களெல்லாந் தீதாகும். துதியை, திரிதியை, பஞ்சமி, சத்தமி, தசமி ஏகாதசி, திரையோதசியென்றுசொல்லப்பட்ட திதிகளுத்தமமாகும். பிரதமை, சஷ்டி அஷ்டமி, துவாதசி, யென்னுந்திதிகள் மத்திமமாகும். இவற்றுட் சொல்லாதொழிந்த திதிகளும், கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமிக்குமேல் வருகின்ற வெல்லாத் திதிகளு மரணத்தையுண்டாக்கும். எ—று. (௪)

திங்கள்புதன் குருவெள்ளி வார நன்றுஞ்
செங்கதிர்மத் திமஞ்சனிசேய் வாரந் தீதாம்

துங்கமிகப் பெருகுறுமி லக்கி னங்கள்
துலைமிதுனந் தனுமூன்று நன்மை யாகும்
பங்கமிலா தொளிர்கடகங் கும்பங் கன்னி
பகரிடப மின்னவைமத் திமம தாகும்
சிங்கம்விருச் சிகமகர மீன மேடந்
தீதாகு மென்பர்கடி மணஞ்செ யற்கே.

இ-ரை.—சிறப்பினையுடைய விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, திங்கள், புதன், வியாழம், வெள்ளி, யிந்தவாரங்களுத்தமமாகும். ஞாயிறுவாரமத்திமமாகும், செவ்வாய் சனி யிந்தவாரங்கள் தீதாகும். மிகுந்தமேன்மைபொருந்திய, மிதுனம், துலாம், தனுசு, இந்தமூன்றுலக்கினங்களு முத்தமமாகும். பழுதில்லாமல்விளங்காநின்ற கடகம், கும்பம், கன்னி, விருஷபமென்றுசொல்லப்பட்ட நான்குலக்கினங்களு மத்திமமாகும், சிங்கம், விருச்சிகம், மகரம், மீனம், மேஷம், இவ்வைந்துலக்கினங்களுந் தீதாகும். எ—று. (ரு)

இலக்கினத்திற் குருபுதன்சுக் கிரனன் றுகு
மிரவிமதி யரவுசனி சேயுந் தீதாம்
துலக்கிரண்டிற் சுபர்கணன்றும் பாவர் தீதாஞ்
சொலுமூன்றி லெவரெனினு முறநன் றுமால்
விலக்கருநான் கினிற்புகர்பொன் புந்தி நன்றும்
வெண்மதிசே யிரவிசனி யரவு தீதாம்
நலத்தசுப ரைந்திலுற நன்றுந் தீயோர்
நண்ணிடிற்றீ தாகும்விவா கத்தி னுக்கே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, உதயலக்கினத்தில், குரு, புதன், சுக்கிரனென்னுங் கிரகங்களிருந்தால், நன்மையுண்டாகும். சூரியன், சந்திரன், இராகு கேதுக்கள், சனி, செவ்வாயென்னுங்கிரகங்களிருந்தால் தீங்குண்டாகும். விளங்காநின்ற, இரண்டாமிடத்திற் சுபக்கிரகங்களிருந்தால் நன்மையுண்டாகும். பாவக்கிரகங்களிருந்தால் தீங்குண்டாகும். சொல்லுகின்ற மூன்றுமிடத்தி லெந்தக் கிரகங்களிருந்தாலும் நன்மையாகும். விலக்குதற்கரிய நான்காமிடத்தில், சுக்கிரன், குரு, புதனிவர்களிருக்க நன்மையாகும். சந்திரன், செவ்வாய், சூரியன், சனி, இராகு கேதுக்களிருக்கத் தீதாகும். ஐந்தாமிடத்தில் நல்லபலனைத்தருகின்ற சுபக்கிரகங்களிருக்க நன்மையுண்டாகும். பாவக்கிரகங்களிருக்கத்தீங்குண்டாகும். எ—று. (சு)

ஆறின்மதி புதனரவு தீதா மற்றோ
ராகினல மேழினெவ ருந்தீ தெட்டில்
கூறுமதி கதிர்சேய்நன் றேழிந்தோர் தீதாங்
குலவுறுமொன் பதிற்சனிசே யரவு தீதாம்
மாறின்மற்றோர் நலம்பத்தி னெவருந் தீயர்
வயங்குபதி னொன்றினில்யா வர்களு நல்லர்

ஏறுவியத்தி னிற்புகர்பொன் புதனன் றுகு
 மெஞ்சியவ ருறத்தீதா மன்ற னுக்கே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, ஆறுமிடத்தில், சந்திரன், புதன், இராகுகேதுக்களிருக்கத் தீங்குண்டாகும். மற்றையகிரகங்களிருக்கநன்மையுண்டாகும். ஏழாமிடத்தி லெந்தக்கிரகங்களிருந்தாலுந் துன்பமுண்டாகும், எட்டாமிடத்தில் சந்திரன், சூரியன், அங்காரகனென்றசொல்லப்பட்ட கிரகங்களிருந்தால்நன்மையாகும். மற்றையகிரகங்களிருந்தால் தீதாகும். கொண்டாடப்பட்ட ஒன்பதாமிடத்தில் சனி, அங்காரகன், இராகு, கேதுக்களிருக்கத்தீதாகும். கெடுதலில்லாத மற்றையகிரகங்களிருக்க நன்மையாகும். பத்தாமிடத்திலெந்தக்கிரகங்களிருந்தாலும், பாவர்களாதலாற் றீங்குண்டாகும். பதினோராமிடத்திலெந்தக்கிரகங்களிருந்தாலும் நல்லவர்களாதலால், நன்மையுண்டாகும். எற்றமாகிய பன்னிரண்டாமிடத்தில், சுக்கிரன், குரு, புதனிவர்களிருந்தால் நன்மையாகும், மற்றையகிரகங்களிருந்தால் கெடுதியுண்டாகும். எ—று. (எ)

குருவுதய மதியேழிற் புகரோ னெட்டிற்
 கூறிரவி யாறினிற்சுன் மூன்றி லேனும்
குருவுதயம் புதனுவிற் கதிர்பன் னொன்றிற்
 சூலவியசுக் கிரனெட்டி லிருக்கி லேனும்
குருவுதயம் புந்திபுக ரோனு நாலிற்
 கொடியோர்க ளாறுகு மிடத்தி லேனும்
குருவுதயம் புகரெட்டிற் கதிரோ னாறிற்
 குலவிடினு மணத்தினுக்கு நன்மை யாமே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, உதயலக்கினத்திற்குருவும், ஏழாமிடத்திற் சந்திரனும், எட்டாமிடத்திற் சுக்கிரனும், ஆறுமிடத்தில் யாவரும் புகழ்கின்ற சூரியனும், மூன்றுமிடத்திற்சனியுமிருந்தாலும், உதயலக்கினத்திற்குருவும், நான்காமிடத்திற்புதனும், பதினோராமிடத்திற்சூரியனும், எட்டாமிடத்திற்பிரகாசியாநின்ற சுக்கிரனுமிருந்தாலும், உதயலக்கினத்திற்குருவும், நான்காமிடத்திற் புதனுஞ் சுக்கிரனும், ஆறுமிடத்திற் பாவக்கிரகங்களு மிருந்தாலும், உதயலக்கினத்திற்குருவும், எட்டாமிடத்திற் சுக்கிரனும், ஆறுமிடத்திற்சூரியனுமிருந்தாலும், நன்மை யுண்டாகும். எ—று. (அ)

சுக்கிரனொன் றினிற்குருபன் னொன்றி லேனுந்
 தூயமதி லாபத்தி லுச்ச மேனும்
சுக்கிரன்பொன் னுதயமதி லிருக்கி லேனுஞ்
 சுபர்கள்கேந் திரதிரிகோ ணத்தி லேனும்
சுக்கிரன்புந் தியுமொன்றிற் சேய்பன் னொன்றிற்
 சூரியன்பத் தினிற்குருவோ ரைந்தி லேனும்
சுக்கிரன்பொன் புதனொன்றி லேனு நிற்கச்
 சொற்றிடுமன் றலுக்குமிகு நன்மை யாமே.

இ-ரை.—பெரியோர்களாலெடுத்துச்சொல்லப்பட்ட விவாக முகூர்த்தஞ்செய்வதற்கு, உதயலக்கினத்திற் சுக்கிரனும், பதினோராமிடத்திற்குருவுமிருந்தாலும், பதினோராமிடத்திற் பரிசுத்தமாகிய சந்திரன் உச்சம்பெற்றிருந்தாலும், உதயலக்கினத்திற்சுக்கிரனுங் குருவுமிருந்தாலும், ஒன்று, நான்கு, எழு, பத்தென்னுங் கேந்திரங்களிலும், ஐந்து, ஒன்பதென்னுந் திரிகோணங்களிலும், சுபக்கிரகங்களிருந்தாலும், உதயலக்கினத்திற் சுக்கிரனும் புதனும், பதினோராமிடத்தில் அங்காரகனும், பத்தாமிடத்திற்சூரியனும், ஐந்தாமிடத்திற்குருவுமிருந்தாலும், உதயலக்கினத்திற்சுக்கிரனும், புதனுங், குருவுமிருந்தாலும், மிகுந்தநன்மையுண்டாகும். எ—று. (கூ)

புந்தியொன்றிற் சனியாறிற் சேய்பன் னொன்றிற்
பொன்னவனொன் பதிலிரவி பத்தி லேனும்
புந்திகுரு வுதயத்தி லிரண்டிற் சோமன்
பொல்லார்க ளுபசயத்தி லிருக்கி லேனும்
புந்திபுக ருதயத்தி லிருக்கி லேனும்
புகரிரண்டிற் குருவியத்திற் கதிரெட் டேனும்
புந்தியைந்திற் புகரொன்றிற் கதிர்பன் னொன்றிற்
பொருந்திடினு மணத்தினுக்கு நன்மை யாமே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, உதயலக்கினத்திற்புதனும், ஆறுமிடத்திற்சனியும், பதினோராமிடத்திற்செவ்வாயும், ஒன்பதாமிடத்திற்குருவும், பத்தாமிடத்திற் சூரியனுமிருந்தாலும், உதயலக்கினத்திற்புதனுங்குருவும், இரண்டாமிடத்திற் சந்திரனும், உபசயஸ்தானமாகிய, மூன்று, ஆறு, பத்து, பதினொன்றென்னுமிடங்களிற் பாவக்கிரகங்களிருந்தாலும், உதயலக்கினத்திற் புதனுஞ்சுக்கிரனுமிருந்தாலும் இரண்டாமிடத்திற் சுக்கிரனும், பன்னிரண்டாமிடத்திற்குருவும், எட்டாமிடத்திற் சூரியனிருந்தாலும், உதயலக்கினத்திற்சுக்கிரனும், ஐந்தாமிடத்திற்புதனும், பதினோராமிடத்திற் சூரியனுமிருந்தாலு மிகுந்தநன்மையுண்டாகும். எ—று. (கo)

இருத்தைபக்கட் சயந்தேய்ந்த மதிபொன் னீச
மிருதுவந்தம் வருடாந்த மயன வந்தம்
பெருத்தவிடு சடசீதி யுபரா கங்கள்
பேசுவிதி பாதமுற்பா தம்பூ கம்பம்
திருத்தமுறு கிரகயுத்தங் கிரக முத்தந்
திக்காக நிர்க்காதம் புகலா தானம்
வருத்துபிருட் டோதயவி லக்கி னங்கள்
மற்றிவைக டோமன் றனுக்குத் தானே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, ரித்தைதிதிகள், அபரபக்ஷம், சந்திரன்க்ஷீணமாயிருக்குங்காலம், குரு, நீசமாயிருக்குங்காலம், ரிதுகாலங்களினந்தம், வருஷாந்தம், அயனங்களினந்தம், விசேஷமிகுந்த விஷுவத்புண்ணியகாலங்கள், ஷடசீதிபுண்ணியகாலங்கள், சந்திரசூரியகிரகணகாலங்கள், சொல்லுகின்ற விதிபாதயோ

கம், உற்பாதங்கள், பூகம்பிதகாலங்கள், திருத்தமாகிய நவக்கிரகயுத்தகாலங்கள், நவக்கிரகங்கள் விடுதலாகியகாலங்கள், திக்காகங்கள், நிர்க்காதங்கள், ஆதானமென்று சொல்லுகின்ற காலங்கள், வருத்துகின்ற பிருஷ்டோதயலக்கினங்கள், இவைகளெல்லாந் தீதாகும். எ—று. (கக)

கேதுவொடு கூடியநாள் சன்ம நாட்கள்
 கிளர்ந்தகன்ம நாண்மூன்றைந் தேழா நாட்கள்
கோதகலுஞ் சன்மமதி சன்ம வாரங்
 குலவுவயி ஞசிகமுந் தீமை யாகும்
தீதின்முதற் கருப்பமுறு வதுவ ரற்குச்
 சென்மமதி சென்மநாள் சென்ம வாரம்
ஓதுமிவை தீதாமா லொழிந்த கர்ப்பத்
 துதித்தவர்க்கு நலமாகு மணத்தி னுக்கே.

இ-ரை.—விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, கேதுவுடன்கூடியிருக்கு நக்ஷத்திரங்கள், ஜன்மானுஜன் மத்திரிஜன்மநக்ஷத்திரங்கள், விளங்காநின்ற கன்மநக்ஷத்திரங்கள், மூன்றுநக்ஷத்திரம், ஐந்தாநக்ஷத்திரம், ஏழாநக்ஷத்திரம், பழுதில்லாதஜன்மமாதம், ஜன்மவாரம், விளங்காநின்ற வைநாசிகநக்ஷத்திரம், இவைகளெல்லாந்தீதாகும். குற்றமற்றமுதற்கருப்பத்திற்பிறந்த வதுவரர்களுக்குச் சொல்லப்பட்ட ஜன்மமாதம், ஜன்மநக்ஷத்திரம், ஜன்மவாரமிவைகள் தீதாகும், மற்றையகருப்பத்திற்பிறந்த வதுவரர்களுக்கு நன்மையாகும். எ—று. (கஉ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மங்கள நானம் புரிந்தபின் பனுஞை மகிழ்விக்கி னேசுர பூசை
தங்குசங் கற்ப மங்குரம் பிரதி சாமுறை யியற்றிடு நாந்தி
புங்கவர் புரியும் வரப்பிரே ஷணமேற் பொலிவுறு கன்னிகா தானம்
துங்கமார் தீக்ஷா வஸ்த்ரதா ரணமே துலங்குமக் கினிப்பிர திஷ்டை.

இ-ரை.—வதுவரர்களுக்கு மங்களஸ்நானஞ்செய்வித்தபின்பு, மகிழ்ந்துசெய்யத்தக்க, அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, பொருந்தியசங்கற்பம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கிரமப்படிசெய்யவேண்டியநாந்தி, மேலோர்களாலே செய்யப்படுங் கோத்திரோச்சாரணம், மேலாகவிளங்காநின்ற கன்னிகாதானம், உயர்வுபொருந்திய தீக்ஷாவஸ்திரதாரணம், விளங்காநின்ற வக்கினிப்பிரதிஷ்டை. எ—று. (கங)

புகழ்வான் றனக்குப் புரிதரு பாத பூசையின் புறுமது பர்க்கம்
திகழுமாங் கலிய தாரண முகாந்தஞ் செழுமைசேர் பாணிக்கி ரகணம்
உகவையார் சத்த பதிபிர தான வோமப்ர தக்ஷிணங் கடல்சூழ்
சகமகிழ் தரமும் முறைபுரி யஸ்மாஸ் தாபனம் லாஜவா குதியே.

இ-ரை.—யாவரும் புகழ்கின்றவரனுக்குச் செய்யப்பட்ட பாதப்பிரக்ஷாளனம் இன்புறுகின்ற மதுபர்க்கம், விளங்காநின்ற மாங்கலியதாரணம், முகாந்தம், செழுமை

பொருந்திய பாணிக்கிரஹணம், மகிழ்ச்சிபொருந்திய சப்தபதிபூஜை, பிரதானவோமம், பிரதக்ஷிணம், சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் சந்தோஷிக்கும்படி மூன்றுதரம் விதிப்படி செய்யத்தகுவனசெய்து அம்மிமிதித்தல், லாஜவோமஞ்செய்தல். எ—று. (கச)

திருவமார் ஜயாதி யாகுதி பிராயச் சித்தவா குதியுட னிரக்ஷை
மருவுமா சீர்வா தஞ்சபா பூசை வான்முறை யினிதுசெய் திடுதல்
கருதுமன் றிரவிற் பிரவேச வோமங் கனிவிற்செய் ஸ்தாலிபா கம்பின்
பொருவறு மவுபா சனஞ்சொல்காந் தருவ பூசையு மன்பொடு புரிதல்.

இ-ரை.—அழகுபொருந்திய ஜயாதிவோமம், பிராயச்சித்தவோமம், இரக்ஷாபந்தனம், நன்மைபொருந்திய ஆசீர்வாதம், சபாபூஜை, இவைகளையெல்லாங் கிரமப்படியின்பத்துடனே செய்தல், மதிக்கப்பட்ட அன்றையத்தினமிரவில் பிரவேசவோமம் மகிழ்ச்சியுடனேசெய்யாநின்ற ஸ்தாலீபாகம், அதற்குப்பின்புசெய்யப்படு மொப்பற்ற அவுபாசனம், சொல்லுகின்றகந்தருவபூசையும் அன்புடனேசெய்தல். எ—று. (கரு)

பொருந்திய மூன்றுந் தினமதிற் சதசு புகலுநான் காவது தினத்தில்
திருந்திய வசந்தம் யாமமோ ரெட்டிற் சேஷவோ மந்தனி யாற்றல்
பரிந்துதாம் பூல சர்வணம் புரிதல் பாலிகை விசர்ச்சனஞ் செய்தல்
விரிந்தசி றிவையவ் வவர்கள்சூத் திரல் விதித்தவா றெழுகுதன் முறையே

இ-ரை.—கிரமமாகப்பொருந்திய மூன்றுந்தினத்தில் சதசும், நான்காந்தினத்தில் திருத்தமாகிய வசந்தபூஜையும், எட்டாவதுயாமத்தில் ஒப்பில்லாத சேஷவோமஞ்செய்தல், அன்புடனேதாம்பூலசர்வணஞ்செய்தல், முறைமைப்படி மூளைப்பாலிகை விசர்ச்சனஞ்செய்தல், விஸ்தாரமாகிய சிறப்புப்பொருந்திய இவைகளையெல்லாம்அவரவர்களுக்குரிய சூத்திரங்களிற்சொல்லிய விதிப்படி வான்முறையாகச் செய்தொழுகவேண்டும். எ—று. (கசு)

விவாகமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - எ௱உச.

முப்பதாவது

மாதரொழுக்கமுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

ஓதநெ டுங்கடல் சூழுல கத்தோர்
ஏதமில் பற்பல வின்புறும் வண்ணம்
ஆதர வோடுவி வாக மறைந்தாம்
மாதரொ ழுக்கம் வகுத்துரை கிற்பாம்.

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே! குளிர்ச்சிபொருந்திய பெரியகடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்திலுள்ளவர்களெல்லாம், குற்றமில்லாத பலவகைப்பட்ட நன்மைகளைப்பெறும்படியாக, விவாகவிதியினைக்கிரமமாகச்சொன்னோம், இனியவ்வில்வாழ்க்கைக்குரிய மாதர்களின் நல்லொழுக்கங்களைக் கிரமமாகவிரித்துச் சொல்லுவோமென்றார், காளஸ்திமகாமுநிவர். எ—று. (க)

கலிநிலைத்துறை.

கதிரொ ழுந்திடன் முன்கண வனைத்தொழு தெழுந்தே
இதமு றச்சவு சாதிய விதிவழி யியற்றிப்
பதிந லம்பெறப் பற்பல பணியினி தாற்றல்
துதிபு ரிந்திடு கற்புடைத் தோகையர் செயலே.

இ-ரை.—சூரியோதயத்திற்குமுன் நித்திரைவிட்டெழுந்து, கணவனையுள்ளன்புடன்வணங்கி, நன்மையுண்டாகும்படி சவுசமுதலிய கிரியைகளைத் தருமநூல்களிற் சொல்லியவண்ண மினிதாகச்செய்து, கணவனுக்கின்பமுண்டாகப் பலவகைப்பட்ட பணிவிடைகளையு நன்மையுடனேசெய்தல், யாவருந் தோத்திரஞ்செய்வதற்குரிய கற்பிற்சிறந்த மயில்போலுஞ் சாயலையுடைய மாதர்களதுசெய்கையாகும். எ—று. (உ)

எய்து மன்புடை யார்வல னேவலி னன்றித்
தெய்வம் வாழ்த்துதல் சீர்தரு தீர்த்தங்க ளாடல்
உய்யு நோன்புற லுற்சவ மகிழ்வுட னோக்கல்
மையில் கற்பினிற் சிறந்திடு மாதர்செய் திலரால்.

இ-ரை.—குற்றமற்ற கற்பிற்சிறந்தமாதர்கள், அன்புமிகுந்த தங்கள்தங்கள் கணவர்களின் கட்டளையில்லாமல், யாதொருதெய்வங்களை வாழ்த்திவணங்குதலும், தெய்வத்தன்மைபொருந்திய கங்கைமுதலிய புண்ணியநதிகளில் ஸ்நானஞ்செய்ய விரும்புதலும், நன்மையைத்தரும்பலவகைப்பட்டவிரதங்களை யனுஷ்டித்தலும், திருவிழாமுதலிய சிறப்புக்களைமனமகிழ்சியுடன் பார்த்தலுமாகிய விவைகளை யொருபோதுஞ் செய்யார்கள். எ—று. (௩)

தற்கொ ளுந்தனி நாயகன் வரவிற்குத் தகவே
இற்கு வேண்டிய யாவையு மன்புட னியற்றும்
நற்கு ணத்தொடு நற்செயன் மேவிய நல்லார்
கற்பி னோங்கிய கனங்குழை யாமெனக் கனைவர்.

இ-ரை.—தங்களை விவாகஞ்செய்துக்கொண்டநாயகர்களது, பொருள்வருவாய்க்குத்தக்கபடி யில்வாழ்க்கைக்கு வேண்டிய வெல்லாகாரியங்களையு, மன்புடனேநடத்துகின்ற † நற்குணநற்செய்கைகளையுடைய மங்கையர்களே, கற்பிற்சிறந்த உயர்வுபொருந்திய காதணியையுடைய மங்கையர்களாவார்களென்று மேலோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௪)

உயர்வு றும்பதி யுண்டபின் றானினி துணலும்
துயரில் காதலன் றுயின்றபின் றாந்துயி லுதலும்
இயலு நாயக னெழுதன்முன் றாமெழுந் திடலும்
மயர்வில் கற்புறு மாதர்கள் செயலென வகுப்பர்.

இ-ரை.—மேன்மைபொருந்திய தங்கள் கணவர்கள் புசித்தபின்பே தாங்களினிதாகப்புசித்தலும், கணவர்கள் யாதொருவருத்தமுமின்றி நித்திரைசெய்தபின்பு தாங்கள் நித்திரைசெய்தலும், கணவர்கள் நித்திரைவிட்டெழுந்திருப்பதன்முன்னமேதாங்கள் நித்திரைவிட்டெழுந்திருத்தலும், கெடுதியில்லாத கற்பினையுடைய மாதர்களது நற்செய்கைகளாகுமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். எ—று. (௫)

இனிய மூப்பினர் துணையின்றி யேயொரு மாட்டும்
தனியிற் செல்கிலர் தன்னகம் விட்டய லார்தம்
மனைத னிற்புகார் வம்புவார்த் தைகள்புக லார்கள்
புனித மேவிய கற்புடைப் புரிகுழ லினரோ.

இ-ரை.—குற்றமில்லாதகற்பினையும், கட்டுப்பட்ட கூந்தலினையுமுடைய மாதர்கள், வயதின்முதிர்ந்து நற்குணமமைந்த பெரியோர்களின் துணையில்லாமல் யாதொருவிடத்திற்குந் தனித்துப்போகமாட்டார்கள். தாங்கள் வசிக்குமிடத்தைவிட்டு அன்னியருடைய வீட்டிற் பிரவேசியார்கள். பரிகாசமானவார்த்தைகளைச் சொல்லமாட்டார்கள். எ—று. (௬)

நாவி லன்பொடு நயப்பெற நன்மொழி நவில்வர்
யாவும் வேண்டிய வில்லினுக் கீட்டுவ ரியன்ற
மேவு தம்பொருள் வீண்விட யங்களி லழியார்
பாவு சீர்பொலி கற்புடைப் பனிமொழி யவரே.

---

† நற்குணங்களாவன, துறந்தவரையுபசரித்தல், விருந்தாராய்தல், வறியவரிடத்தே யருளுடைமை முதலானவையாகும். நற்செய்கைகளாவன, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றிவைத்தல், உண்டிசமைத்தல், உபகாரஞ்செய்தல் முதலானவையாகும்.

இ-ரை.—மிகுந்த கீர்த்தியையும் குளிர்ச்சிபொருந்திய சொற்களையுமுடைய கற்பிற்சிறந்த மாதர்கள், எப்பொழுதுமன்புடனே கேட்பவர்களுடைய காதுக்கினிமையைத் தரத்தக்கதான நல்லவார்த்தைகளையே தங்கள் நாவினாலெடுத்துப் பேசுவார்கள். தாங்கள் வீட்டுக்குவேண்டியவெல்லாப்பொருள்களையுங் கிரமப்படிசேகரித்துக் கொள்வார்கள். கூடியவரையில் தங்கள்பொருள்களை வீண்விஷயங்களிற்செலவிட்டழிக்கமாட்டார்கள். எ—று. (எ)

பொருந்து சீர்பொலி யுலக்கையிற் புகன்றிடு முரலில்
விரிந்த வாய்முறந் தன்னில்வா யிற்படி மீதில்
திருந்து மம்மியிற் செம்மலர்த் திருவகன் றிடுமென்
றிருந்தி டார்கள்கற் புடையெழின் மாதர்க ளினிதே.

இ-ரை.—அழகிற்சிறந்த கற்பினையுடைய மாதர்கள், திருமகள் வசிக்குஞ்சிறப்பினையுடைய வுலக்கையின்மீதும், மேலோர்களால்விலக்கப்பட்ட வுரலின்மீதும், அகன்றவாயினையுடைய முறத்தின்மீதும், வாயிற்படியின்மீதும், விளங்காநின்ற அம்மிக்கல்லின்மீதும், இருந்தால் செந்தாமரைமலரில் வசிக்குந் திருமகள்கடாக்ஷம் விலகுமென்றுநினைத்து ஒருபோதுமுட்காரமாட்டார்கள். எ—று. (அ)

நலம விந்ததன் னாயக னனியுள மகிழ்கூர்ந்
திலகு மின்புறக் காதலி னெழில்செய்து கொள்வார்
குலவு காதலன் பிறியுழியெழில் செய்து கொள்ளார்
அலகில் சீர்புனை கற்புறு மாரணங் கினரோ.

இ-ரை.—மிகுந்தசிறப்பையுங் கற்பையுமுடைய தெய்வமகளிரையொத்த மாதர்கள், நன்மைபொருந்திய தங்கள் கணவர்கள் மிகவும்மனமகிழ்ச்சிகொண்டுவக்கும்படி, அழகுபொருந்திய ஆடையாபரணமுதலியவற்றால் தங்களை யலங்கரித்துக்கொள்வார்கள். புகழ்பெற்றுவிளங்காநின்ற தங்கள்கணவர்கள் பிரிந்திருக்குங்காலத்திற், றங்களை யவ்வாறலங்கரித்துக்கொள்ளமாட்டார்கள். எ—று. (கூ)

...வுள் குன்றுமென் றஞ்சுபு கற்புடை யவர்தம்
நாய கன்றிரு நாமத்தை நவின்றிடார் நலஞ்சேர்
தூய கேள்வரைப் பழுதுரைத் திகழ்ந்தலர் தூற்றும்
தீய மங்கைய ரானன நோக்குதல் செய்யார்.

இ-ரை.—கற்பினையுடையமாதர்கள், தங்கள் கணவர்களுடைய வயதானது குறையுமென்று பயந்து, அவர்களுடைய பெயர்களைத்தங்கள்வாக்கினாற் சொல்லமாட்டார்கள். நற்குணமமைந்த குற்றமற்ற கணவர்களையிகழ்ந்து, அவர்கள்மேற் குற்றஞ்சொல்லி யலர்தூற்றுகின்ற துஷ்டப்பெண்களுடைய முகத்தையும் பார்க்கமாட்டார்கள். எ—று. (க0)

உரிய காதலன் றனக்குவாழ் நாள்வளர்ந் தோங்க
அரிய பேரெழில் பொலிதரு மஞ்சணன் கணிவார்

விரவு நாயகன் மிச்சிலை யமிழ்தென விரும்பிப்
பாவி யுண்ணுவர் கற்புடைப் பனிமொழி யவரோ.

இ-ரை.—குளிர்ச்சிபொருந்திய சொற்களையுடைய கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள் தங்கள் கணவர்களுக்கு ஆயுள்விர்த்தியுண்டாகத்தக்கதாக, மிகுந்த வழகைத்தரும் மாட்சிமைப்பட்ட மஞ்சளைத்தேகமுழுமையும் பூசிக்கொள்வார்கள். தன்னையன்பின் மிகுதியாற் கலந்த நாயகனது மிச்சிலைக்கிடைத்தற்கரிய தேவாமிர்தமெனவியந்து அன்புடனே புசிப்பார்கள். எ—று. (கக)

ஒப்பி லாததன் காதல னுளம்விரும் பியவை
செப்பு முன்னரே நனிதெரிந் தின்புறச் செய்வார்
தப்பி லன்பரி ராமுன்ற னிருந்திடார் தகவிற்
றுப்பி னேங்கிதழ்க் கற்புடைத் தோகையர் மாதோ.

இ-ரை.—மேன்மைப்பட்ட பவளத்துண்டத்தைப்போற் சிறந்த, செந்நிறம்பொருந்திய அதரங்களையுடைய கற்பிற்சிறந்தமாதர்கள், ஒப்பற்றதங்கள்கணவர்களுடைய மனோபீஷ்டங்களை, அவரெடுத்துச்சொல்லுவதன்முன்னமே குறிப்பினலறிந்து, அவர் மனமுவக்கும்படி நடப்பார்கள். குற்றமற்ற தங்கள் கணவர்க ளுட்கார்ந்திருக்கும் போதல்லாமல், மற்றக்காலங்களிலவருக்கெதிரே யுட்கார்ந்திருக்கவுமாட்டார்கள். எ-று

வீங்கு பொற்பில ரென்னினு மிடியின ரெனினும்
ஓங்கு நோயின ரென்னினு முரமில ரெனினும்
பாங்கு ருக்கிழத் தன்மைய ரென்னினும் பதியைத்
தீங்கு ரைத்திடா தொழுகுவர் கற்பினிற் சிறந்தோர்

இ-ரை.—கற்பினிற்சிறந்த மாதர்கள் தங்கள் கணவர்கள் மிகுந்தவழகில்லாதவராயிருந்தாலும், தரித்திரத்தாற் பீடிக்கப்பட்டவராயிருந்தாலும், நாளுக்குநாள் விருத்தியாகத்தக்க வியாதியையுடையவராயிருந்தாலும், பலயீனராயிருந்தாலும், தகுதியற்ற மூப்பினராயிருந்தாலும், அவர்களைத் தங்கள் வாக்கினல் யாதொருபழுதுஞ் சொல்லாமல் அவரிஷ்டப்படி நடப்பார்கள். எ—று. (கரு)

முனிவி னர்வல னேசினுந் தானெதிர் மொழியார்
துனியு றும்படி புடைக்கினுந் தோமுற வெகுளார்
இனிதின் மற்றிவை செய்யென்முன் செய்தன மென்பர்
புனித மேவிய கற்புடைப் பூவைய ரம்மா.

இ-ரை.—குற்றமற்ற கற்பிற்சிறந்தமாதர்கள், தங்கள் கணவர் தங்களைக்கோபத்தினற் பலவாறிகழ்ந்துபேசினலுந் தாங்களதற்கு எதிர்மொழியாகயாதொன்றுஞ்சொல்லமாட்டார்கள். தங்கள் தேகம்வருந்தும்படித் தங்களையடித்தபோதிலும், தாங்களவர்கண்மேற் கோபித்து அதனல்வருங் குற்றத்திற்காளாகமாட்டார்கள். தகாதகாரியங்களாயிருந்தபோதிலுந் தங்கள் கணவர்கள்செய்யென்று சொல்வார்களாயின், அவர்

கள்சொல்லிமுடிப்பதின் முன்னமே, மனமகிழ்ச்சியோடுசெய்து முடித்தேனென்று சொல்லி யவ்வாறேசெய்துமுடிப்பார்கள். எ—று. (கச)

தேவ பூசனை புரிகுதல் பலவறஞ் செய்தல்
மேவு நற்றவ மியற்றுதல் விரதங்க ளாற்றல்
ஓவி னன்னதி யாடுத லிவைகளொண் ணுதலார்க்
கேவு நாயகன் சொற்கட வாமையே யென்பர்.

இ-ரை.—அழகிய நெற்றியையுடைய கற்பிற்சிறந்தமாதர்கள், தங்களைநடத்துங் கணவரது கட்டளைமீறி நடவாதிருத்தலாலே, இஷ்டதேவதைகளைவழிபடுதலும், பற் பலதருமங்களைச் செய்தலும், நன்மைபொருந்திய தவங்களைச்செய்தலும், பலவிரதங்க ளையனுஷ்டித்தலும், எப்போதும் கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களிற் சென்று ஸ்நானஞ்செய்தலுமாகிய,விந்தச் சற்கருமங்களையெல்லாஞ்செய்த பலன்களைபெறுவா ர்களென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (கரு)

மருவு நாயக னருளினூற் பிணியினர் வறியர்
கருது றுந்தொழில் புரிகுனர் துறந்துளோர் கபிலை
திருகி லாவிருந் திறந்துளோர் தன்குல தெய்வம்
ஒருவி னற்றமர்க் கும்பகுத் துண்பர்கற் புடையோர்.

இ-ரை.—கற்புடைய மாதர்கள் தங்கள் கணவரிட்டகட்டளையின்படி, அவர் நல் வழியிற் றேடும்பொருள்களை, வியாதியஸ்தர், தரித்திரர், தங்களுக்குவேண்டும்பணி விடைச் செய்யுந்தொழிலாளர்கள், முற்றத்துறந்தபெரியோர்கள், குற்றமற்ற விருந்தி னர்கள், பிதுர்க்கள், தங்கள் குலதேவதைகள், நீக்குதற்கரிய வுறவினர்கள், பசுக்கள், முதலானவர்களுக்கும் இயன்றவளாயிற் பகுந்துக்கொடுத்துத் தாங்களு முபயோகித் துக்கொள்ளுவார்கள். எ—று. (கசு)

தோய்ந்த காதலன் றுஞ்சிடிற் றுனுடன் றுஞ்சல்
ஏய்ந்த வின்புறிற் றுனுமவ் வின்பினை யெய்தல்
சாய்ந்து துன்புறிற் றுனுமத் துன்பினைத் தழுவல்
வாய்ந்த நற்றவ மென்பர்கற் புடையமா தருக்கே.

இ-ரை.—கற்பிற்சிறந்தமாதர்களுக்குப் பொருந்திய நல்லதவமாவதென்னவென் றால், தங்களை மணந்து புணர்ந்த கணவர்களிறப்பார்களாயின் அவர்களோடு தாங்களு முயிர்விடுதலும், கணவர்கள் சந்தோஷத்தையடைந்தாற் றுங்களு மச்சந்தோஷத்தை தையடைதலும், அவர்கள்துன்பத்தால் வருந்துவார்களாயின் றுங்களுமவ்வருத்தத்தை யடைதலுமாமென்று பெரியோர்சொல்லுவார்கள். எ—று. (கஎ)

அரிய நல்லமு தருந்தினுங் காதல ரழைக்கில்
புரிவின் வலிலையி னண்ணுவர் புரந்ததாய் தந்தை
உரிய மைந்தர்மற் றிவரினுங் கேள்வர்பா லோங்கு
பிரிய மெய்துவர் கற்புடைப் பேரொழி லினரே.

இ-ரை.—மிகுந்த வழகினையுங் கற்பினையுமுடையமாதர்கள், கிடைத்தற்கரிய மேலான தேவாமிர்தத்தையொத்த போசனங்களைப் புசிக்குங்காலத்திலுந், தங்கள்நாயகர் தங்களையழைப்பார்களாயின், உடனே அவ்வகைப்போஜனத்தையும் விட்டு அவர்களிடத்திற்கு வருவார்கள். தங்களைமெய்வருந்திப்பெற்றுவளர்த்த மாதா, பிதாக்கள், தாங்களன்புடனே பெற்ற புத்திரர்களாகிய இவர்களிடத்திற்றுங்கள் கொண்டிருக்குமன்பைப்பார்க்கிலுங், கணவரிடத்து மிகுந்த வுள்ளன்புடையவராயிருப்பார்கள் எ-று.

பூத்த கன்றுனா மூன்றுநா ளினுமெழிற் புவியோர்
ஏத்து கற்பின ரானனங் காட்டல ரில்லங்
காந்து வைகல ரோர்பொழு தன்றியூண் கரியார்
வார்த்தை யாடலர் வேறுபூத் தவரொடு மருவார்.

இ-ரை.—அழகுபொருந்திய இவ்வுலகிலுள்ள பலரும் வியந்துபுகழத்தக்கக் கற்பிற்சிறந்தமாதர்கள், பூப்படைந்து வீட்டினின்றும் நீங்கிப் புறத்தேவசிக்கின்றமூன்று நாள்களிலும், தங்கள் கணவர் தங்கள் முகத்தைப்பார்க்கும்படி யெதிரில்வரமாட்டார்கள். வீட்டுக்குள் பிரவேசியார்கள். ஒருவேளைபோஜனமேயன்றி மறுவேளை போஜனஞ்செய்யமாட்டார்கள். தங்கள் கணவரெதிரில்நின்று வார்த்தைசொல்லார்கள். தங்களையொத்த பூப்படைந்தமாதர்களுடன் சேரமாட்டார்கள். எ—று. (கக)

பழுது றுதநான் காந்தினம் பூம்புனல் படிந்து
முழுகி யின்புற வன்பனா யன்பொடு முன்னிச்
செழுவி சும்புறும் பரிதியை நோக்குதல் செய்வார்
எழின்மி குத்திடு கற்புடை மாதர்க ளினிதே.

இ-ரை.—அழகில்மிகுந்த கற்பினையுடைய மாதர்கள், கிரமப்படி குற்றமற்றநான்காவதுநாளில், அழகிய சுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து, எல்லாநன்மையு முண்டாகும்படி தங்கள் கணவனையன்புடனே மனதில்தியானித்துக்கொண்டு, இடமகன்றஆகாயத்திற் பிரகாசியாநின்ற சூரியபகவானை தரிசனஞ்செய்வார்கள், எ—று. (உ0)

பாய வொண்கதிர் விரிக்குநன் மணிபல பதித்திட்
டேய போழ கோங்கிய மாடங்க ளெனினும்
தூய கற்புடை மாதர்க ளிலரெனிற் சுகமில்
பேய்கள் வாழ்தரு வனமெனப் பேசுவர் பெரியோர்.

இ-ரை.—பழித்தற்கிடமில்லாத கற்பிற்சிறந்தமாதர்கள் வசிக்கப்பெறுதமாளிகையானது, நான்குதிக்கிலும் பரவும்படி பிரகாசியாநின்ற கிரணங்களைவீசாநின்ற மேன்மைபொருந்திய நவரத்தினங்களிழைக்கப்பெற்றுப் பேரழகுவாய்ந்து விளங்குவதாயிருந்தாலும், பேய்கள் வாழ்தற்கிடமாகிய சுகமில்லாதகாட்டுக்குச் சமானமாகுமென்று மேலோரெடுத்துச்சொல்வார்கள். எ—று. (உக)

பகருங் கற்பினிற் சிறந்திடு மங்கையர் பதங்கள்
அகலு மாநிலத் தெவ்விடம் படியினு மஃதே

நிகரி லாதபற் பலதல மெவற்றினு நிகழும்
புகழ்பெற் றோங்கிய புண்ணியத் தலமெனப் புகல்வர்.

இ-ரை.—இப்பூமியின்கணுள்ள பலரும் வியந்து புகழத்தக்க கற்பிற்சிறந்தமாதர்களின்பாதங்கள், இப்பூமியில் எவ்வெவ்விடங்களிற்படுகின்றனவோ அவ்விடங்களே, ஒப்பில்லாத பலவகைப்பட்ட திவ்யஸ்தலங்களெல்லாவற்றினு மிகுந்தபுகழ்பெற்று விளங்கும் புண்ணியஸ்தலமாகுமென்று மேலோரெடுத்துச்சொல்வார்கள். எ-று. (உஉ)

துங்க மேயநித் திலமெறி வெண்டிரை சுருட்டும்
கங்கை யாதிய கடவுண்மா நதியெலாங் கருத்தில்
தங்க டங்களே தங்களற் றிடத்தகு கற்பின்
நங்கை மார்துளைந் தாடிட வன்பொடு நயக்கும்.

இ-ரை.—வெண்மைநிறம்பொருந்திய அலைகளானது, குற்றமற்றுயர்ந்த முத்துக்களைவாரிக் கரையினிடத்துவீசிமடங்குகின்ற தெய்வத்தன்மைபொருந்திய, கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களெல்லாம் தங்கள் தங்கள் பாவங்களனைத்தும் நீங்கும்படி, கற்பிற்சிறந்த மாதர்களன்புடனே முழுகி நீராடவேண்டுமென்று மனதில் விருப்பத்தைக் கொண்டிருக்கும். எ—று. (உ௩)

தேசு லாமெழு பசும்பரித் தேர்ச்செழுங் கதிரும்
மாசி ரித்திட விரித்திடு மமுதவெண் மதியும்
வீசு தத்தம தெழிற்கிர ணங்கள்பார் விளங்கும்
ஆசில் கற்பினர் மேற்படும் பொழுதுள மஞ்சும்.

இ-ரை.—மிகுந்த அழகினையும் பசியநிறத்தினையுமுடைய சப்தாஸ்வங்கள் பூட்டியரதத்தையுடைய ஆயிரங்கிரணங்களைப்பொருந்திய சூரியனும், இருட்கூட்டங்கள் விலகும்படி வெள்ளிய வமுதகிரணங்களை யுலகமெங்கும் பரவச்செய்கின்ற சந்திரனும், வீசாநின்ற தங்கள் தங்க ளழகியகிரணங்களானவை யிப்பூமியில்வசிக்கும், குற்றமற்ற கற்பினையுடைய மாதர்களின் மேற்படுங்காலங்களில் தத்தம் மனதில் மிகுந்த வச்சத்தையடைவார்கள். எ—று. (உ௪)

கற்பி னார்தமை யீன்றவர் மரபுமன் னவூர்கள்
அற்பின் வாழ்வுறு மாபுநற் சுவர்க்கத்தி னடையும்
கற்பின் மாறிய மங்கையர் கருதிரு மரபும்
பொற்பி லாக்கொடு நிரா கத்திடைப் பொருந்தும்.

இ-ரை.—கற்பிற்சிறந்த மாதர்களைப்பெற்ற தாய்தந்தையர்களின் வமிசத்திலுள்ளவர்களும், அம்மாதர்களன்புடனே குடிவாழ்க்கைசெய்யப்புகுந்த வமிசத்திலுள்ளவர்களும் சுவர்க்காதிபோகங்களை யடைவார்கள். கற்புநெறியிற் றவறியமாதர்கள் பிறந்த வமிசத்திலுள்ளவர்களும், புகுந்தவமிசத்திலுள்ளவர்களும், பொலிவற்றகொடிய எரிவாய் நரகங்களிற் சேர்வார்கள். எ—று. (உ௫)

உரிய கேள்வரைப் பணிகிலா துயர்விர தத்தோ
டரிய பூசனை செய்குனர் நிரய கடைவர்
துரிசி னுயகன் குறைசொலித் தூற்றுபு வெகுண்டு
பிரிய மற்றெதிர் பேசுவோர் முடுவலாப் பிறப்பர்.

இ-ரை.—தங்களுக்குரிய கணவரைவந்தனைவழிபாடுகள் செய்து வணங்குவதையே வுயர்ந்தவிரதமாகக்கொள்ளாமல், உயர்வாகச்சொல்லப்பட்ட விரதங்களுடனே செய்தற்கரிய தேவதாபூஜைமுதலிய வற்றைச்செய்யுமாதர்கள், கொடிய நரகயாதனையையனுபவிப்பார்கள். குற்றமற்றுவிளங்குந் தங்கள்கணவர்மேல் குற்றங்களைச்சொல்லிப் பலரறியத்தூற்றி, அவர்கள்மே லன்பில்லாதவராய்க் கோபித்தெதிர்த்துப்பேசும் மாதர்கள், மறுசனனத்தில் பெண்ணுயாகப்பிறப்பார்கள், எ—று. (உசு)

மருவு நாயகன் முனிந்திடி னேர்ந்துமுன் வைவோர்
வெருவு வேங்கைய தாகுவர் பிறரெழில் வியப்போர்
கருது பேயுரு வெய்துவர் காதலன் பசிக்கப்
பெரும கிழ்ச்சியி னுண்பவர் பன்றியாப் பிறப்பர்.

இ-ரை.—தங்களை மருவிச்சேர்ந்த கணவர் தங்களைக்கோபிப்பார்களாயின், அதுகாலை யவர்கட்கெதிரிலிருந்து உதாசீனமாகப் பேசுமாதர்கள் சீற்றத்தையுடைய புலியாகப்பிறப்பார்கள். பிறபுருஷர்களி னுருவலக்ஷணங்களைக்கண்டு வியந்துபேசுமாதர்கள் யாவருங்கொடியதென்று நினைக்கத்தக்க பைசாசமாகப்பிறப்பார்கள். தங்கள் கணவர்பசியுடனிருக்க அவர்பசியைத்தணிக்காமல் மிகுந்த சந்தோஷத்துடனே போஜனஞ்செய்யுமாதர்கள் முழுமலதேகியாகிய பன்றியாகப்பிறப்பார்கள். எ—று. (உஎ)

மருவு மார்வலன் மாய்ந்திடிற் றனுயிர் மாய்ப்பக்
கருது வோர்களே புண்ணிய சாலிகள் கனலிற்
பெருகு காதலின் மூழ்குவோர் பதியொடு பிறங்கப்
பொருவி லாத்துறக் கத்துவாழ் குவர்புவி புகழ.

இ-ரை.—தங்களைமணந்தகணவரிறப்பாராயின் றங்களுயிரையுமுடனேவிடும்படி நினைக்குமாதர்களே புண்ணியசாலிகளாவார். அவ்வாறிறந்தகணவரைத் தகனஞ்செய்யுமக்கினியி லவர்மீதிருக்கு மன்பின் மிகுதியினுலே விழுந்துயிரைவிடுமாதர்கள், தங்கள் கணவர்களுடனே ஒப்பற்ற சுவர்க்கலோகத்தில், இப்பூமியிலுள்ளபலரும் புகழும்படி அளவற்றகாலஞ்சிறப்புற்று விளங்கிவாழ்வார்கள். எ—று. (உஅ)

கற்பு ளாள்பதி பாவியெ னினுமுடன் கனலில்
அற்பின் மூழ்கிடின் மறலிகை விடுத்திடு மவனை
பொற்பி னன்பரோ டுயிர்விடுத் தவர்கள் பொன் னுலகில்
பற்பல் காலமின் புறுவர்தன் பதியொடு பரிந்தே.

இ-ரை.—கற்பிற்சிறந்தமாதர்கள், தங்கள்கணவ ரிறப்பராயினவர்களுடனன்பின் மிகுதியினுலக்கினியிற்குதித்துத் தங்களுயிரையும் விடுவார்களாயின், அக்கணவர்மகா

பாவிகளாயிருந்தபோதிலும், அவர்களை யியமன்வருத்தாமல் விட்டுவிடுவான். தங்கள் கணவருடனேகூடத் தங்களுயிரையும்விட்டுவிடு மழகின்மிகுந்தமாதர்கள், தங்கள்கணவருடனே சேர்ந்து தேவருலகத்தில், நீடூழிகாலம் போகபாக்கியங்களை விருப்பத்துடனனுபவித்து வாழ்வார்கள். எ—று. (உகூ)

மயர்வி ஞயக னிறந்திடக் கலன்கழி மாதை
வுயிரி லாவுடல் போற்றொட றீதென வுரைப்பர்
இயல ருங்கலன் யாவையு நீத்தநுண் ணிடையார்
பயில்வு றும்வழி யெதிர்ப்படி லேகலர் படியோர்.

இ-ரை.—குற்றமற்ற கணவரிறப்பவதனால் மாங்கல்ய மிழந்து வைதவ்யமடைந்த மாதர்களைப் பரிசித்தால், உயிரில்லாதவுடலாகிய சவத்தைத்தொடுவதாலுண்டாகும் ஆசுசமுண்டாகுமென்று சொல்லுவர். இப்பூமியிலுள்ளவர்கள் ஏதாவதொருகாரியத்தை முன்னிட்டுப்போகும்போது, கிடைத்தற்கரிய மாங்கல்யதாரணத்தையு மற்றும் பலவாபரணங்களையு மிழந்த நுண்ணியயிடையையுடைய மாதர்கள், எதிர்ப்படுவோர்களாயின், அவர்கள்போகுங்காரியங்கள் முற்றுபெறாதென்று போகாமலே திரும்பி விடுவார்கள். எ—று. (௬0)

வயங்கு பொற்கல னிழந்திடு கைம்மையா மகளிர்
தயங்கு தம்மொழுக் கந்திறம் பிடிலவர் தம்மோ
டியங்கு மற்றவர் குலத்தினர் தம்மையு மெரிசேர்
உயங்கு நிரய கத்திடை யொன்றவிழ்த் துவரால்.

இ-ரை.—விளங்காநின்ற அழகிய வாபரணங்களையிழந்த கைம்பெண்கள், தங்களுக்குவிதித்த நல்லொழுக்கங்களிற் றவறுவார்களாயின், அவ்வாறுதவறிய மாதர்கள் தங்கள்குலத்திற்பிறந்த வனைவரையும், எல்லாவஸ்துக்களையும் பஸ்மீகப்படுத்துமக்கினிமயமாகிய கொடியநரகத்திற்பொருந்தத்தள்ளித் தாமும் வீழ்வார்கள். எ—று. (௬க)

குலவு பொற்கல னீத்தமங் கையர்நறுங் குழலைப்
பொலிவ றக்குறை யாதுற முடித்திடிற் பொருந்து
நலம கிந்தமற் றவர்கண வனைநவின் மறலி
வலிய தூதர்பா சத்தின்வீக் குபுவருத் துவரால்.

இ-ரை.—அழகிய பொன்னாபரணமனைத்து மொருங்கேயிழந்த கைம்பெண்கள், மணம்வீசுந் தங்கள் கூந்தலைத் தங்களுக்குள்ள வழகுகெடும்படியுடனே மழித்துவிடாமல், கூந்தலைமுன்போலவே முடித்திருப்பார்களாயின், அவர்களுடைய நற்குணமமைந்த கணவனை, வலிமைபொருந்திய யமதூதர்கள் பாசக்கயிற்றினாலே கட்டிவருத்துவார்களென்று மேலோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௬உ)

புருடன் மாய்ந்திடின் மாதர்க ளோர்பகற் பொழுதுண்
டுரைசெய் பாக்கிலை விரிதரு பாயலு மொழித்துத்
தரைமி சைத்துயின் றரியபற் பலவிர தங்கள்
விரித ரும்பரி வுடன்முறை யாற்றிட வேண்டும்.

இ-ரை.—மாதர்கள் தங்கள் கணவரிறப்பாராயின் பகற்காலத்தில் ஒரேவேளை போசனஞ்செய்து பெரியோரால் விலக்கவேண்டுமென்று விதித்தபடி தாம்பூலதாரணத்தையும் சுகமானபடுக்கையையும் நீக்கித் தரையிலேபடுத்து நித்திரைசெய்து செய்தற்கரிய பலவகைப்பட்ட விரதங்களையும் மிகுந்தஅன்புடனே கிரமப்படி யனுஷ்டிக்கவேண்டும். எ—று. (௩௩)

பெய்க லன்கணீத் திடுமட வார்நலம் பெருகத்
தெய்வ பூசனை யாற்றுபு திகழ்தரு முடன்மா
செய்தி டப்புரிந் துள்ளுயி ரகன்றிடா தினிது
வைகு றுங்கிழங் கிலைசரு கயின்றிடன் மரபே.

இ-ரை.—தரித்துக்கொண்டிருந்த ஆபரணங்களையிழந்த கைம்பெண்கள் சகல நன்மைகளுமுண்டாகும்படி தங்களிஷ்டதேவதைகளை வழிபட்டருச்சிப்பதுமன்றி தங்கள் தேகமலினமடைந்திருக்கும்படிச் செய்து தேகத்தைவிட்டு உயிர்நீங்காதிருக்கும்பொருட்டுப் பொருந்திய கிழங்கு, பச்சிலை, சருகுமுதலியவற்றை யாகாரமாகக் கொள்ளுவது கிரமமாகும். எ—று. (௩௪)

நிகழ்செ ழுங்கல னீத்தவ ரின்னண நிகமம்
புகலு மாவிர தங்கள்பூண் டுயர்தவம் புரியின்
மகிழ்வி னோடுநற் பதியுல கத்திடை மருவி
இகழ்வி லாவரும் போகங்க ளனுபவித் திடுவார்.

இ-ரை.—தாமணிந்துள்ள சர்வாபரணங்களையு மிழந்த கைம்பெண்கள் மேற்சொல்லியபடி வேதங்களிற் கூறும் மேன்மைபொருந்திய விரதங்களை யனுஷ்டித்து வருவதுமன்றி வுயர்ந்ததவங்களையுஞ் செய்வாராயின், பெருமகிழ்ச்சியுடனே தங்கள் கணவர்கள் வசிக்குமிடத்திற் சேர்ந்து அவருடனே தாங்களும்பழிப்பில்லாத மகத்தாகிய போகங்களை யனுபவிப்பார்கள். எ—று. (௩௫)

மாதரொழுக்கமுரைத்தவத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - எ௭௫௧.

முப்பத்தொன்றுவது

கிரகாச்சிரமவிதியுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருமறை யாதி நூல்க ளறையுமில் லறந டாத்தற்
குரியகற் புடைய மாத ரொழுக்கங்கள் சிறிது ரைத்தாம்
புரிவினம் மாத ரோடு பொருந்தியின் புறவி யற்றும்
கிரகவாச் சிரம நீதி சிற்சில கிளத்து வாமால்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! இதுவரையில், அருமையாகிய சுருதி, ஸ்மிருதி, ஹிதிஹாசபுராணமுதலிய பலநூல்களிலும், பிரமசரியம், காருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென்னு நான்காச்சிரமத்துள்ளும், சிறந்ததென்றுசொல்லப்பட்ட கிரகஸ்தாச்சிரமதருமத்தை நடத்துவதற்குச் சுதந்தரமாகிய, கற்பிலக்கணங்களமைந்துள்ள மாதர்களினது, நல்லொழுக்கங்களிற் சிறிதுசொன்னோம், இனி அன்புமிகுந்த அம்மாதர்களுடனே சேர்ந்து, இம்மையின்பமு மறுமையின்பமும், அடையும் பொருட்டுச் செய்யப்பட்ட கிரகஸ்தாச்சிரம தருமங்களிற் சிறிதுசிறிதுசொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

பன்னியோ டொத்தி ருந்து பற்பல வறங்கள் செய்வான்
நன்னெறி களின்மு யன்று நனியரும் பொருள்க ளீட்டல்
மன்னுயி ரிடத்தி லன்பு வைத்திட றெய்வம் போற்றல்
மின்னிய தரும நூல்கள் விரும்பியின் புறவா ராய்தல்.

இ-ரை.—சுருதிஸ்மிருதிமுதலிய நூல்களெல்லாஞ்சொல்லப்பட்ட, கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், தங்கள் தங்கள் பத்தினியுடனே மனமொத்திருந்து, தருமசாஸ்திரங்களில் விதித்த பலபலவாகிய தருமங்களைச்செய்வதற்கு வேண்டிய, திரவியசம்பாதனத்திற்குரிய, நல்வழிகளிலே முயன்றுமிகுந்த அருமையானபொருள்களைச் சம்பாதித்தல்வேண்டும். தெய்வங்களைவணங்கல் வேண்டும். இம்மையின்பங்களையு மறுமையின்பங்களையும் பெறும்பொருட்டு, விளக்கமாகிய தருமசாஸ்திரங்களைக் கற்றலும், சந்தேகவிபரீதமறப் பெரியோர்களிடத்திற் கேட்டலும்வேண்டும். எ—று.()

உலகினோ டொழுக தீமை யொழித்தனல் லொழுக்கி னிற்றல்
இலகறம் புரித னல்லோ ரிகழ்வன செயாதொ ழித்தல்
நலமொடு தம்மூர் வாழ்த்த நன்குசெய் தினிது வாழ்தல்
குலமுறை வழாது காத்தல் குலவுறு மொக்கல் போற்றல்.

இ-ரை.—கிரகஸ்தாச்சிர மத்திலிருப்பவர்கள், உலகாசாரத்தோடொத்து நடத்தலும், தீங்கானகாரியங்களைச் செய்யாதொழித்தலும், நல்லொழுக்கந் தவறாது நடத்தலும், விளங்காநின்ற தருமங்களைச்செய்தலும், பெரியோர்களிகழ்ந்துபேசத்தக்க காரியங்களைச்செய்யா தொழித்தலும், தாமிருக்குமூரிலுள்ளவர்கள் நன்மையுடனே கொண்டாடும்படி சற்கருமங்களைச்செய் தின்பத்துடனேவாழ்தலும், தங்கள்தங்கள் குலமுறைமையைத் தவறாதுகாத்தலும், விளங்காநின்ற சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் வேண்டும். எ—று. (ரு)

விருந்தினு டென்று முண்டல் மேதகு மகவை வேண்டிப்
பொருந்துறு காலந் தன்னிற் புரிவொடு புணர்ச்சி செய்தல்
திருந்துதன் னுடன்பி றந்தாள் சீர்கெழு பெண்க டம்மைப்
பரிந்துப சரித்தல் வேண்டும் பகருமில் வாழ்க்கை பூண்டோர்.

இ-ரை.—மேலோர்களாற் சொல்லப்பட்ட இல்லறதருமத்திலிருப்பவர்கள் எந்நாளும் புதியவராகிய விருந்தினரோடு புசித்தலும், மேன்மைபொருந்திய புத்திரரை விரும்பிப்புணர்ச்சிசெய்யவேண்டிய காலத்தில் மனைவியுடனேசந்தோஷமாகப்புணர்தலும், தன்னுடனேபிறந்த திருத்தமாகிய சகோதரிகளையும் சிறப்புமிகுந்த புத்திரிகளையும் விசுவாசத்துடனே யுபசரித்தலும்வேண்டும். எ—று. (௪)

திகழ்தரு பிரம சாரி செறியும்வா னப்பி ரத்தர்
மகிழ்வுறு சந்நி யாசி மற்றிவர்க் கிடம ருந்து
நுகருண வாதி நல்கி நோய்குளிர் பசிமுன் னாகப்
பகரிடை யூறு றாது பாதுகாத் திடுதல் வேண்டும்.

இ-ரை.—இல்லறதருமத்திலிருப்பவர்கள், குருபணிவிடைமுதலியவைகள் செய்து விளங்காநின்ற பிரமசாரிகளும், காட்டிற்சென்று தவஞ்செய்வோராகியவானப்பிரஸ்தர்களும், பேரின்பமடைகின்ற சந்நியாசிகளும், ஆகியவிவர்களிருத்தற் கிடமும், பிணிநேர்ந்தகாலத்தில் மருந்தும், பசிப்பிணிதீர உணவுமுதலியவற்றையுங்கொடுத்துதவி, நோய், பசிமுதலியவற்றா லவர்களொழுக்கங்களுக் கிடையூறுகள்வாராதபடி பாதுகாத்தல் வேண்டும். எ—று. (௫)

பாய்புகழ்த் துறவி கட்கும் பாவிய வாது லர்க்கும்
ஆய்தரு மன்பி னுண்டி யாதிய கொடுத்தல் வேண்டும்
நேயமோ டிறந்தோர் கட்கு நீர்க்கடன் முதல செய்து
ஒய்வறப் பொலிவு சேர்நல் லுலகடை வித்தல் வேண்டும்.

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், பரந்தபுகழையுடைய துறவறத்தார்களுக்கும், சொல்லுகின்ற யாசகர்களுக்கும், ஆராயத்தக்கவன்புடனே வுணவுமுதலியவைகளைக்கொடுத்து உபசரிக்கவேண்டும். இறந்தோராகிய பிதுரர்களுக்கு, ஜலதர்ப்பணமுதலியவற்றை யன்புடனேசெய்து, அவர்களைக்கெடுதலில்லாத பொலிவினையுடைய நல்லவுலகமடைவிக்கவேண்டும். எ—று. (௬)

கருதுய ரறமி யற்றுங் காலேயெத் துயருற் ருலும்
வெருவியத் தருமந் தன்னே விடாதினி தாற்றல் வேண்டும்
அருமைசான் மறையைக் கோவை யவிர்கட வுளரை வேந்தை
இருமையின் பருளா சானே யிகழ்ந்திடா தொழுகல் வேண்டும்.

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் மேலோர்களால் மதிக்கப்படுகின்ற தருமஞ்செய்யுங் காலத்தில், எவ்வகையான துயரநேரிட்டாலும் பயந்துவிடாமல்அத் தருமத்தை யினிதாகச்செய்யவேண்டும். அருமையாகிய வேதங்களேயும், பசுக்களே யும், விளங்காநின்ற தேவர்களேயும், அரசர்களேயும், ஆசிரியனையும், இகழாமல் நடக்க வேண்டும். எ—று. (எ)

தேவர்கள் பிதுர்க்கள் மிக்க சீர்முனி வரர்பூ தங்கள்
மேவதி திகளின் னேர்கள் விழைவொடு திருத்தி யெய்தப்
பாவம தகல நன்கு பஞ்சமா வெச்சஞ் செய்தல்
தாவறு மில்ல றத்தோர் தங்கட னென்பர் மேலோர்.

இ-ரை.—தேவர்கள், தென்புலத்தார்கள், மிகுந்தசிறப்பினையுடையமுனிவர்கள், பூதங்கள், விரும்பத்தக்க அதிதிகள், ஆகியவிவர்கள் விருப்பத்துடனே திருப்தியடை யவும், தாஞ்செய்த பாவங்கணீங்கவும், தருமசாஸ்திரவிதிப்படி பஞ்சமகாவெக்ஞத் தைபிரதிதினமுஞ் செய்யவேண்டியது. குற்றமில்லாதகிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவ ர்களுக்குரிய முறையென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள். எ—று. (அ)

ஷை வேறு.

சங்கிரம மட்டமியு வாக்களொடு சட்டிசதுர்த் தசிமுன் ஞளில்
வெங்கனலிற் புழுக்கியவா லரியினையு மெண்ணேயையும் விடுத்தல்வேண்டும்
அங்கமுறு மயிர்களேந்து கொள்ளாமை வேண்டுமனே யறத்தி லுள்ளோர்
புங்கமொடு தொட்டொன்றைக் கிள்ளினுந்தோ முறுவரெனப்புகலு நூலே

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், மாதப்பிறப்புகள், சஷ்டிதிதி,அஷ்டமிதிதி, சதுர்த்தசிதிதி, அமாவாசை, பௌர்ணமிமுதலிய புண்ணிய தினங்களில், வெவ்வியதீயினல் புழுக்கிய வெள்ளியபுழுங்கலரிசியன்னம்புசித்தலேயும், எண்ணெய்தேய்த்துக்கொள்ளுதலேயும் நீக்கல்வேண்டும். சரீரத்திற்பொருந்திய மயிர்களே க்ஷவரஞ்செய்து கொள்ளாதிருத்தல்வேண்டும். உயர்வுபொருந்திய யாதானுமொன் றைத் தொட்டுக்கிள்ளினுங் குற்றமடைவார்களென்று வேதமுதலியநூல்களிற் சொல்லப்படும். எ—று. (கூ)

வயங்குறுதெண் ணீராடல் சந்தியா வந்தனேநன் மனுச்செ பித்தல்
தயங்குசெழுந் தழற்கரும மறையோத லுயர்கடவு டனேப்பூ சித்தல்
நயங்கொள்வயிச் சுவதேவ மதிதிபூ சனேபிதுர்க்கு நன்னீர் நல்கல்
இயம்புறுமிவ் வொன்பதுநித் தியம்புரித லுரித்தாகு மில்வாழ் வோர்க்கே.

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், விளங்காநின்ற தெளிவாகிய நீரில் ஸ்நானஞ்செய்தல், திரிகாலசந்தியாவந்தனஞ்செய்தல், நன்மையைத்தருவதான காயத்திரி மந்திரஜபஞ்செய்தல், பிரகாசியாநின்ற அக்கினிகாரியங்கள் செய்தல், வேதாத்தியயனஞ்செய்தல், மேலாகிய தேவதார்ச்சனைசெய்தல், நன்மையைக்கொண்ட வைஸ்வதேவபூத பலிகருமஞ்செய்தல், அதிதிபூஜைசெய்தல், தென்புலத்தார்களுக்கு நல்ல ஜலதர்ப்பணமுதலியவை செய்தல், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பது காரியங்களையும் பிரதிதினமுஞ்செய்யவேண்டியது முறைமையாகும். எ—று. (௧௦)

பொருந்துமுயர் தாய்தந்தை சற்குருநன் மனையவளைப் புதல்வன் றன்னை
விருந்தினைநற் பகலிரவும் வழிபடுவோன் றன்னைமறை விளம்பு மின்பம்
தருந்தழலை யதிதிகளைச் சாற்றுறுமிவ் வொன்பதின்மர் தமையு நாளும்
அருந்திருவோ டில்வாழ்வு பூண்டுளோ னகமகிழ்வி னளித்தல் வேண்டும்.

இ-ரை.—அருமையான பலசெல்வங்களுடனே கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், உயர்வுபொருந்தியதாயும், தந்தையும், ஆசாரியரும், மனைவியும், புத்திரனும், விருந்தினரும், இரவும்பகலு மிடைவிடாது வழிபடுவோனும், இன்பத்தைக்கொடுக்கின்ற வேதவிதிப்படி யமைந்துள்ள அக்கினியும், அதிதிகளும், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பதின்மரையும் பிரதிதினமு மனமகிழ்ச்சியுடனே பாதுகாத்தல் வேண்டும். எ—று. (௧௧)

வந்தவிருந் தினனைவியந் திடலினிய மொழிபேசன் மகிழ்ந்து நோக்கல்
சிந்தைமகிழ்வொடுவருகென் றுரைத்தலெழன்மனமகிழ்வசெப்பலன்னோன்
முந்தருகி லிருத்தலொடு போவனெனிற் பின்றொடர்தன் முகமன் கூறல்
இந்தவொன்பா லொழுக்கமுமில் லறத்திலுள்ளோர் வழிபடும்பண் பெனச்
(சொல் வாரே.

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், புதிதாகவந்த விருந்தினரைக்கண்டவுடன், அருமைபாராட்டுதல், இனிமையாகிய சொற்களைச்சொல்லுதல், சந்தோஷமாகப்பார்த்தல், மனமகிழ்ச்சியுடன் வருகவென்றுசொல்லுதல், இருக்கைவிட்டெழுதல், அவர் மனமகிழும்படிபேசுதல், அவர்முன்பு அருகிலிருக்குதல், அவர் போவரெனிற் பின்றொடர்ந்துபோகுதல், உபசாரவார்த்தைகள் சொல்லுதலுமாகிய இவ்வொன்பது செய்கையும் வணக்கமுடன்செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௧௨)

தன்மனையி லடைந்தோர்க்குத் தவிசுகா லலம்பிடநீர் தமக்கி யன்ற
இன்னடிசில் பூம்பாய லுறையுமிட மருந்துவதற் கினிய தெண்ணீர்
மின்னுசுடர் றெண்ணெயடை காயிவையொன் பதுமினிய விருப்பி னல்கல்
நன்மையுறு மில்வாழ்வோர்க் குரியகட னென்னமறை நவிலு மாதோ.

இ-ரை.—நன்மைபொருந்திய கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், தன்மனையில் வந்தவர்களுக்கு, ஆசனங்கொடுத்தல், காலகழுவநீர்கொடுத்தல், தம்மாலியன்றவினிய

வுணவளித்தல், அழகியபாய்கொடுத்தல், இருப்பதற்கிடங்கொடுத்தல், தாகத்திற்குச் சாப்பிடுதற்குத் தெளிவாகிய நல்லநீர்கொடுத்தல், இராக்காலமாகி லவரிருக்கு மிடத்தில் விளங்காநின்ற தீபம்வைத்தல், எண்ணெய்கொடுத்தல், தாம்பூலங் கொடுத்தல், என்னுமிவ்வொன்பதுகாரியங்களையு மிகுந்தவிருப்பத்துடனே செய்தற்குரிய முறைமையென்று வேதமுதலிய நூல்களிற்சொல்லும். எ—று. (கரு)

மனையவளை யடைக்கலமா வைத்தபொரு ளைத்தமது மாபொ ழுக்கைத்
தனதிடம்வந் தடைந்தோரைத் தகுதிகொள்சீ தனப்பொருளைச் சாற்றும்
(வைப்பை
யினிமைதரு புதல்வனையு மப்புதல்வ னிருக்கநவி லிவைக ளெல்லாம்
துனிவொடுயிர் போமெனினு நல்காமை வேண்டுமெனச் சொல்வர் மே
(லோர்.

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், தன்மனைவியையும் தன்னிடத்தில் பிறர்வைத்த அடைக்கலப்பொருளையும், தன்குலாசாரத்தையும், அடைக்கலமாகத் தன்னையடைந்தவரையும், சீதனமாக வந்த தகுந்தபொருள்களையும், சொல்லப்பட்ட முன்னோர்கள், வைப்பாகிய பொருளையும், இருமையின்பத்தையுந் தரத்தக்க புத்திரனையும், அந்தப்புத்திரனிருக்கும்போது சொல்லுகின்ற இவைகளையெல்லாம், துன்பத்தாலுயிர்போகும்படியான காலநேரிடிலும், அன்னியரிடத்துக் கொடாதிருத்தல்வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கசு)

தண்புனலின் மூழ்கிடினற் கருமங்கள் செய்பொழுதிற் றண்ணீ ருண்ணில்
அண்படுசொன் மகளிணைப்புல் விடின்மறுகிற் சென்றுவரி னுடை பூணில்
கண்படைசெய் தெழுந்திடிற்றும் மிடிற்றூய்மை யற்றபொருள் களைத்தா
(ன் றீண்டில்
ஒண்புவியில் விதிவழிநல் லாசமனஞ் செயிற்புனித முறுவர் மன்னே.

இ-ரை.—விளங்காநின்ற பூமியிலுள்ளவர்கள், குளிர்ச்சிபொருந்திய ஜலத்தில் ஸ்நானஞ்செய்யுங் காலத்திலும், நல்லகருமங்களைச்செய்யுங்காலத்திலும், தாகத்திற்கு நீருருந்துங்காலத்திலும், மதுரமாகிய சொற்களையுடைய மாதரைப் புணர்ந்த காலத்திலும், வீதிகளிற் போய்வந்தகாலத்திலும், வஸ்திர முடுத்திக்கொண்ட காலத்திலும், நித்திரைவிட்டெழுந்த காலத்திலும், தும்மியகாலத்திலும், சுத்தமல்லாத பொருள்களைத் தீண்டியகாலத்திலும், விதிப்படி நன்மைபொருந்திய ஆசமனஞ்செய்தால் பரிசுத்தமடைவார்கள். எ—று. (கஎ)

கிரகாச்சிரமமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்-எாஎச.

முப்பத்திரண்டாவது

நல்லொழுக்கமுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

பகாருங் கற்புடைப் பன்னி யோடுசெய்
மகிழ்கிர காச்சிர மத்தை யோதினும்
நிகாறு சுருதிக ணிகழ்த்து சீர்மிகுத்
திகழ்வறு நல்லொழுக் கினைவி ளம்புவாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! இதுவரையில், சொல்லுதற்கரிய கற்பினையுடைய மனைவியோடு மகிழ்ந்துசெய்தொழுகும், கிரகாச்சிரமதருமத்தைச் சொன்னோம், இனி ஒப்பில்லாத தருமசாஸ்திரங்களிற் சொல்லாநின்ற, பழிப்பில்லாதசிறப்புமிகுந்த நல்லொழுக்கத்தைச்சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இன்புறுசங் கிரமங்க ளட்டமியோ டுபாக மெழிலு வாக்கள்
தென்புலத்தார் கடன்செய்தினம் விரததினந்தனக்காகாத் தினங்கள்ஞாலம்
அன்புறுநல் விதிபாத மகமூல முதலியவை யனைத்து நீக்கி
மின்புரையு மகளிருட னின்பமிகப் புணர்ந்திடுதல் விதியா மன்றே.

இ-ரை.—இன்பத்தையுதவுகின்ற பன்னிரண்டுமாசப்பிறப்புகள், அஷ்டமிதிதி சந்திரசூரியகிரகணங்கள், அழகியபௌர்ணமி, அமாவாசை, பிதுர்க்களைக்குறித்து தர்ப்பணமுதலிய செய்யப்படும் புண்ணியகாலங்கள், விரததினங்கள், தனக்குப்பொருத்தமில்லாத நக்ஷத்திரங்கள், உலகத்தார்விசுவாசிக்கின்ற விதிபாதயோகம், மகநக்ஷத்திரம், மூலநக்ஷத்திரம், முதலியவைகளையொழித்துநின்ற தினங்களில், மின்னலைப்போல விளங்காநின்ற தன்மனைவியுடன்மிகுந்த வின்பமுண்டாகும்படி புணர்ச்சிசெய்தல் விதியாகும். எ—று. (௨)

தரைமிசைமண் டிலங்கோட்டி யதன்மிசையுண் கலன்வைத்துத் தான ருந்தல்
அறைதருமண் டிலமறையோர் தமக்குநாற் கோணாசர்க் கவிர்முக்கோணம்
உறுவணிகர்க் குயர்வட்டம் பின்னவர்க்கு நீர்தெளித்த லுரித்தாங் கையில்
செறிமடியிற் கலம்வைத்துங் கட்டில்பீ டத்திருந்துந் தின்ற றீதே.

இ-ரை.—போசனஞ்செய்யுங்காலத்தில், பூமியில் ஜலத்தினாலே மண்டிலமாகவளைத்து, அதன்மேல் போஜனபாத்திரத்தைவைத் தருந்தல்வேண்டும். அம்மண்டிலமானது, பிராமணர்களுக்கு நாற்கோணமாகவும், க்ஷத்தியர்களுக்கு விளங்காநின்ற

முக்கோணமாகவும், உயர்வுபொருந்திய வைசியர்களுக்கு வட்டமாகவும், சூத்திரர்களுக்கு ஜலத்தைத் தெளிப்பதாகவும், செய்வதுரியதாகும், இவையன்றி போஜனபாத்திரத்தை நெருங்கிய மடியில்வைத்துண்பதும், கையிலேந்தி யன்னம்புசித்தலும், கட்டில்முதலிய ஆசனங்களிலிருந்துபுசித்தலும் தீமையைத்தரும். எ—று. (௩)

அஞ்சொன்மட மாதரொடு சேர்தலையில் விற்குறையை யவம திப்பை
வஞ்சனையைத் தன்னுயு ளொடுபிறந்த நாளைநவின் மந்தி ரத்தை
எஞ்சலில்கற் புறுமனைவி நற்குணங்க ளுயர்நிதிய மிவையொன் பானும்
துஞ்சுறவெய் தினும்பிறரோ டுரையாமை வேண்டுமெனச் சொல்வர் மிக்
(கோர்.

இ-ரை.—அழகிய சொற்களையுடைய விளமைபொருந்திய மாதர்களுடனே புணர்ச்சிசெய்தலையும், தன்வீட்டிலுள்ளகுற்றங்களையும், அவமதிப்பான காரியங்களையும் வஞ்சகத்தையும், தன்னுயுளையும், தான்பிறந்தநக்ஷத்திரத்தையும், ஆசிரியனு லுபதேசித்த மந்திரத்தையும், குற்றமில்லாத கற்பினையுடைய தன்மனைவியினது நற்குணங்களையும், தன்னிடத்துள்ள மேலாகிய செல்வங்களையும், பிராணன் போகும்படியான துன்பமுண்டானகாலத்திலும், மேற்சொல்லிய ஒன்பதையும், அன்னியருக்குச்சொல்லாதிருத்தல்வேண்டுமென்று மேலோர்கள் சொல்வார்கள். எ—று. (௪)

கொண்டகட னக்கடன்றீர்த் திடுதரு னினியபொருள் கோடல் விற்றல்
மண்டுபிணி யயலோர்நற் குணங்களரி திற்பயந்த மகட்கொ டுத்தல்
பண்டுறுதன் னொழுக்கமொடு தான்புரிந்த பாவமெனப் பகரொன் பானும்
எண்டருபற் பலர்க்குமறை யாதுரைத்த லறத்தினியல் பென்பர்சான்றோர்

இ-ரை.—ஒருவரிடத்துத் தான்வாங்கியகடனும், அந்தக்கடனைக் கொடுத்தலும், தானின்பமடையும்படி பலவாகிய பொருள்களைக்கொள்ளுதலும், அப்பொருள்களை இலாபத்துடன்விற்றலும், தனக்குண்டாகியநோயும், அன்னியர்கள் நற்குணங்களும், அருமையாகப்பெற்ற தன்பெண்ணைவிவாகஞ்செய்துகொடுத்தலும், பழமையாகியதன்னொழுக்கமும், தான்செய்தபாவங்களும், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பது காரியங்களையும், மதிக்கத்தக்க பலருக்கு மறையாமற்சொல்லுதல் தருமசாஸ்திர சம்மதமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௫)

ஷை வேறு.

போற்று மெய்ம்மை களவின்மை பொறுமை குறளை கூறுமை
சீற்ற மின்மை மிகுதூய்மை திகழு முயிர்கட் கொல்லாமை
சாற்று கரணங் களையடக்கல் சான்றோர் தம்மை யடுத்திடுதல்
ஏற்ற நன்மை திரிகரணத் தியன்ற செய்த வினைநன்றே.

இ-ரை.—யாவரும் புகழ்கின்ற வுண்மைபேசுதல், ஒருவர்பொருளை யபகரியாதிருத்தல், கோபமில்லாதிருத்தல், மிகுந்த வாசாரமாயிருத்தல், விளங்காநின்ற ஒருயிரையுங் கொல்லாதிருத்தல், சொல்லப்பட்ட அந்தக்கரணங்களை யடக்குதல்பெரியோர்

களை யடுத்தல், தம்மாலியன்ற நன்மைகளை மனம்வாக்குக்காயங்களால் பிறருக்குச்செய்தல், இவைகளெல்லாம் யாவருக்குநன்மைத்தருவதாகும். எ—று. (சு)

கோயி லரசர் மறையோர்நீர்க் கும்பங் கவிஞர் துறந்தோர்கள்
பாய மாபி லுதித்தோர்கள் பசுவோ டரசு நாற்சந்தி
நேய முறுநெய் தயிரடிசி னெறியினெதிர்ப் படின வற்றைத்
தூயவன்பி னொடு வலமாச் சுற்றியேகல் விதியாமே.

இ-ரை.—தேவாலயங்கள், அரசர்கள், பிராமணர்கள், அபிஷேகத்திற்குரிய திருமஞ்சனக்குடங்கள், வித்வான்கள், துறவிகள், விரிந்த புகழ்ச்சிபொருந்திய குலத்திலுயர்ந்தோர்கள், பசுக்கள், அரசவிருக்ஷங்கள், நாற்சந்திகள், அன்புடனே தேவாராதனையைக்குறித்த நெய்க்குடங்கள், தயிர்க்குடங்கள், நைவேத்தியத்திற்குரிய திருவமுது, இவைகளெல்லாம் நடக்கும்போது வழியிலெதிர்ப்படுமோகில், அவைகளையன்புடனே வலஞ்செய்து செல்லுதல முறையாகும். எ—று. (எ)

பொருந்து சிறுவர் சூன்மகளிர் புன்க ணுேயர் வேட்டவன்பால்
இருந்து வருந்தன் மகளிவர்கட் கினிய வடிசி லளித்ததற்பின்
திருந்து மதிதிக் களித்திடலாஞ் செறியும் பிதுர்கட் கூட்டுழியின்
மருந்தி னுயிருய்ந் திடுபொழுதின் மகத்தி னூனுண் டிடல்விதியே.

இ-ரை.—இளமைபொருந்திய குழந்தைகள், கர்ப்பிணிகள், துன்பமிகுந்த பிணியாளர்கள், கணவன்வீட்டிலிருந்து தன்வீட்டிற்குவந்தபெண்கள், ஆகியவிவர்கள் போஜனஞ்செய்தபின்பேனும் திருத்தமாகிய அதிதிகளுக்குப் போசனஞ்செய்விக்கலாம். நெருங்கிய பிதுரர்களுக்குச் சிரார்த்தஞ்செய்யுங்காலத்திலும், அவுஷதங்களிலும், பிராணஹானி நேரிடாமல் பிழைக்கும்படியானகாலத்திலும், யாகத்திலும், புலாலுண்ணுதல் விதியாகும். எ—று. (அ)

மருவு சீரந் தணரரசர் வணிகர் பகலின் மாலைதனில்
திருகி லாவை சுவதேவஞ் செய்தல் விதியா நல்லொழுக்கம்
ஒருவி லாத்தக் கோர்கண்மெலி வுற்ற காலத் துதவி செயல்
முருகிற் சேர்ம காசனச முகத்தை வணங்க லிவைநன்றே

இ-ரை.—சிறப்புப்பொருந்திய பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், என்னுமூன்றுவருணத்தார்களும், பகற்காலத்திலும், இராக்காலத்திலும், மாறுபடாத வைசுவதேவ பூதபலிகரணஞ் செய்தல் விதியாகும். கெடாதநல்லொழுக்கமுடைய மேலோர்கள் மெலிவுற்றகாலத்தில் மனப்பூருவமாகத் தம்மாலியன்றவுதவிசெய்தல்வேண்டும். அழகுடனேசேர்ந்த மகாஜனசமுகத்தை யன்புடனேவணங்கல்வேண்டும். இவைகளாலேநன்மையுண்டாகும். எ—று. (கூ)

அறியுஞ் சந்தி மாமீமத் தடுக்கு விறகு மகயூபங்
குறிக ளிவற்றைத் தொடற்றீதாங் கூர்ப்பல் லரவ மாதிவிடஞ்
செறியுஞ் செந்து புலியானை திகழு மருப்பு மிருகங்கள்
எறியு மெதிர்காற் றொடுபனிவெய் யிலுக்கும் விலக னெறியாமே.

இ-ரை.—யாவராலுங்காணப்பட்ட நாற்சந்திமுச்சந்திகளி லிருக்கின்ற மரங்கள் இடுகாட்டிலடுக்கியிருக்கும் விறகுகள், யாகஞ்செய்யுமிடத்திலிருக்கும் யூபஸ்தம்பங்கள், என்னுமிவைகளைத் தீண்டுதல்தீதாகும். கூர்மைபொருந்திய விஷப்பற்களையுடைய பாம்புமுதலாகிய விஷமுள்ளசெந்துக்கள், புலிகள், யானைகள், விளங்காநின்ற கொம்புகளையுடையமிருகங்கள், வீசுகின்ற எதிர்காற்று, பனி, வெய்யில், இவைகளுக்கு விலகிநடத்தல்முறையாகும். எ—று. (கo)

தேவர் குரவர் பெரியர்பசு திகழந் தணரைப் பூசைசெயல்
தேவர் முனிவர் கற்புடையாள் சீர்மன் னவரை யிகழாமை
தேவர் பெரிய ரொளிமறையோர் செறியு நிழலைக் கடவாமை
தேவர் துறவர் பிதிர்க்களித்த சேட மருந்த லிவைநன்றே.

இ-ரை.—தேவர்கள், ஆசாரியர், பெரியோர்கள், பசுக்கள், விளங்காநின்ற பிராமணர்கள், இவர்களைப்பூசித்தலும், தேவர்கள், முனிவர்கள், கற்பினையுடையமாதர்கள், சிறந்த அரசர்கள், இவர்களையிகழாதிருத்தலும், தேவர்கள், பெரியோர்கள், பிர்மதேஜசையுடையபிராமணர்கள், இவர்களுடைய நெருங்கிய நிழலைக்கடந்து போகாமலும், தேவர்கள், துறவிகள், பிதுர்க்கள், இவர்களுக்கு அருத்திய சேஷமுண்ணுதலுமாகிய விவைகளெல்லாமிகுந்த நன்மையாகும். எ—று. (கக)

கையா லடிசில் படைத்திடுதல் கருது நீரிற் படிந்தபின்மெய்
கையாற் றுடைத்த லடிக்கடிதன் கையான் மெய்யிற் புடைத்தலிரு
கையாற் றலையைச் சொரிதல்குடங் கையி னடிசில் கொண்டருந்தல்
கையாற் புனலை முகந்துண்டல் கரையு மிவைக டீதாமே.

இ-ரை.—அன்னமுதலியவற்றைக் கையினாலேபரிமாறுதலும், மதிக்கின்றநீரில் ஸ்நானஞ்செய்தபிறகு உடம்பைக்கையினாற்றுடைத்தலும், காரணமின்றி யுடம்பிலே யடிக்கடிகையினாலேதட்டுதலும், இரண்டுகையினாலுந் தலையைச்சொரிதலும், உள்ளங்கையிலன்னத்தை யேற்றுண்ணுதலும், கையினாலே ஜலத்தைமுகந்து குடித்தலுமாகிய விவைகளெல்லாதீமையைத் தருவனவாகும். எ—று. (கஉ)

பசுவிற் காளை தனிலிவர்தல் பகையை விரும்ப னீர்நுகரும்
பசுவை யோட்டன் மிச்சிலொடு பகரு மழலை யந்தணரைப்
பசுவைத் தீண்டல் மானிடரைப் பாட றன்னைப் புகழ்ந்திடுதல்
பசுவின் கன்றைக் கடத்தலொடு பகரு மின்வகண் மிகுதீதே.

இ-ரை.—பசுவையேனும், எருதையேனும், வாகனமாகக்கொள்ளுதல், பகைவரை விரும்புதல், தண்ணீர்குடித்துக்கொண்டிருக்கும் பசுவையோட்டுதல், எச்சிற்கையுடனே சொல்லப்பட்ட அக்கினியையும், பிராமணர்களையும், பசுக்களையுந்திண்டுதல், மனிதரைப்பாடுதல், தன்னைப்புகழ்தல், பசுவின்கன்றைத் தாண்டிப் போகுதல், என்று சொல்லப்பட்டவிவைகளெல்லாம் மிகுந்த தீமையைத்தருவனவாகும். எ—று.

பிறர்கள் பொருளை யபகரித்தல் பெரியோ ரெதிரிற் காணீட்டல்
பிறர்கள் குற்ற மொழிந்திடுதல் பிரிய மற்ற மொழிபகர்தல்

பிறர்கள் மனையை விழைதல்சலப் பிரவா கத்தி னெதிர்நீந்தல்
பிறர்கள் மனைமென் றுகிலணிதல் பேசு மிவைக டீதாமே.

இ-ரை.—அன்னியர் பொருள்களையபகரித்தல், பெரியோர்களெதிரிற் காலைநீட்டுதல், அன்னியர்குற்றங்களையெடுத்துப்பேசுதல், ஒருவருக்கும் பிரியமில்லாத வார்த்தைசொல்லுதல், அன்னியருடையமனைவியைவிரும்புதல், பிரவாகமாகியவெள்ளத்தினெதிரே நீந்திச்செல்லுதல், அன்னியர்கள்வீட்டிலிருக்கு மெல்லியவஸ்திரங்களையணிதல், சொல்லப்பட்டவிவைகளெல்லாந் தீதாகும். எ—று. (கச)

பிறர்கள் மீதி னீர்தெரிக்கப் பிறங்கு மயிரை யுதரிடுதல்
பிறர்கள் கலத்தி னயின்றிடுதல் பெருமூச் செறிதல் பகலுறங்கல்
பிறர்கட் கின்னு வியற்றிடல்பொய் பேசன் மடைய ரொடுகூடல்
பிறர்க்கு வான விற்காட்டல் பெரிது மிவைக டீதாமே.

இ-ரை.—அன்னியர்மேலே ஜலந்தெரிக்கும்படி விளங்காநின்ற தலைமயிரை யுதருதல், அன்னியருடைய போசனபாத்திரத்திலுண்ணுதல், பெருமூச்சுவிடுதல், பகற்காலத்தில் நித்திரைசெய்தல், அன்னியர்களுக்குத்துன்பஞ்செய்தல், பொய்பேசுதல் அறிவில்லாதவரொடு சினேகித்தல், அன்னியருக்கு வானத்திற்றோன்றுகின்ற இந்திர தனுசைக்காட்டுதல், இவைகளெல்லா மிகுந்த தீமையைத்தருவனவாகும். எ—று. ()

துயிலி னுடை யொழித்திடுத றுட்ட வூர்தி மிசையிவறல்
துயிலி னெழுப்பல் குறளையினிற் சூதிற் றூதிற் பொருள்கோடல்
துயிலு மடமங் கையர்ப்புணர்த றுன்று காலை மாலைதனில்
துயிலல் பூத்த மகளிர்தமைத் தொடுத லிவைக டீதாமே.

இ-ரை.—ஆடையில்லாமல் நித்திரைசெய்தல், துஷ்டமிருகங்களை வாகனமாக வேறுதல், ஒருவர் நித்திரைசெய்யும்போதெழுப்புதல், கோட்சொல்லுதல், சூதாடுவதனாலும், தூதுசொல்லுவதனாலும், பொருள்தேடுதல், நித்திரைசெய்யுமாதரைப்புணர்தல், நெருங்கியகாலை நேரத்திலும் மாலைநேரத்திலும், நித்திரைசெய்தல், வீட்டுக்குவிலக்காயுள்ளமாதரைத்தொடுதல், இவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ-று. (கசு)

தெள்ளு முருவிற் கல்விதனிற் றிருவிற் குலத்தி விழிந்தோரை
யெள்ள லுடைந்த கலத்தருந்த லினிதுண் கலத்திற் கைகழுவல்
பள்ளி மீதி லிருந்துபுனல் பருகல் புசித்தல் செபித்திடுதல்
விள்ளு சூதா டுதல்காலை வெயிலி லிருத்த றீதாமே.

இ-ரை.—உருவத்தினாலும், தெளிவைத்தரத்தக்க கல்வியினாலும், செல்வத்தினாலும், குலத்தினாலும், தாழ்ந்தவர்களையிகழ்ந்துபேசுதல், உடைந்தபோஜன பாத்திரத்திற் சாப்பிடுதல், இன்பத்துடனே போஜனஞ்செய்த பாத்திரத்திற் கைகழுவுதல், படுக்கையிலிருந்துக்கொண்டு தாகத்துக்குநீரருந்துதல், போஜனஞ்செய்தல், மந்திர ஜெபஞ்செய்தல், நன்மையைவிலக்குவதான சூதாடுதல், காலைநேரத்தில் வெய்யிலிலிருத்தல், இவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (கஎ)

மயிரென்ப சுத்தம் பலிச்சாம்பன் மலின நீரி னனைந்தவிடம்
பயின்முள் ளுதிரங் கோழையுமி பகரு மிவற்றை மிதித்திடுதல்
பெயருங் காலிற் கான்மிதித்தல் பெண்க டம்மை யவமதித்தல்
இயன்ம யானப் புகைபடச்சேர்ந் திடுத வினைக டீதாமே.

இ-ரை.—சொல்லப்பட்ட மயிர்களையும், எலும்புகளையும், மலமூத்திரங்களையும், சாம்பல்களையும், அசுத்தமானஜலத்தினாலே நனைந்தவிடங்களையும், பொருந்திய முள்ளுகளையும், உதிரத்தையும், கோழையையும், உமியையும், மிதிக்குதல். நடக்கப்படுகின்றகாலினாலே காலைமிதித்தலும், பெண்களையவமானஞ்செய்தலும், சுடுகாட்டுப் புகை தன்மேற்பொருந்தும்படி சமீபத்திற்போதலும், ஆகியவினைகளெல்லாந்தீமையையுண்டாக்கும். எ—று. (கஅ)

பரவு புனலிற் றன்னிழலைப் பார்த்தல் வனையுந் துகிலகன்ற
தெரிவை தன்னை நோக்கிடுதல் சிறுநீர் மலத்தைக் கண்ணுறுதல்
அரவு தீண்டும் போழ்துதயாத் தமன காலந் தனினீரில்
விரவு மிரவி தனைக்காணல் விளம்பு மினைக டீதாமே.

இ-ரை.—சொல்லப்பட்ட நீரினிடத்துத் தன்னிழலைப்பார்க்குதல், உடுத்திய ஆடைநீங்கிய மாதர்களுருவங்களைப்பார்க்குதல், மலமூத்திரங்களைப்பார்க்குதல், கிரகணகாலங்களிலும், உதிக்கின்றகாலங்களிலும், அஸ்தமனகாலங்களிலும், ஜலத்தினிடத்திலும் பொருந்திய சூரியனைப்பார்க்குதல், என்றசொல்லப்பட்ட வினைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (க௯)

பதிதன்றிருடன் பித்துடையான் படிறன்பலர்கள் பகையுடையோன்
மிதமி லாது செலவிடுவோன் வீண னல்லோர் தமையிகழும்
மதமு ளான்கட் குடிவறியன் வஞ்சன் றுன்பம் புரிந்திடுவோன்
இதமி லற்ப னபவாத னிவர்க ணேச மிகுதீதே.

இ-ரை.—ஜாதியாசாரஞ் சமயாசாரந்தவறினவனும், அன்னியருடைய பொருள்களை யபகரிக்கின்றவனும், பயித்தியமுடையவனும், பொய்பேசுகின்றவனும், பலர்களோடு பகையுடையவனும், கிரமமல்லாதசெலவுசெய்பவனும், உபயோகமில்லாதகாரியங்களைச் செய்பவனும், நல்லோர்களைத் தூஷிக்கின்ற மதமுடையவனும், கட்குடியனும், தரித்திரனும், வஞ்சனையுடையவனும், துன்பஞ்செய்வோனும், நன்மையில்லாத கீழ்மக்களும், பழிச்சொற்களையுடையவனும், ஆகியவிவர்களுடனே சிநேகஞ் செய்தால் மிகுந்ததீமையுண்டாகும். எ—று. (௨௦)

மடிமை யோடு திரிந்திடுதன் மருவு மிரவிற் றயிருந்தல்
படிறு கூறல் வேட்டகத்திற் பரிவி னென்று மிருந்தருந்த
னெடிசெ யோர்கா ரணமின்றி நோன்கை யுதறல் தலையசைத்தல்
ஒடிசெத் தைகளைக் கிள்ளிடுத லுரைக்கு மினைக டீதாமே.

இ-ரை.—சோம்பலாகத்திரிதல், பொருந்தியவிராக்காலத்திலே தயிருண்ணுதல், பொய்பேசுதல்; அன்புடனேபெண்ணைக்கொடுத்த மாமனார்வீட்டிற் பலநாளிருந்துண்

ணுதல், சொல்லுகின்ற யாதொருகாரணமுமில்லாமல் பெரியகைகளையுதறுதல், தலையையாட்டுதல், உதிர்ந்தசெத்தைகளைக்கிள்ளுதல், என்றுசொல்லப்பட்ட இவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (உக)

நெருப்பை வாயி னூதிடுத னின்று சமனம் புரிந்திடுதல்
விருப்பிற் றெறுவி யாலன்றி விளங்கு காத்தி னலளித்த
கரிப்புப் பொடுநெய் நீரடிசில் கறிகள் பான்மற் றிவையருந்தல்
இருப்புத் தெறுவி யாலிடுத லினிதா வருந்த லிவைதீதே.

இ-ரை.—நெருப்பை வாயினலூதல், நின்றுகொண்டுஆசமனஞ்செய்தல், விருப்பமிருந்த அகப்பையினலே பரிமாருமல் விளங்காநின்றகையினலே பரிமாறிய கரிப்பையுடைய உப்பு, நெய், ஜலம், அன்னம், கறிகள், பால், என்னுமிவைகளையுண்ணுதல், இரும்புக்கரண்டியாற் பரிமாறுதல், அப்படிப்பரிமாறிய அன்னங்கறிமுதலியவற்றை இனிதாகச்சாப்பிடுதல், ஆகியவிவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று.

மனைவி யோடின் னடிசிலுணல் மனைவி யுண்ணு தலைநோக்க
றனிமை யாக வழிச்செலலா சனத்தைக் காலி னுலகற்றல்
இனிய வழியல் லாவழியி னேக நெடிய மலைமரத்தி
னுனியி லிவர்தல் கொலைபுரித லுவலு மிவைக டீதாமே.

இ-ரை.—மனைவியோடிருந்து சாப்பிடுதல், மனைவிசாப்பிடுவதைப் பார்க்குதல், வழித்துணையில்லாமலே தனிமையாகப்போகுதல், இருந்த ஆசனத்தைக் காலினலே தள்ளுதல், நல்லவழியல்லாத வழிகளிற்போகுதல், நீண்டமலையுச்சியிலுமரத்தினுனியிலுமேறுதல், கொலைசெய்தல், என்னுமிவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (உரு)

தகவி னருந்து கலத்தினுயர் தவிசி னிருந்து புசித்திடுதல்
திகழுங் கைகான் முகத்திடைநீர் சேர்த்து ருதின்ன முதருந்தல்
நிகழுங் கவலை யோடருந்த னின்று தெண்ணீர்ப் பருகிடுதல்
துகிலி லாது நீராடல் சொல்லு மிவைக டீதாமே.

இ-ரை.—தகுதியான போஜனபாத்திரத்திற்கு மேலாகவுயர்ந்த ஆசனத்திலிருந்து புசித்தல். விளங்காநின்றமுகம், கை, கால், இவைகளைஜலத்தினலே சுத்தஞ்செய்யாமலினிதாகப்புசித்தல். மிகுந்தகவலையுடனேபுசித்தல். நின்றுகொண்டுதண்ணீரைக்குடித்தல், வஸ்திரமில்லாமல் நீராடுதல், என்றுசொல்லப்பட்டஇவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (உச)

அழகிற் றன்செய் தவங்கொடையை யறைத னடக்கும் போதுவிரி
குழலை யுலர்த்தல் குருவெதிரிற் குலவி யிருத்தல் படுத்திடுதல்
பழைய வுணவை யருந்திடுதல் பாழ்வீ டதனில் வசித்திடுதல்
தழுவு முதட்டைக் கசக்கிடுதல் சாற்று மிவைக டீதாமே.

இ-ரை.—அழகுடனே தான்செய்ததவத்தையுந் தானத்தையும் பிறரறியச்சொல்லுதல், நடக்கும்போது தலைமயிரைவிரித்துலர்த்துதல், ஆசிரியனெதிரிலே குலாவிக்

கொண்டிருத்தல், படுத்துக்கொண்டிருத்தல், அன்னமுதலிய பழயவுணவுகளைப்புசித்தல், பாழ்வீட்டில்வசித்தல், பொருந்தியவுதட்டைக்கையாற்கசக்குதல், என்றுசொல்லப்பட்ட விவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (உகூ)

இந்து கதிரோ னக்கினிநீ ரிலரு முலவை பெரியோர்கள்
கந்து ருமற் றிவர்க்கெதிரிற் காரிக் கோழை யுமிழ்ந்திடுதல்
முந்து மலநீர் விடுத்திடுதன் மூக்கு நீரைச் சிந்திடுதல்
நந்து மிடிபா ரைச்சேர்த னவிலு மிவைக டதாமே.

இ-ரை.—கெடுதலில்லாமல்விளங்காநின்ற சந்திரன், சூரியன், அக்கினி, ஜலம், காற்று, பெரியோர்களென்னு மிவர்களுக்கெதிரிற் காரிக் கோழையையுமிழ்தல், மலவிசர்க்கஞ் சலவிசர்க்கஞ்செய்தல், மூக்குநீரைச்சிந்துதல், கெடுதலாகிய இடிபாரைச்சேருதல், என்றுசொல்லப்பட்ட விவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.எ—று.

மூக்கை யிழுத்தல் பற்கடித்தன் முனித விரைந்து சிரித்திடுதல்
தேக்கைம் பொறிக ளடிக்கடிதீண் டிடுத லபான வாயுவினை
வீக்கு மோசை யுடன்விடுத்தன் மீசை கடித்த னகங்கடித்தல்
நோக்கு கண்ணின் மயிர்பரித்த னுவலு மிவைக டதாமே.

இ-ரை.—அடிக்கடி மூக்கையுருஞ்சுதல், பற்களைக்கடித்தல், கோபிக்குதல், இரைந்துசிரித்தல், பொருந்திய ஐம்பொறிகளைத்தொடுதல், பலத்த வோசையுடனே, அபானவாயுவைவிடுத்தல், மீசையைக் கடித்தல், நகத்தைக்கடித்தல், பார்க்கப்படுகின்ற கண்மயிரைப்பறித்தல், என்றுசொல்லப்பட்ட விவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும். எ—று. (உஎ)

நல்லொழுக்கமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்-அ௱௯.

முப்பத்துமூன்ருவது

பஞ்சமகாவெக்கியமுளாத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

மல்ல லம்புவி வாழ்தரு மாந்தர்க்கு
நல்லொ ழுக்கஞ் சிறிதுந வின்றனம்
புல்லும் பாவங்க ளைந்தையும் போக்குதற்
கொல்லும் பஞ்சமா வெச்சமு றைசெய்வாம்.

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே இதுவரையில் பலவளப்பமும் பொருந்திய வழகிய பூமியினிடத்தில் வாழ்கின்ற மனிதர்களுக்குவேண்டிய நல்லொழுக்கங்கள் சிறிதுசொன்னோம், இனி இல்லறநடத்துகையில் பொருந்துகின்ற ஐந்துபாவங்களையும் போக்குதற்கு, தருமநூல்களின் விதிப்படி நடத்தவேண்டிய பஞ்சமஹாவெக்ஞங்களைச் சொல்லுவோமென்ருர் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அம்மி யேந்திர மாதியி னரைத்திட லவிர்தரு நெல்லாதி
கொம்மைசேருர லுலக்கையிற் குற்றிடல் குடத்திடைக்குளிர்நீரைப்
பொம்ம லுற்றிடக் கொணர்ந்திடல் விறகினைப் பொங்கழலிடைச்சே
ர்த்தல்,செம்மை வாயிரும் பினிற்கறி நறுக்கிடல் செப்பிடு மிவையை
(ந்தால்.

இ-ரை.—நெல்முதலியவற்றை, அம்மி, எந்திரமுதலியவற்றில், அரைக்குதல், உரலிலு முலக்கையிலுங் குற்றுதல், திரட்சிபொருந்திய குடத்தினிடத்தில்பொலிவுண்டாகக் குளிர்ந்தஜலத்தைக்கொண்டு வருதல், சுவாலிக்கின்ற நெருப்பினிடத்தில் விறகையெரிக்குதல், கூரியவாயினையுடைய அரிவாட்கள் முதலியவற்ருல்போஜனத்திற்குரிய பதார்த்தங்களை நறுக்குதல். என்றுசொல்லப்பட்ட விவ்வைந்திணுலும். எ—று. (உ)

ஐந்து பாவங்க ளெய்திடு முறையின்மற் றவைகளை யொழித்தற்குக்
கந்து ருதுயர் மறைநெறி யேகிர கந்தனி விருப்போர்கள்
சிந்தை யன்பொடு பஞ்சமா வெக்கியந் தினந்தினஞ் செயவேண்டுஞ்
சந்த மார்தரு பஞ்சமா மகங்களைத் தனித்தனி பகர்வாமால்.

இ-ரை.—ஐந்துகொலையுண்டாகிறது, அவ்வைந்துபாவங்களையு முறையேபோக்குவதற்காகப் பழுதில்லாத மேன்மைபொருந்திய வேதவிதிப்படி கிரகஸ்தாச்சிரமத்

திலிருப்பவர்கள் உள்ளன்புடனே தினந்தோறும், ஐந்துமஹாவெக்கியங்களைச் செய்யவேண்டும். அழகுபொருந்திய அவ்வெக்கியங்களைத் தனித்தனிகிரமமாகச் சொல்லுவோம். எ—று. (௩)

பெருத மன்புட னருமறை யோதுதல் பிரமயெக் கியமாகும்
பருக னஞ்சல மிவற்றுளொன் ருற்றருப் பணஞ்செயல் பிதிரெச்சந்
திருகி லோமநற் றழலிடை விதிமுறை செய்தறெய் வதவெச்சம்
பொருவில் வாயச முதலிய பலியிடல் பூதவெக் கியமாமே.

இ-ரை.—மிகுந்தவன்புடனே அருமையாகிய வேதமோதுவது பிரமவெக்கியமாகும். நல்லஜலதருப்பணத்தினாலாவது, அன்னத்தினாலாவதுபிதுர்க்களைக்குறித்து திருப்திசெய்வது பிதுரெக்கியமாகும், தேவதைகளைக்குறித்து குற்றமில்லாத நல்ல அக்கினியினிடத்தில் விதிப்படி ஓமஞ்செய்வது தேவயெக்கியமாகும், ஒப்பில்லாத வாயசபலிமுதலானவை வைப்பதுபூதவெக்கியமாகும். எ—று. (௪)

மகிழ்வி னெய்திய வதிதியர்க் கமுதிடன் மானிட மகமாகும்
புகலு மைந்தனுட் பிதிர்மக மனத்தினிற் புனலினிற் றீம்பாலிற்
றிகழ்கிழங்கினிற்பழத்தினிற்பிதிர்க்குநற் றிருத்தியுண்டாம்வண்ணம்
இகழ்வ றச்செய்தோர் மறையவன் றனைப்புசிப் பித்திடல்விதியாமே.

இ-ரை.—வந்த அதிதிகளுக்கு மனமகிழ்ச்சியுடனே சாப்பாடுபோவேதுமானுடவெக்கியமாகும், என்றுசொல்லப்பட்ட விவ்வைந்தினுட் சேர்ந்ததான பிதுரெக்கியத்தை, அன்னத்தினாலாவது, சத்திக்குத்தக்கபடி ஜலதருப்பணத்தினாலாவது, மதுராமாகிய பாலினாலாவது, விளங்குகின்ற கிழங்கினாலாவது, பழத்தினாலாவது, பிதுர்க்களின் பிரீதியின்பொருட்டு நிந்தையில்லாமற் செய்து, ஒருபிராமணனைப்புசிப்பித்தல் முறையாகும். எ—று. (௫)

முனிவ ரோடியர் பிதுர்க்கணற் றேவர்கண் மொழிதரு பூதங்கள்
நனிசி றந்திடு மதிதிக ளிவரெலா நவிறரு கிருகத்தில்
இனிதி ருப்பவர் பான்மிகு திருத்தியை யெய்திட விழைவார்கள்
புனித மாமறை புகனெறி யவர்க்கிதம் புரிவது கடனாமே.

இ-ரை.—மேலாகிய முனிவர்களும், பிதுர்க்களும், அழகியதேவர்களும், சொல்லப்பட்ட பூதங்களும், மிகச்சிறந்த அதிதிகளும், ஆகியவிவர்களெல்லாஞ் சொல்லுகின்ற கிரகஸ்தாச்சிரமத்தை யின்பத்துடனே பொருந்தியிருப்பவர்களிடத்தினின்றும், மிகுந்த திருப்தியை அடையவிரும்புவார்கள். ஆதலால் பரிசுத்தமாகியபெருமைபொருந்திய வேதங்களிற்கூறியபடி அவர்களுக்கிதமாகச்செய்வது கடமையாகும் எ—று.

வேத மோதலான் முனிவரை மகத்தினல் விண்பொலியிமையோரை
யோது சிர்ச்சிராத் தத்தினற் பிதுர்க்களை யுணவளித் திடறன்னூன்
மேத கப்பொலி யதிதியர் தமைநனி மிளிர்பலி யிடலாலே
யேத மற்றிடு பூதங்க ளையுமகிழ் வெய்திடச் செயவேண்டும்

இ-ரை.—வேதாத்தியயனஞ்செய்வதினாலே முனிவர்களையும், ஓமஞ்செய்வதினாலே விண்ணுலகத்தில்விளங்காநின்ற தேவர்களையும், சொல்லப்பட்ட சிறப்பினையுடைய சிரார்த்தஞ்செய்வதினாலே பிதுர்க்களையும், போஜனஞ் செய்விப்பதினாலே மேம்பாடுபொருந்திய அதிதிகளையும், மிகவிளங்காநின்ற பலிபோடுவதினாலே குற்றமற்றபூதங்களையுந் திருப்தியடையும்படி செய்யவேண்டியது. எ—று. (எ)

தேவ ரைக்குறித் தழலிடை யன்பொடு செயப்படு மோமங்கள்
தாவி லாவிர வியையடைந் திடுமவன் றன்னிடை மழையுண்டா
மேவு மம்மழை யாற்பல தானியம் விளைவுறு மதனாலே
சீவ கோடிகள் விருத்தியெய் திடுமெனச் செப்பிடு முதனூலே.

இ-ரை.—தேவர்களைக்குறித்து அக்கினியினிடத்தில், அன்புடனே செய்யப்படுகிற ஹோமங்கள் கெடுதலில்லாத சூரியனையடையும், அச்சூரியனாலே மழையுண்டாகும். விரும்பப்படுகிற அம்மழையினாலே, பலவாகியதானியங்களுண்டாகும், அதனாலே ஜீவகோடிகள் விருத்தியடையுமென்று வேதங்களெடுத்துரைக்கும். எ—று. (அ)

பஞ்சமகாவெக்கியமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - அாகூ.

முப்பத்துநான்காவது

அமாமுதலிய சிரார்த்தங்களுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கேதமின் மகிழ்ச்சி கூறுங் கிரகத்தாச் சிரமத் தோர்கள்
பாதக நன்கு பாற்றும் பஞ்சமா வெச்சஞ் சொற்றுந்
தீதற விளங்க மாமுன் சிரார்த்தங்க டொண்ணூற் றுறும்
ஓதநீ ருலகத் துள்ளோ ருவப்புற வினிது சொல்வாம்.

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே இதுவரையும் துன்பமில்லாமல் யாவரும் மகிழ்ச்சியடைகின்ற கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் அன்றன்று செய்தபாவங்களைப் போக்குவதாகிய நன்மை மிகுந்த பஞ்சமகாவெக்கியத்தைச்சொன்னோம். இனி குற்றமில்லாமல் விளங்காநின்ற அமாவாசைமுதலாகிய தொண்ணூற்றூறு சிரார்த்தங்களையும் அலைகளையுடைய கடல்சூழ்ந்தபூமியிலுள்ளவர்கள் களிப்படையும்படி நன்மையுடனே சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

பெருகமா நாளிற் பிண்ட பிதிரெச்சஞ் செய்த பின்னர்த்
திருகிலத் தினத்திற் செய்யுஞ் சிரார்த்தத்தை விதியி னோடு
சருவினாற் செய்ய வேண்டுந் தகுவிசு வேதே வர்க்கா
இருவரை பிதுர்க்கு மூவ ரிணைப்புசிப் பித்தல் வேண்டும்.

இ-ரை.—பெருமைமிகுந்த அமாவாசைதினத்தில் பிண்டப்பிரதானத்துடனே பிதுர் எக்கியஞ்செய்தபின்பு மாறுதலில்லாத அந்ததினத்தில் செய்யப்படுகிற சிரார்த்தத்தை அவரவர்கள் சூத்திரவிதிப்படி அன்னத்தினுற் செய்யவேண்டும். தகுதியான பெருமையையுடைய விசுவேதேவர்களுக்காக இரண்டுபேர்களையும், பிதுர்த்தேவர்களுக்காக மூன்றுபேர்களையும், புசிப்பித்தல்வேண்டும். எ—று. (உ)

அவ்விரு வோர்க்கு மொவ்வோர் வரையாத லருந்தச் செய்தல்
செவ்விதின் வேண்டு மீது செய்வதாற் பிதுர்க்க ளுக்குத்
தவ்வவில் பரலோ கத்திற் றிருத்தியுந் தனக்கு மேன்மேல்
எவ்வமில் வமிச விர்த்தி யினியசெல் வமுமுண் டாமால்.

இ-ரை.—மேற்சொல்லிய அந்த விசுவேதேவர்களுக்கு ஒருவரையும் பிதுர்க்களுக்கு ஒருவரையுமாவது செவ்வையாகப்புசிப்பித்தல்வேண்டும். இந்தப்படி செய்வதனாலே பிதுர்க்களுக்குக் கெடாத பரலோகத்திலே திருத்தியும் தனக்கு இகலோகத்

திலே குறைவில்லாத வமிசவிர்த்தியும், இன்பத்தைத்தருகின்ற ஐஸ்வரியவிருத்தியு முண்டாகும். எ—று. (௩)

வளாமாப் பன்னி ரண்டு மன்வாதி யொருபன் னொன்குந்
தளர்வறு யுகாதி நான்குஞ் சங்கிராந் திகளீ ராறு
மிளிவில்லை திருதி பன்மூன் றியல்விதி பாதம் பன்மூன்
றளிமகா ளயமீ ரெட்டு மட்டகை பன்னி ரண்டும்.

இ-ரை.—சித்திரைமாதமுதல் பங்குனிமாதம்வரையிலுள்ள ஒருவருஷத்தில்வருவதாகியஅமாவாசைபன்னிரண்டும், மன்வாதிபதினொன்கும், குறைவில்லாதயுகாதிநான்கும், மாதப்பிறப்புப்பன்னிரண்டும், இகழ்வில்லாத வைதிருதி நாமயோகம்பதின்மூன்றும், பொருந்திய விதிபாதநாமயோகம் பதின்மூன்றும், அன்போடுசெய்யத்தகுந்தமகாளயம் பதினாறும், அஷ்டகை பன்னிரண்டும். எ—று. (௪)

ஆகிய சிரார்த்தந் தொண்ணூற் றுறையும் விதியிற் செய்யின்
மாகர்தா மயன்சு ரேசன் மகிழுருந் திரன்மார்த் தாண்டன்

---

† இவற்றுள், சூரியனுஞ் சந்திரனுங்கூடியதினம், அமாவாசை யென்னப்படும்.

சித்திரைமாசம் சுக்கிலபக்ஷத்திரிதியை, ஆனிமாசம் கிருஷ்ணபக்ஷநவமி, ஆடிமாசம் கிருஷ்ணபக்ஷத்தசமி, ஆவணிமாசம் கிருஷ்ணபக்ஷஅஷ்டமி, புரட்டாசிமாசம் சுக்கிலபக்ஷத்திரிதியை, ஐப்பசிமாசம் சுக்கிலபக்ஷநவமி, கார்த்திகைமாசம் சுக்கிலபக்ஷத்துவாதசி, தைமாசம் சுக்கிலபக்ஷஏகாதசி, மாசிமாசம் சுக்கிலபக்ஷசப்தமி, பங்குனிமாசம் சுக்கிலபக்ஷத்திரிதியை, சித்திரைமாசம், ஆடிமாசம், கார்த்திகைமாசம், பங்குனிமாசம், இந்தமாதங்களின் பௌர்ணமிகள், ஆகிய இவைகள், மன்வாதி யென்னப்படும்.

வைகாசிமாசம் சுக்கிலபக்ஷத்திரிதியை, புரட்டாசிமாசம் கிருஷ்ணபக்ஷத்திரையோதசி, கார்த்திகைமாசம் சுக்கிலபக்ஷநவமி, மாசிமாசம் அமாவாசை, இந்தத்திதிகள் யுகாதியென்னப்படும்.

சூரியன் ஒருராசியினின்று மற்றொருராசியைச் சேருங்காலம் சங்கிரமணமென்னப்படும்.

சித்திரைமாசமுதல் பங்குனிமாசம்வரையிலுள்ள ஒருவருஷத்தில்வருகிறவைதிருதிநாமயோகங்கள் வைதிருதியென்னப்படும். வ்யதீபாதநாமயோகங்கள், வ்யதீபாதமென்னப்படும்.

கன்னியாராசியில் சூரியனிருக்கும் புரட்டாசிமாசத்தில் கிருஷ்ணபக்ஷப்பதினைந்து திதிகளும், பதினாறுவதுநாளாகிய சுக்கிலபக்ஷப்பிரதமைதிதியும், மஹாளயமென்னப்படும்.

மார்கழிமாசம், தைமாசம், மாசிமாசம், பங்குனிமாசம், இந்தநான்கு மாசங்களின் கிருஷ்ணபக்ஷத்தியசப்தமிதிதி, அஷ்டமிதிதி, நவமிதிதி, இவைகள் அஷ்டகை யென்னப்படும்.

வேகமார் வளிதீ யச்சு வினிதேவர் விசுவே தேவர்
வாகுறு பிதுர்க்கள் போக மாமுனி வரர்வ சுக்கள்.

இ-ரை.—இத்தன்மையாகிய சிரார்த்தங்கள் தொண்ணூற்றாறையும், விதிப்படி செய்வதனாலே தேவர்கள் வணங்குகின்ற பிரமாவும், இந்திரனும், களிப்பையுடைய உருத்திரனும், சூரியனும், வேகம்பொருந்திய வாயுவும், அக்கினியும், அச்சுவினிதேவர்களும், விசுவேதேவர்களும், அழகுபொருந்திய பிதுர்த்தேவர்களும் பெருமைபொருந்திய யோகங்களைச்செய்கின்ற முனிஸ்சிரேஷ்டர்களும் அஷ்டவசுக்களும்ஏ—று.

கண்ணக னிலத்து மாக்கள் கருதிய விலங்கி னங்கள்
நண்ணிய பட்சிசால நாகமா தியசெந் துக்கள்
எண்ணரு நீர்வாழ் சாதி யிலகுமற் றையபூ தங்கள்
அண்ணிய பலரு மின்பத் தகமகிழ் வடைவர் மாதோ.

இ-ரை.—இடமகன்ற பூமியிலுள்ள மனிதர்களும், நினைக்கப்படுகின்ற விலங்கின் கூட்டங்களும், பொருந்திய பறவைக்கூட்டங்களும் சர்ப்பமுதல் ஊர்வனவாகிய ஜெந்துக்களும், அளவில்லாத நீர்வாழ்வனவாகிய ஜெந்துக்களும் விளங்காநின்ற மற்றுள்ளபூதங்களும், இன்னும்பொருந்திய பலர்களும், இன்பத்துடனே மகிழ்ச்சியடைவார்கள். எ—று. (சு)

அனுடநல் விசாகஞ் சோதி யமாவொடு கூடிற்செய்யும்
இனசிரார்த் தம்பி திர்க்கோ ரெட்டாண்டு திருத்தி யாக்கும்
புனர்தமா திரை பூசங்கள் புணரமாச் செயுஞ்சி ரார்த்தம்
நனிபிதுர்க் கீரா றுண்டு நற்றிருத் தியையுண் டாக்கும்.

இ-ரை.—அனுஷநக்ஷத்திரம் அழகியவிசாகநக்ஷத்திரம் சுவா திநக்ஷத்திரம் இவைகள் அமாவாசைதினத்தில் சேருகிறகாலத்தில் செய்யப்படுகின்ற சிராத்தமானது கூட்டமாகிய பிதுர்க்களுக்கு எட்டுவருஷந்திருத்தியுண்டாக்கும். புனர்பூசநக்ஷத்திரம் திருவாதிரைநக்ஷத்திரம் பூசநக்ஷத்திரம் இவைகள்பொருந்திய அமாவாசை தினத்தில் செய்யப்படுகின்ற சிரார்த்தமானது பிதுர்த்தேவர்களுக்கு பன்னிரண்டுவருஷம் மிகுந்தன்மைபொருந்திய திருப்தியையுண்டாக்கும். எ—று. (எ)

சதயநற் புரட்டை விட்டஞ் சார்ந்திடு மமாவி லன்போ
டிதமுறச் செயுஞ்சி ரார்த்த மீரெட்டு வருடங் காறும்
அதிபுகழ்ப் பிதுர்க்க ளின்ப மனுபவித் திடுவ ரென்னத்
துதிமிகப் பெருகு தெய்வச் சுருதிக ளியம்பு மன்னே.

இ-ரை.—சதயநக்ஷத்திரம் பூரட்டாதிநக்ஷத்திரம் இவைகள்பொருந்திய அமாவாசைதினத்தில் அன்புடனே நன்மைபொருந்தச் செய்யப்படுகிற சிரார்த்தத்தினாலே எட்டுவருஷம் வரையில் மிகுந்தபுகழையுடைய பிதுர்த்தேவர்கள் இன்பமடைவார்களென்று மிகுந்த புகழோங்கிய தெய்வத்தன்மையுடைய வேதங்களெல்லாம் சொல்லும். எ—று. (அ)

மாசிமா தத்த மாவின் மகிழ்வுறு சதயங் கூடில்
தேசுறு பிதுர்க்க ளுக்குத் திருத்தியாங் கால மாகு
பேசுறு மவிட்டஞ் சேரிற் பெரிதுசெய் சிரார்த்தந் தன்னால்
ஏசறு பிதுர்க்கள் பன்ன யிரமாண்டு மகிழ்ச்சி கூர்வர்.

இ-ரை.—மாசிமாதத்து அமாவாசைதினத்தில் மகிழ்ச்சியைத்தருகின்ற சதய நக்ஷத்திரங் கூடினால் அந்தக்காலமானது ஒளிபொருந்திய பிதுர்த்தேவர்களுக்கு மிகுந்த திருத்தியைஉண்டாக்கும். சொல்லப்படுகின்ற அவிட்டநக்ஷத்திரம் சேர்ந்து அப்போதுமகிழ்ந்து செய்கின்ற சிரார்த்தத்தினாலே குற்றமற்ற பிதுர்த்தேவர்கள் பதினாயிரவருஷம் வரையிலும் இன்பமடைவார்கள். எ—று. (கூ)

அத்தகு காலத் தேபூ ரட்டாதி சேரு மாகிற்
சுத்தமா மக்கா லங்கள் சுரர்கட்கு மரிய தாகும்
பத்தியோ டதிற்சி ராத்தம் பகர்தரு விதியிற் செய்யில்
ஒத்திடு பிதுர்க்கள் பற்பல் யுகங்களின் புறுவர் மாதோ.

இ-ரை.—அந்தமேன்மைபொருந்திய அமாவாசைதினத்தில் பூரட்டாதிநக்ஷத்திரம் சேர்ந்ததாகில் தூய்மையாகிய அந்தக்காலமானது தேவர்களுக்குங்கிடைப்பதற்கு அரியகாலமாகும் அந்தக்காலத்தில் ஸ்மிருதிகளிற்சொல்லப்பட்ட விதிப்படி பத்தியுடனே செய்தால் பலபலயுகங்கள்வரையில் பிதுர்த்தேவர்கள் திருப்தியான இன்பத்தையடைவார்கள். எ—று. (கo)

அமாமுதலிய சிரார்த்தங்களுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்-அ௱கூ.

முப்பத்தைந்தாவது

சிரார்த்தபேதங்களுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மின்புரை நுசுப்புச் செவ்வாய் வெண்ணகைக் கருங்க ணல்லார்
வன்புறு மயல்க டீர்ந்து வயங்குசு விரத வேந்தே
அன்புட னியற்ற மாமுன் னாகிய சிரார்த்தஞ் சொற்றும்
இன்புறு சிரார்த்த பேத மினிதெடுத் தியம்பு வாமால்.

இ-ரை.—மின்னலைப்போன்ற விடையையும், சிவந்தவாயையும், வெண்மையாகிய பற்களையும், கரியகண்களையுமுடைய மாதர்களிடத்துண்டாகிய வலிபொருந்திய மயக்கங்கள் தீர்ந்துவிளங்கும், சுவிரதமகாராஜனே கேளும். இதுவரையும், விசுவாசத்துடனே செய்யப்படுகின்ற, அமாவாசைமுதலாகிய ஷண்ணவதி சிரார்த்தங்களைச் சொன்னோம். இனி இன்பமுறுதற்கேதுவாகிய சிரார்த்தபேதங்களைச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

அருமகப் பிறந்த காலை யணிந்தவத் திரத்தி னோடு
மருவிய நன்னீ ராடி மகிழ்வொடு சாத கன்மம்
ஒருமையி னியற்றி யப்பி யுதயசி ராத்தந் தன்னை
யருமறை விதிவ ழாம லழகுறப் புரிதல் வேண்டும்.

இ-ரை.—அருமையாகிய குழந்தைபிறந்தகாலத்தில், உடுத்தியிருக்கும் ஆடையுடனே நன்மைபொருந்திய ஜலத்தில் ஸ்நானஞ்செய்து, மனமகிழ்ச்சியுடனே ஜாதகன்மக்கிரியையை உறுதியாகச்செய்து, அப்பியோதயசிரார்த்தத்தை, அருமையாகிய வேதவிதிவழுவாமல் அழகுபொருந்தச் செய்யவேண்டும். எ—று. (உ)

புரியுமச் சிரார்த்தந் தன்னிற் பொருவரு தேவர் கட்கும்
பரிவுறு பிதுர்க ளுக்கும் பண்புட னிரட்டை யாக
அரியமா மறைவல் லோரை யன்பொடு முன்றவ ரித்து
வரிசையி னனிபூ சித்து மகிழ்வினுண் பித்தல் வேண்டும்.

இ-ரை.—அப்படிச்செய்யப்படுகின்ற சிரார்த்தத்தில், ஒப்பற்ற தேவர்களுக்கும், அன்புடைய பிதுர்க்களுக்கும், அருமையாகிய வேதநூலாராய்ந்தறிந்த தகுதியான பிராமணர்களை யன்புடனேயிரட்டையாகவே முறைப்படிவரித்து அவர்களைப்பிரதக்ஷண வரிசையாகமிகவும் பூசித்து மகிழ்ச்சியுடனே புசிப்பித்தல் வேண்டும். எ—று.

பூருவ மாக வேனும் புகலுதக் காக வேனும்
நேருற நனியி ருந்து நிலவுறு மிலந்தை யோடு

சேரும்வெண் டயிரா மத்தாற் செய்திடு பிண்டந் தன்னை
யாருநற் றேவ தீர்த்த மல்லது பிரம தீர்த்தம்.

இ-ரை.—சொல்லப்பட்ட கிழக்குமுகமாகவேனும், வடக்குமுக மாகவேனும், நேராகவிருந்துகொண்டு, விளங்காநின்ற இலந்தையோடு கூடினவெள்ளியதயிர், அக்ஷதைகளினாலே செய்தபிண்டங்களை, நன்மைபொருந்திய தேவதீர்த்தத்தினால் அல்லது பிரமதீர்த்தத்தினால். எ—று. (ச)

பகர்தரு மிவற்றி னொன்றாற் பண்புட னளித்தல் வேண்டுந்
திகழுமிச் சிரார்த்தத தானந் தீமுக மாய்வி ளங்கும்
நிகரறு பிதுர்க்க ணங்க ளிகழற வின்ப மேவி
அகமகிழ் வார்க ளென்ன வருமறை யியம்பு மாற்றால்.

இ-ரை.—மேற்சொல்லப்பட்ட விரண்டுதீர்த்தங்களில், ஒன்றினாலே தகுந்தபடி கொடுக்கவேண்டும். விளங்காநின்ற இந்தச்சிரார்த்தத்தினாலே, நாந்தீமுகமாய்ப் பிரகாசிக்கின்ற ஒப்பில்லாத பிதுர்க்கணமானது, மிகவு நன்மைபொருந்திய திருப்தியடைவார்களென்று அரியவேதங்க ளெடுத்துச்சொல்லுகின்ற முறைமையினாலே. எ—று. (ரு)

முறைமையிற் பிறந்த மைந்தன் முகதரி சனகா லத்துங்
கறையற விளங்கு நாம கரணஞ்செய் திடுகா லத்துந்
தறைபுகழ் சவுள காலந் தன்னினுஞ் சீமந் தத்து
மறைநெறிச் சுதன்சு தைக்கு மன்றல்செய் திடுங்கா லத்தும்.

இ-ரை.—கிரமமாகப்பிறந்த புத்திரன் புத்திரிகளுடைய முகதரிசனகாலத்திலும், குற்றமில்லாமல்விளங்காநின்ற நாமகரணஞ்செய்கின்ற காலத்திலும், பூமியிலுள்ளவர்கள் புகழப்படும் சவுளக்கிரியைசெய்கின்ற காலத்திலும், சீமந்தஞ் செய்கின்ற காலத்திலும், வேதவிதிப்படி புத்திரன் புத்திரிகளுக்கு விவாகஞ்செய்கின்ற காலத்திலும். எ—று. (சு)

உற்றிடு மகிழ்ச்சி மீதோங் குறுகிர்கப் பிரவே சத்தும்
மற்றிவ ணுரைத்தி டாது மருவுபல் சுபகா லத்து
நற்றுறை விதிவ ழாது நாந்திசி ரார்த்தந் தன்னை
யற்றமு றாத வன்போ டவசியம் புரிதல் வேண்டும்.

இ-ரை.—பொருந்தியமகிழ்ச்சியதிகரிக்கின்ற கிரகப்பிரவேசகாலத்திலும், இவ்விடத்துச் சொல்லாதொழிந்த மற்றுமுள்ள பலசுபகரும காலங்களிலும், வேதவிதிதவறாமல் நாந்தீசிரார்த்தத்தைக் குற்றமில்லாதவன்புடனே அவசியஞ் செய்யவேண்டும். எ—று. (எ)

ஏற்றமார் விசுவே தேவ ரெழின்மிகு பிதுர்வ ருக்கம்
ஆற்றுமா தாவ ருக்க மவிர்மாதா மகர்வ ருக்கம்

சாற்றுமற் றிவைக ளுக்குத் தனித்தனி யிரட்டை யாகப்
போற்றியே வரித்தல் வேண்டும் புகலிவை சுபங்கட் காமே.

இ-ரை.—சொல்லப்பட்ட சுபகருமகாலங்களிற்செய்கின்ற சிரார்த்தத்திற்கு, மேன்மைபொருந்திய விசுவேதேவர், அழகுமிகுந்த பிதுர்வருக்கம், துன்பமில்லாதமாதாவருக்கம், விளங்காநின்ற மாதாமகர்வருக்கம், என்றுசொல்லப்பட்ட விவைகளுக்குத் தனித்தனியிரட்டையாகவே பிராமணரை வணங்கிவரித்தல்வேண்டும். எ—று. (அ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இறந்தவ ருடலை யுதகமா திகளா லினிதுநீ ராட்டியின் னறவம்
நிறைந்துபூ மாலை முதலிய வற்றா னிலவுற நனியலங் கரித்துச்
சிறந்தவான் சுருதி விதிப்படி தகனஞ் செய்துபின் னுரியவ ரெல்லாம்
அறந்தவா துடுத்த கலையொடு மூழ்கி யவிர்தரு தென்முக மிருந்து.

இ-ரை.—இறந்துபோனவருடைய தேகத்தைத் தண்ணீர் முதலானவைகளினாலே ஸ்நானஞ்செய்வித்து, இனியதேனிறைந்த புஷ்பமாலிகை முதலியவைகளினாலே நன்றாயலங்காரஞ்செய்து, மேலாகச்சிறந்த வேதவிதிப்படி தகனஞ்செய்தபின்பு, பந்துக்களெல்லாரும் தருமநெறிதவறாமலுடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ்செய்து விளங்காநின்ற தெற்குமுகமாயிருந்துகொண்டு. எ—று. (கூ)

சலமிரு கையா லெடுத்திவற் கென்று தருப்பண மாவிடல் வேண்டும்
உலைவறுபசுக்கள் போம்பொழு தேனு முடுக்கடோன் றுறுபொழுதேனும்
நிலவுறு கிரகத் தெய்துபு தரையி னிகழ்த்துபுல் லாதியிற் படுத்தல்
இலகுறு பகற்கா லத்திலோர் தடவை யின்னமு தருந்துதல் வேண்டும்.

இ-ரை.—ஜலத்தை யிரண்டுகைககளினாலேயு மெடுத்துக்கொண்டு, இது, இன்னானுக்கென்று தர்ப்பணமாகவிடல்வேண்டும். பின்பு கெடுதலில்லாதபசுக்கள்போகும்போதேனும், நக்ஷத்திரங்கள்காணப்படும்போதேனும், விளங்காநின்றகிரகத்தினுள்ளே பிரவேசித்துத் தரையிலாவது, புல்முதலானவைகளின்மேலாவது படுத்துக்கொள்ளல் வேண்டும். விளங்காநின்ற பகற்காலத்தில் ஒரேதடவை யினிதாகப்போஜனஞ்செய்தல் வேண்டும். எ—று. (க0)

நித்தியம் பிண்ட மிறந்தவன் றனக்கு நிலத்தினிற் போடுதல் வேண்டும்
அத்தகு தினத்தி லுறவினர் தங்கட் கமுதினி தளித்திடல் வேண்டும்
ஒத்தமுன் றொன்றே ழொன்பதா நாளி னுறுகலை வழங்கியூர்ப் புறத்திற்
சுத்தநீ ராடி யெள்ளுடன் றண்ணீர் சுருதியி னெறிவிடல் வேண்டும்.

இ-ரை.—இறந்தவனுக்குத் தினந்தோறுந் தரையிலே பிண்டம்போடல் வேண்டும். அந்தத்தினங்களில் பந்துக்களுக்கு இனிதானபோஜனஞ்செய்வித்தல்வேண்டும். பொருந்தியமுதனாள், மூன்றாநாள், எழாநாள், ஒன்பதாநாள், இந்நாட்களில், அழகு பொருந்திய வஸ்திரதானஞ்செய்து, ஊருக்குவெளியில் சுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து, வேதவிதிப்படி யெள்ளுந்தண்ணீரும்விடல்வேண்டும். எ—று. (கக)

தயங்குறு நான்கா நாளினி லத்தி சஞ்சய னஞ்செயல் வேண்டும்
உயங்குமா சூச நாளொரு பதினு மொருவர்பாற் றானமேற் றிடுதல்
முயங்குறு யாகஞ் செயன்மறை பயில்ன் முதலிய வுஞ்செய லாகா
வயங்குமற் றவர்க ளடிசிலைப் பிறர்கள் வாய்மடுத் தருந்துத றிதே.

இ-ரை.—விளங்காநின்ற நான்காந்தினத்தில், அஸ்திசஞ்சயனஞ் செய்யவேண்டும். மனந்தளர்வடைகின்ற தீட்டையுடைய பத்து நாட்களிலும், ஞாதிகளாயுள்ளவர் ஒருவரிடத்தில் தானம் வாங்குதலும், பொருந்திய யாகங்கள் செய்தலும், வேதாத்தியயனஞ் செய்தலும், வேறுகருமங்கள் செய்தலுமாகாது. அவர்களுடைய அன்னமுதலியவற்றை விளங்காநின்ற பிறர்கள் புசித்தலுமாகாது. எ—று. (௧௨)

கருதுமின் னணஞ்சூ தகமிருந் தஃது கழிந்திடுங் கடைசிநா ளதனில்
ஒருமறை யவனை விதியின்வைத் தடிசிலுண்ணச்செய் துண்டபாத்திரத்தில்
அருகினிற் றருப்பை பரப்பிமாய்ந் தவனுக் கன்பொடு நனிபிண்டமிட்டுத்
திருசுறு முதலே கோதிட்ட மாய சிரார்த்தத்தைச் செய்திட வேண்டும்.

இ-ரை.—இவ்வகையாக வெண்ணுகின்ற வாசூசமிருந்து, அவ்வாசூசங் கழியுங் காலமாகிய கடைசி நாளில், ஒரு பிராமணனை விதிப்படி வரித்து போஜனாதிகள் செய்வித்து, அந்தப்பிராமணன் புசித்த பாத்திரத்தின் சமீபத்தில் தருப்பைகளைப் பரப்பி, யிறந்தவனுக்கு மிகுந்த வன்போடு பிண்டம் போட்டு, மாறுபடுதலில்லாத ஆதியேகோத்திஷ்ட சிரார்த்தத்தைச் செய்து முடித்தல் வேண்டும். எ—று. (௧௩)

பின்பியா வர்களு மவரவர் வினைகள் பெற்றியிற் செய்துவாழ்ந் திடலாம்
தென்பொலி கருத்தா மதிதொறு மிறந்த திதியிலே கோதிட்ட விதியால்
அன்பொடு நனிமாசி கஞ்செய வேண்டு மதிலொரு பவித்திரத் துடனே
இன்புற வோரர்க் கியந்தர வேண்டு மெழின்மறை யவருருந் தியபின்

இ-ரை.—அதன்பின்பு யாவர்களும், தங்கள் தங்கள் வருணங்களுக்குரிய வைதீக கருமங்களையும், ஜீவனத்திற்குரிய கருமங்களையும் பெருமையுடனே செய்து வாழலாம். அழகிய கர்த்தாவானவன் மாதந்தோறு மிறந்த திதிகளிலே, ஏகோத்திஷ்ட விதியினாலே மிகுந்தவன்போடு மாசிகஞ்செய்து வரவேண்டும். அதில் ஒரு பவித்திரத்தோடு இன்பம் பொருந்த ஒரு அர்க்கியமே கொடுக்கவேண்டும். பிராமணர்கள் புசித்தபின்பு. எ—று. (௧௪)

புகலுமப் பிரேதன் றனக்கொரேபிண்டம்போட்டிடவேண்டுமத்தினத்தில்
இகழ்வுற வேறோர் கருமமுஞ் செயற்றீ தென்னவான் சுருதிக ளியம்பும்
மகிழ்வினிவ் வாறு வற்சர முடிவு வரையிலு மியற்றிய பின்னர்
மிகவுயர் சபிண்டீ கரணமன் போடு விதிவழிச் செய்திட வேண்டும்.

இ-ரை.—சொல்லப்பட்ட அப்பிரேதனுக்கு ஒரே பிண்டம் போடவேண்டும். அந்தத்தினத்தில் இகழ்வடையும்படி வேறொரு காரியங்கள் செய்தால் தீங்குண்டா

குமென்ற மேலான வேதங்கள் சொல்லும். களிப்புடனே யிந்தப்படி வருஷமுடிவு வரைக்கும் எகோத்திஷ்டவிதியால் சிரார்த்தஞ்செய்து, பின்பு மிகமேலாகிய சபிண்டீகரணத்தை யன்போடு விதிப்படி செய்யவேண்டும். எ—று. (கரு)

அன்னவை யாண்டின் முடிவினி லாத லாறுமா தத்தினி லாதல்
பின்னிரண் டான தினத்தினி லாதல் பகருமே கோதிட்ட விதியால்
நன்னிய மத்தோ டாற்றிட வேண்டு நவிலதி னன்குபாத் திரத்தில்
தென்னுறு திலமும் பரிமளப் பொருளுஞ் சேர்ந்திடு நீரினு னிறைத்து

இ-ரை.—அச்சபிண்டீகரணத்தை, வருஷமுடிவிலாகிலும், ஆறுமாதத்திலாகிலும், பன்னிரண்டாந்தினத்திலாகிலும், முன்சொல்லப்பட்ட எகோத்திஷ்ட விதியினாலேயே நல்ல நியமத்துடன் செய்யவேண்டும். அதில் சொல்லப்படுகின்ற நான்குபாத்திரத்தில் அழகிய எள்ளும், வாசனை வஸ்துவுங்கலந்த நீரினாலே நிறைத்து எ—று. (கசு)

பாவுசீர்ப் பிதுரர்க்காக மூன்றர்க்ய பாத்திரங்களும் பிரேதனுக்கு
விரவுமோ ரர்க்ய பாத்திரந் தனையும் விளங்கிடும் படிதனி வைத்து
புரவுநன் குறும்பி ரேதபாத் திரத்திற் பொருந்திய புனலை நான்முறையிற்
காவுதீர் பிதுர்ப்பாத்தி ரங்கண் மூன்றினிலுங் கரிசறக் கலந்திட வேண்டும்

இ-ரை.—கொண்டாடப்பட்ட சிறப்பினையுடைய பிதுர்க்களுக்காக மூன்று அர்க்கிய பாத்திரமும், பிரேதனுக்காக அப்படிப்பட்ட ஒரு அர்க்கியபாத்திரமும், தனித்தனி விளங்கும்படிவைத்து, அழகுடனே காக்கப்படுகின்ற பிரேத பாத்திரத்திலிருக்கின்ற ஜலத்தை, அவரவர் சூத்திர விதிப்படி களங்கமற்ற பிதுர்ப்பாத்திரங்கள் மூன்றிலுங் குற்றந்தீரக் கலக்கவேண்டும். எ—று. (கஎ)

இவ்வருக் கியசம் யோசனஞ் செயலா லியம்புறு மப்பிரே தன்சீர்ப்
பௌவநீ ருலகம் புகல்பிதுர்த் துவத்தைப் பண்புட னன்கினி தடையச்
செவ்விசே ரவனு தியபிதுர்க் களைச்சீர் திகழ் தருபார் வணமுதலாங்
கவ்வைதீர் சிரார்த்த விதியினான் மிக்க களிப்பினர்ச் சித்திட வேண்டும்.

இ-ரை.—இந்தப்படி அர்க்கியசம்யோஜனஞ் செய்வதனாலே, சொல்லப்பட்ட அந்தப்பிரேதன் சிறப்புப்பொருந்திய கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ளவர்கள் கொண்டாடுகின்ற பிதுர்த்துவத்தை நன்மையுடனே அடைய். அழகிய அவன் முதலான பிதுர்க்களை விளங்காநின்ற சிறப்பினையுடைய பார்வணமுதலான கலக்கமற்ற சிரார்த்தவிதிகளினாலே மிகுந்த சந்தோஷத்துடன் அர்ச்சிக்கவேண்டும். எ—று. ( )

புரிந்திடு கருமந் தனக்குரி யவர்கள் புத்திர னெடுபவு த்திரன் சீர்
விரிந்திடு புதல்வன் றன்பவுத் திரனே விளம்புசோ தானவன் றனது
பரிந்தசந் ததிகள் சபிண்டசந் ததிகள் பகருமற் றிவருண்முந் தினவர்
தெரிந்திட விலரேற் பிந்தினோர் முறையே சிறந்தகர்த் தாக்க ளாகுவரே.

இ-ரை.—இறந்தவனுக்குக் கருமஞ்செய்யவேண்டிய கர்த்தாக்களாவோர் புத்திரன், பவுத்திரன், பரந்த புகழையுடைய புத்திரனுடைய பவுத்திரன், சொல்லுகின்ற சகோதரன், அவனுடைய அன்புமிகுந்த சந்ததிகள், சபிண்ட சந்ததிகள், சொல்பவராகிய இவர்களுள் முந்தினவர் காணும்படி இல்லாதபோது பிந்தினவர்கள் முறையே சிறந்த கர்த்தாக்களாவார்கள். எ—று. (௧௯)

வயங்குமிக் கிரியை பூருவ மென்று மத்திம முத்தர மென்றும்
தயங்குமூ விதமாந் தகனமுன் றெண்ணீர் தனைத்தொடு மளவிலுள் ளவை
தியங்குபூ ருவமா மதிதொறு மெழின்மா சிகஞ்செயன் மத்திம மாகும்[கள்
இயங்குறு சபிண்டீ கரணமாற் றியபின் னியற்றுத லுத்தர மாமே.

இ-ரை.—விளங்காநின்ற, இந்தக்கிரியைகளில், பூருவங்களென்றும், மத்திமங்களென்றும், உத்தரங்களென்றும், பிரகாசிக்கின்ற மூன்று விதமாகும். அவற்றுள், தகனமுதற்கொண்டு தண்ணீரைத் தீண்டுமளவிலுள்ளவைகள் மனச்சோர்வைத் தருகின்ற பூருவக்கிரியைகளாகும். மாதந்தோறுஞ் செய்யத்தக்க அழகிய மாசிகங்கள் செய்தல் மத்திமக்கிரியைகளாகும். பிரேதன் பிதுர்க்களிற் கலக்கத்தக்கதான சபிண்டீகரணத்திற்குப் பின்பு செய்யப்படுவதாகிய பிதுர்க்கிரியைகளெல்லாம் உத்தரக்கிரியைகளாகும். எ—று. (௨௦)

தந்தைதா யர்களின் சபிண்டர்கள் வயங்கு தருசமா னோதக ருடனே
முந்துறு மேன்மை பெறுசகாத் தியாயி முதலினோர் பூருவக் கிரியை
சிந்தையன் பொடுசெய் திடலுரித் தாமேற் செப்பிடு முத்தரக் கிரியை
நந்துறுப் புதல்வ னுதியர் தம்மா னன்கினி தாற்றுதன் முறையே.

இ-ரை.—தந்தை தாய்களுடைய சபிண்டர்களாலேயும், விளங்காநின்ற சமானோதகர்களாலேயும், முதன்மையான மேன்மைபொருந்திய சகாத்தியாயி முதலானவர்களினாலேயும், மனமகிழ்ச்சியுடனே பூருவக்கிரியைகள் செய்யத்தகும். அதற்குமேற் சொல்லுகின்ற உத்தரக்கிரியைகளைக், கெடுதலில்லாத புத்திரன் முதலானவர்களாலேயே செவ்வையாகச் செய்யவேண்டியது முறைமையாகும். எ—று. (௨௧)

சிரார்த்தபேதங்களுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், அ௱௪௦.

முப்பத்தாறுவது

சிரார்த்தத்திரவியமுரைத்த வத்தியாயம்.

கலிநிலைத்துறை.

தீத கற்றிய சுவிரத பூபனே சிரார்த்த
பேதந் தன்னையோர் வகையினி துரைத்தன மிறங்குங்
கோதி லாமறை நெறிசெய் சிரார்த்திற் கொள்ளும்
ஏத மற்றிடு திரவி யங்களிற் சிலவிசைப்பாம்.

இ-ரை.—குற்றமற்று விளங்கிய சுவிரதமகாராஜனே கேளும், இதுவரையும் சிரார்த்தபேதங்களை யொருவகையாக நன்மை பொருந்தச் சொன்னோம். இனி விளங்காநின்ற பழுதில்லாத வேதவிதிப்படி செய்யப்படுகின்ற சிரார்த்தத்திற்கு, உபயோகமாகக்கொள்வனவாகிய கெடுதியில்லாத சிற்சில திரவியங்களை யெடுத்துச்சொல்லுவோமென்றார் காளஸ்தி மகாமுநிவர். எ—று. (க)

கடலை நற்பெரும் பயறுகா ராமணி துவரை
அடரும் வெண்கடு கிருவகை யுள்ளி மூலகமேற்
றொட ரரம்பையின் பூவத முருங்கையார் சுரைபீர்க்
கிடர்செய் பூசினி கத்திரி யிவற்றின்காய் தீதே.

இ-ரை.—கடலை, அழகிய பெரும்பயறு, காராமணிப்பயறு, துவரை, பொருந்திய வெண்கடுகு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, மேலோங்கி வளர்கின்ற வாழைப்பூ, அத்திக்காய், முருங்கைக்காய், திரட்சிபொருந்திய சுரைக்காய், பீர்க்கங்காய், துன்பத்தைச்செய்கின்ற பூசினிக்காய், கத்தரிக்காய் இவைகளெல்லாஞ் சிரார்த்தத்திற்கு ஆகாதனவாகும். எ—று. (உ)

கைவ லங்கறந் திட்டபால் கருதெரு மைப்பால்
எவ்வ மற்றவோர் குளம்புள மிருகங்க ளின்பால்
நவ்வி தந்தபா லொட்டகங் கறந்திடு நறும்பால்
செவ்வி யாட்டினிற் கறந்தபா லிவையெலாந் தீதே.

இ-ரை.—கன்றுகளை யூட்டச்செய்து கறவாது, கைவலங்கறந்த பால், மதிக்கப் படுகின்ற எருமையின்பால், துன்பமில்லாத ஒற்றைக்குளம்புள்ள மிருகங்களின் பால், மானின்பால், ஒட்டகத்தின் பால், அழகுபொருந்திய ஆட்டின் பால், இவைகளெல் லாஞ் சிரார்த்தத்திற்கு ஆகாதனவாகும். எ—று. (ரு)

செந்நெ லார்கருஞ் சாமைவெண் சாமைசீ ரியவம்
பன்னு நெல்லரி யுழுந்து கோதுமைசிறு பயறு
மின்னு மஞ்சணற் கடுகுசீ ரகந்தில மிளகோ
டுன்னு சர்க்கரை தேன்குள முரைத்திடு சிகைக்காய்

இ-ரை.—அழகுபொருந்திய செந்நெல்லும், கருஞ்சாமையும், வெண்சாமையும், சிறந்த யவதானியமும், சொல்லுகின்ற நெல்லரிசியும், உழுந்தும், கோதுமையும், சிறுபயறும், விளங்காநின்ற மஞ்சளும், நல்ல கடுகும், நல்ல சீரகமும், எள்ளும், மிளகும், நினைக்கப்படுகின்ற சர்க்கரையும், தேனும், வெல்லமும், சொல்லப்படுகின்ற சிகைக்காயும், சிரார்த்தத்திற்கு உரியனவாகும். எ—று. (சா)

பசுவின் பாலத னெய்தயிர் நல்லெண்ணெய் பாகல்
வசையி லாப்புடல் வழுதுணை யவரைமா வாழை
இசையு றும்பலா வெள்ளரி கக்கரி யிவற்றின்
நசைபொ ருந்திய காய்கள்மாப் பனசநற் கனிகள்.

இ-ரை.—பசுவின் பாலும், பசுவினெய்யும், பசுவின் தயிரும், நல்லெண்ணெயும், பாகற்காயும், குற்றமில்லாத புடலங்காயும், வழுதுணங்காயும், அவரைக்காயும், மாங்காயும், வாழைக்காயும், புகழ்ச்சிபொருந்திய பலாக்காயும், வெள்ளரிக்காயும், கக்கரிக்காயும், விருப்பமிகுந்த மாம்பழமும், நல்ல பலாப்பழமும், சிரார்த்தத்திற்கு உரியனவாகும். எ—று. (ரு)

கதலி யின்றிடு மிலைநறுந் தண்டுதீங் கனிகள்
பதமு றுங்கனி யிஞ்சியோ டெலுமிச்சம் பழங்கள்
உதவு றுங்கரு வேப்பிலை கிழங்குக ளுடனே
இதமி குத்திடு சேம்பினற் கிழங்குதண் டிலைகள்,

இ-ரை.—வாழையிலையும், நல்ல வாழைத்தண்டும், மதுரமாகிய வாழைப்பழமும், ஒப்பில்லாத பக்குவமுடைய இஞ்சியும், எலுமிச்சம் பழமும், உதவியாகிய கருவேப்பிலையும், மிகுந்த நன்மையுடைய சேப்பங்கிழங்கு முதலிய கிழங்குகளும், நல்ல சேப்பந்தண்டுகளும், சேம்பிலைகளும், சிரார்த்தத்திற்கு உரியனவாகும். எ—று. (சு)

பெருகு காரைநன் முன்னையே முசுட்டைசீர்ப் பிரண்டை
தருண மார்செழுங் கீரையக் கீரையின் றண்டு
கருது றும்பிர சாந்திகங் காலசா கத்தோ
டொரு விலாமலை யகத்தியுஞ் சிரார்த்திற் குரித்தாம்.

இ-ரை.—நன்மை மிகுந்த காரையிலையும், முன்னையிலையும், முசுட்டையிலையும், சிறந்த பிரண்டையும், பக்குவமிகுந்த செழுமையுள்ள கீரையும், கீரைத்தண்டுகளும், மதிக்கப்படுகின்ற பிரசாந்திகங்களென்கிற ஒருவகைக் காட்டுத்தானியமும், காலசாகமென்கிற ஒருவகைக்கீரையும், நீங்குதலில்லாத மலையகத்தியும், சிரார்த்தத்திற்கு உரியனவாகும். எ—று. (எ)

சிரார்த்ததிரவியமுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், அ௱சஎ.

முப்பத்தேழாவது

சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரையுரைத்த

வத்தியாயம்.

கலிவிருத்தம்.

மகிழ்வி னாளும் வயங்கு மறைநெறி
திகழ் சிரார்த்த திரவியஞ் சொற்றனம்
புகலு மன்பிற் புரியுஞ்சி ரார்த்தத்தில்
தகவ ரித்திடத் தக்கவ ரைச்சொல்வாம்.

இ-ரை.—கேளுஞ்சுவிரதமகாராஜனே! எந்நாளும் பிரகாசிக்கின்ற வேதவிதிப் படி மகிழ்ந்து செய்யத்தக்க சிரார்த்தத்திற்குரிய விளங்காநின்ற திரவியங்களைச் சொன்னோம். இனி வேதத்திற் சொல்லியபடி அன்புடனே செய்யப்பட்ட சிரார் த்தத்தில், முறைமையாக வரிக்கத்தக்கவர்களைச் சொல்லுவோமென்றார் காளஸ்தி மகாமுனிவர். எ—று. (க)

திருடன் பேடி செவிடன் பதிதனே
குருட னூமையன் குண்டகன் கோளகன்
மருட ருங்கட் குடியன் வைத்தியன்
கருது சார மடந்தையர் காதலன்

இ-ரை.—சிரார்த்தத்தில் வரிக்கத்தகாதவராகிய திருடன், நபுஞ்சகன், செவி டன், குலஞ்சமயமுதலிய வொழுக்கந்தவறினோன், குருடன், ஊமையன், கணவனி ருக்கச் சோரபுருஷனுக்குப் பிறந்தவன், கைம்பெண் வயிற்றிற் பிறந்தவன், மதிமயக் கந்தருகின்ற கட்குடியன், வைத்தியஞ்செய்கிறவன், எண்ணுகின்ற விபசாரியின் கணவன், இவர்களும். எ—று. (உ)

குருந்து ரோகிகொ ழுங்கப்ப லேறினோன்
விருத்தி யாகவி யாபாரஞ் செய்பவன்
பொருத்த மாகப்பு ரோகிதஞ் செய்பவன்
திருத்த மேவுறு சேவகஞ் செய்பவன்.

இ-ரை.—குருத்துரோகியானவன், செழுமையுள்ள கப்பலேறிச் சஞ்சரிப்பவன், வியாபாரமே தொழிலாகச்செய்பவன், தகுதியான கிராமப்புரோகிதஞ்செய்பவன், திருத்தமாகிய சேவகாவிர்த்தி செய்பவன், இவர்களும். எ—று. (ரு)

கொத்து மஞ்சுறு கோயிற் குருக்கள்சூ
ரொத்த சூதை யுகந்தினி தாடுவோன்
மெத்து கூத்தினன் மேலொரு கண்ணினன்
சொத்தைப் பல்லினன் சொத்தை நகத்தினேன்.

இ-ரை.—மிகுந்த அழகுபொருந்திய கோயிற் பூஜைசெய்கிறவன், துன்பத்தை விளைவிக்கின்ற சூதை விரும்பியாடுவோன், மேன்மைபொருந்திய கூத்தாடுகிறவன், ஒற்றைக்கண் குருடாயுள்ளவன், சொத்தைப்பல்லுடையவன், சொத்தை நகமுள்ளவன், இவர்களும். எ—று. (சு)

வேத தூடகன் வீட்டைக் கொளுத்தினேன்
ஏத மார்விட மிட்டவன் பித்துளோன்
காது வோன்கரிக் காலினன் கன்னியா
மாதி னைக்கெடுத் தோன்கண்ட மாலையன்.

இ-ரை.—வேதங்களைத் தூஷிப்பவன், வீட்டைக் கொளுத்தினவன், மரணத் துன்பத்தைத் தருகின்ற விஷமிட்டவன், பயித்தியமுள்ளவன், கொலைசெய்பவன், யானைக்காலன், கன்னியாப்பெண்ணைக் கெடுத்தவன், கண்டமாலை வியாதியுள்ளவன், இவர்களும். எ—று. (எ).

நாய்வ ளர்ப்பவ னற்பரி யொட்டகம்
ஏய பெற்ற மிவைகள் பழக்குவோன்
பாய விட்பொலி பட்சிகள் விற்பவன்
ஆய பாணம்வில் லாதிகள் செய்பவன்.

இ-ரை.—நாய்வளர்த்து விளையாடுபவன், நல்ல குதிரை, ஒட்டகம், விருஷபம், இவைகளைப் பழக்குகிறவன், விசாலமாகிய ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற பறவைகளை விற்கிறவன், கூர்மையாகிய அம்புகள், வில்லுகள் முதலியவற்றைச் செய்பவன், இவர்களும். எ—று. (அ)

கருதுச் சிட்ட கணேசரைப் பூசிப்போன்
பெரிது மூர்களிற் பிட்சை யெடுப்பவன்
மருவு றுந்தில மர்த்தனஞ் செய்பவன்
எருமை யாடுவிற் போனேவல் செய்குவோன்.

இ-ரை.—யாவராலும் மதிக்கப்படுகின்ற உச்சிட்ட கணபதியைப் பூசிப்பவன், மிகவுந்திரிந்து ஊர்கள்தோறும் பிக்ஷையெடுத்துப் பிழைப்பவன், பொருந்திய தில மர்த்தனஞ்செய்பவன், எருமை, ஆடு, இவற்றை விற்று ஜீவிக்கிறவன், ஏவற்றொழில் செய்பவன், இவர்களும். எ—று. (எ)

குட்ட நோயன் கொடுங்குன்ம நோயினன்
கட்ட நல்கு கயரோக முள்ளவன்
வட்டி யாற்பிழைப் போன்மறை யோதிலான்
பட்டர் போற்றவு பாசனம் விட்டவன்.

இ-ரை.—குஷ்டநோயுள்ளவன், துன்பத்தைச்செய்கின்ற குன்மநோயுள்ளவன், மிகுந்த வருத்தத்தைத்தருகின்ற க்ஷயரோகமுள்ளவன், வட்டியினாலேயே பிழைப்பவன், வேதங்களை யோதாதவன், பெரியோர்களாற் புகழ்கின்ற ஔபாசனத்தை விட்டவன் இவர்களும். எ—று. (அ)

உலகி லிவ்வகை யோர்தமை நீக்கியே
குலவு மாமறை கோதற வோதினோர்
தலமு வக்குஞ் சடங்கம றிந்தவர்
அலகில் சீர்பொலி யாரணங் கற்றவர்.

இ-ரை.—உலகத்தில் இப்படிப்பட்டவர்களை யெல்லாம் நீக்குதல் செய்து, யாவராலுங்கொண்டாடப்படுகின்ற பெருமை பொருந்திய வேதங்களைக் குற்றந்தீர அத்தியயனஞ்செய்தவரும், பூமியிலுள்ளவர்கள் மகிழ்கின்ற ஆறங்கங்களையுணர்ந்தவரும், அளவில்லாத சிறப்புடனே விளங்காநின்ற வேதத்தின் ஞானபாகை யறிந்தவரும். எ—று. (கூ)

வேத வங்கங்கண் மேன்மையி னோர்ந்தவர்
வேதந் தின்பொருண் மேதகத் தேர்ந்தவர்
வேதத் துள்ள விழுப்பொருள் சொல்பவர்
வேத நூற்படி மெய்யொழுக் குள்ளவர்.

இ-ரை.—வேத உபாங்கங்களாகிய ஸ்மிருதிகளைப் பெருமையுடனே சேர்ந்தவரும், வேதங்களின் பொருள்களை மேம்பாடுபொருந்த வுணர்ந்தவரும், வேதங்களிலுள்ள மேலான பொருள்களை யெடுத்துரைப்பவரும், வேதங்களிற் கூறியபடி உண்மையான நல்லொழுக்கமுள்ளவரும். எ—று. (ய)

மறையு ணர்ந்தோர் மரபிற் பிறந்தவர்
குறைவி லக்கினி கோத்திரஞ் செய்பவர்
தறைசொன் மாதாபி தாக்களைப் பூசிப்போர்
அறையுந் தூய்மை யடைந்த மறையவர்

இ-ரை.—வேதங்களை அத்தியயனஞ்செய்தவர் வமிசத்திற் பிறந்தவரும், குற்றமில்லாத அக்கினி ஹோத்திரஞ் செய்பவரும், பூமியிலுள்ளவர்கள் புகழ்கின்ற மாதாபிதாக்களைப் பூசிப்பவரும், சொல்லப்படுகின்ற நல்லவமிசத்திற் பிறந்த பரிசுத்தமுள்ளவரும். எ—று. (கக)

பிரம சாரி பிறங்குமா சாரியர்
பிரம மாமணஞ் செய்து பிறந்தவர்
உரவஞ் சாங்கி யுபாசனை செய்பவர்
விரவு சீல மிகுத்த வின்னோர்களும்.

இ-ரை.—பிரமசரியவாச்சிரமமுடையவரும், விளங்காநின்ற ஆசாரியராயுள்ளவரும், பெருமைபொருந்திய பிரமவிவாகஞ்செய்து பிறந்தவரும், மனவெழுச்சியுடனே பஞ்சாக்கினியுபாசனை செய்பவரும், மிகுந்த நல்லொழுக்கம் பொருந்தியவர்களாயுள்ள இவர்களும். எ—று. (கஉ)

தாயைப் பெற்றவர் தாயின்சகோதரர்
தூய வன்னையின் சோதரி புத்திரர்
ஏய சோதரி யின்றகு மைந்தர்கள்
பாய பேரெழிற் பந்தனை புத்திரர்.

இ-ரை.—சிரார்த்த கர்த்தாவின் தாயைப்பெற்றவரும், தாயின் சகோதரரும், பரிசுத்தமான தாயின் சகோதரி புத்திரரும், தகுதிபொருந்திய சகோதரியின் புத்திரரும், பரவிய பேரழகினையுடைய புத்திரியின் புத்திரரும். எ—று. (கந)

மனையின் றாதை மருக னிவர்களும்
இனிய சாவ ரிவர்களுண் மூவரை
நனிவ ணங்கி நலங்கொள் சிரார்த்தத்தில்
தனிவ ரித்திட றுன்முறை யாமரோ.

இ-ரை.—மனைவியைப் பெற்றவரும், மருமகனுமாகிய இவர்களும், சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவராவார்கள். ஒப்பில்லாத இவர்களுள், மூன்றுபேர்களை மிகவும் வணங்கி நன்மைபொருந்திய சிரார்த்தத்தில் வரித்துப்பூசித்தல் முறைமையாகும். எ—று. (கச)

சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரை யுரைத்த

வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், அ௱சுக.

முப்பத்தெட்டாவது

பார்வண சிரார்த்தமுரைத்தவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

அதி புகழ்க்கிர காச்சிர மத்தவ ரடைவில்
துதி சிரார்த்தில் வரித்திடு வோர்களைச் சொற்ரும்
திதி யிலன்பொடு புரிதரு பார்வண சிரார்த்த
விதி யினிற்சில வறிந்தவா விழைந்துரை செய்வாம்.

இ-ரை.—கேளுஞ்சுவிரதமகாராஜனே! இதுவரையும் மிகுந்த புகழையுடைய கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் முறையாகப் புகழ்ந்து சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரைச் சொன்னேம். இனி அன்புடனே திதியிலே செய்யத்தக்க பார்வண சிரார்த்தவிதிகளில், தெரிந்தவரையிற் சிறிது விருப்பத்துடனே சொல்லுவோமென்ருர் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கதிரவ னுதய முன்னிரு மூன்று கடிகையி னளவுள காலம்
முதமுறு பிராதக் காலமா மதன்மேன் மூவிரு கடிகையி னளவும்
இதமிகப் பெருகு சங்கவ கால மிதற்குமே லாறுநா ழிகைகொள்,
பிதிர்தாக் கால மத்தியா னமெனப் பேசுவர் மறையுணர் பெரியோர்.

இ-ரை.—சூரியனுதித்ததுமுதல் ஆறுநாழிகைவரையிலுள்ள காலம், மகிழ்ச்சியைத்தருகின்ற பிராதக்காலமாகும். அதற்குமேல் ஆறுநாழிகைவரையிலுள்ள காலம், இன்பமிகுந்த சங்கவகாலமாகும். அதற்குமேல் தவறுதலில்லாத ஆறுநாழிகைவரையிலுள்ள காலம், மத்தியான காலமாகுமென்று வேதங்களையுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (உ)

புகலுமற் றதன்மேன் மூவிரு கடிகை பொருந்தப ராணமா மதன்மேல்
நிகழிரு மூன்று நாழிகை வரையி னிலவுசா யான்னம தாகும்
பகர்தரு பிராதக் காலமோ டிரவு பரவிரு சந்திக டனிலும்
திகழ்தரு சிரார்த்தஞ் செய்திடிற் பிதுர்க்க டிருத்தியு ருர்கணிட் பலமே.

இ-ரை.—மேற்சொல்லிய மத்தியான காலத்திற்குமேற் பொருந்திய ஆறு நாழிகைவரையிலுள்ள காலம், விளங்காநின்ற சாயன்னகாலமாகும். மேற்சொல்லிய பிராதக்காலத்திலும், இராக்காலத்திலும், இரண்டு சந்தியாகாலங்களிலும், விளங்காநின்ற சிரார்த்தஞ்செய்தால் பிதுர்க்கள் திருப்தியடையார்கள், செய்தவையனைத்தும் நிஷ்பலமாகும். எ—று. (௫)

தேவர்தம் வினையிற் றென்புலத்தோர்க்குச்செய்வினைசிறந்ததேயெனினும்
மேவுமப் பிதுர்க்கள் வினைகளையரக்கர் விரைந்தழித் திடுவர்க ளதனால்
ஆவலின் விசுவே தேவரை முன்னு மதன்பினர்ப் பிதுர்க்களை யதன்பின்
ஓவில்விண் டுவையுமுறைவரித்தன்பினொடு சிரார்த் தஞ்செயல் வேண்டும்

இ-ரை.—தேவர்களைக் குறித்துச்செய்யப்பட்ட காரியங்களிலும், பிதுர்க்களைக் குறித்துச் செய்யப்பட்ட காரியம் பிரதானமாயினும், விருப்பமிகுந்த அந்தப்பிதுர்க்களைக் குறித்துச்செய்யப்பட்ட காரியங்களை, இராக்ஷதர்கள் சீக்கிரத்தில் அழித்துப் போடுவார்கள். ஆதலால் அந்தப் பிதுர்க்களைக் காப்பாற்றுகிறவர்களான விசுவேதேவர்களை ஆசையுடனே முதலில் ஆவாகனஞ் செய்யவேண்டும். அதன்பின்பு பிதுர்க்களையும், அதன்பின்பு கெடுதியில்லாத விஷ்ணுவையும், கிரமமாக வரித்து, அன்புடனே சிரார்த்தஞ் செய்யவேண்டும். எ—று. (௬)

புனிதவா ரணியம் புகழ்திருக் கோயில் புண்ணிய நதிக்கரை பொருப்பு
தனதகஞ் சனசஞ் சாரமி லாத தானமற் றிவைகளி னொன்றின்
முனிவில் கோமயத்தான்மெழுகியவிடத்தின்மொழிதருமுயர்சிரார்த்தத்திற்
கினிமையின் வரித்த வருமறை யவர்க ளின்பினீ ராடிவந் ததற்பின்

இ-ரை.—பரிசுத்தமாகிய ஆரணியங்கள் யாவரும் புகழ்கின்ற திருக்கோயில்கள் புண்ணிய நதிதீரங்கள், மலைகள், தன்னுடைய கிரகம், ஜனசஞ்சாரமில்லாத விடங்கள், இவைகளில் ஒன்றில், வெறுப்பில்லாத பசுவின் சாணத்தால் மெழுகிய விடத்தில், உயர்வாகச்சொல்லப்பட்ட சிரார்த்தத்திற்கு நன்மையாக வரித்த பிராமணர்கள் ஸ்நானஞ்செய்து வந்தபின்பு. எ—று. (௭)

ஆசனஞ் சுரார்க்குக் கீழ்முகம் பிதுர்கட் கவிர்வட முகமுநன் கிட்டுப்
பேசுறு தேவா சனத்திலோ ரிரண்டு தருப்பமும் பிதுர்களா சனத்தில்
மாசின்மு த்தருப்பத்தாற்செய்புக் கினமும்வயங்கவைத்தருமறை யவரைத்
தேசுற விருக்கச் செய்துயர் சுகந்தந் திகழ்தரு புட்பமா திகளால்.

இ-ரை.—தேவர்களுக்குக் கிழக்குமுகமாகவும், பிதுர்க்களுக்கு வடக்குமுகமாகவும், செவ்வையாக ஆசனம்போட்டு, சொல்லப்பட்ட தேவாசனத்தில் இரண்டு தருப்பத்தையும், பிதுராசனத்தில் குற்றமில்லாத மூன்று தருப்பத்தாற் செய்த புக்கினத்தையும் விளங்கப்போட்டு, மேற்சொல்லிய பிராமணர்களை அவ்வாசனங்களில் அழகுடனே யிருக்கச்செய்து மேலாகிய நல்ல சந்தனம், பிரகாசிக்கின்ற புஷ்பமுதலானவைகளால். எ—று. (௮)

முறைவிசு வேதே வப்பிரா மணரை முன்பூ சித்தவர் கரத்தில்
அறைபவித் திரம்வைத் தெள்ளுறு புனலே யருக்கிய மாக்கொடுத் தவர்கள்
நிறையனு மதிபெற் றுறுதழல் வளர்த்தி நிகழ்தரு மக்கினி சோமன்
தறைபுக ழியம னிவர்கட்கு முன்னந் தனித்தனி யாகவன் னத்தால்.

இ-ரை.—விசுவேதேவப்பிராமணர்களைக் கிரமமாக முதலிற் பூசித்து, அவர்களின் வலது கையில் சொல்லப்பட்ட பவித்திரத்தை வைத்து, எள்ளுடன் சேர்ந்த ஜலத்தை அர்க்கியமாகக்கொடுத்து, அவர்களிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு, அவர்களின் முன்பாக மாக்ஷிமைபொருந்திய அக்கினியை வளர்த்து, விளங்காநின்ற அக்கினி, சோமன், புவியோர் புகழ்கின்ற இயமன், இவர்களுக்கு முன்னம் தனித் தனியாக அன்னத்தினாலே. எ—று. (எ)

விதிவழி யோமஞ்செய்தபின்பிதுர்க்கு விளங்குமோ மஞ்செயல்வேண்டும்
இதமுரு பிரம சாரிநன் மனைவி யிலாக்கிர கத்தன்மற் றிவர்கள்
துதிபெரு சிரார்த்தஞ் செய்திடில் வரித்த தூயமா மறையவர் கரத்தில்
அதிபுகழ் பெருகு மன்னத்தை யோம மன்பொடு செய்திடல் வேண்டும்.

இ-ரை.—விதிப்படி ஓமஞ்செய்த பின்பு விளங்காநின்ற பிதுர்க்களுக்கு ஓமஞ் செய்யவேண்டும். இன்பமுடைய பிரமசாரி, நல்ல மனைவி யில்லாத கிரகஸ்தன், இவர்கள் துதிக்கப்பெற்ற சிரார்த்தஞ்செய்தால் வரிக்கப்பட்ட பரிசுத்தமான பெருமை பொருந்திய பிராமணர்கள் கையில் மிகுந்த புகழ்பெருகாநின்ற அன்னத்தை அன்புடனே ஓமஞ்செய்யவேண்டும். எ—று. (அ)

திகழ்சிரார்த் தத்தில் வரித்திடப் பட்ட தேவரும் பிதுரருந் தயவால்
இகலரு முலக மின்பொடு செழிக்க வினிதுகோ ருகலினு லவரை
மகிழ்வுட னுவா கனஞ்செயப் பட்ட மறையவர் செழுங்கரந் தன்னில்
புகழ்பெற வோமம் புரிவதக் கினியிற் புரிவது போலவே யாகும்.

இ-ரை.—விளங்காநின்ற சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட தேவர்களும், பிதுர்க்களும், கிருபையினாலே குற்றமற்ற உலகமானது இன்பத்துடனே செழிக்கவேண்டுமென்று நன்மையாகக் கோருகின்றவர்களாதலினால், அவர்களை மகிழ்ச்சியுடனே ஆவாகனஞ்செய்யப்பட்ட பிராமணர்களது அழகிய கையில், புகழ்ச்சிபொருந்த ஓமஞ் செய்வது, அக்கினியிற் செய்வதுபோலவேயாகும். எ—று. (கூ

அங்கியின் றென்பாற் பிதுர்க்களுக் காக வன்னவோ மந்தனி செய்து
புங்கமார் பிண்டப் பிரதானஞ் செய்யும் பூமியிற் றென்புற நுனிசேர்
துங்கமார்தருப்பைதன்னின்மூன் றிடத்திற் றுகளிலா வெள்ளொடுபுனலைப்
பங்கமி லன்போ டினிதுகைம் மறித்துப் பண்புற விடுத்திடல் வேண்டும்.

இ-ரை.—அக்கினியின் தென்புறத்தில் பிதுர்க்களின்பொருட்டு, ஒப்பில்லாத அன்னவோமஞ்செய்து, மேன்மைபொருந்திய பிண்டப்பிரதானஞ் செய்யும் பூமியில்

தென்புறத்தில் நுனியிருக்கும்படி சேர்த்துவைக்கப்பட்ட வுயர்வாகிய தர்ப்பையின் மூன்றிடத்திற், குற்றமற்ற எள்ளுஞ் சலமும், பழுதில்லாத பேரன்புடனே பிதுர்க்கள் திருப்தியடையும்படி கைம்மறித்துவிடல்வேண்டும். எ—று. (கo)

அந்த வோமஞ்செய் தெஞ்சிய வனத்தை யவிருமுப் பிண்டம தாக்கிச்
சந்தமார் தருநான் செங்கர மறித்துத் தக்கண முகமதா யிருந்து
முந்தெளும்புனலும்விட்டதானத்தின்மொழிபிதுர்க்களைத்திய னஞ்செய்
துந்து றவைத்து மீமிசை யெள்ளோ டுறுபுனல் விட்டிடல் வேண்டும்.

இ-ரை.—பின்பு அந்த வோமஞ்செய்துமிகுந்த அன்னத்தை விளங்காநின்ற மூன்று பிண்டமாகச்செய்து, அழகுபொருந்திய கைம்மறித்துத் தான் தெற்குமுகமாகவிருந்து, முன்பு எள்ளுஞ் ஜலமும் விட்டவிடத்தில், சொல்லப்பட்ட பிதுர்க்களை தியானித்துக்கொண்டு, பிண்டம்வைத்து, உயர்வாகிய அப்பிண்டங்களின்மேல், மறுபடியும் எள்ளுஞ் ஜலமும் விடல்வேண்டும். எ—று. (கக)

இவ்வண மாக நனியவ ரவர்க ளினியசூத் திரவிதிப் படியே
செவ்விதிற் பிண்டம் வைத்தபின் பழகு சேருமப் பிண்டநன் கிருந்த
தவ்வலி லாத பாத்திரந் தனிலுந் தனதுகை யிலுமியைந் திருந்த
எவ்வமி லன்னங் களையரு மறைக ளியம்பிய முறைப்படி யெடுத்து.

இ-ரை.—இந்தப்பிரகாரம் நன்மையுடனே அவரவர்களுக்குரியதான, சூத்திரங்களிற் சொல்லிய விதிப்படி செவ்வையாகப் பிண்டம் வைத்த பின்பு அழகிய அந்தப் பிண்டமிருந்த கெடாத பாத்திரத்திலும், தன் கையிலும் பொருந்தியிருந்த அன்னங்களை, குறறமில்லாத அருமையாகிய வேதங்களிற் சொல்லிய கிரமப்படியெடுத்து எ—று. (கஉ)

தத்தமார் பிதுர்சீர்ப் பிதாமகர் பிரபி தாமகர் தங்களைக் குறித்து
வைத்தமுப் பிண்டங் களினொரு மருங்கின் மகிழ்தரு பிரபிதா மகரின்
பெத்தமார் தந்தை முதலிய மூன்று பிதுர்க்களா கியபுக ழோங்கும்
உத்தம லேப் பாகிக டமக்கன் பொடுநனி போடுதல் வேண்டும்.

இ-ரை.—தங்கள் தங்களுடைய சிறந்த பிதுர், பிதாமஹர், பிரபிதாமஹர்களைக் குறித்து வைக்கப்பட்டிருக்கிற, அந்த மூன்று பிண்டங்களினோர் பக்கத்தில், மகிழ்ச்சியைத்தருகின்ற பிரபிதாமஹரின் சொந்தமாகிய பிதுரர் பிதாமஹர், பிரபிதாமஹர் முதலிய புகழ்மிகுந்த நன்மையுடைய லேபபாகிகளான பிதுர்க்களுக்கு, மிகுந்த அன்புடனே போடவேண்டும். (கங)

மற்றதன் பின்புத் தாமுகந் திருப்பி மகிழ்வினு சமனநன் காற்றிச்
சொற்றபி ராணு யாமநூல் வழியிற் றுரிசற மும்முறை யியற்றி
அற்றமி லாத்தென் முகமதாய் வசந்த மாதிமூ விருரிதுக் களையும்
உற்றிடு பிதுர்க்க டமையுமந் திரத்தி னொடுநமக் கரித்திட வேண்டும்.

இ-ரை.—அதன்பின்பு வடக்குமுகமாகத் திரும்பி, மகிழ்ச்சியுடனே முறையாக ஆசமனஞ்செய்து, ஸ்மிருதிகளிற் சொல்லியபடி மூன்றுதரம் பிராணயாமஞ்செய்து, பின்பு குற்றமற்ற தெற்குமுகமாயிருந்து, வசந்த ருதுமுதலிய ஆறுருதுக்களையும், பெருமை பொருந்திய பிதுர்க்களையும், மந்திரத்துடனே நமஸ்கரிக்க வேண்டும். எ—று. (கச)

முன்பெளோ டறல்விட் டெஞ்சிய புனலை மொழிதருதொன்னையினுடனே
பின்புகைம் மறித்துத் தரையினீர் விழமுப் பிண்டங்க ளைத்தனித் தனியே
அன்பொடு சுற்றி யப்பிண்ட மூன்றி னமுதுதன் னந்தனன மாக
இன்புற வெடுத்துத் தான்றனித் தனிமோந் தினிதுபோட் டிடன்முறை
[யாமே.

இ-ரை.—முன்பு எள்ளுஞ் ஜலமுமாகவிட்டு மிகுந்த ஜலத்தை, சொல்லப்பட்ட தொன்னையுடன் பின்பும் கைம்மறித்தலாக, பூமியில் ஜலம் விழும்படி, மூன்று பிண்டங்களையுந் தனித்தனியே அன்புடனே சுற்றி, அந்த மூன்று பிண்டங்களிலுஞ் சிறிது அன்னமெடுத்து, தான் சுகத்தையடையும்படி தனித்தனி முகந்துபோட்டு விடல் வேண்டும். எ—று. (கரு)

விளங்குமத் தகுபிண் டங்களி னின்று மீட்டுமா மறைபுக னெறியிற்
றுளங்குறச் சிறிது சிறிதினி தெடுத்துத் தூய்மைசேர் பிதுர்ப்பிரா மணர்
களங்கமு றாது புசிக்குங்கா லத்திற் கருதவ ரிலைதனின் முறையே [கள்
வளங்கொளமுன் னம்பு சித்திடு மாறு மகிழ்வொடு வைத்திடல் வேண்டும்.

இ-ரை.—பெருமை பொருந்திய வேதங்களிற் சொல்லிய விதிப்படி, விளங்காநின்ற அந்தப்பிண்டங்களினின்றும், விளக்கமாக மறுபடியும் சிறிது சிறிதெடுத்து, பரிசுத்தமாகிய அந்தப் பிதுர்ப்பிராமணர்கள், களங்கமில்லாது புசிக்குங்காலத்தில், அவர்கள் இலையில் மதிக்கத்தக்க முறையாக, முன்னம் புசிக்கும்படி வளமாக மகிழ்ந்து வைத்தல்வேண்டும். எ—று. (கசா)

ஈன்றவ னிருக்க வன்னைசி ரார்த்த மின்புறச் செயிற்பிதா மகன்மேற்
சான்றபி ரபிதா மகன்பிரப் பிரபி தாமகன் மற்றிவர் தம்மை
ஆன்றலோ டாவா கனஞ்செயல் வேண்டு மல்லது சனகன்ற னத்தில்
ஏன்றவத் தனையும் பிதாமகன் பிரபி தாமக னிவர்கடா னத்தில்.

இ-ரை.—தகப்பனிருக்கும்போது மகிழ்ச்சியுடனே தான் தாயாருக்குச் சிரார்த்தஞ்செய்தால், பெருமை பொருந்திய பிதாமஹர், பிரபிதாமஹர், பிரப்பிரபிதாமஹரென்னுமிவர்களை, அமைதியுடனே ஆவாகனஞ்செய்ய வேண்டும். அல்லது பிதுர்ஸ்தானத்தில் ஜீவித்திருக்கிற தன் தகப்பனையும், பிதாமஹர், பிரபிதாமஹர், இவர்கள் ஸ்தானத்தில். எ—று. (கஎ)

வேதியர் தமையு நன்குற வரித்து விளங்குசி ரார்த்தஞ்செய் திடலாம்
ஓதுமிவ் வாறு செயிற்பிதா மகற்கு மொளிர்தரு பிரபிதா மகற்கும்
மீதுசொ லிரண்டு பிண்டம்வைத் திடுதல் வேண்டுமென் றருமறை புகலும்
சாதலு ருது பிதாமக னிருக்கத் தந்தைமாய்ந் திடப்படு மொருவன்.

இ-ரை.—பிராமணர்களையும் வரித்து, நன்மையுடன் விளங்காநின்ற சிரார்த்தஞ் செய்யலாம். சொல்லப்பட்ட இந்தப்பிரகாரஞ்செய்தால், அப்போது மேற்சொல்லிய பிதாமஹருக்கும், பிரகாசிக்கின்ற பிரபிதாமஹருக்கும், இரண்டு பிண்டம் வைக்க வேண்டுமென்று வேதங்களிற் சொல்லப்படும். ஒருவனுக்குப் பாட்டன் ஜீவனோடிருக்கும்போது தகப்பனிறந்துபோனல். எ—று. (கஅ)

பேசுதா தைக்கும் பிரபிதா மகற்கும் பிரப்பிர பிதாமகன் றனக்கும்
ஆசில்சி ராரத்தஞ் செய்திடல் வேண்டு மல்லது பிதாமகன் றன்னை
ஏசற விளங்கு பிதாமகன் ரூனத் தினும்பிதுர் பிரபிதா மகரின்
மாசிரு னத்தின் மறையவர் தமையும் வரித்துநன் காற்றுதன் முறையே.

இ-ரை.—சொல்லுகின்ற பிதாவுக்கும், பரபிதாமஹருக்கும், பிரப்பிரபிதாமஹருக்கும், குற்றமில்லாத சிரார்த்தஞ் செய்தல் வேண்டும். அல்லது ஜீவனோடிருக்கும் பிதாமஹரை, மாசற விளங்காநின்ற பிதாமஹஸ்தானத்திலும், பிதுர் பிரபிதாமஹரின் அழகிய ஸ்தானத்தில் பிராமணர்களையும், வரித்துச் செவ்வையாக முறைப்படி சிரார்த்தஞ்செய்யவேண்டும். எ—று. (சகூ)

முன்னுரை செய்த பிண்டசே டத்தை முறைபரி மாறிடும் போது
தென்னுற வரித்த மறையவர் கரத்திற் றிலமொடு நீரையும் விட்டு
நன்னய முடனே யவர்தமை நோக்கி நவிறரும் பிதுர்க்களின் பொருட்டுத்
துன்னுறு திருத்தி பெறத்தக தென்று சொலிப்பரி மாறுதல் வேண்டும்.

இ-ரை.—மேற்சொல்லியபடி பிதுர்ப்பிராமணர்களுக்குப் பிண்டசேஷத்தை முறையாகப் பரிமாறும்போது, அழகுபொருந்த வரிக்கப்பட்ட பிராமணர்களின் கையில்? எள்ளுஞ் ஜலமும் விட்டு நன்மையாக அவர்களைப் பார்த்து, சொல்லப்பட்ட பிதுர்க்களின் பொருட்டு மிகுந்த திருப்தியுண்டாகத்தக்கதென்று சொல்லிப் பரிமாறவேண்டியது. எ—று. (உ0)

பின்புறு கருத்தா வன்ன மாதிகளைப் பிரங்கொரு காத்திடை யெடுத்துக்
கொன்பெறு மற்றோர் கரத்தினுன் மூடிக் கொண்டுவந் தருகினி னனிவைத்
தின்புறு வடையா தியபல கார மினியபா யசம்பழங் கிழங்கு
தென்புறு நெய்தேன் றயிர் முதலிய வுந்திக முபபாத்திரந்தன்னில்.

இ-ரை.—அதன்பின்பு பொருந்திய கர்த்தாவானவன், அன்னங் கறி முதலியவைகளை வைத்திருக்கும் பாத்திரத்தைப் பிரகாசிக்கின்ற ஒருகையிலெடுத்துப் பெருமைபொருந்திய மற்றொரு கையால் மூடிக்கொண்டுவந்து பிதுர்க்களை தியானித்து

அந்த பிராமணர்களின் சமீபத்தில் வைத்து, இன்பத்தைத்தருகின்ற வடைமுதலிய பலகாரங்களையும், மதுரமாகிய பாயசம், பழங்கள், கிழங்குகள், பலத்தைத் தருகின்ற நெய், தேன் தயிர் கறிகள் முதலியவைகளையும் விளங்காநின்ற உபபாத்திரத்தில். எ—று. (உக)

ஒன்றினென் றளவளா துமுன்படைத்திட்டோதனந்தன்னையும்படைத்தித்
துன்றுபே ரன்பி னம்மறை யவர்க டெய்த்திட நனியுப சரித்து
நன்றுறு குணங்க டனித்தனி யுரைத்து நவிலுமற் றவர்க்கின திட்டம்
என்றறிந் தவைகள் படைத்துறு திருத்தி யெய்திடப் புசித்தல் வேண்டும்

இ-ரை.—ஒன்றேடொன்று சேராது முந்திப் பரிமாறியபின்பு, அன்னத்தையும் பரிமாறி, மிகுந்தபேரன்புடனே அந்தப் பிராமணர்கள் சாப்பிடும்படி இனிய உபசாரஞ்செய்து, நன்மை பொருந்திய பதார்த்தங்களின் குணங்களைத்தனித்தனி சொல்லி, அந்த பிராமணர்களுக்கு இன்னின்ன பதார்த்தங்களில் பிரிய மென்பதை யறிந்து அவைகளைப் பரிமாறி திருப்தி யுண்டாகும்படி புசிப்பித்தல் வேண்டும். எ—று. (உஉ)

அரித்தையிற் கண்ணீர் விடுத்திடல் சிதறுமடிசிலை மிதித்திட லுள்ளத்
திருத்தியி லாம லடிசிலைத் தூவல் சினந்திடல் பொய்ம்மொழி புகலல்
உரைத்திடு மிவைக ளின்றியே யன்பி னொடுநனி படைத்திடல் வேண்டும்
வரித்திடு மறையோர் குறைபுக லாது மௌனமாப்புசித்திடல் வேண்டும்

இ-ரை.—கிலேசத்துடனே * கண்ணீர் விடுதல், சிந்திய அன்னத்தைக் காலினாலே மிதித்தல், உள்ளன்பில்லாமல் அன்னத்தைத் தூவிப் பரிமாறுதல், கோபித்துக்கொள்ளுதல், பொய்வார்த்தை பேசுதல், சொல்லப்பட்ட இவைகளில்லாமல் அன்புடனே செவ்வையாகப் பரிமாறல் வேண்டும். சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டிருக்கின்ற பிராமணர்கள், குறை சொல்லாமல் மௌனமாகப் புசித்தல் வேண்டும். எ—று. (உ௩)

எழில்பெறு கிரக மெங்கணுந் திலத்தையிரைத்திடல்வேண்டுமந்தணர்கள்
அழகுறப் புசிக்கும் போதுநாய் பன்றி யஞ்சிறைக் குக்குடம் பேடி
இழிஞர்கள் பூத்த மகளிர்சூத் திரரு மினிதுபா ராதுற வேண்டும்
மொழியுமக் கினிகோத் திராதிக டனிலு முறைதப நோக்குத றீதே.

இ-ரை.—சிறப்புப் பொருந்திய வீடுமுழுதும் எள்ளிரைத்தல் வேண்டும், பிராமணர்கள் அழகுடனே புசிக்கும்போது நாய், பன்றி, அழகிய சிறகுகளையுடைய கோழி, பேடியாயுள்ளவர்கள், சண்டாளர், பூப்புடையமகளிர், சூத்திரரும் பாராதிருத்தல் வேண்டும். சொல்லப்பட்ட அக்கினி கோத்திர முதலிய ஓமம், கோதானம்,

* கண்ணீருடன் சிரார்த்தஞ்செய்தால், பிரேதங்களையும் அன்னத்தைக் காலால் மிதித்துக்கொண்டு செய்தால் இராக்ஷதர்களையும், அன்னத்தைத்தூவிப் பரிமாறினால் பாபிகளையும், கோபத்துடன் செய்தால் சத்துருக்களையும், பொய்சொல்லிக்கொண்டு செய்தால் நாய்களையும், அந்த சிரார்த்தபலன் அடைகின்றது.

சுவர்ணதானம், பிராமணசந்தர்ப்பனே, தரிசபௌர்ன மாசமுதலிய தெய்வகாரியம், சிரார்த்தம், இவைகளைமேற் சொல்லிய நாய் முதலியவர்கள் பார்த்தால் பயனில்லாத னவாய்ப்போம். எ—று. (உச)

பொலிவுறு சிரார்த்த மறையவர் புசிக்கும் போதினி லதிதியா மறையோர்
நல்முறு பிரம சாரியு மடையி னன்கவ ரனுமதி பெற்று
நிலவுறு மினிய வுணவளித் திடலா நிகழுமச் சிரார்த்தவந் தணர்கள்
இலகுறப் புசித்த பின்பதார்த் தங்களெ வற்றுஞ்சி றிதுசிறி தெடுத்து.

இ-ரை.—பொலிவினையுடைய சிரார்த்தப் பிராமணர்கள் போஜனஞ் செய்கின்ற காலத்தில், அதிதியாகிய பிராமணன், நன்மையுள்ள பிரமசாரி, இவர்கள் வந்தால், நன்மையுடனே அவர்களனுமதி பெற்றுக்கொண்டு விளங்காநின்ற நல்ல போஜனஞ் செய்விக்கலாம். செய்யப்படுகின்ற சிரார்த்தப் பிராமணர்கள் திருப்தியாகப் புசித்தபின்பு, அவர்களுக்குப் பரிமாறின எல்லாப் பதார்த்தங்களிலும் கொஞ்சங் கொஞ்சமெடுத்து எ—று. (உரு)

கவளவன் னத்திற் சேர்த்தவர்க்கெதிரிற்கவினிலத்துறுதருப்பையின்மேல்
நவின்மனு வொடுவைத் திடல்விதி யதற்கு நலத்தவி கரமெனப் பெயராம்
இவைபுரி வதனாற் றன்குலத் துதித்தோர் யாவர்க்குந் திருத்தியுண் டாகுமக்
குவலயம் புகழவ் வனத்தினை மகிழ்நற்குணமுளோர்க்களித்திடல்வேண்டும்

இ-ரை.—ஒரு கவள அன்னத்திற் சேர்த்து, அவர்களுக்கெதிரில் சொல்லுகின்ற மந்திரத்துடன், அழகிய பூமியில் தருப்பையின்மேல் வைத்தல் வேண்டும். நன்மையையுடைய, அதற்குவிகரமென்று பெயராகும். இவ்வாறு செய்வதனாலே தன்குலத்திற் பிறந்தயாவருக்குந் திருப்தியுண்டாகும். உலகத்தார் புகழாநின்ற அந்த விகரவன்னத்தை யெடுத்து, நற்குணமுள்ளவர்களுக்குச் சந்தோஷமாகப் பகுந்துக் கொடுக்க வேண்டும். எ—று. (உசு)

வரித்தவந் தணர்கள் புசித்திடும் போது மாமறை மிருதிநற் றருமமும்
விரித்தபு ராண மாதியை யன்பு மிகப்படிப் பித்திடல் வேண்டும்
அருத்தியிற் புசித்த மறையவர் புணர்ச்சியாதியையொழித்திடல்வேண்டும்
தெரித்திடு சிரார்த்தம் புரிந்தசே டஞ்சூத் திரர்க்களித் திடின்மிகு தீதே.

இ-ரை.—சிரார்த்தத்தில் வரித்த பிராமணர்கள் புசிக்குங் காலத்தில், பெருமை பொருந்திய வேதங்கள், ஸ்மிருதிகள், நல்லதருமங்களைச் சொல்லுகின்ற புராணமுதலியவைகளை, அன்புண்டாகப் படிப்பித்தல் வேண்டும். ஆசையுடனே அந்தச் சிரார்த்தத்தில் புசித்த பிராமணர்கள், புணர்ச்சி முதலியவைகளைச் செய்யா தொழித்தல் வேண்டும். மேற்சொல்லிய சிரார்த்தஞ்செய்த சேஷத்தைச் சூத்திரர் முதலானவர்களுக்குப் போட்டால் மிகுந்த தீங்குண்டாகும். எ—று. (உஎ)

துன்னுமே காக சிரார்த்தகா ரியத்திற் சுவரித மென்னவுங் கோட்டி
என்னுஞ்சி ரார்த்த முதனிற்சு சுருத மென்றுநாந் தீசிரார்த் தத்தில்

உன்னுசம் பந்த மெனவுநற் றேவ சிரார்த்தி லுருசித மெனவும்
மன்னுறு திருத்திக் காகவிப்பிரதி வசனத்தைப் புகனுதல் வேண்டும்.

இ-ரை.—பொருந்திய ஏகாக சிரார்த்த காரியத்தில் சுவரித மென்றும், கோஷ்டி யென்னுஞ் சிரார்த்தத்தில் சுசுருதமென்றும், எண்ணுகின்ற நாந்தீ சிரார்த்தத்தில் சம்பந்த மென்றும், நன்மையாகிய தேவ சிரார்த்தத்தில் ருசிதமென்றும், நிலைபெற்ற பிரதிவசனத்தை, திருப்திக்காகச் சொல்ல வேண்டும். எ—று. (உஅ)

தென்முக நோக்கி நின்றுறு கருத்தா திகழுமம் மறையவர் தம்மை
நன்முக மாக வணங்கியென் குலத்தி னல்லுதா ரத்துவ மறைகள்
பன்முக யாகஞ் செழும்பல பொருள்கள் பகர்பெரி யோரிடத் தன்பு
மன்மக வாதி சந்ததி யிவைகள் வளர்ந்திட வேண்டுமென் றிரந்து.

இ-ரை.—சிரார்த்த கர்த்தாவானவன் தெற்குமுகமாய் நின்றுகொண்டு, விளங்காநின்ற அந்த் பிராமணர்களை நன்மையுடனே வணங்கி, சுவாமிகளே என்குலத்தில் நல்ல உதாரத்துவமும், வேதங்களை யோதலும், பலவாகிய எக்கியயாகங்களைச் செய்தலும், செழுமையுள்ள பலபொருள்களும், சொல்லுகின்ற பெரியோர்களிடத்தில் அன்பும், நிலைபெற்ற புத்திரர் பௌத்திரர் முதலான சந்ததிகளும், அதிகமாகப் பெருக வேண்டுமென்று பிரார்த்தித்து. எ—று. (உகூ)

போற்றிமுன் வைத்த மூன்றுபிண்டத்தும்பொலியுமம்மறையவரிடத்தும்
சாற்றரு மாவா கனஞ்செய்த பிதுர்க டமைநனி விசர்ச்சனம் பண்ணி
ஏற்றபிண் டங்க ளக்கினி பசுநீ ரிவற்றுளொன் றுக்களித் திடலாம்
ஊற்றமா ரவர்கண் மிச்சிலை யதன்பின் னுறுசுத்தி செய்திடல் வேண்டும்.

இ-ரை.—தோத்திரஞ் செய்து கேட்டபின்பு, முன் வைத்திருக்கின்ற மூன்று பிண்டத்திலும், பிரகாசிக்கின்ற அந்தப் பிராமணர்களிடத்திலும், ஆவாகனஞ் செய்யப்பட்டிருக்கின்ற சொல்லுதற்கரிய பிதுர்க்களை, நன்மையுடனே எதாஸ்தானத்துக்குச் செல்லும்படி பிரார்த்தித்து, மேலான அந்தப் பிண்டங்களை, அக்கினியிலாவது, பசுவுக்காவது, ஜலத்திலாவது, போட்டுவிடலாம். முயற்சியுள்ள சிரார்த்த பிராமணர்கள் புசித்த, உச்சிட்டத்தை யவர்களை யனுப்பிய பின்பு சுத்தி செய்யவேண்டும். எ—று. (௩0)

தனதுகால் கைகள் சுத்திசெய் துறுகர்த் தாதனி யாசம னஞ்செய்
தினமுறு ஞாதி தாய்வழி யுறவோ ரிவர்தமைப் புசித்திடச் செய்து
தினநனி புரியும் வைச்சுவ தேவஞ் செறிந்திடு மதிதிபோ சனங்கள்
மனமுவந் தினிது புரிந்திடல் வேண்டு மற்றிவை யருமறை விதியே.

இ-ரை.—பின்பு கர்த்தாவானவன் தன் கால் கைகளைச் சுத்திசெய்துக்கொண்டு, ஓய்வில்லாத ஆசமனஞ்செய்து, சொந்தமாகிய பங்காளிகள், தாய்வழி யுறவான பந்துக்கள், இவர்களைப் புசிக்கச்செய்து, பிரதிதினமு நன்மையுடனே செய்யப்பட்ட நித்

தியகர்மமான வைசுவ தேவம், பொருந்திய அதிதிபோசனம் இவைகளை வேதவிதிப்படி மனமகிழ்ச்சியுடனே செய்யவேண்டும். எ—று. (௩௧)

செந்நெலி னரிசி திலங்கிழங் குழுந்து தீம்பழம் புனலிவை தம்மால்
நன்னெறி சிரார்த்த மியற்றிடிற் பிதுர்க்கு நவிலொரு மதிவரை திருத்தி
மின்னெழிற் பசுவின் பாறயிர் நெய்யால் விளங்கு சிரார்த்தநன் கியற்றில்
பன்னுமோர் வருடம் வரையினும் பிதுர்க்குப் பகாருந் திருத்தியுண்டாமே

இ-ரை.—செந்நெல்லரிசி, எள்ளு, கிழங்கு, உழுந்து, மதுரமாகிய பழம், ஜலம், இவைகளினுல், நன்மை பொருந்திய வேதவிதிப்படி சிரார்த்தஞ்செய்தால், சொல்லுகின்ற பிதுர்க்களுக்கு, ஒரு மாதம்வரையில் திருப்தியுண்டாகும். விளங்காநின்ற அழகிய பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்நெய், இவைகளால் பிரகாசிக்கின்ற சிரார்த்தஞ் செய்தால், சொல்லுகின்ற பிதுர்க்களுக்கு, ஒரு வருஷம் வரையிலும் சொல்லுதற் கரிய திருப்தியுண்டாகும். எ—று. (௩௨)

பார்வண சிரார்த்தமுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௮௱௩௩.

முப்பத்தொன்பதாவது

மகாளயவிதியுரைத்த வத்தியாயம்.

கலிநிலைத்துறை.

விரவு சீர்பொலி பார்வண சிரார்த்தத்தின் விதியிற்
பரவு நூன்முறை யோர்வகை சிற்சில பகர்ந்தாம்
புரவு மேவிய வில்லறத் துறைகுனர் புரியும்
உரவர் போற்றும காளய விதிசிறி துரைப்பாம்

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! இதுவரையும் யாவரும் கொண்டாடுகின்ற தரும சாஸ்திரமுறைப்படி, சிறப்புப்பொருந்தி விளங்காநின்ற பார்வண சிரார்த்தவிதிகளில், ஒரு வகையாகச் சில சில வெடுத்துச் சொன்னோம், இனி யாவரையுங்காத்தற் குரிய கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் செய்யப்படுகின்ற அறிவுடையோர்களாற் புகழத்தக்க மஹாளயசிரார்த்தவிதிகளிற் சிறிது சொல்லுவா மென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

மருவு பற்பல வளங்களும் பொலிவுறு வருட
இருது விற்றிகழ் கன்னியா மதிக்கிருட் டினத்தில்
திருகு ருதுயர் வுறுதிரை யோதசி திதியிற்
கருது மேன்மைபெற் றிடுமப ராணகாலத்தில்

இ-ரை.—பல பல வள்ப்பங்களும் பொருந்தி விளங்காநின்ற வருஷருதுவில், புரட்டாசி மாசக் கிருஷணபக்ஷத்தில், மாருத மேன்மையை யுடைய திரையோதசி திதியில், பெரியோர்களால் மதிக்கத்தக்க பெருமை பொருந்திய, அபராண காலத்தில். எ—று. (உ)

பிதுர் களுக்குநெய் பாயசந் தேன்பெரு கிவற்றில்
விதியி னன்பொடு மேதகப் புரிசிரார்த் தத்தால்
அதிதி ருத்தியுண் டாகிடு மபராநற் றசமி
திதிபன் னொன்றுபன் னிரண்டமா மற்றிவை சிறந்த

இ-ரை.—மதுரமிகுந்த பாயசம், நெய், தேன், இவைகளுடனே, அவரவர்கள் சூத்திரவிதிப்படி, மேம்பாடு பொருந்திய அன்பினுற் செய்கின்ற சிரார்த்தத்தினுலே, பிதுர்க்களுக்கு அதிக திருப்தியுண்டாகும், கிருஷ்ணபக்ஷத் தசமிதிதி, ஏகாதசி திதி, துவாதசி திதி, அமாவாசை இவைகள் நன்மையைத் தருவனவாகும். எ—று. (௩)

இரட்டை யாகிய திதியினும் பரணிமுன் னிலகும்
இரட்டை நாளினு மகாளய சிரார்த்தஞ்செய் திடுவோர்
புரட்டு ருதவ பீட்டங்கள் பற்பல பொருந்தித்
திரட்டு மேன்மையிற் றிகழுவர் துதியைமுன் சிறந்த

இ-ரை.—துதியைமுதலான சிறப்புப் பொருந்திய இரட்டைத் திதிகளிலும், விளங்காநின்ற பரணி முதலான இரட்டை நக்ஷத்திரங்களிலும், மஹாளயசிரார்த்தஞ் செய்பவர்கள், மாறுபடாத பல பல வான சர்வா பீஷ்டங்களையு மடைந்து, சகலமேன்மைகளுடனே விளங்குவார்கள். எ—று. (௪)

ஒற்றை யாகிய திதியினு மிலைமுன் னுரைக்கும்
ஒற்றை நாளினு மியற்றுவோர் புத்திர ருடனே
குற்ற மற்றசந் ததிகளு முலகெலாங் குலவ
அற்ற மற்றபல் கவ்வியாம் பொருள்களு மடைவர்

இ-ரை.—பிரதமை முதலாகச் சொல்லப்பட்ட ஒற்றைத் திதிகளிலும், அசுவதி முதலான ஒற்றை நக்ஷத்திரங்களிலும், மஹாளய சிரார்த்தஞ் செய்பவர்கள், உலகத்திலுள்ளோர் புகழத்தக்க, குற்றமற்ற புத்திர பவுத்திராதி சந்ததிகளையும், சோர்வில்லாத கல்விப்பொருள்களையும் பெறுவார்கள். எ—று. (௫)

மிக்க வாயசி ரார்த்தங்கள் செய்திட விளங்கு
புக்க கிட்டின பக்கமே யுயர்ந்தது போலத்
தக்க பற்பல நலம்பொலி முற்பக றனிலும்
ஒக்க லார்தரு பிற்பக னன்குயர்ந் தனவே

இ-ரை.—மேலானதாகிய சிரார்த்தங்கள் செய்வதற்கு, விளங்காநின்ற சுக்கிலபக்ஷத்தைப் பார்க்கிலும், தொடங்கத்தக்க கிருஷ்ணபக்ஷமே சிறந்திருப்பதுபோலத், தகுதியான பற்பல நன்மைகளும் பிரகாசிக்கின்ற, முற்பகலைப் பார்க்கிலும், ஒத்திருக்கின்ற பிற்பகலே சிறந்தனவாகும். எ—று. (௬)

எண்மை யின்றுளிர் முப்புரி நூலிட மிட்டும்
வண்மை யிற்பொலி வுறுமெழில் வலக்கர மறித்தும்
ஒண்மை யார்செழுங் கரத்துறு பவித்திரத் துடனும்
தண்மை யோடுஞ்சி ரார்த்தங்கள் புரிந்திடத் தகுமால்

இ-ரை.—எக்காலத்துந் தாழ்வில்லாது பிரகாசிக்கின்ற, உபவீதத்தை யிடப்புறமணிந்து கொண்டும், வளமையுடன் விளங்காநின்ற அழகு பொருந்திய வலது கை

மறித்தும், செழுமையுள்ள வலது கையில் ஒளிபொருந்திய பவித்திரத்துடனும், பிதுர் சிரார்த்தத்தைச் சாந்த குணத்துடனே செய்யவேண்டும். எ—று. (எ)

ஓர்ந்த வேமந்தங் கிரீட்மநல் வருடமென் றுரைக்கும்
சார்ந்த பேரொடு திகழ்கரு மிருதுக்க டம்மில்
ஆர்ந்த பஞ்சாமா வெக்கியத் தின்பின ரதனிற்
சேர்ந்தி டும்பிதுர் சிரார்த்தமன் பொடுசெயல் வேண்டும்

இ-ரை.—பெரியோர்களால் ஆராய்ந்தறிந்த நலமுள்ள ஹேமந்தருது, கிரீஷ்மருது வருஷருதுவென்று சொல்லப்பட்ட, பொருந்திய பெயருடனே விளங்காநின்ற காலங்களில், சுதந்தரமாகச் செய்கின்ற பஞ்சமஹா எக்ஞத்துக்குபின்பு அதிற் சேர்ந்ததான பிதுர் சிரார்த்தத்தை, அன்புடனே செய்ய வேண்டும். எ—று. (அ)

திகழ்சி ரார்த்தவோ மஞ்செய வீட்டழ றீதாம்
தகும ணுட்டியு ளோர்வைதீ காக்கினி தனிலும்
மகிழும் பன்னியி லாரரு மறையவர் கரத்தும்
மிகுசிரத் தையின் விதிவழி யியற்றுதல் வேண்டும்

இ-ரை.—விளங்காநின்ற பிதுர் சிரார்த்தத்தில், ஓமஞ் செய்வதற்கு வீட்டக்கினி தீதாகும், ஆதலால் தகுந்த பத்தினியுள்ள கிரகஸ்தர்கள், வைதீக அக்கினியிலும், மகிழ்ச்சியைத் தருகின்ற பத்தினி யில்லாதவர்கள், பிராமணர்கள் கையிலும், மிகுந்த விசுவாசத்துடனே வரன் முறையாகச் செய்ய வேண்டும். எ—று. (௯)

ஆகி தாக்கினி யுள்ளவர் மதிசிரர்த் தத்தைத்
தாக மார்தரு கிடடினத் தமாவினைத் தவிர
வாகு சேர்தரு மற்றுள திதிகளின் மகிழ்ந்து
பாக மோடுசெய் திடத்தகா தெனமறை பகரும்

இ-ரை—.ஆகிதாக்கினியுள்ள கிரகஸ்தர்கள், மாத சிரார்த்தத்தை, மிகுந்த விருப்பந்தருகின்ற கிருஷ்ணபக்ஷத்தில், அமாவாசை தவிர, அழகுபொருந்திய மற்றத் திதிகளில் மகிழ்சியுடனே பக்குவமாகச் செய்யக் கூடாதென்று ஸ்மிருதிகளிற் சொல்லபடும். எ—று. (௧௦)

இறந்து ளோர்தமக் கியற்றுசி ரார்த்தமத் தியினில்
சிறந்தி யற்றுதன் மரபென வருமறை செப்பும்
குறைந்த செல்வர்க ணீரினுற் பிதுர்க்களைக் குறித்திட்
டறந்த வாதுதர்ப் பணஞ்செயின் மிகுநல மடைவார்

இ-ரை.—இறந்தவர்களுக்குச் செய்யவேண்டிய சிரார்த்தத்தை மாத்திரம் நடுவிலேவருகின்ற, இறந்த திதியில் சிறப்புடனே செய்தல் முறையென்று, அருமையுடைய ஸ்மிருதிகளிற் சொல்லப்படும், சக்தியில்லாதவர்கள் ஸ்நானஞ்செய்து, பிதுர்க்

களைக்குறித்து முறைபிசகாமல் ஜலத்தினாலே, தர்ப்பணஞ் செய்தால் நித்திய சிரார்த்தஞ்செய்த பலனையடைவார்கள். எ—று. (௧௧)

பிதுர்க்க ளைத்திகழ் வசுக்களா கவும்பிதா மகரை
மதியு ருத்திர ராகவும் பிரபிதா மகரைத்
திதிசெய் யாதித்த ராகவு மறைதெரிப் பதனால்
விதியி னம்முறை யேதியா னித்திடல் வேண்டும்

இ-ரை.—பிதுர்க்களை வசுதேவதைகளாகவும், பிதாமஹர்களை, மதிக்கத்தக்க ருத்திரதேவதைகளாகவும், பிரபிதாமஹர்களை, இரக்ஷிக்கின்ற ஆதித்திய தேவதைகளாகவும், வேதங்கள் சொல்லுகின்றபடியால் விதிப்படி இவர்களை, அத்தேவதைகளாகவே தியானிக்க வேண்டும். எ—று. (௧௨)

விகச மென்றுரை சிரார்த்தத்தின் மிளிர்தரு சேடம்
திகழு நல்லமு தெனப்புக லெக்கிய சேடம்
மகிழு மிவ்விரண் டையுங்கிர கந்தனில் வாழ்வோர்
மகவி ருப்பொடு சந்ததம் புசித்திடல் வேண்டும்

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்திலிருந்து வாழ்பவர்கள், விகசமென்று சொல்லப்பட்ட, பெருமையுடைய சிரார்த்தத்தின் சேஷமும் விளங்காநின்ற, அமிர்தமென்று சொல்லப்பட்ட நலமுள்ள, எக்ஞத்தின் சேஷமுமாகிய, இவ்விரண்டையும், மிகுந்த விருப்பத்துடனே மகிழ்ந்து, எப்போதும் புசித்தல்வேண்டும். எ—று. (௧௩)

மருவெ ழிற்பிதுர் பிதாமகர் பிரபிதா மகர்க்கும்
பெருகு மாதுர்பி தாமகி பிரபிதா மகிக்கும்
பொருவ றத்திகழ் தந்தைசோ தரியவள் புதல்வன்
கருது மற்றவ ளுயக னெனுமிவர் களுக்கும்

இ-ரை.—கிரகஸ் தாச்சிரமத்தி லிருப்பவர்கள் மஹாளயசிரார்த்தத்தில், அழகு பொருந்தியபிதுர், பிதாமஹர், பிரபிதாமஹருக்கும், அன்புமிகுந்தமாது : பிதாமஹி, பிரபிதாமஹிக்கும், ஒப்பில்லாது விளங்காநின்ற, அத்தை அவள் கணவன். அவள் புதல்வனென்பவருக்கும். எ—று. (௧௪)

அன்னை சோதர னவன்மனை யவன்மக னுக்கும்
துன்னு மன்னைசோ தரியவள் பதியவள் சுதற்கும்
தன்னற் சோதரி யவள்பதி யவள்மகன் றனக்கும்
பன்னி யின்பிதா வவன்மனை பகரவன் சேய்க்கும்

இ-ரை.—அம்மான் அவன் மனைவி அவன் புத்திரனுக்கும், பொருந்திய் தாயின் சகோதரி, அவள் கணவன், அவள் புத்திரனுக்கும், தனது சகோதரி, அவள் கணவன், அவள் புத்திரனுக்கும், சொல்லுகின்ற மனைவியைப்பெற்ற மாமன், அவன் மனைவி, அவன் புத்திரனுக்கும். எ—று. (௧௫)

உரைசெய் யிவ்வெழு வருக்கக்கு மவரவர்க் குரிய
வரைசெய் சூத்திரப் படிமறை யவர்தமை வரித்துப்
புரையு ருதவா வாகனஞ் செய்துபூ சித்து
நிரையி னன்மகா ளயஞ்செய லருமறை நெறியே

இ-ரை.—மேற்ச்சொல்லிய எழு வர்க்கத்துக்கும் தவறுதலில்லாத பிராமணர்களை அவரவர்களுக்குரியதாக வகுத்துள்ள சூத்திரவிதிப்படி வரித்து, ஆவாகனஞ்செய்து பூஜித்து. ஒழுங்குடனே மஹாளய சிரார்த்தஞ் செய்தல், அருமையாகிய வேதசம்மதமாகும். எ—று. (௧௬)

மகாளயவிதியுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்; ௬௱௧.

நாற்பதாவது

உண்ணத்தகாதவையுரைத்தவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

தந்தை யாதியேழ் வருக்கமுந் தலைமகிழ் சிறப்ப
நந்து றாதம காளய விதிசில நவின்றாம்
முந்தை மாமறை மொழிப்படி யுணத்தகாப் பொருளைச்
சிந்தை யார்வமோ டுணர்ந்தவை சிறிதுரை செய்வாம்

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே, இதுவரையும், பிதுர்வர்க்கம் மாதுர்வர்க்கம், அத்தைவர்க்கம், அம்மான்வர்க்கம், தாயின் சகோதரிவர்க்கம், சகோதரிவர்க்கம் மாமன்வர்க்கம், என்றுசொல்லப்பட்ட யேழுவர்க்கங்களு மிகுந்த களிப்படையும்படி, கெடாதமஹாளய விதிகளிற், சிலவற்றைச்சொன்னோம், இனி மனமகிழ்ச்சியுடனே, பழமையாகிய பெருமை பொருந்திய வேதங்களிற் சொல்லியபடி, சாப்பிடத்தகாத பதார்த்தங்களைத் தெரிந்தவரையிற் சிறிது சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர் எ—று. (க)

சுத்த மாகிய வுணவினா லுறுஞ்சித்த சுத்தி
ஒத்த மற்றத னாலுறும் ஞானமோங் கதனால்
பொய்த்த காமமுன் வினையறு மெனப்புகல் வதனால்
மெய்த்த நூல்விலக் கியவெலா மொழித்திடல் வேண்டும்

இ-ரை.—பரிசுத்தமாகிய ஆகாரத்தினாலே, சித்தசுத்தியுண்டாகும், பொருந்திய அந்தச்சித்தசுத்தியினாலே, உண்மை ஞானமுண்டாகும், மேலாகிய அந்த ஞானத்தினாலே ஜனனமரணத்தை விளைவிக்கின்ற, பொய்யாகிய காமமுதலிய வினைத்தொடர்புகள் நீங்குமென்று மெய்யாகிய வேதங்கள் சொல்லு கின்றபடியால், அந்த வேதங்களால் நிஷேதிக்கப்பட்ட பதார்த்தங்களை யெல்லாஞ் சாப்பிடாதொழித்தல் வேண்டும். எ—று. (உ)

ஒரு மூலக மாப்பிசி னிருவகை யுள்ளி
காரு லாம்பனை தெங்குறு கள்ளபின் கஞ்சம்
பாரு றாமழை நீர்கசட் டுப்புரை பசளை
சேரு மீனெய்பிண் ணாக்கிவை யருந்துறீதே

இ-ரை.—ஆராயத்தக்க முள்ளங்கி, மரத்திலுண்டான பிசின், வெங்காயம், உள்ளிப்பூண்டு, கருமை நிறமுள்ளபனைமரத்தி லுண்டாகிய கள், தென்னமரத்திலுண்டாகிய கள், அபின் கஞ்சா பூமி சம்பந்தமில்லாத மழைச்சலம், காய்ச்சுப்பு, சொல்லுகின்றபசளைக்கீரை, மீனிற்பொருந்தியநெய், பிண்ணாக்கு, இவைகளையுண்ணுதல் தீதாகும். எ—று. (௩)

புகலுங் கானுறு வழுதலை யுதும்பரம் பொலிபீர்க்
கிகழ்வெண் கத்தரி திரள்சுரை யெழிற்செழு முருங்கை
பகருங் கோவைகொம் மட்டிதேற் றுவெனப் பாரிற்
றிகழு மற்றிவை களினுறு காய்களுந் தீதே

இ-ரை.—சொல்லப்பட்ட காட்டிலுண்டான வழுதுணைக்காய், அத்திக்காய், பொலிவுள்ள பீர்க்கங்காய், அழகிய செம்முருங்கைக்காய், சொல்லுகின்ற கோவைக்காய், கொம்மட்டிக்காய், தேற்றாங்காய், என்று சொல்லும், பூமியிலேயுண்டாகிய இவைகளையுண்ணுதல் தீதாகும். எ—று. (௪)

கன்றி லாப்பசு சூதகப் பசுகருப் பசுப்பால்
துன்று மொட்டகங் கரம்பரி மானிவை சொரிபால்
ஒன்று மோர்குளம் புளமிரு கங்களி னுறுபால்
தென்றி றற்பொலி யாட்டின்பா லிவையெலாந் தீதே

இ-ரை.—கன்றில்லாதபசுவின்பால், கன்றுபோட்டுப் பத்துநாளாகாத பசுவின்பால், சினையாகிய பசுவின்பால், நெருங்கிய ஒட்டகத்தின்பால், கழுதையின்பால், குதிரையின்பால், மானின்பால், பொருந்தியஒற்றைக் குளம்புள்ள மிருகங்களின்பால், விளங்காநின்ற அழகும் வலியுமுள்ள ஆட்டின்பால், இவைகளையுண்ணுதல் தீதாகும். எ—று. (௫)

மருவ சுத்தபூ மிப்பொருண் முன்னைநாள் வல்சி
கருது குக்குடம் பூனைநாய் கோகிலங் காக்கை
பொருவின் மாசுணங் குரங்குவாய் வைத்திடு பொருள்கள்
பெருகு மற்றிவை யருந்தறீ தெனமறை பேசும்

இ-ரை.—அசுத்தம்பொருந்திய பூமியிலுண்டான பதார்த்தங்கள், முதனாட்சமைத்த அன்னம், நினைக்கின்றகோழி, பூனை, நாய், பல்லி, காக்கை, ஒப்பற்ற பாம்பு, குரங்கு, இவைகள் வாய்வைத்த பொருள்கள், மிகுந்த தோஷமுள்ள இவைகளையுண்ணுதல் தீதாகுமென்று வேதங்கள் சொல்லும். எ—று. (௬)

தேவ ரைக்குறி யாதுசெய் யெள்ளனஞ் செறிந்த
ஆவ லூற்றிடு பாயசம் வடையுந்தீ தாகும்
மேவு நண்பகல் வெண்ணெயு மிரவில்வெண் டயிரும்
ஓவி லாதுண றீதென வருமறை யுரைக்கும்

இ-ரை—பொருந்திய தேவதைகளைக் குறித்துச் செய்யாமல், தன்னிஷ்டத்திற் காகச்செய்த எள்ளன்னம், விருப்பமுள்ளபாயசம், வடை இவைகளையுண்ணுதலும், பகற்காலத்திலே வெண்ணையும் இராக்காலத்தில் வெண்மையுள்ளதயிரும், ஒழியாது ண்ணுதலும், தீதாகுமென்று அரிய வேதங்கள் சொல்லும். எ—று. (எ)

பன்றி செம்மறி யாடுவெள் ளாடுசீர் படுமான்
குன்று றுவெழின் மேதிநன் குயர்பசு குதிரை
வென்றி யைந்துகி ருளமிரு கங்கண்மே விவற்றைக்
கொன்ற ருந்துத றீதென வருமறை கூறும்

இ-ரை.—பன்றி, செம்மறியாடு வெள்யாடு, சிறப்புள்ளமான், குறைவில்லாத அழகினையுடைய எருமை, மேன்மைபொருந்திய நல்ல பசு குதிரை, வெற்றியைத் தருகின்ற ஐந்துநகமுள்ள மிருகங்கள், பொருந்திய இவைகளைக் கொன்று தின்றல், தீதாகுமென்று அரிய வேதங்கள் சொல்லும். எ—று. (அ)

தக்க வாமிர வணமுய லுடும்பு வன்றவளை
புக்க வாமைநீர் முதலைநன் நகுலநாய் பூனை
குக்குடம்புறு நாரைச ராரியூர்க் குருவி
சிக்கு மற்றிவற் றானருந் துதன்மிகு தீதே

இ-ரை.—தகுதியுள்ளனவாகிய ஒட்டகம், முயல், வலிமிகுந்தவுடும்பு, தப்பளை, ஜலத்திலுள்ள ஆமை, நீரிலேவசிக்கின்ற முதலை, நல்ல கீரிப்பிள்ளை, நாய், பூனை, கோழி, புறு, நாரைப்பக்ஷி, சராரிப்பக்ஷி, ஊர்க்குருவி, கிடைக்கத்தக்க இவைகளின் தசைகளையுண்ணுதல் மிகுந்த தீதாகும். எ—று. (௯)

மாசு ணங்கிளி காக்கைநீர்க் காக்கைவல் லூறு
வீசு மென்சிறை யெகினம்விச் சுளிமிளிர் பூவை
காசி லாக்குயில் குரண்டநற் சாரசங் கழுகு
தேசு றுஞ்சிவ லிவற்றினூ னருந்துத றீதே

இ-ரை.—பாம்பு, கிளி, காக்கை, நீர்க்காக்கை, வல்லூறு, வீசுகின்றமிருதுவான சிறைகளையுடைய அன்னம், விச்சுளிப்பறவை, விளங்காநின்ற நாகணவாய்ப்புள், குற்றமில்லாத குயில், கொக்கு, வெண்ணாரைப்பக்ஷி, கழுகு, அழகுபொருந்திய கவுதாரி, இவைகளின் தசைகளையுண்ணுதல் தீதாகும். எ—று. (௧௦)

பாய வான்படர் வலியனன் னேமியம் பறவை
மேய சீர்மரங் கொத்திபற் பலவகை மிருகம்
ஆய பற்பல பறவைகண் மீனின மனைத்தும்
வாய்ம டுத்தருந் துதன்மறை தீதென வழுத்தும்

இ-ரை.—விசாலமான ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற கரிக்குருவி, நலமுள்ள சக்கரவாகப்புள், சிறப்புமிகுந்த மரங்கொத்திப்பறவை, மற்றும் பலபலவகை

மிருகங்கள், மற்றுமுண்டான பலபலபறவைகள், பலபலவான மீன்கள், இவைகளின் தசைகளையுண்ணுதல் தீதாகுமென்று வேதங்கள் சொல்லும். (௧௧)

விளம்பி டப்புளித் திட்டவெண் டயிரதன் வெண்ணெய்
கிளர்ந்தி டும்புன லாற்புளிப் புறுபழங் கிழங்கு
வளங்கொள் புட்பமிவ் விதமகி ழூறுகா யென்னு
முளங்கொண் மற்றிவை யுண்டனன் றெனமறை யுரைக்கும்

இ-ரை.—எடுத்துச்சொல்லும்படிபுளிப்பேறியவெண்டயிர், அதன்வெண்ணெய் விளங்காநின்றநல்லஜலத்தினாலே புளிப்புள்ளபழங்கள், கிழங்குகள் வளம்பொருந்திய புஷ்பங்கள், இவ்விதமாகிய மகிழ்ச்சியைத் தருகின்ற ஊறுகாயென்று சொல்லப்பட்ட மனசுக்குத்திருப்தியாகிய, இவைகளையுண்ணுதல் நன்மையென்று வேதங்கள் சொல்லும். எ—று. (௧௨)

அரிசி மாவுடன் கோதுமை மாவெழி லவணி
பரவு வெண்ணெய்சம் பந்தமா கியபல காரம
எரியி னோமஞ்செய் தெஞ்சிய சேடமற் றிவைகள்
விரவு முன்னைநா ளாயதே னினுமுணல் விதியே

இ-ரை.—பூமியிலுள்ளவர்கள்புகழ்கின்ற, அரிசிமா, கோதுமைமா, வெண்ணெய் சம்பந்தமாகிய பலகாரங்கள், அக்கினியிலே ஓமஞ்செய்து மிகுந்தசேஷங்கள் இவைகளெல்லாம், பழமையாயிருந்தாலும், உண்ணுதல்விதியாகும். எ—று. (௧௩)

தென்பு லத்தவர் தேவர்கட் குரியதாத் திகழும்
மன்பு கழ்ப்பசு பறவைமீ னாதியை மகிழ்வின்
அன்பு மிக்குறக் கொன்றிட றின்றிட லாமென்
றின்பு றுந்தனி மாமறை நனியெடுத் தியம்பும்

இ-ரை.—இன்பத்தைத்தருகின்ற ஒப்பில்லாத பெருமைபொருந்திய, வேதங்களானவை, பிதுர்க்களுக்கும் தேவர்களுக்கும், உரியதாக விளங்காநின்ற நிலைபெற்ற புகழையுடைய, பசுக்கள், பறவைகள், மீன்கள், முதலானவைகளை, மிகுந்தஅன்போடு மகிழ்ந்துகொல்லுதலும் உண்ணுதலு ஆகுமென்று நன்மையாகவெடுத்துச்சொல்லும். எ—று. (௧௪)

பொருந்து மின்னுயி ரொழிந்திடா துய்ந்திடு பொழுதில்
வருந்து மன்னைபி தாவைக்காத் திடலினன் மருந்தில்
திருந்து றுதவா பத்தினிற் றெய்வமா மகத்தில்
அருந்த லாகுமூ னென்னவான் மறையினி தறையும்

இ-ரை.—ஒருவனுக்குப்பொருந்திய இன்பத்தைத்தருகின்ற, உயிர்நீங்கி மரணமுண்டாகாமல், பிழைப்புண்டாக்குங் காலத்திலும், வருத்தப்படுகின்ற மாதாபிதாக்களைக்காப்பாற்றுங் காலத்திலும், நன்மையைத்தருகின்ற மருந்திலும், தெளிவில்லாத

ஆபத்துக்காலத்திலும், தேவதைகளைக் குறித்துச்செய்கின்ற பெருமைபொருந்திய எக்ஞத்திலும், மாமிசங்களை யுண்ணலாகுமென்று, மேலாகிய வேதங்களினிதாக வெடுத்துச் சொல்லும் (௯௫)

உலக மின்புறல் குறித்தரு மறைவழி யுஞற்றும்
குலவு நன்மகந் தனக்குரித் தாகிய கொடிகள்
பொலிவி ருக்கநற் பசுமிரு கந்திகழ் புட்கள்
இஃகு நற்கதி யுறுமென வருமறை யியம்பும்

இ-ரை.—உலகத்திலுள்ளவர்களெல்லாம், இன்பத்தை யடைவதைக்குறித்து, அருமையாகிய வேதவிதிப்படி செய்யப்படுகின்ற, நல்லயாகங்களுக் குரித்தாகக் கொண்டாடப்பட்ட கொடிகள், விளங்காநின்ற மரங்கள், நல்லபசுக்கள், மிருகங்கள் பிரகாசிக்கின்ற பறவைகள், இவைகளெல்லாம், மேலான நற்கதியடையுமென்று, அரிய வேதங்கள் சொல்லும். எ—று. (௯௬)

மன்னு மின்னுயிர் தமைப்பிடித் தார்த்திடா மலுமிக்
கின்னல் செய்திடா மலுங்கொலா மலுமகிழ்ந் திருப்போர்
மின்னு பற்பல சீவருந் துதிசெய்மித் திரராய்த்
துன்னு மாநிலம் புகழ்பல சுகங்களெய் துவரே.

இ-ரை.—பொருந்திய ஜீவர்களைப்பிடிக்காமலும், கட்டாமலும், அவைகளுக்குத் துன்பமிகும்படி செய்யாமலும், அவைகளைக் கொல்லாமலும், மகிழ்ச்சியடைந்து ஜீவகாருண்ணியத்துட னிருப்பவர்கள், விளங்காநின்ற பலபல ஜீவர்களுந் துதிக்கப் பட்ட நேயமுடையவராகிப் பெருமைபொருந்திய உலகமெல்லாம் புகழும்படி பலவாகிய சுகங்களையுமடைவார்கள், எ—று. (௯௭)

உண்ணத்தகாதவையுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௬௱௨௬.

நாற்பத்தொன்றாவது

திரவியசுத்தியுரைத்த வத்தியாயம்.

கலிவிருத்தம்.

விற்பொலி மணித்திரள் வீசு தெண்டிரை
பொற்பொடு சூழ்தரு புவியி லுள்ளவர்
அற்புட னுணத்தகா தவையு ரைத்தனம்
சொற்படு திரவிய சுத்தி கூறுவாம்.

இ-ரை.—கேளும் சுவிரத மகாராஜனே, இதுவரையும், பிரகாசிக்கின்ற ஒளி பொருந்திய முத்துக்கூட்டங்களைக் கரையோரங்களில் வீசுகின்ற, அலைகளையுடைய கடலானது, அழகுடனே சூழப்பெற்றுள்ள பூமியிலுள்ளவர்கள், விசுவாசத்துடனே, உண்ணத்தகாத பதார்த்தங்களைச் சொன்னோம், இனிஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட, பலவிதமான திரவியசுத்தியைச் சொல்லுவோமென்றார் காளஸ்திகமகாமுனிவர் எ—று. (க)

தங்கமொ டிரசிதஞ் சங்கம் பன்மணி
துங்கநன் னீரினாற் சுத்தி யாகிடும்
இங்கிவை யழுக்குசித் திரங்க ளெய்திடில்
புங்கவெண் சாம்பனீர் பொருந்தச் சுத்தியே.

இ-ரை.—தங்கப்பாத்திரம், வெள்ளிப்பாத்திரம், சங்கம், பலவிதரத்தினம் இவைகளைப் பரிசுத்தமான ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். இவைகள், அழுக்கடைந்திருந்தாலும், உயர்ந்த சாம்பலாற்றேய்த்து ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். எ—று. (உ)

மேம்பட விளங்குபொன் வெள்ளிப் பாத்திரம்
ஓம்பழற் காய்ச்சுத லுயர்ந்த சுத்தியாம்
தாம்பிரத் தானனி சமைந்த பாத்திரம்
ஆம்புளி புனலினா லாகுஞ் சுத்தியே.

இ-ரை.—உயர்வாக விளங்காநின்ற, பொன் பாத்திரம், வெள்ளிப் பாத்திரமிவைகள், நெய் முதலிய வழுவழுப்புடையதா யிருந்தால், விரும்புகின்ற அக்கினியிற் காய்ச்சுதலினாலே, உயர்ந்த சுத்தியுண்டாகும். மிகுந்த அழகுடனே பொருந்திய தாம்பிரப் பாத்திரம், நன்மையாகிய புளியினாற்றேய்த்து ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். எ—று. (௫)

பித்தளை வெண்கலம் பிறங்கி வற்றினால்
ஒத்தபாத் திரங்களை யொளிருஞ் சாம்பர்கொண்
டெத்தகை யோர்களு மினிது தேய்த்ததை
அத்தறு புனல்விடுத் தலம்பச் சுத்தியே.

இ-ரை.—பிரகாசிக்கின்ற பித்தளையினாலாகிய பாத்திரம், வெண்கலத்தினாலாகிய பாத்திரம், இவைகளை, எத்தன்மையுடையவரும், விளங்காநின்ற சாம்பலைக் கொண்டு நன்றாகத்தேய்த்து நன்மையுள்ள ஜலத்தைவிட்டுக் கழுவச்சுத்தியுண்டாகும் எ—று. (௬)

பங்கமி லயத்துறு பாத்தி ரத்துடன்
வங்கபாத் திரங்களை வயங்கு சாணத்தால்
மங்குறு மாசற மகிழ்விற் றேய்த்தெழில்
பொங்குநன் னீர்கொடு பூசச் சுத்தியே

இ-ரை.—பழுதில்லாத இரும்பினாலாகிய பாத்திரம், ஈயத்தினாலாகிய பாத்திரம், இவைகளை, விளங்குகின்ற நல்ல சாணத்தினாலே, விளக்கமில்லாமற் பொருந்திய அழுக்கு நீங்கும்படி மகிழ்ச்சியுடனே தேய்த்து, அழகிய நல்லஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். எ—று. (௭)

பறவுகற் பாத்திரம் பலியிற் றேய்த்துசீர்
தருமகப் பாத்திரந் தனைத்து டைத்தொளிர்
பெருமரப் பாத்திரம் பிறங்கச் சீவுபு
மருவுநன் னீர்கொடு மண்ணச் சுத்தியே

இ-ரை.—யாவரும் புகழ்கின்ற கற்பாத்திரத்தைச் சாம்பலினாலே தேய்த்தும், சிறப்புப்பொருந்திய யாகபாத்திரத்தைச் செவ்வையாகக் கையால் துடைத்தும், விளங்குகின்ற பெரியமரப்பாத்திரத்தை பிரகாசிகும்படி சீவியும் நல்ல ஜலத்தினாலே கழுவச்சுத்தியுண்டாகும். எ—று. (௮)

சுருக்கொடு சுருவந்தீச் சுடுவெங் நீர்கொடும்
ஒருக்குர லுலக்கைசீர் யூபத் தம்பமேல்
நெருக்கிய முறமொடு நிலவு பண்டியும்
அருக்குதண் ணீரினா லலம்பச் சுத்தியே.

இ-ரை.—யாகத்துக்கு ஓமஞ்செய்கின்ற சுருக்குஎன்னு நெய்த்துடுப்பையும், சுருவமென்னு நெய்த்துடுப்பையும், வெந்நீரினாலே கழுவச் சுத்தியுண்டாகும், சிறப்புப்பொருந்திய யூபஸ்சம்பத்தையும், தானியங்களைச்சேர்க்கின்ற, உரலையும், உலக்கையையும், நெருக்கமாகப் பின்னிய முறத்தையும், விளங்காநின்ற வண்டிகளையும், ஜலத்தினாலேகழுவச் சுத்தியுண்டாகும். எ—று. (௭)

நிலவுமட் பாத்திர நெருப்பின் மூழ்கலாற்
குலவுறு சுத்தியாங் குருதி கோழையார்
மலசலங் கள்ளிவை படுமட் பாத்திரம்
பொலிதழன் மூழ்கினும் புனித மெய்திடா

இ-ரை.—விளங்காநின்ற மண் பாத்திரத்தை, முழுகும்படியான நெருப்பிலிட்டுச் சூளைபோடுதலினாலே யாவரும் புகழும்படியான சுத்தியுண்டாகும், இரத்தம், கோழை, எச்சில், மலம், மூத்திரம், துர்க்கந்தமுள்ளவைகள், இவைகள் பட்ட மண் பாத்திரம், பிரகாசிக்கின் றநெருப்பிலிட்டுச் சூளைபோடினுஞ் சுத்தமுண்டாகாது. எ—று. (௮)

பொருந்துறை ப்பாத்திரம் பூத்து ளோர்தொடிற்
கருதுமண் டேய்த்ததைக் கழுவச் சுத்தியாம்
பருகுநெய் யெண்ணெயைப் பறவை தொட்டிடல்
இருகுசத் தோர்துளி யெடுக்கச் சுத்தியே

இ-ரை.—பொருந்திய வெண்கலப்பாத்திரத்தை, வீட்டுக்கு விலக்காயுள்ளவர் தொடப்பட்டால், மதிக்கப்படுகின்ற மணணினாற்றேய்த்து, ஜலத்தினாலேகழுவச் சுத்தியுண்டாகும், உண்ணுதற்குரிய, நெய், எண்ணெய், இவைகளைப் பறவைகள் தொடப்பட்டால், இரண்டு தருப்பத்தால், அவைகளில், ஒரு துளியெடுத்தெறிவதனாலே சுத்தியுண்டாகும். எ—று. (௯)

தயிர்குளம் பாலரி தானி யங்களில்
மயர்வறு பறவைவாய் வைக்கி லவ்விடத்
தியல்சிறி தெடுத்தெறிந் தெழிற்ற ருப்பையால்
அயர்வினீர் தெளித்தலி னாகுஞ் சுத்தியே

இ-ரை.—தயிர், வெல்லம், பால், அரிசி, தானியங்கள், இவைகளில், தளர்வில்லாத பறவைகள், வாய்வைக்கப்பட்டால், வாய்வைத்த அவ்விடத்தில், சிறிதுஎடுத்தெறிந்து, அழகிய தருப்பத்தால், குற்றமற்றஜலத்தைத் தெளிப்பதனாலே சுத்தியுண்டாகும். எ—று. (௧௦)

அலங்குமோ ராட்சுமைக் கதிக மாகநன்
கிலங்கரி யாதியை யிழிஞர் தீண்டிடில்
தலங்குல வியபுகழ்த் தருப்பை நீரினாற்
றுலங்குறத் தெளித்தலிற் சுத்தி யாகுமே

இ-ரை.—அசைக்கப்பட்ட ஒரு ஆட்சுமைக்கு, அதிகமாகப் பிரகாசிக்கின்ற நல்ல அரிசி முதலியவைகளைச், சண்டாளர் தொடப்பட்டால், உலகத்தார் துதிக்கின்ற புகழ்ச்சி பொருந்திய தருப்பத்தால் விளங்கும்படி ஜலத்தைத் தெளிப்பதனாலே சுத்தியுண்டாகும். எ—று. (கக)

தூயதண் டுலமொராட் சுமைக்குட் பட்டதை
ஏயசண் டாளரா தியர்க டீண்டிடில்
பாயநன் னீர்கொடு பண்பு றக்கழீஇத்
தோய்தர வுலர்த்தலிற் சுத்தி யெய்துமே

இ-ரை.—ஒரு ஆட்சுமையிற்குறைந்த பரிசுத்தமாகிய அரிசியை, பொருந்திய சண்டாளர் முதலிய இழிஞர்கள் தொடப்பட்டால், பரவிய நல்ல ஜலத்தினாலே பரிசுத்தமுண்டாகக்கழுவி, நீர் சுவரும்படி யுலர்த்தலினாலே சுத்தியுண்டாகும். எ—று. (கஉ)

கிளர்தரு மன்னத்திற் கிருமி கீடங்கள்
ஒளிர்நக மயிருறி லொழித்த னீதியாம்
தளர்வறு பிண்டியிற் சமைத்த பண்டங்கள்
அளிவிலைக் கேற்றிடி லவியிற் சுத்தியே

இ-ரை.—உயர்வுபொருந்திய, அன்னத்தில், புழுக்கள், வண்டுகள், விளங்கா நின்ற நகம், மயிர்கள், இருந்தால், அவ்வன்னத்தை நீக்கிவிடுதலே தருமமாகும். கெடுதியில்லாத மாவினாற் செய்யப்பட்ட பலகாரங்கள், அன்பாகவிலைக்குவாங்கினால் நெய்புரோக்ஷித்தலினாலே சுத்தியுண்டாகும். எ—று. (கரு)

அணிதரு தூசுசண் டாளர் தீண்டிடில்
துணிபுன னனைத்துத்தோய்த் திடலிற் சுத்தியாம்
கணிதரு நவகலை கலிங்க மூட்டையைக்
குணிகுலர் தொடிற்குசோ தகத்திற் சுத்தியே

இ-ரை.—உடுத்திய வஸ்திரத்தைச் சண்டாளர் தொடப்பட்டால், தெளிவான ஜலத்லே நனைத்துத் தோய்த்தலினாலே சுத்தியுண்டாகும், மதிக்கத்தக்க புதுவஸ்திரங்களையும், புதுவஸ்திரமூட்டையையும், இழிந்தகுலத்தார் தொடப்பட்டால், தருப்பத்தாற் றெளிக்கப்படுகின்ற ஜலத்தினாலே சுத்தியுண்டாகும். எ—று. (கசு)

கம்பலஞ் சாலுவை கவின்ற பட்டுகள்
வம்புழ மண்புனன் மருவச் சுத்தியே
அம்பொலி தந்தமா னாதி கொம்புகள்
நம்புவெண் கடுகற னண்ணச் சுத்தியே

இ-ரை.—ஆட்டுமயிரினாலாகிய கம்பளங்கள், சாலுவைகள், அழகியபட்டுகள், இவைகளை நல்ல உழமண்ணிட்டுத் தோய்த்து ஜலத்திலே அலம்புவதனாலே சுத்தி

யுண்டாகும், விளங்காநின்ற அழகுபொருந்திய, யானைத்தந்தம், மான்முதலிய மிருகங்களின் கொம்புகள், விரும்புகின்ற வெண்கடுகுப்பொடியினாற் றேய்த்து ஜலத்தினாலே கழுவச்சுத்தியுண்டாகும். உஎ—று. (கரு)

மாவுரி புலியுரி வயங்கு மானுரி
பாவுபுல் விறகுவை பழங்கி ழங்குகாய்
அரியநற் படுக்கையு மசுத்த மெய்திடிற்
காவறு சலப்புரோக்ஷ கணத்திற் சுத்தியே

இ-ரை.—மரத்தின் றோலினாலாகிய மரவுரியும் புலித்தோலும், மான்றோலும், சொல்லுகின்ற புற்களும், வைக்கோல்களும், பழங்களும், கிழங்குகளும், காய்களும், அருமையாகிய படுக்கையும், அசுத்தப்பட்டால், குற்றமில்லாத ஜலப்புரோக்ஷணத்தினாலே சுத்தியுண்டாகும். எ—று. (கசு)

அகத்தினுக் கிழிஞரா லசுத்த நேரிடில்
மிகத்தனி விளக்குதன் மெழுக லாவினீர்
உகுத்திடல் பசுவொரு நாளு றச்செயல்
வகுத்தமற் றிவைகளான் மருவுஞ் சுத்தியே

இ-ரை.—வீடுமுதலியவற்றிற்கு, சண்டாளர்முதலியவரால், அசுத்தமுண்டாகில் ஒப்பறவிளக்குதல், மெழுகுதல், கோமூத்திரந் தெளித்தல், பசுவை ஒரு நாள் வசிக்கும்படி செய்தலுமாகிய இவைகளாலே மிகுந்த சுத்தியுண்டாகும். எ—று. (கஎ)

இந்திய மலசல மிரத்தம் வேர்வையும்
நந்தலில் கண்செவி நகமி வற்றமுக்
குந்திய சவர்ச்சல முடலிற் பட்டிடில்
அந்தமண் ணீரினா லாகுஞ் சுத்தியே

இ-ரை.—இந்திரியம், மலம், மூத்திரம், இரத்தம், வெயர்வை, கெடாதகண்களிலுண்டாகிய பூளை, செவிகளிலுண்டாகிய குரும்பி, நகங்களிலு தேகங்களிலுமுண்டாகிய அளுக்கு, சவர்த்தண்ணீர் இவைகள் மேலாகிய சரீரத்திற்பட்டால், அழகியமண்ணாற் றேய்த்து, ஜலத்தினாலே கழுவச்சுத்தியுண்டாகும். எ—று. (கஅ)

காத்திலோர் பொருளிருக் கையிற்ச ரீரத்தில்
பரத்தவுச் சிட்டசம் பந்த மெய்திடில்
அருத்தியி னோடுகீ ழுதைவி டாதுறப்
பொருத்தியா சமிக்கவப் பொருளுஞ் சுத்தியே.

இ-ரை.—விசாலமாகிய கையில் யாதாமொரு பொருளை வைத்திருக்கும்போது, தன் சரீரத்தில் உச்சிஷ்டசம்பந்தமுண்டானால், ஆசையுடனே அந்தப் பொருளைக் கீழேவையாமல் வைத்துக்கொண்டு, ஆசமனஞ்செய்தால் அந்தப் பொருளுடன் பரிசுத்தனாகிறான். எ—று. (கக)

தருமரு வருப்பினுற் சத்தி செய்திடில்
பொருவிலா சமனியம் புரியச் சுத்தியாம்
கருதுமங் கையரொடு கலவி செய்திடில்
மருவுநீ ராடுதல் வயங்கு சுத்தியே.

இ-ரை.—பொருந்திய அருவருப்பினுலே வாந்தி செய்தால், ஒப்பில்லாத ஆசமனஞ்செய்வதனுலே, சொல்லுகின்ற சுத்தியுண்டாகும். மதிக்கப்பட்ட மாதருடன் புணர்ச்சிசெய்தால், அழகிய ஜலத்தில் ஸ்நானஞ்செய்தலினுலே பரிசுத்தனுகிறுன். எ—று. (௨௦)

பகர்விலேக் காகவே பரப்பு சீர்ப்பொருள்
அகலிர விக்கதி ரனிலந் தீநிழல்
துகள்புனற் றிவலேயீ துரக தம்பசு
மகிழிவை மேற்படின் மாசு ருதரோ.

இ-ரை.—சொல்லப்படுகின்ற விற்பனேக்காகவே கடையிற் பரப்பப்பட்ட சிறந்த வஸ்துக்கள் எப்போதுஞ் சுத்தமுள்ளனவாகும். விசாலமான சூரியகிரணம், காற்று, நெருப்பு, நிழல், தூளி, ஜலத்திவலே, ஈ, குதிரை, பசு, மகிழ்ச்சியைத் தருகின்ற இவைகள் மேலே படுகிறதினுலே அசுத்தமுண்டாகாது. எ—று. (௨௧)

மஞ்சமா சனங்குசை மகளிர் வாண்முகம்
எஞ்சலில் சிவிகைகன் றினிதி னூட்டியே
விஞ்சுறக் கறந்தபால் விகங்க முண்பழம்
புஞ்சமார் தருமிவை புனித மாமரோ.

இ-ரை.—கட்டில், பீடம், தர்ப்பை, மாதர்களின் ஒளிபொருந்திய முகம், குறைவில்லாத அழகுபொருந்திய பல்லக்கு, இன்பத்துடன் கன்றூட்டச்செய்து மிகுதியாகக் கறந்த பால், பறவைகளுண்ட பழம் திரளாகச்சொல்லப்பட்ட இவைகளெல்லாம் எப்போதுஞ் சுத்தமுள்ளனவாகும். எ—று. (௨௨)

ஆடுகள் பரிகளுக் கான னஞ்சுசி
பீடுறு பசுவுக்குப் புனிதம் பின்புறம்
நாடுறு பெருக்கினன் னதிகள் சுத்தியாம்
பாடில்பூ சுரர்க்கெழிற் பாதஞ் சுத்தியே.

இ-ரை.—ஆடுகளுக்கும், குதிரைகளுக்கும், முகம் சுத்தமுள்ளனவாகும். பெருமைபொருந்திய பசுக்களுக்குப் பின்புறஞ் சுத்தமுள்ளனவாகும். விரும்புகின்ற நல்ல நதிகள் பெருகுவதனுலே சுத்தமுண்டாகும். தீயொழுக்கமில்லாத பிராமணர்களுக்கு அழகிய பாதங்கள் சுத்தமுள்ளனவாகும். எ—று. (௨௩)

கழிமகி ழுற்சவ காலந் தன்னினும்
செழியநற் றீர்த்தயாத் திரையி னும்புகல்
பழியுறு கின்றவ பாய காலத்தும்
இழிஞர்மேற் படுகினு மிலையசுத்தமே.

இ-ரை.—மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்ற திருவிழாக் காலங்களிலும், செழுப்பமுள்ள நல்ல தீர்த்தயாத்திரைகளிலும், சொல்லப்பட்ட பழியுண்டாகின்ற ஆபத்துக்காலங்களிலும், சண்டாளர்கள் மேலேபடுவதனாலே அசுத்தமுண்டாகாது. எ—று.

திரவியசுத்தியுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௩௱௫௦.

நாற்பத்திரண்டாவது

சூதகாசௌசமுரைத்த வத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னு மெழிலார் பற்பதிர வியசுத் தியையின் புறநவின்றும்
துன்னு மொலியிற் பொலிதரங்கஞ் சுருட்டு நெடிய கடலுலகந்
தன்னின் மேய மாந்தர்கட்குச் சாற்று சூத காசௌசம்
மன்னு மறைநூல் வழியுணர்ந்த வாறு சிறிது வகுத்துரைப்பாம்.

இ-ரை.—கேளுஞ் சுவிரதமகாராஜனே! இதுவரையும் நெருங்கிய முழக்கத்துடனே விளங்கும் அலைகளானது சுருட்டுகின்ற நெடியகடல்சூழ்ந்த உலகத்திற், பொருந்திய மனிதர்களுக்குப் பிரகாசிக்கின்ற அழகுபொருந்திய பல பலவான திரவியங்களின் சுத்திகளைச் சுகமுண்டாகும்படி சொன்னோம். இனிச்சொல்லப்படுகின்ற நிலைபெற்ற வேதங்களின் முறையாகத் தெரிந்தபடியே, சிறிது பிறப்பின் தீட்டுகளையும், இறப்பின் தீட்டுகளையும், வகுத்துச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

ஞானந் தவமண் புனல்செழுந்தீ நல்லூ ணுலவை யிருளிரிக்கும்
பானு மகமா தியகருமம் பண்பிற் பெருக்க னனிமெழுகல்
வானும் பரவு மவிசுமன மருவு தீட்டிற் குரைத்திடுநாள்
ஆன விவைகண் மாந்தர்தமக் கறையுந் தூய்மை யளித்திடுமே.

இ-ரை.—மனிதர்களுக்கு ஞானம், தவம், மண், ஜலம், செழுமையுள்ள நெருப்பு, நல்ல ஆகாரம், காற்று, இருளை நீக்குகின்ற சூரியன், எக்ஞமுதலிய கருமங்கள், அன்புடனே பெருக்குதல், நன்றாக மெழுகுதல், தேவர்களுங்கொண்டாடுகின்ற ஹவிசு, மனசு, பொருந்திய தீட்டிற்குச் சொல்லியநாள், ஆகிய இவைகளெல்லாம் சொல்லப்படுகின்ற பரிசுத்தத்தைக்கொடுக்கும். எ—று. (உ)

மன்னு மறையோர்க் கொருபதுநாள் வாள்வேந் தருக்குப் பன்னிருநாள்
மின்னு புகழ்சேர் வணிகருக்கு விளம்பு நாளோர் பதினைந்தாம்
பின்ன வருக்கு முப்பதுநாள் பெருகு சூத காசௌசம்
என்ன வுரைப்பார் புகழ்மிருதி யெல்லா முணர்ந்த வல்லவரே.

இ-ரை.—பிறப்பின் தீட்டும், இறப்பின் தீட்டும், நிலைபெற்றவேதத்திற்குரிய பிராமணர்களுக்குப் பத்து நாளும், வாளாயுதத்தையுடைய க்ஷத்திரியருக்குப் பன்னிரண்டு நாளும், விளங்காநின்ற கீர்த்திபொருந்திய வைசியருக்குச் சொல்லுகின்ற பதினைந்து நாளும், சூத்திரருக்கு முப்பது நாளும், என்று சொல்லுவார்கள். மிகுந்த புகழையுடைய ஸ்மிருதிகளையெல்லாம் ஆராய்ந்தறிந்த பெரியோர்கள். எ—று. (௩)

மகிழும் புவியிற் றலைமுறையேழ் வரையி லுளஞா தியர்சபிண்டர்
புகழு மவ்வேழ் தலைமுன்றமேற் பொலிபன் னான்கு தலைமுறையும்
நிகழ்தா யாதர் சோதகர்கள் நிலவவ் வீரேழ் தலைமுறைமேற்
றிகழு மூவேழ் தலைமுறையுஞ் செறிதா யத்தார் சகோத்திரரே.

இ-ரை.—அழகிய பூமியினிடத்து மகிழ்ச்சியுடனே வாழ்கின்ற மனிதர்களுக்குள்தான் முதல் முன்பேழு தலைமுறைவரையிலுள்ள ஞாதியர்கள் சபிண்டரென்றும், புகழ்ந்து சொல்லப்பட்ட அந்த எழு தலைமுறைக்குமேல் பொலிவினையுடைய பதினான்கு தலைமுறைவரையிலுமுள்ள ஞாதியர்கள், சோதகரென்றும், பிரகாசிக்கின்ற அந்தப் பதினான்கு தலைமுறைக்குமேல் விளங்குகின்ற, இருபத்தொரு தலைமுறைவரையிற் பொருந்திய ஞாதியர்கள், சகோத்திரரென்றும், சொல்லப் படுவார்கள். எ—று. (௪)

தீட்டுச பிண்டர்க் கொருபதுநாள் செறிசோ தகர்க்கு மூன்றுதினம்
நாட்டு நானஞ் சகோத்திரர்க்கிந் நாளி லிவர்பூ சனைசந்தி
வாட்டு மோமஞ் சிரவுதசு மார்த்த கரும மறையோதல்
ஊட்ட லிவைசெய் திடலும்வே றொருவர்த் தொடலுந் தீதாமே.

இ-ரை.—பிறப்பிறப்பின் தீட்டுகள், சபிண்டர்களுக்குப் பத்து நாள் வரையிலும், நெருங்கிய சோதகர்களுக்கு மூன்று நாள்வரையிலும் ஸ்தாபிக்கப்படுகின்ற, சகோத்திரர்களுக்கு ஸ்நானஞ் செய்கிறவரையிலும் உண்டாகும். இந்தக் காலங்களில் இவர்கள் தெய்வ பூஜை, சந்தியாவந்தனம், சுவாலிக்கின்ற ஔபாசனாதி, ஓமங்கள், ஸ்ரௌதஸ்மார்த்த கருமங்கள், வேதாத்தியயனம் இவைகளைச் செய்தல், அன்னியர்களை யுண்பித்தல், அன்னியர்களைத் தீண்டுதலுமாகிய இவைகளெல்லாந் தீதாகும். எ—று. (௫)

இரவி யத்த மயத்தின்பின் பிருது சூதகா சவுசம்
காவில் பதினெட் டேமுக்காற் கடிகை யதற்கு ளெய்துமெனில்
விரவு முதனா ளாதிகொளல் வேண்டு மதற்கு மேலாகில்
பரவு மறுநா ளாதிகொளல் பாங்கென் றுரைப்பர் கற்றவரே.

இ-ரை.—சூரியாஸ்தமனத்திற்குப் பின்பு சரியான பதினெட்டே முக்கால் நாழிகைக்குள்ளாக மாதவிடாயாதல், குழந்தை பிறத்தலாதல், இறத்தலாதல், நேரிடுமாகில் அவ்விரவோடு சேர்ந்த முதனாளாதியாகவும், அந்தப் பதினெட்டே முக்கால் நாழிகைக்குமேலாகில், புகழ்கின்ற மறுநாளாதியாகவும், கொள்ள வேண்டியது. முறைமையென்று கற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௬)

எற்ற சபிண்ட ஞாதிகளுக் கிறப்புப் போலப் பிறப்பினுமே
சாற்று தீட்டுண் டாம்பிறப்பிற் றந்தை தாய்க்கு மாத்திரமே
ஆற்று மதிகத் தீட்டாகு மதிலு மீன்று டனக்கதிகந்
தேற்றத் தனுக்குப் பதினொன்றுந் தினத்தி னுனத் துடனீங்கும்

இ-ரை.—தகுதியான சபிண்டஞாதிகளுக்குச் சொல்லப்பட்ட இறப்புத் தீட்டுப்போலப் பிறப்பிலுந் தீட்டுண்டாகும். பிறப்பில்பொருந்திய தாய் தந்தையென்னு மிருவர்க்கு மாத்திரம் அதிகத்தீட்டாகும். அதிலுந் தாய்க்குமாத்திரம் அதிகத்தீட்டுண்டு. தேறுதலுடைய தகப்பனுக்குப் பதினொன்றுந்தினத்தில் ஸ்நானத்துடன் தீட்டு நீங்கும். எ—று. (௭)

ஒருத்தி மகவை யினிதீன்ற வொன்பா னுட்குண் மகவினைவே
றொருத்தி பெற்றான் முன்னுயிர்த்தா ளுறுபத் தாநா ளிருதீட்டும்
மருத்தி யொடுபோம் பத்தாநா ளதனி லொருத்தி மகவீன்றால்
திருத்த மிகுபன் னிரண்டாநா டொரு மிருவர் சூதகமும்

இ-ரை.—சபிண்ட ஞாதிகளுக்குள் இன்பத்துடனே ஒருத்தி குழந்தையைப் பெற்ற நாள்முதல் ஒன்பது நாளைக்குள், வேறு ஒருத்தி குழந்தையைப் பெற்றால், முன்பு பெற்றவளுக்குப் பொருந்திய பத்தாநாளில், அன்புடனே பின்பு பெற்றவள் தீட்டும் போகும். பத்தாவது நாளில் ஒருத்தி குழந்தையைப் பெற்றால், திருத்தமாகிய பன்னிரண்டாநாளில் இருவர் தீட்டும் போகும். எ—று. (௮)

மூன்று மாத மாதியிரு மூன்று மாதம் வரையினனி
மான்ற கருப்பஞ் சிதைவாகின் மதியொன் றுக்கோர் தினமாக
நோன்ற மாத மெத்துணையோ நுவலத் துணைநா ளீன்றாளுக்
கேன்ற தீட்டாந் தகப்பனுக்கோ வியம்பு நான மாத்திரமே

இ-ரை.—மூன்றுமாதமுதல் ஆறுமாதம்வரையில் நன்மையுடனே பொருந்திய கர்ப்பஞ்சேதப்பட்டால் மாதம் ஒன்றக்கு ஒருநாளாக, ஒத்தமாதமெத்தனையோ அத்தனைநாள்வரையில் பெற்றவளுக்குத் தீட்டுண்டென்று சொல்லப்படும். இயல்பாகிய தகப்பனுக்கு ஸ்நானஞ்செய்கிறவரையில் தீட்டுண்டென்று சொல்லப்படும். எ—று.

எழா மதிமுன் பிறந்திடுசேய்க் கீன்ற தாய்தந் தையினுடனே
சூழுஞ் சபிண்ட ஞாதிகட்குச் சொற்சூ தகநா ளொருபத்தாம்
வீழுங் குழந்தை யாணேற்றாய் வெளிப்பட் டதுமுன் னிருபதுநாள்
வாழும் பெண்ணேன் முப்பதுநாள் வரையும் பாண்டந் தொடலாகா

இ-ரை.—எழாவது மாதமுதல் பிறந்த பிள்ளைக்கு, பெற்ற தாய் தகப்பன், சூழ்ந்திருக்கின்ற சபிண்டஞாதிகள், இவர்களுக்குச் சொல்லப்பட்ட பத்து நாள்வரையில் தீட்டாகும். பிறந்த பிள்ளை ஆணாகில், தாய் தீட்டினின்று நீங்கிய நாள்முதல் இருபது நாள்வரையிலும், பிறந்த குழந்தை வாழ்கின்ற பெண்ணாகில், முப்பது நாள் வரையிலும் பாண்டந் தொடலாகாது. எ—று. (௧௦)

பெருகு பெண்ணே லதன்றமையன் பின்னே தான்முன் பின்றந்தை
மருவு மவர்கா தலர்கள்பிதா மகன்மற் றவனற் றுணைவருக்கும்
வெருவி னன்கு தினந்தீட்டாம் வீயி னொருபா னளதன்மேற்
சருவு மதிக்கி ராந்தமிலை தந்தை நீரா டுதல்விதியே

இ-ரை.—பிறந்த குழந்தை, அழகுமிகுந்த பெண்ணுகில், அதன் தமயன், பின்னேதரன், பெரியதகப்பன், சிறியதகப்பன், பொருந்திய அவர்கள் புதல்வர்கள், பாட்டன், அவன் சகோதரர்கள், இவர்களுக்கு நான்குநாள் வரையில், மயக்கமில்லாத தீட்டாகும். அந்தக்குழந்தை யிறந்தால், பத்துநாள் வரையில் தீட்டாகும். அதற்கு மேல் பொருந்திய அதிக்கிராந்தமாகிய தீட்டில்லை. பிதாமாத்திரம் பதினென்றுநாள் ஸ்நானஞ்செய்தல் விதியாகும். எ—று. (௧௧)

பெண்பிதா மனையி லேனும் பெறுமவன் பொருளி னாலே
நண்பின்வே றிடத்தி லேனு நற்கரு வினிது யிர்ப்பிற்
பண்பினத் தாய்தந் தைக்குப் பகருமோர் மூன்று நாளும்
எண்படு சூத கந்தா னெனமிரு திகளி யம்பும்

இ-ரை.—கர்ப்பவதியான பெண், அவள் தகப்பன் வீட்டிலேனும், அவன் பொருளுதவியினாலே, நட்பினையுடைய வேறிடத்திலேனும், நல்ல குழந்தையை இன்பத்துடனே பெற்றால், விசுவாசமுள்ள அந்தப் பெண்ணினுடைய, மாதாபிதாக்களுக்குச் சொல்லப்பட்ட மூன்றுநாள் வரையில் மதிக்கப்படுகின்ற தீட்டுண்டென்று தருமசாஸ்திரங்களிற் சொல்லப்படும். எ—று. (௧௨)

மொழிசகோ தரன்பின் றந்தை முதற்பந்து மனையி லேனும்
விழையவர் பொருளி னாலே வேறிடந் தன்னி லேனுங்
குழவியைத் தாயு யிர்ப்பிற்கூறுமற் றவர்கட் கெல்லாம்
அழகுறு தினமொன் றுஞ்சூ தகமென வறைவர் மிக்கோர்

இ-ரை.—கர்ப்பவதியான பெண், தன்சகோதரன், சிறியதகப்பன் மூதலாகிய பந்துக்கள் வீட்டிலேனும், விரும்புகின்ற அவர்கள் பொருளுதவியினாலே, வேறு இடங்களிலேனும், குழந்தையைப் பெற்றால், சொல்லப்பட்ட அவர்களுக்கெல்லாம், அழகு பொருந்திய ஒரு நாள் தீட்டுண்டென்று சொல்லுவார்கள் மேலோர்கள். எ—று. (௧௩)

பிறந்திடு சேயா ணேனும் பெண்ணெனும் பத்து நாட்குள்
இறந்திடிற் சபிண்டர் த்ரமவ் விருதீட்டும் பத்து நாளில்
துறந்திடு வார்க ளச்சேய் தொலையுமேற் பத்து நாளிற்
சிறந்திடு பிதாவி னுக்குத் திகழிரு தினந்தீட் டாமே

இ-ரை.—பிறந்த குழந்தை, பத்துநாளைக்குள், இறந்தால், அது ஆண்குழந்தை யானாலும், பெண்குழந்தை யானாலும், அக்குழந்தையின் பிறபிறப்பின் தீட்டைச்

சபிண்டஞாதிகள், பத்துநாளில் நிவர்த்திசெய்துகொள்வார்கள். பத்தாநாளில் அந்தக் குழந்தையிறந்தால், சிறந்த தகப்பனுக்குமாத்திரம் அதற்குமேல் விளங்காநின்ற, இரண்டுநாள் தீட்டாகும். எ—று. (௧௪)

அத்தகு பத்தா நாளி லவிருநால் யாம மாதி
ஒத்திடு மிரவி னலாம் யாமத்து ளுயர்கு ழந்தை
செத்திடிற் றகப்ப னுக்குச் செறியுமா சவுச மென்ப
முத்தின மாஞ்ச பிண்டர்க் கிலையொன்று மொழியின் மாதோ

இ-ரை.—தகுதியான அந்தப்பத்தாநாளில், விளங்காநின்ற நான்காவது யாமமுதல், இறவிற் பொருந்திய நான்காவது யாமத்துக்குள், மேலாகிய அந்தக்குழந்தையிறந்தால், தகப்பனுக்கு நெருங்கிய தீட்டு மூன்றுநாளாகுமென்று சொல்லப்படும். சபிண்டஞாதிகளுக்குச் சொல்லுமிடத்தில் தீட்டில்லை. எ—று. (௧௫)

பதினொன்றுந் தினமுன் னகப் பகர்மதி யாறி னுக்குள்
விதிமக விறக்கிற் சேட்டன் மிளிர்பின்னோ தான்றாய் தந்தை
அதிபுக ழிவர்க்கு நாள்பத் தாகுமா சவுசந் தந்தைக்
கிதமிகு சபிண்ட ஞாதிக் கியம்புறு நான மாமே

இ-ரை.—குழந்தை பிறந்த பதினொன்றுநாள் முதல், ஆறுமாதத்துக்குள், மேற்சொல்லிய குழந்தை விதிப்படி யிறந்தால், அந்தக்குழந்தையின் சகோதரன் பின்னோதரன், தாய், தகப்பன், மிகுந்த புகழினையுடைய இவர்களுக்குப் பத்துநாள் வரையில் தீட்டாகும். அந்தக் குழந்தையின் தகப்பனுக்கு மிகுந்த சொந்தமான சபிண்டஞாதிகளுக்குச் சொல்லுகின்ற ஸ்நானமாத்திரமுண்டு. எ—று. (௧௬)

ஏழ்மதி யாதி மாத மிருபத்து நான்கு ளெச்சம்
மாழ்கிடிற் றுணைவன் பின்னோ தான்மகி ழன்னை தந்தை
தாழ்வறு மிவர்த மக்காசவுசநா ளொருபத் தாகுஞ்
சூழ்வுறு சபிண்டர் கட்கா சூசமோர் தினம தாமே

இ-ரை.—ஏழாமாதமுதல், இருபத்துநான்கு மாதத்துக் குள்ளாகக் குழந்தையிறந்தால், அந்தக் குழந்தையின் சகோதரன், பின்னோதரன், மகிழ்கின்ற தாய், தகப்பன், குறைவில்லாத இவர்களுக்குத் தீட்டுப்பத்துநாளாகும். சூழ்ந்திருக்கின்ற சபிண்டஞாதிகளுக்குத் தீட்டு ஒருநாளாகும். எ—று. (௧௭)

வளப்பொலி யிருபத் தைந்தா மதிமுத லாறுண் டிற்குள்
உளங்குலைந் திறந்த சேய்பின் னோதான் றுணைவ னையன்
துளங்குறு தாயின் னோர்க்கா சூசநா ளொருபத் தாகும்
களங்கறு சபிண்டர் கட்குக் கருதுநாண் மூன்ற தாமே

இ-ரை.—வளப்பத்துடனே பிரகாசிக்கின்ற இருபத்தைந்தாமாதமுதல் ஆறுவருஷத்துக்குள், மனங்கலங்கி யிறந்த குழந்தைக்குச் சகோதரன், பின்னோதரன், தாய்

தகப்பன், விளங்காநின்ற இவர்களுக்குத் தீட்டுப் பத்து நாளாகும். குற்றமில்லாத சபிண்டஞாதிகளுக்கு மதிக்கத்தக்க தீட்டு மூன்று நாளாகும். எ—று. (௧௮)

மகிழிரு பத்து நான்கு மதிக்குமுன் குழந்தை வீயில்
அகனிலந் தனிற்பு தைக்க வேண்டுமற் றதுத னக்குத்
தகனமு மில்லை சாற்று தர்ப்பணந் தானு மில்லை
மிகைபடிற் றகனஞ் செய்தல் விதியெனப் புகலு நூலே

இ-ரை.—சந்தோஷிக்கத்தக்க இருபத்துநான்கு மாசத்துக்கு முன், குழந்தை யிறந்தால், இடமகன்ற பூமியிலே புதைக்க வேண்டும். அந்தக் குழந்தைக்குத் தகனமுமில்லை, சஞ்சயனமுமில்லை, தர்ப்பணமுமில்லை, மேற்குறித்த இருபத்துநான்கு மாதத்திற்கு மேற்பட்டிறந்தால், தகனஞ்செய்தல் விதியென்று தருமசாஸ்திரங்களிற் சொல்லும். எ—று. (௧௯)

வரப்பினேழ் சமைமுற் கொண்டு மகிழுப நயன மாகி
யிருப்பினு மவைமற் றில்லா திருப்பினு மரண மெய்தில்
விருப்பினெல் லோர்க்குந் தீட்டு விரிக்கினா ளொருபத் தாகும்
தரப்படி யதிக்கி ராந்தா சவுசமு முண்டா மன்னே

இ-ரை.—வரம்பாகிய எழுவருஷ முதற்கொண்டு, எத்தனை வருஷமானாலும், மகிழ்ச்சியைத் தருகின்ற உபநயனமாகி யிறந்தாலும், உபநயனமாகா திறந்தாலும், விருப்பமிகுந்த சகோதரன், பின்னோதரன், தாய், தகப்பன், முதலிய சபிண்டஞாதிகளுக்குத், தீட்டைச்சொல்லுமிடத்தில் பத்துநாளாகும். கிரமப்படி அதிக்கிராந்தமான தீட்டுமுண்டாகும். எ—று. (௨௦)

இலகுப நயன மில்லா திறந்திடி லன்னை தந்தை
நலமிகு தமயன் பின்னோ தானவி லிவர்க்கே யன்றி
நிலவுறு சபிண்ட தாயத் தார்கட்கு நிகழ்ந்து காலை
தலமகி ழதிக்கி ராந்தா சவுசமே யில்லை மாதோ

இ-ரை.—பிரகாசிக்கின்ற வுபநயன சமஸ்காரமில்லாம லிறந்தவனுக்குத் தாய், தகப்பன், நன்மைபொருந்திய தமயன், பின்னோதரன் என்று சொல்லப்பட்ட இவர்களுக்கேயல்லாமல், விளங்காநின்ற சபிண்டஞாதிகளுக்குச் சொல்லுமிடத்தில், உலகத்தார் மகிழ்கின்ற அதிக்கிராந்த ஆசௌசமேயில்லை. எ—று. (௨௧)

அருமகார் பெண்ணேற் பன்னொன் றுந்தின மாதி யாக
இருபத்து நான்கு மாதத் தின்னுயிர் துறந்து வீயிற்
றருபுகழ்த் தகப்பன் மூன்று தலைமுறை ஞாதி கட்கு
மருவுசீர் நான மென்ன வகுப்பர்கள் மிருதி வல்லோர்

இ-ரை.—அருமையாகப் பிறந்த குழந்தை பெண்ணாகில், பதினொன்று நாள் முதல் இருபத்துநான்கு மாதத்திற்குள், இனிதான வுயிரை விட்டிறந்தால், புகழ்

மிருந்த தகப்பனது மூன்றுதலைமுறைவரையிலுள்ள ஞாதிகளுக்குச் சிறப்புப்பொருந்திய ஸ்நானமாத்திர முண்டென்று, ஸ்மிருதிகளுணர்ந்த வல்லோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௨)

வடிவுசா லிருபத் தைந்தா யாதமுன் வருட மாறின்
முடிவள வரும்பெண் வியின் மொழிதரு பிதாவைச் சார்ந்த
ஒடிவரு சபிண்ட தாயத் தார்களுக் கொருதி னந்தான்
படியினு சவுச மென்னப் பகருவ ரறிவின் மிக்கோர்

இ-ரை.—இருபத்தைந்தா மாதமுதல், ஆறாம்வருஷ முடிவரையில், அழகுபொருந்திய அருமையாகிய பெண்குழந்தை யிறந்தால், சொல்லுகின்ற தகப்பனைச்சேர்ந்த முறிவில்லாத சபிண்ட தாயாதிகளுக்கு, ஒரு நாள் தீட்டென்று, பூமியிலுள்ள அறிவிற் சிறந்தோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௩)

கரைதரு மாண்டே ழாதி கன்னிகா தான காலம்
வரைதபச் சபிண்டர் கட்குவகுத்தமுத் தினந்தீ ட்டாகும்
உரைசெய் மா தாபி தாபின் னோதரன் றுணைவ னுக்குந்
தரைமிசைப் பத்து நாளா சவுசமென் றுரைப்பர் நல்லோர்

இ-ரை.—சொல்லுகின்ற எழு வருஷமுதற்கொண்டு கன்னிகாதான காலத்துக்குளிறந்தால், சபிண்ட ஞாதிகளுக்கு விதிக்கப்பட்ட தீட்டு மூன்றுநாளாகும். சொல்லப்பட்ட தாய், தகப்பன், சகோதரன், பின்னோதரன், இவர்களுக்குத் தீட்டுப் பத்து நாளாகுமென்று பூமியிலுள்ள பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௪)

நிகாறு குரவன் றுஞ்சி னிகழ்த்திய மூன்று நாளும்
பகருமக் குரவன் மைந்தன் பார்மிசை யிறந்திட் டாலும்
புகரிலக் குரவன் பன்னி பொன்றினு மொருநா ளாகுந்
துகளிலா சவுச மென்னச் சொல்லுவர் மிருதி வல்லோர்

இ-ரை.—ஒப்பில்லாத தன்னாசிரியன் இறந்தால், மாணாக்கனுக்குச் சம்பவிப்பதாகிய தீட்டு மூன்று நாளும், சொல்லுகின்ற அவ்வாசிரியன் புத்திரனிறந்தாலும், பூமியிற் குற்றமற்ற அவ்வாசிரியன் மனைவி யிறந்தாலும், தீட்டு ஒரு நாளாகுமென்று பழுதில்லாத ஸ்மிருதிகளெல்லாங் கற்றுணர்ந்த வல்லவர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௫)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விவாகித னொருவன் றனக்குரை யம்மான் விரும்புமற் றவன்மனை யாட்டி
யுவாமதி முகமா தாமகி மாதா மகனுயர் மாதுலன் மாமி
தவாநல மிகுதாய் சோதரி தந்தை சோதரி தனதுசோ தரிநல்
அவாவுப நயன மாகிய மருமா னவிர்தரு தவுத்திரன் றன்பெண்

இ-ரை.—விவாகஞ் செய்துக்கொண்ட கிரகஸ்தனாகிய ஒருவனுக்கு, விருப்ப மிகுந்த தாயுடன் பிறந்த அம்மான், அம்மான் மனைவி, பூரணச்சந்திரனைப்போன்ற முகத்தையுடைய தாயைப்பெற்ற பாட்டி, பாட்டன், பெண்ணைக்கொடுத்த மேன்மையுடைய மாமனார், மாமியார், கெடாத நன்மைமிகுக்த தாயுடன்பிறந்த சிறியதாய், பெரியதாய், தகப்பனுடன் பிறந்த அத்தை, தன்னுடன் பிறந்த தங்கை, தமக்கை, நல்ல அபேக்ஷையுடனே உபநயனஞ் செய்துக்கொண்ட சகோதரி புத்திரனாகிய மருமான், விளங்குகின்ற புத்திரியின் புத்திரனாகிய பேரன், தன் புத்திரி எ—று. (௨௬)

சோதக ஞாதி யுபநய னசமா னோதகன் சொற்றிடு மிவர்கள்
ஏதமார் மரணந் தன்னிலுஞ் சமானோ தகனெழிற் சனனத்தி லேயும்
ஓதுமுத் தினந்தீட் டாகுந்தன் மனைவி யொளிர்தரு சந்ததி யின்றிச்
சாதலுற் றிடிற்றன் மாமனார் மாமி தபுதலிற் றீட்டொரு தினமே

இ-ரை.—தான்முதல் எழு தலைமுறைக்கு முற்பட்ட ஞாதியாயுள்ளவர், உபநயனமாகிய சமானோதகன் என்று சொல்லப்படுகின்ற இவர்கள் துன்பமுள்ள இறப்பிலும், அழகிய சமானோதகனது பிறப்பிலும், மூன்று நாள் தீட்டுண்டென்று சொல்லப்படும். தன் மனைவி விளங்காநின்ற சந்ததியில்லாமலிறந்தால், தன் மாமனார், மாமியாரிவர்களிறப்பில், ஒரு நாள் தீட்டுண்டாகும். எ—று. (௨௭)

சமையொரு மூன்றுக் குட்படு மருகன் றவுத்திர னிறப்பினு மூன்று
சமையின்மே லுபந யனமிலாச் சமானோ தகனிறப் பினுந்திகழ் நானம்
அமைதரு மூன்று வயதின்மே லுபந யனமிலாத் தவுத்திரன் மருகன்
அமைவுறு திறக்கினொன் றரைநா ளென்றறைவரா சவுசநன் குணர்ந்தோர்

இ-ரை.—சகோதரி புத்திரனாகிய மூன்று வருஷத்துக்குட்பட்ட மருமான், புத்திரியின் புத்திரனாகிய மூன்று வயதுக்குட்பட்ட பேரன் இவர்களிறப்பிலும், மூன்று வயதுக்குமேல் உபநயனமில்லாத சமானோதகனிறப்பிலும், விளங்காநின்ற ஸ்நானத்துடன் தீட்டு நீங்கும். பொருந்திய மூன்று வயதுக்குமேல் உபநயனமில்லாத பேரன், மருமான், தீர்க்காயுளில்லாதிறக்கில் ஒன்றரை நாள் வரையில் தீட்டுண்டென்று தருமசாஸ்திரங்களை நன்காராய்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௮)

சொற்படு மம்மான் மகன்மகள் மாதுர் சோதரி யின்மகன் புதல்வி
நற்புகழ்ப் பிதுர்சோ தரிமகன் புதல்வி நன்குறு தனதுசோதரிபெண்
அற்புறு விவாக மாயசோ தரன்பெண் ணவிர்தரு பிதுர்வியப் புதல்வி
பொற்புறு மிவர்க ளிறப்பிலா சூசம் பொருந்துநா ளொன்றரை யாமே

இ-ரை.—சொல்லப்படுகின்ற அம்மான் புத்திரன், அம்மான் புத்திரி, மாதுர் சோதரியின் புத்திரன், மாதுர் சோதரியின் புத்திரி, நல்ல புகழையுடைய அத்தையின் புத்திரன், அத்தையின் புத்திரி, நன்மைபொருந்திய தன் சகோதரியின் புத்திரி, அன்புடனே விவாகமாகியிருக்கிற சகோதரன் புத்திரி, விளங்காநின்ற தாயின் சக்களத்தி புத்திரி, அழகுபொருந்திய இவர்களிறப்பில் ஒன்றரை நாள் வரையில் தீட்டுண்டாகும். எ—று. (௨௯)

ஒருவிவா கிதையா மடவரற் கன்னை யுயர்பிதா சோதரன் றுணைவி
மருகனன் கவிர்பெண் டவுத்திர னிவர்கண் மாளிஞ சவுசமுத் தினமாம்
வருபுகழ் பெறுமா தாமகன் மாதா மகியம்மா னவன்மகன் புதல்வி
பெருகுசோ தரன்பெண் மருவுசோ தரியின் பெண்பவுத் திரிதவுத் திரியே

இ-ரை.—விவாகஞ்செய்துக்கொண்ட ஒரு பெண்ணுக்கு, மேலாகிய தாய், தகப்பன், சகோதரன், சகோதரி, மருமான், அழகுடனே விளங்காநின்ற புத்திரி, தௌத்திரன், இவர்களிறப்பில் மூன்று நாள் தீட்டுண்டாகும். கீர்த்திபொருந்திய மாதாமகன், மாதாமகி, அம்மான், அம்மான் புத்திரன், அம்மான் புத்திரி, அன்பு மிகுந்த சகோதரன் புத்திரி, பொருந்திய சகோதரியின் புத்திரி, பவுத்திரி, தௌத்திரி. எ—று. (௯௦)

அன்னைசோ தரிமற் றவள்மகன் புதல்வி யவிர்பிதா சோதரி யனையாள்
தன்னரும் பிள்ளை பெண்பிதா மகன்பி தாமகி பிதுர்விய னவன்றன்
மின்னுபெண் பிள்ளை மற்றிவர் மாண மேவிடிற் பொருந்துமர் சவுசம்
பன்னுதொண் ணூறு நாழிகை யென்னப் பகருவர் மிருதிவல் லவரே.

இ-ரை.—மாதுர் சோதரி, அவள் புத்திரன், புத்திரி, விளங்காநின்ற பிதுர் சோதரி, அவள் புத்திரன், புத்திரி, பிதா மகன், பிதா மகி, பிதாவின் சகோதரன், பிரகாசிக்கின்ற அவனுடைய புத்திரன், புத்திரி, சொல்லுகின்ற இவர்களிறப்பில் ஒன்றரைநாள் வரையில் தீட்டுண்டாகுமென்று ஸ்மிருதிகளில் வல்லவராகிய பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௯௧)

முன்புரைத் தவரி னெழில்பெறு புருடன் மொழியுப நயனமா கியுநன்
கின்புறு தெரிவை யொளிர்மணம் புரிந்து மிருந்திடிற் பட்சினி யென்பர்
மன்புவி யதனி லிவையலா திருப்பின் மருவிய நானமாத் திரமென்
றன்புட னுரைப்பர் புகழ்மிகு மிருதி யாய்ந்திடு மறிவின்மிக் கவரே.

இ-ரை.—மேற்சொல்லப்பட்டவர்களில், அழகுபொருந்திய புருஷன் விதிப்படி உபநயனமாகியும், இன்பமிகுந்த பெண், விளங்காநின்ற விவாகமாகியும், இருந்தால் ஒன்றரை நாள் தீட்டுண்டாகுமென்றும், நிலைபெற்ற பூமியினிடத்தில் அப்படி யில்லாவிட்டால், பொருந்திய ஸ்நானஞ் செய்கிறவரையில் தீட்டுண்டென்றும், மிகுந்த புகழையுடைய தரும சாஸ்திரங்களை ஆராய்ந்தறிந்த பெரியோர்கள் அன்புடனே சொல்லுவார்கள். எ—று. (௯௨)

கலிவிருத்தம்.

சக்களத் தியின்மக டன்னி றப்பினிற்
சக்களத் திக்கியா சவுச மோர்தினஞ்
சக்களத் தியினிறப் பதனிற் சாற்றுநாள்
சக்களத் தியின்மக டனக்கொன் றாமரோ.

இ-ரை.—சக்களத்தியின் புத்திரி மரணத்தில் சக்களத்திக்கு ஒரு நாள் தீட்டுண்டாகும். சக்களத்தி மரணத்தில் சொல்லுகின்ற சக்களத்தி புத்திரிக்கு ஒரு நாள் தீட்டுண்டாகும். எ—று. (௫௩)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இதமிகோர் பதுநா ளாசவு சத்தை யீரைந்து நாளின்மேன் மூன்று
மதியினுட் கேட்பின் மூன்றுநா ளாகு மகிழிரு மூன்றுமா தத்துட்
பதமுற வினவி லொன்றரை நாளாம் பன்னிரு மாசத்துட் கேட்பின்
விதியொரு தினந்தீட் டாகுமற் றதன்மேல் விளுவிடி னுனமாத் திரமே.

இ-ரை.—ஒருவன், உரிமையான பத்துநாள் மரணத்தீட்டை, பத்துநாளைக்கு மேல் மூன்றுமாதத்திற்குள் கேட்டால், மூன்றுநாள் தீட்டுண்டாகும். மகிழ்கின்ற ஆறுமாதத்திற்குள் முறைப்படி கேட்டால், ஒன்றரைநாள் தீட்டுண்டாகும். பன்னிரண்டு மாதத்திற்குள் கேட்டால், நியமமானஒருநாள் தீட்டுண்டாகும். அதற்குமேற் கேட்டால், ஸ்நானஞ் செய்கிற வரையில் தீட்டாகும். எ—று. (௫௪)

இவ்வண மூன்று தினமுறு தீட்டை யீரைந்து நாளினுட் கேட்பின்
எவ்வமி லோர்நா ளதற்குமே னுன மியம்புறு பக்ஷிணி தீட்டை
வெவ்விய வோர்பா னுளினுட் பகலில் விளுவிடி லப்பகன் மட்டுஞ்
செவ்விதி னிரவே லுதித்திடுங் காறுந் தீட்டுமே னுன மாத்திரமே.

இ-ரை.—இந்தப்பிரகாரம், பொருந்திய மூன்றுநாள் தீட்டை, பத்துநாளைக்குள் கேட்டால், துன்பமில்லாத ஒருநாள் தீட்டாகும். அதற்குமேற்கேட்டால், ஸ்நானஞ் செய்கிறவரையில் தீட்டாகும். சொல்லுகின்ற ஒன்றரைநாள் தீட்டை, பத்துநாளைக்குள்ளே, வெப்பமுள்ள பகலிற்கேட்டால், அந்தப்பகல் வரையிலுந் தீட்டாகும். செவ்வையாக இரவிற் கேட்டால், சூரியோதயமாகுங் காலம்வரையிலுந் தீட்டாகும். அதற்குமேற் கேட்டால் ஸ்நானஞ் செய்கிறவரையில் தீட்டாகும். எ—று. (௫௫)

பத்துநா ளிறப்புத் தீட்டின்மத் தியிலோர் பத்துநா ளட்டுவந் துற்றால்
ஒத்திடு முன்றீட் டோடுபத் தாநா ளொழிந்திடு மிறந்திடு தீட்டின்
மத்தியிற் பிறப்புத் தீட்டுறின் முன்ன மாய்ந்த தீட்டோ டினிதொழியுஞ்
சித்தமார் பிறப்பி லிறப்பு றிலிறப்புத் தீட்டொடு தீர்ந்திடு மாதோ.

இ-ரை.—பத்துநாளிறப்புத் தீட்டின் மத்தியில், மற்றொரு பத்துநாளிறப்புத் தீட்டு வந்தால், பொருத்தமான முந்தியபத்துநாள் தீட்டுடனே பிந்தியதீட்டும் நிவர்த்தியாகும். மரணத்தீட்டின்மத்தியில், ஜனனத்தீட்டுவந்தால், முந்தியமரணத்தீட்டுடனே பிந்திய ஜனனத்தீட்டும் நிவர்த்தியாகும். மனமகிழ்ச்சியுடைய ஜனனத்தீட்டின்மத்தியில்மரணத்தீட்டு வந்தால், முந்திய ஜனனத்தீட்டு பிந்திய மரணத்தீட்டுடனே நிவர்த்தியாகும். எ—று. (௫௬)

பெற்றதா யிறந்த பத்துநா ளிற்குட் பெட்புறு தந்தையு மிறந்தால்
அற்றமி றந்தை பத்துநா ளுடனே யன்னையா சவுசமு நீங்கு
நற்றவத் தந்தை யிறப்பினிற் பத்து நாளிற்றாய் துஞ்சிடிற் றந்தை
பற்றுமீ ரைந்து நாளின்மேற் றாய்க்குப் பட்சிணி யுண்டென மொழிவார்.

இ-ரை.—பெற்றதாயிறந்த பத்துநாளைக்குள், ஆசையுடைய தகப்பனிறந்தால், பிந்தியிறந்த குற்றமற்ற தகப்பனுக்குரிய பத்துநாள் தீட்டுடனே, முந்தியிறந்த தாய் தீட்டும் நிவர்த்தியாகும். நல்ல தவத்தையுடைய தகப்பனிறந்த பத்துநாள் மத்தியில், தாயிறந்தால், தகப்பனுக்குரிய பத்துநாள் தீட்டிற்குமேல், தாய்க்கு ஒன்றரைநாள் தீட்டுண்டாகுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௩எ)

வளமலி யனுகி தாக்கினி தனக்கு மரணநா ளாதியாக் கொண்டுங்
கிளர்தருமாகி தாக்கினி தனக்குக் கிரியை யின்றி னமுதற் கொண்டுந் [பர்
தளர்விலா சவுச நாட்களை முறையிற் றான்கொளல் வேண்டுமென் றுரைப்
உளமகிழ் கடவுண் மறையரும் பொருள்க ளுணர்ந்திடும் பே ரறிவினரே.

இ-ரை.—அழகுமிகுந்த, அனுகிதாக்கினியான ஒருவனுக்கு, மரணநாள் முதலாகக்கொண்டும், விளங்காநின்ற ஆகிதாக்கினியான ஒருவனுக்கு, சமஸ்காரநாள் முதலாகக்கொண்டும், குறைவில்லாத தீட்டுநாட்களை முறையாகக் கொள்ளல் வேண்டுமென்று, மனமகிழ்ச்சியைத் தருகின்ற தெய்வத் தன்மையுள்ள வேதங்களின் பொருள்களையுணர்ந்த பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௩அ)

இவ்விரு வருக்கு முனம்விதித் தவறு வியற்றிய கிரியையை நீக்கி
ஒவ்வுமீ ரைந்து நாளினுள் விதியி னுஞற்றிய கிரியையை யினிது
தவ்வலி லொருபா ளுளின்மேற் கேட்ட தாயத்தார் மீண்டுமற் றிதற்குச்
செவ்வையிற் றீட்டுக் கொளல்விதி யன்று செழும்புனல்படிந்திடல்விதியே

இ-ரை.—அனுகிதாக்கினி, ஆகிதாக்கினியென்றுசொல்லப்பட்ட, இருவருக்கும் முன்புவிதித்தவறாகச்செய்த கிர்த்தியங்களை யொழித்து, பொருந்திய பத்துநாளைக்குள், விதிப்படி செய்த கிர்த்தியங்களைக் கெடுதலிலாத பத்துநாளைக்குமேல், இனிதாகக்கேட்ட ஞாதிகள், மறுபடியும் இதற்காக முறையாகத் தீட்டைக்கொள்ளுதல் விதியன்று, செழுமையுள்ள நீரில் ஸ்நானஞ் செய்தலே விதியாகும். எ—று. (௩௯)

அன்புறு விதியிற் கிருத்திய மடையா வாகிதாக் கினிவிட யத்தில்
மின்பொலி யவ்வீ ரைந்துநா ளினுக்குள் விதிவழிக் கிருத்திய நடக்கில்
இன்புறு புதல்வர் சபிண்டர்க்கா சவுச மீரைந்து நாளொடு தீரும்
முன்புறு கிருத்தி யாரம்ப மாதி மொழியுமீ ரைந்து நாளின்றே.

இ-ரை.—பொருந்திய அன்புடனே விதிப்படி சமஸ்காரமடையாத ஆகிதாக்கினி விஷயத்தில், விளங்காநின்ற அந்தப் பத்துநாளைக்குள், விதிப்படி சமஸ்காரம் நடந்தால், இன்பத்தையுடைய புத்திரர், சபிண்டஞாதிகள் இவர்களுக்குப் பத்து

நாளோடு தீட்டு நிவர்த்தியாகும். முன்புசெய்யத்தக்ககிர்த்தியாரம்பமுதற் சொல்லப்பட்ட பத்துநாளில்லே. எ—று. (௪0)

ஒருபது நாட்குள் விதிப்படி கிரியை யுஞற்றிடா விடிலதன் பின்னர்ப்
பெருகுமவ் விதியிற் கிரியைனய யாரம் பிப்பது முதலொரு பதுநாள்
மருவுமப் பத்தா நாளிரா நாலாம் யாமத்தின் மற்றொரு தீட்டு
வருமெனின் மீண்டு மூன்றுநா ளாகு மைந்தர்கள் சபிண்டர்க டமக்கே

இ-ரை.—பத்துநாளேக்குள் விதிப்படி கிர்த்தியஞ் செய்யாவிட்டால், அதன் பின்பு அந்த விதிப்படி பெருகிய கிர்த்தியங்களேத் தொடங்குவது முதல் பத்துநாள் வரையில், மேற்சொன்னவர்களுக்கு தீட்டுண்டாகும். பொருந்திய அந்த பத்தாநாளிறவில் நாலாவது யாமத்தில், மற்றொரு பத்துநாள் தீட்டு வந்தால், மறுபடியும் மூன்றுநாள் வரையில், மேற்சொன்ன புத்திரர், சபிண்டஞாதிகள், இவர்களுக்குத் தீட்டுண்டாகும். எ—று. (௪௧)

முதலொரு தீட்டையடைந்திருக்கையிற்பின்மொழிதரு மதனினும் பெரிய
பிதிர்தரா மற்றோர் தீட்டுவந் துற்றாற் பின்வருந் தீட்டொடு நிவர்த்தி
துதிபவத் தீட்டு மத்தியிற் றனக்குச் சுதன்சுதை பிறந்திடின் முன்றீட்
டிதமுறு தன்சூ தகத்தொடு நிவர்த்தி யென்பர்மு தறிவினர் தாமே

இ-ரை.—முதலில் ஒருவன் ஒருதீட்டை, அடைந்திருக்கையில், மறுபடி அவனுக்கு அதைப்பார்க்கிலும் பெரியதாகச் சொல்லப்பட்ட, தவராத மற்றொருதீட்டு வந்தால், முன்வந்திருக்கிற தீட்டானது, பின்வந்திருக்கிற தீட்டோடு நிவர்த்தியாகும். கொண்டாடப்பட்ட பிறப்புத்தீட்டுநடுவில், தனக்குப் புத்திரன், புத்திரி, பிறந்தால், முன்வந்திருக்கிற தீட்டானது, தனக்குரிய தீட்டோடு நிவர்த்தியாகுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௪௨)

தந்தைதா யிறந்த பத்துநா ளேக்குட் சஞ்சய னத்தின்மேற் கேட்ட
மைந்தர்க்கும் மோராண் டளவினுங் கேட்ட மைந்தற்கும் பின்புவி னுய
முந்திய மகற்கும் பத்துநா ளாகு மூன்றுநாண் மற்றையோர்க் காகும்
இந்தநற் கிரியை முன்செயா திருப்பில் யாவர்க்கும் பத்துநா டீட்டே

இ-ரை.—தாய், தகப்பனிறந்த பத்துநாளேக்குள், சஞ்சயனம் செய்தபின்பு கேட்டபுத்திரர்களுக்கும், ஒரு வருஷம் வரையிலுங் கேட்ட புத்திரர்களுக்கும், அதற்குமேற்கேட்ட, ஜேஷ்டபுத்திரனுக்கும், பத்துநாள் தீட்டுண்டாகும். மற்றுமுள்ள சபிண்டர்களுக்கு மூன்றுநாள் வரையில் தீட்டுண்டாகும். இந்த நலமுள்ள சஞ்சயனக்கிர்த்தியஞ் செய்யாதிருந்தால் எல்லாருக்கும் பத்துநாள் தீட்டாகும். எ—று. (௪௩)

விதிப்படி கிரியை நனிபுரிந் திறந்த விரும்புசக் களத்திதாய் செய்தி
மதிப்புறு பத்து நாளின்மேற் பட்டோர் வற்சரம் வரையினுங் கேட்பிற்
கதிப்புறு பத்து நாளதன் பின்பேற் கருதுமா சவுசமுத் தினமாந்
துதிப்புறு கிரியை செயாவிடிற்கிரியைதொடங்குநாண் முதலொருபத்தே

இ-ரை.—விருப்பமிருந்த தன்தாயின் சக்களத்தியாகிய, தாய், விதிப்படி கிர்த்தியங்களைச் செவ்வையாகச் செய்யப்பட்டிறந்த செய்தியை எண்ணுகின்ற பத்துநாளைக்குமேல் ஒரு வருஷம்வரையிலும் கேட்டால் மதிக்கத்தக்க பத்துநாள்தீட்டாகும். அதற்குமேல் நினைக்கப்படுகின்ற மூன்றுநாள்வரையில் தீட்டாகும். யாவரும்புகழ் கின்ற கிர்த்தியங்கள் செய்யாதிருந்தால், கிர்த்தியஞ் செய்யத்தொடங்குநாள்முதல் பத்துநாள்வரையில் தீட்டுண்டாகும். எ—று. (௬௪)

சோதர னிறந்த பத்துநா ளதன்மேற் றுதிமதி யாறினுட் கேட்பின்
ஓதுமுத் தினமாம் வற்சர மொன்றே லொன்றரை நாளதன் பின்பேல்
ஏதமி னனங் கிரியையின் றாகி னிலகறு மதியொரு வருடம்
கேதமி லதன்பின் பத்துமூன்றொருநாள் கிரியையா ரம்பமுன் றீட்டே

இ-ரை.—சகோதரனிறந்ததைப் பத்துநாளைக்குமேல் துதிக்கப்படுகின்ற, ஆறு மாதம்வரையில் கேட்டால், மூன்றுநாள் தீட்டென்று சொல்லப்படும். ஒரு வருஷம் வரையில் கேட்டால், ஒன்றரைநாள் தீட்டுண்டாகும். அதற்குமேற் கேட்டால், குற்றமில்லாத ஸ்நானஞ்செய்கிறவரையில் தீட்டாகும். கிருத்தியங்கள் செய்யாதிருந்தால் ஆறு மாதத்துக்குள் கேட்டால் பத்துநாள்வரையிலும், ஒரு வருஷத்துக்குள், கேட்டால் மூன்றுநாள்வரையிலும், அதற்குமேல் கேட்டால் ஒருநாள் வரையிலும், பழுதில்லாத கிர்த்தியஞ்செய்யத் தொடங்குதல் முதல், தீட்டாகும். எ—று. (௬௫)

பரவுசக் களத்தி யொருவருக் கொருவர் பதிமனை யொருவருக் கொருவர்
கரவறு மிறப்பைப் பத்துநா ளதன்மேற் கருதொரு சமைவரைக் கேட்பில்
விரவொருபதுநாளதன்பின்முத்தினமுன்விளம்புமக் கிரியைசெயாக்காற்
கிரியைசெய் கால மாதியா சவுசங் கிளத்தொரு பத்துநா ளவர்க்கே

இ-ரை.—சொல்லுகின்ற சக்களத்தியுஞ் சக்களத்தியுமாகிய ஒருவருக்கொருவரும், கணவனுமனைவியுமாகிய ஒருவருக்கொருவரும், ஒளிப்பில்லாத மரணத்தைப்பத்துநாளைக்குள் கேட்டால் பத்துநாள்தீட்டும், அற்குமேற் பொருந்திய ஒருவருஷம்வரையிற் கேட்டால் மூன்றுநாள் தீட்டுமுண்டாகும். முன்புசொல்லிய மரணத்தைக்குறித்துக் கிருத்தியஞ் செய்யாதிருந்தால், கிருத்தியஞ் செய்யத்தொடங்கிய காலமுதல் பத்துநாள்வரையில் தீட்டுண்டென்று சொல்லப்படும். எ—று. (௬௬)

முன்னுறு மிறப்பா சவுசமத் தியினின் மொழிபிதா தாயிறந் திடினுந்
தன்னுறு மக்கள் பிறக்கினு முன்ன சவுசமோ டகன்றிடா ததன்பின்
மின்னுறு தனக்கு விதித்தநா ளினிற்போம் விளங்குமுத் தினங்கொள்
ஞாதிகட்கும் பன்னுமப் படியே யாமெனப் புகல்வர் பளகறு மறைமுழு
துணர்ந்தோர்

இ-ரை.—ஒருவனுக்குண்டாகிய மரணத்தீட்டு மத்தியில், சொல்லுகின்ற தாய், தகப்பனிறந்தாலும், தனக்குப்புத்திரி, புத்திரன் பிறத்தாலும், முன்னுண்டாகிய தீட்டோடு நிவர்த்தியாகாது. அதற்குப்பின் விளங்காநின்ற தனக்குவிதித்த நாளுடன் நிவர்த்தியாகும். பிரகாசிக்கின்ற மூன்றுநாள் தீட்டுள்ள ஞாதிகளுக்கும், மேற்சொல்லியபடியேயாகுமென்று குற்றமற்ற வேதங்களை யெல்லாமுணர்ந்த பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௬௭)

இயம்புமுன் னுறுதீட் டிடையினிற் கணவனிறந்திடி னுயகி தனக்கும்
நயங்கொளு மனைவி யிறந்திடி லவ டன் னுயகன் தனக்கும் வந்துற்ற
தயங்குமா சவுச முன்னையா சவுசந் தன்னொடு நிவர்த்தியா காமல்
உயங்குறுந் தமக்கு விதித்திடு நாளி னொழிந்திடு மென்பர்கள் பெரியோர்

இ-ரை.—சொல்லுகின்ற முதலிற்பொருந்திய தீட்டுமத்தியில், கணவனிறந்தால் அவன் மனைவிக்கும், நன்மைபொருந்திய மனைவியிறந்தால், அவள் கணவனுக்கும், உண்டாகியதீட்டானது, முதற்பொருந்திய தீட்டோடு நிவர்த்தியாகாமல், வருந்துகின்ற தத்தமக்கு விதித்த நாளில், நிவர்த்தியாகுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௬௮)

கலிவிருத்தம்.

அன்னை தந்தைய லாவிட யத்தினிற்
பன்னு கிர்த்தியம் பண்ணிய தன்பினும்
அன்ன கிர்த்தியம் ஞாதிகட் கார்த்திடில்
உன்னு முன்றீட் டுடன்போமித் தீட்டுமே

இ-ரை.—சொல்லுகின்ற ஒருவன், தன்னைபெற்ற தாய்தகப்பனல்லாத, மற்றையோர்விஷயத்தில் கிர்த்தியஞ்செய்து, அதன்பின்பும், அப்படிப்பட்ட கிர்த்தியம் ஞாதிகளுக்குச் செய்தால், எண்ணுகின்ற முன்தீட்டோடு இந்தத்தீட்டும் நிவர்த்தியாகும். எ—று. (௬௯)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சாந்திரா யணமா தியவுயர் விரதந் தழன்மக மிவைகளி னுப்பண்
ஏய்ந்தவா சவுசம் வந்திடி லுடனே யெறிதிரைப் புனலிடை மூழ்கி
வாய்ந்தவவ் விரதா திகண்முடித் ததற்பின் வகுத்தீட் டொருபது நாட்குட்
போந்தநா ணீக்கி நின்றநாள் வரையிற் பொருந்துத லறுமறை நெறியே

இ-ரை.—சந்திராயணமுதலாகச் சொல்லப்பட்ட மேலாகிய விரதங்கள், அக்கினிவளர்க்கின்ற யாகங்கள், இவைகளைச் செய்துக்கொண்டிருக்கு மத்தியில், பொருந்திய மரணத்தீட்டுவந்தால், உடனே அலைவீசுகின்ற ஜலத்தில் ஸ்நானஞ்செய்து, மாகூஷிமைபொருந்திய அந்த விரதமுதலியவைகளை முடித்து, அதன்பின்பு, வகுத்துச் சொல்லப்பட்ட பத்துநாள்தீட்டில், முன்சென்ற நாட்களை நீக்கி பாக்கியிருக்குநாள் வரையில், தீட்டுக்காத்தல் அரிதாகிய வேதவிதியாகும். எ—று. (௭௦)

இகழ்வறு விரதாதிகணடு வினில்வந் தெய்துமா சவுசமவ் விரத
நிகழ்முடி வினுக்குட் படுமெனில்விரதநெறியின்முற் றியபினுசவுசம்
புகழதிக் கிராந்த விதியொரு தினமாம் போற்றுமா சவுசத்திற் காகத்
திகழதிக் கிராந்தா சவுசமின் றுகுந் தெரிந்திடி னனமாத் திரமே

இ-ரை.—இகழ்ச்சியில்லாத விரதாதிகள் மத்தியில், வந்து பொருந்துகின்ற மரணத்தீட்டானது, நடத்தப்படுகின்ற அந்த விரதமுடிவுக்குட் படுமாகில், விதிப்படி யந்தவிரத விரதமுடிந்தபின்பு, துதிக்கின்ற அதிக்கிராந்தமாகிய தீட்டுவிதிப்படி யொருநாளாகும். காக்கப்படுகின்ற தீட்டுக்காக விளங்காநின்ற, அதிக்கிரந்தமாகிய தீட்டில்லை. தெரிந்துகொள்ளுமிடத்தில் ஸ்நானமாத்திரமாகும். எ—று. (௫௧)

ஏகபுத் திரன்றன் மகஞ்செய்மத் தியிற்று யெழிற்பிதா விறந்திடி லுடனே
யாகசா லையினம் மகப்பொருள் வைத்து வெளியின்வந் தினியநீ ராடிச்
சோகமார் தகனக் கிரியைசெய் ததற்பின் சுகமுறு மகவினை முடித்துப்
பாகமோ டதன்பி னுதகதா னுதி பரிவொடு புரிவது விதியே

இ-ரை.—ஏகபுத்திரனுகிய ஒருவன் யாகஞ் செய்துகொண்டிருக்கு மத்தியில், அழகிய அவன் தாய்தகப்ப னிறந்தால், உடனே யாகத்துக்குரிய பொருள்களை, யாக சாலையிற்றனே வைத்து, வெளியேவந்து ஸ்நானஞ்செய்து, சோகம்பொருந்திய தகனசமஸ்காரஞ்செய்து, அதன்பின்பு சுகத்தைத்தருகின்ற யாகத்திற் செய்யவேண டியவைகளை யெல்லாஞ் செய்துமுடித்து, அதன்பின்பு பக்குவமாக,உதகதானுதிகளை யன்புடனே செய்வது வேதவிதியாகும். எ—று. (௫௨)

சீர்பெறு சிரார்த்தந் தனிற்பிதுர் வருணஞ் செய்தபின் சூதகம் வந்தால்
பார்புகழ் தருதெண் ணீரிடைப் படிந்து பண்ணலாம் பாவுசி ரார்த்தம்
ஆர்தரு மதற்குச் சூதக மில்லா தவர்பரி மாறுதல் வேண்டும்
ஏர்பெறு மிருதி விதியெனப் புகல்வ ரினிதுணர் நனிசிறந் தவரே

இ-ரை.—சிறப்புப்பொருந்திய சிரார்த்தத்தில் பிதுர்வருணஞ்செய்த பின்பு பிறப்புத்தீட்டுவந்தால், உலகம் புகழ்கின்ற ஜலத்தில் ஸ்நானஞ்செய்து மேற்சொல் லியசிரார்த்தஞ் செய்யலாம். பொருந்திய அந்தச் சிரார்த்தத்திற்குத் தீட்டில்லாத, வர்கள்பரிமாற வேண்டும். இப்படிச்செய்வது அழகிய தருமசாஸ்திர விதியென்று எல்லாநூல்களையுங் கற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்வார்கள். எ—று. (௫௩)

நற்புகழ் விவாக முற்சவ மிவைபி னுந்தியின் பின்புறு தீட்டைப்
பொற்புறக் கேட்கிற் றீட்டிலை நாந்தி புரிவதிற் பிதுர்வரு ணத்தின்
முற்படக்கேட்கின்மொழியுமக்கிரியைமுறையினிற் செய்யலா காதென்
றற்புட னுரைப்பர் பற்பல மிருதி யாய்ந்திடு நுண்ணறி வினரே

இ-ரை.—நல்லபுகழையுடைய விவாகம், திருவிழா இவைகளில், நாந்திசெய்த பின்பு பொருந்திய தீட்டை, அழகுடனே கேட்கில் தீட்டில்லை. நாந்திசெய்வதில்

பிதுர்வருணஞ் செய்வதற்குமுன் கேட்டால், சொல்லப்பட்ட அந்தக் கிரியைகளைக் கிரமமாகச் செய்யலாகாதென்று, பலபலவாகிய தருமசாஸ்திரங்களை ஆராய்ந்தறிந்த நுட்பமான அறிவுடையோர்கள் அன்புடனே சொல்வார்கள். எ—று. (டுச)

சனகதாய் தந்தை யிறந்திடிற் றத்த புத்திரன் றீட்டொரு மூன்று
தினங்கொளல் வேண்டு மதற்குமேற்கேட்பிற் றிகழதிக்கிராந்தவாசவுசம்
எனும்விதிப் படியா மிவ்வண மேயவ் வெழின்மிகு தத்தபுத் திரன்றன்
தனிவிட யத்திற் சனகதாய் தந்தைக் குண்டெனச் சாற்றுவர் மிக்கோர்

இ-ரை.—தத்தபுத்திரனாகிய ஒருவன், ஜனகதாய்தகப்பன் மரணத்தில், மூன்று நாள்வரையில் தீட்டுக்கொள்ளல் வேண்டும். மேற்சொல்லிய இருவர் மரணத்தை, மூன்றுநாளைக்குமேற் கேட்கில், விளங்காநின்ற வேதவிதிப்படி அதிக்கிராந்தமாகிய தீட்டுண்டாகும். இந்தப்பிரகாரமே மிகுந்த அழகுபொருந்திய, அந்த தத்தபுத்திரன் மரணத்தில் ஜனகதாய்தகப்பனுக்கு திட்டுண்டென்று மேலோர்கள் சொல்வார்கள். எ—று. (டுரு)

மணமுறு மனைவி பிறந்திடு வீட்டின் வழிவரு மாசவு சங்கள்
கணவனுக் கில்லை கணவன்ற னம்மான் கருதுமா தாமகன் மருகி
தணவில்சோ தரிதாய் சோதரி பிதாசோ தரிமுத லாசவு சங்கள்
அணவிய மனையாட் குண்டென மிருதி யாய்வந்தவர் புகலுவர் மன்னோ

இ-ரை.—விவாகஞ் செய்துகொண்டமனைவியின் தாய்வழி வருக்கத்தில் உண்டாகிய தீட்டுகள் கணவனுக்கில்லை. மதிக்கின்ற கணவனுடைய, அம்மான், மாதாமகன், சகோதரிபுத்திரி, நீங்குதலில்லாத, தாய்சோதரி, தகப்பன் சோதரி, சகோதரி முதலானவர்களாலுண்டாகும் தீட்டுகள் அழகுபொருந்திய மனைவிக்குண்டென்று, தருமசாஸ்திரங்களை கற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (டுசு)

தெரிந்துதீட் டதனிற் புசித்தவ ரிறுதித் தினம்வரை யெய்துவர் தெரியா
தருந்தினோ ரன்னஞ் சீரண மாகு மளவுமத் தீட்டினை யடைவர்
பரிந்தவா பத்தி னுண்டவர் தமக்குப் பரவுதீட் டத்தினம் வரையாம்
வருந்துற தீட்டி னுட்களைக் குறைத்தல் வளர்த்தலுந் தீதெனு மறையே

இ-ரை.—தீட்டையுடையவர்களன்னத்தைத் தீட்டென்று தெரிந்து புசித்தோர்கள் தீட்டின் முடிவுநாள் வரையில் அந்தத்தீட்டை யடைவார்கள். தெரியாமற் புசித்தவர்கள், புசித்தவன்னஞ் சீரணமாகும் வரையில் தீட்டையடைவார்கள். வருந்துகின்ற ஆபத்துகாலத்திற் புசித்தவர்களுக்குச் சொல்லப்பட்ட ஒருநாள்வரையில் தீட்டுண்டாகும். வருத்தமுள்ள தீட்டினுட்களைக் குறைத்தலும் வளர்த்தலும் தீதென்று வேதங்கள் சொல்லும். எ—று. (டுஎ)

சங்கர சாதி யோர்களாற் பிறந்தோர் தங்கிய கருப்பத்தை யழித்தோர்
மங்குறுக்கழுத்திற்சுருக்கிட்டுக்கொண்டுமாய்ந்தவர் விடமயின் றிறந்தோர்
அங்கமார் வேத விருத்தமாச் சந்நி யாசத்தன் மையையுறு மடவார்
இங்கிவர் தமக்குத்தருப்பணஞ் செயவேண் டியதிலை யெனுமரு மறையே

இ-ரை.—சங்கரஜாதியர்களாலே பிறந்தவர்களுக்கும், பொருந்திய கர்ப்பத்தை யழித்தவர்களுக்கும்,விளங்காநின்ற கழுத்திற்சுருக்கிட்டுக்கொண்டிறந்தவர்களுக்கும், விஷத்தைப்புசித்திறந்தவர்களுக்கும், பொருந்திய அங்கங்களையுடைய வேதவிரோதமாகச் சந்நியாசத் தன்மையடைந்த பெண்களுக்கும், தர்ப்பணஞ் செய்யவேண்டிய தில்லையென்று அருமையாகிய வேதங்கள் சொல்லும். எ—று. (அ௫)

புலிபசு பாம்பு விடமிடி மின்னல் பொருந்துமா யுதம்புனல் செழுந்தீ
வலியமற் றிவைக ளாலிறந் திடிலோர் வற்சரந் தனக்குமே லெனினு
நலிவின்மூ விரண்டு மதிக்குமே லெனினு நவில்கிருத் தியந்தின மூன்றின்
மெலிவறப் புரிந்தா சூசத்தை முடித்தல் விதியென மிருதிகள் விளம்பும்

இ-ரை.—பலம்பொருந்திய புலியினாலும், பாம்பினாலும், விஷத்தினாலும் இடியினாலும் மின்னலினாலும், கூர்மைபொருந்திய ஆயுதங்களினாலும், ஜலத்தினாலும், அக்கினியினாலும், இறந்தால், ஒருவருஷத்துக்கு மேலாவது, குறைவில்லாத ஆறுமாதத்துக்குமேலாவது, சொல்லப்பட்ட கிர்த்தியங்களைச் சலியாமற்செய்து தீட்டை முடித்தல்விதியென்று தருமசாஸ்திரங்களிற் சொல்லப்படும். எ—று. (௫௯)

நண்ணுமா சூச நிவர்த்தியாந் தினத்தி னாழிகை யாறின்மே லாக
அண்ணுசங் கவகா லத்தினீ ராடியருமறை யோர்செழும் புனலைத்
திண்ணிய வரசர் வாகனந் தன்னைத் திகழ்வயி சியர்குற டாவை
எண்ணிய சதுர்த்தர் தடியையுந்தொடல்வேண்டியதுயர்மிருதியி னெறியே

இ-ரை.—ஒவ்வொருவருக்கும் பொருந்திப தீட்டு நிவர்த்தியாகுந்தினத்தில், சூரியோதயமாகி ஆறுநாழிகைக்குமேலுண்டாகிய சங்கவகாலத்தில், ஸ்நானஞ் செய்து, அருமையாகியவேதத்திற்குறிய பிராமணர்கள், நல்லஜலத்தையும், பலமுள்ள க்ஷத்திரியர்கள், வாகனத்தையும், பிரகாசிக்கின்ற வைசியர்கள் குறடாவையும், மதிக்கின்ற சூத்திரர்கள், தடியையுந் தொடல்வேண்டியது மேலாகிய தருமசாஸ்திர விதியாகும். எ—று. (௬0)

சூதகாசௌசமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௬௪0.

நாற்பத்துமூன்றாவது

வானப்பிரஸ்தவிதியுரைத்த வத்தியாயம்.

கலிவிருத்தம்.

மருவுபுகழ் பொலிநான்கு வருணத்தி னர்க்கும்
துரிசறுபு சூதகா சூசமுறை செய்தாம்
அரியமறை மூன்றாவ தாச்சிரம மென்னப்
பெரிதுநவில் வானப்பி ரத்தவிதி சொல்வாம்

இ-ரை.—கேளும் சுவிரதமகாராஜனே! இதுவரையில் கீர்த்திபொருந்தி விளங்காநின்ற பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்று சொல்லப்பட்ட குற்றமற்ற நான்கு வருணத்தினர்களுக்கும், பிறப்பிறப்பின் தீட்டுகளைச் சொன்னோம். இனி அருமையாகிய வேதங்கள், மூன்றாவது ஆச்சிரமமென்று விசேஷமாகச் சொல்லப்பட்ட வானப்பிரஸ்த ஆச்சிரமவிதிகளைச் சொல்லுவோமென்றார் காளஸ்திமகாமுனிவர். எ—று. (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இல்லறத் தமர்ந்தோ னூல்க ளியம்பிய முறைவ ழாது
நல்லற மனைத்துஞ் செய்து நவையறு விரதம் போற்றி
அல்லினை வொழித்துத் தூய னாகியிந் தியமொ டுக்சிச்
செல்லும்வா னப்பிரத்தாச் சிரமத்தை யடைதல் வேண்டும்

இ-ரை.—கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவன், தருமசாஸ்திரங்களிற் சொல்லிய விதிதவறாமல், நல்ல தருமங்களை யெல்லாஞ் செய்து, குற்றமற்ற விரதங்களை யெல்லாமனுஷ்டித்து, தீகுதியல்லாத தீயனவற்றை யெல்லாம் ஒழித்துப் பரிசுத்தமுடையவனாகிப், பஞ்சேந்திரியங்களையுமடக்கிக் கொண்டு, தபோவனத்திற் செல்லத்தக்க வானப்பிரஸ்த ஆச்சிரமத்தையடைதல் வேண்டும். எ—று. (உ)

அகலவையம் பதன்மேற் றேகத் தவிர்நரை திரைமூப் பெய்தி
மகன்மகிழ் வுடனே செய்ய மைந்தரைப் பயின்ற பின்னர்ப்
புகழ்பல போக நீத்துப் பொருந்துதன் புதல்வன் மாட்டுப்
பகர்மனை வியைவைத் தேனும் பரிந்துடன் வரக்கொண் டேனும்

இ-ரை.—ஐம்பது வயதுக்குமேல், சரீரத்தில், நரையையும், திரைதலையும், கிழத்தன்மையையுமடைந்து, தன் புத்திரனானவன் மகிழ்ச்சியுடனே அழகிய புத்திரர்களைப் பெற்ற பின்பு, புகழ்ச்சி பொருந்திய பலவாகிய போகங்களை யெல்லா மொழித்து, சொல்லப்பட்ட தன் மனைவியை அன்பினையுடைய தன் புத்திரனிடத்தில் ஒப்பிவித்ததாவது விசுவாசத்துடன் கூடவர யிஷ்டமிருந்தால் இட்டுக்கொண்டாவது எ—று. (௩)

உத்தரா யணமுற் பக்கத் துயர்சுபர் வார நன்னாள்
சுத்தமா மிலக்கி னத்திற் சுருக்குடன் சுருவ மாதி
ஒத்தசீ ரங்கி கோத்ர மோமபாத் திரமுங் கொண்டு
சித்தமார் மகிழ்வி னோடு செறிவனத் தெய்தல் வேண்டும்

இ-ரை.—உத்தராண மாதமும், பூருவபக்ஷமும், மேலாகிய சுபர்கள் வாரமும், நல்ல நக்ஷத்திரமும், பொருந்திய பரிசுத்தமாகிய லக்கினத்தில் சுருக்கு, சுருவமுதலாகப் பொருந்திய சிறப்பினையுடைய அக்கினி ஹோத்திரத்தையும், ஓமபாத்திரங்களையுமெடுத்துக்கொண்டு, நிறைந்த மனமகிழ்ச்சியுடனே ஊரிலிருந்து விருக்ஷங்கள் நெருங்கிய வனத்தில் பிரவேசிக்க வேண்டும். எ—று. (௪)

மயிர்சடை தாடி மீசை நகமிவை வளர்த்தல் வேண்டும்
அயிர்மர வுரிதோ ணுண லாதியை யுடுத்தல் வேண்டும்
பயிர்சரு கிலைகாய் மூலம் பலங்களை யருந்தல் வேண்டும்
வெயில்பனி குளிர்கால் சோனை வெம்மையும் பொறுத்தல் வேண்டும்

இ-ரை.—மயிர், ஜடை, தாடி, மீசை, நகம், இவைகளை வளர்க்க வேண்டும். மிருதுவாகிய மரவுரியையாவது, மான்றோலையாவது, தருப்பை முதலியவற்றையாவது தரிக்கவேண்டும். சொல்லுகின்ற சருகுகள், இலைகள், காய்கள், கிழங்குகள், பழங்கள், இவைகளைச் சாப்பிடவேண்டும். வெய்யில், பனி, குளிர், காற்று, மழை, உஷ்ணம், இவைகளைப் பொறுக்கவேண்டும். எ—று. (௫)

தெரிபல வுயிரி டத்துஞ் சீவகா ருணியம் வேண்டும்
பரிவொடு தனக்கி யன்ற பலிபிக்ஷை யிடுதல் வேண்டும்
கரிசறு கிழங்கு பைங்காய் கனிநறும் புனலி வற்றால்
உரியதன் பால்வந் தோரை யுபசரித் திடுதல் வேண்டும்

இ-ரை.—காணத்தக்க பலவாகிய ஆன்மாக்களிடத்திலும், ஜீவகாருணிய மிருக்கவேண்டும். அன்புடனேதனக்கியன்றவரையில், பலி,பிக்ஷை, இவைகளைக் கொடுக்க வேண்டும். குற்ற மற்ற கிழங்குகள், பசிய காய்கள், பழங்கள், நல்ல, ஜல முதலியவைகளாலே சுதந்தரமாகத் தன்னிடத்தில் வந்தவர்களை, உபசரிக்க வேண்டும். எ. று. (௬)

அருமறை யோதல் வேண்டு மைம்புல னடக்கல் வேண்டும்
மருவுறு வெகுளி காம மயக்கமுங் கடிதல் வேண்டும்
ஒருவில்பல் கலையுண் மேலா முபநிட தத்தி லுண்மைப்
பொருளுணர்ந் திடுதல் வேண்டும் புகனெறி யொழுகல் வேண்டும்

இ-ரை.—அருமையாகிய வேதங்களை, அத்திய யனஞ் செய்ய வேண்டும். சத்த ஸ்பரிசரூபரசகந்தமென்னும், ஐந்துபுலன்களையும், ஐம்பொறிகளின் வழிச்செல்லாத டக்கவேண்டும். பொருந்திய கோபத்தையும், மோகத்தையும், மயக்கத்தையும், ஒழிக்க வேண்டும். நீங்காதபலவாகிய நூல்களிலுமேலாகிய, உபநிடதத்தின் மெய்ப்பொருள் களை யுணரவேண்டும். சற்குரு உபதேசித்த முறைப்படி நடக்கவேண்டும். எ—று.

துன்றுவே னிற்கா லத்திற் சுடருமைந் தழற்கு நாப்பண்
நின்றும்வண் கார்கா லத்தி னிலவுவெள் ளிடையி ருந்தும்
குன்றுறுப் பனிக்கா லத்திற் குளிரீர வுடைபு னைந்தும்
ஒன்றுநன் னியதி யாக வுயர்தவம் புரிதல் வேண்டும்

இ-ரை.—நெருங்கிய வேனிற்காலத்தில், பிரகாசிக்கின்ற பஞ்சாக்கினி மத்தியி லிருந்து கொண்டும். மேகங்கள் நீரை வருஷிக்கின்ற கார் காலத்தில், விளங்காநின்ற வெறு வெளியிடத்திலிருந்து கொண்டும். குறைவில்லாத பனிக்காலத்தில், குளிர்ச் சியைத்தரத்தக்க யீரவுடையைத்தரித்துக்கொண்டும். நன்மைபொருந்திய வொழுக்கத் துடனே மேலாகிய தவத்தைச்செய்யவேண்டும். எ—று. (அ)

திகழ்திரி கால நானஞ் செயவேண்டு முனிவர் தேவர்
தகமைசால் பிதுர்க்க ளுக்குத் தருப்பணம் புரிதல் வேண்டும்
பகருநல் லடிசில் பைங்காய் பழங்கிழங் கிவைக ளாலே
மகிழ்வொடு முறையே பஞ்ச மாமக மியற்றல் வேண்டும்

இ-ரை.—விளங்காநின்ற திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்யவேண்டும். பெரு மைபொருந்திய முனிவர்களுக்கும், தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும், தர்ப்பணஞ் செய்யவேண்டும். சொல்லுகின்ற நல்ல அன்னம், பசியகாய்கள், கனிகள், கிழங்கு கள், இவைகளினாலே, மனமகிழ்ச்சியுடனே நியதியாகப்பஞ்சமஹா வெக்கியஞ்செய் யவேண்டும். எ—று. (௯)

சந்தத மங்கி கோத்ரந் தரிசநற் பூர்ண மாசம்
முந்திவை தனக்கி யன்ற படிமுயன் றுற்றல் வேண்டும்
சிந்துறுக் கிருச்சி ரஞ்சாந் திராயணம் பிராசா பத்யம்
வந்துறு மின்ப மோங்க மதிதொறு மியற்றல் வேண்டும்

இ-ரை.—எப்போதும், அக்கினி ஹோத்திரம், தரிசம், பௌர்ணமாசம், முதன் மையாகிய, இவைகளை விடாமல், தன் சக்திக்குத் தக்கபடி முயற்சியுடனே செய்ய வேண்டும். சிதைவில்லாத கிருச்சிரம், சாந்திராயணம்பிராஜாபத்தியம், இவைகளை

ப்பொருந்துகின்ற மகிழ்ச்சியானது மேன்மேலும் பெருக, மாதந்தோறுஞ் செய்யவேண்டும். எ—று. (௬0)

தீதற விளங்கு நட்சத் திரயாக நூல்க ளோதும்
சாதுர்மா சியநல் லாக்கி ரயணமீ ரயனந் தக்கோர்
ஓதுறு மிவைக டம்மை யுதிர்ந்தநெற் பொறுக்கிச் சேர்த்து
ஏதமி லதனால் வேத விதிப்படி யியற்றல் வேண்டும்

இ-ரை.—குற்ற மற்று விளங்காநின்ற, நக்ஷத்திரயாகம், தருமசாஸ்திரங்களிலே சொல்லுகின்ற சாதுர்மாசியம், நன்மையைத் தருகின்ற ஆக்கிரயணம், உத்தராயணம், தக்ஷணாயனம், என்று மேலோர்கள் சொல்லப்படுகின்ற, இவைகளை, உதிர்ந்தநெற்களைப்பொருக்கிச்சேர்த்துக் குற்றமில்லாத, அதனாலே வேதவிதிப்படி செய்யவேண்டும். எ—று. (௬௧)

சாமுடன் வசந்த மென்னச் சாற்றுமி ருதுக்க டம்மில்
துரிசிலா வனத்திற் றோன்றுந் தூயகார் சம்பா வென்னப்
பாவுநெற் களைத்தா னாகப் பண்பொடு பொறுக்கிக் குத்திப்
புரவுறு சருமிக் கோங்கு புரோடாசஞ் செய்தல் வேண்டும்

இ-ரை.—சரத்ருதுவென்றும், வசந்தருதுவென்றும், சொல்லப்பட்டகாலங்களில், குற்றமில்லாத காட்டிலுண்டானதாயும், பரிசுத்தமாயுமிருக்கின்ற, கார்நெல், சம்பாநெல்லென்று மேலோர்கள் சொல்லுகின்ற தானியங்களை, அன்புடனே தானாகவே பொறுக்கிக்கொண்டு வந்து குத்தி, அந்த அரிசியினாலே, காக்கப்படுகின்ற * சருவென்பதையும் மிகமேலாகிய † புரோடாசமென்பதையுஞ் செய்யவேண்டும். எ—று.

சாற்றிய புகழ்ப்பு ரோடா சஞ்சரு விவற்றால் விண்ணோர்க்
கேற்றநல் லோமம் பண்ணி யெஞ்சிய சேடந் தன்னைப்
போற்றுபு புசித்தல் வேண்டும் புகறனக் குப்பு வேண்டில்
தோற்றுவர் மண்டான் காய்ச்சித் துரிசறக் கொள்ளல் வேண்டும்

இ-ரை.—மேற்சொல்லிய புகழையுடைய, புரோடாசம், சரு, இவைகளால், தேவர்களுக்குத் தகுதியான வோமஞ்செய்து மிகுதியைப்பூசித்துப் புசிக்கவேண்டும், சொல்லுகின்ற தனக்கு உப்பு வேண்டுமானால், உண்டாகிய, உவர்மண்ணாலே, தானாகவே குற்றமில்லா மற்காய்ச்சிக் கொள்ளவேண்டும். எ—று. (௬௩)

மூதறி வுடையோர் சொற்ற முறையெழி னகரி னின்றும்
சாதக மூறக்கொ ணர்ந்த தானிய நனிபா கஞ்செய்
தரதாம் பெருக வீசற் கவிர்நிவே தனம்பு ரிந்து
கோதில்க வளமீ ரெட்டுக் கொள்ளலு மூரிய தாமே

---

* சரு என்பது வறுத்த அரிசியினாலே உப்பில்லாமற் சமைத்த வன்னம்.

† புரோடாசம் என்பது ஓமத்திற்காக மாவினால் உப்பில்லாமல் தட்டிச் சுடப்பட்ட அடை.

இ-ரை.—பேரறிவுடையோர்களாற் சொல்லிய கிரமப்படி, அழகிய நகரத்திலிருந்து காரியசித்தியடையும்படி கொண்டுவந்த, தானியங்களை நன்மையுடனே பாகஞ்செய்து, பெருகிய அன்புடனே விளங்காநின்றகடவுளுக்கு நைவேத்தியஞ்செய்து, குற்றமில்லாத பதினாறுகவளவன்னம் புசிக்குதல் முறைமையாகும். எ—று (கச)

தானமேற் குதலி ரண்டாந் தாமனம் புசித்த லீயின்
தேனிலத் தினும்வி ருக்கத் தினுநனி தோன்று மாம்பி
ஈனமார் மதுவங் கோலத் தின்பழந் தீய கஞ்சம்
ஊனிவை யருந்தன் மாத ரொடுபுணர்ந் திடலுந்தீதே

இ-ரை.—தானம்வாங்குதல், இரண்டாந்தரம் அன்னம் புசிக்குதல், ஈயினாற்கட்டப்பட்ட தேன், பூமியிலும், மரங்களிலும், மிகுதியாகவுண்டாகிய காளான், இழிவுபொருந்திய, கள், அழிஞ்சிற்பழம், தீமையைத்தரத்தக்க, கஞ்சா, மாமிசம். இவைகளையுண்ணுதல், மாதர்களுடனே புணர்ச்சிசெய்தல் இவைகளெல்லாந் தீதாகும். எ—று. (கரு)

போசனந் தனக்கு வேண்டும் பொருள்களை யன்றன் றேனும்
ஆசிலோர் திங்கட் கேனு மாறுமா தத்திற் கேனும்
மாசற விளங்கா நின்ற வற்சர மொன்றிற் கேனும்
பாசமிக் கோங்க வேசம் பாதித்துக் கொள்ளல் வேண்டும்

இ-ரை.—தனக்குபயோகமான, ஆகாரத்துக்கு வேண்டும் பொருள்களைத், தினந்தோறுமாவது, குற்றமற்ற ஒருமாதத்திற்காவது, ஆறுமாதத்திற்காவது, பழுதறவிளங்காநின்ற ஒருவருஷத்திற்காவது, மிகுந்தஅன்புண்டாகும்படி சம்பாதித்துக்கொள்ள வேண்டும். எ—று. (கசு)

சலநில மிவற்றி னுண்டாந் தண்மலர் கிழங்கு பைங்காய்
இலைபழம் விருக்கத் துண்டா மினியதே னிவைக ணன்றும்
நிலவுகாய் மூலமாதி நெருப்பிற்பா கஞ்செய் தேனும்
நலமுறெவ் விதத்தி லேனு நனிமகிழ்ந் துண்ண லாகும்

இ-ரை.—ஜலங்களிலும், நிலங்களிலுமுண்டாகிய, குளிர்ச்சி பொருந்திய புஷ்பங்கள், கிழங்குகள், பசியகாய்கள், இலைகள், கனிகள், மரங்களிலுண்டான மதுரமாகிய தேன், இவைகளெல்லாம் புசிப்பதற்குபயோகமாகும். விளங்காநின்ற காய் கனி முதலியவற்றை அக்கினியிற் பாகஞ்செய்தாவது, வேறு நன்மை பொருந்திய எவ்விதத்தினாலாவது, மிகுந்த மகிழ்ச்சியுடனே புசிக்கலாம். எ—று. (கஎ)

மொழிகனி கிழங்கு பைங்காய் முதலிய கிட்டா தாயின்
செழியவா னப்பி ரத்தாச் சிரமவே தியரி டத்தும்
எழிலுறு வனவா சஞ்செய் யில்லறத் தோரி டத்தும்
அழிவற வேற்றுக் கொள்ள லாமென வுரைப்பர் மிக்கோர்

இ-ரை.—சொல்லப்பட்ட கிழங்குகள், பசியகாய்கள் முதலானவைகள் அகப்படாவிட்டால், செழுமையுள்ள வானப்பிரஸ்தாச்சிரம பிராமணனிடத்திலும், வனவாசஞ்செய்கின்ற அழகுபொருந்திய கிரகஸ்தாச்சிரமத்தோரிடத்திலும், தவத்துக்கு இடையூறு நேரிடாமல் யாசகஞ்செய்து கொள்ளலாமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கஅ)

அவர்களு மிலரே யாயி னழகிய நகரிற் சென்று
நிவரிரு கரத்தி லேனு நிகழ்மரக் கலத்தி லேனும்
தவரிறுன் னையினி லேனுஞ் சாற்றுமெண் கவள மேற்றுக்
கவலறப் புசித்தல் வேண்டு மென்பர்கற் றுணர்ந்த மிக்கோர்

இ-ரை.—அவர்களுமில்லாதிருந்தால், அழகுபொருந்திய கிராமங்களிற்சென்று, மேலாகிய இரண்டு கையிலாவது, விளங்காநின்ற மரப்பாத்திரத்திலாவது, கெடுதலில்லாத தொன்னையிலாவது, சொல்லப்படுகின்ற எட்டுக் கவள வன்னம் வாங்கிக் கவலையில்லாமல் புசிக்கவேண்டுமென்று தரும நூல்களைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கக)

கொலைபுரி யாமை மெய்ம்மை கூறல்சோ ரஞ்செ யாமை
பொலிபர மாதர் போகம் விரும்பாமை புகழ்த்த யாளம்
நிலவுமார்ச் சவஞ்ச கித்த னிகழ்திரு திமிதா காசம்
இலகுறு சவுச மென்னு மியமமா நெறியி னின்றும்

இ-ரை.—உயிர்க்கொலை செய்யாமை, உண்மை பேசுதல், பிறர்கள் பொருள்களை அபகரிக்க நினையாமை, விளங்காநின்ற அன்னிய மாதர் போகங்களைக் கனவிலும் விரும்பாமை, பலவாகிய வுயிர்களையுந் தன்னுயிர்போலெண்ணுதல், புத்திரமித்திர களத்திராதிகளிடத்தும், பகைவரிடத்துஞ் சமபாவனை வைத்தல், பகைவர் முதலானவர்களாலே தனக்கு நேரிடுகிற துன்பங்களைச் சகித்தல், பாசபந்த நீங்குதலே மோக்ஷத்திற்கேதுவென்றெண்ணல், அமிர்தத்துக்குச் சமானமாயிருந்தாலும், அளவறிந்துண்ணல், சரீரத்தைச்சுத்திசெய்தலென்னும் இப்பத்துமாகிய இயமநெறிவழுவாது நின்றும், எ—று. (உ0)

வருந்துறு தவஞ்சந் தோட மறைமொழி விசுவா சித்தல்
திருந்திய தானம் பூசை சிரவணந் தீதி லச்சை
பொருந்திய சிரத்தை யன்பிற் புரிசெபம் விரத மென்ன
நிரந்தரம் புகலிப் பத்தா நியமநன் னெறியி னின்றும்

இ-ரை.—வருந்துகின்ற பிறவித் துன்பமற முத்தியுண்மை யெதுவென்று சுத்தமனத்தனா யுணர்தல், பெற்ற பொருள்களைக் கொண்டு மகிழ்தல், வேதங்களிற் கூறிய கருமங்களை விடாதனுஷ்டித்தல், தருமவழியிற் றேடிய பொருள்களை நல்லொழுக்கமுள்ளவர்களுக் கன்போடு கொடுத்தல், தேவாராதனை செய்தல், வேதாந்த சிரவணஞ் செய்தல், குற்றமற்ற வைதீக நெறிக்கும், இலௌகீக நெறிக்கும், விரோ

தமான கருமங்களில் நாணமடைதல், வைதிக கருமங்களிற் சிரத்தை யுண்டாதல், சற்குரு வுபதேசப்படி யன்போடு செபித்தல், சாந்திராயணங் கிருச்சிரமுதலிய விரதங்களை வழுவாதனுஷ்டித்தல், என்று சொல்லப்பட்ட நெருங்கிய இப்பத்துமாகிய நியமநெறி வழுவாதுநின்றும், எ—று. (உக)

கூறருஞ் சுவத்தி கஞ்சிர்க் கோமுகம் பதுமம் வீரம்
சீறடற் சிங்க மேபத் திரநனி விளங்கு முத்தம்
வீறுசேர் தருமயூர மேதரு சுகமே யென்ன
மாறிலா சனமொன் பானும் வான்முறை யறிந்த மைத்தும்

இ-ரை.—இரண்டு துடைக்கு முழங்காலுக்கு நடுவே இரண்டுள்ளங்காலையுஞ் சேர்த்திருத்தலாகிய, சொல்லுதற்கரிய சுவஸ்திகாசனமும், சகனப்பக்கத்தி லிருகாற் பரட்டையு மாறவைத்திருத்தலாகிய, சிறப்புப்பொருந்திய கோமுகாசனமும், இரண்டு துடை மேலு மிரண்டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்து, அவ்விருகாற் பெருவிரல்களைக் கைகளால் மாறிப் பிடித்திருத்தலாகிய பத்மாசனமும், வலத்துடை மேலிடக்காற் பரட்டைச் சேர்த்து, இறுமாப்புற்றிருத்தலாகிய வீராசனமும், இரண்டுகாற் பரட்டையு மிரண்டு அண்டத்தின் கீழ் மாறி வைத்து, இரண்டு முழங்காலின்மேல் விரல்களை விரித்திரண்டு கைகளையும் வைத்து, நாசியைப் பார்த்திருத்தலாகிய சிறந்த வலியுள்ள சிங்காசனமும், இருகாற் பரட்டையும் அண்டங்களின் கீழ் வைத்து இருதுடையிலு மிருகை யூன்றி யிருத்தலாகிய பத்திராசனமும், இடக்காற் பரட்டை அண்டத்தின் கீழ் வைத்து அதன் கீழ் வலக்கால் பரட்டை ஒட்டவைத்திருத்தலாகிய, நன்மையுடனே விளங்காநின்ற முத்தாசனமும், முழங்கை யிரண்டும் நாபிப் புறத்திலழுந்த நிலத்திற் கையூன்றி, அடிமுதற் சிரம்வரையில் நிலத்திலுறாது மேலெழும்பி யிருத்தலாகிய, மேன்மை பொருந்திய மயூராசனமும், எவ்விதத்திற் சுகமுந் தைரியமுமுண்டாகுமோ அவ்விதமாக இருப்பதாகிய மேலான சுகாசனமும், ஆகிய மாறில்லாத இவ்வொன்பதாசனத்தையும், வரன்முறையாகத் தெரிந்து செய்தும், எ—று. (உஉ)

இடையினு கருட ணஞ்செய் தீரெண்மாத் திரைகால் பூரித்
தடையகா ரத்தி யான மன்பொடு செய்தக் காலை
நடையறு பத்து நான்கு மாத்திரை நன்கு கும்பித்
துடையபன் னலமு மெய்த வுகாரத்தி யானஞ் செய்து

இ-ரை.—இடைகலையினாலே, பிராணவாயுவை, ஆகருஷணஞ்செய்து, பதினாறு மாத்திரை வரையில், நிறைத்து, அன்போடு மேன்மை பொருந்திய அகாரத்தியானஞ்செய்து, அந்தப்பிராணவாயுவை முறையாக, அறுபத்துநான்கு மாத்திரை வரையில், நன்மையுடனே சமப்படுத்தி யடக்கி, சுதந்தரமாகப்பல நலங்களையுமடையும் பொருட்டு, உகாரத்தியானஞ்செய்து, எ—று. (உங)

பின்னரவ் வனிலந் தன்னைப் பிங்கலை மார்க்க மாக
மன்னுமுப் பத்தி ரண்டு மாத்திரை யிரேச கித்துக்
தென்னுறு மகாரந் தன்னைத் தியானித்த லாதி யாகச்
சொன்னதோர் பிராணா யாமத் துறைபெலா முணர்ந்து செய்தும்

இ-ரை.—அதன்பின்பு அந்தப்பிரரணவாயுவை, பிங்கலைநாடி வழியாகவே பொருந்திய, முப்பத்திரண்டுமாத்திரைவரையில் விடுத்து, அழகுபொருந்திய மகாரத்தியானஞ்செய்தல் முதலாகச் சற்குருவாலுபதேசிக்கப்பட்ட ஒப்பில்லாத பிராணுயாம முறைமைகளையெல்லாம் ஆராய்ந்தறிந்து செய்தும், எ—று. (உ௪)

பலபல விடயந் தம்மிற் பற்றுமிந் தியங்க டம்மை
இலகறி வாற்ற டுத்திட் டேவச மாக்கி யெங்கும்
நிலவுறு பவஞ்ச மெல்லா நிறைபர சொரூப மாக
அலமறு துணர்பி ரத்தி யாகார நெறியி னின்றும்

இ-ரை.—பல பலவாகிய வுலக விஷயங்களிலே ஆசையைப பெருக்கித்தொடர்கின்ற, பஞ்சேந்திரியங்களை, பலவற்றுள்ளுமேலாக விளங்காநின்ற பேரறிவினுலே அடக்கி வசப்படுத்திக்கொண்டு, பிரகாசிக்கின்ற பிரபஞ்சங்களையெல்லாம், எவ்விடங்களிலும் பூரணமாக நிறைந்துள்ள பரப்பிர்ம சொரூபமாகவே, சுழற்சி யடையாமலுணரும்படியான பிரத்தியாகார நெறியில் நின்றும், எ—று. (உ௫)

பதமுதன் முழங்கால் காறும் பார்ப்பாகங் குதத்தின் காறும்
இதமுறு புனலின் பாக மிதயமட் டழலின் பாகம்
பதிகளும் வரையிற் காலின் பாகமாஞ் சிரத்தின் காறும்
துதிசெய் விண் பாக மென்னச் சொல்லுவர் மறையு ணர்ந்தோர்

இ-ரை.—பாதமுதல் முழங்கால் வரையிலும், பிருதிவியின் பாகமெனவும், அதற்குமேல் குதத்தின் வரையிலும், நன்மை பொருந்திய அப்புவின்பாக மெனவும், அதற்குமேல் இதயம் வரையிலும், தேயுவின்பாகமெனவும், அதற்குமேற் பொருந்திய கழுத்தின் வரையிலும், வாயுவின்பாக மெனவும், அதற்குமேல் சிரசுவரையிலும், யாவருந்துதிக்கின்ற ஆகாயத்தின்பாகமெனவும், வேதங்களை யுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (உ௬)

பொலிவுறப் புகலிவ் வைந்து பூததா னங்க டம்மில்
நலமுறு பிரமன் மாய னருமுருத் திரன்ம கேசன்
வலசதா சிவனே மற்றி வரைத்தனித் தனியாங் காங்கு
தலமகிழ் தாப்பா விக்குந் தாரணை முறையே செய்தும்

இ-ரை.—அழகுபொருந்த மேற்சொல்லிய இந்தப் பஞ்சபூத ஸ்தானங்களில், நன்மை பொருந்திய பிரமன், விஷ்ணு, விளங்காநின்ற வுருத்திரன், மகேச்சுரன், வலிபொருந்திய சதாசிவன், என்று சொல்லப்பட்டவர்களை மேற்சொல்லிய முறைப்படியே தனித்தனி அந்தந்த ஸ்தானங்ளில், உலகத்தார்மகிழும்படி பாவிக்கின்ற தாரணையை வரன்முறையாகவே செய்தும், எ—று. (உ௭)

நலங்கொண்மா மறைக ளோது ஞானவா னந்த மாகி
வலங்கொளுஞ் சமயாதீத வத்துவாய் நித்த மாகித்
துலங்குபூ ரணமா யென்றுஞ் சுயம்பிர காச மாகி
இலங்குறு பிரமந் தன்னை யிரண்டறத் தியனஞ் செய்தும்

இ-ரை.—நன்மை பொருந்திய அழகிய வேதங்களெல்லாங் கொண்டாடப்பட்ட, ஞானானந்த சொரூபமாகியும், வெற்றியைக் கொண்டதாகச் சொல்லப்படுகின்ற சமயாதீதப் பொருளாகியும், அழிவில்லாததாகியும், எவ்விடங்களிலும் பிரகாசிக்கின்ற பரிபூரணமாகியும், எக்காலத்துஞ் சுயம்பிரகாசமாகியும், விளங்காநின்ற பிர்மத்தை யிரண்டறத்தியானஞ்செய்தும், எ—று. (௪௮)

உடலுயிர் கரணம் பூத மொளிர்பொறி புலன்கண் மாயை
தொடர்புறு மிவைநா னென்று சொலுஞ்சழக் குணர்வொ ழித்துத்
திடமொடு தனையு ணர்ந்து திகழ்பர வொளியி லொன்று
வடலுறப் பொருந்து மெண்ண மாஞ்சமா தியைய டைந்தும்

இ-ரை.—சரீரம், ஜீவன், அந்தக்கரணங்கள், பஞ்சபூதங்கள், பிரகாசிக்கின்ற பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன்கள், மாயை, தொடர்ச்சி பொருந்திய இவைகளை நானென்று சொல்லுகின்ற, பொய்யுணர்ச்சியை யொழித்து, திடஞானத்துடனே தன்னையறிந்து வெற்றிபொருந்த விளங்காநின்ற மேலாகிய தேஜாமயத்தில் ஒன்றாகப் பொருந்துகின்ற வெண்ணமாகிய சமாதியை யடைந்தும், எ—று. (௪௯)

நனிதவம் புரிதல் வேண்டு நற்கதி யடையும் வண்ணம்
புனிதமா மறைக ளெல்லாம புகனெறி வழுவா தாற்றி
இனிதவா வொழிந்த பின்னர் யாவுமுற் றத்து றந்து
தனியனாய்ச் சந்நி யாசந் தான்பெறன் முறைமை யாமே

இ-ரை.—விசேஷமாகிய தவஞ்செய்யவேண்டும், நல்ல மோட்சத்தை யடையும் பொருட்டு, பரிசுத்தமாகிய பெருமையையுடைய, வேதங்களெல்லாம் சொல்லுகின்ற முறைபிசகாமற்செய்து, இன்பத்துடனே சகலஆசைகளுநீங்கியபின்பு, யாவற்றையுமுற்றத்துறத்து ஏகாங்கியாகிச் சந்நியாசம் பெற்றுக்கொள்ளுதல் வரன்முறையாகும், எ—று. (௫0)

வானப்பிரஸ்தவிதியுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௩௪0.

நாற்பத்துநான்காவது

சந்நியாசவிதியுரைத்த வத்தியாயம்.

கொச்சககலிப்பா.

தேசுதிகழ் வெண்டாளஞ் செம்பவள மாதியெலாம்
வீசுதிரைக் கருங்கடல்சூழ் வியனுலகின் மிக்கோர்கள்
பேசுபுகழ் மிகுவானப் பிரத்தவிதி சிறிதுரைத்தாம்
ஆசினல மலிசந்நி யாசவிதி யையும்புகல்வாம்

இ-ரை.—கேளுஞ்சுவிரதமகாராஜனே, இதுவரையில், ஒளிவிளங்காநின்ற வெண்ணிறமுள்ள முத்துகள், செந்நிறமுள்ள பவளங்கள் முதலியவற்றை யெல்லாம், கரையோரங்களில் வீசுகின்ற அலைகளையுடைய கரிய கடலாற் சூழப்பட்ட விசாலமாகிய, பூமியிலுள்ள பெரியோர்கள் சொல்லுகின்ற புகழ்ச்சி மிகுந்த, வானப்பிரஸ்தாச்சிரம விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம். இனி குற்றமில்லாத நன்மைமிகுந்த சந்நியாச ஆச்சிரம விதியையுஞ் சொல்லுவோமென்றார் காஸ்தி மகாமுனிவர். எ—று. (க)

ஆயுளோ ரெழுபத்தைந் தாகியபின் றருமார்த்தம்
ஏயகா மியங்களுக்கா மெத்தனங்க ளறவொழித்துப்
பாயகா மாதியறு பகையின்றி யெவ்வுயிர்க்கும்
நேயமுள னுச்சந்நி யாசமுற னெறியாமே.

இ-ரை.—வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருப்பவன், எழுபத்தைந்து வயதுசென்ற பின்பு, பொருந்திய, அறம்பொருளின்பங்களுக்காக வேண்டிய சகலபிரயத்தனங்களையு நீக்கி, விரிவாகிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், என்னும் ஆறுபகையுமில்லாமல், எவ்வுயிர்களிடத்திலும் அன்புள்ளவனாகச் சந்நியாசவாச்சிரமத்தைப் பொருந்துதல் முறைமையாகும். எ—று. (உ)

புகழ்பிரம சரியமொடு பொலிவுபெறு காருகத்தம்
இகழ்வில்வா னப்பிரத்த மெனுமூன்றாச் சிரமத்தும்
திகழ்முனிவர் பிதுர்க்களுயர் தேவர்கடன் புரியாது
நிகழ்சநியா சம்பெறுவோர் நிகழ்த்துகொடு நரகடைவர்

இ-ரை.—யாவரும்புகழ்கின்ற பிரமசரியம், பொலிவினையுடைய கிருகஸ்தம், இகழ்ச்சியில்லாத வானப்பிரஸ்தம், என்றுசொல்லப்பட்ட மூன்றாச்சிரமங்களிலுமிருந்து, பிரகாசியாநின்ற முனிவர்கள், பிதுர்க்கள், மேலாகியதேவர்கள், என்று சொல்லப்பட்ட மூவர்களுக்கு முறையே, வேதங்களை யோதுதல், பிள்ளைகளைப்பெறுதல், எக்கியங்கள்செய்தல், என்னுமூன்றுநியதிகளையுஞ்செய்யாமல், விளங்குகின்ற சந்நியாசம் பெற்றுக்கொள்பவர்கள் கொடியதென்று சொல்லுகின்ற நரகத்தை யடைவார்கள். எ—று. (௩)

மறையோதன் மகப்பெறுதன் மகிழ்வுறுமெக் கியம்புரிதல்
முறையோமம் பலிவிரத முதலியவுஞ் செய்தபினர்த்
தறையோர்சொ லிவைகளெலாந் தானியதி யுடனீக்கி
அறையார்வ மிகுசந்நி யாசம்பெற் றிடல்விதியே.

இ-ரை.—வேதங்களையோதுதல், பிள்ளைகளைப்பெருதல், மகிழ்ச்சி பொருந்திய எக்கியங்களைச்செய்தல், விதிப்படி ஹோமஞ்செய்தல், பலியிடுதல், விரதங்களைஅனுஷ்டித்தல், முதலியவற்றை யெல்லாஞ்செய்து, பூமியிலுள்ளவர்கள் சொல்லுகின்ற இவைகளை யெல்லாம் வரன்முறையாக வொழித்து, மேலாகச்சொல்லுகின்ற அன்பு மிகுந்தசந்நியாசம் பெற்றுக்கொள்ளுதல் முறைமையாகும். எ—று. (௪)

பாங்குறுபி ராஜாபத் தியவேள்வி முறையாற்றி
ஓங்கனலை யாத்துமச மாரோப ணம்புரிந்து
தீங்கறுபு கிரகத்தாச் சிரமத்தி லினிதிருந்தே
நீங்கரிய புகழ்மிகுசந் நியாசமடைந் திடலாகும்.

இ-ரை.—அழகுபொருந்திய பிராஜாபத்திய இஷ்டியை நியதியாகச்செய்து, மேலாகிய அக்கினியை, ஆத்மசமாரோபணஞ்செய்துகொண்டு, குற்றமற்ற கிரகஸ்தாச்சிரமத்திலிருந்தே, நீங்காத புகழ்மிகுந்த சந்நியாசம் பெற்றுக் கொள்ளலாகும். எ—று. (௫)

சந்நியா சம்பெறுவோர் தாடிநக மீசையொடு
சென்னிமயி ரிவைமழித்துச் செங்கறேய் தருமாடை
பன்னுகமண் டலந்தண்டம் பவித்திரங்கோ வணந்தரித்து
நன்னியமத் துயர்பிரம ஞானநிட்டை செயல்வேண்டும்.

இ-ரை.—சந்நியாசம்பெற்றுக்கொள்வோர், தாடி, நகம், மீசை, தலைமயிர்,இவைகளையெல்லாமழித்து, காவிநனைத்தவஸ்திரம், சொல்லுகின்றகமண்டலம்,தண்டம், பவித்திரம், கோவணம், இவைகளை யெல்லாந்தரித்துக் கொண்டு, நல்லநியமத்துடனே மேலாகிய, பிரமஞான நிஷ்டைசெய்யவேண்டும். எ—று. (௬)

பதியிலா மலுந்தணலிற் பாகஞ்செ யாமலும்பார்
வதியுயிர்கட் கூறியற்று மலுமென்று மோரிடத்தில்
திதியிலா மலுநகரிற் றிகழுமோ ரைந்திரவும்
இதமுறுகி ராமத்தோ ரிரவும்வசித் திடல்வேண்டும்

இ-ரை.—வீடில்லாமலும், அக்கினியிற் பாகஞ் செய்யாமலும், பூமியிலுள்ள வுயிர்களுக்குத் தீங்குசெய்யாமலும், என்றுமோரிடத்திலேயே நிலைபெற்றிலாமலும், விளங்காநின்ற நகரங்களில், ஐந்திராத்திரியும், இன்பமிகுந்த கிராமங்களில், ஓரிராத்திரியும், வசிக்கவேண்டும். எ—று. (எ)

ஒவில்பகை யுறவுவெறுப் புறுவிருப்பி லாமலுஞ்சீர்
மேவொருவர் தரப்படினும் விடயபோ கங்களிலே
ஆவலுறு மலுமொருவர்க் காந்தைபுரி யாமலுமே
தாவின்மௌ னத்திெனாடு தனியிருத்தல் வேண்டுமால்

இ-ரை.—நீங்குதலில்லாத, பகை, உறவு, வெறுப்பு, விருப்பு, இவைகளில்லாமலும், சிறப்புப் பொருந்திய ஒருவரால் கொடுக்கப்பட்டாலும், விஷயபோகங்களிலே விருப்பமில்லாமலும், ஒருவருக்குத் தீங்குசெய்யாமலும், கெடுதலில்லாத மௌனவிரதத்துடனே, ஏகாங்கியாயிருக்கவேண்டும். எ—று. (அ)

அளியுலக விவகார மாயவீண் மொழிகளையும்
விளிவிறரு மார்த்தகா மியவிடய மொழிகளையும்
இளிவுறுபொய்ம் மொழிகளையு மியம்பாமன் மயங்காமல்
தெளிவின்மறை புகல்பிரம சிந்தனைசெய் திடல்வேண்டும்

இ-ரை.—அன்பினையுடைய உலகவிவகாரமாகிய வீண்வார்த்தைகளையும், கெடுதலில்லாத அறம்பொருளின் பங்களைக்குறித்த விஷயசம்பந்தமாகிய வார்த்தைகளையும், இழிவுறுபொருந்திய பொய்வார்த்தைகளையும், பேசாமல் யாதொருவிஷயங்களிலும மயங்காமல், அறிவுடனே வேதங்களாற் சொல்லப்படுகின்ற பிர்மசிந்தனை செய்யவேண்டும். எ—று. (கூ)

தனக்ககிதம் பிறர்செயினுந் தானிதமே செயல்வேண்டும்
மனக்கனர்செய் பிணிதீர மருந்துணா துறல்வேண்டும்
உனற்கரிய தீங்குறினு முண்மைபே சுதல்வேண்டும்
சினக்குமவர்க் குவகையே செயல்வேண்டு மெனுமறையே.

இ-ரை.—தனக்குப்பிறர்கள் துன்பஞ்செய்தாலும், தான்இன்பமேசெய்யவேண்டும். மனசுக்குத் துன்பத்தை விளைவிக்கின்ற, நோய்கள் தீரவேண்டுமென்று, மருந்துசாப்பிடாதிருக்கவேண்டும், நினைத்தற்கரிய கெடுதி நேரிட்டகாலங்களிலும், மெய்யேபேசமென்று வேதங்கள் சொல்லும் எ—று. (க0)

மேதகுசெஞ் சுடர்விடுபொன் வெள்ளிதாம் பிரங்கஞ்சம்
ஆதியுலோ கங்களினு லமைந்தபாத் திரங்களொழித்
தோதிலமண் மரம்வேணு வொளிர்தெங்கின் காய்சுரைக்காய்
தீதிலிவற் றாலமைபாத் திரங்களைக்கைக் கொளல்வேண்டும்

இ-ரை.—மேம்பாடுபொருந்திய செவ்விய கிரணங்களையுடைய, பொன்,வெள்ளி, தாம்பிரம், வெண்கலமுதலிய, உலோகங்களினாலே செய்யப்பட்டிருக்கிற பாத்திரங்களை நீக்கி, மேலோர்களாற்சொல்லப்படுகின்ற, இலை, மண், மரம், மூங்கில், விளங்குகின்ற தேங்காய், சுரைக்காய், குற்றமில்லாத, இவைகளாலே செய்யப்பட்டிருக்கிற பாத்திரங்களை வைத்துக் கொள்ளல்வேண்டும். எ—று. (கக)

அத்தகுபாத் திரங்களைமண் ணறலினாற் சுத்திபுரிந்
தொத்தபலி முறையினேற் றொருவேளை யுணல்வேண்டும்
நத்துபலி கிட்டாதே னனிதுயருங் கிடைத்திடுமேல்
சித்தமகிழ்ச் சியுமின்றிச் சிவத்யானஞ் செயல்வேண்டும்

இ-ரை.—தகுதியுள்ள அந்தப் பாத்திரங்களை மண்ணினாலுஞ் சலத்தினாலுஞ் சுத்திசெய்து, பொருந்திய விதிப்படி பிக்ஷை வாங்கி, ஒருவேளை புசித்தல் வேண்டும். விரும்பப்படுகின்ற பிக்ஷை யகப்படாவிட்டால், மிகுந்த துக்கமும், அகப்பட்டால் மனமகிழ்ச்சியுமில்லாமல், பிர்மத்தியானஞ் செய்யவேண்டும். எ—று. (கஉ)

சாதிகுல நலமொழுக்கந் தமிற்சிறந்தோர் கிரகத்தில்
ஓதுறுகா லங்களுணர்ந் தொண்பலிக்கே குதல்வேண்டும்
கோதகல நீர்வடித்துக் கொண்டுபருகுதல் வேண்டும்
மேதினியி லுயிர்கள்விளி யாதுநடந்திடல் வேண்டும்.

இ-ரை.—சொல்லுகின்ற ஜாதி, குலம், நன்மை, ஆசாரம், இவைகளிற் சிறந்தோர்கள் வீட்டில் காலங்களை யறிந்து நன்மைபொருந்திய பிக்ஷைக்குப்போகவேண்டும். ஜலத்தை அதிலுள்ள குற்றங்கள் நீங்கும்படி வடிக்கட்டிக்கொண்டுச் சாப்பிடவேண்டும். பூமியிலுள்ள சிற்றுயிர்கள் துன்பமுறாமல் நடத்தல் வேண்டும். எ—று. (கரு)

சாற்றொரு வீட்டிற் பிரமசாரி வானப்பிரத்தன்
ஊற்றமுறு பலிக்காவந் துறுங்காலத் தினுஞ்ஞமலி
போற்றுபற வைகளன்னம் புசிக்குங்கா லத்தினுந்தான்
ஏற்றபலிக் கெய்துதறீ தென்னவரு மறைபுகலும்

இ-ரை.—சொல்லப்பட்ட ஒரு வீட்டில் பிரமசாரி, வானப்பிரஸ்தன், இவர்கள் பலம் பொருந்திய பிக்ஷைக்காக வந்திருக்கின்ற காலங்களிலும், புகழப்படுகின்ற நாய் பக்ஷி, இவைகள், அன்னம் புசித்துக்கொண்டிருக்கும்போதும், தான் தகுதியான பிக்ஷைக்குப் போகுதல் தீதாகுமென்று அரியவேதங்கள் சொல்லும். எ—று. (கச)

மந்திரஞ்சோ திடநிமித்தம் வசியம்வை யித்தியம்வாதம்
நந்தலுறு துயர்தருக்க நகுசாலம் பக்ஷிசாம்
சிந்தைமகிழ் வுறுமிவற்றாற் றிகழ்தருநற் பலிதேடல்
அந்தமிகு கடவுண்மறை யனைத்துந்தீ தெனவிளம்பும்

இ-ரை.—கெடாத மேன்மையையுடைய ஜோதிஷசாஸ்திரம், நிமித்தசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், பக்ஷி சாஸ்திரம், சரசாஸ்திரம், மனமகிழ்ச்சியைத் தருகின்ற இவைகளைச் சொல்லியும், மந்திரம், வசியம், வயித்தியம், இரசவாதம், விளங்காநின்ற ஜாலம், இவைகளைச் செய்தும், விளங்குகின்ற நல்ல பிக்ஷை சம்பாதித்தல், தீதாகுமென்று மிகுந்த அழகுபொருந்திய தெய்வத்தன்மையுள்ள வேதங்களெல்லாஞ் சொல்லும். எ—று. (கரு)

பகரொருவர் பூசித்துப் பலியாதி மகிழ்ந்துதரில்
புகாறத்தான் றடுக்காதப் பூசைதனை விரும்புவரேல்
தகாரிய முத்திபெறுஞ் சமயமா யினுமதனுல்
அகிலமதின் மறுமைதனை யடைவரென மறைபுகலும்

இ-ரை.—சொல்லப்பட்டதன்னை யொருவர் பூசித்துப் பிக்ஷை முதலியவைகளைக் கொடுத்தால், குற்றநீங்கும்படித் தானதைத்தடுக்காமல், அந்தப் பூசையில் விருப்பங்கொண்டால், சிதைவில்லாத மோக்ஷமடையுஞ்சமயமாயிருந்தாலும், அதனாலே பூமியினிடத்தில் மறுபிறப்பை யடைவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (கசு)

இந்திய நாசஞ்செய்த லிராகாதி களையொழித்தல்
செந்திமிசை புரியாமை சிறிதாக வுணவருந்தல்
உந்திய வேகாந்தத்தி லுறவசித் தலாதியெலாம்
அந்தமில்சீர்க் கதிபெறுதற் கறிகுறியா மெனுமறையே

இ-ரை.—பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்தல், இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம், ஈரிஷை, அசூயை, இடம்பம், தர்ப்பம், அகங்காரமென்னும் இவைகளை யொழித்தல், ஜீவஹிம்சை செய்யாமை, ஆகாரங்களை அற்பமாகப் புசித்தல், ஏகாந்தத்தி லுயர்வுபொருந்த வசித்தல், இவை முதலியவெல்லாம் முடிவில்லாத சிறப்பினையுடைய மோக்ஷத்தை யடைவதற்கு, அடையாளமாகுமென்று வேதங்கள் சொல்லும். எ—று. (கஎ)

நல்லொழுக்கம் பொறுமைதிட ஞானமனோ நிக்கிரகம்
புல்லுமகிழ் வினியமொழி பொறியடக்கல் சினமின்மை
பல்லுயிர்க ளிடத்தன்பு பார்பரவு மெய்ம்மையெனச்
சொல்லறங்க ளுடையர்பர சுகமடைவ ரெனுமறையே

இ-ரை.—நல்லொழுக்கம், பொறுமை, திடஞானம், மனோநிக்கிரகஞ் செய்தல், பொருந்திய மகிழ்ச்சிபெறுதல், யாவரிடத்து மினியமொழி கூறுதல், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளை யடக்குதல், கோபமில்லாமை, பலவாகிய ஜீவர்களிடத்திலு மன்புவைத்தல், பூமியிலுள்ளவர்கள் துதிக்கப்படுகின்ற உண்மைபேசுதல், என்று சொல்லுகின்ற தருமங்களையுடையவர்கள், மேலான மோக்ஷவின்பத்தை யடைவார்களென்று வேதங்கள் சொல்லும் எ—று. (கஅ)

தீயகன்மத் தாலடையுஞ் செனனமுறு மூப்புபல
வாயபிணி மாணநர கடரியம யாதனைமேல்
எயசெடி யோனிகளி லெய்தலுமா மிவைதம்மால்
மேயதுய ருணர்ந்துமறை விதியொழுகல் வேண்டுமால்

இ-ரை.—பாவ கருமங்களினாலுண்டாகும் பிறவித்துன்பமும், தளர்ச்சிபொருந்திய கிழத்தன்மையும், பலவாகிய நோய்களும், நரகங்களும், நெருங்கிய எமயாதனைகளும், பின்பு பொருந்திய பாவயோனிகளிற் பிறத்தலுமாகிய இவைகளினாலே யுண்டாகுந் துன்பங்களை யெல்லாமுணர்ந்து, வேதங்களில் விதித்த முறைதவறாதொழுகவேண்டும். எ—று. (௧௯)

பரம்பொருள்பல் லோரிடத்தும் பாயவரு ளொடுநிறைந்து
வரம்பில்சுக துக்கங்கண் மாண்பினருள் புரிவதையும்
உரம்பொலி மெய்ஞ்ஞானத்தா லுண்டாகு மழிவறுசீர்
நிரம்புபர முத்தியையு நினைந்தொழுகல் வேண்டுமால்

இ-ரை.—பரமாத்மாவானவர் விசாலமாகிய திருவருளுடனே பலவாகிய ஜீவர்களிடத்திலு நிறைந்து, அளவில்லாத சுகதுக்கங்களை மாக்ஷிமையுடனே கொடுத்தருள்வதையும், திடம்பொருந்திய உண்மைஞானத்தினா லுண்டாகும் அழிவில்லாத நன்மைபொருந்திய மேலான மோக்ஷ வின்பத்தையும், ஆலோசித்துணர்ந்தொழுக வேண்டும். எ—று. (௨௦)

இரவுபக லிற்றெரியா தின்னுயிர்க ளிறப்பதனால்
விரவியபா வந்தொலைய விளங்குபுன லாடியபின்
பரவுபுகழ் மறைநெறியே பகருமிரு மூன்றுமுறை
அரியபிரா ணாயாம மன்பினொடு செயல்வேண்டும்

இ-ரை.—இரவிலும் பகலிலும் தனக்குத் தெரியாமல், இனிதாகிய ஜெந்துக்களிறந்துபோகிறதினா லுண்டாகிய பாவம் நீங்குவதற்காக, விளங்குகின்ற ஜலத்திலே ஸ்நானஞ்செய்த பின்பு, யாவரும் புகழ்கின்ற வேதத்தில் முறையே சொல்லப்படுகின்ற அருமையாகிய பிராணாயாமத்தை அன்புடனே ஆறு முறை செய்யவேண்டும். எ—று. (௨௧)

மறையுவர் வியாகிருதி மன்னுகா யத்திரிசீர்
நிறைபிரண வத்தினொடு நிலவுபிரா ணாயாமம்
முறைவழுவா தறுமன்பின் மும்முறைசெய் யினுமதுவே
அறையுமுயர் தவமாகு மென்னவரு மறைகூறும்

இ-ரை.—பிராமணர்கள், வியாகிருதிபொருந்திய காயத்திரி, அழகு நிறைந்த பிரணவம், இவைகளோடு கூடி விளங்காநின்ற பிராணாயாமத்தை, வேத விதிதவறாமல் பொருந்திய அன்போடு மூன்றுதரஞ் செய்தாலும், அதுவே சொல்லப்படுகின்ற மேலாகிய தபசுக்குச் சமானமென்று அரியவேதங்கள் சொல்லும். எ—று. (௨௨)

பொற்பணிக ளூறுமாசு பொங்குதண விடைக்காய்ச்சில்
பற்பலவு நீங்குதல்போற் பரவுபுவி யோர்தேகத்
திற்பொருந்து மளவாத விந்திரிய தோடமெலாம்
அற்பினியற் ருயாமத் தாற்றீரு மெனுமறைகள்

இ-ரை.—பொன்னுலாகிய ஆபரணங்களை, ஜொலிக்கின்ற நெருப்பிற் காய்ச்சினுல், அதிலுள்ள பல பல அழுக்குகளும் நீங்குதல்போல, சொல்லுகின்ற பூமியிலுள்ளவர்கள் தேகத்தைச் சார்ந்த அளவில்லாத இந்திரிய தோஷங்களெல்லாம், அன்போடு செய்யப்படுகின்ற பிராணுயாமத்தால் நீங்குமென்று வேதங்கள் சொல்லும். எ—று. (உ௩)

வெருவறுமிந் தியவசத்தால் விடயாதி சுகங்களையும்
பெருகுறுபத் தியினுற்பி ரார்த்த வினைகளையும்
கருதுறுதி யானத்தாற் காமாதி பகைகளையும்
மருவுபிர மானந்த மன்னவொழித் திடல்வேண்டும்

இ-ரை.—அச்சமில்லாத இந்திரிய நிக்கிரகத்தினுலே, விஷய சம்பந்த முதலிய சுகங்களையும், பரமாத்மாவினிடத்திற் செய்யப்படுகின்ற பெருகிய பத்தியினுலே, பிராரத்தகருமங்களையும், எண்ணப்படுகின்ற பிரமத்தியானத்தினுலே, காமக் குரோத முதலிய பகைகளையும், மேன்மை பொருந்திய பிரமானந்தமடையும் பொருட்டு நீக்க வேண்டும். எ—று. (உ௪)

தழுவுறுதி யானத்தாற் சகலவிட யங்களிலும்
இழிவறவ வாவொழித்தோ ரிம்மையிலு மறுமையிலும்
அழிவறுபே ரின்புறுவ ரருள்பெறு தியானமிலார்
ஒழிவறுபல் பிறப்பிறப்பி லுழல்வரென மறைபேசும்

இ-ரை.—விரும்பிச் செய்யப்படுகின்ற பிரமத்தியானத்தினுலே, குற்றநீங்கச் சகல விஷயங்களிலும் ஆசையொழிந்தவர்கள், இம்மையிலும், மறுமையிலும், அழிவில்லாத பேரின்பத்தை யடைவார்கள். திருவருளைப் பெறுதற்குரிய பிரமத்தியானமில்லாதவர்கள். நீங்குதலில்லாத பலவாகிய ஜெனன மரணங்களினுலே வருந்தித்திரிவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (உ௫)

நித்தகன்மஞ் செயலானு நீக்கல்செயா மையினுலும்
அத்திதவிர் சாந்திரா யணுதிதவஞ் செயலாலும்
ஒத்தபல விடயப்பற் ருெழித்திடலா லுஞ்சிறந்த
முத்தியெளி துண்டாகு மென்னமுது மறைநவிலும்

இ-ரை.—நித்தியகர்மானுஷ்டானஞ் செய்வதாலும், உயிர்க்கொலை செய்யாமையினுலும், கொலை முதலிய பாவங்களை நீக்குகின்ற, சாந்திராயணுதி தவஞ் செய்வதாலும், இந்திரியங்களுக்குப் பொருந்திய பலவாகிய விஷயப் பற்றுகளை நீக்குதலா

லும், மேலாகிய மோக்ஷம் எளிதிலுண்டாகுமென்று பழமையாகிய வேதங்கள் சொல்லும். எ—று. (௨௬)

தற்பாதி யானத்தாற் றன்னந்தன் னமதாகப்
பற்பலபந் தங்களிலும் பற்றறவே யொழித்துமறை
சொற்கருமம் ஞானமெனுந் துரிசில்யோ கங்களினால்
உற்பவந்தீர் பிரமசா யுச்சியமெய் திடல்வேண்டும்

இ-ரை.—பிரமத்தியானத்தினாலே பல பலவாகிய சமுசார பந்தங்களிலும், கொஞ்சங் கொஞ்சமாக விருப்பத்தை அறவே யொழித்து, வேதங்களிற் சொல்லப் படுகின்ற கருமயோகம், அல்லது ஞானயோகம், என்னும் குற்றமற்ற யோகங்களினாலே, பிறவித்துன்பம் நீங்கிப் பிரமசாயுச்சியத்தையடைய வேண்டும். எ—று. (௨௭)

கன்மயோ கம்புரிவோர் கருதருபி ராரத்த
கன்மமற வொழிந்தவுடன் கரிசறுமுத் தியையடைவர்
நன்மையினி துறுமுண்மை ஞானயோ கம்புரிவோர்
பன்மறைசொல் வீடிட்டப் படியடைவ ரெனுமறையே

இ-ரை.—கருமயோகஞ் செய்வோர்கள் நினைத்தற்கரிய பிராரப்தகருமம் முழுது நீங்கியவுடன், குற்றமற்ற மோக்ஷத்தை யடைவார்கள். நன்மையாகவே யினிது பொருந்திய உண்மையாகிய ஞானயோகஞ் செய்வோர்கள், பலவாகிய நூல்களாற் சொல்லப்படுகின்ற மோக்ஷத்தைத் தனக்கிஷ்டமானபோது அடைவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (௨௮)

விரிசீர்பெற் றுலகுபுகழ் வேதாந்த மதன்பொருளைத்
தெரியாம லுரைப்பவருந் தெரிந்தோது கின்றவரும்
துரிசாரும் பாவமெலாந் தொலைந்தின்ப வாழ்வுபெறப்
பரிவாரு மாத்துமசுத் தியைப்பண்பின் மேவுவரால்

இ-ரை.—விசாலமான கீர்த்திபொருந்திய மேலோர்களாற் புகழப்படுகின்ற வேதாந்தத்தை, அதன்பொருள் தெரியாம லோதுகின்றவர்களும், அதன்பொருளைத் தெரிந்தோதுகின்றவர்களும், துன்பமிகுந்த பாவங்களெல்லா நீங்கிப், பேரின்ப வாழ்வாகிய மோக்ஷத்தை யடைவதற்கேதுவாகிய, அன்புமிகுந்த ஆத்மசுத்தியை நன்மையுடனே பெறுவார்கள். எ—று. (௨௯)

மறைமுடிவா முபநிடத மாவாக்கி யப்பொருளைத்
தறைபுகழ்சற் குருவருளாற் சந்தேக விபரீதம்
இறையுமிலா தினிதுணர்ந்தி யானென்னதற் றுயர்ஞான
நிறைபிரம நிட்டையினா னிகாறுமுத் தியையடைவர்.

இ-ரை.—வேதங்களின் முடிவாகிய உபநிடத மஹாவாக்கியார்த்தத்தை, பூமியிலுள்ளவர்கள் கொண்டாடுகின்ற சற்குரு கிருபையினாலே கொஞ்சமேனுஞ் சந்தேக

விபரீத மில்லாமல் நன்குணர்ந்து, அகங்காரமமகாரங்கள் நீங்கி, மேலாகிய ஞானமய மாகிய பிரமநிஷ்டையினாலே, ஒப்பில்லாத மோக்ஷத்தையடைவார்கள். எ—று. (௩௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரார் மகாத்து மாக்களெனச் செப்புஞ் சந்நி யாசிகளின்
நாரார் தருநற் பொதுவறங்க ணவின்று மிவருட் குடீசகனே
பேரார் பகூத கனேயஞ்சன் பிறங்கு பரம வஞ்சனென
வூரார் நான்கு வகையினரா மிவர்க டருமஞ் சிறிதுரைப்பாம்

இ-ரை.—சிறப்புப்பொருந்திய மஹாத்துமாக்களென்று சொலலப்படுகின்ற சந்நியாசிகளுக்குரிய, அன்புமிகுந்துள்ள நல்ல பொதுவான தருமங்களைச் சொன்னோம். இந்தச் சந்நியாசிகளிலே பெருமைபொருந்திய குடீசகன், பகூதகன், அம்ஸன், விளங்காநின்ற பரம அம்ஸன், என்று சொல்லுகின்ற அழகிய நான்கு வகையினராகும். இந்த நால்வருடைய தருமங்களிற் சிறிது சொல்லுவாம். எ—று. (௩௧)

நெறியி னோங்கு குடீசகன்சந் நியாசஞ் செய்து கொண்டபினர்
முறிவில் சிகைநீ ளுபவீத மொழிசெங் காவி தோயறுவை
அறிஞர் புகழுந் திரிதண்ட மழகார் கமண்ட லந்தரித்தல்
செறியுஞ் சருவாங் கங்களினுந் திருநீ றுத்தூ ளனஞ்செய்தல்

இ-ரை.—நீதியிலுயர்ந்த குடீசகனென்புவன், வேதவிதிப்படி சந்நியாசஞ்செய்துகொண்ட பின்பு, கெடுதலில்லாத சிகை, நெடிய எக்ஞோபவீதம், சொல்லுகின்ற செவ்விய காவிவஸ்திரம், அறிவுடையோர்கள் புகழுகின்ற திரிதண்டம், அழகு பொருந்திய கமண்டலம், இவைகளைத் தரித்தல், தேகமுழுவதிலும் பொருந்தும்படி விபூதியுத்தூளனஞ் செய்தல், எ—று. (௩௨)

வளமார் திரிபுண் டரந்தரித்தன் மன்னு காயத் திரிசெபித்தல்
அளியி னோடு மறைமுடியி னமர்வான் கடவுட் பூசைசெயல்
ஒளிர்தன் கிரகந் தனிலேனு முற்றார் கிரகந் தனிலேனும்
இளிவு றாத வனப்பிச்சை யினிதேற் றருந்தல் கடனாமே.

இ-ரை.—வளப்பம் பொருந்திய திரிபுண்டரந்தரித்தல், நிலைபெற்றகாயத்திரிமந்திரஞ்செபித்தல், வேதங்களின்முடியில், பிரகாசிக்கின்ற மேலாகியதேவாராதனையன்புடனேசெய்தல், விளங்காநின்ற தன்னுடைய வீட்டிலாவது, உறவினர்கள்வீட்டிலாவது, இழிவில்லாத அன்னப்பிக்ஷை வாங்கி நன்மையோடு புசித்தலுமாகிய இவைகள் முறைமையாகும். எ—று. (௩௩)

௸ வேறு.

அன்பு றும்பகூ தகனுற வினர்புத்தி ராதியர் தமைநீங்கி
இன்பு றுந்திரி தண்டநற் கமண்டல மெழிற்சிகை யுபவீதம்
துன்ப கற்றிடு யோகபட் டங்குடை சூசிகோ வணம்போர்வை
வன்பு சேர்தரு பட்டிழைச் செபநாண் மருவுத்த ரியமான்றோல்

இ-ரை.—பொருந்திய அன்பினையுடைய பகூதகனென்பவன் உறவினர்கள், புத்திரர்கள் முதலானவர்களை விட்டு நீங்கி, இன்பத்தைத்தருகின்ற திரிதண்டம், நன்மையுடையகமண்டலம், அழகியசிகை, எக்ஞோபவிதம், பிறவித்துன்ப மொழிக்கும் யோகபட்டம், குடை, ஊசி, கோவணம், குளிர்தாங்குமாடை, வண்மைபொருந்தியபட்டிழையினாகியஜெபக்கயிறு, பொருந்தியஉத்தரியம், மான்றோல். எ-று. (௬௪)

பாவு பாதுகை கூர்ச்சிறு வாணலம் படுமிவை யுளனுதல்
புரம்வி பூதிவுந் தூளனஞ் செயறிரி புண்டர நனிவேய்தல்
காவில் காலங்க டோறுஞ்சா வித்திரி கணித்திடல் பரன்றுளை
ஊமு றத்தியா னித்தலே ழகத்திலேற் றுண்டிடன் மாபாமே

இ-ரை.—சொல்லுகின்றபாதுகை, கூர்மைபொருந்தியசிறிய அரிவாள், நன்மைபொருந்திய இவைகளையுடையவனுதல், சரீரமுழுவதும் விபூதியுத்தூளனஞ்செய்தல், அழகிய திரிபுண்டரந்தரித்தல், மறைவில்லாத காலங்கள்தோறும்,சாவித்திரிமந்திரஞ்செபித்தல், கடவுளுடைய திருவடிகளை ஞானமுண்டாகத் தியானித்தல், ஏழுகிரகத்தில் அன்னபிக்ஷை வாங்கிப் புசித்தலுமாகிய இவைகள் முறைமையாகும். எ—று. (௬௫)

௸ வேறு.

அஞ்சநற் பலிக்க லன்கோ வணங்கந்தை யுத்த ரீயம்
மஞ்சுறு வேணுத் தண்ட மகிழ்கமண் டலமுங் கொள்ளல்
செஞ்சிரச் சிகைம ழித்தல் செறிதிரு நீறுத் தூளி
தஞ்செய லழகு சேர்முப் புண்டரந் தகத்த ரித்தல்

இ-ரை.—அம்ஸனென்பவன், பிக்ஷைப்பாத்திரம், கோவணம், வஸ்திரம், மேற்போர்வை, அழகுபொருந்திய மூங்கிற்றண்டம், மகிழ்வைத்தருகின்ற கமண்டலம், இவைகளைக் கொள்ளுதல்' அழகியசிரச்சிகை மழித்தல், சரீரத்திற் பொருந்த விபூதியுத் தூளனஞ் செய்தல், அழகு பொருந்திய திரிபுண்டர மன்போடு தரித்தல், எ—று. (௬௬)

ஏத்துசந் திகளிற் சாவித் திரிசெப மினிதி யற்றல்
ஆத்தும விசாரஞ் செய்த லன்னமெண் கவள முண்டல்

தீர்த்தயாத் திரைசெ யல்சாந் திராயணங் கிருச்சி ராதி
சாத்திய விரத மெல்லாந் தவறுறு தாச ரித்தல்

இ-ரை.—துதிக்கப்படுகின்ற சந்தியாகாலங்களில், அன்புடனே சாவித்திரிமந்திரஞ்செபித்தல், ஆத்மவிசாரஞ்செய்தல், எட்டுக்கவள அன்னம் புசித்தல், தீர்த்தயாத்திரைசெய்தல், சாந்திராயணங்கிருச்சிரமுதலாகிய, சாதிக்கத்தக்க விரதங்களையெல்லாம் விதிவழுவாமலனுஷ்டித்தல், எ—று. (கூஎ)

வயங்குமோ ரூரி லோர்நாண் மாண்புற வசித்த லன்றி
நயங்கொள வேற்ற மான நாளக மகிழ்ந்தி ராமல்
தயங்குறச் சஞ்ச ரித்த றனியரு மறைச்சி ரத்தில்
இயங்குறு பொருளைப் போற்றி யிறைஞ்சுதன் முறைமை யாமே

இ-ரை.—பிரகாசிக்கின்ற ஒரு ஊரில், ஒரு தினம், அழகுபொருந்த வாசஞ்செய்தலன்றி, நன்மைபொருந்த மனமகிழ்ச்சியுடனே, அதிகமான தினங்களிராமல் விளங்கும்படி சஞ்சாரஞ்செய்தல், ஒப்பில்லாத அருமையாகிய வேதமுடியிற் பொருந்திவாழ்கின்ற பரம்பொருளைத் துதித்து வணங்குதலுமாகிய, இவைகளெல்லா முரியதாகும். எ—று. (கூஅ)

௯௪ வேறு.

சாற்றரிய புகழோங்கு பரமாஞ்சன் சிகையினொடு தலைம ழித்தல்
ஏற்றவுப வீதமொழித் திடனித்த கருமமியற் றுறுது நீத்தல்
மாற்றரிய வெண்ணிறக்கோ வணங்குமிழ்ப்பா துகைகுடைகூர் வா
ளொண் கந்தை, ஊற்றுமுறு வெதிர்த்தண்டங் கமண்டலமா னுரியூசி
யுத்தரீயம்.

இ-ரை.—சொல்லுதற்கரிய புகழ்மிகுந்த பரமஅம்ஸனென்பவன், சிகையுடனே தலைமயிர்முழுது மழித்தல், தரித்துக்கொண்டிருந்த, எக்ஞோபவிதத்தை யொழித்தல், நித்தியகருமானுஷ்டானஞ் செய்யாமல் விடுத்தல், நீக்குதலில்லாத வெண்ணிறம் பொருந்திய கோவணம், குமிழ்பாதரக்ஷை, குடை, கூரியவாள், ஒள்ளியவஸ்திரம், வலியுள்ள மூங்கிற்றண்டம், கமண்டலம், மான்றோல், ஊசி, மேற்போர்வை, எ—று. (கூகூ)

அற்றமிலு செபமாலை யணியோக பட்டமிவை யனைத்துங் கொள்ளல்
சொற்றிடுவெண் பூதியுத்தூ ளனஞ்சருவாங் கங்களினுந் துலங்கச்
செய்தல் உற்றபிர ணவமனுவாற் றிரிபுண்ட ரந்தரித்த லுணவேற்
றுண்டல் வெற்றிபெறு குருசேவை செய்தல்பிர ணவஞ்செபித்தல்
விதியா மன்றே.

இ-ரை.—குற்றமற்ற ஜெபமாலிகை, அழகியயோகப்பட்டம், இவைகளையெல்லாங்கொள்ளுதல், வேதங்களிற்செல்லப்படுகின்ற விபூதியைச்,சரீரமுழுவதும் விளங்கும்படி உத்தூளனஞ்செய்தல், மேன்மைபொருந்திய பிரணவமந்திரத்தால் திரிபுண்டரந்தரித்தல், அன்னப்பிக்ஷை வாங்கியுண்ணுதல், ஜெயம்பொருந்திய சற்குருதரிசனஞ்செய்தல், பிரணவமஹாமந்திர முறையோடு ஜெபித்தல், இவைகளெல்லாமுரிமையாகும். எ—று. (௪௦)

சந்நியாசவிதியுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௬௮௦.

நாற்பத்தைந்தாவது

கருமபலமுரைத்த வத்தியாயம்.

கலி விருத்தம்.

துன்னு மன்பிற் றுலங்கு சுவிரத
மன்ன னேயரு மாமறை கூறிய
சந்நி யாச விதிசில சாற்றினும்
பன்னு கன்ம பலஞ்சிறி தோதுவாம்

இ-ரை.—நெருங்கிய அன்போடு விளங்காநின்ற சுவிரதமகாராஜனே கேளும், இதுவரையும் அருமையும் பெருமையுமுடைய வேதங்களிற் சொல்லிய சந்நியாச ஆச்சிரம விதிகளிலே சிலவற்றைச் சொன்னோம். இனி பெரியோர்களாற் கொண்டாடப்பட்ட கருமபலங்களிலே கொஞ்சஞ் சொல்லுவோமென்றார் காளஸ்தி மகாமுனிவர் எ—று. (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மண்ணுபெரும் புவியோர்கள் பாவவிட யங்களிலே மருவா மைக்கும்
எண்ணுறுபா வங்களுக்குப் பிராயச்சித் தங்களனுட் டிப்ப தற்கும்
திண்ணியவப் பாவங்க ளின்சுபா வங்களெலாந் தெரிந்தி டற்கும்
நண்ணுநலம் பெருவதற்குங் கருமபல மறைமுறையி னவிலுமன்னே

இ-ரை.—அழகுபொருந்திய விசாலமான பூமியிலுள்ளவர்கள் பாவமுள்ள செய்கைகளிலே பிரவேசிக்காமைக்கும், குறிக்கப்படுகின்ற பாவங்களுக்குப் பிராயச்சித்தங்களை அனுஷ்டிக்கவேண்டியதற்கும், பலமுள்ள பாவங்களி னியற்கைகளை யெல்லாந்தெரிந்துக்கொள்ள வேண்டியதற்கும், பொருந்திய நன்மைகளை யடையவேண்டியதற்கும், கருமபலங்களை வேதங்கள் முறையாகச் சொல்லும் எ—று. (உ)

ஐந்துமகா பூதங்க ளின்றன்மாத் திரைகளினு லாந்தே கத்தைச்
சுந்தரஞ்சேர் பூதான்மா வெனவுமதைக் கொண்டுசுபா சுபகன் மங்கள்
சந்தமுற நடத்துபவன் சீவான்மா வெனவுமுறு சனனத் தோடு
வந்தமகத் தத்துவத்தை யந்தரான் மாவெனவும் வகுப்பர் சான்றோர்

இ-ரை.—பஞ்சமகா பூதங்களுடைய தன்மாத்திரைகளினலுண்டாகிய சரீரத்தை, அழகுபொருந்திய பூதாத்மாவென்றும், அந்தப் பூதாத்மாவைக்கொண்டு சுபாசுப கருமங்களை, அழகுபொருந்த நடத்திவைக்கிறவனை, ஜீவாத்மாவென்றும், பொருந்திய ஜனனகாலத்தில் கூடவே தோன்றிய மகத்தத்துவத்தை அந்தராத்மாவென்றும், பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (ரு)

உருத்தெரியா வகங்காரத் தோடொளிரிந் திரியாதி யுருவ மாக
விருத்தியடைந் திருக்குமகத் தத்துவத்தின் றன்மையினல் விளங்க நாளும்
அருத்தியோடு பற்பல்சன னங்கடொறுஞ் சீவான்மா வனுப விப்பன்
திருத்தமுறு சுகதுக்கங் களையெனவே தெய்வமறை தெரிக்கு மாலோ

இ-ரை.—கண்களுக்குப் புலப்படாமல் விளங்காநின்ற அகங்கார விந்திரிய முதலிய சொரூபமாக விருத்தியடைந்திருக்கின்ற மகத்தத்துவத்தின் றன்மையினலே, எந்நாளும் அன்புடனே பற்பல ஜனனங்கள்தோறும், செவ்வையாகிய இன்ப துன்பங்களை, ஜீவாத்மாவானவன் அனுபவிக்கிருனென்று தெய்வத்தன்மையுடைய வேதங்கள் சொல்லும் எ—று. (௬)

ஓதுமந்த ரான்மாசீ வான்மாவென் றுளிருமிரு வோரும் பஞ்ச
பூதிகச ரீரத்தோ டியைந்தவராய்த் தாழ்வுயர்வு பொருந்தி மல்கி
ஆதமுறு பல்லுயிர்க ளிடத்திலுமந் தரியாமி யாய்வ சிக்கும்
கோதில்பர மான்மாவை யடுத்தவர்த மிச்சானு குணமாச் செல்வர்

இ-ரை.—அந்தராத்மா, ஜீவாத்மாவென்று சொல்லப்படுகின்ற இருவரும், பஞ்சபூதிக சரீரத்துடன் சேர்ந்தவர்களாகி, உயர்வு பொருந்தியும், தாழ்வு பொருந்தியும், விருப்பத்துடனே பெருகிய பலவாகிய உயிர்களிடத்திலும், அந்தரியாமியாக வசிக்கின்ற குற்றமற்ற பரமாத்மாவை யனுசரித்து, அந்தப் பரமாத்மாவின் இச்சானுகுணமாகவே நடக்கின்றுர்கள். எ—று. (௭)

திகழுமுயர் பரமான்மா வின்சரீ ரத்தினின்றுஞ் சீவான் மாக்கள்
மகிழ்வுறுமெண் ணிறந்தனவாத் தோன்றிவெளிப் பட்டமரர் மக்க ளாதி
புகலரும்பற் பலவாய வுருவுதரித் தெஞ்ஞான்றும் பொருவில் மூன்றும்
இகலில்கா ணங்களைச்சு பாசுபகன் மங்களிலே யேவா நிற்கும்

இ-ரை.—விளங்காநின்ற வுயர்வு பொருந்திய பரமாத்மாவின் சரீரத்தினின்றும், கணக்கில்லாதனவாகத் தோன்றி வெளிப்பட்டு, மகிழ்ச்சியுடைய தேவர் மக்கள் முதலிய, சொல்லுதற்கரிய பல பலவாகிய உருவங்களைத் தரித்து, எந்நாளும் ஒப்பில்லாத மனம் வாக்குக் காயங்களென்னுந் திரிகரணங்களை, மாறுபடுதலில்லாத சுபாசுப கருமங்களிலே ஏவுகின்றன. எ—று. (௮)

அயர்மறஞ்செய் தார்க்கிறந்தபின்னும்யம யாதனை யை யனுப வித்தற்
கியல்புடைய பஞ்சதன்மாத் திரைகளினல் வேறுருயா தனுச ரீரம்
பயனுறவுண் டாமதனுற் றீக்கரும பலனையனு பவித்த பின்னர்
உயர்வுறுமற் றதனதனுற் பத்தித்தா ணங்களைச்சார்ந் தொன்று மாலோ

இ-ரை.—வெறுப்பைத் தருகின்ற பாவஞ்செய்தவர்களுக்கு இறந்த பின்னும், யமயாதனைகளை அனுபவிப்பதற் குபயோகமாகப் பொருந்திய பஞ்சதன் மாத்திரைகளாலே வேறொரு யாதனு சரீரம், உண்டாகின்றது. அந்தச் சரீரமானது அசுபகருமங்களுக்குப் பயன்களான யமயாதனைகளை அனுபவித்த பின்பு, அந்தச் சரீரத்துக்கு ஆதாரமான மேலாகிய பஞ்சதன் மாத்திரைகளும், அதனதனுற்பத்தி ஸ்தானங்களைச் சேர்ந்து ஐக்கியமாகின்றன. எ—று. (எ)

பஞ்சவிட யப்பற்று லுண்டான வாங்தைகள்பற் பலவு நல்கும்
விஞ்சியம யாதனைக ளச்சீவ னனுபவித்து விட்ட பின்னர்
அஞ்சுறுதீ வினைசிறிது மிலனுகி நனிவயங்கு மந்த ரான்மா
எஞ்சுதலில் பரமான்மா வெனுமிவரை யடைவனென விசைப்பர் மேலோர்

இ-ரை.—பஞ்சவிஷயப் பற்றினுலுண்டாகிய துன்பங்கள் பலவற்றையுங் கொடுக்கின்றதா யிருக்கின்ற யமயாதனைகளை அந்தச் சீவன் அனுபவித்து விட்ட பின்பு, அச்சம்பொருந்திய பாவங்கள் சிறிதுமில்லாதவனுகி, மிகவும் விளங்காநின்ற அந்தராத்மா, குறைவில்லாத பரமாத்மாவென்று சொல்லப்பட்ட இவர்களையே யடைகின்றுனென்று மேலோர்கள் சொல்வார்கள். எ—று. (அ)

சீவனறம் புரிந்திடிலப் பஞ்சதன்மாத் திரைகளினுற் செறியுந் தூல
மேவியநற் போகவுடல் கொடுசுவர்கத்தினியசுகம் விழைவிற் றுய்ப்பன்
ஒவின்மற மியற்றிடிற்சூக் குமமான யாதனு வுடலெ டுத்துத்
தாவியம யாதனைக ளனுபவிப்ப னென்னமறை சாற்று மன்றே

இ-ரை.—அந்தச் சீவன் புண்ணியத்தை செய்திருந்தால், அந்தப் பஞ்சதன் மாத்திரைகளாலே, விரும்பத்தக்க நெருங்கிய நல்ல ஸ்தூலமான போக சரீரமெடுத்து, சுவர்க்கலோகத்தி லினிதாகிய சுகங்களை விருப்பத்துடனே அனுபவிப்பன், ஒழியாதபாவத்தைச் செய்திருந்தால்,மேற்சொல்லிய சூக்குமமாகிய யாதனு சரீரமெடுத்து, துன்பமாகிய யமயாதனைகளை அனுபவிப்பன் என்று வேதங்கள் சொல்லும். எ—று. (கூ)

கருதுமனம் வாக்குக்கா யங்களினு லுண்டாகுங் கரும மன்ன
திருவகையா மற்றவையாற் றேவர்முதற் றுவரமீ ருன பேத
வுருவமுள வுத்தமமத் திமவதம மாங்கதிக ளுறவுண் டாகும்
மருவுமிவை யாதிகட்குப் பிரதான மனமெனவே வ்குப்ப ரான்றோர்

இ-ரை.—கருமமானது நினைக்கப்படுகின்ற மனம், வாக்கு, காயம் என்னும் இம்மூன்றினுலு முண்டாகின்றது. அது புண்ணிய கருமமென்றும், பாவகருமமென்றும், இரண்டு வகையாகும். அவைகளினுலே தேவர்முதல் தாவரமீறுகிய பேதவுருவங்களையுடைய உத்தம, மத்திம, அதமகதிகளுண்டாகும். இவை முதலியவற்றிற்கெல்லாம் பொருந்திய மனதையே பிரதானமென்று மேலோர்கள் சொல்லுவார்கள். எ—று. (கய)

ஊற்றுமலைச் சமஸ்தான வித்வானும்
இலஞ்சி. அருணாசல ஆசாரியாரவர்கள் குமாருமாகிய
சுப்பிரமணியக் கவிராயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சமறை யுணர்ந்தமுத்துச் சாமிபா ரதியியற்றும் பனுவற் றேன்பா
றை வரிவேலிப் பரசமய வரிக்கணரங் கேற்றப் பாரக்
றைக் குகனுறு தலையானுன் மலயமுனி குறுகி ஞான்கோ
றைந் தமராரிதே பார்த்தனர்சட் சமயருந்தந் தலைவைத் தாரே (க)

அசுவபுரா தனமறையோ னருள்மனுவைந் தியல்புமுத்துச் சாமி யாசான்
விசுவபுரா ணத்தைந்தொன் பானத்யா யத்தமைத்த வியப்பை நோக்கிப்
பசுபதியு மலைவாய்ச்சென் றூனரியும் பயமுறநாப் பதுங்கும் வாணி
வசுமதியிற் புலவரெலா மருண்டருத்த விரதமுண்டு மகிழ்வுற் றூரே (உ)

திருவையா றுறையுமுத்துச் சாமிபா ரதியியற்றுந் தென்பா சிடக்
கருவையா தரித்தருளும் பரசமய கோளரிபாற் கண்டே நாக்க
ளுருவையா யிரத்திரட்டி வேண்டுமெனப் பிலத்தொளித்தா னுரகன் கற்பத்
தருவையா ரமுதையிச்சிக் காதிமையா திருந்துதுதித் தனர்விண் ணோரே (ங)

வேதமெனுஞ் சமஸ்கிருதப் பாற்கடலை மனக்கிரியான் மிகக்க டைந்தே
நீதமெனத் தமிழ்ப்பாவி லைந்தொன்பா னத்தியாய நேர்த்தி யாக
ஆதவனுள் வரையெங்கும் புகழ்விசுவப் பிரமபுரா ணத்தைச் செய்தான்
சாதமுறுந் திருவையாற் றிலகுமுத்துச் சாமியெனுந் தமிழ்ச்சிங் கேறே. (ச)

திருநெல்வேலி
ம-ா-ா-ஸ்ரீ காத்தபெருமாள் ஸ்தபதியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐவகைக் கோத்ர சூத்ர மவிர்பிர வரநற் சாகை
செய்தொழில் கரும மெல்லாஞ் செகத்தினி லெவருந் தேர்ந்து
மெய்யுற வடநூ லாய்ந்து விச்சுவப் பிரம நூலை
வையமீ துரைத்தான் முத்துச் சாமியாந் தமிழ்வல் லோனே (க)

ஷை வேறு.

கமறு முகமுளகால் கலைப்பயந்தோன் முகத்திலுறுங் கலையெ லாந்தேர்
க்கமியன் றிருவையாற் றுறையுமுத்துச் சாமியிந்த ஞாலத் துள்ளோர்
க்கமின்றித் தெளியவிசு வப்பிரம புராணமதை வழுத்தி ஞானம்
க்கமலன் மான்மகிழ வடமொழியி லுள்ளவரும் பொருளைத் தேர்ந்தே. (உ)

திருநெல்வேலி
பி. மா. முத்துச்சாமி ஆசாரியாரவர்களியற்றிய,
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிகதிராம் படையேந்தித் திரண்டெருங் கங்குறலை விலகச் சாடும்
பரிதியென வைம்பிரம சந்ததியா ரிதயவிருட் படாத்தை வெல்லத்
தெருள்பெறவிச் சுவப்பிரம புராணவே தார்த்தமதைச் செப்பி ஞான்பொன்
மருவுவள மிகுந்திருவை யாற்றுமுத்துச் சாமிபா ரதிவல் லோனே.

கொச்சி, எரணாகுளம், கோடர் ஷாப்பு ஏஜண்டு

ம-௱-௱-ஸ்ரீ பூ. பத்பநாப ஆசாரியாரவர்களியற்றிய

பதினறடியாசிரியவிருத்தம்.

சிற்ககன வட்டநடு விற்றிகழு முச்சுடர்செ றிந்தொளிர் திரியம்ப கன்பாற்
செப்பரிய மெய்ப்பொருளை யப்பரற் கோதிடுஞ் செய்யவே ளினிது ணர்ந்
சித்தமதி கைத்தெழு மிருட்பகை தடிந்தெழில் சிறந்தநற் காசி பற்குத்
தெரித்திட விரித்தவ னருத்திசேர் காளத்தி தேர்ந்திட வுரைக்க வன்னன்
தற்பதநி லைப்படவே யிப்புவியி லொப்பிலாத் தகைமைசால் சுவிர தற்குத்
தந்தமறை யந்தமிசை முந்துறுவி ராட்விஸ்வ தனிப்ரம்ம புராண மதனைத்
தவளநிற வமுதினுஞ் சுவைநனிபொ ருந்துதண் டமிழினால் வனைதல் செய்தான்
தக்கபுகழ் மிக்கெழுஞ் சக்கிரியிறை யலனிவன் றவமுனிய கத்திய னலன்
விற்பனர்கண் மலிதிருவை யாற்றிடைவ திந்துளோன் விஸ்வகுல ரத்ந தீபம்
மெய்ச்சன தனவிருடி கோத்திரமு தித்தெழில்வி ளங்குபல நூல்க ளோர்ந்தோன்
வித்வஜன துத்தியமி குப்பிரியசு பாஷிதவி வேககாம் பீரிய சீலன் [கான்
விண்டலமு மண்டலமு மெண்டிசையு மார்ந்திலகு மேன்மையார் திருவின் மிக்
சற்குணம் பொற்புருவி னிற்பயிலு முத்தமன் சாதுரிய மாநாற் கவி
சரமாரி யொப்பவே வருஷிக்கு நாவினன் சரஸ்வதிவி லாச முற்றேன்
சட்சமய மாதியுட் சைவமே யுசிதமாத் தழுவுமெய்ஞ் ஞான முத்துச்
சாமிபா ரதியெனுமி யற்பெயர்கொ ணவலன் றரணிதனில் வாழ்க மன்னே.

சிறப்புப்பாயிரங்கள் முற்றுப்பெற்றன.

இங்கிலீஷில்	...	...	...	௧
சமஸ்கிருதத்தில்	...	...	...	௭
தமிழில் ...	...	...	...	௱௧௪
			ஆக	௱௨௨

அன்னியர்தம் பொருளேயப கரித்திடவெண் ணுதல்பிரம கத்தி யாதி
முன்னரிய கொலேகள்செய விருப்பமுற லுடலினையே மொழியு மான்மா
வென்னவத னிடத்தினில்வா ளாகவபி மானம்வைத் லிவையோர் மூன்றும்
உன்னுமனத் தீக்கரும மொழிந்தவைநற் கருமமென வுரைபப சான்றோர்

இ-ரை.—பிறர்களுடைய பொருள்களை அபகரிக்க வேண்டுமென்று நினைத்தல், நினைத்தற்கரிய பிரமஹத்தி முதலாகிய ஜீவஹிம்சை செய்யவேண்டுமென்று விரும்புதல், தேகத்தையே ஆத்மாவென்று அதனிடத்தில் வீணான அபிமானம் வைத்தல், இந்த மூன்றுங் கருதுகின்ற மனதினுற் செய்யப்படும் அசுபகருமங்களாகும். இவை யொழிந்த வெல்லாம் அதனுடைய சுபகருமங்களாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௧௧)

கொடுமையா கப்பிறரைப் பேசிடுதல் பொய்சொல்லல் குறளை கூறல்
நடுவில்வீ ணுகியவம் பளத்தலிவை யோர்நான்கு நவிலும் வாக்கிற்
றொடர்புடைய தீக்கரும மொழிந்தவைநற் கருமமெனச் சொல்வர் சீர்சால்
கடவுளரு மறைகளொடு மிருதிகளு முழுதுணர்ந்த கலேவல் லோரே

இ-ரை.—பிறர்களைக் கொடுமையாகப் பேசுதல், பொய் சொல்லுதல், கோட் சொல்லுதல், நீதியல்லாத வீண்காரியம் பேசுதல், இந்த நான்கும், வாக்கினுற் செய்யப்படும் அசுபகருமங்களாகும். இவை யொழிந்த வெல்லாம் அதனுடைய சுபகருமங்களாகுமென்று, சிறப்புப் பொருந்திய தெய்வத் தன்மையுள்ள அரிய வேதங்களையும், தரும சாஸ்திரங்களையு முழுதுணர்ந்த வித்துவான்கள் சொல்லுவார்கள். எ—று. (௧௨)

காதலொடு பிறர்பொருளை யபகரித்தல் யாகாதி கரும மன்றி
ஏதமுறத் திகழுமுயிர் வதைபுரிதல் பிறர்மனையா ளின்பு துய்த்தல்
ஓதுமிவை யொருமூன்று முடலாற்செய் தீக்கரும மொழிந்த வெல்லாம்
தீதறுநற் கருமமெனச் செப்புவர்பன் னூலாய்ந்து தெளிந்த நல்லோர்

இ-ரை.—பிறர்களுடைய பொருள்களை ஆசையுடனே அனியாயமாக அபகரித்தல், யாகமுதலிய காரியமல்லாமல் துன்பமற்று விளங்குகின்ற ஜீவஹிம்சை செய்தல், பிறர் மனையாளைப் புணர்தல், சொல்லுகின்ற இம்மூன்றும், சரீரத்தினுற் செய்யப்படும் அசுபகருமங்களாகும். இவை யொழிந்த வெல்லாம் அதனுடைய குற்றமற்ற சுபகருமங்களாகுமென்று, பல நூல்களையு மாராய்ந்து தெளிந்த பெரியோர்கள் சொல்லுவரர்கள். எ—று. (௧௩)

போற்றுமுயர் நற்கருமந் தீக்கருமங் களினுலாம் புண்ய பாவச்
சாற்றுப்பலன் களையிம்மை தனிலேனும் வருமறுமை தன்னி லேனும்
ஆற்றுமனத் தாற்செய்தவை மனத்தாலும் வாக்காற்செய்தவைவாக்காலும்
தோற்றுமெழிற் காயத்தாற் செய்வைகா யத்தாலுந் துய்ப்பர் மாதோ

இ-ரை.—கொண்டாடப்படுகின்ற மேலாகிய நற்கருமங்களினாலும், தீக்கருமங்களினாலு முண்டாகிய புண்ணிய பாவமென்று சொல்லப்பட்ட பலன்களை, இப்பிறப்பிலாவது, மேல்எய்துகின்ற மறுபிறப்பிலாவது, முயற்சியுடனே மனதினாற்செய்தவைகளை மனதினாலும், வாக்கினாற் செய்தவைகளை வாக்கினாலும், அழகுடனே காணப்பட்ட காயத்தினாற் செய்தவைகளைக் காயத்தினாலும் அனுபவிப்பார்கள். எ—று. (௧௪)

தீக்கரும மனத்தினாற் செயினிழிசண் டாளரா தியபி றப்பும்
வாக்கினாற் செயின்மிருகம் பறவையா தியபிறப்பும் வடிவந் தன்னால்
ஆக்கினாற் றாவரமா தியப்பிறப்பு மடைவர்கண்மூன் றையும டக்கி
ஊக்கமொடு நற்கரும மியற்றினலந் திகழ்முத்தி யுறுவர் மன்னே

இ-ரை.—மனதினாற் பாவகருமங்களைச் செய்தால், சண்டாளர் முதலிய இழிவாகிய ஜனனத்தையும், வாக்கினாற் பாவகருமங்களைச் செய்தால், மிருகம், பக்ஷி முதலாகிய ஜனனத்தையும், சரீரத்தினாற் பாவகருமங்களைச் செய்தால், தாவரமுதலாகிய ஜனனத்தையும், அடைவார்கள். மனம் வாக்குக் காயமென்னு மூன்றையும், பாவகருமங்களைச் செய்யவொட்டாமல் அடக்கி, முயற்சியுடனே சுபகருமங்களைச் செய்தால், விளங்காநின்ற நன்மை பொருந்திய மோக்ஷத்தை யடைவார்கள். எ—று. (௧௫)

நலமுறுசத் துவகுணத்தா லொளிர்ஞானந் தமோகுணத்தானவிலஞ்ஞானம்
இலகுமிர சோகுணத்தா லிராகத்து வேஷமிவை யெய்த லாலே
தலமகிழ்சத் துவத்தர்சுரத் தன்மையும்ரா சதர்மனுடத் தன்மை யும்பார்
நிலவுதமத் தோர்மிருகத் தன்மையுமெய் துவரென்ன நிகழ்த்து நூலே

இ-ரை.—நன்மை பொருந்திய சத்துவ குணத்தினாலே, விளங்காநின்ற ஞானமும், சொல்லுகின்ற தமோ குணத்தினாலே அஞ்ஞானமும், பிரகாசிக்கின்ற இராஜோ குணத்தினாலே இராகத்து வேஷாதிகளும், சம்பவிப்பதனாலே, உலகம் புகழ்கின்ற சத்துவ குணமுள்ளவர்கள் தேவத் தன்மையையும், இராஜோ குணமுள்ளவர்கள் மனுஷத் தன்மையையும், உலகில் விசாலித்திருக்கின்ற தமோ குணமுள்ளவர்கள் மிருகத்தன்மையையும், அடைவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (௧௬)

தண்ணியசத் துவமுடனி ராசதந்தா மதமெனவே சாற்றுந் தொல்சீர்
அண்ணியமுக் குணத்தாலு முத்தமமத் திமமதம மாகத் தோன்றும்
கண்ணியமுக் கதிகள்கா லந்தேசங் கருமமிவை களின்பே தத்தால் [னே.
எண்ணியவொவ்வொருகுணத்தின்மும்மூன்று கதிகண்முறை யெய்துந் தா

இ-ரை.—சாந்தமாகிய சத்துவகுணம், இராஜோகுணம், தமோகுணம், என்று சொல்லப்பட்ட பழமையான சிறப்பினையுடைய, மூன்றுகுணங்களினாலும், உத்தமமாகவும், மத்திமமாகவும், அதமமாகவுந் தோன்றுகின்ற மூன்றுகதிகளும், குறிக்கப்படுகின்ற காலம், தேசம், கருமம், இவைகளின் பேதத்தினாலே, மதிப்பினையுடைய சத்துவ குணத்தில், உத்தமகதி, மத்திமகதி, அதமகதியும், இராஜோ குணத்தில், உத்தமகதி, மத்திமகதி, அதமகதியும், தமோ குணத்தில் உத்தமகதி, மத்திமகதி, அதமகதியுமாக வரன்முறையே உண்டாகும். எ—று. (௧௭)

நிகரரிய முக்குணத்து ளெக்குணத்தின் வசமாய நினைவி னாலே
புகரரிய வெந்தெந்த நானதா னாதிகன்மம் புரிந்திட் டாலும்
தகராமக் குணத்தினுக்குத் தக்கவா ருயவுட றனையெ டுத்துப்
பகரரிய வந்தந்த நானதா னாதிகன்ம பலன்றுய்ப் பாரே

இ-ரை.—ஒப்பில்லாத முக்குணங்களுக்குள், எந்தக் குணத்திற்குச் சுவாதீனப்பட்ட வெண்ணத்தினாலே, குற்றமில்லாத, எந்தெந்த ஸ்நானதானாதிகருமங்களைச் செய்தாலும், நீக்கமற்ற அந்தக் குணத்துக்குத் தகுதியுடையதான சரீரமெடுத்து, சொல்லுதற்கரிய, அந்தந்த ஸ்நான தானாதி கருமபலன்களை யனுபவிப்பார்கள். எ—று. (௧௮)

திருவமலி மறையவர்கண் முதலாய நால்வருணத் தினருந் தத்தம்
தருமநெறி யனுட்டானங் களைப்புரியா விடின்மறுமை தன்னில் யாரும்
கருதருதீப் பைசாசம் பலவகைய பிரேதகணங் களுமாத் தோன்றி
வெருவலெல்ாடு தீயனவெ லாமருந்தி யனுசெய்தி மெலிவர்தாமே

இ-ரை.—செல்வமிகுந்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்னுநான்கு வருணத்தார்களும், தங்கள்தங்களுக்குரிய விதிப்படி, தருமானுஷ்டானங்களைச் செய்யாவிட்டால், மறுபிறப்பில், யாவரு நினைத்தற்கரிய கொள்ளிவாய்ப் பைசாச முதலிய, பலவகையான பிரேதகணங்களுமாகி, அச்சத்துடனே தகுதியற்றவைகளெல்லாம் புசித்துத், துன்பமடைந்து மெலிவார்கள். எ—று. (௧௯)

மறைபுகல்வை திகக்கிரியை யனுட்டியா ருங்குருவை மதியா தாரும்
அறைதருசாத் திரவிதியைக் கடந்தோருந் தருமத்தை யறியா தாரும்
முறையிலகா லத்தின்மறையுரைப்போரும் பிறர்குற்ற மொழிகு வோரும்
தன்றமிசையா யுட்குறைவை யடைவார்க ளென்னமறை சாற்றுந் தானே

இ-ரை.—வேதங்களிற் சொல்லப்பட்ட வைதீககருமங்களை யனுஷ்டியாதவர்களும், சற்குருவை மதியாதவர்களும், தருமங்களைச் சொல்லுகின்ற சாஸ்திரவிதியை அதிக்கிரமித்தவர்களும், தருமங்களை யறியாதவர்களும், தகுதியல்லாத காலத்தில் வேதங்களை யோதுகின்றவர்களும், பிறர்களுடைய குற்றங்களை யெடுத்துபேசுவோர்களும், பூமியினிடத்தில் அற்பாயுளை யடைவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (௨௦)

பேரியலும் புவிமிசைக்கி ழெச்சில்மே லெச்சிலோடு பேசு வோரும்
ஏரில்கு வழியிலுநீர்க் கரையிலுமா லயம்பசுதீ யெழில்சேர் திங்கள்
சீரிரவி மறையோருக் கெதிருமல சவிசர்க்கஞ் செய்திட் டோரும்
பாரினல் மிழந்தாயுட் குறைவையடை வார்களெனப் பகர்வர் சான்றோர்

இ-ரை.—பெருமை பொருந்திய பூமியினிடத்தில், மலசலவிசர்க்கஞ் செய்து சவுசஞ் செய்வதற்கு முன்னும், போஜனஞ்செய்து கைவாய் முதலியவை சுத்திசெ

ய்வதற்கு முன்னும், பேசுவோர்களும், அழகுபொருந்திய வழியிலும், புண்ணிய தீர்த்தக்கரையிலும், தேவாலயம், பசு, அக்கினி, அழகுபொருந்திய சந்திரன், சிறப்பினையுடைய சூரியன், பிராமணர், என்னு மிவர்களுக்கெதிரிலு மிருந்து, மலசலவிசர்க்கஞ் செய்தோர்களும், உலகத்திலுள்ள நன்மைகளை யிழந்து, அற்பாயுளை யடைவார்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ—று. (௨௧)

பதிசருக்கு வைதீக பௌரோகித் தியம்புரிவோர் பாவு தக்கோர்க்
கிதமுடனே புரியாதார் சண்டாள ராதியர்பாற் றுன மேற்றோர்
கதிதருநன் மகந்தான முற்சவம்வி வாகமிவை களைத்தடுத்தோர்
மதியொழுக்கி லாரிவர்பி ரேதகணத் தினிற்சனித்து வருந்து வாரே

இ-ரை.—வேதசம்பந்தமான கருமங்களைக் குலஞ் சமய முதலிய வொழுக்கத்திற் றவறினவர்களுக்குச் செய்வோர்களும், யாவருங்கொண்டாடுகின்ற தகுதியுடைவர்களுக்கு நன்மையுடனே செய்யாதவர்களும், சண்டாளர் முதலானவரிடத்தில் தானம் வாங்கினவர்களும், நல்லகதியைத் தருவதானயாகம், தானம், திருவிழா, விவாகம், இவைகளைத் தடுத்தவர்களும், நல்லுணர்ச்சியைக் கொடுக்கின்ற ஆசாரமில்லாதவர்களுமாகிய விவர்கள், பிரேதகணத்திற்பிறநது துன்பமடைவார்கள். எ—று. (௨௨)

பிரமகத்தி முதலாய கொலைபுரிந்தோர் பலகாலம் பெரித கோர
நாகமதை யனுபவித்துக் கழுதையிர வணம்பன்றி நாய்முன் னுக
விரவுமிழி பிறப்பினுலே வாரெனவு முயிர்க்கூறு விளைவித் தோர்கள்
காவுறும ரார்ச் சாலமதாப் பிறந்துழல்வ ரெனவுமறை கழறு மந்தோ [ன்றி.

இ-ரை.—பிரமஹத்திமுதலாகிய ஜீவஹிம்சைசெய்தவர்கள், அனேககாலம்விசாலமான கோரநரகங்களை யனுபவித்துப் பின்பு, கழுதை, ஒட்டகம், பன்றி, நாய், முதலாகிய, தாழ்மைபொருந்திய ஜனனங்களை யெடுத்து வருந்துவார்களென்றும், ஜீவர்களுக்குத் துன்பத்தை விளைவித்தோர்கள், வஞ்சனை பொருந்திய பூனையாகப் பிறந்து திரிவார்களென்றும், வேதங்கள் சொல்லும். எ—று. (௨௩)

பொய்யுரைத்தோர்பொய் யுரைக்கப் புகன்றோரு மலத்தினுறு புழுவாத்தோ
வையமதிற் பாம்பாகிப் பைசாச மாகிநனி வருந்து வார்கள் [ன்றி
மையுறுசு ராபானஞ் செய்தோரும் விற்றோரு மல மருந்தி
உய்யுமுயி ராயுலண்டாய் விட்டிலாய ஞெய்தி யுழலு வாரே

இ-ரை.—உலகத்தில், பொய் சொன்னவர்களும், பொய் சொல்லச்சொன்னவர்களும் மலத்திற் பொருந்திய புழுவாயும், பாம்பாயும், பிசாசாயும், பிறந்து மிருந்து துன்பமடைவார்கள், மயக்கத்தைத் தருவதாகிய சுராபானஞ் செய்தவர்களும், அதைவிலைசெய்தவர்களும், மலத்தையுண்டு பிழைக்குஞ்செந்துவாயும், உலண்டுபூச்சியாயும், விட்டிற்பூச்சியாயும், தோன்றித் துன்பமடைந்து திரிவார்கள். எ—று. (௨௪)

குருவையவ மதித்தோருங் குருகாரந் தனைப்புணர்ந்த கொடியோர் தாமும்
வெருவுபுலி யாய்க்கழுகாய்ப் பன்றியா யிடும்பைபல மேவு வார்கள்
பொருவினுயர் வுறுபொன்னைத் திருடினோர் நூனூற்கும் பூச்சி யாகி
மருவுகரட் டோணுனுய்ப் பைசாசா யிடரெய்தி வருந்து வாரே

இ-ரை.—சற்குருவை யவமானஞ் செய்தவர்களும், குருமனைவியைப் புணர்ந்த பாவிகளும், யாவருமஞ்சுகின்ற புலியாயும், கழுகாயும், ஊர்ப்பன்றியாயும், பிறந்துபல துன்பங்களையடைவார்கள், ஒப்பில்லாத மேன்மை பொருந்திய சுவர்ணத்தைத்திருடினவர்கள், சிலந்திபூச்சியாயும், பொருந்திய கரட்டோணுனயும், பிசாசாயும் பிறந்து துன்பமடைந்து மெலிவார்கள். எ—று. (உரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்பொடு தேவ பூசனை புரியா தருந்தினோ ரடுத்தவர்க் கன்னம்
இன்புற நல்கா துண்டவர் கிழவற் கிரும்பொருள் விழைந்து பெண்கொ
டுத்தோர், வன்புறு சண்டாளப் பெணைப் புணர்ந்தோர் மற்றிவர் பிரேத
பேய்க் கணத்தில், துன்பொடு சனித்து வருந்துவ ரென்னத் தூயமா மிரு
திக ளுரைக்கும்.

இ-ரை.—தேவதார்ச்சனை யன்புடனேசெய்து புசியாதவரும், இன்பமுண்டாக அடுத்தவர்களுக்கு, அன்னங்கொடாமற் புசித்தவரும் விசேஷமான பொருளை விரும்பிக்கிழவனுக்குப் பெண் கொடுத்தவரும், வன்மையுடைய சண்டாளமாதைப் புணர்ந்தவரும், ஆகியஇவர்கள் பிரேதமயமாகிய பேய்க் கூட்டத்திற்றுன்ப முடனேஜனித்துவருந்துவார்களென்று பரிசுத்தமாகிய தருமசாஸ்திரங்கள்சொல்லும். எ—று. (உசு)

தேவர்கள் பொருளை யடைக்கலப் பொருளைத் திகழ்ரு மறையவர் பொரு
ஆவ்விற் றுன நல்கிய பொருளை யபகரித் தவர்கள்பே யாவர் [ளை
ஓவில்சீர் முனிவர் மடக்கரும் பொருளை யொளிர்தரு சீதனப் பொருளைத்
தாவில் சத்திரத்தின் பொருள்களை யழித்தோர் பிரமராக்ஷ தர்களாச் சனி
ப்பர்.

இ-ரை.—தேவதைகளின் பொருளையும், ஒருவர் அடைக்கலமாக வைத்த பொருளையும், பிரகாசிக்கின்ற பிராமணர்களின் பொருளையும், விருப்பத்துடனே ஒருவருக்குத் தானமாகக் கொடுத்த பொருளையும், அபகரித்தவர்கள் பேயாகப் பிறப்பார்கள், நீங்காத சிறப்புமிகுந்த முனிவர்கள் வசிக்கின்ற திருமடத்திலுள்ள அருமையாகிய பொருளையும், விளங்காநின்ற சீதனங்கொடுத்த பொருளையும், கெடுதலில்லாத தருமசத்திரத்தின் பொருளையும், அழித்தவர்கள் பிரமராக்ஷதர்களாகப் பிறப்பார்கள், எ—று. (உஎ)

பகரும் பிரமகத்தி செய் தோன்முற் பாவியர் தம்மொடு சேர்ந்தோர்
புகரா தலைவன் றனக்குறு துரோகம் புரிந்தவர் பிறர்மனை விழைந்தோர்

திகழ்தரு பிறர்கள் பொருளினைக் கவர்ந்தோர் செப்புமற் றிவர்கணீ ரின்
தகவறு கானிற் பிரமராக்ஷ தராச் சனிப்பரென் றருமறை புகலும் [றித்

இ-ரை.—சொல்லுதற்கரிய பிரமஹத்தி செய்தவன் முதலாகிய பாவிகளுடனே சேர்ந்தவரும், குற்றமற்ற எஜமானனுக்குத் துரோகஞ்செய்தவரும், பிறர்களுடைய மனைவியை விரும்பினவரும், விளங்குகின்ற பிறர்கள் பொருளை யபகரித்தவருமாகிய, இவர்கள் சொல்லுகின்ற ஜலமில்லாத காட்டில் நன்மையற்ற பிரமராக்ஷதராகப் பிறப்பார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (உஅ)

கடவுளர் நிழலை யாலய நிழலைக் கவினுறு கோபுர நிழலை
அடர்தரத் தாண்டி மிதித்தவர் நொண்டியாப் பிறந் தணங்குநோ யுறுவர்
தடமிகு தேவர்க் கேத்துதி பத்தாற் றன்கரு மங்களைப் புரிந்தோர்
சுடர்கெழு விழிநோ யடைந்து நாடோறுந் துன்புறு வாரெனு மறையே.

இ-ரை.—தேவர்கள் நிழலையும், தேவாலயத்தினிழலையும், அழகு பொருந்திய கோபுரத்தினிழலையும், பொருந்தத்தாண்டி மிதித்தவர்கள், நொண்டியாகப் பிறந்து வருத்தத்தைத் தருகின்ற நோயடைவார்கள், பெருமைமிகுந்த தேவதைகளுக்கேத்தி விளங்குகின்ற தீபவெளிச்சத்தால், தன்காரியங்களைச் செய்தவர்கள், பிரகாசமுடையகண்களில் நோயுண்டாகி நாள்தோறுந் துன்பமடைவார்களென்று வேதங்கள் சொல்லும். எ—று. (உகூ)

பாவுறு தேவா லயங்களைக் கண்டும் பணிந்திடார் குருடராப் பிறப்பர்
உரவுசேர் தியான மலக்ஷிய மாக வுஞற்றினோர் செவிடராப் பிறப்பர்
குரவனற் றுணைவர் தாய்பிதா வங்கக் குறையுளார் தம்மையா தரியார்
திரமலி யுடலிற் கண்முத லியவிந் தியக்குறை வுடையராப் பிறப்பர்

இ-ரை.—துதிக்கப்படுகின்ற தேவாலயங்களைக் கண்டும் வணங்காதவர்கள் கண் குருடராகப்பிறப்பார்கள், நன்மைகளைத்தருகின்ற தியானத்தை, அலக்ஷியமாகச்செய்தவர்கள் செவிடராகப்பிறப்பார்கள், குரு, சகோதரர், மாதா, பிதா, கைகால் முதலிய அங்கக்குறையடையர், இவர்களை ஆதரிக்காதவர்கள், வலிமிகுந்த சரீரத்தில் நேத்திரமுதலிய இந்திரியக்குறைவுள்ளவர்களாகப் பிறப்பார்கள். எ—று. (௩0)

பொருந்திய பதிபத் தினிகளுக் கூறு புரிந்தவர் குரூபியாப் பிறப்பர்
வருந்தொரு வருக்கு மொன்றையுங் கொடாதார் வறியவ ராகவே பிறப்பர்
திருந்துபெண் டானந் தனக்கிடர் விளைத்தோர் தீமைசேர் பெண்ணையே
பெறுவர், பரிந்திடு முறவோர் பசித்துறப் புசித்தோர் பழிபடு முடவலாப்
பிறப்பர்.

இ-ரை.—சேர்ந்திருக்கின்ற கணவனுக்கு மனைவிக்கும் கலகமுண்டுபண்ணினவர்கள், குரூபியாகப்பிறப்பார்கள், வருத்தப்படுகின்றவர்களில் ஒருவருக்காவது, ஒன்றையுங்கொடாத லோபிகள், தரித்திரராகப்பிறப்பார்கள், திருத்தமாகிய கன்னிகாதா

ணத்துக்குத்தீங்குசெய்தவர்கள், தீமைபொருந்திய பெண்களையே பெறுவார்கள், அன்புள்ள சுற்றத்தார்கள் பசித்திருக்கத்தான் மாத்திரம் புசித்தவர்கள், யாவரும் பழிக்கப்படுகின்றநாயாகப் பிறப்பார்கள். எ—று. (௩௧)

கருதிதஞ் செய்தோர்க் கிடர்செய்தோர் சுவாச காசநோ யாளராப்பிறப்பர்
தருவலென் றுரைத் தீயார்கள் செந்நாயாச் சனிப்பர்தீ வஞ்சனை புரிந்தோர்
மருவுகோட் டானைப் பிறப்பர்செய் நன்றி மறந்தவர் கானுறு மீயா
வுருவுபெற் றுழல்வர் தகாவுண வுண்டோ ருறுபுழு வாகவே சனிப்பர்

இ-ரை.—மதிக்கப்படுகின்ற உபகாரஞ்செய்தவர்களுக்கு, அபகாரஞ்செய்தவர்கள், சுவாசகாச நோயுள்ளவராகப்பிறப்பார்கள், கொடுக்கிறேனென்றுசொல்லிக் கொடாதவர்கள், செந்நாயாகப்பிறப்பார்கள், கொடிய வஞ்சனைசெய்தோர்கள், பயம் பொருந்திய கோட்டானாகப்பிறப்பார்கள், ஒருவர்செய்த நன்மையை மறந்தவர்கள் பொருந்திய காட்டீயாகப்பிறந்து திரிவார்கள், உண்ணத்தகாத வுணவை யுண்டவர்கள், மலத்திற் பொருந்திய புழுவாகவே பிறப்பார்கள். எ—று. (௩௨)

கதிர்மதி கிரக ணங்களிற் புசித்தோர் காட்டிடை யானையாப் பிறப்பர்
விதிவழிப் பஞ்ச மகஞ்செயா துண்டோர் விரிதலை வேடராப் பிறப்பர்
திதியிலே கோதிட் டத்தினிற் புசித்தோர் செறிகொடி கூக்கலாப் பிறப்பர்
துதிசிறு வருக்கீ யாதருந் தினவர் சொல்லரும் பசியினுன் மெலிவர்

இ-ரை.—சூரியசந்திர கிரஹணகாலங்களிலே புசித்தவர்கள், காட்டினிடத்தில் யானையாகப் பிறப்பார்கள், விதிப்படி முறையாகப் பஞ்சமகா வெக்கியஞ்செய்யாமற் புசித்தவர்கள், மயிர்கள் விரிந்ததலையையுடைய வேடராகப்பிறப்பார்கள், சிரார்த்தத்தில்புசித்தவர்கள், கரியகாக்கையாகப் பிறப்பார்கள் ஏகோதிஷ்டத்திற் புசித்தவர்கள், நாயாகப் பிறப்பார்கள், கொண்டாடுகின்ற சிறுவர்களுக்குக் கொடாமற் புசித்தவர்கள், சொல்லுதற்கரிய பசியினாலே தளர்வடைவார்கள். எ—று. (௩௩)

தயிர்நெய்பா லெண்ணெய் தேன்குள முப்பு தானியங் கோதுமை யரிசி
செயிரின்மா முதற்பல் வகையன மிவற்றைத் திருடினோர் கொக்கணில்
காக்கை, அயிலுமஞ் சலிவாற் கொசுகுவாக் குதமென் றரைதரு வீசுவூர்க்
கோழி, பயில்பெருச் சாளி சல்லிய மிருகம் பன்றியு மாமுறை பிறப்பர்.

இ-ரை.—தயிரைத் திருடினோர் கொக்காகவும், நெய்யைத்திருடினோர் அணிலாகவும், பாலைத் திருடினோர் காக்கையாகவும், எண்ணெயைத் திருடினோர் பழங்களைத்தின்கின்ற வௌவாலாகவும், தேனைத் திருடினோர் வாற்கொசுகாகவும், வெல்லத்தைத் திருடினோர் வாக்குதமென்று சொல்லப்பட்ட பக்ஷியாகவும், உப்பைத் திருடினோர் சுவர்க்கோழியாகவும், தானியங்களைத் திருடினோர் பூமியின்கீழ்ப் பழகுகின்ற பெருச்சாளியாகவும், கோதுமையரிசியைத் திருடினோர் சல்லியமிருகமாகவும், குற்றமில்லாத மாவுமுதலிய பலவகையான அன்னங்களைத் திருடினோர் பன்றியாகவும் பிறப்பார்கள். எ—று. (௩௪)

இலைகள்காய் கிழங்கு கனிரச வருக்க மிரத்தினம் புத்தக மிறைச்சி
மலிபுகழ்ச் சால்வை பட்டுநூ லாடை வாசனைப் பொருளிவை கவர்ந்தோர்
பொலிமயில் குரங்கு நாய்குட்ட நோயன் புகல்குணி கழுகுநீர்த் தவளை
அலையுமூர்க் குருவி கிரவுஞ்ச மூஞ்சூ றுகவும் வான்முறை பிறப்பர்

இ-ரை.—இலை காய் இவைகளைத் திருடினோர் விளங்காநின்ற மயிலாகவும், கிழ ங்குபழமிவைகளைத் திருடினோர் குரங்காகவும், இரசவர்க்கங்களைத் திருடினோர் நாயா கவும், இரத்தினங்களைத் திருடினோர் குஷ்டநோயாளியாகவும், புஸ்தகத்தைத் திருடி னோர் ஊமையாகவும், மாமிசத்தைத் திருடினோர் கழுகாகவும், புகழ்மிகுந்த சாலுவை யைத் திருடினோர் நீரில்வசிக்கின்ற தவளையாகவும், பட்டைத் திருடினோர் திரிகின் றவூர்குருவியாகவும், நூல்வஸ்திரத்தைத் திருடினோர் கிரவுஞ்ச பக்ஷியாகவும், வாச னைவஸ்துக்களைத் திருடினோர் மூஞ்சூறுகவும் பிறபபார்கள். எ—று. (௫௫)

பரிகரி பாண்டி லாதிவா கனங்கள் பசுமட வார்புன னெருப்பு [ம்பு
புரிமுறந் துடைப்ப மிவைகவர்ந் தோர்வெம் புலிசெந்நா யொட்டக முடு
வரிமயிர்க் கரடி நீர்க்கொடி நாரை வன்மைசேர் குளவியு மாகத் [தோர்.
தரணியின் முறையே சனிப்பர்க ளென்னச் சாற்றுவர் மிருதிக ளுணர்ந்

இ-ரை.—குதிரையைத் திருடினோர் வெவ்வியபுலியாகவும், யானையைத் திரு டினோர் செந்நாயாகவும், வண்டிமுதலியவாகனங்களைத் திருடினோர் ஒட்டகமாகவும், பசுவைத் திருடினோர் உடும்பாகவும், பெண்களைத் திருடினோர் நீண்டமயிர்களையுடை யகரடியாகவும், ஜலத்தைத் திருடினோர் நீர்க்காக்கையாகவும், நெருப்பைத் திருடி னோக நாரையாகவும். செய்யப்பட்ட முறந்துடைப்ப மிவைகளைத் திருடினோர் வலி யகுளவியாகவும், பூமியினிடத்திற் பிறப்பார்களென்று தருமசாஸ்திரங்களை ஆராய்ந் றிந்த பெரியோர்கள், சொல்லுவார்கள். எ—று. (௫௬)

அரிதினிற் கிடைத்த மானிடப் பிறப்பை யடைந்தவர் நல்லொழுக் கின்றி
விரிதரு தீயு கருமங்க ளியற்றின் மெலிந்திறந் தியமயா தனையாம்
நாகிடைட் யழுந்தி யலக்கண்மிக் கெய்தி நலிந்துமற் றதன்பினர்ப் பலவாம்
இரியிழி பிறப்பை யடைந்துழல் வார்க ளெனவெடுத் தியம்புவர் தக்கோர்

இ-ரை.—அருமையாகக்கிடைத்த மானிடஜனனத்தைத் யடைந்தவர்கள், நல்லொ ழுக்கமில்லாமல், விரிவாகியபாவகருமங்களைச் செய்தால், தளர்வடைந்து, இறந்து, யமயாதனையாகிய நரகத்திலழுந்தி மிகுந்ததுன்பமடைந்து மெலிந்து, பின்புஅஞ்சுகி ன்றபலவாகிய தாழ்ந்தஜனனங்களையடைந்து திரிவார்களென்று பெரியோர்களெடுத் துச்சொல்லுவார்கள். எ—று. (௫௭)

மொழிதரு வருணச் சிரமங்கட் குரிய முறைமைக டிறம்பிடா தொழுகிற்
பழிதபு ஞானந் தோன்றுமற் றதனாற் பரிவுறு மயல்செயஞ் ஞானம்

ஒழிவுறு மதன்மேற் பாசபந் தங்க ளொருங்குக லடைந்திடு மதன்பின்
அழிவின்மே லாய பேரின்ப முத்தி யடைவரென் றிசைக்குமா மறையே

இ-ரை.—பெரியோர்களாலெடுத்துச் சொல்லப்பட்ட, சதுர்விதவருணாச்சிரமங்களுக்குரிய விதியாகிய ஒழுங்குதவறாமல்நடந்தால், குற்றமற்ற உண்மைஞானமுண்டாகும், அந்தஞானத்தினாலே, பிறவித்துன்பத்துக் கேதுவாகிய மயக்கத்தைவிளைவிக்கின்ற, அஞ்ஞானமானது நீங்கும், அதுநீங்கவே, பாசபந்தங்கள் அழிவடையும், அதன்பின்பு, எக்காலத்தும் அழிவில்லாத மேலாகியபேரின்பமயமான மோக்ஷத்தையடைவார்களென்று பெருமைபொருந்திய வேதங்கள்சொல்லும். எ—று. (௬அ)

இலகுமிவ் விசுவப் பிரமபு ராண மெழுதினோ ரெழுதுவித் திடுவோர்
குலவியே படிப்போர் படிப்பிப்போ ரருத்தங் கூறுவோ ரன்பொடு கேட்
போர், நலமலி மனைவி மைந்தர்க ளெடுவாழ் நாண்மிகு செல்வமுந் தழை
த்துப் பலவகை நயனு முயர்புரு ஷார்த்த பயனுநன் கெய்திவாழ் குவரே

இ-ரை.—விளங்காநின்ற இந்தவிஸ்வப்பிரமபுராணத்தை, எழுதினவர்களும், எழுதச்சொன்னவர்களும், பாராட்டிவாசிப்பவர்களும், வாசிக்கச்சொன்னவர்களும், பொருள்விரித்துச்சொல்பவர்களும், அன்புடனேகேட்பவர்களுமாகிய இவர்கள், கற்புநலமிகுந்த மனைவியும், புத்திரர்களும், தீர்க்காயுளும், விசேஷமானஐஸ்வரியங்களும், பொருந்திப்பலவித நன்மைகளுடனே வாழ்ந்திருந்து, மேலானபுருஷார்த்தமாகிய நான்குபிரயோசனங்களையுஞ் செவ்வையாக அனுபவிப்பார்கள். எ—று.(௬௯)

எண்ணில்சீர் விசுவப் பிரமபு ராண மெழுதிமை யிட்டிரச் சணிந்து
மண்ணிய பீடத் திருத்தியர்ச் சனைசெய் மாண்புளோ ரகத்தினிற் பிணிகள்
திண்ணிய பூத பிரேதபை சாசந் தீநிரப் பிவையுறு தொழியும்
அண்ணிய மலரிந் திரையக லாம லமர்ந்தினி தென்றும் வாழ்ந் திருப்பள்

இ-ரை.—அளவில்லாத சிறப்பினையுடைய, விஸ்வப்பிரமபுராணத்தை, எழுதிமைக்காப்பிட்டுக், கயிறுசார்த்தி, அலங்கரிக்கப்பட்ட பீடத்தில்வைத்துப் பூஜைசெய்கின்ற மாக்ஷிமையுடையவர்கள் வீட்டில், நோய்கள், வன்மையுடைய பூதப்பிரேதபைசாசங்கள், கொடியதரித்திரம், இவைகளணுகாமல் நீங்கிப்போகும், செந்தாமரைமலரிலெழுந்தருளியிருக்கின்ற இலட்சுமியானவள், அங்காளுநீங்காமலின்பத்துடனே பொருந்திவாழ்ந்திருப்பள். எ—று. (௭0)

வாழ்கவான் முகில்கள் வாழ்கமா மறைகள் வாழ்கவை திகமறை யவர்கள்
வாழ்கசீர் மகங்கள் வாழ்கவா னினங்கள் வாழ்கநன் னீதிமன் னவர்கள்
வாழ்கநல் லறங்கள் வாழ்கபல் லுயிர்கள் வாழ்கவெண் ணீறுகண் மணிகள்
வாழ்கவிப் புராணம் விச்சுவே சுரன்பொன் மலரடித் தொண்டர்கள் வாழ்க

இ-ரை.—ஆகாயத்திலுள்ள மழைமேகங்கள் வாழக்கடவது, பெருமைபொருந்திய வேதங்கள் வாழக்கடவது. வைதீகப் பிராமணர்கள் வாழக்கடவர்கள். புகழையு

டைய யாகங்கள் வாழக்கடவது. பசுக்கூட்டங்கள் வாழக்கடவது. நல்ல நீதி வழுவாமல் அரசாக்ஷி செய்கின்ற அரசர்கள் வாழக்கடவர்கள். நன்மைபொருந்திய தருமங்கள் வாழக்கடவது. பலவாகிய ஜீவகோடிகள் வாழக்கடவது. வெள்ளிய விபூதி ருத்திராக்ஷங்களும் வாழக்கடவது. இந்தப் புராணமும் வாழக்கடவது. உலகத்துக்கு முதற் கடவுளாகிய விஸ்வேஸ்வரனுடைய பொற்றாமரை மலர்போன்ற திருவடிகளுக்குத்திருத்தொண்டு செய்கின்ற மெய்யடியார்கள் வாழக்கடவர்கள். எ—று. (சுக

கருமபலமுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம், ௲௨௧.

விஸ்வப்பிர்ஹம புராணம் பூருவகாண்டம் முற்றுப்பெற்றது.

உ

இந்நூற்குப்

பொருளுதவி செய்தவர்கள்பேரில்

திரு. அ. முத்துச்சாமி பாரதியாரவர்களியற்றிய

புகழ்ச்சிக்கவிகள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

SENJEE PULNEY ANDY, Esq., M. D., F. L. S., M. R. C. S., E.

அங்கிலேயதேசத்து ராஜ ஆசுர வைத்தியசங்கத்தில் ஒருவரும்,
"லினியன் சொசைட்டி" என்னும் பிரகிருதிசரித்திரசாஸ்திர
சபைச் சம்பந்தர்களில் ஒருவரும்,
வைத்திய பண்டிதருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சி பழனி ஆண்டி அவர்கள் பேரில்

புகழ்மேவு பல்வளமும் பொலிசெஞ்சி மாநகரம் புரந்த மன்னன்
திகழ்நீதி முறையுறுதி சூழமைச்சர்பல ருண்மிகு சிறப்பு வாய்ந்து
மகிழ்சேர் விச்சுவப்பிரம குலவானந் தாசாரி மரபில் வந்த
தகவாரு முத்தையா சாரிமகிழ்ந் தியற்றுமுயர் தவத்திற் றோன்றி (௧)

நற்புகழ்சேர் சமஸ்கிருத நாகரஞ் செந்தமிழ் தெலுங்கு நானிலத்தோர்
அற்பினனி பயிலாங்கி லேயமொடு துலுக்கு மலையாள மாதி
பற்பல பாஷைகளு முறுசந்தேக விபரீதம் பாறத் தேர்ந்து
பொற்புவித ரணம்வினய மறிவொழுக் கஞ்சுகுண மிகுபொறையும் வாய்ந்து (௨)

துங்கமுறு மாங்க்லேய தேசத்தி ராஜவா சுரவ யித்திய
சங்கமதி லொருவரும்பல் லோர்பரவு லினியன்சொ சைட்டி யென்னும்
பங்கமறு பிரகிருதி சரித்திரசாஸ் திரசபைச்சம் பந்தர் தம்முட்
பொங்குபுக ழொருவருஞ் சீர்வயித்திய பண்டிதரு மாய்ப்பொலிவுற் றோங்கி (௩)

பன்னிய ஸ்ரீராமோ தந்தத்தினுக்கு மலையாள பாஷை தன்னில்
துன்னுபரி பாஷையுடன் வியாக்கியான மும்புருஷ சூக்தத் திக்கு
மன்னுதமிழ் வியாக்கியான முங்கிருஷி சாஸ்திரமும் வாந்தி பேதி
தன்னியல் பற்றிய குணகாரண நிவாரணமு மிகுதக்கோர் யாரும் (௪)

அரிதாமென் றுரைவாந்தி பேதிகா லந்தன்னி லனுச ரிக்கும்
பரிகார முறைமையும் வைசூரி நிவாரணமும் பல்கோ விசூரிப்
பிரயோக பலாபலமும் பலர்புகழ வுலகினலம் பெருகச் செய்து
மருவாரும் பொழில் புடைசூழ் தருசென்னை மாநகரம் வயங்கமன்னி (௫)

பாங்குறுசெந் தமிழ்விசுவப் பிரமபுரா ணம்புவியிற் பரவும் வண்ணம்
தேங்குறு சஞ்சிகை யிரண்டச்சிற் பதிக்கப் பொருளுதவி செய்துவாழும்
ஓங்கெழிற் செஞ்சிப் பழனியாண்டி துரையவர்க் கலமுறு சந்தானம்
வாங்குகட லுலகமதிற் றழைத்தோங்கி நீடூழி வாழி மன்னோ. (௬)

P. A. RAJOO PUTHER,

Senior Member of Messrs. P. Arulanandam and Sons,
Letter Founder and Manufactures of Printing Materials, Poodoopettah, Madras,
and Sole Agents of
Messrs. V. & J. Figgins, Type, Machine, Press and all kinds of Printing and Binding Material Manufacturers,
and Messrs. James Spicer & Sons,
Paper Manufacturers, London.

சென்னை, புதுப்பேட்டை
அருளானந்தம் ஆண்ட் சன்ஸ் கம்பெனித் தலைவரும்
லண்டன், வி. ஆண்ட் ஜே. பிகின்ஸ் கம்பெனியாருக்கும்,
ஜேம்ஸ் ஸ்பைசர் ஆண்ட் சன்ஸ் கம்பெனியாருக்கும் ஏக ஏஜெண்டுமாகிய
ம-௱-௱-ஸ்ரீ பு. அ. இராஜூ பத்தர்
அவர்கள் பேரில்

நிலம்போற்றும் புலவர்செறி சென்னையெழிற் புதுப்பேட்டை நிலவ வாழும்
நலம்போற்றும் புதுவைநெல்லி மாநகரோன் மிகுபுகழெஞ் ஞான்றும் பெற்றோன்
குலம்போற்றுங் கருணைமலி யருளா னந்தக்குரிசில் குறித்துச் செய்த
வலம்போற்றுந் தவத்தினில்விச் சுவப்பிரம குலசிகா மணிக ளாக (௧)

புங்கமுறு கடலுதித்த சங்கநிதி பதுமநிதி போலு தித்துத்
துங்கமுறு தருமகுண மிகுபுதல்வ ரிருவரிற்பின் றோன்ற லானோன்
சங்கமுறு நூல்களுரை யுத்தமலட் சணங்களெலாஞ் சமைந்த சீமான்
அங்கமுறு வேதபுரா ணாகமசாஸ் திரப்பொருள்க ளனைத்துந் தேர்ந்தோன் (௨)

கொற்றவ ரெலாமதித்துக் கொண்டாடும் விதரணசற் குணகெம் பீரன்
பற்றலரு நனிவேட்ப நயவமிர்த மதுரமொழி பகரும் வாயான்
உற்றபல ரிடத்துமொரு தன்மையினன் ஜீவகா ருணிய முள்ளோன்
நற்புல வோரருமை குறிப்பினுணர்ந் துதவியுளங் களிக்கும் வள்ளல் (௩)

ஆற்றலுட னடுத்தவரைக் கைவிடா தெந்நாளு மாத ரிப்போன்
போற்றுபல சமயதே வாலய தன்மங்கள் செயும் புருஷரத்நம்
ஏற்றமுறு தருமங்கள் பலவும்ரக சியமாக வியற்று மிக்கோன்
சாற்றுபல வாயபொது நன்மையெலா நனிபுரியுந் தன்மை யாளன் (௪)

ஓதுறுதென் னிந்தியா வினில்வழங்கு பாஷைகளி லுள்ள தாய
தீதறுபன் னூல்களையு மெளிதுணர வச்சிடுவான் சென்னை தன்னில்
ஆதியிலச் செழுத்துகள்செய் துலகத்தார்க் குதவிபல வாகச் செய்த
மூதருளா னந்தம்அண்டு சன்ஸ்வென்ற கம்பெனியின் முதன்மை யானோன் (௫)

திருவமலி யாங்க்லேய வெழுத்துமிஷி யன்பிரசெந் திரங்க ளாதி
கருவிகள்பற் பலவியற்றும் பேர்பெற்ற லண்டன் கம்பெனியா ருக்கும்
பெருகுறவச் சிடுங்கடித மெழுதுகடி தங்கள்செய் கம்பெனி யாருக்கும்
இருதயமின் புறநெடுநா ளாச்சென்னை தனிலொப்பி லேஜெண் டானோன் (௬)

தன்னிகர்வி. ஆண்ட்ஜே. பிகின்சும்ஜேம்ஸ் ஸ்பைசர்ஆண்ட் சன்சென் போரும்
மன்னியவன் பொடுதிறம் பாநாணயநம் பிக்கைகளின் மதிக்கப் பெற்றோன்
இன்னமுமை ரோப்பாதே சத்திலுள பற்பலகம் பெனியார் கட்கும்
பன்னியவே ஜண்டாயு மிருந்துவியா பாரங்கள் பலவுஞ் செய்தோன் (எ)

பகருமெழிற் புதுப்பேட்டை தனிலென்று மழியாத பாட சாலை
திகழ்தரத்தா பித்துதவி யினிதுபுரிந் தளவாத சிறுவ ருக்கு
மிகுபுகழ்சே ராங்கிலேயர் தமிழாதி வித்யாபி விருத்தி செய்து
சகமகிழ மனையரெலாம் புருஷார்த்த மெய்திநனி தழைக்கச் செய்தோன் (அ)

இனியதந்தை மகற்காற்று நன்றியவை யத்துமுந்தி யிருப்பச் செய்தல்
எனவறிஞ ருரைத்தமொழிக் கிலக்கியக்காட் டெனத்தம்புத் திரர்கட் கெல்லாம்
புனிதமுறு நுண்ணறிவு கல்வியொழுக் கங்களெலாம் பொருந்தச் செய்து
கனிவுடனெச் சபையிலுமெ வருமதிக்கக் கண்டுமனங் களிக்குந் தக்கோன் (௯)

இன்னபல; புகழ்மலியி ராஜ—பத்த ரெனுங்கனவா னினிதன் போடு
மன்னுதமிழ் விச்சுவபு ராணமுழு வதுங்கேட்டு மனம கிழ்ந்து
பன்னருஞ்சீர் பொலியச்சிற் பதிப்பிக்கப் பொருளுதவி பரிவிற் செய்தான்
உன்னுபரன் றிருவருளா லவன்மரபு நன்குதழைத் தோங்க மாதோ. (௰)

T. RAMASAWMY ACHARI,

Building Contractor under the Consulting Architect to the Government of Madras.

சென்னை

கெவர்ன்மென்டு கன்சல்டிங் ஆர்ச்சி டெக்ட் கண்ட்ராக்ட்டர்

ம-ா-ா-ஸ்ரீ, தி. இராமஸ்வாமி ஆசாரியாரவர்கள் பேரில்

—(:)—

மாமேவு திருமகளும் பாமேவு மொருமகளு மகிழ்ந்து வைகுந்
தேமேவு சென்னைநகர்ச் சூளையிற்பல் லோர்பரவச் சிறந்து வாழுங்
கோமேவு திருத்தணிகைப் பதியான்விச் சுவப்பிரம குலத்தி னுளுந்
தூமேவு புகழ்ச்சனு தனவிருடி கோத்திரத்திற் றூயோர் வாழ்த்த (௧)

அண்ணியசீர் மவிமுனியப் பாசாரி புரிதவத்தா லவத ரித்தோன்
புண்ணியநற் குணங்கல்வி யறிவொழுக்க மொப்புரவு பொறையும் வாய்ந்தோன்
எண்ணியெவ ருங்களிகூ ரளவாத பில்டிங்கெ லாம்பு ரிந்தோன்
தண்ணியசீ ராங்கிலேய துரைமார்கள் ஷேக்காண்டு தரப்பேர் பெற்றோன் (௨)

இருமைநலம் பல்லுயிரு முற்றோங்கி வளர்சூளை யெனும்பேர் பெற்று
மருவியலட் சுமிநாரா யணபுரத்தில் வயங்குமெழி லங்கா ளம்மை
பொருவரிய காசிவிசு வேசரெழுந் தருளியருள் புரியுங் கோயில்
தருமபரி பாலனஞ்செய் சபைத்தலைவர் களின்மேலார் தன்மை பெற்றோன் (௩)

ஆயசபை சேர்ந்தபின்னு முன்னுமுறு தருமகர்த்தா வானோர் கேட்டிங்
கோயினிலங் தனிவிருந்தோர் குடிக்கூலி கிரிமெண்டு கொடாமை யாலே
மேயசபை யார்முன்பி லைக்கோர்ட்டிற் சென்றபொருள் விரையஞ் செய்து
ஞாயமுடன் விவகாரம் புரிந்துஜெயத் தீர்மான நன்கு பெற்றோன் (௪)

வளந்தருமங் காளம்மை காசிவிசு வேசரக மகிழ்ச்சி கூர்ந்து
துளங்குறகோப் பக்கிரக மண்டபங்க ளுயர்மதில்க ளேய தீர்த்தம்
விளங்குதிருக் குளமதிலுஞ் செயப்பொரு மையினாற்சில் மிஷஞ்செய தோர்கள்
உளங்கருகி முகஞ்சாம்பித் தலைநாணச் செய்துமுடித் துலக மேத்த (௫)

மன்னியவுற் சவங்களெலாம் பேரன்பி னொடுபுரிந்து மகிழுஞ் சீமான்
மின்னுகுல தருமாணி விளக்கமுற வேண்டுமென விருப்ப முற்றுப்
பன்னியவிச் சுவப்பிரம புராணத்தின் றன்மையெலாம் பண்பி னோர்ந்து
முன்னுமப் புராணமொன்று யிரமாகிப் பெரும்புவியிற் றுலங்கு வண்ணம் (௬)

அற்பினொடு சஞ்சிகையொன் றச்சிடற்கு வேண்டுபொரு ளனைத்து நலகிப்
பற்பலருங் கொண்டாட வழியாத பெருங்கீர்த்தி படைத்தெஞ் ஞான்றும்
பொற்புறு மிராமஸ்வா மிக்குரிசில் சொற்படுபல் போக மெய்தி
வற்புமிகு சந்தான சவுபாக் கியங்களொடு வாழ்க மன்னோ. (௭)

சென்னை, புரசப்பாக்கம்

ம-ா-ா-ஸ்ரீ

எ. தக்ஷிணாமூர்த்தி ஆசாரியாரவர்கள் பேரில்

——(ஃ)——

சீர்பூத்த பல்லுயிரு மின்பமுறப் பரசிவமார் திருத்தா ணங்கள்
பார்பூத்த வெண்ணான்கும் பொலிதரப்பல் வளம்பெருக்கும் பாவி சூழ்ந்த
நீர்பூத்த வுயர்தொண்டை நாட்டினில் மகண்முகம்போ னிலவுஞ் சென்னை
ஏர்பூத்த பிரசமலர்ச் சரசுதிகழ் புரசைநக ரினிது வாழ்வோன் (க)

மலர்பொதுளுஞ் சோலையுடை யுடுத்தவெது மலையென்னு மாத்த லத்தோன்
குலவுறுவிச் சுவப்பிரம குலச்சனு தனவிருடி கோத்தி ரத்தோன்
சொல்வரிய நாற்பயனு முறத்திகழா பஸ்தம்ப சூத்தி ரத்தோன்
நிலவுமெழிற் சாத்திரத்தோன் பெருங்கருணை திகழுமிரு நேத்தி ரத்தோன் (உ)

சாற்றரிய கொடைமிகு தியாகரா யக்குரிசி றவத்தில் வந்தோன்
ஏற்றமுறு சமஸ்கிருதஞ் செந்தமிழாங் கிரமாங்கி லேய மாதி
ஆற்றுபல பாஷையுரு மளவாத நூல்களுண ரறிவான் மிக்கோன்
போற்றுபரம் பரன்றாளிற் பாமாலை வனைந்தணியும் புலமை வாய்ந்தோன் (௩)

சந்தமலி பங்கஜமென் பொகுட்டி லுறை திருமகள்க டாக்ஷமுற்றோன்
வந்தவர்கட் கனந்தமுன் னுயபல வுதவிகளு மகிழ்ந்து செய்வோன்
சிந்தைமகிழ் தருமகுணம் வாய்மைவித ரணமொழுக்கந் திறம்பி டாதோன்
சந்ததமும் வைதிக நெறியமைத்தோர்க் குணர்த்துமுயர் சாம்பிர தாயன் (௪)

விற்பனர்கள் பரவாங்கி லேயதுரை மார்களெலா மெச்சு நல்லோன்
கற்புமனை யாளுடனில் லறத்தமர்ந்தில் லறநெறியைக் காட்டும் வல்லோன்
சற்புதல்வர் தமையீன்று தக்கோனென் றொருபெயரெச் சத்தாற் பூண்ட
பொற்புமலி தக்ஷிணா மூர்த்தியா சாரியெனப் புகழும் வள்ளல் (௫)

திகழ்தருசெந் தமிழ்விசுவப் பிரமபுரா ணந்தனையச் சிடுவ தற்கு
சிகமகிழ்வி னொடுநம்மா லியன்றபொரு ளுதவிசெய வேண்டு மென்ன
கிழ்வுறவை திகவேஷம் பூண்டுகுல வொழுக்கமபி மான மின்றிப்
புகலரிய வெளிடம்பஞ் செய்துலகை மருட்டியரும் பொருள்கள் சேர்த்து (௬)

திருவமலி செல்வமும் வாழ்நாளு நிலையன் றெனவே தெரிந்திடாதும்
தருமநெறி களிற்செலவி டாதுமழியாச் சீர்த்தி தனைப் பெறாதும்
மருவொருவர்க் குதவிபுரி யாதும்வீண் செலவிடுதுன் மார்க்கர் தம்மைப்
பொருவருசன் மார்க்கரென வெண்ணியற நெறிகளியல் புறப்போ தித்தும் (௭)

மற்றவரு லோபகுண மாருமற் சொன்னபல வார்த்தை யெல்லாம்
குற்றமெனக் கொள்ளாம லறம்பெரிதென் றெண்ணிமகிழ் கூர்ந்து நாளும்
அற்றமறு சீர்த்திநிலை பெற்றதென வுதவிபல வாகச் செய்தான்
வெற்றிபெறு மவன்மரபு நீடூழி தழைத்துநல மேவி வாழ்க. (௮)

சென்னை, புரசப்பாக்கம்
சகலக்ருத்திய வித்யாஸ்வரூபராகிய
ம-ா-ா-ஶ்ரீ

எ. தணிகாசல ஆசாரியாரவர்கள் பேரில்

பூமேவு முபகரண மழைவளமு நீர்வளமும் பொலிந்து நாளும்
மாமேவு செவ்வியநா னிலவளமும் பயிர்வளமு மருவு சீர்த்திப்
பாமேவு குடிவளமு முறைபிறழா நடைவளமும் பரிந்து நல்கும்
தூமேவு கொடைவளமு மேன்மேலும் பெருகுமெழிற் றொண்டை நாட்டில் (௧)

மன்னுவரி வளைக்குலஞ் சூலுளைந் தலறியுயிர்த் தபெருமணிக் குவாலும்
மின்னெனின நல்குசினை களுமயங்கு மலர்த் தடத்து மேதிபாய
உன்னுதகட் டகட்டுநெடு வாளைமீன் சேணுறுமீ னுதிரப் பாயும்
சென்னையெழிற் புரசைநகர் வாழுமெது மலையென்னுந் திருத் தலத்தான் (௨)

திகழ்விசுவப் பிரமகுல வாறுமுகா சாரியருள் ஜேஷ்ட மைந்தன்
மிகுநயநுண் ணறிவொழுக்கஞ் சாந்தகுணம் வாய்மைவித ரணமு முள்ளோன்
மகிழ்வுதரு நித்தியநை மித்திகவை திகநெறி வழுவ முதோன்
புகழுறுகைத் தொழில்பலரு மரிதரிதென் றேவியக்கப் புரியும் வல்லோன் (௩)

மறைகளிற்சி ரிருக்கு யஜுரெனுமிரண்டு மறை யங்கமாங் கற்பத்துள்
செறிநலஞ் சேராஸ்வி லாயனமா பஸ்தம்ப சூத்திர மிரண்டும்
தறைசொன்மிரு திகளின்மனு யாக்யவற் கியம்புகழ்ப் பராசர மிம்மூன்றும்
அறையுமிதி காசமிரண் டொடுபலவும் வடமொழியினன்பி னோர்ந்தோன் (௪)

திருந்துதமிழ் தெலுங்காங்கி லேயமதிற் பன்னூலுந் தேர்ந்த மிக்கோன்
அருந்ததியே யெனுங்கற்பு மனைவியுட னில்லறவாழ் வடைந்து நாளும்
விருந்தினரை யாதரிப்போன் மன்னவர்பால் வெகுமதிகண் மிகவும் பெற்றேன்
பெருந்திருவ மெய்துதணி காசலவா சாரியெனப் பெயர்கொண் மேலோன் (௬)

பைந்தமிழிற் பொலிவிசுவப் பிரமபுரா ணம்புவியிற் பரவும் வண்ணம்
உந்துபுகழ்ச் சஞ்சிகையொன் றச்சிடற்கு வேண்டுபொரு ளுதவி செய்தான்
சிந்தைமகிழ் வுறுமவனு மவன்மரபுங் கடவுண்மறைச் சிரத்து வாழும்
அந்தநடு வாதியி லாப்பரம் பொருளாம் விசுவேச னருளினாலே (௭)

திருமகள் கடாக்ஷவீ க்ஷணியமொடு மிகுமேன்மை தீர்க்க வாயுள்
பெருகுறுபற் பலவாய பாக்கியங்க ணன்மக்கட் பேறு சுற்றம்
கருதியசர் வாபீஷ்ட சித்திகணற் பொன்மணி வாகன கோயின்மை
மருவுபுக ழிவையனைத்து மேன்மேலும் பெற்றநனி வாழ்க மன்னோ. (௮)

திருவிதாங்கோடு, ஸ்ரீபத்மநாப தாச வஞ்சி பாலராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னி சுல்த்தான் பஹதூர் ஷம்சேர்ஜங், நயிட் கிராண்ட் கமான்டர் ஆப் தி மோஸ்ட் எக்சால்டெட் ஆர்டா ஆப் தி ஸ்டார் ஆப் இந்தியா, மஹாராஜா அவர்களின் திவ்ய சமஸ்தானத்தில் ஸ்டாம்ப் ஆபீஸ் சூப்பரின்டென்டெண்டு,

திருவனந்தபுரம்

எ. தர்மலிங்காசாரியாரவர்கள் பேரில்

நீர்கொண்ட வெழிலிமருங் குறமருண்டு பிடியெனவே நினைந் தணைத்த
கார்கொண்ட மதக்களிற்றைக் கண்டேம் பிடியினையக் களிறு தாழ்ந்து
சீர்கொண்ட கற்பகப்பூங் குழையூட்டி யதன்புலவி தீர்த் தணைக்கும்
நார்கொண்ட மலைகளொடு பொழில்கள்செறிந் தோங்குமலை நாட்டின் மன்னே (௧)

அற்பினரு மறைமுதலாம் பலகலைதேர் பூசுரர்க ளாதி யான
பற்பல்வரு ணத்தினருந் தத்தமது நெறிகடிறம் பாது நாளும்
சொற்பெறுபல் லறங்கள்புரிந் தளவாத போகமெலாந் துய்த்து வாழும்
பொற்பரசு ராமக்ஷேத் திரமாகுந் திருவனந்த புரத்தி னின்றே (௨)

அண்ணியவன் போடுநினைந் தேத்திநனி போற்றுமடி யார்கட் கெல்லாம்
எண்ணியவின் புதவனந்த பத்மநா பேசனரு ளினிது பெற்றுப்
பண்ணியலு மனுமுறையே மன்னுயிர்தன் னுயிரெனவே பாது காக்கும்
புண்ணியவா னெனப்புகழி ராமவர்ம மஹாராஜ புரந்தரன் பால் (௩)

திருவமலி கம்பட்ட மேஸ்திரியா யிருந்துமிகு சீர்த்தி பெற்றோன்
பொருவில்வட கலையொடுதென் கலைகளுணர்ந் துபயகவிப் புலமை வாய்ந்தோன்
மருவியவிச் சுவப்பிரம குலசிகா மணியானோன் மகிழ் வைதீக
தருமநெறி வழுவாத வெதுமலையா னலந்திகழுஞ் சாம்ப்ர தாயன் (௪)

என்னுமிகு புகழோங்கு மாறுமுகா சாரியியற் றியத வத்தால்
துன்னியசீர் மகன்றந்தைக் காற்றுதவி யாற்றவருந் துதிய மைந்தன்
மன்னுதமிழ் சமஸ்கிருத நாகரங் கன்னடந் தெலுங்குமலை யாளம்பார்
உன்னரிய வாங்கிலேய பாஷைகளுந் தேர்ந்தோனல் லொழுக்க முள்ளோன் (௫)

கொற்றவர்கள் கொண்டாடக் கைத்தொழில்கள் பற்பலவுங் குயிற்று தீரன்
பற்றலரு நனிவேட்ப வுஜிதரச வமிர்தமொழி பகரும் வாயான்
வெற்றிதரு நயபரத கீதங்க ளுணர்ந்திடு விநோத லோலன்
அற்றமறு மடவார்கள் விரும்புசிலை மதனைநிக ரழகு வாய்ந்தோன் (௬)

முன்புரையி ராமவர்ம ராஜ ராஜேந்திரன் பான்மொழியும் பற்பல்
பின்புறஸ்டாம்ப் பாபீசிற் சூப்ரண்டெண் டதிகார மினிது பெற்றோன்
அன்பினொடு வந்தவரை யாதரிப்போ னிலக்குமி கடாக்ஷ முள்ளோன்
நன்புலவர் நனிபரவு தருமலிங்கா சாரியென நவிலும் வள்ளல் (௭)

நிலவுறுசெந் தமிழ்விசுவப் பிரமபுரா ணம்பெருக நெடுநீர் வைப்பில்
உலகுபுகழ் சஞ்சிகையொன் றச்சிடற்குப் பொருளுதவி யுவந்து செய்தான்
இலகுமவன் மறைமுடிவாழ் விஸ்வேசன் றிருவருளா லெந்த ஞான்றும்
பொலிவுறுபல் சந்தான சவுபாக்கி யங்களெலாம் பொருந்தி வாழ்க (௮)

கும்பகோணம் கடலங்குடித் தெரு

ம-ா-ா-ஸ்ரீ, ஓ. ரா. குருசாமிப் பத்தரவர்கள் பேரில்

பொன்பூத்த சடையினிழிந் திரவிகுலச் சகரர்முதற் புவியோ ரெல்லாம்
மின்பூத்த கதியடைய மிளிர்கங்கை வினையொழிய விழைந்து மூழ்கும்
கொன்பூத்த பொன்னிமகா மகதீர்த்த மொடுமூவர் குலவிப் போற்றும்
தென்பூத்த வொருபதொழி யிருநூறு மாத்தலமுந் திகழ்சோ ணாட்டில் (௧)

வண்டினங்க ளிசைபாடி யுழவவிழ்ந்து மகிழ்ந்துநறு மதுப்பி லூற்றும்
தண்டலைமேன் முகிலடர்வ பாட்டளிக்கு நறவளியாத் தருவை வெல்வான்
விண்டலத்து வருவதுணர்ந் திடைமடக்க வூர்தியைக்கோன் விடுத்த தேய்க்கும்
எண்டருமத் தண்டலைசூழ்ந் தளவாத பன்னலமு மியைந்து நாளும் (௨)

வாஞ்சையுற நினைப்பவர்க்குங் கேட்பவர்க்கும் பார்ப்பவர்க்கும் வசிப்ப வர்க்கும்
ஓகைவிளைத் திடுமோகைப் பதியாமெனஞ் ஞான்றுநனி யோகை மேவி
யீகையினால் யாவர்களுந் துன்பமொழிந் தின்பநல மெய்தி வாழ
நாகர்களும் பரவுநவ மணிமாடத் திருக்குடந்தை நகரில் வாழ்வோன் (௩)

தண்ணியபாற் கடன்மதிபோற் றிகழ்ராமு பத்தரெனச் சாற்றுந் தக்கோன்
பண்ணியமா தவத்தால்விச் சுவப்பிரம குலத்தெவரும் பரவ வந்தோன்
அண்ணுசுபர்னச விருடிகோத் திரத்தோன் மதனைநிக ரழகு வாய்ந்தோன்
எண்ணரிய கல்வியறி வொழுக்காய குணமனைத்து மியைந்த சீலன் (௪)

கற்புமனை யாளுடனில் லறத்தமர்ந்தோன் மெய்யன்பு கதிப்ப வென்றும்
அற்புடன் வந்தடுத் தோருக் கனந்தனமுன் னுயவளித் தாதரிப்போன்
விற்பொலிநித் திலங்கொழிக்கு தெளிதரங்கக் கடல்புடைசூழ் வியன்பார் மீதிற்
பற்பலர்கொண் டாடுபுகழ்க் குருசாமிப் பத்தரெனப் பரவு மேலோன் (௫)

பைந்தமிழிற் பொலிவிசுவப் பிரமபுரா ணம்புவியிற் பரவும் வண்ணம்
சிந்தைமகிழ் சஞ்சிகையொன் றச்சிடற்குப் பொருளுதவி செய்தா னன்னோன்,
அந்தமொ டாதியிலாப் பரம்பொருளாம் விஸ்வேச னருளி னாலே.
சந்ததமுஞ் சந்தான சவுபாக்கி யங்களொடு தழைக மாதோ. (௬)

கும்பகோணம்

ம-ா-ா-ஸ்ரீ ம. கோ. மயிலேறி ஆசாரியாரவர்கள் பேரில்

கார்பூத்த பொழின்மதுரை வளர்விசுவப் பிரமகுல கனவா னென்னும்
சீர்பூத்த கோபால சாமியா சாரிதவஞ் சிறக்கத் தோன்றி
ஏர்பூத்த விதரணவிற் பனவினய நிபுணாய மெனைத்து மெய்திப்
பார்பூத்த புலவரெலாம் வாழ்த்தெடுப்பத் திருக்குடந்தைப் பதியில் வாழ்வோன் (௧)

என்னுமிகு திறலாள னறிவாளன் றிருவாள னீகை யாளன்
பன்னுபுகழ் மயிலேறி யாசாரி யெனப்பலரும் பரவு மேலோன்
மின்னுவிஸ்வப் பிரமபுரா ணம்பரவப் பொருளுதவி விருப்பிற் செய்தான்
மன்னுமவன் சந்தான நீடூழி தழைத்தோங்கி வாழ்க மன்னோ. (௨)

வாணியம்பாடி டிப்டி தாசில்தார்

ம-ா-ா-ஸ்ரீ ஒ. ந. சூரப்ப ஆசாரியாரவர்கள் பேரில்

பூவேறு சோலையொசூர் நஞ்சுண்டா சாரிநனி புரித வத்தாற்
பாவேறு விச்சுவசி காமணியா வவதரித்துப் பலரு மேத்த
நாவேறு மிங்கிலீ ஷாதிபல பாஷைகளு நன்கு தேர்ந்து
கோவேறு துரைகளெலாம் மேடிக்காண்டு தந்திடுசற் குணவி வேகன் (௧)

கருதுபல வளம்பொலிவா ணியம்பாடித் தாசிலதி கார மேவிப்
பெருகுறுசீர் பெறுசூரப் பாசாரி யெனப்புகழ்கெம் பீர தீரன்
தெருள்விசுவப் பிரமபுரா ணம்பெருகப் பொருளுதவி செய்தா னன்னோன்
மருவுபர சிவனருளாற் பல்லாண்டு பன்னலமு மன்னி வாழ்க. (௨)

சென்னை புரசைப்பாக்கம்

ம-ா-ா-ஸ்ரீ கூட லூர், வீ. தாண்டவராய ஆசாரியாரவர்கள் பேரில்

திருவாழுஞ் செழுங்கமலத் தடங்களிற்றம் பேட்டினொடு செங்கா லன்னம்
ஒருவாத் வெழிற்கூட லூர்வீராச் சாமிமுகி லுவந்து செய்த
பொருவாத தவத்தின்வலம் புரிவயிற்றி னுதித்தமணி போலுதித் தோன்
மருவாரு மகிழ்கல்வி நண்ணறிவு பொறையொழுக்கம் வாய்மை சீலம் (௧)

நற்குணமா தியிற்சிறந்தோன் பல்வளமும் பொலிசென்னை நகரில் வாழ்வோன்
பற்பலதன் மங்களையு மாறுவன் பிற்புரியும் பான்மை யுள்ளோன்
விற்பனர்கள் விரும்பியவை குறிப்பினு லுணர்ந்துதவி மிகுசீர் பெற்றோன்
பொற்புமலி தாண்டவரா யாசாரி யெனப்பலரும் புகழு மிக்கோன் (௨)

புகழ்பெருகு தமிழ்விசுவப் பிரமபுரா ணம்புவியிற் பொலியும் வண்ணம்
அகமுவந்து பொருளுதவி செய்தான்மற் றவன்கடவு ளருளி னாலே
திகழுமல ரிலக்குமிக டாக்ஷமொடு தீர்க்காயுள் சிறந்த மக்கள்
மகிழ்பலசித் திகண்மிகுசம் பத்துகளு மனியெய்தி வாழ்க மாதோ. (௩)

விஸ்வபிரம புராணத்திற்குக் கையொப்பமிட்டவர்கள்

ஊர்.		பெயர்.
சென்னைமுத்தியாலுப்பேட்டைலிங்கிசெட்டிவீதி	சு.	இராமலிங்க ஆசாரியார்
,, ,,	ஆ.	இராமசாமி ஆசாரியார்
,, ,,	து.	வடிவேலாசாரியார்
,, ,,	மா. ஏ.	குமாரசாமி ஆசாரியார்
,, ஐயப்பசெட்டி வீதி	மு.	ஆடியபாத ஆசாரியார்.
பெத்துநாயக்கன்பேட்டை தங்கசாலை வீதி	மா.	தியாகராய ஆசாரியார்
,, நாராயணன் தெரு	வெ.	முனிசாமி ஆசாரியார்.
மயிலாப்பூர் கச்சேரி வீதி	வீ. ம.	சர்வலிங்க ஆசாரியார்
,, முண்டகக்கண்ணியம்மன் வீதி	கு. பி.	முருகப்ப ஆசாரியார்
,, கல்கார வீதி	கு. நெ.	சண்முக ஆசாரியார்
,, மேட்டுத் தெரு	ந.	பாப்பய்ய பத்தர்.
திருவல்லிக்கேணி செங்கல்வராய முதலி வீதி	வே.	மாணிக்க ஆசாரியார்
,, சுந்தரமூர்த்தி விநாயகர் வீதி	க.	சபாபதி ஆசாரியார்
சேப்பாக்கம் அப்துல்லா சாய்பு வீதி	தி.	வெள்ளையாசாரியார்
சூளை	ஆற்காடு சா.	தேசப்ப ஆசாரியார்
,, அவதானம்பாப்பையர் வீதி,	விபூர் கா.	நாதமுனி பத்துடு.
புரசப்பாக்கம் வெள்ளாளத் தெரு,	ரெ.	கோவிந்த ஆசாரியார்
கோயமுத்தூர் பெரியகடை வீதி	ந.	முத்துவீரண்ண ஆசாரியார்
,,	ரெ. கு.	சுப்பராய ஆசாரியார்
,,	ந.	வேலப்ப ஆசாரியார்
,,	புரோகிதம் கு.	சொக்கலிங்க ஆசாரியார்
,,	புரோகிதம் தொ.	சின்னையாசாரியார்
,,	புரோகிதம் ப.	வெங்கடாசல ஆசாரியார்
,,	திருநெல்வேலி ச.	முத்துச்சாமி ஆசாரியார்
,,	மஞ்சம்பாளயம்	இராமசாமி; ஆசாரியார்.
,,	கா.	மாரியப்ப ஆசாரியார்
,,	அ.	சுப்பிரமணிய ஆசாரியார்
,,	பெ.	சின்னசுப்பண்ணாசாரியார்
சேந்தமங்கலம்	பா.	வெங்கிட்டராம ஆசாரியார்
,,	வா.	நாராயண ஆசாரியார்
,,	மு.	அனந்தகிருஷ்ண ஆசாரியார்
,,	கு.	சூரியநாராயண ஆசாரியார்
,,	வெ.	கிருபாசாரியார்.
திருப்பாதிரிப்புலியூர்	மு.	அப்பாத்துரைப் பத்தர்
,,	சி.	அருணாசல ஆசாரியார்.
மஞ்சக்குப்பம்	அ.	சிதம்பர பத்தர்.
பரங்கிப்பேட்டை	சு.	ஏகாம்பர பத்தர்
,,	சி.	பெரியதம்பி பத்தர்
,,	ச.	மன்னார் பத்தர்

ஊர்.	பெயர்.
சிதம்பரம்	சு. பொன்னுசாமி பத்தர்
திருமுல்லைவாசல்	சாமிநாத பத்தர்.
ஸ்ரீ முஷ்டம்	பெ. அமுர்தப் பத்தர்
,,	அ. சுப்பிரமணிய பத்தர்
,,	சி. ஆறுமுக பத்தர்
,,	பெ. ரெங்கசாமி பத்தர்
,,	சி. கணபதி பத்தர்
,,	வே. பச்சைமுத்து பத்தர்.
கூறைநாடு	அ. வயித்தி பத்தர்
,,	செ. முத்துக்குமார பத்தர்
,,	சி. கணபதி பத்தர்
,,	சி. வயித்திலிங்க பத்தர்
,,	ச. கனகசபைப் பத்தர்
,,	க. பாவாடை பத்தர்
திருவழுந்தூர்	சி. அமுர்தப் பத்தர்
,,	க. அமுர்தப் பத்தர்
,,	அ. ரெங்கய பத்தர்
,,	ச. வயித்தி பத்தர்
,,	மா. வயித்தி பத்தர்
,,	அ. சீனிவாச பத்தர்
,,	மூ. ஆறுமுக பத்தர்
மாயூரம்	சி. கனகசபைப் பத்தர்
,,	ம. தனுக்கோடிப் பத்தர்
வலங்கைமான்	மு. தனுக்கோடி பத்தர்
,,	கொ. நாராயணசாமி பத்தர்
,,	மு. சதாசிவ பத்தர்
,,	க. சொக்கலிங்க பத்தர்
,,	சாமிநாத பத்தர்
நாச்சியார் கோயில்	ச. நாகலிங்க பத்தர்
,,	சி. பெருமாள் பத்தர்
,,	ம. சுப்பு பத்தர்
,,	பா. வயித்தி பத்தர்
,,	அப்பாவு பத்தர்
,,	சுப்பிரமணிய பத்தர்
கோவிந்தகுடி	வி. குழந்தைவேலாசாரியார்
எழாங்கட்டளை	அ. கிருஷ்ணசாமி பத்தர்
,,	அ. ரெங்கசாமி பத்தர்
ஓகை	க. சீனிவாச பத்தர்

ஊர்.		பெயர்.
திருச்சிறை		அருணாசல பத்தர்
ஆரியப்படையூர்		சிவராம பத்தர்
திருப்பாத்துரை	கா.	வையாபுரி ஆசாரியார்
மன்னார்கோயில்	சு.	வயித்திலிங்க பத்தர்
,,	சு.	பழநிப் பத்தர்
,,	கொ.	பாட்டுப் பத்தர்
,,	மு.	இராமசாமி பத்தர்
கும்பகோணம் சாரங்கபாணி கோவில் கீழ வீதி	நா.	வயித்திலிங்க பத்தர்
,, ,,	மூ.	மாதர்பூத பத்தர்
,, ,,	தி.	பஞ்சநத பத்தர்
,, ,,		லெட்சுமண பத்தர்
,, தெற்கு வீதி	நா.	துரைசாமி பத்தர்
,, வடக்கு வீதி	அ.	சாமி பத்தர்
மணிக்காரத் தெரு	தி. மு.	முக்கண்ணாசாரியார்
மாதப்பா சந்து	கோ.	மயிலேறி ஆசாரியார்
,,	அ.	கோவிந்தசாமி ஆசாரியார்
,,	நா.	பாவாடை பத்தர்
,,	கு.	அங்கு பத்தர்
கடலங்குடித் தெரு	தி.	பஞ்சநத பத்தர்
,,	ரா.	குருசாமி பத்தர்
,,	ஐ.	அமுர்தலிங்க ஆசாரியார்
,,		சக்கரபாணி பத்தர்
செக்கடித் தெரு	வ.	சுப்பராய உபாத்தியாயர்
,,	இ.	வீரண்ண பத்தர்
,,	தி.	சபாபதி பத்தர்
கருணைக்கொல்லைக் கீழத் தெரு,	சு.	சாம்பசிவ பத்தர்
,, தெற்குத் தெரு,	ச.	ஆறுமுக பத்தர்,
,, ,,	வி.	மாரிமுத்து பத்தர்,
,, மேலத் தெரு,	ரெ.	பெருமாள் பத்தர்
,, ,,		வெங்கடாசல பத்தர்
புதுப்பாளயத் தெரு,	கு.	அருணாசல பத்தர்
,,		நாகப் பத்தர்
,,	ச.	மருதப் பத்தர்
,,		பொன்னப் பத்தர்
,,	கொ.	அப்பாசாமி பத்தர்
சாலைக்கரைத் தெரு,	அ.	இராமலிங்க பத்தர்
,,	மெ.	திருமலை பத்தர்
,,	தி.	சாமிநாத பத்தர்

கையொப்பமிட்டவர்கள்

ஊர்.		பெயர்.
பேட்டைத் தெரு,	அ.	மருதப் பத்தர்
கம்பட்டவிசுவநாதர் கோயில் கீழ வீதி,	வீ.	ஐயாசாமி பத்தர்
,, வடக்கு வீதி,		பஞ்சநத பத்தர்
,, ,,	அ.	சுப்பிரமணிய பத்தர்
பிர்மன் கோயில் தெரு,	ப.	சக்கரபாணி பத்தர்
வாணுதுறை மேல வீதி,		சுப்பராய ஆசாரியார்
,,		மாரி ஆசாரியார்
,,	சி.	சாமிநாத பத்தர்
,,	சா.	மதுரை ஆசாரியார்
சுக்கான் பாளயத் தெரு,	வீ.	பழனிப் பத்தர்
உப்புக்காரத் தெரு,	மா.	சரவணே ஆசாரியார்
நாகேஸ்வரசுவாமி கோயில் தெற்கு வீதி,	பா.	பஞ்சநத பத்தர்
,,	ச.	கிருஷ்ணஸ்தபதியார்
சுவாமி மலே	சு.	அப்பாசாமி பத்தர்
,,	மு.	துரைசாமி ஸ்தபதியார்.
தஞ்சாவூர், நாணயகாரச் செட்டித் தெரு,	சா.	வயித்திலிங்க ஆசாரியார்
காரைக்குடியிலிருக்கும் கோயமுத்தூர்,	சொ.	முத்துச்சாமி ஆசாரியார்
திண்டுக்கல், சின்னக்கடை வீதி,	பொ.	மகாலிங்கமாசாரியார்
,, லயன் வீதி,	ந.	வீரண்ண ஆசாரியார்
திருமங்கலம்,	சி.	சிதம்பரமாசாரியார்
எட்டயபுரம்,	ந.	சுப்பிரமணிய ஸ்தபதியார்
வீரராகவபுரம்,		கந்தசாமி ஆசாரியார்
,,		ஆறுமுக ஆசாரியார்
திருநெல்வேலி பருவதசிங்குராஜ வீதி,	மா.	நயினராசாரியார்
,, இரத்தின வியாபாரம் குலாபிமானி	ச.	தவசுமுத்தாசாரியார்
,, சுரண்டை,	பெ.	முத்துச்சாமி ஆசாரியார்
,, ,,	கை.	ஆதிமூல ஆசாரியார்
,, ,,	பெ.	அலங்காரமாசாரியார்
,, ,,	இ.	சிவஞானமாசாரியார்
,, ,,	இ.	குற்றாலமாசாரியார்
,,	சு.	ரெங்கைய பத்தர்
,, அக்கசாலே, விநாயகர் கோயில் வீதி,	ரா.	மூன்றுயுகங்கொண்டானுசாரியார்
,, தொண்டநயினர் கோயில் வீதி,	ச.	பொய்சொல்லா ஆசாரியார்
,, ,,	மு.	சங்கரலிங்கமாசாரியார்
,, சொக்கலிங்க முடுக்குத் தெரு,	நீ.	இலட்சுமண ஆசாரியார்
தூற்றுக்குடி மேலூர்,	மா.	சண்முகசுந்தரமாசாரியார்
,, சத்திரம் வீதி	ந.	அப்பாவாசாரி
,, குலசேகரன் பட்டணம்	ம.	பிரமநாயகமாசாரி

விஸ்வப்பிர்ம புராணத்தின் பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
5	18	தென்னிலவு	தெண்ணிலவு
,,	,,	தவமுமணி	தவழுமணி
6	13	மலிவுநாயக	மலிவிநாயக
7	29	தாமரையை	தாமரைகளை
11	20	பொழிததள	பொழித்தள
23	34	தோரும்	தோறும்
39	6	சிவிரத	சுவிரத
,,	7	சிரிது	சிறிது
40	14	ளுவதற்குரிய	ளுதற்கரிய
,,	33	வான்மாவாகவாகி	மான்மாவாகி
54	27	வக்கிரா	வக்கியரா
55	31	பதினேரு	பதினொரு
56	8	அணிலன்	அனிலன்
,,	12	அணிலன்	அனிலன்
57	24	பசுமந்தம்	பசுபந்தம்
59	35	சாமங்	சாபங்
61	14	மாதுளை	மாதுளை
62	13	அவித்தி	அவித்தை
,,	36	எண்பது	எண்பத்து
64	37	தொரு	தொறு
66	15	பெரும்	பெறும்
,,	20	கொன்	கொள்
67	3	நிசதம்	நிடதம்
,,	17	ரிஷதம்	நிஷதம்
68	9	கிரவ்ஞ்சாம்	கிரவுஞ்சம்
72	20	நரகம்	நாகம்
79	9	சூரியனை அதிபதியாகவும்	சூரியனை கிரகங்களுக்கு
,,	10	களுக்கும் கிரகங்களுக்கு [மேலாகிய	களுக்கு மேலாகிய
83	11	அழிவதற்கிடமாயு	அழிந்துபின்பு
95	32	மப்பெண்ணும்	மப்புருடனும்
,,	,,	மப்புருடனும்	மப்பெண்ணும்

 விஸ்வப்பிர்ஹம புராணத்தின் பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
96	5	கன்னிகை	கன்னியை
100	17	புணாத்	புணாத்
103	21	ஒரு	ஓரு
104	25	வற்றுமுண்	வற்றுலுண்
107	24	வகிஷ்ட	வசிஷ்ட
114	24	களும்	களும்
122	3	ஒன்று	ஓன்று
125	26	தாலகிய	தாலாகிய
129	28	விசுவதரிஷி விசுவதரிஷி	விசுவதரிஷி
138	19	நிக்மரே	நிகமரே
162	20	பதிஞல்	பதஞல்
164	15	றிராவ்	றிராவு
170	11	லுன்பி	லுண்பி
,,	12	மாகுகுதி	மாகுதி
178	13	சிசுவிக்	சிசுவிற்
192	14	பூனணிய	பூணணிய
198	20	அமர	அபர
,,	28	விலங்க	விலக்கினங்க
205	5	நன்றுகயிறு	நன்றுயிறு
206	7	கொண்டரு	கெண்டரு
,,	12	வலிவமை	வலியமை
212	13	முபைய	முபய
,,	15	உதைய	உதய
,,	23	கன்னியரா	கன்னியாரா
215	9	விதிவினை	விதியினை
221	35	நின்த	நின்ற
224	37	இல்லத்தி	இல்லறத்தீ
227	24	பற்றணெறி	பற்றனெறி
233	12	மூலக்கு	மூலங்கு
235	27	குருக்கே	குறுக்கே
,,	29	யடக்க	யடைக்க
236	9	களுகு	களுக்கு
242	27	மனத்தி	மணத்தி
246	29	கோக்திரோ	கோத்திரோ
249	11	ருனினி	ருமினி
,,	22	லார்கள்.	லார்நற்
253	10	காந்து	காத்து
,,	31	காசியாநின்ற	காசிக்குங்
265	35	குறிகளி	குறிகொளி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
277	16	நூய்மை	தூய்மை
279	10	நிசறு	நிகரறு
284	16	கத்திரி	கத்தரி
286	5	சிரார்த்திற்கு	சிரார்த்தத்திற்கு
,,	8	சாந்திகங்களென்	சாந்திகமென்
292	3	சாயன்ன	சாயான்ன
293	13	இதமுரு	இதமுறு
,,	14	துதிபெரு	துதிபெறு
296	29	பிரங்கொ	பிறங்கொ
298	2	சந்தர்ப்பனை	சந்தர்ப்பணை
303	26	மகிழ்சி	மகிழ்ச்சி
308	4	இரரக்கால	இராக்கால
,,	10	வெள்யாடு	வெள்ளாடு
311	20	கடைந்திருந்தாலும்	கடைந்து சித்திரங்களுடனிருந்தாலும்
314	12	சுவரும்படி	சுவறும்படி
315	26	அளுக்கு	அழுக்கு
321	11	,,	வேறு
,,	30	பெண்ணெனு	பெண்ணேனு
325	30	கோதரன	சோதரன்
329	5	கிரியைனய	கிரியையை
331	3	பிறத்தாலு	பிறந்தாலு
,,	29	வகுத்தீட்	வகுத்ததீட்
,,	31	சந்திராய	சாந்திராய
332	8	விரத விரத	விரத
334	20	பொருந்திப	பொருந்திய
342	7	வாற்ற	வாற்ற
,,	32	தானங்ளில்	தானங்களில்
343	5	டாத்தியனஞ்	டறத்தியானஞ்
344	23	காருக்கத்தம்	காருகத்தம்
345	13	பெருத	பெறுத
349	7	சிழத்தன்	கிழத்தன்
,,	22	ய்கரு	பகரு
351	19	படுசின்ற	படுகின்ற
,,	35	வங்கள்	வர்கள்
356	17	பெருவத	பெறுவத
359	14	மொழிந்த	மொழிந்த
361	32	மலசவி	மலசலவி
364	26	குறையடை	குறையுடை

முக்கியமான அறிவிப்பு.

விஸ்வபிரம புராணத்தில் இப்போது அச்சிட்டுமுடிந்த பூர்வகாண்டத்தைப்போல உத்தரகாண்டமும் சமஸ்கிருத பாஷையிலிருப்பதாலும், அதில் அனேக விஷயங்கள் அடங்கி யிருப்பதாலும் அவ்விஷயங்களை யாவருந் தெரிந்துக்கொள்ளும்படி தமிழில் அச்சிட வேண்டுமென்று சிலர் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அதைத் தமிழில் மொழிபெயர்க்கவும் அச்சிற் பதிப்பிக்கவும். விசேஷப் பொருள் செலவிருக்கிறபடியால் வமிசாபிமானமுள்ள கனவான்கள் பலரும் கையொப்பம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் விகிதம் முன் பொருளுதவி செய்து ரசீது பெற்றுக்கொண்டு கையொப்பமிட்டால், ஐந்நூறு கையொப்பஞ் சேர்ந்தவுடன், தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு அதற்கு ஏற்படுகிற விலை விகிதப்படி கையொப்பமிட்டவர்களுக்குப் புத்தகங்களை யனுப்பிக் கொடுத்த ரசீதைப் பெற்றுக்கொள்ளப்படும். ஆதலால் கையொப்பஞ்செய்ய மனமுள்ளவர்கள் கும்பகோணம் நாகேஸ்வரசுவாமி கோயில் தெற்கு வீதியிலிருக்கும் புரோகிதம் சதாசிவ உபாத்தியாயருக்கென் றெழுதக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

கும்பகோணம்

ரா. சதாசிவ உபாத்தியாயர்.